அதிகாரப் பகிர்வின் இருபத்திரெண்டு ஆண்டுகள்

இலங்கை மாகாண சபைகளின் செயற்பாடுகள் பற்றிய ஒரு மதிப்பாய்வு

ரஞ்சித் அமரசிங்க
அசோக்க குணவர்தன
ஜயம்பதி விக்ரமரத்ன
ஏ. எம். நவரத்ன பண்டார

அரசியலமைப்புக் கற்கைகளுக்கான நிறுவனம்

அதிகாரப் பகிர்வின் இருபத்திரெண்டு ஆண்டுகள்

இலங்கை மாகாண சபைகளின் செயற்பாடுகள் பற்றிய ஒரு மதிப்பாய்வு

ரஞ்சித் அமரசிங்க,
அசோக்க குணவர்தன,
ஜயம்பதி விக்ரமரத்ன
ஏ.எம்.நவரத்ன பண்டார

அரசியலமைப்புக் கற்கைகளுக்கான நிறுவனம்

அதிகாரப் பகிர்வின் இருபத்திரெண்டு ஆண்டுகள்

ரஞ்சித் அமரசிங்க
அசோக்க குணவர்தன
ஜயம்பதி விக்ரமரத்ன
ஏ.எம்.நவரத்ன பண்டார

முதற் பதிப்பு 2010

ISBN 978-955-0516-04-09

அட்டைப்படம்
ரீ. பி. ஜீ. அமரஜீவ

அச்சுப்பதிப்பு
நியோ கிரப்பிக்ஸ்
இல. 143, உடஹமுள்ள புகையிரத வீதி,
கங்கொடவில,
நுகேகொடை.

வெளியீடு
அரசியலமைப்புக் கற்கைகளுக்கான நிறுவனம்
இல. 231/12A, முதலாம் ஒழுங்கை,
களபளுவாவ,
இராஜகிரிய.
தொலைபேசி: 011 2792315

உள்ளடக்கம்

அறிமுகம் i

நூலாசிரியர்கள் பற்றி v

சுருக்கக் குறியீட்டு விளக்கங்கள் vii

சாராம்சமும் பரிந்துரைகளும் ix

அத்தியாயம் - 01 01
அரசியல் யாப்பு வடிவமைப்பு
ஜயம்பதி விக்ரமரட்ண

அத்தியாயம் - 02 43
அதிகாரப் பரவலாக்களின் அரசியல்
ஏ.எம். நவரத்ன பண்டார

அத்தியாயம் -03 70
சட்டப் பிரச்சினைகள்
ஜயம்பதி விக்ரமரட்ண

அத்தியாயம் -04 114
மாகாண சபைகளின் சட்டவாக்கச் செயற்பாடுகள்: சட்டவாக்கம் மற்றும் செயற்திறன் பிரச்சினைகள்
ரஞ்சித் அமரசிங்க

அத்தியாயம் -05 136
நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கல்: நடைமுறைப்படுத்தல் பிரச்சினைகள்
அசோக குணவர்த்தன

அத்தியாயம் -06 174
மாகாண சபைகளின் செயற்பாடுகள்: மத்திய மாகாண உறவுகள்
ரஞ்சித் அமரசிங்க

அத்தியாயம் -07 206
மாகாண சபைப் பொதுத்துறை நிர்வாகமும் பொதுச் சேவையும்
ஏ. எம். நவரத்ன பண்டார

அத்தியாயம் -08 243
அதிகாரப் பரவலாக்கலின்கீழ் உள்ளூராட்சி
அசோக குணவர்த்தன

அறிமுகம்

இலங்கையில் மாகாண சபைகளின் முறைமையொன்றின் ஊடாக அதிகாரப் பகிர்வுச் செயற்பாட்டின் இருபத்திரெண்டாம் ஆண்டை 2010 குறித்துரைக்கின்றது. சகல நடைமுறையிலான நோக்கங்களுக்காக நாட்டின் அரசியல் தோற்றத்தின் நிரந்தரமான அம்சமொன்றாக வந்துள்ள ஆட்சியின் இந்த இரண்டாவது அடுக்கின் செயற்பாட்டினை மதிப்புரைப்பதற்கு இந்நேரம் ஏற்றதாகும்.

1988இல் அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலமும், மாகாண சபைகள் சட்டத்தின் கீழும், மாகாண சபைகள் தாபிக்கப்பட்டன. அதுமுதல், மாகாண சபைகள் சட்டத்தில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், நீதிமன்றங்களினால் பிரயோகிக்கத்தக்க சட்ட ஏற்பாடுகளிலும் பொருள் விளக்கமளிக்கப்பட்டுள்ளன. பாரிய அரசியல் சூழமைவில் முறைமையை சாத்தியவளமாக்குவதற்காக நிறுவனங்களும் நிருவாக ஒழுங்குகளும் உரிய இடத்தில் உள்ளதுடன், நடைமுறைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

வடக்குக்கும், கிழக்குக்கும் வெளியே மாகாண சபைகளுக்கான ஐந்து தேர்தல்களை நாடு கண்டுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாண சபை தாபிக்கப்பட்டு, பின்னர் கலைக்கப்பட்டது. இரு மாகாணங்களின் "இணைப்பு" அரசியலமைப்புக்கு எதிரானது என பிரகடனப்படுத்தப்பட்டு, கிழக்கு மாகாண சபை நிறுவப்பட்டது. வட மாகாண சபைக்கான முதலாவது தேர்தல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

அதிகாரப் பகிர்வின் எண்ணக்கருவை எதிர்த்த, இன்னுமே எதிர்க்கின்றவையும் உட்பட சகல அரசியல் கட்சிகளும் தற்போது மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் பங்குபற்றுகின்றன. ஆதிகாரப்பகிர்வை எதிர்த்த சில அரசியற் கட்சிகள் அமைச்சுப் பதவிநிலைகளைக் கூட ஏற்றுக்கொண்டுள்ளன. மாகாண மட்ட அரசியல் தலைமைத்துவம் உருவாக்கப்பட்டுள்ளதுடன், நாட்டின் தனிமனித சாமர்த்தியத்தின் அம்சமொன்றாக அது உருவாகியுள்ளது.

மாகாண ஆட்சி முறைமைக்கு ஆதரவளிப்பதற்கு உரிய இடத்தில் வைக்கப்பட்டுள்ள இயல்புவாய்ந்த நிருவாகப் பொறிமுறையானது நன்கு-வரையறுக்கப்பட்ட செயற்பாட்டுடனும், பணியாட்றொகுதி ஒழுங்குடனும் தாபிக்கப்பட்ட மாகாண அரசாங்க சேவையொன்றாக தற்போது உருவாகியுள்ளது.

சட்ட, அரசியல் மற்றும் நிதிசார் சவால்களுக்கும், மட்டுப்படுத்தல்களுக்கும் மாகாண சபைகள் முகம் கொடுக்கின்ற போதிலும், அவை சனசமூகத்திற்கு முக்கியமான பலதரப்பட்ட சேவைகளை வழங்குகின்றன. மாகாண சபைகளில் அரசியல் மற்றும் நிருவாகத் தலைவர்களின் அர்ப்பணிப்பினால் செய்யப்பட்ட பங்களிப்புக்களினால் இது சாத்தியமாக்கப்பட்டுள்ளது. பகிரப்பட்ட அதிகாரத்தின் முறைமைக்கான அடித்தளத்தை இடும் சவாலைப் பொறுப்பேற்ற முன்னோடிகளையிட்டு விசேடமாகக் குறிப்பிடுவது அவசியமாகும்.

கால் நூற்றாண்டை அணுகுகின்ற மாகாண சபைகள் ஊடாக ஆட்சியின் முறைமையுடன், இந்த முக்கியமான அனுபவத்தின் மதிப்புரையானது கொள்கை வகுப்போருக்கும், பகிரப்பட்ட அதிகாரத்தின் செயற்பாட்டாளர்களுக்கும் மற்றும் இலங்கையில் அதிகாரப்பகிர்வு நடைமுறையில் அக்கறை கொண்ட ஏனையோருக்கும் நன்மையாக விளங்கும். தேசியஇனப் பிரச்சினைக்கு வெறுமனே தீர்வொன்றாகவே ஆரம்பத்தில் அதிகாரப்பகிர்வு நோக்கப்பட்ட அதேவேளை, பிராந்திய முன்னேற்றத்தையும், ஜனநாயகத்தையும் ஊக்குவிப்பதற்கான கருவியொன்றாக அதன் ஆற்றலளவு தற்போது வலியுறுத்தப்படுகின்றது.

அதிகாரப்பகிர்வின் எண்ணக்கருவை பிரசித்தமாக்குவதில் அதிகளவு பணி செய்யப்பட்ட போதிலும், மாகாண சபைகளின் செயற்பாடு மீதும் தெரிவுசெய்யப்பட்ட கருப்பொருட்கள் மீதும் இந்த அறிக்கைகளுக்குப் புறம்பாக இரு முந்திய ஆய்வுகள் மட்டுமே செய்யப்பட்டுள்ளன. இவை வருமாறு: "*Provincial Councils: Operational Experience of Devolution*" என்ற இலங்கையில் மாகாண சபைகளின் செயற்பாட்டினை ஆய்வதற்கான குழுவின் அறிக்கை, 1996 வை.ஆர்.அமரசிங்க (பதிப்பு), மற்றும் "Devolution Experience in Sri Lanka: (1988-1998): The Administrative and Fiscal Implications", தேசிய ஒருங்கிணைப்புத் திட்ட அலகு, கொழும்பு, 2001. இது அரிகாரப்பகிர்வின் முதல் தசாப்தத்தை உள்ளடக்குகின்றது.

தற்போதைய ஆய்வு மாகாண சபைகளின் செயற்பாட்டின் முழுக் காலத்தையும் உள்ளடக்குவதுடன், மேற்கு, மத்திய, கிழக்கு, வட-மேற்கு மற்றும் ஊவா ஆகிய மாகாணங்கள் மீது விசேடமாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, ஒன்பது மாகாணங்களிலும் நடத்தப்பட்ட கள ஆய்வை இது அடிப்படையாகக் கொண்டுள்ளது. அரசியலமைப்பு, சட்ட, சட்டவாக்க, பிசுக்கால் மற்றும் அரசியல் என முக்கியமான அம்சங்களை ஆய்வதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வு 2009 டிசம்பர் முதல் 2010 ஓகஸ்ட் வரையிலான காலத்தின் போது நடத்தப்பட்டது. திரு.ரஞ்சித் டிக்வெல, திரு.எம்.எம்.இஜாஸ், செல்வி திலூஷா தர்மவர்தன, திரு.தமித் ரஞ்ஜீவ, திரு.கே.கே.ஆர்.பி.அல்விஸ், திரு.எச்.எம்.ஜே.எல்.பண்டார, செல்வி தினேஷா நயனதர்ஷனி, செல்வி ஷமிலா ஜயவீர, மற்றும் சுபாஷினி சமரஆரச்சி ஆகியோரினால் கள ஆய்வு நடத்தப்பட்டது. கருத்திட்டத்திற்கான திட்ட உத்தியோகத்தர் திரு.சம்பத் ராஜபக்ஷ ஆவார்.

பேராசிரியர் ரஞ்சித் அமரசிங்க, திரு.அசோக்க குணவர்தன, கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன, மற்றும் பேராசிரியர் ஏ.எம்.நவரத்ன பண்டார ஆகியோர் சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்களாவர். கருத்திட்டப் பணிப்பாளர்களாக பேராசிரியர் அமரசிங்க மற்றும் பேராசிரியர் நவரத்ன பண்டார ஆகியோர் சேவையாற்றினர்.

எமக்கு உதவியளிப்பதற்காக தமது கடமைகளிலிருந்து விடுவித்துக் கொண்ட மாகாண சபைகளின் ஆளுனர்கள், முதலமைச்சர்கள், அமைச்சர்கள், உறுப்பினர்கள், பிரதம செயலாளர்கள், மாகாண சபைச் செயலாளர்கள், வேறு சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகிய சகலருக்கும், ஆராய்ச்சி உதவியாளர்களுக்கும் நூலாசிரியர்கள் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

சிங்கள மற்றும் தமிழ் பதிப்பில் முறையே பேராசிரியர் உதய மெதகம மற்றும் கலாநிதி எஸ்.ஐ.கீதபொன்கலன் ஆகியோர் உதவியளித்தனர்.

சுவிற்சர்லாந்து அரசாங்கத்திலிருந்து கிட்டிய பெருந்தன்மையிலான உதவியினால் இவ்வாய்வு சாத்தியப்பட்டது.

சிறந்த முறையில் அச்சிட்டமைக்காக திரு.ரி.பி.ஜீ.அமரஜீவாவுக்கும், நியோ கிராபிக்ஸின் பணியாளருக்கும் விசேடமாக நன்றி கூறுகின்றோம்.

ஜயம்பத்தி விக்ரமரத்ன, M.P.A. (Sri J'Pura), Ph.D. (Peradeniya), 33 ஆண்டுகளுக்கு மேலாக சட்டத்தரணியாகப் பணியாற்றி வருகிறார். 2001ம் ஆண்டில் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமனம் பெற்றார். நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சின் ஆலோசகராகவும், சிரேஷ்ட மதியுரைஞராகவும் கடமையாற்றியுள்ளார். 2000ம் ஆண்டு இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு வரைவுச் சட்டத்தை வரைந்த வரைஞர் குழுவின் அங்கத்தவராகவும் பணியாற்றினார். "இலங்கையின் அடிப்படை உரிமைகள்" என்ற தொனிப்பொருளில் கலாநிதிப்பட்டத்திற்கான ஆராய்ச்சிக் கட்டுரை இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. சட்ட சீர்திருத்தங்கள், மனித உரிமைகள், குற்றவியல் நீதி, மனிதக் கடத்தல், சர்வதேசச் சட்டம், சட்டத்துறையின் ஆற்றலை மேம்படுத்தல் ஆகிய துறைகளில் Sida சார்பில் லாஓ மக்கள் ஜனநாயகக் குடியரசிலும், UNDP, UNODC கருத்திட்டங்களிலும் சேவை செய்துள்ளார்.

ஏ.எம். நவரத்ன பண்டார, B.A. (Ceylon), M.A. (Peradeniya), D. Phil (York), இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரச அறிவியற் துறையின் தலைவராகவும் பேராசிரியராகவும் கடமையாற்றுகிறார். அவர் அரச அறிவியல், அரச கொள்கை பொது நிருவாகம் ஆகிய பாடங்களைக் கற்பித்து வருகிறார். அவர் பல கல்வியியற் பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளார். அவற்றுள் சில பின்வருமாறு *Management of Ethnic Secessionist Conflict; The Big Neighbour Syndrome*, (1995), "State Crafting and Ethnic Accommodation in Post-Independent Sri Lanka" in Walter Nubin (ed.) *SRI LANKA: Current Issues and Historical Background,* (2003), and "The Peace Process and the Real Losers", in Jayadeva Uyangoda and Maurine Perera (eds.), *Sri Lanka's Peace Process 2002, Critical Perspectives*, (2003).

நூல் ஆசிரியர்களைப்பற்றி

ரஞ்சித் அமரசிங்க, B.A.(Ceylon),B.Phil.(York),Ph.D.(London), பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரச அறிவியற்துறையின் வருகைதரு பேராசிரியர். பேராதனைப்பல்கலைக்கழகத்தில் அவரது உயர்தொழில் சேவை நான்கு தசாப்தங்களாக நீடித்தது. அரச அறிவியற்துறைப் பேராசிரியராக அவர் பத்து ஆண்டுகள் (1998-2008) வரை கடமையாற்றினார். (2003-2006) வரை கலைப்பீடாதிபதியாகப் பணிபுரிந்தார். அரசியலமைப்பு விவகார தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான பிரிவின் மதியுரைஞராகவும், சிரேஷ்ட ஆலோசகராகவும் பல வருடங்கள் அவர் சேவையாற்றியுள்ளார். *A Study on the Issues related to the Enforcement of Environmental Laws in Sri Lanka and Japan* என்ற நூலை 2002ல் வெளியிட்டார். *Revolutionary Idealism and Parliamentary Politics- A Study of Trotskyism in Sri Lanka* (1998 - 2000) என்ற நூலையும் அவர் எழுதியுள்ளார். அதிகாரப்பகிர்வு, சமாதான ஒப்பந்தங்கள், இடதுசாரி அரசியல், பெருந்தோட்டத்துறை, அரசியல் கற்கை ஆகிய துறைகளில் பல நூல்களையும் பதிப்பிக்கப்பட்ட மலர்களையும் அத்தியாயங்களையும் பத்திரங்களையும் சமர்ப்பித்துள்ளார்.

அசோக்க குணவர்தன, B.A. (Hons.) (Ceylon), Post-grad. Dip. in Dev. Ad. (Leeds), M.S.Sc. (New England), அதிகாரப் பரவலாக்கம் உப தேசிய அரசாங்கம் ஆகிய துறைகளில் விசேட ஆர்வம் காட்டிய ஆட்சியியல் பற்றிய சிறப்பறிஞர். அரசாங்க நிருவாக சேவையின் மூத்த அதிகாரியாக அவர் ஓய்வு பெற்றார். முன்னாள் நிதி ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியையும் வகித்துள்ளார். அரசாங்க சேவையின் பல உயர் பதவிகளை வகித்ததோடு,இலங்கையின் அபிவிருத்திக்கான நிருவாக நிறுவகத்தின் (SLIDA) பணிப்பாளராகவும் கடமை புரிந்தார். பொது நிருவாகம் மாகாணசபைகள் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மாகாணசபைகளுக்கான மேலதிகச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தைச் சார்ந்த (UNDP) மியன்மாரின் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் மதியுரைஞராகவும் பணியாற்றினார். பங்களதேஷ் உள்ளூராட்சி ஆற்றலை கட்டியெழுப்பும் கருத்திட்டத்தில் சட்டம் மற்றும் நீதித்துறை வழிமுறையின் சிறப்பறிஞராகவும் சேவையாற்றினார்.

ஜயம்பத்தி விக்ரமரத்ன, M.P.A. (Sri J'Pura), Ph.D. (Peradeniya), 33 ஆண்டுகளுக்கு மேலாக சட்டத்தரணியாகப் பணியாற்றி வருகிறார். 2001ம் ஆண்டில் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமனம் பெற்றார். நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சின் ஆலோசகராகவும், சிரேஷ்ட மதியுரைஞராகவும் கடமையாற்றியுள்ளார். 2000ம் ஆண்டு இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு வரைவுச் சட்டத்தை வரைந்த வரைஞர் குழுவின் அங்கத்தவராகவும் பணியாற்றினார். "இலங்கையின் அடிப்படை உரிமைகள்" என்ற தொனிப்பொருளில் கலாநிதிப்பட்டத்திற்கான ஆராய்ச்சிக் கட்டுரை இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. சட்ட சீர்திருத்தங்கள், மனித உரிமைகள், குற்றவியல் நீதி, மனிதக் கடத்தல், சர்வதேசச் சட்டம், சட்டத்துறையின் ஆற்றலை மேம்படுத்தல் ஆகிய துறைகளில் Sida சார்பில் லாஓ மக்கள் ஜனநாயகக் குடியரசிலும், UNDP, UNODC கருத்திட்டங்களிலும் சேவை செய்துள்ளார்.

ஏ.எம். நவரத்ன பண்டார, B.A. (Ceylon), M.A. (Peradeniya), D. Phil (York), இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரச அறிவியற் துறையின் தலைவராகவும் பேராசிரியராகவும் கடமையாற்றுகிறார். அவர் அரச அறிவியல், அரச கொள்கை பொது நிருவாகம் ஆகிய பாடங்களைக் கற்பித்து வருகிறார். அவர் பல கல்வியியற் பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளார். அவற்றுள் சில பின்வருமாறு *Management of Ethnic Secessionist Conflict; The Big Neighbour Syndrome*, (1995), "State Crafting and Ethnic Accommodation in Post-Independent Sri Lanka" in Walter Nubin (ed.) *SRI LANKA: Current Issues and Historical Background,* (2003), and "The Peace Process and the Real Losers", in Jayadeva Uyangoda and Maurine Perera (eds.), *Sri Lanka's Peace Process 2002, Critical Perspectives*, (2003).

சுருக்கக் குறியீட்டு விளக்கங்கள்

CA	Court of Appeal
BLR	Bar Association Law Reports
CJ	Chief Justice
DSCPB	Decisions of the Supreme Court on Parliamentary Bills
J	Justice
JJ	Justices
JP	Judicial Pronouncements under the 13th Amendment
NLR	New Law Reports
SC	Supreme Court
SCC	Supreme Court Cases (India)
SCM	Supreme Court Minutes
SD	Supreme Court Special Determination
Sri LR	Sri Lanka Law Reports

சாராம்சமும் பரிந்துரைகளும்

பதின்மூன்றாவது திருத்தச் சட்டமூலத்தை பரிசீலித்த மீஉயர் நீதிமன்றம் அரசியலமைப்பில் ஒற்றையாட்சித்தன்மை முழுமையாகவுள்ளது என்ற கருத்தினை எடுத்தது. இதன்படி பாராளுமன்றத்திற்கும், ஜனாதிபதிக்கும் மாகாண சபைகள் கீழ்படிகின்ற உறுப்புக்களாக விளங்குகின்றன.

மாகாணங்களில் பாராளுமன்றத்தினால் உருவாக்கப்பட்ட அரசாங்கமொன்றே செயற்படுகின்றது. மாகாண மற்றும் ஒருங்கியை நிரல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில், அமைச்சர்களின் சபையினதும், முதலமைச்சரினதும் ஆலோசனையின் பேரில் ஆளுனர் செயற்பட வேண்டும். முதலமைச்சரின் ஆலோசனையை ஆளுனர் ஒருவர் உதாசீனம் செய்துவிட்டு, ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களின் மீது மாகாண சபையொன்றைக் கலைக்க முடியாது.

அரசியல் ரீதியில் செயல்திறன் கொண்ட நபர்களை ஆளுனர்களாக நியமனம் செய்வது மூலம் ஆளுனர் பதவியின் பெருமையைக் குறைத்து விடுகின்றது. இது சபையின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றிருந்த உறுப்பினர் ஒருவருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு மத்தியில் ஆளும் கட்சியின் உறுப்பினர் ஒருவரை இரு மாகாணங்களின் ஆளுனர்களாக நியமித்ததன் மூலம் சான்று பகரப்படுகின்றது. நியதிச்சட்டமொன்றுக்கு ஒப்புதல் வழங்குவதில் ஆளுனர் காட்டிய அதிகபட்ச தாமதத்தின் தருணங்களும் இருந்துள்ளன. ஜனாதிபதியின் பார்வைக்கு அனுப்பப்பட்ட நியதிச்சட்டமொன்று அதன் பின்னர் கேள்விப்படவேயில்லை.

மாகாண சபைகள் பற்றிய எண்ணக்கரு உயர்ந்தோர் குழாமுக்கும், உயர்ந்தோர் சாராத குழாமுக்கும் விவாதத்திலான பிரச்சனையொன்றாகவே இன்னுமுள்ளது. இந்தியாவுக்கு இலங்கையின் தேசிய இறையாண்மையை சரணடைய வைக்கும் சின்னமொன்றாக அடையாளம் காணப்பட்டுள்ள மாகாண சபைகள் பாராளுமன்றத்திலும், அதற்கு வெளியேயும் இடம்பெற்ற விவாதம் வேறுபட்ட விதத்தில் தொடர்கின்றது. கொழும்பின் அரசியல் ஆட்சிகளினால் திறமையாகக் கையாளப்படும் 13ஆவது திருத்தத்தின் அமுலாக்கம் அவற்றின் அதிகார நோக்கங்களைச் சாதிக்கின்றது. அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்குப் பதிலாக, ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீள்-மையப்படுத்துவதில் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் ஈடுபட்டுள்ளன. கடந்த

இருபத்திரெண்டு ஆண்டுகளில், இலங்கையின் ஆட்சி ஒழுங்குமுறைக்கு தமது சம்பந்தத்தை நியாயப்படுத்துவதற்கு அவசியமான பொது இடம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை. இறுதியாக, கடந்த இரு தசாப்தங்களின் போது மாகாண சபை முறைமையைச் சம்பந்தப்படுத்தும் தீவிரம் சார்ந்ததும், எதிர்ச்செயலாற்றுகின்றதுமான அரசியலானது 1978 அரசியலமைப்பினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட ஆட்சி அமைப்பு முறைமையின் மேலும் இன்னொரு நீடிக்கப்பட்ட கருவியொன்றாக மாகாண சபைகளைச் செய்துள்ளது.

ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் மீது பெருமளவு பாராளுமன்ற சட்டவரைவுகள் இருந்தன. ஆனால், மாகாண சபைகளின் அபிப்பிராயங்களைப் பெற அவை மாகாண சபைகளின் பார்வைக்கு அனுப்பப்படவில்லை அனுப்பப்பட்டவைக்கு வெற்றிகரமாகச் சவால்விடுக்கப்பட்டன. ஆனால், இத்தகைய பெருமளவு சட்டவரைவுகள் சவால்விடுக்கப்படாமல் சென்றிருக்கக்கூடும். இத்தகையதொரு சட்டவரைவு "சட்டமாக வந்துள்ளமை" வாதிக்கக்கூடியதா என்பதே பிரச்சனையாகும்.

வரைச்சட்ட சட்டவாக்கத்தினால் மட்டுமே ஒப்படைக்கக்கூடிய விடயங்கள் மீது தேசியக் கொள்கையை மத்திய அரசு செய்ய முடிகின்ற போதிலும், இத்தகைய கொள்கையைச் செய்கின்ற வேஷத்தில் மாகாணங்களுக்கு அது சட்டத்தை இயற்றியுள்ளதுடன், அமைச்சரவைத் தீர்மானங்களினாலும், அமைச்சு சுற்றறிக்கைகளினாலும் "தேசியக் கொள்கையை" பிரகடனப்படுத்தியது. தேசிய கொள்கையை முன்வைத்த கமநல சேவைகள் மீதான திருத்தம் பற்றிய சட்டவரைவொன்று மீதான மீஉயர் நீதிமன்றத்தின் தீர்மானமொன்று தவறாக அர்த்தங்கொள்ளப்பட்டதுடன், மத்தியினால் மாகாணத் திணைக்களங்கள் பொறுப்பேற்கப்பட்டன. கமநல சேவைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன என பின்னர் விளக்கமொன்று அளிக்கப்பட்ட போதிலும், மத்தியுடனேயே விடயம் தொடர்ந்துமிருக்கின்றது. ஒப்படைக்கப்பட்ட அலகுகளின் பங்கெடுப்புடன் தேசியக் கொள்கைக்கான சர்வதேச சிறந்த செய்முறை வகுத்தமைக்கப்படவுள்ளது.

பிரத்தியேகமான நிறைவேற்று அதிகாரத்தை மாகாண சபையொன்று நிறைவேற்றுவதற்கு அதன் சொந்த நியதிச்சட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும். 1987க்கு முற்பட்ட சட்டங்களைப் பயன்படுத்துவதற்கு மத்தியின் அதிகாரங்களை மாகாண சபைகள் (பின்தொடர்கின்ற ஏற்பாடுகள்) சட்டம் அப்புறப்படுத்தவில்லை என்பதுடன், ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் மீது அத்துமீறுவதற்கு நியதிச்சட்டங்களைச் செய்வதில் மாகாண சபைகளினால் முகங்கொடுக்கப்படும் கஷ்டங்களை மத்தி பயன்படுத்திக் கொள்கின்றது.

மாகாண அரசாங்க சேவை மீதான ஆளுனரின் அதிகாரங்கள் அமைச்சர்களின் சபை மீது ஆர்வத்தைக் குறைக்கின்ற தாக்கமொன்றைக் கொண்டுள்ளது. செயலாளர்களினதும், திணைக்களத் தலைவர்களினதும் நியமனத்தில் அமைச்சர்களின் சபை கொண்டிருக்க வேண்டும் என்றும், கொள்கையின் விடயங்களை நிர்ணயிக்க வேண்டும் என்றும் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கீழ் மாகாண அரசாங்க சேவை வரவேண்டும் என்றும் மாகாண சபைகள் விரும்புகின்றன. இத்தகையதொரு மாற்றம் பரவலாக்கத்தைப் பலப்படுத்துவதுடன், தேசிய அரசாங்கச் சேவைக்கு பிரயோகிக்கக்கூடிய அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைவாக இருக்கும்.

அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் நிரல்கள் ஒன்றினதும். மூன்றினதும் கீழ் குறித்துரைக்கப்பட்ட பலதரப்பட்ட விடயங்கள் மீது குறிப்பான மாகாணமொன்றுக்கு "நியதிச்சட்டங்களின்" வழிவகைகளினால் சட்டவாக்கத்திற்கு மாகாண சபையொன்று உரித்தினைக் கொண்டுள்ளது. அவற்றின் ஆரம்ப காலத்தின் போது, மாகாண சபையின் அமைப்பு செயற்படுவதற்கும், அடிப்படையிலான சமூக சேவைகளின் ஏற்பாட்டுக்கு அவசியமான நிறுவன ரீதியிலான கட்டமைப்பினை உருவாக்குவதற்கும் அவசியமான நியதிச்சட்டங்களை மாகாண சபைகள் அமைத்துள்ளன. மாகாணங்கள் முழுவதும், புதிய முன்னெடுப்புக்களை எடுப்பதில் சில தைரியமான முயற்சிகள் அவதானிக்கப்பட்டன. ஆனால், அவசியமான சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட நியதிச்சட்டங்கள் மிகவும் சிறிதளவாகவே விளங்கியது. ஒன்றில் நேரடி அமைச்சுக்கள் ஊடாக அல்லது ஒருமைப்பாட்டின் மீது மத்தியுடன் பொறுப்புக்களை பரிமாறுவதற்கு மாகாண சபைகள் கேட்கப்படுகின்றபட்சத்தில், நியதிச்சட்டத்தின் பதிவு துயராந்ததாகும். குறித்தொதுக்கப்பட்ட விடயங்களின் தெளிவுத்தன்மை இன்மையும், தகுதிவாய்ந்த வரைஞர்கள் இன்மை போன்ற தொழில்நுட்பக் கஷ்டங்களும் நியதிச்சட்டங்களை ஆக்குவதில் மோசமான பதிவுக்கான பங்களிப்பிலான காரணிகளாகும். தொடர்ந்து வந்த மீள்-மையப்படுத்திய நடவடிக்கைகளினால் விளைந்துள்ள மயக்க நிலையுடன் மாகாணங்களுக்கு உண்மை நிலையிலான அதிகாரப் பகிர்விற்கான சாத்தியக்கூற்றின் ஆரம்ப நலநோக்குக்கான பதிலீடானது மாகாணாத் தலைவர்களை அதைரியப்படுத்தியதாகத் தெரிகின்றது. மத்தியையும், மாகாண சபைகளையும் கட்டுப்படுத்தும் ஒரே கட்சி இருக்கும் பட்சத்தில் கட்சி அரசியலின் உண்மைநிலையானது பின் ஆசனத்தை எடுத்து, நடைமுறையிலான சட்டங்களுடன் தொடர்ந்தும் பணியாற்றுவதற்கு மாகாண ஆட்சியாளர்களை முனைவுபடுத்தியுள்ளது. இது மாகாண சபைகள் (பின்தொடர்கின்ற ஏற்பாடுகள்) சட்டத்தினாலேயே சாத்தியபடச் செய்யப்பட்டது.

பிசுக்கால் ரீதியாக, பரவலாக்கத்திற்கான நகர்வு உள்ளூர் ரீதியாக வரையறுக்கப்பட்ட தேவைகளை நிறைவேற்றியருப்பதைப் போன்ற சேவைகளை வழங்குவதற்காக தேசத்தின் கொள்கைக்கு உட்பட்டு ஒரு புதிய மாகாணக் கடப்பாடொன்றை உருவாக்கியுள்ளது. ஏதாவது சமமின்மைகளை நிறைவேற்றுவதற்கான பிசுக்கால் இடமாற்றங்களின் உத்தரவாதமொன்றுடன் வருமானத்தைத் தோற்றுவிப்பதற்கும், செலவினங்களைப் பொறுப்பேற்பதற்கும் அதிகாரங்களுடன் மாகாணங்கள் உடமையாக்கப்பட்டுள்ளன.

தீர்மானமெடுக்கும் அதிகாரத்தின் பொருத்தமான மட்டங்களுடனும், பொதுசன சேவைகளை வழங்குவதற்கான பொறுப்புடனும் பொதுசன செயற்பாடுகளைப் பொருத்துவதன் மூலம் பிராந்தியங்களினதும், சனசமூகங்களினதும் தேவைகளை மிகவும் செயற்றிறனாக கவனத்திற்கெடுப்பதற்கான அதன் தகுதி மீது அதிகாரப் பகிர்விற்கான விடயம் தங்கியுள்ளது. எனினும், மையப்படுத்தப்பட்ட திட்டமிடலின் வரைச்சட்டத்தினுள்ளும், வரவு-செலவுத்திட்டத்திலான விதிகளினுள்ளும் மற்றும் நடைமுறைகளினுள்ளும் பிசுக்கால் பரவலாக்கம் அறிமுகப்படுத்தப்பட்டு, அனுஷ்டிக்கப்பட்டது.

பிசுக்கால் பரவலாக்கத்தின் செயற்றிறனை பெருமளவு காரணிகள் கட்டாயப்படுத்தியுள்ளன.

அ. பிசுக்கால் பரவலாக்கலானது பங்கிடப்பட்ட பொறுப்பொன்றை விட மையப்படுத்தப்பட்டதொன்றாகும்.

ஆ. மாகாணங்களின் சேவை விநியோகப் பொறுப்பு தெளிவாக வரையறுக்கப்படவில்லை.

இ. விளிம்பு நிலையிலான மாகாண நிதியை மத்தி கட்டுப்படுத்துகின்றது.

ஈ. பங்கெடுப்பு, ஒளிவுமறைவின்மை மற்றும் பொறுப்புக்காட்டுதல் ஆகியவற்றின் மாகாண பிசுக்கால் ஆட்சி பற்றாக்குறையாகும்.

உ. பிசுக்கால் பரவலாக்கத்தை மத்தியஸ்தம் செய்வதில் நிதி ஆணைக்குழுவின் போதாமை.

பொதுசன சேவைகளின் செயற்றிறனானதும், பொறுப்புக்கூறக்கூடியதுமான வழங்குனர்களாக மாகாணங்களைத் தாபிப்பதில் இலங்கையில் பிசுக்கால் பரவலாக்கல் தொடர்ந்து முடிவுறாதிருக்கின்றது.

இலங்கையில் அதிகாரப்பகிர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மாதிரியானது மத்தி-மாகாணங்கள் உறவுகளின் சம்பந்தத்தில் ஆதிக்கம்

செலுத்துகின்ற நிலையொன்றில் மத்தியை வைத்துள்ளது. பரவலாக்கத்தின் முறைமையின் அதே வடிவமைப்பில் மத்தியின் ஆதிக்கம் பதிந்துள்ளது. பலதரப்பட்ட மத்திய அதிகாரங்களினால் நேரடியான தலையீட்டினையும், நிதியங்களின் ஒதுக்கீட்டினதும், அரசியல் அழுத்தத்தினதும் ஊடாக மறைமுகமான கட்டுப்பாட்டினையும் இன்றியமையாததாக்கும் பரவலாக்கத்தின் வழக்கம் இந்த தலையீட்டினை வலியுறுத்தியுள்ளது. அதன் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் மாகாண நிருவாகத்தின் முறைமையொன்றைக் கொண்டிருக்காததன் காரணமாக தமக்கு சட்டபூர்வமாக ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை உபயோகிப்பதில் பிரதிகூலமான நிலையில் மாகாண சபைகள் உள்ளன. மேலும், மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களைக் கட்டுப்படுத்துகின்ற அதே அரசியல் கட்சியைக் கொண்டுள்ள தற்போதுள்ள உண்மைநிலையானது பிடிவாதமாக இருந்து, மாகாணங்களின் குறிப்பான தேவைகளை ஈடுகொடுப்பதற்குப் பதிலாக வழிகாட்டலுக்காக மத்தியை மாகாண அதிகாரவர்க்கத்தினர் கிரமமாக நோக்குவதை செய்ய முனைகின்றது. மூலத்திலான வடிவமைப்பில் அரசியலமைப்புத் தலைவராக செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் மாகாண மற்றும் ஆளுனர் மத்தியில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பிரதிநிதியாக செயற்படும் வகையில் உருமாறியுள்ளார்.

பகிர்வின் பின்னர், நாட்டின் அரசாங்க நிருவாக முறைமையை மீள்சீரமைப்பதற்கான பரிந்துரைகளை நிருவாக சீர்திருத்தக் குழு பரிந்துரைகளைச் செய்துள்ள போதிலும், மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டிய அரசாங்க நிருவாக ஒழுங்கமைப்பினை சரிவர வடிவமைப்பதற்கு அரசியல் மற்றும் நிருவாக தலைமைத்துவத்துவங்கள் தோல்வியடைந்துள்ளன. மாகாண அரசாங்க நிருவாகத்தைத் தாபிப்பதற்கான சட்ட மற்றும் நிருவாக ஒழுங்குகளின் அமைப்பினை பரிசீலிக்கும் போது, அது அரசாங்கத்தின் பரவலாக்கத்தை விட நிருவாக ஒருமுகப்படுத்தலின்மையைக் காட்டுகின்றது. எனினும், பெருமளவு திட்டமான பங்களிப்புக்களுடன் ஒன்று சேர அவசியமான கட்டமைப்புகளையும், வழக்கங்களையும் விருத்தி செய்வதன் மூலம் இந்தத் தடைகளை மாகாண நிருவாகத்தினர் வெற்றிகொள்ள இயலக்கூடியவர்களாக விளங்கினார்கள்.

அரசியலமைப்பினால் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இலங்கையின் ஒற்றையாட்சி ஆட்சி அமைப்பு முறையினுள் பிராந்திய முன்னேற்றத்தின் பணியைப் பொறுப்பேற்பதற்கு மாகாண அரசாங்க நிருவாகம் போதியளவு முதிர்ச்சியடைந்துள்ளது. அதிகாரமும்,

நேரமும் இடமும் மற்றும் வளங்களும் வழங்கப்பட்டால் மாகாணங்களின் நிருவாக முறைமைகளினால் உள்ளூராட்சியின் ஆற்றலளவுகளை மேம்படுத்துவதற்கு பொதுசன சேவைகளை வழங்குவதற்கும், பிராந்திய முன்னேற்றத்தைப் பொறுப்பேற்பதற்கும் தம்மால் இயலக்கூடியதாக இருக்கும் என நிரூபித்துள்ளது.

காலனித்துவ ஆட்சியின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள் பொதுசன சுகாதாரத்தினதும், பொதுச்சாலைகளினதும், வசதிகளினதும் வழங்குனர்களாக விளங்கும் வகையில் பொறுப்பு குறித்தொதுக்கப்பட்டது. எனினும், சுதந்திரத்திற்குப் பிந்திய கருத்தாடலிலும், பன்னிலையாக ஒருமுனைப்படுத்தப்பட்ட பிரதேச நிருவாகத்தின் சார்பாக "அபிவிருத்திக்காக பரவலாக்கத்தின்" வழக்கத்திலும் அவை ஓரங்கட்டப்பட்டன. முன்னேற்றத்தின் ஒருங்கிணைப்புக்காக பிரதேச நிருவாகத்திற்கு அப்பால் நகருகின்ற பிரச்சனையானது உள்ளூராட்சி முறைமையை இணைக்கும் மாவட்ட சபைகள் ஊடாக கவனத்திற்கெடுக்கப்பட்டது. தமிழ் மக்களினால் பிராந்திய சுயாட்சிக்கான கோரிக்கையே சமாந்தரமான தட்டமுடியாததொன்றாகும். திருப்புமுனை எனக் கருதப்பட்ட போதிலும், 1983இல் தாபிக்கப்பட்ட மாவட்ட சபைகள் இரு கணிப்புகளிலும் தோல்வியடைந்ததுடன், இது 13ஆவது திருத்தத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்விற்கு இட்டுச் சென்றது.

உள்ளூராட்சி சபைகளின் மேற்பார்வை மாகாணங்களுக்கு குறித்தொதுக்கப்பட்டது. பல்-மட்டத்திலான ஆட்சியில் அரசாங்கங்களுக்கிடையிலான சம்பந்தத்தில் இது உள்ளூராட்சி சபைகளை ஓரங்கட்டியதுடன், நிருவாக ரீதியிலும், பிசுக்கால் ரீதியிலும் அரசாங்கங்களுக்கிடையிலான சிறிதளவு இடத்துடனான சேவை ஏற்பாட்டில் விளிம்பு நிலையிலான செயற்பாட்டாளர்களாக தொடர்ந்தும் செயற்படுகின்றது.

ஆழமான அதிகாரப்பகிர்வை உள்ளூராட்சி கொண்டிருக்க வேண்டும் என்ற போதிலும், அதிகரித்தளவில் மையப்படுத்தப்பட்ட பிசுக்கால் மற்றும் நிருவாக ஒழுங்குகளில் உள்ளூராட்சி சபைகள் சிக்கிக் கொண்டுள்ளன. "பிரதேச நிருவாகத்தின்" ஊடாக வழங்கும் மத்திய மற்றும் மாகாண வழங்குனர்களின் சமாந்தரமான பிரசன்னமானது ஜனநாயக ஆட்சியின் நிறுவனங்களாக உள்ளூராட்சியை சம்பந்தமில்லாததாக்கியுள்ளது.

பரிந்துரைகள்

அரசியலமைப்பு வரைச்சட்டம்

1. ஆளுனர் ஒருவராக நியமிக்கப்படும் நபர் ஒருவர் நியமனத்திற்கு முன் குறைந்தபட்சம் இரு வருடங்களுக்கு அரசியலில் தீவிரமாக ஈடுபட்டிருக்கக்கூடாது என்பதுடன், அதே மாகாணத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கக்கூடாது.

ஆதிகாரப்பகிர்வு அரசியல்

1. சர்வ கட்சி பிரதிநிதித்துவக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையைத் தொடர்ந்து மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பலப்படுத்தும் முறைகள் மீதான தேசிய ஒருமைப்பாட்டினை அடைவதற்காக 2006இல் தாபிக்கப்பட்ட சர்வகட்சி மகாநாட்டை (APRC) மீளக்கூட்டுதல்

சட்டப் பிரச்சனைகள்

1. மாகாண சபைகளைச் சம்பந்தப்படுத்தும் பங்கெடுப்பு நடைமுறையொன்றின் ஊடாக மாகாணப் பட்டியலில் அல்லது பின்தொடர்கின்ற பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள விடயமொன்றின் மீதான தேசியக் கொள்கை வகுத்தமைக்கப்பட வேண்டும். இவ்வாறாக வகுத்தமைக்கப்பட்ட கொள்கை வரைச்சட்ட சட்டவாக்கத்தின் அமைப்பில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுடன், சகல மாகாண சபைகளும் இத்தகைய வரைச்சட்டத்தினுள் இயங்க வேண்டும். மந்திரிகளின் அமைச்சரவையின் தீர்மானங்களினதும், அமைச்சுச் சுற்றறிக்கைகளினதும் ஊடாக தேசியக் கொள்கை வகுத்தமைக்கப்பட வேண்டும். இவ்வாறாக வகுத்தமைக்கப்பட்ட கொள்கை வரைச்சட்ட சட்டவாக்கத்தின் அமைப்பில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுடன், சகல மாகாண சபைகளும் இத்தகைய வரைச்சட்டத்தினுள் இயங்க வேண்டும். மந்திரிகளின் அமைச்சரவையின் தீர்மானங்களினதும், அமைச்சுச் சுற்றறிக்கைகளினதும் ஊடாக தேசியக் கொள்கையில் இடுகின்ற வழக்கம் இடைநிறுத்தப்பட வேண்டும்.

2. பின்தொடர்கின்ற பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு அதன் நோக்கெல்லையை நீடிப்பதன் மூலமும், மாகாணப் பட்டியலினதும். பின்தொடர்கின்ற பட்டியலினதும்

கீழான விடயங்கள் தொடர்பில் 1987க்கு முந்திய சட்டங்களில் அதிகாரசபைகளுக்கான மேற்கோள்கள் ஒத்திசைவிலான மாகாண அதிகார சபைகளுக்கு மட்டுமே என்ற மேற்கோள்களாக கருதப்பட வேண்டும் என்பதை வழங்குவதன் மூலமும் மாகாண சபைகள் (பின்தொடர்கின்ற ஏற்பாடுகள்) சட்டம் திருத்தப்பட வேண்டும்.

3. ஏதாவது ஒப்படைக்கப்பட்ட விடயம் தொடர்பில் நிறைவேற்று அதிகாரத்தை நிறைவேற்றாதிருப்பதற்கு கொள்கைத் தீர்மானமொன்றை மத்திய அரசாங்கம் எடுக்க வேண்டும்.

4. பின்வருவனவற்றை வழங்குவதற்காக மாகாண சபைகள் சட்டம் திருத்தப்பட வேண்டும்:

(அ) முதலமைச்சின் அறிவுறுத்தலுக்கும், கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு, பிரதம செயலாளர் முதலமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட்ட மாகாண சபையின் திணைக்களங்களினதும், நிறுவனங்களினதும் மீது மேற்பார்வையை நிறைவேற்ற வேண்டும் என்பதுடன், மாகாண சபையின் சகல வேறு திணைக்களங்களினதும், நிறுவனங்களினதும் மீது பொதுவான மேற்பார்வையை நிறைவேற்ற வேண்டும்

(ஆ) முதலமைச்சின் ஆலோசனையின் பேரில் மாகாணமொன்றின் அமைச்சுக்களுக்கான செயலாளர்களையும், முதலமைச்சின் செயலாளரையும் மாகாணமொன்றின் ஆளுனர் நியமிக்க வேண்டும்

(இ) அமைச்சரின் அறிவுறுத்தலுக்கும், கட்டுப்பாட்டுக்கும் அமைச்சொன்றுக்கான செயலாளர் உட்பட வேண்டும் என்பதுடன், அமைச்சரின் பொறுப்பில் உள்ள மாகாண சபையின் திணைக்களங்களினதும், நிறுவனங்களினதும் மீது மேற்பார்வையை நிறைவேற்ற வேண்டும்.

(ஈ) திணைக்களங்களின் தலைவர்களின் நியமனம், பதவிநீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியன அமைச்சர்களின் சபையில் உரித்தாக்கப்பட்டுள்ளதுடன், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கருத்துக்களை உறுதிப்படுத்திய பின்னர் இத்தகைய அதிகாரங்களை நிறைவேற்ற வேண்டும்.

(உ) மாகாண அரசாங்கச் சேவையின் உத்தியோகத்தரின் நியமனம், பதவியேற்றம், இடமாற்றம், பதவிநீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியவற்றின் அதிகாரம் மாகாண அரசாங்கச் சேவை ஆணைக்குழுவில் உரித்தாக்கப்பட வேண்டும்.

(ஊ) மாகாண அரசாங்க உத்தியோகத்தர் தொடர்பில் கொள்கையின் சகல விடயங்களையும் மாகாணமொன்றின் அமைச்சர்களின் சபை வழங்குவதுடன், நிர்ணயிக்க வேண்டும்.

(எ) மாகாண அரசாங்கச் சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களிலிருந்து நிருவாக மேன்முறையீடுகள் விசாரணை மன்றுக்கு மேன்முறையீடொன்று இருக்க வேண்டும்.

5. மாகாண சபைகளின் உறுப்பினர்களின் அதிகாரங்களும், சிறப்புரிமைகளும் பாராளுமன்ற (அதிகாரங்களும். சிறப்புரிமைகளும்) சட்டத்திற்கு ஒப்பிடக்கூடிய பாராளுமன்றச் சட்டமொன்றினால் வழங்கப்பட வேண்டும்.

6. எதிர்க்கட்சித் தலைவரினதும், சபைத் தலைவரினதும் மற்றும் ஆளும் கட்சியின் பிரதம கொறடா ஆகியோரினதும் பதவிகள் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

மாகாண சபைகளின் சட்டவாக்க செயற்பாடுகள்: நியதிச்சட்டத்தை ஆக்குதலும், ஆற்றலளவுப் பிரச்சனைகளும்

1. ஏதாவது பொருள் தெளிவின்மைகளுக்கு இடம்விடாமல் இரு மட்டங்கள் மத்தியில் பொறுப்புக்களின் ஒதுக்கீட்டினை தெளிவுபடுத்தல்.

2. ஒவ்வொரு மாகாண சபைகளிலும் அவசியமான மனித மற்றும் பொருள் வளங்களுடன் நியதிச்சட்ட வரைதல் அலகுகள் தாபிக்கப்படுவதை வசதிப்படுத்தல்.

3. ஒப்படைக்கப்பட்ட பட்டியலிலும், ஒருப்பாட்டு பட்டியலிலும் வழங்கப்பட்டுள்ள விடயங்கள் மீது தேசிய கொள்கைகளை வகுத்தமைப்பதில் மாகாண சபை பங்கெடுப்புக்கான வாய்ப்பொன்றை வழங்குதல்.

4. நியதிச்சட்டங்களை ஆக்குவதற்காக மாகாண மட்டத்தில் முன்னெடுப்புகளை எடுக்கும் முக்கியத்துவத்தையிட்டு மாகாண சபைகளின் உறுப்பினர்கள் மத்தியில் அளப்பரிய விழிப்பியலை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளுதல்.

5. மாகாண மட்டத்தில் சட்டவாக்க நடவடிக்கைகளின் முன்னெடுப்பாளர்களாக அவை உருவாகும் வழியொன்றில்

அமைச்சுரீதியிலான ஆலோசனைக் குழுக்களைப் பலப்படுத்துதல்.

பிசுக்கால் பரவலாக்கம்: செயற்பாட்டிலான பிரச்சனைகள்

1. பல்மட்ட முறைமையின் மத்திய, மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களில் சேவை விநியோகப் பொறுப்புக்களைத் தெளிவுபடுத்தல்

2. தேசிய சேவை விநியோகத் தேவைகளைக் கவனத்திற்கெடுக்குமுகமாக மத்திய நிதிப்படுத்தல் அவசியமானது என கருதப்படுமிடத்து, இத்தகைய நிதிப்படுத்தலை விடயத்திற்கேற்றவாறு மாகாண அல்லது உள்ளூர் மட்டங்களின் ஊடாக அனுப்ப வேண்டும்.

3. துணைச் சட்டத்தின் தத்துவத்தைத் தொடர்ந்து, மாகாண சபைகளுக்கும், உள்ளூராட்சி சபைகளுக்கும் உப-தேசிய மட்டத்தில் அதிகார செயற்றிறனாக ஒழுங்குபடுத்தப்படக்கூடிய சேவை விநியோக பணிகளைக் குறித்தொதுக்குதல்.

மத்திய / மாகாண உறவுகள்

1. மாகாண ஆளுனருக்கு பொருத்தமான மாதிரியாக அரசியலமைப்புக்குட்பட்ட தலைவர் எனும் மாதிரியை முன்னேற்றுதல். இதற்காக சாத்தியமான அளவீடுகள் அல்லது கணிப்பீடுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதில் ஆளுனர்களை அரசியல் இலாப நோக்கில் தெரிவு செய்யாது சிறப்பு அடிப்படையில் தெரிவு செய்தல், மற்றும் நியமனங்களைச் செய்யும் போது முதலமைச்சரை கலந்தாலோசித்தல் என்பனவற்றையும் உள்ளடக்கல்.

2. பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளதுபோல் தேசிய நில ஆணைக்குழுவை தாபித்தல். அத்துடன் மாகாண சபைகளுக்கு தாக்கத்தை உண்டுபண்ணுகின்ற கொள்கைத் தீர்மானங்களை எடுக்கின்ற மத்தியரசின் சபைகளில் பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கான அல்லது அச்சபைகளுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை மாகாணங்களுக்கு வழங்குதல்.

3. மாகாணசபைகளின் தலைவர்கள் மத்தியிலுள்ள அரசியல் தலைவர்களுடன் முறையாகவும் வழமையாகவும் சந்திக்க வழிவிடுகின்ற ஒரு சபையைத் தாபித்தல்.

4. மத்தியிலுள்ள அமைச்சுக்களின் நிகழ்சித் திட்டங்களையும் விரிவாக்கல் வேலைகளையும் மாகாணங்களில் மாகாணசபைகளின் முகவர்களின் ஊடாக மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

5. பிரதேச மட்டத்திலுள்ள கள நிர்வாகத்தை *(field administration)* மாகாண சபைகளின் கீழ் கொண்டுவரல்.

மாகாண அரசாங்க நிருவாகம் மற்றும் அரசாங்க சேவை

1. ஒருங்கியை நிரலில் இனங்காணப்பட்ட விடயங்களுக்குரிய பணிகள், அதிகாரங்கள், வளங்கள் என்பவற்றில் மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கமும் பங்குடைமையின் அடிப்படையில் செயற்படக்கூடியவாறு அரசியல் யாப்பின் மூலம் திருத்தம் கொண்டு வரப்படுதல்.

2. கட்சியின் மூன்று மட்டங்களுக்குரிய நிறுவனங்களுக்குத் தேசிய ரீதியாக உடன்படக்கூடிய ஒரு வீதத்தின் அடிப்படையில் அரச வருமானத்தை ஒப்படைத்தல், குறைந்தபட்சம் அரச வருமானத்தின் 25% பகுதியை மாகாண சபைகளுக்கும், மாகாண அரசாங்க நிறுவனங்களுக்கும் பெற்றுக்கொடுத்தல்.

3. ஆளுநனர் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவினை நியமிக்கும் போது அதற்கு முதலமைச்சரின் கருத்துக்களையும் பெற்றுக் கொண்டு நியமிக்க வேண்டும் என்று விதிக்கும் ஒரு திருத்தம் அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

4. நாடளாவிய சேவைகளில் ஆளணியினர் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரத்தை மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு வழங்காதிருப்பின் குறைந்தபட்சம் அவற்றிற்கு அது தொடர்பான சிபாரிசுகளைத் தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு முன்வைப்பதற்கான அதிகாரத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

5. அரசியல் யாப்பின் மூலம் இனம் காணப்பட்ட மாகாண சபைகளுக்குரிய ஒரு விடயம் என்று அதனைக்

குறிப்பிட்டு பிரதேச நிர்வாகத்தை மாகாண சபைகளுக்கு வழங்குதல்.

6. மாகாணங்களுக்கிடையில் இடமாற்றங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் ஒரு குறிப்பிட்ட வருடகால சேவையின் பின்னர் மத்திய அரசாங்கத்தின் முகாமைத்துவக் குழுவில் சேர்வதற்குமான வாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்து 1987 இல் நிர்வாகச் சீர்திருத்தக் குழு முன் வைத்த ஆலோசனையின் படி, மாகாண முகாமைத்துவக் குழுவைத் தாபித்தல்.

7. நிறைவேற்றம் சாராத ஆளணி உறுப்பினர்களுக்குப் போதிய அனுபவமும் கல்வித் தகுதியும் இருக்குமாயின், மாகாண முகாமைத்துவக் குழுவினருக்கு திறமையை அடிப்படையாகக் கொண்ட பதவி உயர்வுகள் மூலம் நுழைவதற்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தல்.

அதிகாரப்பகிர்வின் கீழ் உள்ளூராட்சி

1. அதிகாரப் பகிர்வு அடுக்கு நிலையின் அடிமட்ட ஆட்சி முறையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, உள்ளூராட்சிச் சபைகள் எவ்வாறு ஜனநாயக ஆட்சியிலும் பிணக்குகளைத் தீர்ப்பதிலும் பங்காற்ற முடியும் என்பதனை ஆராய்தல்

2. பிரதேச் செயலகம் மற்றும் உள்ளூராட்சி சபை என்பன அவை வழங்கும் சேவைகளைப் பொறுத்தவரை அவற்றின் வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் தெளிவாக்குதல்.

3. மாகாண சபைகள் தமது உள்ளூர் உட்கட்டமைப்பு, கிராம அபிவிருத்தி, சமூக சேவைகள், பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான சேவைகள், சூழல் போன்றனவற்றை வழங்குவதற்கு பிரதேச சபைகளைத் தமது முகவர்களாக உபயோகிக்கும் வண்ணம் ஏற்பாடுகளைச் செய்தல்.

4. மத்தியினால் நிதி வழங்கப்படும் உள்ளூர் உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களைப் பிரதேச சபைகள் மூலம் நிறைவேற்றுவதோடு குறிப்பிட்ட உள்ளூராட்சி சபையின் வருமானத்தின் ஒரு பகுதியாக அதற்குரிய நிதிகளையும் வழங்குதல்.

5 நடுத்தரமான சேவை வழங்கல் திட்டங்களைத் தயாரிக்குமாறு உள்ளூராட்சி சபைகளை வேண்டுதல்

6. உள்ளூராட்சி சபைகளின் சேவை வழங்கல் பொறுப்புக்களை, அவை துணையானவை எனும் அடிப்படையில் மறுபரிசீலனை செய்து அவற்றினை நிலை நாட்டுதல்.

7. மாகாண பொதுச் சேவையின் கீழுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கிடையே இடமாற்றம் செய்யக்கூடிய உள்ளூராட்சி மத்திய ஆளணி ஒன்றினை ஏற்படுத்துதல்.

8. ஆட்சேர்ப்பு முறைகளுக்கும் அதன் செலவு விகிதாசாரத் திட்டத்திற்கும் ஏற்ப ஆட்சேர்ப்பைப் பொறுப்புணர்ச்சியுடன் மேற்கொள்ளக் கூடிய வகையில் உள்ளூராட்சியாளரை அனுமதித்தல்.

9. மாகாண சபைத் திட்டத்தின் கீழ் மாகாண சபை உள்ளூராட்சி ஆணையாளரின் வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் மீளவமைத்தல்.

10. மாகாண பொதுச்சபை ஆணைக்குழுவுடன் உள்ளூராட்சிச் சேவை உபகுழுவொன்றை நிறுவுதல்.

11. உள்ளூராட்சிகளுக்கான நிதி வழங்கலை வேறானதொரு நிதி வழங்கல் முறையாக நிறுவுவதன் மூலம் அவர்கள் நிதியைப் பெறுவதில் நிச்சயமாக நம்பிக்கையுடன் இருக்க முடியும்.

12. சம்பள மீளளிப்பில் ஏற்படும் குறைகளை நிரப்புவதை விடுத்து மாகாண மட்டத்தில் அவர்களின் செயற்பாட்டுக்கு ஏற்ப நிதி வழங்கும் வகையில் உள்ளூராட்சிகளுக்கான மத்திய நிதி வழங்கலை மறுசீரமைத்தல்.

13. சில குறிப்பிட்ட விசேட விடயங்களுக்கான நிதியைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகளைக் கண்டு பிடிப்பதற்கு நகரப்புற உள்ளூராட்சிகளுக்கு உற்சாகம் வழங்குதல்.

அத்தியாயம் - 01

அரசியலமைப்பின் வடிவமைப்பு

ஜெயம்பதி விக்ரமரட்ண

1.1 பதின்மூன்றாவது திருத்தம்: ஒரு கண்ணோட்டம்

அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின்கீழ், மாகாண சபைகள் தாபிக்கப்பட்டு, 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்துடன் சேர்த்து 1987ஆம் ஆண்டு நவம்பர் 14ஆந் தேதி நடைமுறைக்கு வந்தன.

அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்துக்கான சட்டமூலமும், மாகாண சபைகளுக்கான சட்டமூலமும், மக்கள் தீர்ப்புமூலம் மக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டுமா? என்பதைத் தீர்மானிப்பதற்காக, ஜனாதிபதியினால் உயர் நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன. சட்டமூலங்கள் பல நபர்களினாலும், ஒழுங்கமைப்புக்களாலும் கேள்விக்குட்படுத்தப்பட்ட அதேவேளை, சட்டமூலத்துக்கு ஆதரவாக வாதிட சிலரும் முன்வந்தனர். சட்டமூலங்கள் ஒன்பது நீதிபதிகளையுடைய[1] முழுக் குழாம் ஒன்றினால் கவனத்திற்கெடுக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் தொடர்பிலான ஒரு ஆய்வு, பதின்மூன்றாவது திருத்தம் பற்றிய கண்ணோட்டத்தை உணர வாசகர்களுக்கு வழிவகுக்கும்.

மாகாண சபைகள் தொடர்பிலான ஏற்பாடுகள் உத்தேச அத்தியாயம் XVII இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. உறுப்புரை 154(அ), ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு மாகாண சபை தாபிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்தது. அருகருகாகவுள்ள இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் ஓர் நிர்வாகப் பிரிவாக அமைக்கப்பட்டு ஒரே மாகாணமாக செயற்படுவதற்கு பாராளுமன்றம் ஏற்பாடு செய்யலாம். ஒவ்வொரு மாகாண சபையும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநரை உடையதாயிருத்தல் வேண்டுமென்பதுடன், 4(ஆ) என்னும் உறுப்புரைக்கு இணங்க ஜனாதிபதி விரும்பும்வரை பதவிவகித்தலும் வேண்டும்.

---

[1] *Re the Thirteenth Amendment to the Constitution*, [1987] 2 Sri LR 312. See also, Lakshman Marasinghe, 'The Thirteenth Amendment' Lakshman Marasinghe and Jayampathy Wickramaratne (eds) *13th Amendment: Essays on Practice*, Stamford Lake, Pannipitiya, 2010, (pp. 01-44) and Jayampathy Wickramaratne, *Fundamental Rights in Sri Lanka*, 2nd edn, Stamford Lake, Colombo, 2006, (pp. 47-61).

ஆளுநரின் நிர்வாகத்துறைத் தத்துவம் ஒன்றில் நேரடியாகவோ அல்லது சபையின் அமைச்சர்கள் மூலமாகவோ அல்லது கீழ்நிலை அலுவலர்கள் மூலமாகவோ பிரயோகிக்கப்படுதல் வேண்டும். ஆளுநர் அவரது பணிகளை அல்லது அவற்றுள் எதனையும் அவரது தற்றுணிபில் பிரயோகிக்கும்படி இந்த அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின்கீழ் அவர் தேவைப்படுத்தப்படுகின்ற அளவுக்குத் தவிர, அவரது பணிகளைப் பிரயோகிக்கையில் அமைச்சர்கள் சபையின் ஆலோசனைக்கிணங்க செயலாற்றுதல் வேண்டும். ஏதேனும் கருமமானது, இந்த அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின்கீழ் ஆளுநர் அவரது தற்றுணிபின்படி செயலாற்றத் தேவைப்படுத்தப்பட்டவொரு கருமமா? அல்லவா எனப் பிரச்சினை எதுவும் எழுகையில், அவர் தற்றுணிபின்படி ஆளுநரின் முடிவும் இறுதியானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன், ஆளுநரால் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாகுந்தன்மை, அவர் தமது தற்றுணிபின்படி செயலாற்றியிருக்கவேண்டுமா? அல்லவா என்னும் ஏதுவின்மீது நீதிமன்றமெதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது. ஆளுநரின் தற்றுணிபைப் பிரயோகித்தலானது ஜனாதிபதியின் பணிப்பின் மீதானதாதல் வேண்டும்.

மாகாண சபைகள், "மாகாண சபை நிரலில்" எடுத்துக்காட்டப்பட்டுள்ள கருமங்கள் தொடர்பில் நியதிச்சட்டங்களை ஆக்கலாம். "ஒருங்கியை நிரலில்" எடுத்துக் காட்டப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில் பாராளுமன்றமும் மாகாண சபைகளும் சட்டவாக்கத் தத்துவங்களை உடையனவாயுள்ளன. ஆனால், அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிக்க முன்னர் ஒன்று மற்றையதுடன் கலந்தாலோசிக்கத் தேவைப்படுத்தப்படுகின்றது. "ஒதுக்கு நிரலில்" எடுத்துக்காட்டப்பட்டுள்ள கருமங்கள் தொடர்பில் மாகாணசபை நியதிச்சட்டங்களை ஆக்க முடியாது.

எல்லா மாகாண சபைகளும் உடன்பட்டுக்கொண்டால் XVII - அ என்னும் அத்தியாயத்தை அல்லது மாகாணசபை நிரலை நீக்கஞ்செய்வதற்கான அல்லது திருத்துவதற்கான திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை கொண்டு நிறைவேற்றப்படலாம். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாகாண சபைகள் உடன்படாதவிடத்து, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் மக்கள் தீர்ப்பில் மக்களின் அங்கீகாரமும் தேவைப்படுப்படுகின்றது. ஒரு மாகாண சபை உடன்பட்டுக்கொண்டால், பாராளுமன்றம் மாகாண சபை நிரலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள கருமம் தொடர்பில் சாதாரண பெரும்பான்மை கொண்டு சட்டத்தை ஆக்குவதற்குத் தத்துவமுடையதாக உள்ளது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சபைகள் உடன்படாதவிடத்து, உடன்படாத மாகாண சபைகள் உள்ளிட்ட எல்லா மாகாணங்களிலும் அது பயனுறவேண்டுமாயின், பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையும், மக்கள் தீர்ப்பில் மக்களின் அங்கீகாரமும் தேவைப்படுகின்றது. சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே உடன்பட்ட மாகாணங்களில் அவை நடைமுறைப்படுத்தப்படும்.

மேற்கூறப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களிலும் மக்கள் தீர்ப்புக்கான தேவைப்பாடு, முறையே உத்தேச உறுப்புரை 154(2)(ஆ) மற்றும் 153(3)(ஆ) என்பவற்றில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளனவேயன்றி 83ஆம் உறுப்புரைக்கான திருத்தத்தில் அல்ல. 83ஆம் உறுப்புரை மக்கள் தீர்ப்பு அவசியப்படுத்தப்படும் அரசியலமைப்பில் ஏற்பாடுகளை நிரற்படுத்துகின்றது. 83ஆம் உறுப்புரைக்கான திருத்தம் மக்கள் தீர்ப்புக்கான அங்கீகாரத்தை அவசியமாக தேவைப்படுத்தியிருக்கும். எனவே பதின்மூன்றாவது திருத்தத்துக்கான சட்டமூலம், மக்கள் தீர்ப்பொன்றில் மக்களின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படாமலேயே, மக்கள் தீர்ப்பு தேவைப்படுத்தப்படும் மேலும் இரண்டு சந்தர்ப்பங்களை அறிமுகப்படுத்த விழைந்தது.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பிரகடனம் ஒன்று செய்யப்படுவதன்மேல் ஜனாதிபதி எவரேனும் நபருக்கு, அந்த ஆளுநரினால் பிரயோகிக்கப்படக்கூடிய நிறைவேற்றுத் தத்துவம், பிரயோகிக்கப்படவேண்டிய முறை பற்றிய பணிப்புக்களை வழங்கலாம் என்றும் ஏற்பாடு செய்தது. ஒரு மாகாணத்தில் நிர்வாக ஒழுங்குமுறை தவறுமிடத்து ஜனாதிபதி, பிரகடனம் ஒன்றின்மூலம் நிர்வாகத்தில் சகல அல்லது அவற்றுள் எந்தப் பணியையும் தாமே ஏற்றுக்கொள்ளலாமென்பதுடன் மாகாண சபையின் தத்துவங்கள் பாராளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படுமென்றும் வெளிப்படுத்தலாம். ஜனாதிபதி இலங்கையில் அல்லது அதன் ஆள்புலத்தினது ஏதேனும் பகுதியின் நிதிசார் உறுதிச்சமநிலையை அல்லது பண நிலையை அச்சுறுத்துவதற்கான நிலைமையொன்று எழுந்துள்ளதென பிரகடனமொன்றைச் செய்வதன்மீது அத்தகைய நிதிசார் தகுதியுடைமைக்கான அடிப்படைத் தத்துவங்களைக் கடைப்பிடிக்கும்படி ஆளுநருக்குப் பணிப்புகளை வழங்கலாம்.

மாகாண சபைகள் சட்டமூலம், மாகாணப் பகிரங்க சேவை மற்றும் அது தொடர்பான விடயங்கள் தொடர்பில் மாகாண சபையினால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைகள் என்பவற்றுக்கான ஏற்பாடுகளை உடையதாயிருந்தது. அருகருகே உள்ள எவையேனும் இரண்டு அல்லது மூன்று மாகாண சபைகள் ஓர் நிர்வாகப் பிரிவாக உருவாக்க வேண்டுமென ஜனாதிபதி ஒரு பிரகடனத்தை ஆக்கலாம். அத்தகைய ஒவ்வொரு மாகாணத்தினதும் வாக்காளர்கள் தத்தமது, முறையேயான மாகாணங்கள் இணைந்து செயல்பட வேண்டுமா அல்லது தனித்து செயல்படவேண்டுமா என்பது பற்றித் தீர்மானிப்பதை இயலச்செய்வதற்கு ஒரு வாக்கெடுப்பு நடைபெறுதல் வேண்டும். கிழக்கு மாகாணத்திலுள்ள வாக்காளர்கள், அத்தகைய மாகாணம் வட மாகாணத்துடன் இணைந்திருத்தல் வேண்டுமென தீர்மானித்தால் வட மாகாணத்தில் ஒரு வாக்கெடுப்பு தேவைப்படுத்தப்படாது.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டமூலம் உறுப்புரை 2இல் குறிப்பிடப்படும் ஒற்றையாட்சி, மற்றும் உறுப்புரைகள் 3 மற்றும் 4இல் உள்ள மக்களின் இறைமை என்பனவற்றுடனும் பொதுவில் முழு அரசியலமைப்புடனும் ஒவ்வாதனவாக உள்ளனவென்றும் விண்ணப்பதாரர்கள் சான்றுரைக்கின்றனர். 83ஆம் உறுப்புரையில் நிரற்படுத்தப்பட்ட ஓர் உறுப்புரையான 3ஆம் உறுப்புரை

பின்வருமாறு ஏற்பாடு செய்கிறது. "இலங்கை குடியரசில் இறைமை மக்களுக்குரியதாகவும் பராதீனப்படுத்தப்பட முடியாததாகவும் இருக்கும். இறைமை, அரசாங்கத்தின் தத்துவங்கள், அடிப்படை உரிமைகள், வாக்குரிமைகள் என்பவற்றை உள்ளடக்கும்."

உறுப்புரை 83இல் 4ஆம் உறுப்புரை நிரற்படுத்தப்படவில்லை. 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டமூலத்தின் ஆரம்பத்தில் நிரற்படுத்தப்பட்டிருந்தபோதும், தேசிய அரசப் பேரவையில் குழுநிலையில் அத்தகைய குறிப்பீடு நீக்கப்பட்டது. இறைமைத் தத்துவம் பிரயோகிக்கப்படும் முறைபற்றி இது ஏற்பாடு செய்கின்றது. அதற்கிணங்க மக்களது சட்டமாக்கல் தத்துவம், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தினாலும், மக்கள் தீர்ப்பொன்றின்போது, மக்களாலும் பிரயோகிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், மக்களது நிர்வாகத்துறைத் தத்துவம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியினால் பிரயோகிக்கப்படுதலும் வேண்டும். நீதித்துறை தத்துவத்துக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் வாக்குரிமைகளுக்கும் குறிப்பீடு உள்ளது.

உத்தேச உறுப்புரைகள் 154(2)ஆ) மற்றும் 154(எ)(3)(ஆ) என்பன, மேற் குறிப்பீடு செய்யப்பட்ட சட்டமூலங்களுக்கு மக்கள் தீர்ப்பொன்றை நடத்தும்படி தேவைப்படுத்துவது 83ஆம் உறுப்புரையை நேரடியற்ற முறையில் மாற்ற முனைந்தன என்றும் அடிப்படையில் தாக்கப்பட்டது.[2]

சட்டமூலம் அரசியலமைப்பில் அடிப்படைக் கட்டமைப்பை மாற்றமுனைந்தால், மக்கள் தீர்ப்பின்மூலம் அங்கீகரிக்கப்படினும் அது நிறைவேற்றப்பட முடியாததாகும் என்றும் விண்ணப்பதாரர்கள் வாதிட்டனர். மாகாண சபைகள் சட்டமூலமும் இதையொத்த ஏதுக்களின்மீது கேள்விக்குட்படுத்தப்பட்டது.

மாகாண சபைகள் தகுதியுடையனவாக இருந்தபோதிலும், பாராளுமன்றம் அவற்றை இல்லாதாக்கக்கூடியதாக இருந்ததென, சட்டமூலத்துக்கு ஆதரவளித்தவர்கள் வாதிட்டனர். ஆளுநர் ஜனாதிபதியின் கையளிப்பாளர் மட்டுமே என்றும் அவர்கள் வாதிட்டனர். நிர்வாகத்துறைத் தத்துவம் எவ்வாறு பிரயோகிக்கப்பட வேண்டுமென்பதுபற்றி ஜனாதிபதி ஆளுநருக்கு பணிப்புக்களைக் கொடுக்க அதிகாரம் உடையவராக இருந்தாரென்பதுடன், ஆளுநர் அமைச்சர்கள் சபையின் ஆலோசனைக்கு அப்பால் அத்தகைய பணிப்புக்களால் பிணிக்கப்படுபவராகவும் உள்ளார். ஜனாதிபதி மாகாண சபைகளின் பணிகளையும் தத்துவங்களையும் பொறுப்பேற்கக்கூடியவராக இருந்ததால், நிர்வாகத்துறையில் மேன்மையுடையவராகவும் இருந்தார். 4ஆம் உறுப்புரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள அரசாங்கத்தின் தத்துவங்களைப் பிரயோகிக்கும் முறையைப் பொறுத்தவரையில் சட்டவாக்க மற்றும் நிர்வாகத்துறைத்

---

[2] [1987] 2 Sri LR 312,321.

தத்துவங்களுடன் ஏனைய அமைப்புக்கள் உருவாக்கப்படலாமென்றும், ஆயினும் அவை 3ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாதனவாகவிருத்தல் ஆகாது என்றும் கூறப்பட்டது. சட்டமூலத்தின் குழுநிலையில் 83ஆம் உறுப்புரையிலிருந்து 4ஆம் உறுப்புரைக்கான குறிப்பீடு நீக்கப்பட்டது. அரசியலமைப்பை வரைந்தவர்கள் இறைமைத் தத்துவத்தைப் பிரயோகிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள அமைப்புக்களுக்கு, ஒரு மக்கள் தீர்ப்பை தேவைப்படுத்தாமலே, (ஆயினும் இறைமைக்குப் பங்கமின்றி) எதிர்காலத்தில் மாற்றங்களை அனுமதிக்க விரும்பினார்கள் என்பதையே காட்டுகின்றது.

நீதிமன்றம் குறுகிய அளவில் பிளவுபட்டிருந்தது. (பிரதம நீதிபதி சர்வானந்தா மற்றும் கொலின் தோமே, ரணசிங்க, அத்துக்கோறளை மற்றும் தம்பையா. ஜே.ஜே ஆகியோர் கொண்ட பெரும்பான்மை, அரசியலமைப்பின் ஒற்றையாட்சி இயல்பு, இறைமை, பௌத்தத்துக்கும் கொடுக்கப்பட்ட இடம் என்பன பாதிக்கப்படவில்லை என்று தீர்ப்பளித்தனர். வனசுந்தர, எல்.எச். டி அல்விஸ், செனிவரட்ன மற்றும் எச்.ஏ.ஜி டி சில்வா ஆகியோரைக் கொண்ட சிறுபான்மை நீதியரசர்கள் சட்டமூலங்கள் அரசின் ஒற்றையாட்சி இயல்பினை மட்டுமல்லாது இறைமைத் தன்மையையும் பௌத்த மதத்துக்குக் கொடுக்கப்பட்ட முதலிடத்தையும் அழித்துவிட்டன என அபிப்பிராயப்பட்டனர். ஆனால் நீதியரசர் ரணசிங்க, எல்.எச்.டி அல்விஸ், செனவிரட்ன மற்றும் எச்.ஏ.சி டி சில்வா என்னும் நீதியரசர்களுடன் இணைந்து, 154(2)(ஆ) மற்றும் 154(ஏ)(3)(ஆ) என்னும் உறுப்புரைகளில் மக்கள் தீர்ப்பொன்றை நடாத்துவது 83ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாததாக உள்ளதால், மக்கள் தீர்ப்பின்மூலம் அங்கீகரிக்கப்படவேண்டும் எனத் தீர்ப்பளித்தார். இந்தத் தேவைப்பாடு பின்னர் நீக்கப்பட்டது.

நீதியரசர் சர்வானந்தா, மத்திய பாராளுமன்றத்திடமே இறைமைத் தத்துவம் உள்ளதென்றும் துணைநிலை இறைமை அமைப்புக்கள் இல்லாமை ஒற்றையாட்சி அரசுக்கு அடிப்படையானதென்றும் பெரும்பான்மை நீதியரசர்களுடன் சேர்ந்து தீர்ப்பளித்தார். சமஷ்டி அரசொன்றில் ஒவ்வொன்றும் மற்றையதுக்குக் கீழ்ப்பட்டிராதவையெனவும் ஆனால், ஒன்றுபட்டும் சுயாதீனமாகவும் செயற்படுவனவுமான சமஷ்டி மற்றும் மாநில அரசுகளுக்கிடையில் அரசாங்கத்துறை பகிர்ந்தும் கொடுக்கப்படுகிறது. சமஷ்டி அரசாங்கம் சில விடயங்களில் இறைமையுடையதாகவும் மாநில அரசாங்கம் மற்றையவற்றில் இறைமையுடையதாகவும் உள்ளன. பாராளுமன்றமும், ஜனாதிபதியும் முறையே சட்டவாக்கம் மற்றும் நிர்வாகத்துறைத் தத்துவங்கள் மீதான இறுதிக் கட்டுப்பாட்டை வைத்திருப்பதனால் அவை மீயுயர் தன்மை வாய்ந்தவையாகும்.

சட்டவாக்கத் தத்துவத்தைப் பொறுத்தவரையில், மாகாண சபைகளின் சட்டவாக்கத் தத்துவம் புறநீங்கலானது அல்ல எனப் பெரும்பான்மையினர் கருத்துக் கொண்டிருந்தனர். பாராளுமன்றம் மாகாண சபைகளைப் புறமொதுக்கி செயல்ப்பட முடியுமென்பதுடன் அவற்றை இல்லாதாக்கவும் முடியும். உறுப்புரைகள் 154எ (2) மற்றும் (3) என்பன பாராளுமன்றத்தின்மீது நடைமுறை

ரீதியிலான மட்டுப்பாடுகளையே விதித்துள்ளன. "பாராளுமன்றத்தின் சட்டவாக்கத் தத்துவம் பிரயோகிக்கப்படவேண்டிய விதத்தையும் வடிவத்தையும் விதித்துரைக்கும். விதிகள், பாராளுமன்றத்தின் இறைமையை அத்துமீறுவதாகவோ அல்லது குறைப்பதாகவோ இல்லை"யென்று பெரும்பான்மை அபிப்பிராயப்பட்டது.[3]

நிர்வாகத்துறைத் தத்துவத்தைப் பொறுத்தவரையில், பிரதம நீதியரசர் சர்வானந்தா, ஆளுநர் ஜனாதிபதியிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுள்ளாரென்றும், அவர் ஆளுநருக்குப் பணிப்புக்களைக் கொடுத்து அவரின் நிர்வாகத்துறைத் தத்துவத்தை மேற்பார்வை செய்ய முடியும் என்றும் விளக்கினார். ஆளுநர், தமது தத்துவங்களை அமைச்சர்கள் சபையின் ஆலோசனைக்கிணங்க பிரயோகித்தல் வேண்டுமென்னும் தேவைப்பாடு, "ஆளுநர், அவரது பணிகளை அல்லது அவற்றுள் எதனையும் அவரது தற்றுணிபில் பிரயோகிக்கும்படி இந்த அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின்கீழ் அவர் தேவைப்படுத்தப்படுகின்ற அளவுக்குத் தவிர" என்னும் மட்டுப்பாட்டுக்கு அமைந்ததாகும். ஆளுநர் தமது தற்றுணிபை ஜனாதிபதியினால் அளிக்கப்படும் நெறியுறுத்தல்களுக்கும் பணிப்புக்களுக்கும் இணங்க பிரயோகிக்கத் தேவைப்படுத்தப்படுகின்றார். ஜனாதிபதியினால் அளிக்கப்படும் பணிப்புகளுக்கு இணங்கியொழுக ஆளுநர் அல்லது ஒரு மாகாணசபை தவறுகை செய்யுமிடத்து, மாகாணத்தின் நிர்வாகத்தினைக் கொண்டு நடாத்த முடியாதென்னும் நிலைமையொன்று எழுந்துள்ளதென ஜனாதிபதி வெளிப்படுத்தி, சபையின் பணிகளையும் தத்துவங்களையும் பொறுப்பேற்க உரித்துடையவராக உள்ளார். எனவே பிரதம நீரியரசர் சர்வானந்தா, ஜனாதிபதி தொடர்ந்தும் மீயுயர் தன்மை உடையவரென்றும் இறைமையுடையவரென்றும் மாகாண சபைகள் அவருக்குக் கீழ்ப்பட்ட நிலையில் உள்ள குழுக்களே என்றும் முடிவெடுத்தார்.

4ஆம் உறுப்புரை, 3ஆம் உறுப்புரையின் உள்ளமைந்த ஒரு பாகமாக வாசிக்கப்படவேண்டுமா என்பதும், அங்ஙனம் உத்தரவாதமளிக்கப்பட்டிருக்குமாயின், குழுநிலையின்போது உத்தரவாதமளிக்கப்பட்ட ஏற்பாடுகளின் நிரலிலிருந்து 4ஆம் உறுப்புரை நீக்கஞ்செய்யப்பட்டமை வேண்டுமென்றே செய்யப்பட்டதென்ற ஊகம் இருப்பதாகக் கற்றறிந்த பிரதம நீதியரசர் குறிப்பிட்டார். 4ஆம் உறுப்புரை இறைமைத் தத்துவத்தைப் பிரயோகிக்கும் முகவரமைப்புகள் அல்லது கருவிகளை மட்டுமே எடுத்துக் காட்டுகின்றது. இவ்வமைப்புக்கள் அல்லது சாதனங்கள் 4ஆம் உறுப்புரையைத் திருத்துவதன்மூலம் மாற்றப்படலாம். ஆயினும், இறைமைத் தத்துவத்தைப் பங்கப்படுத்தும் தாக்கம் இருக்கக்கூடாது. 2ஆம் 3ஆம் உறுப்புரைகள் பாதிக்கப்படாதிருக்கும்வரை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட வேறொரு சட்டவாக்கக் குழுவை உருவாக்குவதற்காக

---

[3] [1987] 2 Sri LR 312,343.

உறுப்புரை 4(அ) திருத்தப்படலாம். அதேபோல, ஜனாதிபதியினாலும், மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உப ஜனாதிபதியினாலும் நிர்வாகத்துறைத் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுவதை ஏற்பாடு செய்வதற்காக உறுப்புரை 4(ஆ) திருத்தப்படலாம். 3ஆம் உறுப்புரையில் தேவைப்படுத்தப்பட்ட வண்ணம் இறைமைத் தத்துவம் பாதுகாக்கப்படும்வரை, தத்துவம் பிரயோகிக்கப்படும் திட்டவட்டமான விதமும் அவற்றைப் பிரயோகிப்பதற்கான நிறுவகங்களும் அடிப்படையானவையல்ல என பிரதம நீதிபதி சர்வானந்தா தீர்ப்பளித்தார்.

பல்வகைப்பட்ட சட்டவாக்க மற்றும் நிறைவேற்றுத் தத்துவம், அரசானது நிர்வாகத்தைப் பன்முகப்படுத்துவதன்மூலமும், தேசிய வாழ்விலும் அரசாங்கத்திலும் உள்ள ஒவ்வொரு மட்டத்திலும் பங்குபற்றுவதற்கு இயன்ற எல்லா வாய்ப்புக்களையும் மக்களுக்கு அளிப்பதன்மூலமும், அரசாங்கத்தின் ஜனநாயக அமைப்பையும் மக்களின் ஜனநாயக உரிமையையும் பலப்படுத்துதலும், விரிவுபடுத்துதலும் வேண்டும் என்று ஏற்பாடு செய்யும் அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகளின் 27(4)ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி உள்ளதாகப் பெரும்பான்மையினர் தீர்ப்பளித்தனர்.

சிறுபான்மைத் தீர்ப்பை எழுதிய நீதிபதி வனசுந்தர, உறுப்புரை 4, உறுப்புரை 3உடன் இணைக்கப்பட்டுள்ளதால் அதனுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டுமென்றும், 83ஆம் உறுப்புரையில் அது சிறப்பாகக் குறிப்பிடப்படாவிட்டாலுங்கூட மிக உத்தரவாதமளிக்கப்பட்ட உறுப்புரையொன்றாகக் கணிக்கப்படவேண்டும் என்றும் கூறினார். அதையொத்த வேறு ஏற்பாடுகளும் உள்ளன. ஜனாதிபதியின் தேர்தலையும் பதவிக் காலத்தையும் பற்றிக் குறிப்பிடும் உறுப்புரை 30 (2) விசேடமாக 83ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே ஜனாதிபதியின் பதவி, மிக உத்தரவாதமளிக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டும். 83ஆம் உறுப்புரையில் உறுப்புரை 62 (2) இற்கான குறிப்பீடு காணப்படுவதால் பாராளுமன்றத்தையும் அங்ஙனமே கருதவேண்டும். உறுப்புரை 62(2) பாராளுமன்றத்தின் காலம் பற்றியதாகும்.

நீதிபதி வனசுந்தர, அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை ஆகியவற்றின் கருப்பொருட்களிலுள்ள அத்தியாவசியமற்றதாகக் காணப்படக்கூடிய அம்சங்களினால் 83ஆம் உறுப்புரையிலிருந்து 4ஆம் உறுப்புரை அகற்றப்பட்டதாகக் கருத்துத் தெரிவித்தார். அத்தியாவசியமற்றதான ஏற்பாடுகளை உள்ளடக்குவது குறிப்பாக, அவற்றின் திருத்தங்கள் தொடர்பில் பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லக்கூடும் என்னும் "நியாயப்படுத்தக்கூடிய பயம்" அரசியலமைப்பை வரைந்தவர்களுக்கு இருந்திருக்கலாம். ஆனால், நீதிமன்றம் அத்தியாவசியமான மற்றும் அத்தியாவசியமற்ற ஏற்பாடுகளை வேறுபடுத்தக்கூடியதாக உள்ளதால் இப்பயங்கள் ஆதாரமற்றதாகும்" என்று கருத்துத் தெரிவித்தார்.

ஆட்சித் துறையைப் பொறுத்தவரையில் நீதிபதி வனசுந்தர, ஜனாதிபதி ஓர் அங்கமாக உள்ள அமைச்சரவை தொடர்பிலான ஏற்பாடுகள், அரசாங்கத்தின் அமைப்பின் முக்கிய பாகமாக உள்ளதென்பதுடன், வேறு வகையில் நிர்வாகத்துறைத் தத்துவத்தைப் பகிர்ந்தளிப்பதும், நிர்வாகத்துறைத்

தத்துவத்தைப் பிரயோகிப்பதும் அரசியலமைப்பின் அடிப்படை அமைப்புக்கும் வடிவமைப்புக்கும் முரணாகும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

நீதிபதி வனசுந்தர, மாகாண சபைக்கு சட்டவாக்கத் தத்துவங்களை அளிப்பது, பாராளுமன்றம், சட்டமாக்கல் தத்துவத்தைத் துறத்தலையும் பராதீனப்படுத்தலையும் தடுப்பதும் மற்றும் சட்டமாக்கல் தத்துவம் கொண்ட ஏதேனும் அதிகாரத்தை நிறுவுவதையும் தடைசெய்யும் 76 (1)ஆம் உறுப்புரையினை மீறுவதாயமையும் என்றும் குறிப்பிட்டார். ஆயினும் திருத்துவதற்கான தத்துவம் எந்தளவுக்கு இருந்தாலும் பாராளுமன்றத்தின் சட்டமாக்கல் தத்துவத்தைப் பற்றிக் குறிப்பிடும் 75ஆம் உறுப்புரையினை இயைபான பாகங்களும், "திருத்தும் தத்துவத்தின்கீழ்[4] திருத்தப்படவோ அல்லது நீக்கப்படவோ முடியாது" எனவும் கூறியதுடன் "சட்டமூலம் சட்டமாக வரமுடியாதென்று இறுதியாகத் தீர்ப்பளிக்கவில்லை, எனவே சட்டமூலம், ஆகக் குறைந்தது மக்கள் தீர்ப்பின்றி[5] நிறைவேற்றப்பட முடியாது" என்று உச்ச நிலையிலிருந்து இறங்கப்பட்டது என்று சொல்லக்கூடிய வகையில் கூறிமுடித்தார்.

வனசுந்தர, மாகாண சபையின் நியதிச் சட்டங்கள் துணைநிலைச் சட்டவாக்கம் என்னும் கருத்துடன் உடன்படவில்லை. எமது பாராளுமன்றம் தனது தத்துவங்களைத் தன்னகத்தே வைத்திருக்கிறது என்றும், அது விரும்பும்போதெல்லாம் கையளிக்கப்பட்ட தத்துவங்களை மீட்கலாம் என்றும் கண்டிப்பாகக் கூறமுடியாது. சட்டமூலம், மாகாண சபைகளின் சட்டவாக்கத் தத்துவங்களை முடிந்தவரை பாராளுமன்றத்துக்கு எட்டாத வகையிலேயே வைக்க முனைந்தது. முன்னர், பாராளுமன்றம் சாதாரண பெரும்பான்மையுடன் செய்ய முடிந்ததை இப்போது, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனும் மக்கள் தீர்ப்புடனுமே செய்யக்கூடியதாக உள்ளது.

சட்டமூலம் அரசியலமைப்பின் ஒற்றையாட்சி இயல்பினை அழிக்க முனைந்ததா என்னும் விடயத்தின்மீது, நீதிபதி வனசுந்தர, சமஷ்டி அரசுக்காக ஏதேனும் நியமப் படிவமோ அல்லது திட்ட வரைபடமோ இல்லையென்று குறிப்பிட்டார். மத்தியப்படுத்தும் அம்சங்களை அறிமுகப்படுத்துவது, சமஷ்டிக் கொள்கையிலிருந்து குறைத்து மதிக்கப்படமுடியாது. இந்திய பாராளுமன்றம், தேசிய நலனில் மாநில அரசு நிரலிலுள்ள கருமங்கள்மீது சட்டமியற்றலாம். ஆனால், பதின்மூன்றாவது திருத்தத்தில் ஒப்பிடப்படக்கூடிய ஏதேனும் ஏற்பாடு இல்லை. இந்தியாவில் செல்லுபடியான சமஷ்டிச் சட்டத்துக்கும் செல்லுபடியான மாநில சட்டத்துக்குமிடையில் முரண்பாடுகள் காணப்படுமிடத்து செல்லுபடியான மாநில சட்டமே மேலோங்கி இருக்கும். பதின்மூன்றாவது திருத்தத்தின்கீழ் சமநிலை, பிராந்திய பிரிவுக்கு சார்பாகவே இருந்துள்ளதாகவும், அத்துடன் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் அளவு, மாற்றத்தைக் கொண்டுவரப் போதியதாக இல்லையென்றுமே தோன்றுகின்றது. உத்தேசிக்கப்பட்ட ஏற்பாடுகள், அரசியலமைப்பை சமஷ்டி அரசின் நிலைக்கு அண்மித்தே கொண்டுவந்தன.

---

[4] ibid .383.

[5] Article 249

மாநில நிரலில் உள்ள கருமங்கள்மீது சட்டமியற்றுவதற்கான இந்திய பாராளுமன்றத்தின் தத்துவம் முழுமையானது அல்ல என்று சமர்ப்பிக்கப்பட்டது. மேற் சபையாகிய ராஜ்ய சபை, மாநில அரசு நிரலிலுள்ள ஏதேனும் கருமத்தின்மீது பாராளுமன்றம் இந்தியா முழுவதற்கும் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பாகத்துக்கு (அத்தகைய தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு) சட்டம் இயற்றுவது தேசிய நலனில் அத்தியாவசியமானது அல்லது உசிதமானது என்று குறிப்பிடும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்டு ஆதரவளிக்கப்படும் ஒரு தீர்மானத்தை முதலில் வெளிப்படுத்தல் வேண்டும். அத்தகைய தீர்மானம் ஓர் ஆண்டுக்கு மேற்படாதவொரு காலத்திற்கு வலுவிலிருக்குமென்பதுடன், மேலுமொரு ஆண்டுக்கு நீடிக்கவும் படலாம். மேலும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் ஏதேனும் அத்தகைய சட்டம் தீர்மானம் வலுவிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டு ஆறு மாதங்கள் முடிவுற்றதன் பின்னர் இல்லாதொழிக்கப்படும்.[6] அவசரகால நிலைப் பிரகடனம் வலுவில் இருக்கும்போது மாநில நிரலிலுள்ள ஏதேனும் கருமம்மீது சட்டங்களை ஆக்கப் பாராளுமன்றத்துக்குத் அதிகாரம் இருக்கும்போது, அத்தகைய பிரகடனம் நடைமுறையிலிருந்து இல்லாதொழிந்து ஆறு மாதங்களின் பின்னர் அத்தகைய சட்டங்கள் இல்லாதொழிக்கப்படும்.[7]

மேலும் சமஷ்டிச் சட்டத்துக்கும் மாநில சட்டத்துக்கும் இடையே முரண்பாடு ஏற்படுமிடத்து, எல்லா சந்தர்ப்பங்களினதும் சமஷ்டிச் சட்டம் மேலோங்கி இருக்காது. உறுப்புரை 254, ஒருங்கியை நிரலில் விபரிக்கப்பட்டுள்ள கருமமாயிருக்குமிடத்து, அல்லது பாராளுமன்றம் சட்டம் இயற்றத் தகுதிகொண்டுள்ள ஒரு சட்டமாயிருப்பின், மேற்குறிப்பிட்ட விசேட சந்தர்ப்பங்களில் ஆக்கப்படும் சட்டங்களுக்கான குறிப்பீட்டின்போது சமஷ்டிச் சட்டம் மேலோங்கும். பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பிலான தீர்மானத்தின் பின்னர் வந்த சில வழக்குகளுக்கும் குறிப்பீடு செய்யப்படலாம்.

மைத்திரிபால சேனாநாயக்க எதிர் மகிந்த[8] சோமா என்ற வழக்கில் இயைபான இரு மாகாண சபைகளின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றிருந்த முறையேயான பிரதான அமைச்சர்களின் ஆலோசனைக்கெதிராக ஜனாதிபதியின் கட்டளை மற்றும் பணிப்பின்மீது முறையேயான ஆளுநர்கள் வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளைக் கலைத்தது வழக்கின் விடயப்பொருளாக அமைந்தது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதிசெய்யும்போது உயர் நீதிமன்றம்,[9] உறுப்புரை 154ஆ (8)(இ) இன்கீழ் ஒரு மாகாண சபையைக் கலைப்பதற்கான தத்துவத்தைப் பிரயோகிக்கையில், ஆளுநரின் அபிப்பிராயப்படி அமைச்சர்கள் சபை மாகாண சபையின் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றிருக்கும்வரை, ஆளுநர்

---

[6] Article 250.

[7] [1998] 2 Sri LR 333.

[8] Mahindasoma v Maithripala Senanayake, [1996] 1 Sri LR 180..

[9] 66 NLR 66, 73.

உறுப்புரை 154 (ஆ)(இ) இன்கீழ் ஆளுநர் பிரதான அமைச்சரின் ஆலோசனைக்கிணங்க, செயல்படுமாறு கட்டாயமாகத் தேவைப்படுத்தப்படுகிறார் என்று தீர்ப்பளித்தது. ஆளுநர் தனது தற்றுணிபில், ஜனாதிபதியின் பணிப்புக்களின்மீது தனது தத்துவங்களைப் பிரயோகிக்க முடியாது.

அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத் தீர்மானத்தின்போது, உயர் நீதிமன்றம் மாகாண சபைகளை மேலோங்கும் வண்ணம் மத்திய அரசாங்கம் அதிகாரங்களை உடையதாக இருந்தது என்று தீர்ப்பளித்ததினால், அரசியலமைப்பின் ஒற்றையாட்சி இயல்பு தொடர்ந்திருந்ததென்று ஆளுநர்கள் சார்பில் வாதிடப்பட்டது. இலஞ்ச ஆணையாளர் எதிர் ரணசிங்க[10] என்ற வழக்கை மேற்கோள்காட்டி பிரதம நீதிபதி சர்வானந்த கூறியதென்னவெனில், நடைமுறையிலான தடைகள் மட்டுமே அரசாங்கத்தின் ஒரு கருவியின் தத்துவங்களை அழித்துவிடாது' என்பதாகும் என்று நீதிபதி அமரசிங்க கூறினார்.

ஆயினும் குறிப்பீடு செய்யப்பட்ட தடைகள் சாதாரண நடைமுறையிலான தடைகளாக மட்டுமல்லாது மத்திய அரசின் தத்துவங்கள் மீதான நிலையான மட்டுப்பாடுகளாகுமென்று சமர்ப்பிக்கப்பட்டது. மைத்திரிபால சேனாநாயக்க எதிர் மகிந்த சோமா வழக்கில் தீர்க்கப்பட்டுள்ளதுபோல, ஜனாதிபதியின் பணிப்பின்மீதுகூட அமைச்சர்கள் சபை பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றிருக்கும் வரை மாகாண சபையைக் கலைக்க ஆளுநர் தத்துவமுடையவரல்ல. இவ்வம்சம் பிரதம நீதியரசர் சர்வானந்தாவினால் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பான முழுக் குழாம் தீர்ப்பு எங்ஙனம் இருந்தபோதிலும், இலங்கை ஒரு ஒற்றையாட்சி அரசா இல்லையா என்னும் வினா எழுப்பப்படலாம். குறித்தசில ஒற்றையாட்சித் தன்மைகள் காணப்பட்ட போதும் இந்தியா ஒரு சமஷ்டி அரசாக இருப்பதுபோல, குறைத்து மதிப்பிடப்பட்டபோதும் இலங்கை நிச்சயமாக ஒரு ஒற்றையாட்சி அரசாக தொடர்ந்து உள்ளது என்பதே எழுத்தாளரின் கருத்தாகும்.

உறுப்புரைகள் 3 மற்றும் 4 என்பவற்றுக்கிடையிலான தொடர்பைப் பொறுத்தவரையில் அரசியலமைப்புக்கான பதினெட்டாம் திருத்த சட்டமூலம்[11] மற்றும் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்த சட்டமூலம்[12] என்னும் தீர்மானங்களின்போது ஏழு நீதிபதிகள் குழாம், உறுப்புரை 3, உறுப்புரை 4உடன் இணைக்கப்பட்டுள்ளதென்றும், இரண்டு உறுப்புரைகளும் ஒன்றுசேர்த்து வாசிக்கப்படவேண்டுமென்றும் மற்றும் நீதிமன்றம் தொடர்ச்சியான பல வழக்குகளில் அங்ஙனம் தீர்த்துள்ளதென்றும் எடுத்துக்காட்டியது.[13] ஆனால்,

---

10 [1991-2003]VII DSCPB 301.

11 [2002] 3 Sri LR 85

12 SD 5/80, 1/84 and 7/87

13 SD 5/80, 2/83, 1/84 and 7/87.

அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத் தீர்மானத்தின்போது நீதிபதி வனசுந்தர உறுப்புரை 4 மறைமுகமாக மிக உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது என்று தீர்த்ததுபோல, இந்நீதிமன்றத்தில் தீர்க்கவில்லை.

1.2 மாகாண சபைகளைத் தாபித்தல்.

உறுப்புரை 154 அ இன்கீழ் ஒவ்வொரு மாகாணத்துக்கும், ஒரு மாகாண சபை வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், ஜனாதிபதியால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து அல்லது தேதிகளிலிருந்து தாபிக்கப்படுதல் வேண்டும். அங்ஙனம் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு மாகாண சபையும் அதன் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதன்மேல் அமைக்கப்படுதல் வேண்டும். ஜனாதிபதி, 3.2.1988 இலிருந்து பயன்படும் வண்ணம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட எல்லா ஒன்பது மாகாணங்களுக்கும் தனிவேறாக மாகாண சபைகளைத் தாபித்தார்.

உறுப்புரை 154 அ(3) அடுத்திணைந்த இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் தெரிவு செய்யப்பட்ட ஒரு மாகாண சபையுடன் ஒரு நிர்வாகப் பிரிவாக அமைக்கப்படுவதற்கும் அத்துடன் அத்தகைய மாகாணங்கள் ஒரு நிர்வாகப் பிரிவாகத் தொடர்ந்து நிர்வகிக்கப்படவேண்டுமா அல்லது தனியான நிர்வாகப் பிரிவாக அமைய வேண்டுமா என்பதையும் ஒரு சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தீர்மானிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் பாராளுமன்றத்தை அனுமதிக்கிறது.

அதற்கிணங்க மாகாண சபைகள் சட்டத்தின் 37ஆம் பிரிவு, ஜனாதிபதியானவர் பிரகடனம்மூலம், அடுத்திணைந்த இரண்டு அல்லது மூன்று குறித்துரைக்கப்பட்ட மாகாணங்கள், அத்தகைய மாகாண சபைகளுக்கான முதல் தேர்தல் தொடங்கி, அத்தகைய ஒவ்வொரு குறித்துரைக்கப்பட்ட வாக்காளர்கள், அத்தகைய மாகாணம் ஏனைய குறித்துரைக்கப்பட்ட மாகாணத்துடன் அல்லது மாகாணங்களுடன் தொடர்ந்து சேர்ந்திருத்தல் வேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதை இயலச் செய்வதற்கு 1988ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் நாளுக்குப் பிந்தாத ஒரு நாளில் அத்தகைய ஒவ்வொரு குறித்துரைக்கப்பட்ட மாகாணங்களிலும் நடாத்தப்படவுள்ள தேர்தலின் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்காக ஒரு நிர்வாகப் பிரிவாக அமைக்கப்படும் என வெளிப்படுத்தலாம். வாக்கெடுப்புத் தேதி பிற்போடப்படலாம்.

1.2.1 வடக்கு கிழக்கு மாகாணங்களின் "இணைப்பு"

வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைப்பது தொடர்பில் இரண்டு விசேட ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும். 37 (1)(ஆ) என்னும் பிரிவின்கீழ், (அ) தனிநாடொன்றைத் தாபிப்பதையே தம்முடைய குறிக்கோளாகக் கொண்ட பயங்கரவாத, தீவிரவாத அல்லது வேறு குழுக்களினால் 1987ஆம் ஆண்டு யூலை

மாதம் 29ஆந் தேதியன்று வைத்திருக்கப்பட்டிருந்த அல்லது அவர்களின் கட்டுப்பாட்டின்கீழிருந்த படைக்கலங்கள், வெடிமருந்து, ஆயுதங்கள், வெடிப்பொருட்கள் அத்துடன் வேறு இராணுவ உபகரணம் ஆகியவை இலங்கை அரசாங்கத்திடம் அல்லது அதனால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டனவென்றும், (ஆ) சொல்லப்பட்ட மாகாணங்களில் அத்தகைய குழுக்களினால் போர் நடவடிக்கைகளும் வேறு வன்செயல்களும் நிறுத்தப்பட்டுவிட்டனவென்றும் அவர் தம்மைத் திருப்திப்படுத்தினாலொழிய ஜனாதிபதி சொல்லப்பட்ட மாகாணங்களை இணைக்கும் பிரகடனமொன்றைச் செய்தலாகாது. (3)ஆம் உட்பிரிவு, கிழக்கு மாகாணத்தின் வாக்காளர்கள், அத்தகைய மாகாணம் வடக்கு மாகாணத்துடன் இணைந்திருக்க வேண்டுமென்று தீர்மானித்தால், வடக்கு மாகாணத்தில் வாக்கெடுப்பொன்றை நடாத்தத் தேவையில்லை எனக் குறிப்பிடுகிறது.

ஜனாதிபதி 2.9.1988ஆம் ஆண்டு 37 (1)(ஆ) என்னும் பிரிவை, "அல்லது படைக்கலங்கள், வெடிமருந்துகள், ஆயுதங்கள், வெடிப்பொருட்கள் அல்லது வேறு இராணுவ உபகரணம் ஆகியவற்றை முழுமையாக ஒப்படைப்பதற்கான தொழிற்பாடுகள்" என்னும் சொற்களை உள்ளடக்கிய இணைப்புக்கான மாற்று முன் நிபந்தனையொன்றைச் சேர்த்து அவசரகால ஒழுங்குவிதிமூலம் திருத்த முனைந்தார். வட - கிழக்கு மாகாணங்களை "இணைக்கும்" பிரகடனம் 8.9.1988இல் வழங்கப்பட்டது. அதன்பின் வட -கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. வட மாகாணத்திலுள்ள மாவட்டங்களில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) இன் வேட்பாளர்கள் போட்டியில்லாது தெரிவுசெய்யப்பட்ட வேளையில், கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களில் தேர்தல் நடைபெற்றது. வட - கிழக்கு மாகாண சபை, மாகாண சபையின் உறுப்பினர்களின் "அரைவாசிக்கு மேற்பட்டோர் அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிவதற்குத் திட்டவட்டமாக மறுத்துள்ளார்கள் அல்லது கீழ்ப்படிய வெளிப்படையாக மறுத்துள்ளார்கள்" என்று குறிப்பிடும் 1990ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 5அ என்னும் பிரிவின் நியதிகளில் ஆளுநர் தகவல் கொடுத்ததன்மேல், 1990 யூலை மாதம் கலைக்கப்பட்டது.

தேர்தல்கள் ஆணையாளர் 12.7.1990 தேதியிடப்பட்ட அறிவித்தல்மூலம், புதிய தேர்தல்களை நடாத்துவதற்கான நியமனப் பத்திரங்களைக் கோரிய போதும், தேர்தல்கள் ஆணையாளரினால் "நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான தேதியையும் நேரத்தையும் நிர்ணயித்து வெளியிடப்பட்ட அறிவித்தல் எல்லா நோக்கங்களுக்காகவும் எந்தப் பயனையும் உடையதாகாது." என்று குறிப்பிட்ட அவசரகால ஒழுங்குவிதியை ஜனாதிபதி பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5ஆம் பிரிவின்கீழ் ஆக்கினார். இரண்டு மாகாணங்களும் தொடர்ந்து இணைந்திருக்க வேண்டுமா இல்லையா என்பதை கிழக்கு மாகாண வாக்காளர்கள் தீர்மானிப்பதை இயலச் செய்வதற்காகத் தேவைப்படுத்தப்பட்ட வாக்கெடுப்பு காலத்துக்குக் காலம் பிற்போடப்பட்டது.

வண. சேருவில சரணக்தி எதிர் சட்டமா அதிபர்[14] என்ற வழக்கின் விண்ணப்பதாரர், சட்டமா அதிபர், மாகாண சபைகள் அமைச்சர் மற்றும் அமைச்சுச் செயலாளர் ஆகியோருக்கெதிராக மாகாண சபைகள் சட்டத்தின் 37ஆம் பிரிவின்கீழ் கிழக்கு மாகாணத்தில் ஒரு வாக்கெடுப்பை நடாத்துவதற்காக அனுமதியைக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தார். வாக்கெடுப்புத் தேதியைத் தீர்மானிப்பதற்கான தத்துவம் ஜனாதிபதிக்குரித்தாக்கப்பட்டுள்ளது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. குறிக்கப்பட்ட நோக்கத்துக்கான வாக்கெடுப்பை நடாத்துவதற்கான தத்துவத்தையோ அல்லது அதிகாரத்தையோ விண்ணப்பத்தில் பெயர்குறிக்கப்பட்ட எந்த எதிர்மனுதாரரும் கொண்டிருக்கவில்லை. இது ஜனாதிபதியினால் பிரயோகிக்கப்படவேண்டிய ஒரு அதிகாரமேயொழிய, உறுப்புரை 44(2) இன்கீழ் ஜனாதிபதிக்கு குறித்தொதுக்கப்பட்ட எந்த விடயமோ அல்லது பணிப்போ அல்ல. அதற்கிணங்க விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது. 35ஆம் உறுப்புரையினால் ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட விடுபாட்டுரிமை 44(2)ஆம் உறுப்புரையின்கீழ் ஜனாதிபதிக்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது ஜனாதிபதியின் பொறுப்பில் இருக்கும் ஏதேனும் விடயம் அல்லது பணி சம்பந்தமான தத்துவங்கள் எவற்றையும் பிரயோகித்தல் தொடர்பில் ஏற்புடையதாகாது என்பதைக் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

விஜேசேகர எதிர் சட்டமா அதிபர்[15] என்னும் வழக்கு வட - கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்காக ஜனாதிபதியினால் ஆக்கப்பட்ட பிரகடனத்தை கேள்விக்குட்படுத்திய 2006ஆம் ஆண்டில் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் விண்ணப்பமாகும். 37 (1)(ஆ) என்னும் பிரிவுக்கு அவசரகால ஒழுங்குவிதியினால் செய்யப்பட்ட திருத்தம் 154அ (3) என்னும் உறுப்புரையையும் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5(1) என்னும் பிரிவையும் மீறியுள்ளதாகக் கேள்விக்குட்படுத்தப்பட்டது. 37 (1)(ஆ) பிரிவின் முன்நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவில்லையென்றும் அத்துடன் அக்காரணத்தினால் பிரகடனம் வலுவற்றது என்றும் வாதிடப்பட்டது. விண்ணப்பதாரர்கள் அவர்களும் அவர்களையொத்த ஏனைய வாக்காளர்களும் கிழக்கு மாகாணத்துக்கு சட்டப்படியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபையை அமைப்பதற்கான தங்களது உரிமை தொடர்ந்தும் மறுக்கப்பட்டுள்ளதாக முறையிட்டனர்.

உயர் நீதிமன்றம், தர்க்கிக்கப்பட்ட ஒழுங்குவிதியினால் பிரிவு 37 (1)(ஆ)விற்கு செய்யப்பட்ட, சொல்லப்பட்ட திருத்தம் உண்மையில் உறுப்புரை 154 அ(3) இன் பயனை இல்லாதாக்குகின்றதென்றும், அது சட்டத்தின்மூலம் இரண்டு அல்லது மூன்று மாகாணங்களை இணைப்பதற்கு, ஏற்பாடு செய்வதற்கு பாராளுமன்றத்துக்கு அதிகாரம் மட்டுமே அளித்துள்ளதென்றும் தீர்ப்பளித்தது.

---

[14] [2004] 1 Sri LR 365; JP 380.

[15] [2007] 1 Sri LR 38; JP 494.

பொதுமக்கள் பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பேணுதல், அடக்குதல், குழப்பம் கலகத்தை அல்லது கிளர்ச்சியை அடக்குதல் மற்றும் சமூகத்தினரின் வாழ்வுக்காக அத்தியாவசியப் பொருட்களும் சேவைகளும் வழங்கப்படுதலைப் பேணிவருதல் என்பது போன்ற நோக்கங்களுக்காக மட்டுமே அவசரகால ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டியிருக்கும்போது, அத்தகைய எந்த நோக்கங்கள் தொடர்பாகவும் ஒழுங்குவிதி நியாயமாக ஆக்கப்படவில்லையென்று அது பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் வரம்பெல்லையை மீறியதாக உள்ளதென்றும் தீர்ப்பளித்தது. நீதிமன்றம், பிரிவு 37 (1)(ஆ)வில் குறிப்பிடப்பட்ட இணைப்புக்கான இரண்டு நிபந்தனைக்கான ஆயுதங்கள் கையளிக்கப்படுதலும் மற்றும் போர் நடவடிக்கையை நிறுத்தப்படுதலும் நிறைவேற்றப்படவில்லையென்றும் மேலும் தீர்ப்பளித்தது. அத்தகைய சபைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்மூலம் மாகாண சபையை அமைப்பதற்கான உரிமை வாக்குரிமையுடன் தொடர்புபட்டதாகும். அது மக்களின் இறைமையின் ஒரு பாகமாக அமைவதனால் அதனை மறுத்தல் உறுப்புரை 12(1) இனால் உத்தரவாதமளிக்கப்பட்ட சட்டத்தின் சமமான பாதுகாப்புக்காக உரிமையின் தொடர்ச்சியான மீறுகையாக அமையுமென்றும் நீதிமன்றம் முடிவுறுத்தியது.

1.3 ஆளுநர்

ஆளநர் தொடர்பான அரசியலமைப்பின் பிரதான ஏற்பாடுகள் உறுப்புரை 154ஆ வில் காணப்படுகின்றன. ஆளுநர் ஜனாதிபதியினால் அவரது கைப்பட ஆணைமூலம் நியமிக்கப்பட்டு, 4(ஆ) என்னும் உறுப்புரைக்கிணங்க ஜனாதிபதி விரும்பும்வரை பதவி வகித்தலும் வேண்டும். ஆளுநரின் பதவிக்காலம் ஐந்து வருடங்களாகும். அத்துடன் மீள நியமிக்கப்படுவதற்கு எத்தடையும் இல்லை.

மாகாண சபையானது, ஆளுநர் அரசியலமைப்பின் ஏற்பாடுகளை வேண்டுமென்றே மீறியுள்ளாரென்றும் அவரது பதவிக்குரிய தத்துவங்களின் ஒவ்வாத நடத்தைக்கு அல்லது ஊழற் பழக்கத்துக்கு குற்றவாளியாக உள்ளாரென அல்லது இலஞ்சத் தவறுக்கு அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்தும் தவறுக்குக் குற்றவாளியாகவுள்ளார் என்னும் ஏதுவின்மீது ஆளுநரை அகற்றும்படி ஆலோசனையளிக்கும் உரையொன்றை ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கலாம். அத்தகைய நோக்கத்துக்கான, தீர்மானத்துக்கான அறிவித்தல் சமூகமளித்த முழு எண்ணிக்கையினரான உறுப்பினர்களுள் அரைவாசியினருக்கும் குறையாதோரால் ஒப்பமிடப்பட்டு ஒரு தீர்மானம் (சமூகமளிக்காதவர் உள்ளிட்ட) சபையின் முழு எண்ணிக்கையினரான உறுப்பினர்களுள் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரினால் நிறைவேற்றப்படவேண்டும். வெளிப்படையாகக் குறிப்பிடப்படாவிட்டாலும், எந்த ஆளுநர் தொடர்பில் உரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த ஆளுநரை அகற்றுவது ஜனாதிபதியைப் பொறுத்த ஒரு விடயமாகும்.

ஆளுநர் பதவியேற்றதன்மேல், அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்ட அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் பதவியை வகிக்காதொழிதல் வேண்டுமென்பதுடன் அவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகவிருப்பின், பாராளுமன்றத்தில் அவரது ஆசனத்தை வறிதாக்குதலும் வேண்டுமென்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளதேயொழிய, அவரது தகைமைகள் பற்றி எதுவும் அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை. ஆளுநர் வேறேதேனும் பதவியையோ, இலாபமீட்டும் பதவியிடத்தையோ வகித்தல் ஆகாது. இந்தியாவில் அவர் ஒரு பிரஜையாகவும் 35 வயதுக்குக் குறையாதவராகவும் இருக்கவேண்டும் என்பது மட்டுமே தகைமைகளாகும்.

இலங்கையில் முன்னாள் நீதிபதிகள், ஓய்வுபெற்ற பகிரங்க சேவையாளர்கள், ஓய்வுபெற்ற இராணுவ அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இன்னொருபுறத்தில் சேவையாற்றிக் கொண்டிருந்த அமைச்சர்கள் ஆளுநர்களாக நியமனங்களைப் பெறுவதற்காக பாராளுமன்றத்தில் தங்களது ஆசனங்களைத் துறந்துள்ளனர். தீவிர அரசியல்வாதிகள் தொடர்ச்சியான அரசாங்கங்களினால் நியமிக்கப்பட்டுள்ளனர். பதவி வகிக்கையிலும் தீவிரமாக தொடர்ந்து செயல்பட்டனர். ஓர் ஆளுநர் அதே மாகாணத்தினுள் உள்ள ஒரு தேர்தல் மாவட்டத்தில் ஆளும் கட்சியில் பிரதான அமைப்பாளராகத் தொடர்ந்திருந்தார். அரசியல் ரீதியாக தீவிரமாக இருந்த ஆளுநர்கள் தமது பதவிகளை அரசியல் இலாபம் கருதிப் பயன்படுத்தியமை பற்றிய அறிக்கைகள் உள்ளன.

ராமேஜ்வர் பிரசாத் எதிர் இந்திய ஒன்றியம் என்ற வழக்கு[16] இந்திய உயர் நீதிமன்றம் ஆளுநரின் பங்கினைக் கண்டனத்துடன் ஆராய்ந்து மத்திய மாநில உறவுகள் மீதான நீதிபதி சாகாரியா ஆணைக்குழுவின் 1988ஆம் ஆண்டின் அறிக்கைக்கு பரவலாகக் குறிப்பீடு செய்தது.

சாகாரியா ஆணைக்குழு, உணர்வுபூர்வமான அரசியலமைப்புப் பதவிக்கு சரியான நபரைத் தெரிவுசெய்வதன்மூலமே ஆளுநர் பதவியின் கௌரவத்தை நிலைநாட்டமுடியுமென்று குறிப்பிட்டுள்ளது. அரசியலமைப்பினால் விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைவிட வேறு சில தகைமைகளையும் அறிக்கை நிரற்படுத்தியது. அவையாவன, வாழ்வின் ஏதேனும் துறையில் பிரசித்தி பெற்றவராகவும், மாநிலத்துக்கு வெளியே உள்ளவராகவும், உள்ளூர் அரசியலில் சிறிதளவு தொடர்பைக் கொண்டு அதிலிருந்து விடுபடுகின்ற ஒருவராகவும், அரசியலில் பொதுவாகவும் குறிப்பாக அண்மைக் காலங்களில் அரசியலில் ஈடுபடாத ஒருவராகவும் இருத்தல் வேண்டுமென்றும் குறிப்பிட்டது.

உயர் நீதிமன்றம் பின்வருமாறு அவதானித்தது.

> "துரதிர்ஷ்டவசமாக கற்கைகளைக் கிட்டத்தட்ட முழுமையாக மீறியே எல்லா அரசியல் கட்சிகளும் செயற்பட்டுள்ளன. ஒருநாள் ஒருவர் பிரதான அமைச்சர் பதவியை அல்லது அமைச்சர் பதவியை அல்லது

---

[16] 2006 (2) SCC 1.

கட்சிப் பதவியை வகித்துக் கொண்டிருக்கின்ற அதேவேளை, தீவிர அரசியலிலும் ஈடுபட்டிருப்பதனையும் அத்துடன் கிட்டத்தட்ட அடுத்தநாளே அல்லது அதன்பின்னர் விரைவில் எந்தவித இடைவெளியும் இல்லாது இன்னும் ஒரு மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்படுகின்றதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. வழமையாக அரசியலமைப்புப் பதவிகளை நிறைவேற்றும்போது, அத்தகைய ஒருவர் கட்சி அரசியலிலிருந்து விடுபடுதலை எதிர்பார்ப்பது கடினமானதொன்றாகும்."

இந்தியாவின் முன்னையநாள் பிரதம நீதியரசர் ஒருவரினால் தலைமை தாங்கப்பட்ட மத்திய - அரசு உறவுகள் மீதான புஞ்சி ஆணைக்குழு, பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒருவர் அவருடைய நியமனத்திற்கு முன்னர் குறைந்தபட்சம் சில வருடங்களுக்காவது தீவிரமான அரசியலில் ஈடுபட்டிருத்தலாகாதென அதனது 2010ஆம் ஆண்டு அறிக்கையில் விதித்துரைத்துள்ளது. ஆளுநர் ஒருவர் திறமைவாய்ந்த ஆளொருவராக இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் பதவி வகிக்கவேண்டிய இடம் அரசிற்குச் சொந்தமான இடமாக - இருத்தலாகாதெனவும் சாகாரியா ஆணைக்குழு விதப்புரையுடன் அது இணங்கிக் கொள்கின்றது.

ஆளுநர், ஜனாதிபதி விரும்பியாங்கு பதவி வகிக்கின்றார் ஆதலால், அவர் ஜனாதிபதியால் பதவி அகற்றப்பட முடியும். மேல் மாகாண ஆளுநர் ஆகிய முன்னாள் பிரதம நீதியரசர் எஸ். சர்வானந்தா, எதிர்க்கட்சியால் கட்டுப்படுத்தப்பட்டிருந்த மாகாணசபையின் பிரதான அமைச்சரால் மதியுரை செய்யப்பட்டவாறு அமைச்சர் ஒருவரை அகற்றக்கூடாதென்ற அரசாங்கத்திடமிருந்தான அழுத்தத்தை எதிர்த்து நின்ற பின்னர் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவினால் பதவி அகற்றப்பட்டார்.

பீ.பி. சிங்ஹல் எதிர் இந்திய ஒன்றியம் (Union of India)[17] என்ற வழக்கு 2004ஆம் ஆண்டில் புதிய ஐக்கிய முன்னேற்றகர முன்னணி (UPA) அரசாங்கத்தினால் உத்திரப் பிரதேசம், குஜராத், ஹரியானா மற்றும் ஒரிசா ஆகிய இடங்களின் ஆளுநர்களின் பதவியகற்றுகையுடன் சம்பந்தப்பட்டது. ஜனாதிபதி, ஏதேனும் காரணங்களைக் குறித்தொதுக்காமலும் காரணம் காட்டுவதற்கான ஏதேனும் சந்தர்ப்பம் கொடுக்காமலும் ஏதேனும் நேரத்தில் ஆளுநரைப் பதவியிலிருந்து அகற்ற முடியுமென இந்திய உயர் நீதிமன்றம் தீர்மானித்திருந்தபோதிலும் அவ்வதிகாரம் தான்தோன்றித்தனமாகவும், எதேச்சாதிகாரத்துடனும் அல்லது நியாயமற்ற முறையிலும் பிரயோகிக்கப்படமுடியாது. வலிதானதும் கட்டாயமானதுமான காரணங்களுக்காக அரிதான மற்றும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். ஆளுநர் ஒருவர் மத்திய அரசின் அதிகாரத்தில் உள்ள கட்சியின் கொள்கைகளுக்கும் இலட்சியங்களுக்கும் அவர் எதிராக உள்ளார் என்ற

---

[17] Writ Petition (Civil) No.296/ 2004, SC Minutes 07.05.2010.

சந்தேகத்தில் பதவி அகற்றப்பட முடியாது. மத்திய அரசாங்கம் அவரில் நம்பிக்கையை இழந்துள்ளது என்ற சந்தேகத்தின்மீது அவரைப் பதவி அகற்றமுடியாது. ஆதலால் மத்திய அரசாங்கத்தில் ஏற்படும் மாற்றம் புதிய அரசாங்கத்தினால் ஆதரவளிக்கப்பட்ட ஏனையோருக்கு வழிவகுப்பதற்கு பதவி வகிக்கின்ற ஆளுநர்களின் பதவியகற்றுகைக்கான ஏது ஒன்றாக இருக்காது.

யார் ஆளுநராக நியமிக்கப்படவேண்டும் என்பதை நீதிமன்றம் குறிப்பிடுகின்றது:

> "முதிர்ச்சியும் அனுபவமும் கொண்ட புகழ்பெற்ற முதிய ஆட்சி வல்லுனர்கள், நிர்வாகிகள் மற்றும் சிறந்த ஆளுமையுடையோர்கள் ஆகியோர் ஆளுநர்களாக நியமிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றார்கள். அவர்களில் சிலர் அரசியல் பின்னணியில் இருந்து வந்திருக்கலாம். அவர்கள் ஆளுநராக நியமிக்கப்படும்போது, அரசியலமைப்பிற்கான அவர்களது பற்றுறுதி, அரச பக்திக்கு கடமைப்பட்டிருக்கின்றார்களே தவிர ஏதேனும் அரசியற் கட்சிகளுக்கு அல்ல. அத்துடன் அரசியலமைப்பினைப் பேணிக்காக்கவும் பாதுகாக்கவும் காப்பளிக்கவும் பணிக்கப்படுகின்றார்கள்."

1.4 மாகாண சபைகளை கூடும்படி அழைத்தல், அமர்வை நிறுத்திவைத்தல் மற்றும் கலைத்தல்

உறுப்புரை 154 ஆ(8) என்பதன்கீழ் ஆளுநர் காலத்திற்குக்காலம், அவர் பொருத்தமானதென எண்ணுகின்றவாறான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் மாகாண சபையைக் கூடுமாறு அழைக்கலாம் அல்லது ஒத்திவைக்கலாம். ஆளுநர் சபையைக் கலைக்கவும் செய்யலாம். ஆயினும், ஆளுநர் முதல் அமைச்சரின் ஆலோசனைக்கிணங்க ஆளுநரின் அபிப்பிராயப்படி, அமைச்சர்கள் சபை, மாகாண சபையின் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றிருக்கும்வரை அத்தகைய அதிகாரங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

1994இல் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க பதவி ஏற்றபோது, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள் எதிர்க்கட்சியின் கட்டுப்பாட்டிலிருந்தது. 1996 ஜனவரியில் ஒவ்வொரு மாகாணத்தினது ஆளுநர், மாகாண சபைகளைக் கலைப்பதுபற்றி ஆலோசனையைக் கோருகின்ற முறையேயான பிரதான அமைச்சர்களுக்கு எழுதினார். பிரதான அமைச்சர்கள் கலைப்பிற்கு எதிராக ஆலோசனை வழங்கினர். அத்தகைய ஆலோசனை வழங்கிய நேரத்தில் ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள அமைச்சர்கள் சபையானது உறுப்பினர்களின் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்றிருந்தது.

அப்போது ஆளுநர்கள், அரசியலமைப்பின் 154ஊ என்னும் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 154ஆ என்னும் உறுப்புரையின் நியதிகளில் கலைப்புபற்றிய விடயத்தை கட்டளை ஒன்றுக்காகவும் பணிப்பொன்றுக்காகவும் ஜனாதிபதிக்கு சமர்ப்பித்தார்கள். ஜனாதிபதி

கட்டளையை ஆக்கி முறையேயான மாகாண சபைகளைக் கலைப்பதற்கு ஆளுநர்களைப் பணித்தார். அவர்கள் அதைச் செய்தார்கள்.

மேன்முறையீட்டு நீதிமன்றமானது,[18] ஆளுநரால் ஆக்கப்பட்ட கலைப்புக்கான கட்டளைகள் மற்றும் புதிய தேர்தல்களுக்கென தேர்தல் ஆணையாளர்களினால் வெளியிடப்பட்ட அறிவித்தல்களைத் தள்ளுபடி செய்கின்ற உறுதிகேள் எழுத்தாணையை வழங்கியதுடன் உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீட்டைச் செய்வதற்கான அனுமதியையும் வழங்கியது.

உயர் நீதிமன்றம்,[19] உறுப்புரை 154 ஆ(8)(இ) என்பதனைத் தனியாக கருத்திற்கெடுக்கும்போது, ஆளுநர் மாகாண சபையைக் கலைக்கலாம் என்று குறிப்பிடுவதனால் தற்றுணிபு அதிகாரம் ஒன்றை அளிப்பதற்காகத் தோன்றுவதாக, தீர்ப்பளித்தது. ஆயினும் உறுப்புரை 154 ஆ(8)(ஈ) ஆனது எந்த முறையில் அதிகாரம் பிரயோகிக்கப்படலாமோ அந்த முறையை விபரிக்கின்றது. "ஆளுநர் இப்பந்தியின்கீழ் பிரதான அமைச்சரின் ஆலோசனைக்கிணங்க ஆளுநரின் அபிப்பிராயப்படி அமைச்சர்கள் சபை, மாகாணசபையின் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றிருக்கும்வரை அவரது அதிகாரங்களைப் பிரயோகித்தல் வேண்டும்." 154 ஆ(8)(இ) என்னும் உறுப்புரையானது மேலும் ஆளுநருக்கான தற்றுணிபு அதிகாரத்தைக் கருத்திற்கொள்ளவில்லை என்பதுடன் அத்தகைய அதிகாரம் ஜனாதிபதியின் பணிப்புரைகளின்மீது பிரயோகிக்கப்படவேண்டிய தேவை இருக்கின்றதா இல்லையா என்ற கேள்வியை எழுப்பவில்லை. 154 ஆ(8)(இ) என்னும் உறுப்புரையானது ஜனாதிபதியின் கையளிப்பு அதிகாரத்தை மாத்திரமே ஆளுநர் பிரயோகிக்க வேண்டுமெனக் கருத்திற்கொள்வில்லை.

1990ஆம் ஆண்டின் மாகாண சபைகள் (திருத்தச்) சட்டமூலம், பிரதான சட்டத்திற்கு 5அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதற்கு கொண்டுவரப்பட்டது. அப்பிரதான சட்டமானது மாகாண சபையின் உறுப்பினர்களுள் அரைவாசிக்கு மேற்பட்டோர் அரசியலமைப்பை வெளிப்படையாக மதிக்காதிருந்துள்ளனர் அல்லது கீழ்ப்படிதலைத் தெளிவாக மறுத்துள்ளனர் அல்லது வேறு வகையாக அரசியலமைப்புக்கான 4ஆவது அட்டவணையில் தரப்பட்ட சத்தியம் அல்லது உறுதியுரை என்பவற்றை மீறிச் செயலாற்றியுள்ளனர் அல்லது சபை எல்லா நோக்கங்களுக்காகவும் பணியாற்றுவதை நிறுத்தியுள்ளதென ஜனாதிபதிக்கு ஆளுநர் அறிவிக்கின்றவிடத்து, சபையானது கலைக்கப்பட்டதாதல் வேண்டும் என ஏற்பாடு செய்கின்றது.

சட்டமூலமானது, கலைப்பிற்கான ஏற்பாடுகள் அரசியலமைப்பில் தரப்பட்டிருக்கின்றதெனவும் அதே விடயத்தின் மீதான வேறு ஏதேனும் ஏற்பாடு சாதாரண சட்டவாக்கத்தில் இருக்கமுடியாது என்ற ஏதுக்கள்மீது கேள்விக்குட்படுத்தப்பட்டிருந்தது.

---

[18] *Mahindasoma v Maithripala Senanayake*, [1996] 1 Sri LR 180; JP 290.

[19] *Maithripala Senanayake v Mahindasoma*, [1998] 2 Sri LR 333; JP 312.

இத்திருத்தமானது அரசியலமைப்பினால் ஆளுநருக்கு அளிக்கப்பட்ட கலைப்பு அதிகாரங்களில் இருந்து எந்த வழியிலும் தரம்குறைக்கவில்லை என உயர்நீதிமன்றம்[20] தீர்மானித்தது. நீதிமன்றமானது பின்வருமாறு தீர்ப்பளித்தது:

> "மாகாண சபையொன்றின் உறுப்பினர்களால் செய்யப்படவேண்டிய அல்லது மொழியப்படவேண்டிய சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரைக்கு ஏற்பாடு 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதேயொழிய அரசியலமைப்பிலல்ல என நாம் அவதானிக்கின்றோம். கற்றறிந்த வழக்குரைஞரின் சமர்ப்பிப்பில், உத்தேச திருத்தமானது மாகாண சபையொன்றைக் கலைப்பதற்கான ஆளுநரின் தத்துவத்தை விரிவுபடுத்தியதுடன் அது அரசியலமைப்பின் திருத்தம் ஒன்றிற்குச் சமமாகும் என இருந்தது."

இந்திய அமைதிகாக்கும் படையினர் வாபஸ் பெறவேண்டும் என்ற ஜனாதிபதியின் வேண்டுகோளைத் தொடர்ந்து பிரதான அமைச்சர் வடக்கு கிழக்கில் விருத்தியடைகின்ற சூழ்நிலையிலும் சுதந்திரத்தை தன்னிச்சையாகப் பிரகடனப்படுத்துகின்ற பிரகடனம் ஒன்றை வெளியிட்டு நாட்டைவிட்டு வெளியேறியதுடன் இந்தியப் பாதுகாப்புப் படைகளினால் வெளியேற்றப்பட்ட இடங்களில் விடுதலைப் புலிகள் (LTTE) அத்தகைய இடப்பரப்புகளில் நுழைகின்றபோது, இச்சட்டவாக்கமானது அந்த சூழ்நிலையை எதிர்கொள்ளத் தெளிவாக இலக்கிடப்பட்டது. சட்டமூலம் சட்டமாக வந்ததை உடனடுத்து மாகாண சபையின் உறுப்புரிமையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிவதை வெளிப்படையாக மறுத்திருக்கிறார்கள் என்பதுடன், சபையானது கலைக்கப்பட்டதாக இருக்கின்றது எனவும் ஆளுநரால் ஜனாதிபதிக்கு தொடர்பாடல் செய்யப்பட்டது.

1.5 மாகாண சபை

உறுப்புரை 154 ஈ(1) இல் தரப்பட்டவாறு மாகாணசபை ஒன்று அம்மாகாணத்தின் பரப்பளவையும் சனத்தொகையையும் கவனத்திற்கொண்டு, சட்டத்தின்மூலம் அல்லது சட்டத்தின்கீழ் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். மாகாண சபைகள் சட்டத்தின் 2ஆம் பிரிவானது ஜனாதிபதியால் குறித்துரைக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பாடு செய்கின்றது. 154உ என்னும் உறுப்புரையின் பயனைக்கொண்டு, மாகாண சபையொன்று முன்னரே கலைக்கப்பட்டிருந்தாலொழிய அதன் முதலாவது கூட்டத் தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு தொடர்ந்திருத்தல் வேண்டும்.

---

[20] DSCPB, Vol. VI, 82 (1990); JP 173.

சொல்லப்பட்ட ஐந்து ஆண்டு காலப்பகுதி முடிவடைதல் சபையின் கலைப்பொன்றாகச் செயற்படுதலும் வேண்டும்.

1.6 முதல் அமைச்சர் மற்றும் சபை உறுப்பினர்கள்

ஒரு மாகாணத்தின் ஆளுநருக்கு அவரது பணிகளைப்[21] பிரயோகிப்பதில் உதவிசெய்து ஆலோசனை அளிப்பதற்கென முதல் அமைச்சரையும் நால்வருக்கு மேற்படாத அமைச்சர்களையும் கொண்ட அமைச்சர்களின் சபையொன்று இருத்தல் வேண்டும்.

உறுப்புரை 154 ஊ(4) இன்கீழ் ஆளுநர் அவரது அபிப்பிராயப்படி உறுப்பினர்களுள் பெரும்பான்மையின் ஆதரவைப் பெறுவதற்கு இயலுமானவாறான அம்மாகாண சபையின் உறுப்பினரைப் முதல் அமைச்சராக நியமித்தல் வேண்டும். இது மாகாண சபையொன்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுள் அரைவாசிக்கும் மேற்பட்டோர் ஒரு அரசியல் கட்சியின் உறுப்பினர்களாக இருக்குமிடத்து, பாரபட்சம் எதுவுமில்லாத ஆளுநர் அரசியல் கட்சியின் தலைவரை முதல் அமைச்சராக நியமித்தல் வேண்டும் எனும் காப்புவாசகத்துக்கு அமைந்ததாகும். ஆளநர் முதல் அமைச்சரின் ஆலோசனையின்மீது மாகாண சபையின் உறுப்பினர்களிலிருந்து ஏனைய அமைச்சர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அமைச்சர்கள் சபை, மாகாண சபைக்குக் கூட்டாகப் பொறுப்புடையதாதலும் வகைசொல்லவேண்டியதாதலும் வேண்டும்.

1993இல் வடமேல் மாகாணம் மற்றும் தென் மாகாணத்தின் மாகாண சபைகளுக்காக நடாத்தப்பட்ட தேர்தலில் எந்தவொரு கட்சியும் அறுதிப்பெரும்பான்மையைப் பெறவில்லை. பெரும்பான்மையான உறுப்பினர்களிடமிருந்து சத்தியக்கடதாசியைக் கையளித்த உறுப்பினரைப் பிரதான அமைச்சராக நியமிக்காமையும் மத்திய அரசாங்கத்தின் ஆட்சியில் உள்ள கட்சியின் உறுப்பினரை நியமித்தமையும் அரசியல் புயலை உருவாக்கியது.

வடமேல் மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சி 25 ஆசனங்களை வென்றபோது, மக்கள் முன்னணி 18 ஆசனங்களைத் தக்கவைத்துக்கொண்டது, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி 9 ஆசனங்களைத் தக்கவைத்துக்கொண்டது. மக்கள் முன்னணியும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் நிர்வாகத்தை உருவாக்குவதற்குத் தீர்மானித்தன. அத்துடன் இரண்டு கட்சிகளும் ஒன்றாக பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டிருந்ததால், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் திரு. ஜி.எம். பிறேமச்சந்திரவை முதல் அமைச்சராக நியமிக்குமாறு ஆளுநரைக் கேட்டுக் கொண்டன. அவரை ஆதரிக்கும் சகல மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களிடமிருந்து சத்தியக் கடதாசிகளை திரு. ஜி.எம். பிறேமச்சந்திர கையளித்தார்.

---

[21] Article 154F (1)

சபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களில் சிலர் தனக்கு ஆதரவு தருவதாகவும் மற்றும் அரசினால் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்ட முடியும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் திரு. ஜயவிக்ரம பெரேரா ஆளுநரிடம் அறிவித்தார். ஆளுநர் அவரை பிரதான அமைச்சராக நியமித்தார்.

தென் மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சி 27 ஆசனங்களை வென்றபோது மக்கள் முன்னணி 24 ஆசனங்களைத் தக்கவைத்துக் கொண்டது. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி 4 ஆசனங்களைத் தக்கவைத்துக் கொண்டது. திரு. அமரசிறி தொடங்கொட தன்னை ஆதரிக்கும் மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சகல உறுப்பினர்களினதும் சத்தியக் கடதாசியை கையளித்திருந்தபோதிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் திரு. எம்.எஸ். அமரசிறி முதல் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

முறையே திரு. பீ. பெரேரா மற்றும் திரு. அமரசிறி என்போர் முதல் அமைச்சராகப் பதவி வகிக்கும் (ஒவ்வொரு வழக்கிலும் 2ஆவது பிரதிவாதி) உரிமையை எதிர்த்து ஒரு யாதுரிமை எழுத்தாணை ஒன்றிற்காகவும் இரண்டாவது பிரதிவாதியைப் பிரதான அமைச்சராக நியமித்தமையைத் தள்ளுபடியாக்கும் ஒரு உறுதிகேள் எழுத்தாணை ஒன்றிற்காகவும், முறைப்பாட்டாளர்களைப் பிரதான அமைச்சர்களாக நியமிப்பதற்காக ஆளுநரைக் கட்டாயப்படுத்தல் அனுமதி ஒன்றிற்காகவும் திரு. பிறேமச்சந்திர மற்றும் திரு. தொடங்கொட இருவரும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்தார்கள்.

அரசியலமைப்பின் பொருள்கோடல் தொடர்பாக பல வினாக்கள் அரசியலமைப்பின் 125 ஆவது உறுப்புரையின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் உயர்நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

உறுப்புரை 154 ஊ(4) இன்கீழ் மாகாணசபை ஆளுநருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரயோகம், காப்புவாசகம் நீங்கலாக தனியானதாக அவருடைய தனிப்பட்ட மதிப்பீடு மற்றும் தீர்ப்பிற்குரிய விடயம் அல்ல என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.[22] இது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதி மீளாய்வுக்குள் அமைந்த விடயமாகும். நியாயமற்ற தன்மை அல்லது தீய நோக்கில் செயற்பட்டமை அல்லது இயைபான சாட்சியத்தைப் புறக்கணித்தல் அல்லது இயைபற்ற விடயங்களைக் கவனத்திற்கெடுத்தல், அல்லது சாட்சியமில்லாமை என்பவற்றுக்காக நியமனத்தை மீளாய்வு செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அதிகாரம் கொண்டுள்ளது.

நபரொருவரைப் முதல் அமைச்சராக நியமிப்பதற்கு ஆளுநர் தெரிவுசெய்தலானது, உறுப்புரை 154 ஊ(4) இன்கீழ் காப்புவாசகம் நீங்கலாக, அரசியல் காரணிகளைக் கவனத்திலெடுக்கத் தேவைப்படுத்தப்படலாம்.

---

[22] [1994] 2 Sri LR 90.

இருந்தபோதிலும், இது ஒரு முற்றுமுழுதான அரசியல்த் தன்மை வாய்ந்ததல்ல. மாகாணத்தின் மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளினால் (மாகாண அலுவல்களை நிர்வகித்தல் தொடர்பாக) அதிகாரங்களை ஒதுக்குதல் மற்றும் பிரயோகித்தல் சம்பந்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகளில் இருந்துவரும் சட்ட உரிமைகளைத் தீர்மானித்தலுடன் தொடர்புபடுகின்றது. பிரதான அமைச்சரின் நியமனம் நீதிமன்றத்தினால் கேள்விக்குட்படுத்தப்படக்கூடியது. அத்துடன், நீதிமன்ற மீளாய்வைத் தடைசெய்யும் தானாகவே விதிக்கப்பட்ட நீதிமுறையான தடைவிதி அங்கு இல்லை.

ஆளுநரின் ஆலோசனையின்பேரிலா அல்லது அவரின் தற்றுணிபின்படியா செயலாற்ற வேண்டும் என்ற ஒரு வினா எழுமிடத்து, அந்த வினாவைத் தீர்ப்பதற்கு உறுப்புரை 154 ஊ(2) ஆம் உறுப்புரையானது, அவரைத் தேவைப்படுத்துகின்றது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. 154 ஊ(2) ஆம் உறுப்புரை இந்த வினாவின்மேல் அவரது தீர்மானத்தை இறுதியாக்குவதுடன், அதன்பின் ஆளுநரினால் செய்யப்படும் எந்தவொரு விடயமும் வினாவிற்கான எந்தவொரு நீதிமன்றத்திலும் அவருடைய தற்றுணிபில் செய்யப்பட்டதா, இல்லையா என்ற கட்டுப்படுத்தப்பட்ட அளவில் கணிப்பிடப்படுவதைத் தடுக்கின்றது. எவ்வாறாயினும், அவ் ஏற்பாடு 154 ஊ(4) என்னும் உறுப்புரையின்கீழ் பிரதான அமைச்சரின் நியமனத்திற்கு ஏற்புடையதாதல் ஆகாது.

ஆளுநரின் தீர்மானமானது, அரசியலமைப்பு அதிகாரம் மற்றும் ஆளுநரின் கடமை அத்துடன் அத்தகைய அதிகாரம், கடமை என்பன முறையாகப் பிரயோகிப்பதற்கான ஏனைய உறுப்பினர்களுடன் பொதுவாக மனுதாரர்களின் அரசியலமைப்பு உரிமைகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆகவே நீதித்துறை மீளாய்வு புறநீக்கப்படவில்லை என மேலும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

விண்ணப்பங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையாக விசாரிக்கப்பட்டதன்மேல், ஒவ்வொரு சபையினது உறுப்பினர்களது பெரும்பான்மை ஆதரவை மிகவும் சாத்தியமான சாட்சியினால் மனுதாரர்கள் நிரூபித்துள்ளனர் என்பதை நீதிமன்றம் அவதானித்தது.[23] ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் அல்லாத சில தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் அவசியம் ஏற்படும்போது, அவருக்கு ஆதரவு அளிப்பர் என அவர் தானாகவே செய்த சத்தியக்கடதாசியே 2ஆவது பிரதிவாதியினால் அளிக்கப்பட்ட ஒரே பத்திரம் ஆகும். தமது கோரிக்கையை ஆதரிக்கும் சிறந்த சாத்தியமான சாட்சியத்தை மனுதாரர்கள் உறுதிப்படுத்தியிருக்கும் பட்சத்தில் முதல் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டவர் தமக்குப் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகக் கூறும் கோரிக்கைக்கான பொறுப்பான தகவல்களைச் சாட்சியப்படுத்தவில்லை. சம்பந்தப்பட்ட ஆளுநர்கள் அவர்களிடமிருந்து எந்த

[23] [1993] 2 Sri LR 294.

விசாரணையையும் மேற்கொள்ளவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியில் இல்லாத சகல உறுப்பினர்களும் நீதிமன்றத்தில் சத்தியக் கடதாசிகளை சமர்ப்பித்தனர். இந்த விடயங்கள் ஆளுநர்களினால் மறுக்கப்படவோ முரண்படுத்தப்படவோ இல்லை.

முதல் அமைச்சரை நியமிக்கும் அதிகாரம் அரசியலமைப்பினால் ஆளுநருக்கு உரித்தாக்கப்பட்டிருக்கின்றது என மேன்முறையீட்டு நீதிமன்றம் குறிப்பிட்டது. இந்த அதிகாரத்தை நிறைவேற்றுவது பொதுமக்கள் சம்பந்தப்பட்ட விடயமாகும். இரகசியத் திரையின் பின்னால் மறைத்து இதைச் செய்யமுடியாது. வெளிப்படுத்தப்படாத இரகசிய விசாரணையின் அடிப்படையில் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டதாக ஒவ்வொரு ஆளுநரும் கோருவது இரகசியமான அடிப்படையில் இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகக் கருதவேண்டியுள்ளது. அத்தகைய தீர்மானம் எடுக்கும் முறையானது நிர்வாகச் சட்டத்திற்கு எதிரானதாகும்.

ஒவ்வொரு விண்ணப்பத்தினதும் இரண்டாவது பிரதிவாதியைப் முதல் அமைச்சராக நியமிப்பதற்கான ஒவ்வொரு வழக்கிலும் ஆளுநரின் தீர்மானம் நியாயமற்றதாகவும் சட்டமுரணானதாகவும் இருந்துள்ளது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. அதற்கிணங்க யாதுரிமை எழுத்தாணை மற்றும் உறுதிகேள் எழுத்தாணை வழங்கப்பட்டன. சட்டத்திற்கு இணங்க மாகாணத்தின் பிரதான அமைச்சரை நியமிப்பதற்கு ஒவ்வொரு ஆளுநருக்கும் ஒரு ஆணையீட்டெழுத்தாணை வழங்கப்பட்டது.

அமைச்சர் பிறேமச்சந்திர மற்றும் அமைச்சர் தொடங்கொட ஆகியோர் பின்பு பிரதான அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். இந்த நிகழ்வானது, இந்த நாட்டின் அதிகாரப் பரவலாக்கல் வரலாற்றில் ஒரு கறை ஆகும். மத்திய அரசின் ஆளும் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அரசியல்வாதிகளாயிருந்த இந்த இரு ஆளுநர்களும் அறிவுறுத்தலின்படி நடந்துள்ளமை வெளிப்படையானது.

உறுப்புரை 154 ஆ(11)மூலம், மாகாணத்தின் அலுவல்களது நிர்வாகம் தொடர்பிலான அமைச்சர்கள் சபையின் எல்லா முடிவுகளையும் சட்டவாக்கத்துக்கான உத்தேசங்களையும் மாகாணத்தின் ஆளுநருக்குத் தெரிவித்தல் பிரதான அமைச்சர்மீது சுமத்தப்பட்ட கடமையாகும். பிரதான அமைச்சர் மாகாணத்தின் அலுவல்களது நிர்வாகம் அத்துடன் சட்டவாக்கத்துக்கான உத்தேசங்கள் ஆகியன தொடர்பில் ஆளுநர் கோரக்கூடியவாறான அத்தகைய தகவலை கொடுத்துதவுதல் வேண்டுமென்பதுடன், எக்கருமம் பற்றி அமைச்சர் ஒருவரால் முடிவு எடுக்கப்பட்டிருந்து, ஆனால் சபையினால் அது சீர்தூக்கிப் பார்க்கப்படாதிருக்கின்றதோ அந்த ஏதேனும் கருமத்தைச் சீர்தூக்கிப் பார்த்தலுக்கென அமைச்சர்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும் என ஆளுநர் தேவைப்படுத்தினால், அதை அவ்வாறு சமர்ப்பித்தலும் வேண்டும்.

1.7 நிர்வாகத் துறை அதிகாரம்

எக்கருமங்கள் தொடர்பில் நியதிச்சட்டங்கள் அதாவது மாகாணசபை நிரலிலும் ஒருங்கியை நிரலிலும் உள்ள விடயங்களையும் ஆக்குவதற்கு மாகாண சபை, தத்துவமுடையதாகவுள்ளதோ அக்கருமங்களை உள்ளடக்குவதான நிறைவேற்றுத் தத்துவமானது, ஆளுநரினால் ஒன்றில் நேரடியாகவோ அல்லது அமைச்சர்கள் சபையைச் சேர்ந்த அமைச்சர்கள் மூலமாகவோ அல்லது அவருக்குக்கீழ் அமைந்த அலுவலர்கள் மூலமாகவோ, 154ஊ என்னும் உறுப்புரைக்கிணங்கப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என உறுப்புரை 154(இ) கூறுகின்றது.

உறுப்புரை 154(ஊ) பின்வருமாறு குறிப்பிடுகிறது-

> "ஒரு மாகாணத்தின் ஆளுநருக்கு அவரது பணிகளைப் பிரயோகிப்பதில் உதவி செய்து, ஆலோசனையளிப்பதற்கென, முதல் அமைச்சரையும் நால்வருக்கு மேற்படாத வேறு அமைச்சர்களையும் கொண்ட அமைச்சர்கள் சபையொன்று இருத்தல் வேண்டும். முதல் அமைச்சர் சபைக்குத் தலைமை தாங்குவார். ஆளுநர் அவரது பணிகளை அல்லது அவற்றுள் எதனையும் அவருடைய தற்றுணிபைப் பிரயோகிக்குமாறு இந்த அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின்கீழ் அவர் தேவைப்படுத்துகின்ற அளவுக்குத் தவிர, அவரது பணிகளைப் பிரயோகிக்கையில் அத்தகைய ஆலோசனைக்கிணங்க செயலாற்றுதல் வேண்டும்."

ஏதேனும் கருமம் தொடர்பில் ஆளுநர் தற்றுணிபைக் கொண்டுள்ளாரா இல்லையா என்னும் கேள்வி எழுகையில் அதன்மீதான முடிவு ஆளுநருக்குரியதாகும் என்பதுடன் அத்தகைய முடிவு இறுதியானதாதலும் வேண்டும். ஆளுநரினால் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாகுந்தன்மை, அவர் தமது தற்றுணிபின்படி செயலாற்றியிருக்கவேண்டுமா அல்லவா என்னும் ஏதுவின்மீது நீதிமன்றம் எதிலும் கேள்விக்கு உட்படுத்தல் ஆகாது. ஆளுநரின் தற்றுணிபைப் பிரயோகித்தலானது ஜனாதிபதியின் பணிப்பின்மீதாதல் வேண்டும்.[24]

அமைச்சரினால் ஆளுநருக்கு ஆலோசனை எதுவும் வழங்கப்பட்டதா? அப்படியாயின், என்ன ஆலோசனை வழங்கப்பட்டது? என்னும் பிரச்சினை நீதிமன்றம் எதிலும்[25] விசாரணை செய்யப்படுதல் ஆகாது.

அமைச்சர்கள் சபை மற்றும் பிரதான அமைச்சரின் ஆலோசனைப்படி பிரயோகிக்கப்படவேண்டிய பணிகளையும் அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின்கீழ் அவர் தேவைப்படுத்துகின்றதான அவருடைய தற்றுணிபின்படி அவர் பிரயோகிக்கக்கூடியதான பணிகளுமாக இரண்டு வகையான பணிகளை ஆளுநர் கொண்டுள்ளார்.

---

[24] Article 154F (2).
[25] Article 154F (3).

தெளிவாக, மாகாண சபை நிரலிலும் ஒருங்கியை நிரலிலும் தரப்பட்ட விடயங்கள் தொடர்பில் நிறைவேற்று அதிகாரத்தின் பிரயோகமானது அமைச்சர்கள் சபையினதும் முதல் அமைச்சரினதும் ஆலோசனையின்படி இருத்தல் வேண்டும். ஆகவே, மத்திய அரசாங்கத்தின் அமைப்பு ஜனாதிபதி சார்ந்ததாகவிருப்பினும் மாகாணங்களில் செயற்படுகின்றதான அரசாங்கத்தின் பாராளுமன்ற அமைப்பு இது ஆகும்.

ஆளநர் தனது தற்றுணிபின்படி பிரயோகிப்பதற்கு அரசியலமைப்பினால் தேவைப்படுத்தப்படுகின்றதான பணிகள் பின்வருவனவற்றைக் உள்ளடக்குகின்றன: மாகாண சபையில் உரையாற்றுவதும், அந்நோக்கத்திற்காக உறுப்பினர்களைச் சமூகமளிக்குமாறு கேட்டலும்,[26] ஒன்றில் சபையில் முடிவுறாதிருக்கும் நியதிச்சட்டங்கள் அல்லது அவ்வாறில்லாவிடில் அதனைக் கவனத்திலெடுத்தல்[27] தொடர்பில் சபைக்குத் தகவல்களை அனுப்புதல், மாகாண சபை நியதிச்சட்டங்களை உருவாக்குவதற்கு அதிகாரம் கொண்டுள்ள விடயம் தொடர்பில் நியதிச்சட்டம் அல்லது சட்டம் ஒன்றிற்கு எதிராகத் தவறொன்றினைப் புரிந்துள்ள நபர் ஒருவருக்கான தண்டனைக்கு மன்னிப்பளித்தல், பிற்போடல், அல்லது தண்டனையை வழங்கல்,[28] நியதிச்சட்டத்தை அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாட்டை மீளக் கவனத்திற் கொண்டுவருவதற்கான சபையின் வேண்டுதலை அல்லது அவரால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய திருத்தங்களைக் கவனத்திற்கொள்வதற்கான வேண்டுதலைச் செய்தியொன்றுடன் சேர்த்து மாகாண சபையின் சம்மதத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட நியதிச்சட்டத்தை திருப்பி அனுப்புதல்,[29] அத்துடன் அரசியலமைப்புடன் ஒவ்வாதனவாக இருக்கின்றதா அல்லது இல்லையா என்ற தீர்மானம் ஒன்றிற்காக உயர்நீதிமன்றத்திற்கு சமர்பிக்கப்படவேண்டிய நியதிச்சட்டம் ஒன்றை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்தல்.[30]

மாகாண சபை நிரல் மற்றும் ஒருங்கியை நிரலின்கீழ் வருகின்ற வியடங்கள் தொடர்பில் மாகாண சபைகளின் நிறைவேற்று அதிகாரம் புறநீங்கலானதா என்ற கேள்வி எழுப்பப்படமுடியும். உறுப்புரை 154இ இல் அவ்வாறு வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. உறுப்புரை 154எ (கீழே கலந்துரையாடப்பட்டது) இன் இயைபான ஏற்பாடுகளின் பயன்பாடானது, மாகாண சபையில் ஒரு விடயம் தொடர்பான நியதிச்சட்டம் ஒன்று நிறைவேற்றப்படுகின்றபோது, அந்த விடயம் தொடர்பான 1987 இற்கு முற்பட்ட சட்டங்கள் செல்லுபடியற்றதாக வருவதாகும். எனவே மத்திய அரசாங்கமானது, மாகாணத்திலுள்ள அத்தகைய சட்டங்களை நிறைவேற்றுவதற்குச் சட்ட அடிப்படை எதையும் கொண்டிருக்கவில்லை. அதேபோன்ற ஒரு ஏற்பாடு பாராளுமன்றம் முரணாக தீர்மானம்

[26] Article 154B (10) (a).
[27] Article 154B (10) (b).
[28] Article 154B (9).
[29] Article 154H (2).
[30] Article 154H (4).

எடுப்பதன்மூலம் முடிவு எடுப்பது தவிர, ஒருங்கியை நிரலில் தரப்பட்ட விடயங்களிற்கு ஏற்புடையதாகின்றது.

1.7.1 மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டமூலம்

நிறைவேற்று அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு மாகாண சபை அதிகாரிகளுக்கு நியதிச்சட்ட அதிகாரம் தேவைப்படுகின்றது. 1988இல் மாகாண சபைகள் தாபிக்கப்பட்டபோது, மாகாண சபை நிரல் மற்றும் ஒருங்கியை நிரலின்கீழ் வருகின்ற விடயங்கள் தொடர்பில் குறைந்தபட்சம் 300 சட்டங்கள் இருந்தன எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய சட்டங்களின்படி அமைச்சருக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட பகிரங்க அலுவலருக்கான குறிப்பீடுகள் ஆளுநருக்கு, மாகாண அமைச்சருக்கு அல்லது பதின்மூன்றாம் திருத்தத்திலுள்ள அங்ஙனம் பயன்படும் தெளிவான ஏற்பாடொன்று இல்லாமையினால் அதையொத்த மாகாண பகிரங்க அலுவலருக்கான குறிப்பீடுகள் என எடுக்கப்படமுடியாது. அவர்கள் நிறைவேற்று அதிகாரத்தைப் பிரயோகிக்கவேண்டுமாயின், மாகாண சபையானது அத்தகைய எல்லாச் சட்டங்களிற்கு நேரொத்த நியதிச்சட்டங்களை நிறைவேற்றுகின்ற மிகவும் கடினமான வேலைக்கு முகங்கொடுக்க வேண்டியதாக இருந்தது. அவர்களுக்கு தமக்கெனச் சொந்தமாக சட்டவரைஞர்களும் இருக்கவில்லை. அத்துடன் அதற்கும் மத்திய அரசாங்கத்திடம் தங்கியிருக்க வேண்டியதாயிற்று. நியதிச்சட்டம் ஒன்று இல்லாதவிடத்து, மத்திய அரசாங்கம், அவ்விடயம் தொடர்பில் நிறைவேற்று அதிகாரத்தைத் தொடர்ந்து உபயோகிக்கும்.

மாகாண சபை நிரல் மற்றும் ஒருங்கியை நிரலில் தரப்பட்ட விடயங்கள் தொடர்பில் தற்போதுள்ள சட்டத்தில் சொல்லப்பட்டவாறு உள்ள எல்லாக் குறிப்பீடுகளும் நேரொத்த மாகாண அதிகாரசபைகளுக்கான குறிப்பீடுகளாக அமையும் வண்ணம் ஏற்பாடு செய்யும் பாராளுமன்ற சட்டவாக்கத்தினை ஆக்குவதற்கு என அரசாங்கத்திற்கு உத்தேசங்கள் கொடுக்கப்பட்டன. அரசாங்கம் அத்தகைய ஏற்பாடு ஒன்றைச் செய்வதற்கு தயக்கத்துடன் உடன்பட்டது. ஆனால், அது மாகாண சபை நிரலிற்கு மட்டும் ஏற்புடையற்பாலதாகும். அதற்கிணங்க 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அரசியலமைப்பிற்கான 13வது திருத்தத்தை சட்டமாக்கிய பின்னருங்கூட நிறைவேற்று அதிகாரத்தை உரித்தாக்குவதில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை எனும் அடிப்படையில் மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டமூலம் கேள்விக்குட்படுத்தப்பட்டது. ஆனால், அச் சட்டமூலம் ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரத்தை அரசியலமைப்புக்கு முரணாக மதிப்புக் குறைப்பதாக கோரப்பட்டது. உயர் நீதிமன்றம் உடன்படாது 154இ[31] ஆம்

[31] DSCPB, Vol. V, 49 (1989); JP 138.

உறுப்புரையில் தங்கியிருந்தது. இம் முடிவு, மாகாண சபை நிரல் மற்றும் ஒருங்கியை நிரலின்கீழ் வருகின்ற விடயங்கள் தொடர்பில் மாகாண சபைகளின் நிறைவேற்றுத் தத்துவம் புறநீங்கலானது என்ற வாதத்தை வலியுறுத்துகின்றது.

எவ்வாறாயினும், மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் பொருள் தற்போதுள்ள சட்டத்திலுள்ள அத்தகைய குறிப்பீடுகள் நேரொத்த மாகாண அதிகாரிகளின் குறிப்பீடுகளை உள்ளடக்குவதாக கருதப்படல் வேண்டும் எனவும் அவர்களுக்கு மட்டுமான குறிப்பீடுகளாக கருதப்படலாகாதெனவும் கூறப்பட்டுள்ளது. ஆகவே மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகளின் அதிகாரங்கள் தொடர்ந்தும் அவர்களிடமே இருந்துவருகிறது.

அலவ்வ எதிர் கடுகம்பொல ப.நோ.கூ.ச.,[32] என்ற வழக்கில் உயர் நீதிமன்றம் சட்டத்தின் பயன் மற்றும் அனுகூலங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளது.

> "முதலாவதாக, மாகாண சபை ஒன்று நியதிச் சட்டங்கள் ஆக்கும்வரை (மாகாண நிரலில் உள்ள விடயங்கள் தொடர்பில்) சட்டம் எதுவும் மேலோங்காது என்னும் நிலையை இது நீக்குகின்றது. இரண்டாவதாக, அந்நிரலிலுள்ள பல்வேறு விடயம் தொடர்பான ஒரு தொகையான நியதிச் சட்டங்களை நீண்டகாலமாக சட்டமாக்கப்பட்ட, ஏற்கனவே நடைமுறையிலுள்ள சட்டத்தை பிரதியீடு செய்யும் நோக்குடன் ஏறத்தாழ ஒரே இரவில் சட்டமாக்குவதற்கான மாகாண சபையின் பங்கின்மீதான மிகப்பெரிய பணியை இது நீக்குகின்றது. எப்போது அம்மாகாணத்தில் நடைமுறையிலுள்ள சட்டம் ஒன்று நிறுத்திவைக்கப்பட்டு மற்றும் தொழிற்படாதிருக்கும் (நீக்கப்படாது) என்பதையும் இந்த உறுப்புரை தெளிவுபடுத்துகின்றது. அதாவது, மாகாண சபை நியதிச்சட்டம் ஒன்றை அதே கருமம் தொடர்பில் சட்டத்துக்கு ஒவ்வாதனவாக இருக்கின்றதென அதன் விரிவுப்பெயரை விபரித்து ஆக்குகின்றபோதும் அந்நியதிச்சட்டம் வலுவில் இருக்கும்வரை சம்மதம் பெறும்போதும்."

தற்போது இல்லாத கூட்டுறவுக் குழு ஒன்றிற்கு உறுப்பினர்களாக 1 தொடக்கம் 3 வரையான மேன்முறையீட்டாளர்களை நியமிப்பதற்கு ஒன்றில் 1972ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுச் சட்டத்தையா அல்லது மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தையா விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் நாடியிருக்கவேண்டுமென்பது சொல்லப்பட்ட வழக்கில் எழுந்த வினா ஒன்றாகும்.

1972ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கச் சட்டத்தின் 3ஆம் பிரிவானது பின்வருமாறு கூறுகின்றது: "இச்சட்டதின் நோக்கத்திற்காக கூட்டுறவு ஊழியர்கள்

---

[32] [1996]2 Sri LR 278, JP 365.

ஆணைக்குழுவென அறியப்படும் அதிகார சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்". வடமேல் மாகாணத்தில் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு ஒன்றின் சட்டமுறையான தாபிப்பை இனங்காண்பதற்கு அரசியலமைப்பின் உறுப்புரை 154எ(1) மற்றும் (8) உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 3 ஆனது அவசியமாக நிர்ப்பந்தித்துள்ளது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆகவே 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் முறையே ஆணைக்குழுவின் தவிசாளராகவும் உறுப்பினர்களாகவும் அப்பணிக்குப் பொறுப்பான, இயைபான அமைச்சரினால் 1 தொடக்கம் 3 வரையான மேன்முறையீட்டாளர்கள் தொடர்பில் செய்யப்பட்ட நியமனம் வலிதானதாகவும் சட்டமுறையானதாகவும் இருந்தது.

மாகாண சபை நிரலில் தரப்பட்ட விடயங்கள் தொடர்பில் மட்டுமே அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கு மாகாண அதிகாரிகளுக்கு 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கச் சட்டம் அதிகாரம் வழங்கியுள்ளது. மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தில் உள்ளடக்கப்படாத கிட்டத்தட்ட 200 வரையிலான சட்டங்கள் ஒருங்கியை நிரலில் தரப்பட்ட விடயங்கள் தொடர்பில் தொடர்ந்தும் இருந்து வந்துள்ளன. இன்றுவரையில் அத்தகைய விடயங்கள் தொடர்பில் சில நியதிச்சட்டங்கள் வேறுபட்ட மாகாண சபைகளினால் இயற்றப்பட்டுள்ளன. அத்தகைய நியதிச்சட்டங்கள் இல்லாமையினால் மாகாண அதிகாரிகள், உறுப்புரை 154இ எது எப்படியிருப்பினும் நிறைவேற்று அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு இயலாதவர்களாக இருக்கிறார்கள்.

1.7.2 நிர்வாகத்துறை அல்லது நிர்வாக நடவடிக்கை

ஒரு மாகாண சபையின் அல்லது அதன் அலுவலர்களின் செயல்கள் அல்லது செய்யாமை நிர்வாகத்துறை அல்லது நிர்வாக நடவடிக்கையினுள் வருகின்றதா என்பதும், அத்துடன் அடிப்படை உரிமை மீறல்களை விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றத்தினுடைய நியாயாதிக்கத்தினுள் வருகின்றதா என்பதுமான வினா பரமேஸ்வரி ஜெகநாதன் எதிர் சட்டமாதிபர்[33] என்ற வழக்கில் எழுப்பப்பட்டது. மத்திய அரச நிர்வாகத்துறை மற்றும் மாகாண நிர்வாகத்துறை பற்றிய அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்குக் குறிப்பீடு செய்த பின்னர் நீதிமன்றம், எந்நபருக்கு மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் மனுதாரர் மீதான இடமாற்றல் அதிகாரம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாட்டு அதிகாரம் உரித்தாக்கப்பட்டுள்ளவரும், மனுதாரர், செயலாளர், வடக்கு கிழக்கு மாகாணத்தின் சுகாதார மற்றும் பெண்கள் அலுவல்கள் அமைச்சின்மீது நிர்வாக அதிகாரத்தைக் கொண்டுள்ளவருமான வவுனியா சுகாதார சேவைகளின் பிராந்தியப் பணிப்பாளரின் செயல்பாடு சந்தேகமின்றி நிர்வாகத்துறை அல்லது நிர்வாக செயல் எனக் கூறியது. எவ்வாறாயினும், இந்த முடிவின் அடிப்படையானது மாகாண அதிகாரிகளுக்கான நிர்வாகத்துறை அதிகாரம்

[33] [1992] 2 Sri LR 356, JP 201.

அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டது என்பதல்ல. ஆனால், அவ் அதிகாரங்கள் அரசியலமைப்பிற்கான மீள் பதின்மூன்றாம் திருத்தத் தீர்மானத்தாலும் மாகாண சபைகள் சட்டமூலத் தீர்மானத்தாலும் தீர்மானிக்கப்பட்டவாறு ஒற்றையாட்சி அரசாங்கத்தின் கட்டமைப்பினுள் "மத்திய அரசாங்க அதிகாரத்தின் அதிகாரப் பரவலாக்கம்" அல்லது அதிகாரக் கையளிப்புமூலம் அளிக்கப்பட்ட அதிகாரம் ஆகும். நீதிமன்றமானது, அங்கீகாரத்துடன் அவ்வழக்கில் பெரும்பான்மையாக வெளியிடப்பட்ட கருத்தொன்றை எடுத்துக்காட்டியது. "ஜனாதிபதி நிர்வாகத்துறையில் உயர்ந்த அல்லது இறைமை உடையவராக இருக்கின்றார் என்பதுடன் அவருக்கு மாகாண சபையானது கீழ்நிலையிலுள்ள அமைப்பு ஒன்று மட்டுமே ஆகும் எனச் சொல்வது மிகையாகாது".[34]

1.7.3 இடைக்காலக் கண்காணிப்பு அற்ற நிருவாகம்

மாகாண சபை கலைக்கப்படுகின்றபோது அல்லது கலைக்கப்பட்டிருக்கும்போது பிரதான அமைச்சரும் அமைச்சர்கள் சபையும் பதவியிலிருந்து வெளியேறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், புதிய சபையின் முதலாவது கூட்டத்திற்கு[35] நேர்முன்னர் வரை சபையின் தவிசாளரது பதவி வறிதாகாது. புதிய சபை அமைக்கப்படும்வரை "இடைக்காலக் கண்காணிப்பு நிர்வாகம்" ஒன்றுக்கான ஏற்பாடு எதுவும் இல்லை. முதல் அமைச்சர் ஒருவர் மற்றும் அமைச்சர்கள் சபை ஒன்று இல்லாதவிடத்து இந்த இடைக்காலத்தில் ஆளுநரே நிறைவேற்று அதிகாரத்தை உபயோகிப்பார்.

1.8 சட்டவாக்க அதிகாரம்

1.8.1 அரசியலமைப்புத் திருத்தங்கள்

மாகாண சபைகள் தொடர்பான அத்தியாயத்தின் ஏற்பாடுகளை அல்லது ஒன்பதாம் அட்டவணையினை (மாகாண சபை நிரல், ஒதுக்கிய நிரல், ஒருங்கியை நிரல் போன்ற மூன்று நிரல்களைக் கொடுக்கின்றது) திருத்துவதற்கான அல்லது நீக்குவதற்கான அரசியலமைப்புத் திருத்தங்கள் தொடர்பில் வரையறுக்கப்பட்ட பங்களிப்பு ஒன்றை மாகாண சபை கொண்டிருக்கிறது. உறுப்புரை 154 எ(2)இற்கு இணங்க, அத்தகைய திருத்தத்திற்கான சட்டமூலம், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னரும் பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் இடப்பட முன்னரும் சமர்ப்பிப்பதற்குக் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள்ளும் அச்சட்டமூலம் மீதான மாகாண சபையின் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கென ஒவ்வொரு மாகாண சபைக்கும் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சபையும் திருத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு உடன்படுகின்றவிடத்து சட்டமூலமானது

---

[34] [1987] 1 Sri LR 312, 323, 327.

[35] Provincial Councils Act, s. 7 (2).

சாதாரண பெரும்பான்மை கொண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படலாம். ஒன்றோ அல்லது பலவோவான சபைகள் சட்டமூலத்தைத் திருத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு உடன்படாதவிடத்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஒன்று தேவைப்படுத்தப்படுகின்றது.

அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தச் சட்டமூலம் ஆனது அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரையின்மேல் நிதி ஆணைக்குழு ஜனாதிபதியினால் நியமிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடுவதற்காக உறுப்புரை 154 R ஐத் திருத்த முனைந்தது. மாகாண சபை நிரலுக்கான பின்னிணைப்பையும் (சட்டமும் ஒழுங்கும்) திருத்த வேண்டியிருந்தது. இச்சட்டமூலம் அவசர சட்டமூலமாக உயர்நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அது மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. சட்டமூலம் அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டிருக்கவேண்டுமா என்பது நீதிமன்றத்தின் முன்னர் எழுப்பப்படவில்லை. நீதிமன்றமானது நடைமுறைத் தேவைப்பாடுகளுக்கு குறிப்பீடு செய்யவில்லை. ஆனால், இரண்டு வாசகங்கள் விளைவாந்தன்மையினவான திருத்தங்களாக இருந்தன எனக் குறிப்பிட்டது. செல்வகுமாரரின் கருத்திற்கிணங்க "(ந) பதினேழாவது திருத்தத்தை ஆக்கியது உறுப்புரை 154 எ(2) இனால் கட்டாயப்படுத்தப்பட்ட நடைமுறை விபரணங்களைப் புறக்கணித்ததுடன் மட்டுமல்லாது, மாகாண மட்டத்தில்[36] மக்களால்த் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் கலந்தாலோசனையைக் கருத்திற்கொள்வதற்கு முக்கியத்துவமும் கொடுக்காமையும் வெளிப்படுத்துகின்றது. கானி எதிர் தயானந்த திசாநாயக என்ற வழக்கில் உயர்நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர் கொண்ட குழாம் சட்டமூலம் மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என அறிவித்தது. ஆனால் 17ஆந் திருத்தத்தின் ஏற்பாடுகள் உறுப்புரை 154 ஏ(2)[37] இன் நியதிகளில் "சட்டமாக வந்துள்ளதா அல்லது இல்லையா" என்ற கருத்தைத் தெரிவிக்கவில்லை.

இந்த விடயம் 2010ஆம் ஆண்டின் பதினெட்டாம் திருத்தமூலத்தின்[38] விடயத்தில் மீண்டும் எழுப்பப்பட்டது. சட்டமூலமானது அரசியலமைப்பு பேரவைக்கான குறிப்பீட்டை நீக்குவதன்மூலம் மீண்டும் உறுப்புரை 154 R என்பதனைத் திருத்துவதற்கு முனைந்தது. மாகாண சபைகளுக்கு சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனப் பிரச்சினை எழுப்பப்பட்டதன்மேல், 5 உறுப்பினர்கள் கொண்ட குழாம், 17ஆந் திருத்தத்தின்மூலம் கொண்டுவரப்பட்ட திருத்தம் விளைவாந்தன்மையினவான திருத்தமாகக் கருதப்பட்டது, எனவும் பதினெட்டாம் திருத்தத்தின்மூலம் கொண்டுவரப்பட்ட திருத்தங்கூட இயற்கையில் விளைவாந்தன்மையினவாக இருந்தது எனவும் சட்டமா அதிபர் கூறியதை

---

[36] N. Selvakkumaran, 'Legislative Devolution and the Thirteenth Amendment' *13th Amendment: Essays on Practice* Lakshman Marasinghe and Jayampathy Wickramaratne (eds),Stamford Lake, Pannipitiya, 2010, (pp. 71-105) p. 88.

[37] [2004] 1 Sri L R 17, 30.

[38] Hansard, 07.09.2010.

நீதிமன்றம் கவனத்திலெடுத்தது. நீதிமன்றமானது உறுப்புரை 154 எ(2)ஐ கவனத்திற் கொள்ளவில்லை எனவும் தீர்ப்பளித்தது.

(அ) மாகாண சபை நிரல்

உறுப்புரை 154 எ(1) குறிப்பிடுவதாவது மாகாணசபை நிரலில் தரப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் ஒரு மாகாண சபை நியதிச் சட்டங்களை ஆக்கலாம் என ஏற்பாடு செய்கின்றது.

எவ்வாறாயினும், அத்தகைய சட்டவாக்கல் அதிகாரமானது புறநீங்கலானது அல்ல. மாகாண சபை நிரலிலுள்ள விடயங்கள்மீது ஆனால், சில குறிப்பிட்ட நிபந்தனைகளின்கீழ் பாராளுமன்றம் சட்டத்தை ஆக்கலாம். மாகாண சபை நிரலிலுள்ள விடயம்மீதான சட்டமூலம் வர்த்தமானியில் வெயிடப்பட்ட பின்னரும் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடப்பட முன்னரும் சமர்ப்பிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அச்சட்டமூலம் மீதான மாகாண சபையின் கருத்துரைகளைத் தெரிவிப்பதற்கென ஒவ்வொரு மாகாண சபைக்கும் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாகாண சபையும் சட்டமூலம் நிறைவேற்றுவதற்கு உடன்பட்டிருந்தால் இது ஒரு சாதாரண பெரும்பான்மையால் நிறைவேற்றப்படலாம். ஆனால், ஒன்று அல்லது பல மாகாண சபைகள் உடன்படாவிடின் சட்டமானது எல்லா மாகாண சபைகளுக்கும் (உடன்படாதவை உள்ளடங்கலாக) ஏற்புடையதாயிருப்பின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுகின்றது. சாதாரண பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டால் அவ்வுடன்பட்ட மாகாணங்களிற்கு மட்டுமே அந்தச் சட்டம் ஏற்புடையதாயிருக்கும்.[39]

2008ஆம் ஆண்டின் உள்ளூரதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம், மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்கப்படாது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. உயர் நீதிமன்றமானது[40] சட்டமூலத்தில் அடங்கியுள்ள சில விடயங்கள் மாகாண சபை நிரலின்கீழ் வந்ததெனவும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும் எனவும் தீர்ப்பளித்தது. சமர்ப்பிக்கப்பட்டதன்மேல் கிழக்கு மாகாணம் தவிர ஏனைய மாகாணங்கள் யாவும் சட்டமூலத்தை நிறைவேற்ற உடன்பட்டன. அச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை.

1987ஆம் ஆண்டுக்கு முன்னரான சட்டவாக்கம் பற்றிய மாகாணசபை நியதிச் சட்டம் ஒன்றின் பயன், உறுப்புரை 154 எ(8) என்பதில் தரப்பட்டிருக்கின்றது. மாகாணசபை நிரலிலுள்ள ஏதேனும் கருமம் தெடர்பிலான பாராளுமன்றச் சட்டம் 13வது திருத்தம் வலுவிற்கு வருகின்ற தேதியன்று வலுவிலிருந்து, அதாவது 1987ஆம் ஆண்டு நவம்பர் 17ஆந் தேதி

---

[39] Article 154G (3).

[40] JP 516.

வலுவிலிருந்து, அதே கருமம்மீது மாகாண சபை நியதிச் சட்டமொன்றை ஆக்கியிருப்பதாக அந்நியதிச்சட்டத்தின் விரிவுப் பெயரில் அது சட்டத்துடன் ஒவ்வாதனவாகவிருக்கின்றதென விதித்துரைக்கப்பட்டிருக்கின்றவிடத்து அப்போது அத்தகைய சட்டம் அந்நியதிச் சட்டம் வலுவிலிருக்கின்றனவரையில் இடைநிறுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அம்மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்தப்படாமலும் இருக்க வேண்டும்.

மாகாணசபை நிரலில் பட்டியலிடப்பட்டுள்ள விடயங்கள் மீதான 1987இற்கு முன்னருள்ள சில நூறு சட்டங்கள் தனியொரு சட்ட அலுவலரையும் நிபுணர்களின் சட்டக் கருத்தைக் கேட்பதற்கான சிறிய அளவிலான மூலவளங்களையும் வைத்துக் கொண்டு மாகாண சபை ஒன்றினால் நியதிச் சட்டங்களுடன் ஒவ்வாததாகவிருக்கின்றதான சகல சட்டங்களை இனங் காண்பது இலகுவானதல்ல. சில மாகாண சபைகள் விரிவுப் பெயருடன் ஒவ்வாதனவாகவிருக்கின்ற சட்டங்களை எடுத்துக் காட்டாமல் நியதிச் சட்டங்களை நிறைவேற்றுகின்றன. இதன் விளைவாக, அத்தகைய சட்டங்கள் மாகாண சபையில் தொடர்ந்தும் வலுவிலிருக்கின்றன.

ஏதேனும் நாட்டுடனான அல்லது நாடுகளுடனான ஏதேனும் பொருத்தனையை, உடன்படிக்கையை அல்லது சமவாயத்தை சர்வதேச மாநாடு ஒன்றில், கழகத்தில் அல்லது வேறு குழுவில் எடுக்கப்பட்ட எவையேனும் முடிபுகளைச் செயற்படுத்துவதற்கென மாகாண சபை நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பாக பாராளுமன்றம் சட்டத்தை ஆக்க விரும்புமிடத்து முன்பு கூறப்பட்ட நடைமுறையைப் பின்பற்றத் தேவையில்லை. அத்துடன் அத்தகைய சட்டமூலம் ஒன்றை மாகாண சபை சமர்ப்பிக்கத் தேவையில்லை.[41]

மாகாண சபைகள் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் கருமம் மீது சட்டம் ஆக்கும்படி மாகாணசபை ஒன்று தீர்மானத்தின்மூலம் பாராளுமன்றத்தை வேண்டுமிடத்து பாராளுமன்றமானது சாதாரண பெரும்பான்மை கொண்டு அவ்வாறு தேவைப்படுத்தப்பட்டதான அம்மாகாணங்களுக்கு மட்டுமே ஏற்புடையற்பாலனவான சட்டத்தை அக் கருமம் மீது ஆக்கலாம்.[42]

(ஆ) ஒருங்கியை நிரல்

மாகாண சபை அதேபோன்று பாராளுமன்றம் ஆகிய இரண்டும் ஒருங்கியை நிரலில் தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக சட்டவாக்கத் அதிகாரங்களைக் கொண்டுள்ளன.

பாராளுமன்றம் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறு ஒவ்வொரு மாகாண சபையுடனான அத்தகைய கலந்தாலோசனையின் பின்னர் அத்தகைய ஏதேனும் கருமம் தொடர்பில் சட்டங்களை ஆக்கலாம். மாகாண சபையானது

[41] Article 154G (11).
[42] Article 154G (4).

பாராளுமன்றத்துடனான கலந்தாலோசனையின் பின்னர் ஏதேனும் அத்தகைய விடயம் தொடர்பாக நியதிச் சட்டத்தை ஆக்கலாம். மாகாண சபையொன்றில் ஆக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இருப்பின் அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் அவ்வாறு ஒவ்வாதனவாகவிருக்குமளவிற்கு வறிதானவையாதலும் வேண்டும்.[43]

பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை இல. 46அ ஒருங்கியை நிரலிலுள்ள கருமம் ஒன்று தொடர்பில் ஒவ்வொரு சட்டமூலமும் ஒரு மாதத்தினுள் அல்லது அத்தகைய வேறு குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அதனுடைய கருத்துப்பற்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக ஒவ்வொரு மாகாண சபைக்கும் அனுப்பப்பட வேண்டும் என ஏற்பாடு செய்கின்றது. பிரேரிக்கப்பட்ட நியதிச் சட்டம் ஒன்று தொடர்பாக பாராளுமன்ற ஆலோசனையை நாடுகின்ற ஏதேனும் மாகாண சபையிடமிருந்து பெறப்பட்ட தகவல், தொடர்பு நிலையியல் குழு ஒன்றிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. குழுவின் அறிக்கையைக் கருத்திற்கெடுத்தபின்பு, பாராளுமன்றத்தின் கருத்துக்களைப் பெற்று ஒரு மாத காலத்தினுள் சம்பந்தப்பட்ட மாகாண சபைக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

ஒருங்கியை நிரலிலுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில் 1987இற்கு முன்னான சட்டம் ஒன்று இருந்துள்ளவிடத்து, அத்துடன் மாகாண சபையொன்று அச்சட்டத்துடன் ஒவ்வாதனவான அதே கருமம் மீது நியதிச் சட்டமொன்றை ஆக்குமிடத்து அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அந்நியதிச் சட்டம் வலுவில் இருக்கும்போது பாராளுமன்றம் தீர்மானத்தின்மூலம் முரணாகத் தீர்மானித்தாலொழிய, அச்சட்டம் வலுவில் இருக்கும் பட்சத்தில் அம் மாகாணத்தினுள் இடைநிறுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் நடைமுறைப்படுத்தப்படாமலும் இருக்க வேண்டும்.[44] ஒருங்கியை நிரலில் உள்ள கருமம் ஒன்று தொடர்பில் நியதிச் சட்டம் ஒன்றின் விடயத்தில், அந்நியதிச் சட்டம் விரிவுப்பெயரில் 1987இற்கு முன்னரான சட்டங்களை (அவை மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்தப்படாவிடின்) குறிப்பிடவேண்டிய தேவைப்பாடுகள் எதுவும் இருக்கவில்லை.

(இ) மாகாண சபைகள் சட்டவாக்கல் அதிகாரங்களை பிரயோகிக்காமல் இருக்கத் தீர்மானிக்கலாம்.

உறுப்புரை 154 S மாகாண சபையொன்று தீர்மானத்தின்மூலம், மாகாண சபை நிரலில் அல்லது ஒருங்கியை நிரலில் தரப்பட்ட அதன் ஏதேனும் கருமம் அல்லது பாகம் தொடர்பில் அதனுடைய சட்டவாக்கல் அதிகாரத்தைப் பிரயோகிக்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கின்றதென ஏற்பாடு செய்கின்றது.

---

[43] Article 154G (5).

[44] Article 154G (8).

அத்தகைய ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் அத்துடன் அத்தகைய தீர்மானத்தின் நியதிகள் தீர்மானத்தின்மூலம் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமிடத்து அத்தகைய மாகாண சபையின் சட்டமாக்கல் அதிகாரங்கள் தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்ட கருமத்திற்கு நீடிப்பதல்ல எனக் கருதப்படுதல் வேண்டும். பாராளுமன்றம் 154 S இல் குறிப்பிடப்பட்ட பின்னரும் நடவடிக்கை முறையைப் பின்பற்றாது சம்பந்தப்பட்ட மாகாணத்திற்கு ஏற்புடையதான கருமங்கள் தொடர்பில் சட்டங்களை ஆக்கலாம்.

விசேடமாக குறிப்பிடப்படாது இருப்பினும் மாகாண சபை ஒன்று தீர்மானம் காலக் கட்டுப்பாட்டை வைத்திருக்காவிடின் ஏதேனும் காலத்தில் அத்தகைய தீர்மானம் ஒன்றை இல்லாமலாக்குவதற்கு இயலச் செய்வித்தல் வேண்டும்.

(ஈ) ஏனையவை

பதின்மூன்றாவது திருத்தம் எந்த விடயம் தொடர்பில் மாகாணசபையொன்று நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கான அதிகாரமெதனையும் கொண்டிருக்கவில்லையோ அந்த விடயம் தொடர்பில் தரப்பட்ட ஒதுக்கிய நிரலொன்றைக் கொண்டுள்ளது.[45] அரசாங்கத்தின் ஒற்றையாட்சித் தன்மையைக் குறித்துக் காட்டுவதற்கு உறுப்புரை 154 எ(10) இலங்கை முழுவதற்கும் அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கும் ஏதேனும் கருமம் தொடர்பில் (மாகாண சபை பற்றிய அத்தியாயம் உட்பட) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க சட்டங்களை ஆக்குவதற்கு அரசியலமைப்பினால் பாராளுமன்றத்தின்மீது அளிக்கப்பட்ட அதிகாரங்களை இந்த உறுப்புரையில் உள்ளது எதுவும் மதிப்புக் குறைப்பதாக வாசிக்கப்படுதலோ அல்லது பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது என வெளிப்படுத்தப்படுகின்றது.

1.9 நியதிச்சட்டத்துக்கான சம்மதம்

உறுப்புரை 154ஏ ஆனது நியதிச்சட்டத்துக்கான சம்மதத்தைக் கையாளுகின்றது. நியதிச்சட்டமொன்று ஆளுநர் தனது சம்மதத்தை வழங்கியபோது நடைமுறைக்கு வருகின்றது.

நியதிச்சட்டமொன்று ஆளுநரின் சம்மதத்துக்கென அவருக்குச் சமர்ப்பிக்கப்படும்போது ஆளுநர் ஒன்றில் நியதிச் சட்டத்திற்கு சம்மதமளித்தல் வேண்டும். அல்லது நியதிச் சட்டம் சம்மதத்துக்கென அவருக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், இயலுமானவரை விரைவாக நியதிச் சட்டத்தை அல்லது அதன் ஏதேனும் ஏற்பாட்டை மீளச் சீர்தூக்கிப்

[45] Article 154G (7).

பார்க்கும்படி குறிப்பாக, செய்தியில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய திருத்தங்களை உட்புகுத்தும் சாத்தியத்தை சீர்தூக்கிப் பார்க்கும்படி சபையை வேண்டுவதான செய்தியுடன் சேர்த்து மாகாண சபைக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

நியதிச் சட்டமொன்று ஆளுநரினால் திருப்பியனுப்பப்படுகின்றவிடத்து, மாகாண சபையானது ஆளுநரின் செய்தியை கவனத்திற்கொண்டு நியதிச்சட்டத்தைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு கடமைப்பட்டுள்ளது. அத்துடன், திருத்தத்துடன் அல்லது திருத்தமின்றி அத்தகைய நியதிச் சட்டத்தை நிறைவேற்றலாம் என்பதுடன் அதனை ஆளுநரின் சம்மதத்திற்கென அவருக்குச் சமர்ப்பிக்கவும் செய்யலாம்.

இரண்டாவது தடவையாக ஆளுநருக்கு நியதிச் சட்டமொன்றை சமர்ப்பிப்பதன்மேல் ஆளுநர் நியதிச் சட்டத்திற்கு சம்மதமளிக்கலாம் அல்லது அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாக இல்லையெனத் தீர்மானிக்கப்படுவதற்காக இரண்டாவது தடவையாக நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து ஒரு மாத காலத்தினுள் ஜனாதிபதியினால் உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கென அதனை ஒதுக்கலாம். நியதிச் சட்டம் அரசியலமைப்புடன் ஒத்துப்போகின்றதென உயர் நீதிமன்றம் தீர்மானிக்கின்றவிடத்து, ஆளுநர் நியதிச் சட்டத்திற்கு சம்மதமளித்தல் வேண்டும். நியதிச் சட்டம் அரசியலமைப்புடன் ஒவ்வாதனவாக இருக்கின்றதென நீதிமன்றம் தீர்மானிக்கின்றவிடத்து, ஆளுநர் நியதிச் சட்டத்திற்கான சம்மதத்தை நிறுத்திவைத்தல் வேண்டும்.

ஆகையால், ஆளுநர் நியதிச் சட்டமொன்றை அல்லது அதன் ஏற்பாட்டை சீர்தூக்கிப் பார்க்கும்படி மாகாண சபையைக் கேட்கும்போது, ஆளுநர் உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதிக்கு நியதிச் சட்டத்தை சமர்ப்பிப்பதற்கு தீர்மானித்திருந்தாலொழிய ஆளுநர் இரண்டாவது தடவையாக அவருக்குச் சமர்ப்பிக்கப்படுவதன்மேல் அதற்கு சம்மதமளித்தல் வேண்டும். நியதிச் சட்டம் அரசியலமைப்புடன் ஒவ்வாதனவாக இல்லாதிருக்கின்றதென உயர் நீதிமன்றம் தீர்மானிக்கின்றவிடத்து ஆளுநர் அதற்கு அவசியமாக சம்மதித்தல் வேண்டும்.

நடைமுறையில் இந்த ஏற்பாடுகள் எவ்வாறு செயற்பட்டன என்பதற்கான இரு நிகழ்வுகளை இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். சுவாரஸ்யமாக இரண்டும் கிழக்கு மாகாணத்திலேயே நடைபெற்றுள்ளன.

நிதி நியதிச்சட்டம் 18.11.2008இல் நிறைவேற்றப்பட்டதுடன் 25.11.2008இல் ஆளுநரின் சம்மதத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது. 13.12.2008இல் ஆளுநர் இதனையே ஜனாதிபதிக்கு சமர்ப்பித்தார். நியதிச் சட்டமானது சட்டமா அதிபருக்கு அவரின் கருத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளரினால் ஆளுநருக்கு 24.12.2008 என தேதியிடப்பட்ட கடிதத்தினால் அறிவிக்கப்பட்டது. 13.12.2009இல் நியதிச் சட்டத்தை சம்மதிப்பதில்

உள்நோக்கத்துடனான தாமதம் இருப்பதாகவும் பதில் வேண்டியும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டு இருப்பததாகக் குறிப்பிட்டு ஆளுநர் ஜனாதிபதிக்கு எழுதினார். நியதிச்சட்டமானது உயர் நீதிமன்றத்திற்கு ஒருபோதும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 05.03.2009இல் ஆளுநர் தனது சம்மதத்தை வழங்கினார்.

கிழக்கு மாகாண சபையின் தகவல்களின்படி, சம்மதம் வழங்கப்படுமா என்னும் நிச்சயமற்ற தன்மை இருந்ததால், வருவாய்த் திணைக்களம் முடிவுறாத சம்மதத்தினால் ஒழுங்கமைக்கப்படவில்லை. திணைக்களம் அமைக்கப்படுவதற்கு ஆளுநர் அனுமதி வழங்கியிருந்தபோதும் மத்திய அரசாங்கத்தின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆட்சேர்ப்பிற்கு அனுமதிக்காததுடன் மாற்றுச் சேவைக்கு விட்டுவிடப்பட்ட பணியாட்டொகுதியினரை உபயோகிக்குமாறு ஆலோசனை கூறியது. இறுதியாக சம்மதித்த பின்புதான் மாற்றுச்சேவைக்கு விட்டுவிடப்பட்ட பணியாட்டொகுதியுடன் வருவாய்த் திணைக்களம் அமைக்கப்பட்டதுடன் நியதிச் சட்டம் 2009 யூன் இல்தான் செயற்பாட்டிற்கு வந்தது. இடைக்காலப் பகுதியில் சேகரிக்கப்பட்டிருக்கக்கூடியதான வருமானம் முழுவதும் இழக்கப்பட்டது.

இரண்டாவது விடயம் முதல் அமைச்சரின் நிதி நியதிச் சட்டமாகும். இந்நியதிச் சட்டம் 1.02.2009இல் நிறைவேற்றப்பட்டதுடன் ஆளுநரின் சம்மதத்திற்காக 18.02.2009இல் சமர்ப்பிக்கப்பட்டது. 11.03.2009இல் ஆளுநரினால் சில ஏற்பாடுகள் சீர்தூக்கிப் பார்ப்பதற்காக நியதிச் சட்டமானது திருப்பியனுப்பப்பட்டது. அது சில திருத்தங்களுடன் இரண்டாவது தடவையாக 23.06.2009இல் நிறைவேற்றப்பட்டதுடன் மீண்டும் 24.06.2009இல் சமர்ப்பிக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய தேவைப்பாட்டுடன் இது ஆளுநரினால் ஜனாதிபதிக்கு 03.07.2009இல் சமர்ப்பிப்பதற்காக அனுப்பப்பட்டது. இதைப்பற்றி மேலதிக தகவலில்லாததால் முதல் அமைச்சர் நினைவூட்டல் ஒன்றை ஆளுநருக்கு 21.10.2010இல் அனுப்பினார். அதன்பின்பு சபையோ அல்லது முதல் அமைச்சரோ நியதிச்சட்டத்தின் நிலை பற்றி எந்த அறிவிப்பையும் பெறவில்லை. தற்செயலாக முன்னைய வடகிழக்கு மாகாண சபை ஒரு முதல் அமைச்சரின் நிதி நியதிச் சட்டத்தை அது கலைக்கப்படும்போது கொண்டிருந்தது.

1.10 இடையீட்டுக்கான மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள்

மாகாண சபையில் தலையிடுவதற்கு மத்திய அரசாங்கம் அனுமதிக்கும் பல ஏற்பாடுகளை பதின்மூன்றாவது திருத்தம் கொண்டிருந்தது. அரசின் ஒற்றையாட்சித் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

(i) பொதுமக்கள் பாதுகாப்பு

உறுப்புரை 154 ஒ(1)ஆனது பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழான பிரகடனம் ஒன்றினால் அவசரகால நிலைமை ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டதன்மேல் ஆளுநரினால் பிரயோகிக்கப்படற்பாலதான நிறைவேற்று அதிகாரம் எந்த முறையில் பிரயோகிக்கப்படவேண்டுமோ அந்த முறை பற்றி எவரேனும் ஆளுநருக்கு பணிப்புக்களை வழங்குவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமளிக்கின்றது. அத்தகைய பணிப்பு, அத்தகைய பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்கள் தொடர்பில் இருத்தல் வேண்டும். அத்தகைய ஒரு பிரகடனம் இலங்கையின் ஏதேனும் பாகத்தில் மட்டும் நடைமுறையில் இருக்கின்றவிடத்து ஜனாதிபதி, பிரகடனம் நடைமுறையில் இல்லாத வேறு ஏதேனும் மாகாணத்துக்கு அத்தியாவசிய வழங்கல்களினதும் சேவைகளினதும் பேணலை அல்லது இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பணிப்புக்களை வழங்கலாம்.

(ii) பணிப்புகளுக்கு இணங்கியொழுகத் தவறுகை

ஆளுநர் அல்லது ஏதேனும் மாகாண சபை, மாகாண சபைகள் தொடர்பான அத்தியாயத்தின்கீழ் அத்தகைய ஆளுநருக்கு அல்லது அத்தகைய சபைக்கு வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கியொழுக அல்லது அவற்றை செயலாற்றத் தவறியுள்ளவிடத்து, மாகாணத்தின் நிர்வாகத்தை அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க, கொண்டு நடாத்த முடியாத நிலைமையொன்று எழுந்துள்ளது என ஜனாதிபதி அபிப்பிராயம் கொள்ளுதல் அவருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.[46]

(iii) நிர்வாக ஒழுங்குமுறைத் தவறுகை

ஆளுநரிடமிருந்து அறிக்கையொன்று கிடைக்கப்பெற்றதன் மேல், அல்லது வேறுவகையாக மாகாணத்தின் நிர்வாகத்தினை அரசியலமைப்பிற்கு இணங்க கொண்டு நடாத்த முடியாத நிலைமையொன்று எழுந்துள்ளது என ஜனாதிபதி கருதுகின்றபோது, இடையீட்டுக்கான மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் பரந்தளவில் காணப்படுகின்றன. இயைபான ஏற்பாடுகள் உறுப்புரை 154 L வில் காணப்படுகின்றது. அதற்கிணங்க ஜனாதிபதி பிரகடனம் மூலம் மாகாணத்தின் நிர்வாகத்தினது எல்லாப் பணிகளையும் அல்லது அவற்றுள் எதனையும் அத்துடன் ஆளுநருக்கு அல்லது மாகாணசபை தவிர்ந்த மாகாணத்திலுள்ள ஏதேனும் குழுவுக்கு அல்லது அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது ஆளுநரினால் குழுவினால் அல்லது அதிகாரசபையினால் பிரயோகிக்கப்படக்கூடியதான எல்லாத் அதிகாரங்களையும்

---

[46] Article 154K.

அல்லது அவற்றுள் எதனையும் தாமே ஏற்றுக்கொள்ளலாம். மாகாண சபையின் தத்துவங்கள், பாராளுமன்றத்தின் அதிகாரத்தினால் அல்லது அதிகாரத்தின்கீழ் பிரயோகிக்கப்படக்கூடியனவாக இருத்தல் வேண்டும் எனவும் அவர் வெளிப்படுத்தலாம். ஏதேனும் அத்தகைய பிரகடனம், கருத்துப் பின்னரான பிரகடனம் என்பதின்மூலம் இல்லாதொழிக்கப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

பாராளுமன்ற அங்கீகாரம் அத்தகைய ஒரு பிரகடனத்திற்கு தேவைப்படுத்தப்படுகின்றது. அத்தகைய ஒவ்வொரு பிரகடனமும் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். அது முன்னைய பிரகடனம் ஒன்றை ஒழிக்கும் பிரகடனம் ஒன்றாக இருக்குமிடத்து தவிர, பதினான்கு நாட்கள் முடிவடைந்தவுடன் அது முன்னரே பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய நடைமுறைப்படுத்தப் படாதிருக்க வேண்டும். அத்தகைய பிரகடனம் பாராளுமன்றம் கலைக்கப்படும் நேரத்தில் வழங்கப்பட்டிருந்தால் அல்லது குறிப்பீடு செய்யப்பட்ட பதின்நான்கு நாட்காலப்பகுதியின்போது, பாராளுமன்றக் கலைப்பு இடம்பெற்று, ஆனால் அத்தகைய பிரகடனம் தொடர்பான தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்பட்டிராவிடின், அந்தப் பிரகடனம் தொடர்ந்து செயற்படும். அது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து பதின்நான்கு நாட்களினுள் புதிய பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

அவ்வாறு அங்கீகரிகப்பட்ட பிரகடனம் ஒன்று முன்னமே ஒழிக்கப்பட்டாலொழிய இரண்டு மாத காலப்பகுதியொன்றுக்கு செயற்படுதல் வேண்டும். பாராளுமன்றமானது அத்தகைய பிரகடனத்தன்று அந்நேரத்தில் இரண்டு மாதங்களுக்குத் தொடர்ந்து வலுவில் இருப்பதை அங்கீகரிக்கலாம். ஆனால் அத்தகைய பிரகடனம் எதுவும் எவ்விடயத்திலும் ஓராண்டுக்கு மேல் வலுவில் இருத்தல் ஆகாது. பாராளுமன்றம் அத்தகைய ஏதேனும் இரண்டு மாத காலப்பகுதியின்போது கலைக்கப்பட்டு, ஆனால் அத்தகைய பிரகடனம் தொடர்ந்து வலுவில் இருப்பது தொடர்பான தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படாதிருப்பின், அந்தப் பிரகடனம் தொடர்ந்து செயற்படும். புதிய பாராளுமன்றம், அதனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து பதின்நான்கு நாட்களினுள் அதனது தொடர்ந்திருத்தலை அங்கீகரித்தல் வேண்டும்.

பிரகடனம் ஒன்றை ஆக்கியதிலிருந்து பதின்நான்கு நாட்களினுள். ஜனாதிபதி பிரகடனம் ஒன்றை ஆக்குவதற்கு இட்டுச்சென்றதான ஏதேனும் கருமங்கள் தொடர்பில் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ளும் நோக்கத்திற்காக ஒய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியொருவரை அறுபது நாட்காலப்பகுதிக்குள் அத்தகைய கருமங்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கையிடுவதற்கென நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட நீதிபதியொருவர், விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளர் ஒருவருக்குள்ள அதிகாரங்களைக் கொண்டுள்ளார். அத்தகைய நீதிபதியின் அறிக்கை கிடைக்கப்

பெற்றதன்மேல், ஜனாதிபதி பிரகடனத்தை ஒழிக்கலாம். அத்தகைய நியமனம் ஒன்று மாகாண சபை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் என்போருக்கு கருமங்கள்மீது கேள்வி கேட்பதற்கும் சுதந்திரமான விசாரணை ஒன்றை நடாத்துவதற்குமான பிரதிநிதித்துவங்களைச் செய்வதற்குமான சந்தர்ப்பம் ஒன்றைக் கொடுக்கின்றது.

மாகாண சபையொன்றின் தத்துவங்கள் பாராளுமன்ற அதிகாரத்தினால் அல்லது அதிகாரத்தின்கீழ் பிரயோகிக்கப்படக்கூடியதென வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றவிடத்து நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு மாகாண சபைக்குள்ள அதிகாரத்தை ஜனாதிபதிக்கு அளிப்பதற்கும், அவ்வாறு அளிக்கப்பட்ட அதிகாரத்தை, ஜனாதிபதி விதிக்கத்தக்கவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக, வேறு எவரேனும் அதிகாரிக்குக் கையளிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமளிப்பதற்கும் பாராளுமன்றம் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும். பாராளுமன்றம் அமர்வில் இல்லாதிருக்கும்போது, மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்தான செலவினத்திற்கு பாராளுமன்ற அனுமதி கிடைப்பதனைப் பொறுத்து அத்தகைய செலவினத்திற்கு அதிகாரமளிப்பதற்கு ஜனாதிபதி தகுதி வாய்ந்தவராதல் வேண்டும். பாராளுமன்றத்தினால் அல்லது ஜனாதிபதியினால் அல்லது வேறு அதிகாரியினால் ஆக்கப்படும் நியதிச் சட்டம் ஒன்று, பிரகடனம் ஒன்று தொடர்ந்து வலுவிலிருக்கும்போது மாகாணசபையினால் திருத்தப்படுகின்ற வரையில் அல்லது நீக்கப்படுகின்ற வரையில் தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும்.[47]

(iv) நிதிசார் உறுதிச் சமநிலையின்மை

இலங்கையில் அல்லது அதன் ஆள்புலத்தின் ஏதேனும் பகுதியின் நிதிகள், உறுதிச் சமநிலையை அல்லது பணநிலையை அச்சுறுத்தப்படுகின்றபோது ஆளுநர் ஒருவருக்கு ஜனாதிபதி பணிப்புகளை விடுப்பதனை இயலச் செய்வதற்கான ஏற்பாடு உறுப்புரை 154 N வில் காணப்படுகின்றது என்பதுடன் இவ்வறிக்கையில் உள்ள எல்லா இடங்களிலும் கையாளப்படுகின்றது.

1.11 நிதி ஆணைக்குழு

உறுப்புரை 154 R நிதி ஆணைக்குழுவொன்றைத் தாபிக்கின்றது. அதனது பிரதான கடமையானது, மாகாணங்களின் பயன்பாட்டுக்காக அரசாங்கத்தினால் ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதி எந்தக் கோட்பாடுகள்மீது வேறுபட்ட மாகாணங்களுக்கு இடையே பிரித்தொதுக்கப்படவேண்டுமோ அந்தக் கோட்பாடுகள் பற்றி பரிந்துரைகளைச் செய்வதாகும்.

---

[47] Article 154M.

1.12 மாகாண சபைகளின் பணிகள், தத்துவங்கள் தேர்தல் முதலியன

மாகாண சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், உறுப்புரிமைக்கான தகைமைகள், மாகாண சபைகளின் அலுவல்களைக் கொண்டு நடாத்தல் நடவடிக்கை முறை, சம்பளங்கள் மற்றும் உறுப்பினர்களின் படிகள் என்பன பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தின்மூலம் ஏற்பாடு செய்தல் வேண்டும். பாராளுமன்றம் அத்தியாயம் XXVIIஅ கோட்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்திற்கு அவசியமான வேறு ஏதேனும் கருமங்களுக்காகவும், சொல்லப்பட்ட அத்தியாயத்தின் ஏற்பாடுகளுடன் தொடர்புபட்ட அல்லது இடைநேர்விளைவான ஏதேனும் கருமங்களுக்காகவும் கூட சட்டத்தை ஆக்கலாம்.[48]

அதற்கிணங்க மாகாண சபைகள் சட்டம், 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் மற்றும் 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டம் என்பன போன்ற அத்தகைய சட்டங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

1.13 மாகாண சபைகள் சட்டம்

1990ஆம் ஆண்டின் 27ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1990ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரதான இயல்புகளுக்குக் குறிப்பீடு செய்யப்படலாம்.

சட்டத்தின் பாகம் I மாகாண சபைகளின் உறுப்புரிமை, பாகம் II மாகாண சபைகளின் கூட்டங்களும் அதன் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல், பாகம் III நிதி, பாகம் IV மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு பற்றி எடுத்துக் கூறுகின்றது. நிதி தொடர்பான ஏற்பாடுகள் இவ் அறிக்கையின் வேறொரு இடத்தில் கையாளப்படுகின்றது.

ஒவ்வொரு மாகாணத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது மாகாணத்தின் பரப்பினையும் மற்றும் சனத்தொகையையும் கருத்திற்கொண்டு ஜனாதிபதியினால் தீர்மானிக்கப்படுவதாகும். உறுப்புரிமைக்கான தகைமையீனங்களுள் ஒன்று பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக இருத்தலாகும். ஆகவே பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மாகாண சபைத் தேர்தலில் வேட்பாளர் ஒருவராக இருப்பதற்காக பாராளுமன்றத்தின் தனது ஆசனத்தை விட்டுவிலக வேண்டும்.

மாகாண சபையானது தவிசாளர் ஒருவரையும் பிரதித் தவிசாளர் ஒருவரையும் கொண்டுள்ளது. தவிசாளர் ஆனவர் கலைப்பு எது எவ்வாறிருப்பினும், புதிய சபையின் முதலாவது கூட்டம்வரை பதவியில்

---

[48] Article 154Q.

தொடர்ந்திருப்பார். உறுப்பினர் ஒருவர் சபையில் பேச்சுச் சுதந்திரம் உடையவர். அத்துடன் உறுப்பினர் எவரும் சபையில் அல்லது ஏதேனும் குழுவில் அவரால் கூறப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் அல்லது அவரால் கொடுக்கப்பட்ட ஏதேனும் வாக்குத் தொடர்பிலும் நீதிமன்றத்தில் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாதல் ஆகாது. அத்தகைய சபையின் அதிகாரத்தினால் அல்லது அதிகாரத்தின்கீழ் வெளியிடப்பட்ட ஏதேனும் அறிக்கை, பத்திரம், எவையேனும் வாக்குகள் அல்லது நடவடிக்கைகள் தொடர்பில் ஆளெவரும் பொறுப்பாதலாகாது. ஜனாதிபதியின், ஆளுநரின், நீதித்துறை அலுவலர் ஒருவரின் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் நடத்தை தொடர்பில் ஒரு மாகாண சபையில் கலந்தாராய்வு எதுவும் நடைபெறுதலாகாது. இது ஆளுநரை அகற்றுவதற்கான ஆலோசனையைச் செய்து ஜனாதிபதிக்கு உரையொன்றை சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் பற்றிய விவாதம் ஒன்றிற்கு ஏற்புடையதாகாது.

சமூகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு எல்லா வினாக்களும் தீர்மானிக்கப்படுகின்றன. தவிசாளர் அல்லது அத்தகையவராகச் செயலாற்றுகின்ற ஆள் முதல் தடவையில் வாக்களித்தல் ஆகாது. ஆனால் வாக்குகள் சமமாகவுள்ள விடயத்தில் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்ட நடப்பெண் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலொன்றாதல் வேண்டும்.

மாகாண சபை அதன் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கும் அதன் அலுவல்களை நடாத்துவதற்கும் விதிகளை ஆக்கலாம். எவ்வாறாயினும் ஜனாதிபதியின் அங்கீகாரமானது, நிதிசார் அலுவல்களை நேரகாலத்தோடு பூர்த்தி செய்வதனை உறுதிப்படுத்துவதற்கும், ஏதேனும் நிதிசார் கருமம் தொடர்பாக அல்லது மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து பணங்களை ஒதுக்கீடு செய்வதற்கான ஏதேனும் நியதிச் சட்டம் தொடர்பாக மாகாண சபையின் நடவடிக்கை முறையையும் அதில் அலுவல்கள் நடாத்துவதனையும் ஒழுங்குபடுத்துவதற்கும், ஆளுநர் தமது தற்றுணிபில் செயலாற்றுவதற்கு அரசியலமைப்பினால் அல்லது மாகாண சபைச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் அளவுக்கு அவரின் பணிகளை நிறைவேற்றுதலைப் பாதிக்கும் ஏதேனும் கருமத்தைப் பற்றி கலந்தாராய்வதை அல்லது அதுபற்றிக் கேள்விகள் கேட்பதைத் தடைசெய்வதற்கும் ஜனாதிபதியின் அங்கீகாரம் தேவைப்படுத்தப்படுகின்றது.

மாகாண சபை ஒன்றிலான எவையேனும் நடவடிக்கைகளின் செல்லுபடியாந்தன்மை சார்த்தப்படும் நடவடிக்கை முறையிலான ஒழுங்கீனம் என்ற ஏதுவின்மீது கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது. மாகாண சபையொன்றில் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கு அலுவல்களை நடாத்துவதற்கு அல்லது ஒழுங்கைப் பேணுவதற்கு இச்சட்டத்தினால் தத்துவங்கள் உரித்தாக்கப்பட்டுள்ள அத்தகைய சபையின் அலுவலர் அல்லது உறுப்பினர் ஒருவரும் அத்தத்துவங்களை அவர் பிரயோகித்தல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு அமைந்தவராதல் ஆகாது.

மாகாண சபை ஒன்றினால் முடிவுறாதிருக்கும் நியதிச்சட்டமொன்று அத்தகைய சபை அமர்வு நிறுத்தப்பட்டமை காரணமாக காலம் கழிந்து போகாதபோது அதன் கலைப்பின்மீது காலம் கழிந்துபோகும்.

ஆளுநரின் எல்லா நிர்வாகத்துறை நடவடிக்கைகளும், அவை அவரது அமைச்சர்களின் ஆலோசனையின்மீது எடுக்கப்படினும் அல்லது வேறுவகையாகவாயினும், ஜனாதிபதியின் பெயரில் எடுக்கப்படுவதென எடுத்துக் கூறப்படுதல் வேண்டும். ஜனாதிபதியின் பெயரில் செய்து நிறைவேற்றப்படும் கட்டளைகளும் ஏனைய சாதனங்களும், ஆளுநரினால் ஆக்கப்படவேண்டிய விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மெய்யென்று உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்ட கட்டளை அல்லது சாதனம் ஒன்றின் செல்லுபடியாகுந்தன்மை அது ஜனாதிபதியினால் செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஒரு கட்டளை அல்லது சாதனம் அல்லவென்ற ஏதுவின்மீது கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

மாகாண ஆளுநரின் நிர்வாகத்துறைத் அதிகாரத்தைப் பிரயோகிக்கையில் செய்துகொள்ளப்படும் எல்லா ஒப்பந்தங்களும், அம்மாகாணத்துக்கென அமைக்கப்பட்ட மாகாண சபையின் பெயரில், அத்தகைய மாகாண சபை கூட்டிணைக்கப்பட்டவொரு குழு என்றாற்போன்று செய்துகொள்ளப்படுதலும் புரியப்படுதலும் வேண்டும். அத்தகைய நிர்வாகத்துறை அதிகாரத்தின் பிரயோகம் தொடர்பான எல்லா வழக்குகளும் அத்தகைய மாகாண சபை கூட்டிணைக்கப்பட்டவொரு குழு என்றாற்போன்று அத்தகைய மாகாண சபையினால் அல்லது அதற்கெதிராகக் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு மாகாணத்தின் பிரதான செயலாளர் முதல் அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றார்.

மாகாண பகிரங்க சேவையின் அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன மாகாண ஆளுநருக்கு உரித்தாக்கப்படுகின்றது. அவர் தன்னுடைய தத்துவங்களை மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு கையளிக்கலாம். ஆணைக்குழுவானது ஆளுநரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைய பிரதான செயலாளருக்கான அல்லது மாகாண பகிரங்க சேவையின் எவரேனும் அலுவலருக்கு அதனுடைய அதிகாரங்களைக் கையளிக்கலாம்.

அத்தியாயம் - 2

அதிகாரப் பகிர்வின் அரசியல்

ஏ.எம். நவரத்ன பண்டார

1. அறிமுகம்

மாகாண சபைகள் எனும் கருத்து இலங்கைக்கு புதியதொரு தோற்றப்பாடன்று. 1928 டொனமூர் ஆணைக்குழுவே முதலில் துணைத் தேசிய அரசாங்கம் என்ற வகையில் "மாகாண சபைகள்" கருத்தினை அறிமுகம் செய்தது. இலங்கையில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் இறுதிக்கட்டத்தில், டொனமூர் ஆணைக்குழு வரையறுக்கப்பட்ட சுயாட்சி மற்றும் சர்வசன வாக்குரிமை வழங்குவதை சிபாரிசு செய்தமை மாகாண மட்டத்தில் இரண்டாம் நிலை அரசாங்கத்தைக் கொண்டிருக்கும் கருத்தை அடையாளப்படுத்தியது. இரண்டாம் நிலை அரசாங்கம் ஒன்றிணைந்த பிராந்திய அபிவிருத்திக்கு வழிசமைப்பதுடன் ஆட்சிச் செயன் முறையில் பிராந்திய இனக்குழுக்கள் பங்கேற்கச் செய்யும் என்ற கருத்தை அது கொண்டிருந்தது.[1] அரசாங்க சபை 1940 இல் அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவை (இவர் இரண்டாம் நிலை அரசாங்கத்திற்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் மற்றும் பணிகள் தொடர்பில் விரிவான அறிக்கையை சமர்ப்பித்திருந்தார்) இரண்டாம் நிலை அரசாங்கத்தை ஏற்படுத்தத் தேவையான சட்டமூலத்தை அறிமுகஞ் செய்யுமாறு வேண்டித் தீர்மானமொன்றை நிறைவேற்றியது. இருப்பினும், அரசாங்க சபை அதிகாரப் பகிர்வின் ஆட்புலப் பிரதேச அலகாக மாகாணத்தை ஏற்றுக் கொள்வதற்குச் சார்பாக இருக்கவில்லை. பதிலாக அவர்கள் மாகாணத்தின் ஒரு உப பிரிவு என்றவகையில் மாவட்டங்களை விரும்பினர். அரசாங்க சபை உள்ளூர்த் தேவைகளை நெருங்குவதில் சிறிய ஆட்புலப் பிரதேச அலகு அதிகம் பயன்மிக்கதாகவிருக்கும் எனும் அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தது. அரசாங்க சபை நீண்ட வாதப் பிரதிவாதத்திற்கு பின்னர் "மாவட்ட சபைகளை" உருவாக்கும் சட்டமூலத்தைக் கொண்டுவருமாறு உள்ளூராட்சி அமைச்சரைக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றியது.[2] 1947 ஆம் ஆண்டு முதலாவது மந்திரி சபைக்கு அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா நகல் பிரேரணையை சமர்ப்பித்திருந்தாலுங்கூட, மந்திரி சபையின் ஏனைய

---

[1] See the *Report of the Donoughmore Commission*, Ceylon Government Press, Colombo, 1962, p.162

[2] See State Council, *Hansard*, 10 July 1940, Cols.1356-1362.

உறுப்பினர்களுக்கு அது ஒரு முன்னுரிமைக்குரிய விடயமாக இருக்கவில்லை "...ஆதலால் புறந்தள்ளப்பட்டது".[3]

சிறிய ஆட்புலப் பிரதேச அலகு எனும் கருத்து சுதந்திரத்திற்குப் பிந்திய பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு யோசனைகளின் பிரத்தியட்சமிகு பண்பாக மாறியது.[4] 1957இல் (பிராந்திய சபைகள்) 1967 (மாவட்ட சபைகள்) மற்றும் 1980 (மாவட்ட அபிவிருத்தி சபைகள்). 1957இல் வட மாகாணத்திற்கு ஒரு பிராந்திய சபையும் கிழக்கு மாகாணத்துடன் இணைந்திருக்கும் தமிழ் பெரும்பான்மை பிரதேசங்களை வட மாகாணத்துடன் இணைப்பதாக வாக்குறுதி அளித்து தமிழரசுக் கட்சியுடன் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா உடன்படிக்கையில் கைச்சாத்திட்டபோது, அது தெற்கில் சர்ச்சையை உண்டு பண்ணியது. பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள பௌத்த அமைப்புகளுடன் சேர்ந்து "சிங்களவர்களுக்கு இழைத்த துரோகம்" எனக் கூறிப் பாரிய எதிர்ப்புப் பிரசாரத்தை மேற்கொண்டது.[5] தமிழரசுக் கட்சி "இடைக்கால விட்டுக் கொடுப்பு" என அதனை அழைத்து, பிராந்திய சபையை ஏற்றுக் கொள்ள அதன் சிறப்புக் கட்சி மாநாட்டில் தீர்மானமொன்றை நிறைவேற்றினாலும்கூட, எதிர்க் கட்சி நகல் சட்டமூலத்தை ஒட்டுமொத்தமாகக் கைவிடச் செய்ய பிரதமரை நிர்ப்பந்தித்தது.[6]

1957 இற்குப் பின்னர், அதிகாரப் பகிர்வின் அலகாக மாவட்டத்தை இனங்காணல் அரசாங்கங்களின் உள்நோக்கங் கொண்ட செயற்பாடாக மாறியது. ஆளும் தலைமைத்துவம் 1967இல் மாவட்ட சபைகளுக்கூடாக பிராந்திய அதிகாரப் பகிர்வினை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டது. அத்துடன் 1980இல் மாவட்ட அபிவிருத்தி சபைகளை ஏற்படுத்தும் சட்டவாக்க நடவடிக்கைகளையும் எடுத்தது. இவ்விரு சந்தர்ப்பங்களிலும் மாவட்டமே அதிகாரப் பகிர்வின் ஆட்புலப் பிரதேச அலகாக ,அரசாங்கங்களினால் ஏற்கப்பட்டது. இம் முன்மொழிவுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இலங்கைத் தமிழர்களின் பாரம்பரியத் தாயகம் எனும் தமிழ்த் தேசியவாத கோரிக்கைக்கு அரசியல் மற்றும் நிர்வாகப் புறவமைப்பினை மாகாணம் வழங்கும் எனும் சிங்கள தேசியத்துவ வாதத்துடன் உடன்படுவதாகவிருந்தன.

13ஆம் திருத்தம் மாகாணத்தை அதிகாரப் பகிர்வின் அலகாக ஏற்றுக் கொண்டு அதன் ஆரம்ப ஆட்புலப் பிரதேச அலகுக்கு மீண்டும் சென்றது. மாவட்டத்திலிருந்து மாகாணமாக ஆட்புலப் பிரதேச அலகு முன்னேறியமை 1983 - 87 காலப் பகுதியில் இடம்பெற்றது. ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின்

---

[3] According to C. Sundaralingam, a former member of the 1947 Cabinet, "...the draft bill was side tracked." See the debate on the Bandaranaike-Chelvanaykam Pact, Hansard, 08 November 1957, Col.1267.

[4] For the history of devolution debate until 1967, see *Proposal For The Establishment of District Councils Under the Direction and Control of the Central Government*, Ceylon Government Press, Colombo 1968.

[5] *Ceylon Daily News*, 27 July, 1957, Communiqué issued by the United National Party.

[6] Wilson, A.J., 'The Tamil Federal Party in Ceylon Politics', *Journal of Commonwealth Political Studies*, Vol.4, Nu.2, 1966, (pp.117-137), p.128.

அரசாங்கம் இலங்கைத் தமிழர்களின் தலைவர்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான முரண்பாட்டில் தன்னையொரு மத்தியஸ்தராக ஆக்கிக் கொண்ட இந்தியாவிடமிருந்து வந்த பாரிய அழுத்தத்தின் பின்னர், மாகாணம் மற்றும் இரு மாகாணங்களின் இணைப்பு ஆகிய இரண்டை ஏற்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டது.[7] இலங்கை முரண்பாட்டில் இந்தியா வெறுமனே ஒரு மத்தியஸ்தராக மட்டுமன்றி, இலங்கையுடன் ராணுவ மோதலில் ஈடுபட்டிருந்த தமிழ் தீவிரவாதக் குழுக்களை (உண்மையில் இது இந்தியா சார்பாக இடம்பெற்ற நிழல் யுத்தம்) உருவாக்கியவர் என்ற வகையிலும் இந்தியா அதற்குள் உள் நுழைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.[8]

உண்மையில் 13ஆம் திருத்தம் பிராந்தியப் பாதுகாப்பு முகாமையாளர் பாத்திரத்தை இந்தியா வகிக்க வந்த ஒரு புவிசார் அரசியல் சூழலின் விளைவாகும். இலங்கையின் உள்நாட்டுக் காரணிகளன்றி, இலங்கையின் மிகப்பெரிய அயல் நாடான இந்தியாவின் தேசிய நலன் இலங்கை அரசியலமைப்பின் ஒரு பகுதியாக மாறிய மாகாண சபை எனும் கருத்தினை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றியது. இவ்வெழுத்தாளர், ஏனைய இடங்களிலும் இலங்கைத் தமிழ் அரசியல் இயக்கம் பிரிந்து செல்லல் அல்லது அடக்குதலுக்கு உட்படுதல் இந்தியாவிற்கு ஏற்புடையதன்று: மாறாக இலங்கை முரண்பாட்டிற்கு சமரச தீர்வு காண்பதே இந்தியக் கொள்கை வகுப்பாளர்களின் விருப்பத்திற்குரிய தேர்வாகவிருந்தது என வாதிட்டுள்ளார்.[9] இது இன்று இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் கொள்கையில் பலமான அம்சமாக மாறியுள்ளது. இன்றுங்கூட, இந்தியக் கொள்கை வகுப்பாளர்களைப் பொறுத்தவரை 2009இல் போரின் முடிவு ஒட்டுமொத்த விடுதலைப்புலிகள் இயக்கத் தலைமைத்துவத்தை அகற்றினாலும், 13ஆம் திருத்தத்தைப் பலப்படுத்துவதன்மூலமே இன முரண்பாட்டிலிருந்து விடுபட முடியும் எனக் கருதுகின்றனர். மறுபுறம், இன்றும் பல்வேறு வடிவங்களில் தொடரும் உள்நாட்டு அரசியலைத் தந்திரமாகக் கையாளும் இந்தியாவின் செயற்பாட்டுக்கெதிரான அரசியல் எதிர்ப்பு 1987இல் தோற்றம் பெற்றது. இதனை, அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவதில் காட்டும் அக்கறையின்மைலிருந்து விளங்கிக் கொள்ள முடியும்.

கடந்த இருபத்திரெண்டு வருடங்களுள், மாகாண சபைகள் ஆறு வருடங்களுக்கான முன்மொழிவிற்கு விருப்பமின்றி உடன்பட்ட ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான மத்திய அரசாங்கத்துடன் பணிபுரிய வேண்டியிருந்தது. இருந்தாலும், மாகாண சபைகள் 16 வருடங்களுக்கும் மேலாக மாகாண

---

[7] See KM De Silva, 'Ethnic Conflict and the Search for a Durable Peace, 1978-1999', *Ethnic Studies Report*, Vol. XVII, No. 2, July 1999 (pp.301-324), pp.303.

[8] See Navaratna-Bandara, A. M., *The Management of Ethnic Secessionist Conflict, The Big Neighbour Syndrome*, Dartmouth, Aldershot, 1995, pp.107.

[9] ibid. Chapter, 3.

சபையினை எதிர்த்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பணியாற்ற வேண்டியிருந்தது. ஐ.தே.கட்சி ஆழமான பிளவுகளை ஆரம்பத்தில் இந்தியாவை வரவழைப்பதிலும், பின்னர் 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவதிலும் கொண்டிருந்தது. 1989இல் பதவிக்கு வந்த ஜனாதிபதி பிரேமதாசா இந்திய அமைதி காக்கும் படையைத் (IPKF) திருப்பி அனுப்பியதுடன் மாவட்ட செயலகங்களின் தலைமையிலுள்ள உள்ளூர் நிர்வாகத்தை மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கும் தீரமானத்தையும் மாற்றியமைத்தார். இந்திய - இலங்கை ஒப்பந்தம் மற்றும் 13ஆம் திருத்தத்திற்கு எதிராக அரசியல் எதிர்ப்பிற்குத் தலைமை வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 1994 தொடக்கம் மத்திய அரசைக் கட்டுப்படுத்தி வருகின்றது. 13ஆம் திருத்தத்தை உரிய முறையில் அமுல்படுத்துவதற்குப் பதில் இவ்விரு அரசாங்கங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கிய அதிகாரங்களை மீள மத்தியமயப்படுத்துவதில் ஈடுபட்டன. அவர்கள் மத்திய பணிக்குழுவாட்சி மாகாண சபைகளின் சட்ட, நிதி மற்றும் நிர்வாகத் திறன்களைக் கட்டுப்படுத்தியபோது அதனை மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பவர்களாக மாறினர். அதன் காரணமாக இலங்கை மக்கள் பிராந்திய சமூகங்களுக்கு சேவையாற்றுகின்றதும் திட்டமிட்ட பிராந்திய அபிவிருத்தியைக் கவனிக்கின்றதுமான உப தேசிய அரசாங்கங்களைக் கொண்டிருப்பதன் பலாபலனைப் புரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டவில்லை.

இவ் அத்தியாயம் "மாகாண சபைகளின் அரசியலை" பரிசீலிக்க முயற்சிக்கின்றது. இவ்வத்தியாயம் அயலவ அரசியல் (Neighborhood Poltics), மாகாண சபை தொடர்பான தேசிய அரசியல் விவாதம், மத்திய - மாகாண அரசியல், மாகாண சபைகளின் தேர்தல் அரசியல், மாகாண சபை முறைமைக்குள் சிறுபான்மையோர் அரசியல் போன்ற ஆறு பிரதான உப பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

2. அயலவ அரசியல்

1983இல் இலங்கையில் சிறுபான்மைத் தமிழர்களுக்கெதிராக மிக மோசமான இன வன்முறையை இலங்கை உண்டுபண்ணியதன் பிற்பாடு, இலங்கை தொடர்பில் புதியதொரு கொள்கையை இந்தியா தொடக்கி வைத்தது.[10] இலங்கை அரசாங்கம் நிலைமைகளைக் கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்காததால், தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் இலங்கையிலுள்ள தமது இன சொந்தங்களுக்குகெதிரான வன்முறையைத் தடுத்து நிறுத்த இலங்கை முரண்பாட்டில் தலையிடுமாறு மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தனர்.[11] கொழும்பில் இடம்பெற்ற ஆரம்பச்

[10] See for detailed information and analysis of ethnically motivated violence against the minority Tamils by the Sinhalese mobs.

[11] See Sivaraja, A., 'Indo-Sri Lanka Relations and Sri Lanka's Ethnic Crisis: The Tamil Nadu Factor', Seminar Paper, Serial No.1114, Ceylon Studies Seminar, University of Peradeniya, Sri Lanka, 1987, (mimeo.) pp.9-10.

சம்பவங்கள் 13 இராணுவ வீரர்களை விடுதலைப் புலிகள் கொலை செய்தமையால் ஏற்பட்டது. அரசாங்கத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்த கடும் போக்காளர்களின் கடுமையான அரசியல் அழுத்தத்துக்கு உட்பட்டிருந்த ஜனாதிபதி ஜெயவர்த்தனா தமிழர்களுக்கு எதிரான வன்முறையைக் கண்டிக்க பகிரங்கமாகத் தோன்றுவதை தாமதப்படுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டது. அதேவேளை வன்முறையில் ஈடுபட்ட கோஷ்டிகளை ஒழுங்குப்படுத்துவதில் அரசாங்கத்தின் சில அங்கத்தவர்கள் மறைமுகமாக ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இத்தகைய அபிவிருத்திகள் சர்வதேச ஊடகங்களில் இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் அனுதாபத்தை ஏற்படுத்தியதுடன், கூடவே இந்தியாவில் குறிப்பாக, உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் தாயகமாகக் கருதப்படும் தமிழ் நாட்டில் ஏற்பட்ட பகிரங்க எதிர்ப்பு நடவடிக்கைகள், இலங்கை அரசாங்கத்துடன் பேசுமாறு இந்திய அரசாங்கத்துக்கு அழுத்தங் கொடுக்கு முகமாக இடம்பெற்றது. இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு 100,000 இற்கும் மேற்பட்ட அகதிகளின் வருகை நிலைமையை மேலும் மோசமடையச் செய்தது.[12] இப்பின்னணியில் இலங்கை அரசாங்கம் இன முரண்பாட்டில் ஒரு மத்தியஸ்தராக இந்தியா நுழைவதை விருப்பமின்றி ஏற்றுக்கொண்டது. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி தனது வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவை உண்மையைக் கண்டறியவும் தனது வெளிநாட்டுக் கொள்கை ஆலோசகர்களில் ஒருவரான திரு. ஜி. பார்த்தசாரதியை இலங்கை அரசாங்கத் தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தவும் அனுப்பினார்.[13] இலங்கை ஜனாதிபதியுடனான அவருடைய உரையாடலின்போது, திருமதி இந்திரா காந்தி 'இந்தியாவை வெறுமனே மற்றொரு நாடாக நினைக்க வேண்டாம்' எனக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.[14] இலங்கைக்கு தூதுவராக அனுப்பப்பட்ட திரு. ஜி. பார்த்தசாரதி, இலங்கைத் தமிழ்த் தேசியவாதம் இராணுவ வழிமுறைகளுக்கு ஊடாகவன்றி அரசியல் வழிமுறைகளுக்கூடாகக் கையாளப்பட வேண்டும் என இலங்கை ஜனாதிபதியை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் வெற்றி கண்டார். இக்கருத்துப் பரிமாறலின்போது, இலங்கை ஜனாதிபதி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களுக்குப் பிராந்திய சுயாட்சியை ஏற்பாடு செய்வற்கான அடித்தளமாக நடைமுறையிலிருக்கும் மாவட்ட அபிவிருத்தி சபைகளைப் பயன்படுத்துவதை முன் மொழிந்தார். மேலும் அவர் இவ்விடயம் குறித்து ஒரு அரசியல் இணக்கப்பாட்டினை எட்ட அனைத்துக் கட்சி மகாநாட்டைக் கூட்டவும் உடன்பட்டார்.[15] இந்திய மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொள்ள இலங்கை ஜனாதிபதியுடன் எட்டப்பட்ட புரிந்துணர்வு '1950கள் தொடக்கம் பரஸ்பரம் மதிப்பு மற்றும் புரிந்துணர்வு மிக்க ஒன்று' என அவதானிகளால் அடையாளம் காணப்பட்ட இந்திய - இலங்கை உறவுகளின் வரலாற்றில் ஒரு திருப்பு

---

[12] ibid .20.

[13] Venkateshwar, Rao, P., 'Ethnic Conflict in Sri Lanka, India's Role and Perception', *Asian Survey*, Vol. XXVII, No.4, April, 1988 (pp.419-436), p.420-421.

[14] ibid.

[15] ibid.

முனையாக அமைந்தது.[16] 1983வரை இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் தமிழர்களின் சுயநிர்ணய முரண்பாடு தொடர்பான எந்தவொரு விடயத்திலோ அல்லது சம்பவத்திலோ தங்களைத் தொடர்புப்படுத்தியிருக்கவில்லை. இக்கொள்கை 1983 - 1987 காலப்பகுதியில் மாற்றமடைந்திருந்தது. இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய முரண்பாட்டுக்கு சுமூக அரசியல் தீர்வினைக் காண்பது இலங்கை தொடர்பான அதன் கொள்கையின் இன்றியமையாத அம்சமாகவுள்ளது என்பதை அடையாளம் கண்டனர்.

இப்புதிய கொள்கை தோற்றம் பெறக் காரணம், இந்தியாவுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வாய்ப்பினைத் தமிழர்களின் சுயநிர்ணய முரண்பாடு கொண்டிருந்தமை தொடர்பில் இந்தியக் கொள்கை வகுப்பாளர்களின் புரிதலன்றி வேறொன்றுமில்லை. பனிப்போர் காலத்தின்போது, மூன்றாம் உலகில் ஏற்பட்ட அநேகமான முரண்பாடுகள் வல்லரசுப் போட்டிக்கான விளையாட்டு மைதானமாக மாறியதுடன், இது தமது சிறிய அயல்நாட்டின் முரண்பாட்டில் அவர்களது கொள்கையைக் கவனமாகச் சிந்திக்கும்போது, இப்பனிபோர்க்கால விவகாரத்தில் சோவியத்-யூனியனின் பங்காளிகளுள் ஒன்றாகவிருந்த இந்தியக் கொள்கை வகுப்பாளர்களின் பக்கம் தெளிவாகியது. இலங்கையில் 1983இற்கு பிறகு இடம்பெற்ற நிகழ்வுகள் இலங்கையில் வன்முறை தொடர்வதென்பது வெறுமனே கண்ணீர் வடிக்கின்ற ஒன்றன்றி இந்தியாவுக்கும் பாரதூரமான பாதுகாப்புச் சுமையாக அமையும் என்பதை எடுத்துக் காட்டியது. இலங்கை அரசாங்கத் தலைவர்கள் 1983இற்குப் பின்னரே இந்தியா தனது தேசிய நலன்களுக்கு இன்றியமையாதவை எனக் கருதிய நாடுகளுக்கு உதவி கேட்டு விஜயம் செய்யத் தொடங்கினார்கள். 1970களில் இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளைத் துண்டித்திருந்த இலங்கை அரசாங்கம், இலங்கைத்தமிழர்களின் ஆயுதக் கிளர்ச்சியினைக் கையாள இராணுவ ஆலோசனை மற்றும் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளக் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தினுள் இஸ்ரேல் நலன்பேண் பிரிவினை ஏற்படுத்த இஸ்ரேலை அனுமதித்தது.[17] மறுபுறம், இந்தியா அவர்களுக்கு புகலிடம் மற்றும் தேவையான இராணுவ உதவியை வழங்காவிடின், தமது ஆயுதப் போராட்டத்துக்கு வெளிவாரியான உதவியைத் தமிழ் குழுக்கள் பெற்றுக் கொள்ள முயற்சிக்கக்கூடும் எனும் சந்தேகத்தை இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் கொண்டிருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் இந்தியா, இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழ்த் தீவிரவாதிகள் ஆகிய இருவரையும் இந்தியாவின் தந்திரோபாய வீச்சுக்குள் வைத்திருக்கும் அத்தகைய இரண்டக நிலையை எதிர் கொண்டது. இலங்கை எதிராளிகள் எதிர்பார்த்த ஒன்றுக்கொன்று ஒவ்வாத தீர்வுகளினால், அதாவது வடகிழக்கு இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு ஒரு சுதந்திர அரசு மற்றும் தமிழ்

---

16 See Kodikara, S.U. 'Contemporary Indo-Lanka Relations', *Sri Lanka Journal of Social Science,* Vol.1, No.1, (pp.61-73), p.61.

17 See for a detailed discussion on the Indian policymakers suspicion on outside powers during 1983-87, Rao, Venkateshwar, 'Foreign Involvement in Sri Lanka', *The Round Table*, 309, 1989, (pp.88-100).

இயக்கத்தை இராணுவ ரீதியில் அடக்குதல் என்ற இந்தியாவுக்கு இருந்த மிகச் சிறந்த தெரிவு இரு எதிராளிகளையும் அதிகாரப்பகிர்வுத் தீர்வினை நோக்கி நகர்த்துவதாக இருந்தது.[18]

1984 சர்வகட்சி மாநாட்டு (APC) வழிமுறை மற்றும் பின்னைய 1985 அரசியல் கட்சி மகாநாடு (PPC) இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்த் தலைவர்களுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இந்தியாவை ஒரு மத்தியஸ்தராக மறைமுகமாக உள்ளடக்கியிருந்தது. அனைத்துக் கட்சி மாநாடு மாகாண சபைகளை ஏற்படுத்தும் முன்மொழிவினை ஏற்றுக் கொள்ள கருத்தொருமைப்பாடு காணவில்லை என்றாலும், இந்திய அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவினால் சமரப்பிக்கப்பட்ட அதிகாரப்பகிர்வு முன்மொழிவு பெரும்பான்மை சமூகத்தின் அநேகமான பிரதிநிதிகளால் நிராகரிக்கப்பட்டபோது, அனைத்துக் கட்சி மாநாட்டுக் கலந்துரையாடல்கள் ஒரு வருடத்தில் முடிவுக்கு வந்தன.[19] இலங்கை ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு, அது அதிகாரப் பகிர்வு அலகாக மாவட்டத்துக்கு அப்பால் சென்று மாகாணத்தை ஏற்றுக் கொள்ள உடன்பட்டமையானது இந்தியாவின் செல்வாக்கினை எடுத்துக் காட்டியது. அனைத்துக் கட்சி மாநாட்டின் வீழ்ச்சிக்குப் பின்னர், ஜனாதிபதி அரசியல் கட்சி மகாநாட்டுக்கு (PPC) அழைப்பு விடுத்ததுடன், அதில் மாகாணங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்குவதற்கு ஆதரவாகவிருந்த அரசியல் கட்சிகள் மாத்திரம் சமூகமளித்திருந்தன.[20]

இம்மன்றம் இந்தியாவுடன் 1985 டெல்லி உடன்பாட்டைக் கைசாத்திட்டதன்மூலம் அவர்கள் ஏற்றுக் கொண்ட திட்டங்களைக் கலந்தாலோசிக்கப் பயன்படுத்தப்பட்டது.[21] 1985 - 1986களின்போது, இலங்கை அரசாங்கம் மாகாண சபைகள் முன்மொழிவுடன் முன் செல்வதற்கு உடன்பட்டது மாத்திரமின்றி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்புப் பற்றிய பிரச்சினைகளைக் கையாளுவதற்காக, பொருத்தமான இணக்கப்பாட்டு வழிமுறைகளைக் காணவும் காணி, காணி நிர்ணய மற்றும் மாகாண மட்டத்திலான சட்டம் மற்றும் ஒழுங்கு போன்ற விடயங்களை மாகாண சபைக்கு ஒப்படைக்கவும் உடன்பட்டது. இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் உத்தேச அதிகார பகிர்வுக்கான மக்கள் தீர்ப்பு மற்றும் சிங்கள சமூகத்திடமிருந்தான உணர்வுபூர்வ எதிர்ப்பலைகளைத் தவிர்த்தல் ஆகிய இரண்டு விடயங்களில் கவனம் செலுத்தி, இப்பிரச்சினைக்குரிய விடயங்களுக்கு இணக்கப்பாட்டுத் திட்டங்களைக் காணும் பல்வேறு கலந்துரையாடல்களை நடாத்தின.[22]

---

18 See Bandara, A.M. Navaratna, op. cit., pp.101-103.

19 See De Silva, K.M. Sri Lanka: Ethnic Conflict and the Search for a Durable Peace, 1978-1999, *Ethnic Studies Report*, Vol. XVII, No. 2, July 1999, (pp.303-304).

20 ibid. p. 304.

21 ibid.

22 ibid.

இலங்கையில் தமிழ் ஆயுதக் குழுக்கள் தடை செய்யப்பட்டிருந்தமை அத்துடன், அவர்கள் இந்திய மண்ணில் செயற்பட்டமை காரணமாக இலங்கை மற்றும் இந்திய அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் தீவிரவாதக் குழுக்களுக்குமிடையில் சந்திப்பினை ஏற்படுத்திய புகழ்பெற்ற திம்புப் பேச்சுக்களின்போது இடம்பெற்றது போன்று, அதன் நற்சேவைகளை இந்தியா வழங்க வேண்டியதாயிற்று.[23] தீவிரவாதக் குழுக்கள் இரு அரசாங்கங்களினதும் சமரசப் பேச்சாளர்களால் 1983 தொடக்கம் தயார்படுத்தப்பட்ட அதிகாரப்பகிர்வு பற்றிய ஒட்டு மொத்த கருத்தினை நிராகரித்து இரு வேறுபட்ட (Bi-Communal) அரசாங்க முறையினை உருவாக்குவதனை ஒத்த நான்கு கோட்பாடுகளை சமர்ப்பித்து திம்புப் பேச்சுவார்த்தையில் ஒரு இறுக்கமான நிலைப்பாட்டை எடுத்தனர். தமிழ் ஆயுதக்குழுக்களின் கடும் நிலைப்பாட்டைக் கவனத்திற்கெடுத்து திரு. ராஜீவ் காந்தி "இந்தியாவில் நாங்கள் கொண்டிருப்பதற்கு மேலதிகமாக எதனையும் எதிர்பார்க்க வேண்டாம்" எனக் கூறி அவர்களது அரசியல் கோரிக்கைக்கு வரையறைகளை விதிக்க வேண்டி ஏற்பட்டது.[24] திம்புப் பேச்சுக்கள் இலங்கை முரண்பாடு தொடர்பான இந்தியக் கொள்கைக்கு அப்பாற் செல்ல சில தமிழ்க் குழுக்கள் தயாராக இருப்பதை இந்தியா நம்பியமையானது, இலங்கை தொடர்பிலான இந்திய கொள்கையில் ஒரு திருப்பு முனையாகியது.[25]

1984 இலிருந்து 1986வரையான காலப்பகுதியின்போது, இலங்கை அரசாங்கம் மற்றும் இந்திய அரசாங்கத்திற்கிடையில் இடம்பெற்ற ஆவணப் பரிமாற்றங்கள் எடுத்துக் காட்டுவது போன்று அதிகாரப்பகிர்வு அலகு மாவட்டத்திலிருந்து மாகாணமாக படிப்படியாக உயர்த்தப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கம் மற்றும் இந்திய அரசாங்கத்திற்கிடையிலான மேலதிக பேச்சுவார்த்தைகள் இந்திய முறையில் அரசாங்க அதிகாரத்தைப் பகிர்வதை ஒத்த உதாரணமாக மூன்று அதிகார நிரல்கள், மாகாண ஆளுனரின் தீர்மானமெடுக்கும் அதிகாரம், அவசரகால நிலையின்போது ஜனாதிபதி ஆட்சியை அழுல்படுத்தல் போன்ற ஒரு திட்டத்தை உருவாக்கியிருந்தது.[26] இவ்விரு அரசாங்கத்துக்குமிடையில் இறுதியாக பரிமாறப்பட்ட ஆவணம் 1986 டிசம்பர் முன்மொழிவு என நன்கு அறியப்பட்ட 13ஆம் திருத்தச்சட்டத்தின் இறுதி வரைபினைத் தயாரித்த இந்திய மற்றும் இலங்கை சட்ட வல்லுனர்களினால் பயன்படுத்தப்பட்ட ஆவணமாகவுள்ளது. இது இரண்டு அல்லது அதற்கதிகமான மாகாண சபைகளை உருவாக்குவதை முன்மொழிந்தது. பின்னர் இரண்டு மாகாணங்களைத் தற்காலிகமாக இணைத்தல் மற்றும் அதன் தொடர்ச்சியினைத் தீர்மானிக்க கிழக்கு மாகாணத்தில் ஒரு மக்கள் தீர்ப்பினை நடாத்துதல் என்ற கருத்து இரு அரசாங்கத்திற்குமிடையில் எட்டப்பட்ட இணக்கப்பாடாகியது.[27]

---

23. Rao, P. Venkateshwar, *Asian Survey,* Ethnic Conflict in Sri Lanka, India's Role and Perception, Vol. XXVII, Nu.4, April, 1988 (pp.419-436), p.420-421.

24. Bandara, A.M. Navaratna, op. cit., pp.103.

25. ibid.pp.114-116.

26. All Party Conference Secretariat, Documents Exchanged between the Governments of India and Sri Lanka, Colombo, 1986 (Draft Proposals - 30.8.65 to 19.12.86).

27. ibid.the December 1986 Proposals.

இலங்கை ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் மத்தியஸ்தங்கள், பேச்சுவார்த்தை ஏற்பாடுகள், நற்சேவைகள் மற்றும் இறுதியாக இராணுவத் தலையீட்டினைச் செய்து இலங்கைத் தமிழ் சுயநிர்ணய முரண்பாட்டுக்கான அதன் விருப்புக்குரிய கொள்கை அரசாங்க அதிகாரத்தை பகிர்வதே என்பதை இந்தியா அறிவித்தது. மற்றைய இடங்களில் வாதிட்டது போன்று இவ் எழுத்தாளர் இரண்டு எதிராளிகளால் முன்னெடுக்கப்பட்ட ஒன்றுக்கொன்று ஒவ்வாத தீவிர தேர்வுகளினால் மட்டுமன்றி பயங்கரவாத அமைப்புகளைப் பலப்படுத்துவதன்மூலம், இலங்கையுடனான நிழல் யுத்த உபாயத்தைத் தொடர்வதென்பது நீண்டகாலத்தில் இந்தியாவின் தந்திரோபாய மற்றும் தேசிய நலன்களுக்கு ஆபத்தாக முடியும் என்பதை இந்தியா கண்டு கொண்டது.[28] இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னர் இலங்கையின் சர்வதேச எல்லைகளை மீறி யாழ்ப்பாணத்திற்கு விமானப்படையை அனுப்ப இந்திய தந்திரோபாய நிபுணர்கள் தீர்மானித்தபோது, அவர்கள் அதிகாரப்பகிர்வுத் தீர்வினூடாக முரண்பாட்டைத் தீர்க்கும் இந்திய அழுத்தத்துக்கு சில பிடிவாதங்களைக் காட்டிய இலங்கை அரச தலைவர்களின் பதிலிறுப்பின் அடிப்படையில் சைப்பிரஸை ஒத்த நிலைமைகளை உருவாக்கும் தேர்வினைக் கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.[29] ஆட்சியிலிருந்த அரசாங்கம் சாதகமாக பதிலிறுத்ததுடன், இலங்கை மண்ணில் இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய நலன்கள் உள்ளதை ஏற்று ஒரு உடன்படிக்கையில் கைசாத்திட உடன்பட்டமை தேசிய அரசியல் நீரோட்டத்திற்கு தமிழ்க் குழுக்களை மீண்டும் திருப்பும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள இந்தியா நிர்ப்பந்திக்கப்பட்டது.[30] மேலும், இது இலங்கை அரசாங்கத்துக்கு இரண்டு நாடுகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வுத் திட்டத்திற்கு அமைய நகல் அரசியலமைப்பு திருத்தத்தினை தயாரிப்பதில் உதவுவதற்கு உடன்பட்டது. இவ்வுடன்படிக்கை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இலங்கைத் தமிழர்களின் வரலாற்று வாழிடமாக அங்கீகரித்ததுடன், இவ்விரு மாகாணங்களின் தற்காலிக இணைப்புக்கும் உடன்பட்டது.

இருப்பினும் இவ்விரு அரசாங்கங்களுக்கிடையிலான புரிந்துணர்வின் மிகப் பிரதான அம்சம், உடன்படிக்கை கைச்சாத்துக்குப் பின்னர் இரு தலைவர்களாலும் பரிமாற்றப்பட்ட கடிதங்களில் இடம்பெற்றிருந்தன. இக்கடிதங்களில், இலங்கை ஜனாதிபதி இந்திய அமைதி காக்கும் படையை அனுப்புமாறு இந்திய அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்ததுடன், இந்தியப் பிரதமர் ஏதேனும் எதிர்ப்புக்கள் வரும்பட்சத்தில் தனது இராணுவ பலத்தைப் பயன்படுத்தி தமிழ் ஆயுதக் குழுக்களை ஆயுதக் களைவு செய்யுமாறு இந்திய அமைதி காக்கும் படைக்கு கட்டளையிட உடன்பட்டார். இந்திய அமைதி காக்கும் படையின் வருகையும் அதனைத் தொடர்ந்தான விடுதலைப்

---

[28] Navaratna Bandara, op. cit.,68-69.

[29] ibid .p.117.

[30] The Accord referred to the Oil Tank Facility in Trincomalee and the Radio Transmission Facility in Iranvila regarding which India suspected that Sri Lanka was dealing with foreign power inimical to India's security.

புலிகளினுடனான யுத்தமும் இந்திய அரசாங்கமும் ஒரு இரண்டாவது தேர்வினைக் கொண்டிருந்ததை சுட்டிக் காட்டியது. அதாவது, உடன்படிக்கையின் அமுலாக்கத்தை குழப்புபவர்கள் என அவர்கள் சந்தேகித்த விடுதலைப் புலிகளை ஆயுதக்களைவு செய்வதாகும். இந்திய - இலங்கை உடன்படிக்கை தமது இனசொந்தங்கள் இலங்கையில் ஒரு தனியான அரசினை ஏற்படுத்துவதற்கல்லாது ஒரு இரண்டாம் நிலை அரசாங்கத்தினூடாக அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை செய்வதற்கே இந்தியா ஆதரவளிக்கும் என்ற செய்தியை வழங்கியது. இந்தியா 1987 இந்திய - இலங்கை உடன்படிக்கையை வெறுமனே இலங்கை முரண்பாடு தொடர்பாக அதன் கொள்கைப் பிரமாணமாகவன்றி, கூடவே அதன் அண்டைய சிறிய நாட்டுடன் இணைந்திருக்கும் அதன் தந்திரோபாய நலனை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கும் பயன்படுத்தியது. இவ்வுடன்படிக்கை இவ்விரு அரசுகளின் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தும் பொருட்டு தமது இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டினைப் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கும் இரு அண்டை நாடுகளுக்கிடையிலான 'கொடுக்கல் வாங்கலுக்கு' ஒரு மிகச் சிறந்த உதாரணமாக உள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விதிகளின்கீழ் புதியதொரு உடன்படிக்கையின்கீழ், இலங்கையிலுள்ள அதன் ஒலிபரப்பு வசதியைத் தரமுயர்த்த அனுமதிக்கப்பட்டிருந்த 'அமெரிக்க குரலுடன்' (VOA) கைச்சாத்திட்ட உடன்படிக்கையைத் திருத்த இலங்கை அரசாங்கம் உடன்பட்டது. இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் இந்தியா தொடர்பில் உளவறிய வான் கண்காணிப்பு முறையினை விஸ்தரிக்க அமெரிக்கக் குரல் உடன்படிக்கை அமெரிக்காவினால் பயன்படுத்தப்படும் எனச் சந்தேகித்தனர். மேலும், இலங்கை அரசாங்கம் வர்த்தக நோக்கங்களுக்காகத் திருகோணமலைத் துறைமுகத்திற்கு அருகாமையிலுள்ள எண்ணெய்க் களஞ்சிய வசதியை இலங்கை பயன்படுத்த விரும்பினால், இந்தியாவுடன் பங்குடமை ஏற்பாட்டினை அது மேற்கொள்ளும் என ஒரு உறுதிமொழியை வழங்கியது. இது அமெரிக்கக் கடற்படைக்கு எண்ணெய் வழங்கி வந்த கம்பனியின் ஒரு துணை நிறுவனம் என்றவகையில், அமெரிக்க எண்ணெய்க் கம்பனியுடன் இலங்கை ஒரு உடன்படிக்கையைக் கைச்சாத்திடப் போகிறது எனும் வதந்திக்கு ஒரு தெளிவான பதிலிறுப்பாகவிருந்தது.[31] ஒரு இந்திய ஆய்வாளர் குறிப்பிட்டது போன்று "தெளிவான வகையில் ஒன்றில் அமெரிக்காவுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படுவதாக சந்தேகப்பட்ட அத்தகைய தந்திரோபாய வசதிகளை எந்தவொரு மூன்றாம் தரப்புக்கும் விரிவுப்படுத்துவதிலிருந்து இலங்கையை இந்திய - இலங்கை உடன்படிக்கை தடுத்திருந்தது".[32]

---

[31] Bandara, A.M. Navaratna, op. cit., p.72.

[32] Rao, P. Venkateshwar, *'Foreign Involvement in Sri Lanka'*, op. cit., p. 93.

இலங்கை முரண்பாடு தொடர்பாக மிகவும் முக்கியமான ஏற்பாடுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தற்காலிக இணைப்பை ஒழுங்கு செய்வதும் இலங்கை அரசாங்கம் "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இலங்கைத் தமிழர்களின் வரலாற்று வாழிடம்" என அங்கீகரிக்கச் செய்வதுமாகும். பெரும்பான்மை சமூகத்தினுள்ளிருந்த கடும்போக்காளர்கள் "இலங்கைத் தமிழர்களின் பாரம்பரியத் தாயக" எண்ணக்கருவுக்கு ஏதேனும் சலுகைகள் வழங்கும் கருத்தினைத் தொடர்ச்சியாக நிராகரித்ததால், தமிழ் ஆயுதக் குழுக்களை ஆயுதக் களைவு செய்யும் இந்திய அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்பி இலங்கை அரசாங்கம் இவ்வேற்பாட்டினை ஏற்றுக் கொண்டது. 'ஒரு நீண்ட இராணுவ பயணத்திற்கான' ஆயுதத் திறன்களுடனான இந்திய அமைதி காக்கும் படையின் வருகை[33] அத்துடன் பின்னர் விடுதலைப் புலிகளுடனான அதன் சண்டை, விடுதலைப் புலிகள் தொடர்பான இராணுவ அணுகுமுறை குறித்து இரண்டு அரசாங்கங்களுக்கிடையில் ஒரு உறுதியான புரிந்துணர்வு காணப்பட்டதை நிருபித்தது. அவர்களால் தமிழ் தீவிரவாதக் குழுக்களுக்கு மறைவிடம், பயிற்சி, ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டமையால், இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் தீவிரவாதிகளை ஆயுதக் களைவு செய்து அவர்களை அதிகாரப் பகிர்வுச் செயன்முறையின் பங்குதாரர்களாக ஆக்கும் ஆற்றல் தனக்கிருப்பதாக இலங்கைத் தலைவர்களை ஏற்கச் செய்தார்கள். அதனால் 13ஆம் திருத்தச்சட்டம் இலங்கையின் முரண்பாடு தொடர்பில் இந்தியக் கொள்கை வகுப்பாளர்களின் ஒரு பகுத்தறிவுக் கொள்கை தெரிவுக்கான தேடலின் இறுதி விளைவாக இருந்தது. இலங்கையின் மீதும் அதன் வெளிவாரி நட்பு நாடுகள் மீதும் அழுத்தங்களை பிரயோகிப்பதற்காக நடத்தப்பட்ட நிழல் யுத்தத்தின் முடிவு இலங்கை முரண்பாட்டுக்கு அரசியல்த் தீர்வு தொடர்பில் இந்தியா மற்றும் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை தந்திரோபாயவாதிகள் ஒரு புரிந்துணர்வினை எட்டி இருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.[34] இலங்கை ஜனாதிபதி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் பிற்பாடு 'எந்தவொரு வெளிநாடும் இந்தியாவுக்கு எதிராக விரல் நீட்டக் கூடத் தயாரில்லை' என்ற நிலையினை தான் உணர்ந்திருந்ததாக அறிவித்தார்.[35] எனவே மாகாண சபை முறைமை, பனிப்போர் காலத்தில் சோவியத் யூனியனின் ஒரு நேச நாடாக இருந்த இந்தியாவின் கொள்கை வகுப்போர் பின்பற்றிய அரசியல் - இராணுவ உபாயத்தின் ஒரு பக்க விளைவாக இலங்கை அரசியலமைப்புக்குள் நுழைந்தது. இறுதியாக, மாகாண சபை உடன்படிக்கை மற்றும் அதன் அமுலாக்கம் இந்தியாவின் பனிபோர் கால எதிரிகளின் மறைமுக ஈடுபாட்டினை எதிர்பார்த்திருக்க வேண்டும். விடுதலைப் புலிகள் இந்திய அமைதி காக்கும் படையைக் கடுமையாக எதிர்க்க முன்வந்தபோது, செல்வாக்குமிகு இந்துப் பத்திரிகை பின்வருமாறு கூறியிருந்தது;

---

[33] ibid .p.89.

[34] Bandara, A.M. Navaratna, op. cit., p.141.

[35] ibid.p.142.

"கணிசமானளவு போரிடும் ஆற்றலை அதற்கு வழங்கும் அளவுக்கு விடுதலைப் புலிகள் முகாமுக்கான முடிவில்லா ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்களின் விநியோகம் இந்திய அமைதி காக்கும் படையின் பிரசன்னத்தினால் நின்றுவிட்டதாகக் தெரியவில்லை. அத்தகைய விநியோகத்துக்குப் பின்னால் ஒரு வெளிச்சக்தி இருக்கின்றது (நிச்சயமாக அது இந்தியா அல்ல) அதனால் இது கூடுதல் முக்கியத்துவம் பெறுகின்றது".[36]

3. அதிகாரப் பகிர்வின் உள்நாட்டு அரசியல்

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன 1985 முடிவில் இந்தியாவின் ஆலோசனை பெற்றுத் தயாரித்த அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை அனைத்துக் கட்சி மாநாட்டுக்கு (APC) சமர்ப்பித்தபோது, பெரும்பாலான கட்சிகள் மற்றும் சிங்கள பௌத்த அமைப்புப் பிரதிநிதிகள் அதனை ஒட்டுமொத்தமாக நிராகரித்தனர். ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரப் பகிர்வுத் திட்டம் திருமதி. இந்திராகாந்தியின் விஷேட தூதுவர் ஜி. பார்த்தசாரதியினால் தயாரிக்கப்பட்ட இணைப்பு - C என அறியப்படும் ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சிங்கள அமைப்புப் பிரதிநிதிகள் இணைப்பு - C ஐ ஏற்றுக்கொண்டமைக்காக அரசாங்க தலைமைத்துவத்தை விமர்சித்தன. அவர்களைப் பொறுத்தவரை, இது தேசிய இறைமையை விட்டுக்கொடுப்பதும் நாட்டைப் பிரிக்கும் தமது கோரிக்கையினை முன்னெடுக்க ஓர் அரசியல் நிர்வாகக் கட்டமைப்பிற்காகக் காத்திருக்கும் பிரிவினைவாதிகளுக்குத் துணை போகும் ஒரு செயலாகவிருந்தது.

பிராந்திய அலகுப் பிரச்சினை ஏற்கனவே அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட "பிராந்திய சபை மசோதாவை" திருத்த தமிழ் அரசியல் தலைமைத்துவத்துடன் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டபோது, இலங்கையில் பகிரங்க அரசியலுக்கு வந்தது. பிரதமர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒரு பிராந்திய சபையாக உருவாகவும் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்ப் பெரும்பான்மை சபையுடன் இணைந்து கொள்ள வழிசமைக்கும் வகையில் பிராந்திய சபைகள் மசோதாவுக்குப் புதிய ஏற்பாடுகளை உள்ளடக்க உடன்பட்டார்.[37] முன்னணிப் பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள அமைப்புகளுக்குப் பதிலிறுக்கும் வகையில் பிராந்திய சபை மசோதாவைப் பண்டாரநாயக்க அரசாங்கம் கைவிட்டாலும், அந்த முன்மொழிவு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் 'தமிழ் மாகாணங்கள்' என மறைமுகமாக அங்கீகரித்தது. பண்டா - செல்வா உடன்படிக்கைக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கை மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு

---

[36] The Hindu International Edition, 23 December 1989.

[37] The Bandaranaike-Chelvanayakam Pact (B-C Pact), for the full text of the B-C pact, see Silva, K.M. De, *Managing Ethnic Tensions in Multi Ethnic Tensions in Multiethnic Societies*, University Press of America Inc., Lanham, 1986, pp.398-400.

ஆட்சிமுறையை நிராகரிக்கும் இனத்தை மையப்படுத்திய அரசியலின் ஆரம்பத்தை அடையாளப்படுத்தியது. இது படிப்படியாக வர்க்க மற்றும் உயர்குழாம் அரசியலைக்காட்டிலும் நிர்ணய சக்தியாகத் தேசிய அரசியலுக்குள் நுழைந்தது. மறுபுறம், இலங்கைத் தமிழர்களின் பாரம்பரியத் தாயகம் 2009இல் முடிவுக்கு வந்த உள்நாட்டு யுத்தத்திற்கு அத்திவாரம் இட்ட அரசியல் உருவாக்கத்தினை ஏற்படுத்துவதில் ஒரு குவிமையக் காரணியாகியது. அதாவது, இலங்கை அரசின் ஆட்புல ஒருமைப்பாடு எதிர் இலங்கைத் தமிழர்களின் பாரம்பரியத் தாயகத்தின் ஆட்புல ஒருமைப்பாடு.

அனைத்துக் கட்சி மாநாட்டில் பங்குபற்றியிருந்த தமிழர்களின் மிதவாத அரசியல் கட்சியான தமிழர் விடுதலை கூட்டணி (TULF) ஒரு சுதந்திர அரசை தாபிக்கும் தமது திட்டத்திற்கு 1977 பொதுத் தேர்தலில் தமக்குக் கிடைத்த மக்கள் ஆணைக்கு திருப்திகரமான மாற்றுத்திட்டத்தை வழங்க இலங்கை ஜனாதிபதி தவறிவிட்டார் என வாதிட்டு அனைத்துக் கட்சி மாநாட்டிற்க்கு சர்ப்பிக்கப்பட்ட திட்டம் தொடர்பில் அதன் அதிருப்தியை வெளியிட்டது. இக்கட்டத்தில் அவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரு மொழிவாரி மாநிலத்தை உருவாக்கவும் சட்டம் மற்றும் ஒழுங்கு, பிராந்தியத்திலுள்ள அரச காணிகள் தொடர்பில் மாகாண அரசாங்கங்களுக்கு கணிசமானவளவு அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்திய அரசாங்கத்துக்கு ஒரு தொகுதித் திட்டத்தை சமர்ப்பித்தனர்.[38] 1985இல் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன மாகாணங்களுக்கு அரசாங்க அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கு ஆதரவளித்த அரசியல் கட்சிகளின் பங்கேற்புடன் அரசியல் கட்சி மகாநாடு எனும் மற்றொரு தளத்தை ஏற்படுத்தினார். அதேவேளை, இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் மிதவாதத் தமிழ்த் தலைவர்கள் கொண்டிருந்த நிலைப்பாட்டுக்கு இடமளிக்கும் பொருட்டு ஓர் ஏற்றுக் கொண்ட புறவமைப்பினைக் கண்டுகொள்ள இலங்கை அரசாங்கத்துடன் புதியதொரு சுற்றுப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட தமிழ் தீவிரவாதக் குழுக்கள் இந்தியாவின் முயற்சிக்கு ஆபத்தை ஏற்படுத்தும் ஒரு ஏற்பாட்டினை நாடி ஒரு பொது நிலைப்பாட்டை முன்வைத்திருந்ததனால் இரு அரசாங்கங்களும் 1985 டெல்லி உடன்படிக்கையில் ஒரு பொது அடிப்படையைக் கண்டு கொண்டனர். அரசியல் கட்சி மாநாடு 13ஆம் திருத்தச்சட்டத்தில் பலப்படுத்தப்பட்ட அடிப்படைக் கட்டமைப்பாகிய 1986 டிசம்பர் திட்டம் எனப் பரவலாக அறியப்படும் பிராந்திய அதிகாரப் பகிர்வு தொடர்பில் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட இறுதி ஆவணத்தை அங்கீகரித்தது.

அனைத்துக் கட்சி மாநாடு மற்றும் அரசியல் கட்சி மாநாடு ஆகிய இரு வழிமுறைகளிலும் பங்கேற்க மறுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மூன்று அடிப்படைகளில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் மற்றும் மாகாண சபை முறைமையை நிராகரித்தது: முதலில் அது இலங்கையின் இறைமையை இந்தியாவிடம் தாரைவார்த்துக் கொடுத்துள்ளது: இரண்டாவது, அது இலங்கைத்

[38] See Silva, K.M. De, op. cit., p.304

தமிழர்களின் பாரம்பரியத் தாயகக் கோட்பாட்டை அரசியலமைப்புக்குள் கொண்டு வந்துள்ளது: மூன்றாவது, அது பிரிவினைவாதிகள் நாட்டைப் பிரிப்பதை நோக்கித் தமது நிலைப்பாட்டைப் பலப்படுத்துவதற்கான அரசியல் கட்டமைப்பை இட்டுள்ளது. 13ஆம் திருத்தச்சட்டம் பாராளுமன்றத்திற்கு அறிமுகம் செய்யப்பட்டபோது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 1983 தொடக்கம் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பாக இரகசியமாக இயங்கி உடன்படிக்கைக்கு எதிராக வன்முறை நடவடிக்கைகளை ஒழுங்கு செய்த ஜனதா விமுக்தி பெரமுனவைத் தனது அரசியல் நண்பனாகக் கண்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வீதி எதிர்ப்புகளைக் கொழும்பில் ஏற்பாடு செய்த அதேவேளை, ஜனதா விமுக்திப் பெரமுன 13ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிரான அறிக்கைகள் மற்றும் தொங்கு பதாதைகளை வெளியிட்டது. அதேநேரம், ஜனதா விமுக்தி பெரமுனவின் இராணுவப் பிரிவு உடன்படிக்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களைக் கொல்லும் ஒரு பயங்கரவாத நடவடிக்கையை முன்னெடுத்தது. தோற்றம் பெற்றிருந்த சூழ்நிலை பகிரங்க இடத்தில் ஒரு ஆரோக்கியமான விவாதத்துக்கு சாதகமானதாக இல்லாதிருந்ததால், பாராளுமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் மாகாணசபை கருத்துக்கெதிரான வாதங்களை முன்வைக்கும் களமாகியது. ஓர் அரசு என்றவகையில் இலங்கையின் ஒற்றையாட்சியின் தன்மை, பாராளுமன்றின் இறைமை, பௌத்தமதத்திற்கு வழங்கப்பட்ட முதன்மை ஸ்தானம் போன்ற இலங்கை அரசியலில் மிகவும் நெருக்கமான பிரச்சினைகளுள் ஒன்றினைக் கவனத்திற்கு கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலைக்கு இவ்விரு நிறுவனங்களும் தள்ளப்பட்டிருந்தமையால் இது தவிர்க்க முடியாததாகியது.

உயர் நீதிமன்றம் 13ஆம் திருத்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்த மக்கள் தீர்ப்பொன்றை நடத்தும் விடயம் தொடர்பில் தெளிவாகப் பிளவுபட்டிருந்தது. உயர்நீதிமன்றம் 13ஆம் திருத்தச் சட்டம் இலங்கை அரசின் ஒற்றையாட்சித் தன்மை தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகளை மீறவில்லை: ஆகையால் இம்மசோதா மக்கள் தீர்ப்புக்கு விடப்படாமல் அங்கீகரிக்கப்பட முடியும் என ஓர் வாக்குப் பெரும்பான்மையினால் பிரகடனப்படுத்தியது. பகிரங்க அமர்வுகளை நடத்தாது அதன் தீர்ப்பினை வழங்க உயர்நீதிமன்றுக்கு வகை செய்யும் அரசியலமைப்பு ஏற்பாட்டின்கீழ், இம்மசோதா நீதிமன்றுக்கு அனுப்பப்பட்டதால் உயர்நீதிமன்றம் அதன் வாதப்பிரதிவாதங்களை மூடிய அறைக்குள் நடாத்த வேண்டியிருந்தது. உயர்நீதிமன்றுக்குள்ளான பிரிவினை, கவனத்திற்கெடுக்கப்பட்ட பிரதான விடயமான திருத்தச் சட்டம் அரசியலமைப்பின் ஒற்றையாட்சித் தன்மை மற்றும் பாராளுமன்ற இறைமை தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகளை மீறுகின்றதா இல்லையா என்பதாகவிருந்ததைச் சுட்டிக்காட்டி நிற்கிறது. இம்மசோதா அரசியலமைப்புக்கு முரணானது எனும் கருத்தைக் கொண்டிருந்த நீதியரசர்கள் ஒரு வாக்கினால் தோற்கடிக்கப்பட்டாலும், அவர்களால் எழுப்பப்பட்ட வாதங்கள் பாராளுமன்றில் இடம்பெற்ற அரசியல் விவாதத்தில் முக்கிய கருப்பொருட்களாகின. சிறுபான்மை அபிப்பிராயம் அது, சட்டவாக்க அதிகாரம் கொண்ட மற்றொரு நிறுவனத்தை

உருவாக்குவதனால் இம்மசோதா பாராளுமன்றின் சட்டவாக்க அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் என்பதாகவிருந்தது. மாகாணப்பட்டியலினூடாக விடயங்கள் ஒதுக்கீடு, பாராளுமன்ற சட்டவாக்க அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இட்டுச்செல்லும் ஒரு முயற்சியாக இனங்காணப்பட்டது.[39] சிறுபான்மைத் தீர்ப்புக்களை வழங்கிய நீதியரசர்களுள் ஒருவரான நீதியரசர் ஜே. வனசுந்தர தனது தீர்ப்பினை வழங்கும்போது, இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கு ஏற்படும் அச்சுறுத்தலைச் சுட்டிக்காட்டி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கெதிராக ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சொந்தவார்த்தைகளை எடுத்துக்காட்டித் தீர்ப்பினை வழங்கியிருந்தார்.[40] அவருடைய சட்ட ஏற்பாடுகள் பற்றிய பகுப்பாய்வில் நீதியரசர் வனசுந்தர பின்வருமாறு குறிப்பிட்டார்:

"சட்ட ஏற்பாடுகள் பற்றிய எனது பகுப்பாய்வில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களுக்கு தமது சொந்தத் தலைவிதியின் எஜமானர்களாக இருக்கப் போதுமான சுயாட்சியை இம்மசோதாக்கள் வழங்குவதை நான் காண்கிறேன். இவ்விலக்கினை நோக்கிச் செயற்பட இவ்வேற்பாடுகள் நெகிழ்வுடையவையாகவும் விரிவானதாகவும் உள்ளன. வடக்கு மற்றும் கிழக்குக்கு தனியொரு மாகாண சபை என்பது மிதமிஞ்சிய தமிழ்பேசும் மக்களின் பெரும்பான்மை கொண்டு தமிழர்களால் ஆதிக்கம் செலுத்தப்படும் என்பது உண்மையாகும். இது கடந்த அரை நூற்றாண்டாக இப்பிரதேசம் தமது பாரம்பரிய தாயகம் எனக் கோருகின்றதும் சிங்கள மக்களின் பிரசன்னத்தை எதிர்க்கின்றதுமான தமிழர்களால் கட்டுப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்படும் அவர்கள் தனியொரு தேசிய அடையாள இலட்சியத்திற்கன்றி இரு தேச கோட்பாட்டை கடைப்பிடிப்பவர்களாக உள்ளனர். பொலிஸ் மற்றும் பொது ஒழங்கு, காணி மற்றும் காணி அமர்வு போன்றவை தொடர்பான பிராந்திய இயந்திரம் சிங்கள மக்களின் வாழ்வைக் கடினமாக்க அல்லது அவர்களை ஒட்டு மொத்தமாக வெளியேற்ற விரும்பினால் ஆளும் அதிகாரிகளுக்கு கணிசமானவளவு அதிகாரங்களை வழங்குகிறது".[41]

13ஆம் திருத்தம் மற்றும் மாகாண சபை மசோதாப் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டபோது, பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடமிருந்து பலத்த விமர்சனத்தைப் பெற்றுக் கொண்டது. பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் 13ஆம் திருத்தச் சட்டத்தைத் திணிப்பதில் இந்தியாவின் ஈடுபாடு இலங்கை அரசின் ஒற்றையாட்சித் தன்மையின் மீறல், பிரிவினைவாத சக்திகளுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டமை போன்ற அத்தகைய விடயங்களில் கவனம் குவிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, திருத்தம் மற்றும் மாகாணசபை மசோதாவை இந்திய அழுத்தத்தின் பெறுபேறு எனக்கூறி

---

[39] See Lakshman Marasinghe and Jayampathy Wickramaratne (eds), *Judicial Pronouncement on the 13th Amendment, Institute for Constitutional Studies*, Colombo, 2009, pp.01-128.

[40] ibid.pp.85-87.

[41] ibid.p.84.

நிராகரித்தது. இலங்கை ஜனாதிபதியின் சம்மதத்தின்கீழ் இவ்வுடன்படிக்கை கைசாத்திடப்பட்டதால், 13ஆம் திருத்தத்தை நிராகரித்து நாட்டின் இறைமையைப் பாதுகாப்பது மக்கள் பிரதிநிதிகளின் கடமையாகும் எனக்கூறி வாதிட்டனர். பாராளுமன்ற விவாதம் நாட்டைப் பிரிப்பதை நோக்கிய ஒரு அடியெடுப்பு எனவும் ஒரு வெளிநாட்டுச் சக்தியினை திருப்திப்படுத்த தேசிய இறைமையைத் தாரை வார்ப்பதற்கான ஒரு அறிகுறியாகவும் அடையாளம் காட்டி மாகாணசபைகளுக்கெதிராக ஒரு அபிப்பிராயத்தை உருவாக்கியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னணிப் பேச்சாளர்களில் ஒருவரான திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடியின் உரையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில சுருக்கக் குறிப்புகள் பின்வருமாறு:

இந்நாட்டின் முன்நோக்கிய அடியெடுப்பின் திசையை மாற்ற நாம் முயற்சிக்கும்போது, இது வரலாற்றில் ஒரு நொடியாகவுள்ளது. எமது மொழி மதிப்பிழக்கப்படவுள்ளது. எமது தேசம் சிதைவடையவுள்ளது. அத்துடன், எமது இறைமை ஒரு அடிமைப் பிரதேசமாக மாற்றப்படவுள்ளது....ஐயா, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இந்தியாவுக்கு கீழ்ப்பட்டதாக இருந்ததே இல்லை. நான் என்ன கூறினேன் என்றால், இந்தியாவின் பலத்திற்கு, அழுத்தத்தின் அச்சுறுத்தலுக்கு இலங்கையானது உட்பட்டிருக்கக் கூடாது....தற்போது சபையின் முன்னுள்ள மசோதாக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. ஏனெனில், இந்நாட்டில் பரந்துபட்ட வெகுஜனங்கள் மாகாண சபைகளை அல்லது மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதை விரும்பியிருந்தன. பரந்து விரிந்த வெகுஜனங்கள் அவற்றை விரும்பவில்லை. இம்மசோதாக்கள் ஒரு சிறிய தமிழ் இனவாத சிறுபான்மையினரின் கோரிக்கைகளைத் திருப்திப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது....இறுதியாக, ஐயா: இதனை நான் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். முப்பது விகிதமான பிரதேசமும் அறுபது விகிதமான கடற்கரையும், பன்னிரெண்டு விகித மக்களுக்கு செல்லும் இந்நாளைக் காண அஞ்சுகின்றேன்...”[42]

நாட்டின் தென் பகுதியில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய சோசலிச முன்னணியை உருவாக்கிய அரசியல் கட்சிகள் மாத்திரமே தேர்தலில் பங்குபற்றின. ஜே.வி.பி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்தன. தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் (PPM) என்ற பெயரில் ஜே.வி.பி க்காக செயற்பட்ட இராணுவ முன்னணி, வாக்களார்கள் மத்தியில் அச்ச உணர்வினை ஏற்படுத்தி அதன் வன்முறை நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியது. தேர்தல் பிரச்சாரம் மாகாண சபை முறையை ஆதரித்த அத்தகைய அரசியல் கட்சிகளால் பங்கேற்கப்பட்டதனால் அது ஒரு கட்டுப்பாடு நிறைந்த ஒன்றாக இருந்தது. தீவீரவாத சக்திகள் வாக்காளர் மத்தியில் அச்ச உணர்வினை ஏற்படுத்தியமையாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலைப் பகிஷ்கரித்ததாலும் கணிசமான அளவு வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்லாது வீடுகளில்

[42] *Hansard*, 10 November 2010, Cols.1393-1394, 1401-1402.

தங்கியிருக்க நிர்பந்திக்கப்பட்டனர். சில மாதங்களுக்குப் பின்னர், இதனை ஒத்த சூழ்நிலை மாகாண சபைத் திட்டத்தை நிராகரித்திருந்த விடுதலைப்புலிகள் தமிழ்த் தேசிய இயக்கத்தை நசுக்கும் சிங்கள அரசாங்கத்துடன் இணைந்து இப்போது பணியாற்றும் இந்தியாவின் சதித்திட்டத்துக்கு பலியாகியுள்ள தமிழ் குழுக்களை அடையாளம் கண்டு தென்பகுதியில் ஜே.வி.பி ஐ போன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாகாண சபைத் தேர்தலில் விடுதலைப் புலிகள் வாக்காளர்களை எச்சரித்தபோது கண்டு கொள்ளப்பட்டது.[43]

இச் சந்தர்ப்பத்தில் மாகாண சபைகள் பற்றிய கருத்து ஒரு வெளிச்சக்தியால் திணிக்கப்பட்ட ஒரு தேவையற்ற சுமையாக மக்கள் மத்தியில் தென்பட்டது. வாக்களிப்பு நிலையங்களைச் சுற்றிப் பாரிய இராணுவ மற்றும் பொலிஸ் பிரசன்னத்தின்கீழ் தெற்கிலும் வடக்கிலும் தேர்தல்கள் நடத்தப்பட்ட அதேநேரம், தீவிரவாத சக்திகள் வாக்களிக்கச் செல்லும் வாக்காளர்களை கொல்லப் போவதாக அச்சுறுத்தினர். இச்சந்தர்ப்பத்தில் "சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுடன்" தொடர்பான வழிமுறைகளுடன் அதன் வருகை இணைந்திருக்காமையினால் தேர்தல் செயன்முறைகூட மாகாண சபைகளுக்கு அதிகம் தேவைப்படும் சட்டபூர்வத் தன்மையை வழங்கத் தவறிவிட்டன.

1982 இல் அரசியல் வன்முறைக்கு மத்தியில் இடம்பெற்ற நாட்டின் முதலாவது மக்கள் தீர்ப்பை, ஆளும் அரசாங்கம் அதன் அதிகாரத்தைப் பலப்படுத்தத் தந்திரமாக செயற்பட்டதைப் போன்று 1988 மாகாண சபைத் தேர்தலையும் அரசாங்கம் கையாண்டது என எதிர்க் கட்சிகள் அடையாளங் கண்டன. 1989 இல் உடன்படிக்கையினையும் மாகாண சபையினையும் தீவிரமாக எதிர்ப்பவராக இருந்த ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச ஆட்சிக்கு வந்தார். 1994 இல் மாகாண சபைகளுக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கையில் பிரதான அரசியல் செயற்பாட்டாளராவிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆளும் கட்சியாக மாறியதுடன் அது இன்றும் அதிகாரத்தில் தொடர்ந்தும் இருந்து கொண்டிருக்கின்றது. சிரிப்புக்குரிய விடயம் என்னவெனில், 1989 தொடக்கம் மாகாண சபைகள் அம்முறையின் எதிராளிகளுடன் சக வாழ்வில் ஈடுபட வேண்டியிருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது அதன் (மாகாண சபைகளின்) 21 வருட காலத்தில் 16 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தைப் பிடித்திருக்கின்றது. ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவின்கீழ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் 1995 இற்கும் 2002 வரையான காலப்பகுதியில் புதியதொரு அதிகாரப் பகிர்வுத் திட்டத்திற்காக நடவடிக்கை எடுத்தாலும் 1988 அதிகாரப் பகிர்வை மறுபக்கமாகத் திருப்பும் செயற்பாடுகள் அவருடைய காலப்பகுதியிலேயே இடம்பெற்றன.

---

[43] The situation in the North and East is discussed in the next section.

04. சிறுபான்மை இனங்களும் மாகாண சபைகளும்

இலங்கையில் நீண்டகாலம் இடம் பெற்ற இந்திய மத்தியஸ்தத்தின் இறுதிப் பெறுபேற்றை ஏற்படுத்திய இந்திய - இலங்கை உடன்படிக்கையினை வரைந்தவர்கள் எதிர்பார்த்த இணைந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் ஒரு மாகாண சபையை உருவாக்குவது என்பது தேசிய நல்லிணக்கத்திற்கான ஒரு அரசியல் வழி முறையாகவன்றி இந்திய அமைதி காக்கும் படையின் விடுதலைப் புலிகளுக்கெதிரான இராணுவக் கையாளுகைக்குப் பலம் சேர்க்கும் ஒரு வழிமுறையினை ஏற்படுத்திக் கொடுத்தது. உடன்படிக்கைக்கும் இந்திய சமரசப் பேச்சாளர்களால் அபிவிருத்தி செய்யப்பட்ட மாகாண சபைக் கருத்துக்கும் ஆதரவு அளிப்பதாகத் தமது உறுதிமொழியைப் படிப்படியாக வழங்கி விடுதலைப் புலிகளின் தலைமை மிகத் தந்திரமாகச் செயற்பட்டது. இந்திய அமைதிப் படையின் வருகையின் மிக ஆரம்பத்திலேயே விடுதலைப் புலிகள் தலைமைத்துவம் இந்தியாவை இலங்கை தமிழர்களின் சுய நிர்ணய பிரச்சினையினை தாரை வார்த்து "தந்திரோபாய சமாதானத்தை" அடைந்து கொள்ள முயற்சிக்கின்றது என இந்தியாவை கண்டித்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்டதன் பின், தனது முதலாவது பகிரங்க உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பின்வருமாறு கூறினார்:

"இவ்வுடன்படிக்கை தமிழர்களின் பிரச்சினைகளோடு மாத்திரமே தொடர்புபட்டிருக்கவில்லை. இது பிரதானமாக இந்திய - இலங்கை உறவுகளுடன் தொடர்புடையது. கூடவே, இது தன்னுள் இந்தியாவின் தந்திரோபாய செல்வாக்குப் பரப்புக்குள் இலங்கையை இணைத்துக் கொண்டிருப்பதற்கான தத்துவம் மற்றும் தேவைப்பாடுகளைக் கொண்டிருக்கிறது... கட்டாயமாக எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட வகையில் எமது அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்க ஒரு வல்லரசு முடிவு செய்திருக்கும்போது, நாங்கள் என்ன செய்வது? ".[44]

மேற்போந்த கூற்றில் காட்டப்பட்ட கையாலாகாத நிலை உண்மை அன்று. மிகச் குறுகியதொரு காலப்பகுதியினுள் விடுதலைப் புலிகள் மீண்டும் தமது ஆயுதப் போராட்டத்துக்கு திரும்பினர். இந்தத் தடவை இலங்கை ஆயுதப் படைகளுக்கு எதிராகவன்றி, இலங்கைத் தமிழர்களின் பாதுகாவலனாக வந்த இந்திய அமைதிப் படைக்கெதிரான விடுதலைப் புலிகளின் தீவிர ஆயுத நடவடிக்கை "ஒரு வெளிச்சக்தியிடமிருந்து" இரகசிய இராணுவ உதவியை விடுதலைப் புலிகள் அமைப்பு பெறுகிறது எனும் சந்தேகத்தை இந்திய வட்டாரத்தில் ஏற்படுத்தியது.[45] இந்திய அமைதிப் படையுடன் முழு அளவிலான யுத்தத்தில் ஈடுபடுவதற்கான விடுதலைப் புலிகளின் தீர்மானத்திற்கு பிற்பாடு எழுச்சியடைந்த சூழ்நிலை இணைந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபை உருவாக்கத்திற்கு இட்டுச் செல்லும் நிகழ்வுகளைத் தீர்மானித்தது. இந்திய வட்டாரம் விடுதலைப் புலிகளுக்கெதிரான தமது இராணுவக் கையாள்கைக்கு

---

[44] Ram, Mohan, *Sri Lanka, Fractured Island*, Penguin Books, 1989, pp.147-148.

[45] Bandara, A.M. Navaratna, op. cit., p.132.

சட்ட பூர்வத்தன்மையைக் கொண்டுவர மாகாணசபை முறையைப் பயன்படுத்த விருப்பங் கொண்டிருந்தனர். அப்போதைய இந்திய உயர்ஸ்தானிகர் ஜே. என். தீக்சித் மாகாணசபை முறை இறுதியில் இந்திய இராணுவத்தின் ஒரு அரசியல் ஆயுதமாக மாறியிருந்ததைப் பின்னர் ஏற்றுக் கொண்டார்:

"எமது இராணுவத் தலைமைப் பீடமும் இந்திய அமைதி காக்கும் படையின் உயர் கட்டளையகமும் தேர்தலை நடத்துதல் மற்றும் மாகாணசபையின் எழுச்சி இலங்கைத் தமிழ் பொதுசன அபிப்பிராயத்தில் விடுதலைப் புலிகளுகெதிரான இந்திய அமைதிப் படையின் நடவடிக்கைக்கு அவசியமான அரசியல் நம்பகத் தன்மையை வழங்கும் எனும் கருத்தைக் கொண்டிருந்தனர். எமது புலனாய்வு அமைப்புகள் ஏதேனும் ஒரு வழிமூலம் தேசிய அரசியல் நீரோட்டத்தினுள் விடுதலைப் புலிகளை மீண்டும் கொண்டு வரும்வரை இத்தேர்தல்கள் நடைபெறக்கூடாது என நினைத்தன.....எனினும், நான் இந்திய - இலங்கை உடன்படிக்கையில் எதிர்பார்க்கப்படும் அரசியல் ஏற்பாடுகளை நடைமுறைக்கு கொண்டு வருவது விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தி இந்திய அமைதிப் படையின் நடவடிக்கைக்கு சட்டபூர்வத் தன்மையைப் பெற்றுக் கொடுக்கும் என நினைத்தேன்".[46]

மாகாண சபைத்தேர்தல்களுக்கு சற்று முன்னர், ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்குப் பாதுகாப்பளிப்பது இந்திய அமைதிப் படையின் பொறுப்பு என இந்திய அரசாங்கத்துக்கு தெரிவித்தார். அவர் இந்திய வட்டாரத்துக்கு இந்திய - இலங்கை உடன்படிக்கை விதிகளின்கீழ் மாகாண சபைகள் உருவாக்கத்திற்கு இட்டுச் செல்லும் அரசியல் வழிமுறையினை ஏற்படுத்துவது இந்தியாவின் பொறுப்பு என்பதை நினைவூட்டினார். ஆரம்பத்தில் இந்திய உயர்ஸ்தானிகர் இவ்வேண்டுகோளை இலங்கையின் உள்நாட்டு அரசியலில் தலையிடுமாறு விடுக்கப்பட்ட அழைப்பாகக் கருதினார். இருப்பினும், இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் தமிழ் மாகாண நிர்வாக உருவாக்கம் இந்திய அமைதிப் படைக்கு மேலதிக பலம் சேர்க்கும் எனும் வாதத்தைக் கொண்டிருந்தமையால் அவ்வாறு செய்வதற்கு இணங்கினர்.[47] இராணுவ நிலைவரம், குறிப்பாக, விடுதலைப் புலிகளிடமிருந்து வந்த கடும் எதிர்ப்பு இந்தியக் கொள்கை வகுப்பாளர்களை வட - கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் ஓர் குறிப்பிட்டளவு ஆயுதக் கையாள்கைத் திறனை வேண்டி நிற்பதால், தேர்தல் வழிமுறையில் பங்குபற்ற மிதவாத அரசியல் கட்சிகளில் அன்றி, முன்னாள் இந்திய ஆதரவுத் தீவிரவாதக் குழுவில் தங்கியிருக்க நிர்ப்பந்தித்தது. இந்திய அமைதிப் படையின் தேர்தல் வழிமுறையின் பாதுகாப்புக் கையாள்கை மற்றும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) மாகாண சபை முறைக்கு அதிகம் தேவைப்பட்ட சட்டபூர்வத் தன்மையை ஏற்படுத்துவதில் அதிகம் உதவியாக இருக்கவில்லை. கிழக்கு மாகாணத்தில் தேர்தல் விடுதலைப் புலிகள்

---

[46] Dixit, J.N. *Assignment Colombo*, Vijitha Yapa Bookshop, Colombo, 1998, p.242.

[47] ibid.pp.243-244.

மற்றும் ஓரளவு ஜே. வி. பி வன்முறை, அத்துடன் கூடவே இந்திய அமைதிப் படையின் இராணுவக் கையாள்கைகளுக்கு மத்தியில் நடைபெற்றது.

தமிழ் சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சிகள் மற்றும் தீவிரவாதக் குழுக்கள் வடக்குக் கிழக்கில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கான யோசனை தொடர்பில் வேறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தன. மிதவாத தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி (TULF) ஒரு அரசியல் தீர்வினைக் காணும் இந்திய முயற்சியுடன் உடன்பட்டாலும், மாகாண சபைத் தேர்தல்களில் பங்குபற்றுவதில்லை என முடிவு செய்தது. விடுதலைப் புலிகளை அடக்காது வடக்கு மற்றும் கிழக்கில் தேர்தல்களை நடாத்துவதற்கு தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி ஆதரவளிக்கவில்லை. விடுதலைப் புலிகளினால் அரசியல் எதிரிகளாகக் கணிக்கப்பட்ட தமிழ் தீவிரவாதக் குழுக்கள் விடுதலைப் புலிகளுக்கெதிரான இந்திய அமைதிப் படையின் நடவடிக்கைகளுக்கு சட்டபூர்வத் தன்மையை வழங்கத் தமிழ் மாகாண அரசாங்கத்தை உருவாக்க விரும்பிய இந்திய வட்டாரத்துடன் உடன்பட்டிருந்தன. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் அதன் கூட்டணிப் பங்காளி ஈழத் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ENDLF) தேர்தலில் பங்கேற்கத் தீர்மானித்தன. அதேவேளை, புதிதாகத் தோற்றம் பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) தமது சமூகத்துடன் அதன் அரசியல் நம்பகத்தன்மையைப் பரிசோதிக்க தீர்மானித்தது. அது தமிழ்ப் பெரும்பான்மை வட மாகாணத்துடன் இலங்கையில் ஆகக் கூடுதலான முஸ்லீம் சனத்தொகையைக் கொண்ட கிழக்கு மாகாணத்தின் இணைப்பை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அது அக்கட்சியுடன் கிழக்குவாழ் முஸ்லீம்களை ஒழுங்குபடுத்துவதற்கே தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தது. முஸ்லீம் காங்கிரஸ், தேர்தலை அக்கட்சியை சுற்றி முஸ்லீம் மக்களை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்த நினைத்தது. இத்தேர்தலில் முஸ்லீம் காங்கிரஸ் 17 ஆசனங்களை வென்றது. தமிழ்த் தீவிரவாதிகளின் செயற்பாடுகள் மற்றும் தமிழ் ஆதிக்கமிகு மாகாண அரசாங்கத்தை நோக்கிய அவர்களது முன் முயற்சியினால் சலிப்படைந்திருந்த கிழக்கு மாகாண முஸ்லீம்களின் அரசியல் கட்சியாக எழுச்சியுற்றது.[48] ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) மற்றும் ஈழத் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ENDLF) கூட்டணி மாகாண அரசாங்கத்தை உருவாக்கும் வெற்றியாளராக எழுச்சியடைந்தது. சுவாரஸ்யமிக்க வகையில் வட மாகாணத்திலுள்ள 32 ஆசனங்களும் போட்டியின்றி அவர்களது கைக்கு வந்தது. கிழக்கு மாகாண நிலவரம் வன்முறை சூழ்நிலையைப் பயன்படுத்தி இந்திய அமைதிப் படையின் உதவியுடன் வெற்றியீட்டிய குழு தேர்தல் மோசடி செய்தது எனும் பரந்துபட்ட சந்தேகத்தை ஏற்படுத்தியது.

இருப்பினும், இணைக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபை கொழும்பிலுள்ள அரசாங்கத்திடமிருந்து அரசியல் மற்றும் நிர்வாகம் ஆகிய இரு

---

[48] Ameerdeen, Vellaithamby, *Ethnic Politics of Muslims in Sri Lanka*, Centre for Minority Studies, Kandy, 2006, p.140-142, 164-165.

ஆதரவுகளைப் பெறவில்லை. புதிய மாகாண நிர்வாகத்திற்கு அதிகம் தேவைப்பட்ட பொதுப் பரப்பினைக் கட்டுப்படுத்தி இராணுவ நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருந்த அதேவேளை, கொழும்பிலுள்ள அரசாங்கம் மாகாண சபை நிருவாகத்தின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் அதன் நடவடிக்கைகளில் குறியாக இருந்தது. 1989 தொடக்கம் மாகாண சபைகள் இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு எதிரானவரும் கூடவே, அதனைக் குழப்புபவருமாக இருந்த ஆர். பிரேமதாசாவின் அரசாங்கத்துடன் தொழிற்பட வேண்டியிருந்தது.[49] விடுதலைப் புலிகள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழர்களின் தலைமைத்துவமாகத் தம்மை உருவாக்கிக் கொள்ள இந்திய அமைதிப்படையின் பிரசன்னத்தைப் பயன்படுத்தும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தலைமையின் நோக்கத்தை விரக்தியுறச் செய்ய விரும்பிய அரசாங்கத்துக்கு ஒரு பொருத்தமான சூழலை வழங்கியது. இந்திய அமைதிப் படையின் வாபஸ் பெறலை ஏற்படுத்திக் கொடுக்க விடுதலைப் புலிகளுடன் ஒரு புரிந்துணர்வினைப் புதிய அரசாங்கம் ஏற்படுத்தியபோது, கிழக்கு மாகாண சபையின் தலைமைத்துவம் இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கையின் ஒரு முன்னரங்காக மாறியது. கிழக்கு மாகாண சபைத் தலைமை, அரசாங்கம் இதயசுத்தியுடன் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பரவலாக்கவில்லை என்பதையும் இலங்கை அரசாங்கத்தினால் உடன்பட்டது போன்று ஒரு துணைத் தேசிய அரசாங்கத்தினை உருவாக்கத் தேவையான நிர்வாக, நிதி மற்றும் சட்டத் திறன்களை மாகாண சபைகளுக்கு வழங்க விரும்பமில்லை என்பதையும் கண்டு கொண்டது.

அதனால், பல்வேறு பிழையான தகவல்களுடன் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வென்ற வகையில் வெற்றிகரமாக செயற்பட வேண்டிய பிராந்தியத்தில் அதிகாரப் பகிர்வு அரசாங்க முறை நடைமுறைக்கு வந்தது. மிதவாத தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக் கட்சி இவ்வழிமுறையில் பிரசன்னமாகாமல் இருந்தமையால் அரசியல்வாதிகளாக மாறிய முன்னாள் தீவிரவாதிகளால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் மாகாண சபை முறைக்கு சிறந்ததொரு ஆரம்பத்தை வழங்க முடியாமல் போனது. அதிகம் தேவைப்படட்ட நிதி மற்றும் நிர்வாக வளங்கள் நிர்வாகத்துறையினால் விரைந்து ஏற்பாடு செய்யப்படாமையானது, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நிர்வாகம் அதிகாரத்திலிருந்த அரசியல் தலைவர்களுடன் முரண்படும் நிலைக்குத் தள்ளப்பட்டு இறுதியில் வட கிழக்கு மாகாண சபையை ஜனாதிபதி கலைக்கும் நிலையை ஏற்படுத்தியது. இந்திய அமைதி காக்கும் படையை மீண்டும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப விடுதலைப் புலிகளுடன் ஆர். பிரேமதாச ஓர் தற்காலிகப் போர் நிறுத்தத்தைச் செய்தபோது, எழுச்சியுறும் புதிய சமன்பாட்டினால் பாதிப்படைய நேர்ந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, இந்திய அமைதிப் படையின் ஆதரவைப் பயன்படுத்தித் தமிழ்த் தேசிய இராணுவத்தை (TNA) உருவாக்க முடிவு செய்தது. இறுதியில் ஈழமக்கள்

---

[49] Dixit, J.N. op. cit., pp.230-235.

புரட்சிகர விடுதலை முன்னணி தனது ஒரு தலைப்பட்ச சுதந்திரப் பிரகடனத்தை அறிவித்தபோது, அரசியலமைப்பின்மூலம் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி ஜனாதிபதி கிழக்கு மாகாண சபையைக் கலைத்தமை, கிழக்கு மாகாண சபைக்கு விழுந்த இறுதி அடியாகவிருந்தது. மாகாண சபை முறையினை எதிர்த்தவர்கள் மாகாண சபை, பிரிவினைவாதிகளுக்கு அவர்கள் தமது சுதந்திர அரசுக்கான கோரிக்கையை முன்னெடுப்பதற்கான களத்தை வழங்குகிறது எனும் அவர்களது வாதத்துக்கு ஆதாரத்தை இச்சூழ்நிலையில் கண்டு கொண்டனர். கொழும்பிலிருந்த அரசாங்கம் இக்கருத்துக்கு இசைவானதாக இருந்ததனால் வரதராஜப் பெருமாளின் மாகாண அரசாங்கத்தின் கலைப்புக்குப் பின்னர், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான மாகாண சபையை மீண்டும் ஏற்படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. துண்டிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் தேர்தல்களை நடத்த கொழும்பிலுள்ள அரசாங்கம் தீர்மானித்தபோது, இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்ட முழு அளவிலான போரில் ஈடுபட்டது. இதனால் மாகாண சபைகள் மீண்டும் ஒரு தடவை அதன் இராணுவ மோதல்களுக்கான சட்டபூர்வத் தன்மையை கண்டு கொள்ளப் பயன்படுத்தப்பட்டது. மறுபுறம், பாராளுமன்ற தேர்தல்களில் மாத்திரம் ஆர்வம் காட்டும் மிதவாதக் கட்சியான தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி தவிர்ந்த சிறுபான்மை அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை, மாகாண சபைகள் தமது வாக்காளர்களைச் சென்றடைவதற்கான ஒரு பொறிமுறையாக மாறியுள்ளது.

5. மாகாண சபைகளின் தேர்தல் அரசியல்

தேர்தலினூடாக இலங்கை அரசியல் கட்சி முறையின் ஒரு பணியாக மாகாண சபைகளின் உருவாக்கம் இடம்பெற்றபோது, அது அதிகார உயர் குழாமினரின் அரசியல் தந்திர கையாள்கையாக மாறியது. 1988 தொடக்கம் இன்று வரை மாகாண சபைகளின் தேர்தலில் ஒரு அடையாளங் காணக்கூடிய உண்மையான அரசியலாக இருக்கின்றது.

முன்சென்ற பகுதிகளில் விவாதிக்கப்பட்டது போன்று மாகாண சபைகள் பற்றிய கருத்து மாத்திரமன்றி, மாறாக 1988இல் அதன் உருவாக்கத்துக்கு இட்டுச் சென்ற தேர்தல் செயன்முறை தீவரவாதக் குழுக்களின் வன்முறை மற்றும் 1987 இந்திய - இலங்கை உடன்படிக்கையின் பின்னணியில் பிரதான எதிரக்கட்சியின் பகிஷ்கரிப்புக்கு மத்தியில் தோற்றம் பெற்ற அதிகார அரசியலினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. 1988 இல் இலங்கையின் தெற்கு மற்றும் வடக்கு பகுதிகளில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்கள் மத்தியிலுள்ள அதிகார உயர்குழாமினரின் ஒரு கருவியாக மாகாண சபைகள் மாறும் சாத்தியத்தை நிருபித்தது. ஜே. வி. பி மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு ஆயுத இயக்கங்களைச் சமாளித்தல் அத்துடன் 1989இல் இடம்பெறவிருந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களை வெல்லும் அதன் முயற்சியில் பெரும்பான்மை சமூகத்தின் ஆதரவை வெற்றி கொள்ளல் என்ற இரண்டக

நிலையை எதிர்கொண்டிருந்த ஐ. தே. க தலைமைத்துவம் மாகாண சபைகளை ஆளும் கட்சியின் ஒரு விரிவடைந்த அரசியல் நிறுவனமாக உருவாக்கப் பயன்படுத்தியது. மறுபுறம், வட- கிழக்கு மாகாண சபையின் உருவாக்கம் விடுதலைப் புலிகளுக்கெதிரான இந்திய அமைதிப் படையின் போரின் சட்டபூர்வத் தன்மையை அதிகரிக்கும் எனும் கருத்தினை ஏற்றுக்கொண்ட இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள், தனது சொந்த அரசாங்கத்தினால் ஒரு காலத்தில் போசிக்கப்பட்ட அச்சுறுத்தலை இல்லாதொழிக்கும் பொறுப்பு வழங்கப்பட்ட..." இந்திய அமைதிப் படையின் பிரிவினைவாதிகளுக்கெதிரான இலங்கையின் யுத்தத்தை முன்னெடுக்க..." மாகாண சபைகள் ஒரு காரணமாகவுள்ளது என சிங்களப் பெரும்பான்மையினரை ஏற்கச் செய்ய ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு உதவியது.

நாட்டின் தெற்கு அதேபோன்று வடக்குப் பகுதிகளில் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்தும் ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத்தின் தீர்மானம் நாட்டின் இறைமையைத் தியாகம் செய்ததாக அரசாங்கத்தைக் கண்டித்த ஜே.வி.பியினால் ஒழுங்கு செய்யப்பட்ட வன்முறை நடவடிக்கைகள் தொடர்பில் தனது அரசியல் அதிஷ்டங்களைக் கருத்திற்கொண்டு எடுக்கப்பட்டது என்பது மிகத்தெளிவாகத் தெரிந்தது. தேர்தல் நாட்களின் போதான வன்முறை 1980இல் இடம்பெற்ற மாவட்ட சபைத் தேர்தல் மற்றும் 1983 சர்வசன வாக்கெடுப்பின்போது கையாண்ட வழிமுறையைத் தந்திரமாகக் கையாளும் ஒரு சிறந்த சந்தர்ப்பத்தை வழங்கியது.[50] மாகாண சபைத் தேர்தலுக்கெதிரான ஜே. வி.பி வன்முறை மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பகிஷ்கரிப்பு மாகாண மக்கள் மத்தியில் தனது அதிகார தளத்தைப் பலப்படுத்த உதவியாகவிருக்கும் என்பதை ஐ.தே.க தலைமைத்துவம் கண்டுகொண்டது. ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபைத் தேர்தலில் வெற்றியாளராக எழுச்சியடைந்த அதேவேளை, பழைய இடதுசாரிக் கட்சிகளின் கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற ஒரு குழு எதிர்க்கட்சியாகின. மாகாண சபைத் தேர்தல்களை ஐ. தே. கட்சி அரசாங்கம் பயன்படுத்திய விதம் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட மாகாண அரசாங்கம் 13ஆம் திருத்தத்தில் உறுதியளிக்கப்பட்டது போன்று அதிகாரங்களைப் பரவலாக்குவதை விடவும் தனது சொந்த இலாபத்திற்காகப் புதிய நிறுவனங்களைப் பயன்படுத்த ஆர்வங் கொண்டிருந்ததை எடுத்துக் காட்டியது. அனைத்து முதலமைச்சர்கள் மற்றும் ஆளுனர்கள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் அரசியல் விருப்புக்குரியவர்களாக இருந்ததனால் அதிகாரப் பகிர்வுச் செயன்முறையின் கட்டுப்பாட்டிற்கான இடத்தினை மத்தியரசு பெற்றுக் கொண்டது. இதன்விளைவாக, மாகாண சபைகள் உண்மையில் ஒரு சுயாதீன துணைத் தேசிய அரசாங்கமன்றி பிராந்திய மக்களைச் சென்றடைவதற்கான மத்தியரசாங்கத்தின் மற்றொரு முகவர் அமைப்பாகியது.

இந்நிலைமை 1988இன் இறுதிப் பகுதியில் இந்திய உயர் ஸ்தானிகர் வடக்கு மற்றும் கிழக்கில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது

---

[50] Reports of the Election Commissioner of Sri Lanka, 1980, 1983 and 1988.

தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்தபோது, அவர் "....1989 முதல் அவர் ஜனாதிபதியாக தொடர்ந்து பதவி வகிக்காவிடினும் கூட நாட்டில் ஐ. தே. கட்சியின் ஆட்சியை எத்தகைய தாள தந்திரங்களையேனும் பயன்படுத்தித் தொடரச் செய்வதே ஜெயவர்த்தனவின் ஒரே நோக்கமாகும்..."[51] என்று கூறத் தூண்டியது. 1988 நவம்பரில் ஏற்கனவே கலந்துரையாடியது போன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றபோது, மாகாண சபைகளை ஏற்படுத்தும் அரசியல் செயன்முறையின் சக்கரங்களை இந்திய அரசாங்கமும் இந்திய அமைதிப் படையுமே சுழற்றின. 1988இல் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்தும் தீர்மானத்துடன் கலந்திருந்த அத்தகைய அரசியல் அவசரநிலைகள் தேசிய மட்டத்தில் அதிகார அரசியலைக் கையாள கொழும்பிலுள்ள அதிகார உயர் குழாமினரின் ஒரு கருவியாக மாகாண சபைகள் மாறியிருந்தமை போன்று மாகாண சபை முறையின் தலைவிதியைச் சுட்டிக் காட்டியது.

1993இல் தென் பகுதியில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல்கள் மீண்டுமொரு தடவை இதனை நிரூபித்தது. மாகாண சபைத் தேர்தல்கள் 1994இல் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணி மத்திய அரசாங்கத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றும் ஏணிப்படியாகியது. மேல் மாகாண சபையில் அவருடைய வெற்றி அத்துடன் மேல் மாகாண முதலமைச்சராக அவர் சத்தியப்பிரமாணம் செய்தமை விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரி என சந்தேகிக்கப்படும் கொலையாளியினால் ஜனாதிபதி ஆர். பிரேமதாச கொல்லப்பட்டதால் ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தை நிரப்பும் ஒரு பலமான போட்டியாளராக அவரை மாற்றியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான கூட்டணி ஆட்சியிலிருந்த அரசாங்கத்தினால் தேர்தலை வெற்றிகொள்ளக் கையாண்ட சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைமுறையை மீறும் கடுமையான தந்திரோபாயங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தென் மாகாண சபையில் ஆளும் கட்சி மாகாண அரசாங்கத்தை அமைப்பதைத் தடுக்க மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளை அச்சுறுத்த முயற்சித்தது. இருப்பினும், 1985இல் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினால் இந்திய அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தின் அம்சங்களை உள்ளடக்கிய வகையில் அவருடைய அரசாங்கம் புதியதொரு அதிகாரப்பகிர்வுத் திட்டத்தை அறிமுகம் செய்தாலும், தனது ஜனாதிபதிப் பதவியின்போது திருமதி பண்டாரநாயக்கா அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகளைப் பரவலாக்கும் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை.[52] அவருடைய அதிகாரப் பகிர்வு கொள்கையின் இருமைத்தன்மை அதாவது, மத்திய பணியகமைப்பு ஏற்கனவே மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீள மத்தியில் குவித்தபோது, அதனை கைகட்டி பார்த்துக்கொண்டிருந்ததுடன் புதியதொரு அதிகாரப் பகிர்வு திட்டத்திற்காக பாரிய பிரசார நடவடிக்கைகளை

---

[51] J.N. Dixit, op. cit., 251.

[52] Silva, K.M. De, op. cit., p.306.

ஒழுங்குபடுத்தியமை மத்திய அரசியல் தலைமைத்துவம் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் கொள்கையான அதிகாரத்திலிருக்கும் கட்சியின் அரசியல் அதிகாரத்தை முன்னிறுத்துவதற்கான கருவியாக மாகாண சபைகளைப் பயன்படுத்துதல் என்பதைத் தொடர்வதைக் குறித்துநின்றது.

1988இற்குப் பின்னர் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்கள் கொழும்பிலுள்ள அரசியல்வாதிகள் தமது அரசியல் கட்சிச் சார்புகளைக் கருத்திற் கொள்ளாது, தேசிய தேர்தலுக்காகத் தமது அதிகாரத்தைப் பலப்படுத்த தமக்கு உதவும் அரசியல் முகவர்களாக மாகாண சபைகளை வைத்திருக்க விருப்பங் கொண்டிருந்தனர். 1993இல் இரண்டாவது மாகாண சபைத் தேர்தல்கள் இடம்பெற்றபோது, அரசாங்கம் எதிர்க் கட்சியினர் மாகாண சபைகளின் கட்டுப்பாட்டைப் பெறுவதைத் தடுக்கப் பல்வேறு ஜனநாயகம் அல்லாத வழிமுறைகளைப் பயன்படுத்தியது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை மாகாண சபைத் தேர்தலை வெற்றிக்கொள்வதில், 1994 தேசிய தேர்தலுக்காக தயாராகிக் கொண்டிருந்தமையால் ஒரு முக்கிய இலக்காக இருந்தது. எவ்வாறெனினும், அவரது ஆட்சியின்போது, 1999 இல் வடமேல் மாகாணத்தில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல் சுதந்திரம் மற்றும் நீதியான தேர்தல்கள் பற்றிய அனைத்து ஜனநாயக நெறிமுறைகளையும் மீறிய மற்றொரு தேர்தலாக மாறியது. இது பாரியளவிலான வாக்கு மோசடி, வாக்காளர் அச்சுறுத்தல் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்களைப் பலவந்தமாக அகற்றியமையுடன் தொடர்புபட்டிருந்தது. ஊடகங்கள் தேர்தல் வழிமுறை பற்றி வெளிப்படுத்தியமை ஒரு பகிரங்க மன்னிப்பினை ஜனாதிபதி கோரவும் ஒரு விசாரணைக் குழுவினை நியமிக்கவும் நிர்ப்பந்தித்தது. இவருடைய ஆட்சியின்போது, எதிர்க்கட்சிக்குச் சொந்தமான இரண்டு முதலமைச்சர்கள் ஆளுநர்களினால் பதவி அகற்றப்பட்டதுடன், உயர் நீதிமன்றம் அவர்களின் தீர்மானம் செல்லுபடியற்றதெனத் திருத்தியமைக்க வேண்டியேற்பட்டது. ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க ஆளும் கட்சியின் தேர்தல் வாய்ப்புக்களை அதிகரிக்கும் பொருட்டுத் தனது அமைச்சரவை மட்ட அமைச்சர்களை மாகாண சபைகளின் கட்டுப்பாட்டினைப் பெற்றுக்கொள்ள அனுப்பியதன் மூலம் 2004 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் உபாயத்தை நீக்கினார்.

இறுதியாக, முதலாவது தேர்தல் இடம்பெற்று இருபது வருடங்களின் பின்னரும் அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கும் உயர்நீதிமன்றத் தீர்ப்பினைத் தொடர்ந்து தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் 2008 இல் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்த தீர்மானித்தபோது, அது விடுதலைப் புலியினருடன் இடம்பெற்றுக் கொண்டிருந்த போருக்கு சட்டப்பூர்வத் தன்மையினை வழங்கும் ஒரு சந்தர்ப்பமாகியது. முதலிரண்டு மாகாண சபைத் தேர்தல்கள் இடம்பெற்றபோது, மாகாண மக்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இடம்பெற்றுக் கொண்டிருந்த அதன் போரில் அரசாங்கத்திற்கு ஆதரவைத் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டனர். அரசாங்கத்தின் இராணுவப் படைகளால் மொத்தமாக அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றிக்குப் பின்னர், வாக்காளர்கள் போர் வெற்றிக்கு அவரின் தலைமைத்துவத்தை வழங்கியது தமது வகிபங்கிற்காக ஜனாதிபதிக்குத்

தமது நன்றியைத் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டனர். அரசாங்கம் விடுதலைப் புலிகளிலிருந்து பிரிந்து சென்ற அணியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் (TMVP) உதவியுடன் கிழக்கு மாகாணத்தில் ஒரு மாகாண அரசாங்கத்தினை நிறுவியது. இது தமது ஆயுதங்களை முழுமையாக ஒப்படைக்காமல் தேர்தலில் பங்குபற்றியது. கிழக்கு மாகாண சபையின் கரங்களைப் பலப்படுத்த 13ஆம் திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் வழிமுறையை அரசாங்கம் ஆரம்பிக்கும் எனப் பரவலாக எதிர்ப்பாக்கப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஏனைய மாகாண சபைகளும் முதலமைச்சர்களும் வடகிழக்கு மாகாண சபைக்கு கணிசமான அளவு அதிகாரங்கள் கிடைக்கப் பெறும்பட்சத்தில், அது தமக்கு நன்மையளிக்கும் என உணர்ந்தனர். இருந்தாலும், மிகக் குறுகிய காலத்தினுள் கிழக்கு மாகாண முதலமைச்சர் மாகாண சபைகளுக்கு சட்டபூர்வமாகவும் சட்டரீதியாகவும் உரித்தான அதிகாரங்களைக் கோரும் ஒரு கிளர்ச்சியாளராக வேண்டியேற்பட்டுள்ளது.[53]

2008 மற்றும் 2009 இல் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்கள் பயங்கரவாதத்திற்கு எதிரான போரை வெற்றி கொள்வதற்கான தனது தலைமைத்துவத்திற்கு ஒரு உபகாரமாக ஜனாதிபதிக்கு நன்றிக்கடன் செலுத்தும் ஒன்றாக மாகாண சபைகள் மாறியதைக் காட்டுகின்றது. அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிகள் மற்றும் அரசாங்கக் கட்சிகளின் முன்னணிப் பேச்சாளர்களும் இதனை வேண்டி நின்றனர். போர், அரசியல் கட்சி பிரசாரத்தின் முக்கிய கவர்ச்சியாகிய அதேவேளை, அரசாங்கத்தின் சில தலைவர்கள் தேர்தலில் எதிர்க்கட்சிக்கு மாகாண சபை செல்லுமானால் அதற்கு மத்திய அரசாங்கத்தின் நிதி வழங்கப்படமாட்டாது என வாக்காளர்களை எச்சரிக்கவும் செய்தனர். தேர்தல் பிரசாரம் மாகாண அல்லது உள்ளூர் பிரச்சினைகள் மற்றும் விடயங்களாகவன்றி, மத்திய மட்டத்திலுள்ள விடயங்களினாலேயே ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தது. ஆளும் கட்சி 2010 இல் இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தலுக்கான முன்னோடிப் பரிசோதனையாக மாகாண சபைத் தேர்தலைப் பயன்படுத்தியது என்பது நன்கு தெளிவாகியது. எதிர்க் கட்சி வாக்காளர்களில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு உபாயம் என்றவகையில், அரசாங்கம் தேர்தல்களை நடாத்தி மாகாண சபை ஒவ்வொன்றாக கைப்பற்ற முயல்வதைக் கண்டித்தது. 1988 இல் இடம்பெற்றது போன்று மாகாண சபைகள் தேசிய அரசியலில் உள்ள பிரதான செயற்பாட்டாளர்களின் அதிகார ஆசைக்கு இறுதியில் இரையாகின. மாகாணசபைத் தேர்தல் ஊடாக இடம்பெற்ற அதிகாரப் பலப்படுத்தல் கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் மாகாண அமைச்சர்களுக்கு ஒதுக்கப்படும் துறைகளை இறுதிப்படுத்தும் அளவுக்கு சென்றது. இச்சந்தர்ப்பத்தில், மாகாண சபைக்குள்ளான அரசியல் அரசாங்கத்தின் பலம் வாய்ந்த பிரதேச அரசியல்வாதி நிலையை கொண்டிருக்கும் ஒருவர் அல்லது ஜனாதிபதிக்கு நெருக்கமானவரால் ஆக்கிரமிக்கப்பட்டது. இதுவே 1988

---

[53] See the interview given by the Chief Minister of the Eastern Provincial Council to Peter Wonacott of *The Wall Street Journal*, February 2, 2009, <www/http//online.wsj.com/article/SB123352301226437183.html> accessed 02/07/2009.

தொடக்கம் மாகாண சபை முறையின் போக்காக இருந்தது. இதன்காரணமாக, முதலமைச்சர்கள் மாகாணத்தில் நிலவும் தொழில் வெற்றிடங்களைத் தனது அரசியல் ஆதரவாளர்களைக் கொண்டு நிரப்புகின்றார்கள் என்றும் தனது சொந்த அமைச்சுக்கு கூடுதல் நிதியை ஒதுக்குகின்றார்கள் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றது.

முடிவுரை

மாகாண சபைகள் பனிப்போரின்போது, தென்னாசியாவில் நிலவிய பிராந்திய அதிகார உருவகமைப்பின் ஓர் பக்க விளைவாக உள்ளன. மாகாண சபைகள் எனும் கருத்து ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக மாறியதுடன், இந்தியாவிடம் தேசிய இறைமையை ஒப்படைத்ததன் ஒரு குறியீடாக அதனை இனங்கண்டு இலங்கைப் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஒரு வாதப்பிரதிவாதத்தை ஏற்படுத்தியது. அதே போன்று இது உயர்குழாமினர் மற்றும் உயர்குழாமினர் அல்லாதோர் ஆகிய இருத்தரப்பினருக்கும் வரவேற்கப்பட முடியாத ஒன்றாகியது. மாகாண சபை முறை அரசாங்கக் கட்சிக்குள்ளிருந்த ஒரு பகுதியினரிடமிருந்து பலத்த எதிர்ப்பினை எதிர்நோக்கியது. மறுபுறம், அப்போது தடைசெய்யப்பட்ட அமைப்பாக இருந்த மக்கள் விடுதலை முன்னணி (JVP) அதிகாரப் பரவலாக்கத்தின் ஆதரவாளர்களைக் கொலை செய்யும் வன்முறை நடவடிக்கையை ஆரம்பிக்க உந்துசக்தியை வழங்கியது. இது எதிரணியினரால் ஒரு வெளிநாட்டு அம்சமாக அடையாளங் காணப்பட்டது. 13ஆம் திருத்தச் சட்டத்தின் அமுலாக்க வழிமுறையின்போது, அதிகாரத்திலிருந்த அரசாங்கங்கள் தமது அதிகார இலக்குகளை அடைவதற்கான ஒரு கருவியாக மாகாண சபைகளைப் பயன்படுத்திய அதேநேரம், அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பரவலாக்குவதற்குப் பதிலாக தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் மாகாண சபைகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகாரங்களை மீள மத்தியில் குவிக்கும் செயற்பாட்டில் ஈடுப்பட்டிருந்தனர். அதிகாரத்தை மீள மத்தியில் குவித்தல் கடந்த 20 வருடகால மாகாண சபைகளின் செயற்பாட்டின் பிரதான அடையாளமாக மாறியதெனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது. இச் சூழ்நிலையில் மாகாண சபைகள் கடந்த 20 வருடங்களில் இலங்கை அரசியல் சமூகத்தின் அதன் முக்கியத்துவத்தை நியாயப்படுத்தும் ஒரு பகிரங்க இடவசதியைப் பெறவே இல்லை. அவை பிராந்திய வளங்களைக் கட்டுப்படுத்த மத்திய அரசாங்கத்திற்குக் கருவியாக மாறின. இறுதியாக கடந்த 20 வருட காலத்தின்போது, மாகாண சபை முறையோடு தொடர்பான செயலூக்கமிக்க மற்றும் பிரதிபலிப்புமிகு ஆகிய இரண்டையும் கொண்ட அரசியல் 1978 அரசியலமைப்பினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட மத்திய மயப்படுத்தப்பட்ட ஆட்சி முறையின் மற்றுமொரு விரிவடைந்த நிறுவனமாக மாகாண சபைகளை ஆக்கியுள்ளது.

அத்தியாயம் - 3

சட்டப் பிரச்சினைகள்

ஜெயம்பதி விக்ரமரட்ண

இவ்வத்தியாயாத்தில் பதின்மூன்றாவது திருத்தத்தின்கீழும் மாகாண சபைகள் சட்டத்தின்கீழும் எழுந்த மிகமுக்கிய சட்டப் பிரச்சினைகள் ஆராயப்பட்டுள்ளன.[1] உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் தீர்ப்புகளின் ஒரு அளவீடு, கடந்த சில வருடங்களாக நீதிமன்றங்கள் அதிகாரப் பரவலாக்கத்துக்குச் சார்பாகவே தீர்ப்பு வழங்கி வந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது என்றுகூறுவது பொருத்தமானதாகும். இப்போக்கு தொடர்ந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

3.1 அரசியலமைப்பு அந்தஸ்து

ஆகக்குறைந்தது இரண்டு வழக்குகளிலாவது மாகாண சபை நியதிச் சட்டங்களின் அரசியலமைப்புத் தன்மை எழுப்பப்பட்டது.

1989 ஆம் ஆண்டின் வடகிழக்கு மாகாண சபையின் போக்குவரத்துச் சபை நியதிச் சட்டம், அதன் அரசியலமைப்புத் தன்மையைத் தீர்மானிப்பதற்காக ஜனாதிபதியினால் உயர் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

நியதிச் சட்டம், மத்திய அரசாங்கத்தின் போக்குவரத்து அமைச்சரின் ஒருமைப்பாட்டுடனும் சம்மதத்துடனும் வடபிராந்தியப் போக்குவரத்து சபை மற்றும் கிழக்கு பிராந்தியப் போக்குவரத்து சபைகளின் போக்குவரத்துச் சேவைகளுடன் தொடர்புபட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும், நட்டஈடு இன்றி சபைக்குக் கைமாற்றி அதற்கு உரித்தாக்குவதற்கும், மற்றும் போக்குவரத்துக்கும் பொறுப்பாக்கப்பட்ட மாகாண அமைச்சருக்கு, அத்தகைய இரண்டு சபைகள்

---

[1] See also, Lakshman Marasinghe, 'The Thirteenth Amendment', Jayampathy Wickramaratne, 'National Policy and Dual Responsibility- Two Critical Issues on Devolution', N. Selvakkumaran, 'Legislative Devolution and the Thirteenth Amendment' and Uditha Egalahewa, 'Judicial Approach to the Devolution of Power; Interpretation of the Thirteenth Amendment to the Constitution' Lakshman Marasinghe and Jayampathy Wickramaratne (eds) *13th Amendment: Essays on Practice*, Stamford Lake, Pannipitiya, 2010.

தொடர்பில் போக்குவரத்து அமைச்சரால் பிரயோகிக்கப்பட்டு வந்த தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைக் கைமாற்றுவதற்கும் முனைந்தது.

சபைகள், மாகாணங்களுக்கிடையிலும் மாகாணங்களுக்குள்ளும் வீதிப் போக்குவரத்து சேவைகளை ஏற்பாடு செய்வதனால், மாகாணங்களுக்கிடையில் வீதிப் போக்குவரத்து சேவைகளை ஏற்பாடு செய்வது தொடர்பில் நியதிச் சட்டத்தை உருவாக்குவதற்கான அதிகாரத்தை மாகாண சபை கொண்டுள்ளதா என்பது எழுப்பப்பட்ட வினாக்களுள் ஒன்றாகும். மாகாண சபை நிரலின் 8 ஆம் அம்சம் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது:

> "மாகாணத்தினுள் வீதிப்பயணிகள் வண்டிச் சேவைகளையும் மோட்டார் வாகனங்களின்மூலம் பண்டங்களை ஏற்றிச் செல்வதையும் ஒழுங்குபடுத்தலும் மாகாணங்களுக்கு இடையேயான வீதிப் போக்குவரத்துச் சேவைகளை ஏற்பாடு செய்தலும்."

உயர் நீதிமன்றம்[2] வர்த்தமானியில் வெளியிடப்பட்டவாறும் சட்டவாக்க நிறைவேற்றத்தின்பின்னர், சபாநாயகரால் சான்றுரை அளிக்கப்பட்டவாறும் வழமையாகப் பயன்படுத்தும் வண்ணமும் பதின்மூன்றாவது திருத்தத்தை அழைப்பித்து ஆராய்ந்தது. சான்றுரை எழுதப்பட்ட சட்டமூலம் சிங்களத்திலும், தமிழிலும் மட்டுமே இருந்தது. இரண்டு ஆங்கில உரைகளிலும் "மாகாணத்தினுள்" என்ற சொற்பதமே பாவிக்கப்பட்டதேயொழிய மாகாணங்களுக்கிடையேயான என்பதல்ல. ஆயினும், சட்டமூலத்தின் இரண்டு சிங்கள உரைகளிலும் சபாநாயகரின் புறக்குறிப்பையுடையதாக இருந்த சட்டமூலத்திலும் "மாகாணங்களுக்கிடையில்" என்ற சொல்லே பாவிக்கப்பட்டது.

நீதிமன்றம், பதின்மூன்றாம் திருத்தத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பரவலாக்கல் திட்டத்தின் நோக்கு, XVII அ என்னும் அத்தியாயத்தின் ஏற்பாடுகளை முழுமையாகக் கவனத்திலெடுத்து அறியப்படல் வேண்டுமென்று தீர்ப்பளித்தது. I ஆம் II ஆம் நிரல்களின் ஆய்வு, பதின்மூன்றாம் திருத்தத்தினால் எதிர்பார்க்கப்பட்ட தொடர்ச்சியான அதிகாரப் பரவலாக்கலுடன் மாகாணத்தினுள் உள்ள கருமங்களுக்குக் குறிப்பீடு செய்ய எண்ணப்பட்டதாக I ஆம் நிரல் இருந்ததாக வெளிப்படுத்துகிறது. ஒதுக்கிய நிரலிலுள்ள "தேசிய போக்குவரத்து" வீதிப்பயணிகள் வண்டிச் சேவைகள், மற்றும் தரைமூலம் பண்டங்களை ஏற்றிச் செல்லல் என்பவற்றை வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது. இவ்வம்சம் "மாகாணங்களுக்கிடையேயான வீதிப் போக்குவரத்து சேவைகளையும்" உள்ளடக்குகிறது. ஆகவே, நீதிமன்றம் 8 ஆம் அம்சம் அத்தியாயத்தின் நோக்கத்திற்கு ஒவ்வாததாகவுள்ளது எனத் தீர்த்தது. மேலும், அதன் சாதாரண அர்த்தத்தை எடுத்துக்கொண்டால், 8 ஆம் அம்சம் மிகவும் ஒவ்வாததாக உள்ளது. மாகாணத்தினுள் வீதிப் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்த ஒரு மாகாண சபையை அனுமதித்த பின்னர், ஆனால்

---

[2] JP 148.

"மாகாணத்தினுள்" அத்தகைய சேவைகளை ஏற்பாடு செய்ய விடாமை "மாகாணங்களுக்கிடையேயான" வீதிப் போக்குவரத்து சேவைகளை ஏற்பாடு செய்வதற்கு மாகாண சபைகளை அனுமதித்து, ஆனால் "மாகாணத்தினுள்" சேவைகளை அனும்திக்காத ஒரு நிலைக்கு வழிவகுக்கிறது. நீதிமன்றம் இதனை முரண்பாடொன்றாகவும் குழப்பநிலை ஒன்றாகவும் கண்டது. மாகாணங்களுக்கிடையேயான வீதிப் போக்குவரத்து, மாகாண சபையின் வரம்பெல்லைக்கு அப்பாற்பட்ட ஒன்றென நீதிமன்றம் தீர்த்தது. உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பயனாக, 8 ஆம் அம்சத்திலுள்ள "மாகாணங்களுக்கிடையேயான வீதிப் போக்குவரத்து சேவைகள்" என்பது தற்போது "மாகாணத்தினுள்ளான வீதிப் போக்குவரத்துச் சேவைகள்" என வாசிக்கப்படுதல் வேண்டும்.

நீதிமன்றம், ஒரு மாகாண நியதிச் சட்டம் மாகாணத்தினுள் வீதிப் போக்குவரத்துச் சேவைகளை மாகாண சபை ஏற்பாடு செய்ய அதிகாரமளிக்கலாமெனவும் மேலும் தீர்ப்பளித்தது. ஆனால் அரசியலமைப்பு, மாகாணத்தினுள் போக்குவரத்துச் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கான இரண்டு சபைகள் போன்ற அத்தகைய ஏனைய ஆட்களது உரிமைகளைப் பறித்துக் கொள்வதற்கு சபைக்கு அதிகாரங்களை உரித்தாக்கவில்லை. 8 ஆம் அம்சம், வீதிப் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கு சபையை அனுமதிக்கிறது. ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரம், நீக்குவதற்கான அல்லது தடை செய்வதற்கான அதிகாரத்தை உள்ளடக்குவதாகவோ, அல்லது அனுமானிப்பதாகவோ பொருள் கொள்ளப்பட முடியாது.

இரண்டு சபைகளினதும் ஆதனங்களை, நட்டஈடு வழங்காது சபைக்குரித்தாக்கல் தொடர்பில், மாகாண சபைக்கான வழக்குரைஞர் "ஆதனத்தைக் கொள்ளுதலும் தேவைக் கெடுத்தலும்" - ஒருங்கிய நிரலின் 6 ஆம் அம்சத்தில் தங்கியிருந்தார். நீதிமன்றம், மாகாணங்களுக்கிடையேயான போக்குவரத்து சேவைகள் சபையின் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டனவாயின், அப்போது, அத்தகைய சேவைகளுக்காக மற்றவரால் பயன்படுத்தப்பட்ட ஆதனத்தைக் கொள்ளுதல், அத்தகைய சேவைகளைப் பொறுப்பேற்பதற்கான அல்லது அவற்றுடன் தலையீடு செய்வதற்கான அதிகாரத்தை அதற்குரித்தாக்காது எனத் தீர்ப்பளித்தது. கொள்ளுதல் மூலம் இன்னொருவரால் ஏற்பாடு செய்யப்பட்ட அத்தகைய சேவைகளுடன் தலையீடு செய்யவும் முடியாதென்றும் குறிப்பிட்டது.

மாகாணத்தினுள் வீதிப் போக்குவரத்துச் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கு இரண்டு சபைகளுக்குமே அதிகாரமளிக்கப்பட்டிருப்பினும், மாகாண சபை அச்சேவைகளை ஒழுங்குபடுத்தி ஏற்பாடு செய்யலாமேயொழிய, அத்தகைய சேவைகளைப் பொறுப்பேற்கவோ, தடைசெய்யவோ அல்லது தலையீடு செய்யவோ முடியாது. மாகாணத்தினுள் வீதிப் போக்குவரத்துச் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கு மாகாண சபைக்கு அவசியமான வெற்றுக் காணி, ஒரு கட்டிடம் அல்லது வாகனங்கள் போன்ற அத்தகைய குறித்த சில ஆதனங்களைக் கொள்ளுதலுக்கு ஒருங்கிய நிரல் அனுமதித்தாலும், முழு

வியாபார பொறுப்பு முயற்சியும் பொறுப்பேற்கப்பட முடியாததாகும். நீதிமன்றம், நியதிச் சட்டத்தினால் மேவப்பட்ட கருமங்கள் அந்நிரலின் 6 ஆம் அம்சத்தின் நோக்கெல்லைக்கப்பால் உள்ளனவென்றும் நியதிச் சட்டம் ஒருங்கிய நிரலின்கீழான அதிகாரத்தையும் பிரயோகிப்பதாக நியாயப்படுத்த முடியாதென்றும் தீர்ப்பளித்தது. ஆயினும், அங்ஙனம் தீர்ப்பளித்தபின்னர், நீதிமன்றம், நியதிச் சட்டம் ஒருங்கிய நிரலின்கீழ் வந்த ஒரு கருமமாக இருந்திருந்தால், பாராளுமன்றத்தின் கலந்தாலோசனையைத் தேவைப்படுத்தும் 154 எ (5) (ஆ) ஆம் உறுப்புரையின் கட்டாயத் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படவில்லையென்றும் மேலும் தீர்ப்பிட்டது.

உயர் நீதிமன்றத்தினால் கவனத்திற் கொள்ளப்பட்ட மற்றுமொரு நியதிச் சட்டம், வடமத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி சபைகளின் வீடமைப்பு நியதிச் சட்டமாகும்.[3] நியதிச் சட்டம், திருத்தப்பட்டவாறான 1964 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உள்ளூராட்சி சபைகள் வீடமைப்புச் சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவின் நியதிகளில், (வாடகைக்கு விடப்பட முன்னர்) 1.1.1991 இல் நூற்றைம்பது ரூபாவை விஞ்சாத வாடகையில் விடப்பட்ட ஒரு வீட்டின் வாடகையாளருக்குக் கட்டணமின்றி அவ்வீட்டை ஓர் உள்ளூராட்சி சபை கைமாற்றுதல் வேண்டும் என்று ஏற்பாடு செய்தது. சொல்லப்பட்ட சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவின்கீழ் அன்றி வேறுவகையில் வாடகைக்கு விடப்பட்ட ஒரு வீடும், அதன் மாதாந்த வாடகை நூற்றைம்பது ரூபாவை விஞ்சாவிடின் கைமாற்றப்பட வேண்டும்.

நீதிமன்றம், அத்தகைய ஒவ்வொரு வீட்டையும் நன்கொடையாகக் கொடுக்கவேண்டுமென்று உள்ளூராட்சி சபைமீது கடப்பாட்டை விதிப்பது, அத்தகைய வீடுகள் தொடர்பில், பெறப்படற்பாலதான எதிர்கால மாதாந்தக் கொடுப்பனவுகள் தொடர்பாக முன்னர் உள்ளூராட்சி சபைகள் அனுபவித்துவந்த உரிமைகளையும் அதிகாரங்களையும் அது முடிவுறுத்தும் என்று தீர்ப்பளித்தது. இது, மாகாண சபை நிரலின் 4.3 ஆம் அம்சத்தினால் தடைசெய்யப்பட்ட வண்ணமாக உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களைக் குறைப்பனவுமாக அமையும். நீதிமன்றம், நியதிச் சட்டம் உள்ளூராட்சி சபைகளின் வீடமைப்புச் சட்டத்துடன் ஒவ்வாததாக இருந்தபோதிலும், அரசியலமைப்பின் 154எ (8) ஆம் உறுப்புரையால் தேவைப்படுத்தப்பட்டவண்ணம், அதன் விரிவுப் பெயரில் அங்ஙனம் ஒவ்வாததாக உள்ளதுபற்றி ஏதும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லையென்றும் மேலும் குறிப்பிட்டது.

3.2 மாகாண சபை நிரலில் உள்ள கருமங்கள்மீதான பாராளுமன்ற சட்டமூலங்கள்

பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு சட்டமூலங்கள், அவை மாகாண சபை நிரலில் தரப்பட்ட கருமங்களைக் கையாண்டன மற்றும் அவை மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்னும் ஏதுவின்மீது உயர் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்பட்டன. மிக முக்கிய

[3] [1997] 3 Sri LR 344; JP13A 384.

வழக்குகளே இங்கு ஆராயப்பட்டுள்ளன.[4] ஏனைய சில இவ்வத்தியாயத்தில் "தேசிய கொள்கை" யின்கீழ் ஆராயப்பட்டுள்ளன.

3.2.1 பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு (திருத்த) சட்டமூலம், 1992[5]

சட்டமூலத்தின் 7 ஆம் வாசகம், ஏதேனும் உரிமையளிக்கப்பட்ட தொழில் முயற்சி தொடர்பிலும் மற்றும் அத்தகைய தொழில் முயற்சியின் வியாபாரத்துக்குத் தேவைப்படும் கட்டிடங்களுக்கான வரைபடங்களை அங்கீகரித்தல் தொடர்பிலும் சட்டத்தினால் எவரேனும் நபருக்கு, சபைக்கு அல்லது அதிகாரிக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களை, இலங்கை முதலீட்டுச் சபை பிரயோகித்தல் சட்டமுறையானது என்று ஏற்பாடு செய்ய முனைந்தது.

7 ஆம் வாசகம், அம்சம் 4 (உள்ளூராட்சி), அம்சம் 5.3 (மாகாண வீடமைப்பும் நிர்மாணமும் - நிரலிலுள்ள விடயங்கள் தொடர்பிலான நிர்மாணச் செயற்பாடு) மற்றும் அம்சம் 21 (கமத்தொழில், கைத்தொழில், வர்த்தக, வியாபார முயற்சிகள் - அத்துடன் வருமானம் தோற்றுவிக்கும் வேறு கருத்திட்டங்கள் என்பவற்றை மாகாணத்தினுள் உடையதாக இருப்பதற்கு மத்திய அரசாங்கத்திற்கும், பகிரங்கக் கூட்டுத்தாபனங்களுக்கும் உள்ள அதிகாரத்திற்குப் பங்கமின்றி, அத்தகைய தொழில் முயற்சிகளையும் கருத்திட்டங்களையும் மேம்படுத்துவதற்கும் தாபிப்பதற்கும் அவற்றில் ஈடுபடுவதற்குமான தத்துவம்) ஆகிய மாகாண சபை நிரலில் உள்ள பல்வேறு கருமங்கள் தொடர்புபட்டிருந்தது என உயர் நீதிமன்றத்தின் முன் கூறப்பட்டது.

அம்சம் 4 ஐப் பொருத்தளவில் உயர் நீதிமன்றம் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களை எடுத்து விடாமலேயே ஒருங்கியை அதிகாரங்களைப் பிரயோகிக்க சபை அதிகாரமளிக்கப்பட்டது என்று தீர்ப்பளித்தது. கட்டிட வரைபடங்களை அங்கீகரித்தல், முன்னைய நிர்மாணத்திற்கும் அதிலிருந்தும் கணிசமான அளவு வேறுபட்டதாகவும் இருந்தது. எப்படியிருந்தபோதிலும் நீதிமன்றம், கட்டிட வரைபடங்களை அங்கீகரித்தல் வியாபாரங்களை தொடங்குவதற்கும், தொடர்ந்து நடாத்துவதற்கும் உரிமமளித்தல் ஆகிய உள்ளூர் அதிகார சபைகளுக்குள்ள அதிகாரங்களுக்கு முரண்படாத வண்ணமும், அவற்றை எடுத்து விடாத வண்ணமும் அம்சம் 5.3 (வாசகம் 7) பொருள்கோடல் செய்யப்பட வேண்டுமென்று தீர்ப்பளித்தது. அம்சம் 21, அரசாங்கத்தினால் உரிமமளிக்கப்படும் தொழில் முயற்சிகள், அல்லது உரிமமளித்தல், கட்டிட வரைபடங்கள் என்பன தொடர்பில் அத்தகைய ஏதேனும்

---

[4] For more decisions of the Supreme Court on this matter, see Lakshman Marasinghe and Jayampathy Wickramaratne (eds) *Judicial Pronouncements under the 13th Amendment*, ,Stamford Lake, Pannipitiya, 2010; See also, N. Selvakkumaran, 'Legislative Devolution and the Thirteenth Amendment' Lakshman Marasinghe and Jayampathy Wickramaratne (eds) *13th Amendment: Essays on Practice*,Stamford Lake, Pannipitiya, 2010, (pp. 71-105).

[5] [1991-2003] DSCPB VII 37.

அதிகாரத்தை மாகாண சபைகளுக்குரித்தாக்கவில்லை. அதற்கிணங்க நீதிமன்றம், சபைக்குரித்தாக்கப்பட உத்தேசிக்கப்பட்ட எந்த அதிகாரமும், மாகாண சபை நிரலில் உள்ள கருமங்கள் தொடர்பானதல்ல எனத் தீர்ப்பளித்தது. அம்சம் 21, அரசாங்கத்தினதும், பகிரங்க கூட்டுத் தாபனங்களதும் தொழில் முயற்சிகள் மற்றும் கருத்திட்டங்களை மட்டுமே விலக்கியுள்ளதேயொழிய, "அரசாங்கத்தினால் உரிமமளிக்கப்பட்ட தொழில் முயற்சிகளையல்ல" எனச் சமர்ப்பிக்கப்பட்டது.

3.2.2 வாடகை (திருத்த) சட்டமூலம் 2002[6]

சட்டமூலம், உளதான சட்டமாகிய 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வாடகைச் சட்டத்தைத் திருத்த முனைந்தது. மாகாண சபை நிரலினுள் வரும் (வாடகைக் குடியிருப்பாளர் பாதுகாப்புச் சட்டத்தையும் வாடகைச் சட்டத்தையும் ஒரு மாகாணத்தினுள் செயற்படுத்துதல்) அம்சம் 5:2 இனுள் வரும் ஒரு விடயத்தைக் கையாளுகிறது என்று கூறப்பட்டது. உயர் நீதிமன்றம், மாகாண சபை, வாடகைச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு மட்டுமே மாகாணத்துக்கு ஏற்புடையதாக்கும் நியதிச் சட்டங்களை ஆக்கலாம். ஆனால், வாடகைச் சட்டம் என்னும் விடயம் மட்டுமே ஒரு மாகாண சபையின் சட்டவாக்கத் தகைமைக்குள் வராது என்று தீர்ப்பளித்தது.

3.2.3 நீர் சேவைகள் சீர்திருத்தச் சட்டம், 2003[7]

நீர் சேவைகள் சீர்திருத்தச் சட்டமூலம், "நீர் சேவைகளை" ஒழுங்குபடுத்தி, இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை, எந்த இடப்பரப்பு தொடர்பில் உரிமம் வழங்கப்பட்டுள்ளதோ, அந்த இடப்பரப்பினுள் உள்ள பாவனையாளர்களுக்கு நீர் சேவைகளை இணைக்கும், ஏற்பாடு செய்யும் மற்றும் பேணிவரும் "சேவை ஏற்பாடு செய்பவர்களுக்கு" உரிமம் வழங்குவதற்காக இலங்கையில் நீர் சேவைகள் கைத்தொழிலின் ஒழுங்குபடுத்துனராக அதிகாரமளிப்பதற்கும் ஏற்பாடு செய்ய முனைந்தது. சட்டமூலம், சட்டமூலத்தில் "நீர் சேவைகளை" ஏற்பாடு செய்தல், வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான உள்ளூராட்சி சபைகளின் ஒரு பணியாகுமென்றும், 13 ஆவது திருத்தத்தின் நியதிகளில், அரசியலமைப்பின் 154 எ என்னும் உறுப்புரையுடன் இணங்கியொழுகத் தேவைப்படுத்தும் மாகாண சபை நிரலில் தரப்பட்ட ஒரு கருமமாகும் என்ற ஏதுவின்மீது உயர் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்பட்டது.

நீதிமன்றம், 1947 இல் மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் ஆக்கப்பட முன்னர்கூட, குழாய் மூலமான நீர் வழங்கல் இலங்கை மாநகர

---

[6] [1991-2003] VII DSCPB 285, JP 412.

[7] [1991-2003] VII DSCPB 439, JP 447.

சபைக்குரித்தாக்கப்பட்டிருந்ததென்பதைக் கவனத்திற் கொண்டது. இந்த சட்ட ஆளுமை பின்னர், கண்டி மாநகர சபைக்கும் ஏனைய மாநகர சபைகளுக்கும் நீடிக்கப்பட்டது. நகர சபைகள் கட்டளைச் சட்டம், நீர் வழங்கல் ஏற்பாடு உள்ளிட்ட பொதுப் பயன்பாடுகள் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கு சபைகளுக்கு அதிகாரமளித்தது. அதையொத்த ஏற்பாடுகள், பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்திலும், பிரதேச சபைகள் சட்டத்திலும் உள்ளன. ஆகவே, ஏதேனும் இடப்பரப்பிலுள்ள பாவனையாளர்களுக்கு குழாய்மூலமான நீர் வழங்கலை ஏற்பாடு செய்தல் முறையேயான உள்ளூராட்சி சபைகளுக்குரித்தாக்கப்பட்ட ஒரு பணியாகுமென்பது தெளிவாகும்.

1974 ஆம் ஆண்டின் தேசிய நீர் வழங்கல்கள் மற்றும் வடிகால் சபைச் சட்டம் நீர் வழங்கலுக்கு ஏற்பாடு செய்தது. எவ்வாறாயினும் இது தொடர்பில் சட்டம், உள்ளூராட்சி சபைகளின் பங்களிப்பை அகற்றவில்லை.

நீதிமன்றம், உள்ளதான சட்டத்தின்கீழ் குழாய் மூலமான நீர் வழங்கல் முறையேயான உள்ளூராட்சி சபைகளுக்குரித்தாக்கப்பட்ட ஒரு பணியாக உள்ளதனால், மாகாண சபை நிரலில் உள்ள விடயமாகுமென்று குறிப்பிட்டது. மாகாண சபை நிரலின் அம்சம் 4.3 மாகாண சபைகள் இவ்வதிகாரங்களை முறையேயான உள்ளூராட்சி சபைகளிடமிருந்து அகற்றிப் போடுவதைத் தடைசெய்கிறது.

சட்டமூலத்தின் 8 (1) ஆம் வாசகம், எவரேனும் ஒருவர், சட்டத்தின்கீழ் அங்கனம் செய்வதற்கு உரிமம் வழங்கப்பட்டு அதிகாரமளிக்கப்பட்டிருந்தாலன்றி, நீர் வழங்கல் சேவைகளின் ஏற்பாடு செய்யும் ஒருவராக வியாபாரத்தைக் கொண்டு நடாத்துதலாகாது என்று ஏற்பாடு செய்தது. சட்டமூலத்தின் 8 (2) ஆம் வாசகம், நியமிக்கப்பட்ட தேதியன்று நீர் சேவைகளை ஏற்பாடு செய்துவந்த தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை அல்லது ஏதேனும் மாகாண சபை அல்லது உள்ளூராட்சி சபை அல்லது சமூக அடிப்படையான ஏதேனும் அமைப்பு, 5 வருட காலத்திற்கு அத்தகைய வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்கு சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்டவராகக் கருதப்படல் வேண்டுமென ஏற்பாடு செய்தது. 8 (3) ஆம் இவ்விடைக்கால ஒழுங்கை முடிவுறுத்துவதற்கு ஏற்பாடு செய்தது. 11 ஆம் வாசகம், "நீர் சேவைகள்" தொடர்பில் உள்ளூராட்சி சபைகளை "சொத்து வைத்திருப்போராக" கையாண்டு, ஒரு குறிப்பிட்ட உள்ளூராட்சி சபையின் இடப்பரப்பிலுள்ள பாவனையாளர்களுக்கு நீர் சேவைகளை ஏற்பாடு செய்வதற்காக, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடமிருந்து உரிமத்தை நாடும் எவரேனும் ஒருவருடன், இடப்பரப்பிலுள்ள நீர் மூலவளங்களைப் பெற்றுக் கொள்வதற்காக உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதற்கு இவ்வுள்ளூரதிகார சபைகளுக்கு அதிகாரமளிக்கிறது.

நீதிமன்றம், ஒவ்வொரு இடப்பரப்பிலுமுள்ள பாவனையாளர்களுக்கும் நீர் சேவைகளை ஏற்பாடு செய்வதன்மூலம் உள்ளூராட்சி சபைகளின் பணிகளுக்குள் முழுமையாக அத்துமீறுவதாகவே இச்சட்டமூலம் பொதுவில் உள்ளதாகத் தீர்ப்பளித்தது. அது இடப்பரப்பில் வசிப்பவர்களுக்கு

அத்தியாவசியப் பொதுப் பயன்பாட்டு சேவையை ஏற்பாடு செய்ய வேண்டியதான அவற்றின் கடமையை உள்ளூராட்சி சபைகள் பராதீனப்படுத்துவதற்கு சட்டவாக்க அங்கீகாரம் வழங்க முனைந்தது. சட்டமூலத்தின் ஏற்பாடுகள், சட்டமூலத்தில் உள்ள கருமங்களின் குறித்த ஏற்புடைமை தொடர்பில் தொழிற்படுதன்மையுடையனவாகவே இருந்தன. ஆகவே, சட்டமூலம் ஒதுக்கிய நிரலினுள் வரக்கூடியதாக தேசிய கொள்கையை வகுப்பதாகக் கொள்ளப்பட முடியாது. சட்டமூலம் மாகாண சபை நிரலில் தரப்பட்டுள்ள ஒரு கருமம் தொடர்பானதென்பதனால், அது ஒவ்வொரு மாகாண சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலேயன்றி, சட்டமாக வரமுடியாது.

3.2.4 காணிச் சொத்துடைமை சட்டமூலம், 2003[8]

சட்டமூலம் அதன் விரிவுப்பெயரில், "இலங்கைப் பிரஜைகளுக்கு அரச காணிகளின் சொத்துடைமையைக் கைமாற்றம் செய்வதன்மூலம் காணிகளின் சொத்துடைமையைக் கையுதிர்ப்பதற்கும், 464 ஆம் அத்தியாயாமான காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தினதும் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காணி அளிப்புக்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினதும்கீழ் செய்யப்பட்ட அளிப்புக்கள் மற்றும் கைமாற்றங்களுக்கு சேர்க்கப்பட்டிருந்த குறித்த சில மட்டுப்பாடுகளை நீக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்குமென" ஒரு சட்டம் என விவரிக்கப்பட்டிருந்தது.

சட்டமூலம், காணி அபிவிருத்திச் சட்டத்தின் 19 (4) ஆம் பிரிவின் அல்லது காணி அளிப்புக்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் நியதிகளின் கீழான ஒரு அளிப்பின்கீழ் காணியை வைத்திருப்பவர் ஒருவர் எந்தப் பிணிப்பும் இன்றி, உளதான அவரது உரித்து முழு சொத்துடைமையாக மாற்றப்படுவதற்காக விண்ணப்பம் செய்வதற்கு ஏற்பாடு செய்தது. அரச காணியின் அத்தகைய சொத்துடைமை அளிப்புக்காண நடைமுறை சட்டமூலத்தின் 1 ஆம் பாகத்தில் இருந்தது. காணியை வைத்திருப்பவர் அத்தகைய அளிப்பு அல்லது கைமாற்றத்தின்கீழ் அவரைச் சென்றடைந்த உரித்துக்கள், முழுமையான சொத்துடைமைக்கு மாற்றப்பட வேண்டுமென்றும், "அத்தகைய காணியிலுள்ள உரித்து, தற்கிழமை, அக்கறை, எல்லாப் பிணிப்புக்களிலிருந்தும் விடுபட்டுள்ளன" வென்றும் கோரி, பிரதேச செயலாளருக்கும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கும் ஒரு பிரதியை அனுப்பிக் காணி ஆணையாளருக்கு ஒரு விண்ணப்பத்தைச் செய்ய வேண்டியிருந்தது. அத்தகைய அலுவலர் அதன் பின்னர், அவரது அவதானிப்புக்களை அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும். அவர் அவதானிப்புக்களில் சரியான நிலை பற்றித் தம்மைத் திருப்திப்படுத்திய பின்னர், அவரது அபிப்பிராயத்தின்படி, சட்டத்தின் நியதிகளில் அத்தகைய

[1991-2003] VII DSCPB 453, JP 455.

காணி தொடர்பில் எந்தவித பிணிப்புக்களுமின்றி முழு சொத்துடைமையையும் அளிக்கும் பயன்பட ஒரு சான்றிதழ் விண்ணப்பத்தாரருக்கு வழங்கப்பட வேண்டுமென்னும் அவரது விதப்புரையுடன், இயல்பான எல்லா ஆவணங்களையும் விண்ணப்பத்தையும் ஜனாதிபதிக்கு அனுப்பவேண்டும்.

மாகாண சபை நிரலின் பின்னிணைப்பு II இன் அம்சம் 1.3 (காணியும் காணிக் குடியேற்றமும்) பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

> "1.3 எவரேனும் பிரஜைக்கு அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்புக்கு மாகாணத்தினுள் அரச காணியைப் பராதீனப்படுத்துதல் அல்லது கையுதிர்த்தல் அவ்விடயத்தை ஆளுகின்ற சட்டங்களுக்கிணங்க, இயைபான மாகாண சபையின் ஆலோசனையின்மேல், ஜனாதிபதியினால் செய்யப்படுதல் வேண்டும்."

உயர் நீதிமன்றம், மேற்குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பத்தைத் தீர்மானிப்பதற்கான நடைமுறையில் மாகாண சபைகளுடன் கலந்தாலோசிப்பது பற்றி எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லையென்றும், அவைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனவென்றும் முழுமையாக அவதானித்தது. பதின்மூன்றாவது திருத்தத்தினால் காணி என்னும் விடயம், அதாவது, பின்னிணைப்பு (II) இல் தரப்பட்ட அளவுக்கு, காணி அல்லது காணியிலான அல்லது காணியின்மீதான உரிமைகள், காணி ஆட்சி, காணியைக் கைமாற்றுதலும் பராதீனப்படுத்துதலும், காணிப் பயன்பாடு, காணிக் குடியிருப்பும் காணிச் சீர்திருத்தமும் என்பன மாகாண சபைகளுக்குக் குறித்தொதுக்கப்பட்ட விடயமாக வந்தது. பின்னிணைப்பு II, அரசு காணி குடியரசுக்குத் தொடர்ந்தும் உரித்தாக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும், அரசியலமைப்பின் 33(ஈ) ஆம் உறுப்புரைக்கிணங்கவும் விடயத்தை ஆளும் எழுத்திலான சட்டத்திற்கிணங்கவும் கையளிக்கப்படலாமென்று தெளிவாகக் குறிப்பிடுகிறது. மேற்குறிப்பிட்டவற்றுக்கமைவாக, காணி மாகாண சபையின் விடயமொன்றாகப் பரவலாக்கப்பட்டது. மாகாணத்தினுள், அரச காணியைப் பராதீனப்படுத்துவது அல்லது கையளிப்பது, இயைபான மாகாண சபையின் ஆலோசனையின்மீது ஜனாதிபதியினால் செய்யப்பட வேண்டியிருந்தது.

நீதிமன்றம், அரச காணி குடியரசுக்குத் தொடர்ந்து உரித்தாக்கப்பட்டிருந்தபோது, மண், காலநிலை, மழைவீழ்ச்சி, மண்ணரிப்பு, காட்டுக்கூரை, சூழல் காரணிகள், பொருளாதார மாறும் சூழ்நிலைகள் என்பன கவனத்திற்கொண்டு, காணிப் பயன்பாடு தொடர்பில் பொதுவான கோட்பாடுகளை விதித்துத் தயாரிக்கப்பட்டதும், தேசிய காணி ஆணையாளரால் வகுத்தமைக்கப்பட்டதுமான அத்தகைய தேசிய கொள்கைகளுக்கிணங்க, மாகாண சபைகளினால் பயன்படுத்தப்பட வேண்டியதாயிருந்ததென்று மேலும் அவதானித்தது. விலைமதிப்பற்ற ஒரு இயற்கை மூலவளத்தைப் பாதுகாக்கும் பொருட்டு காணிப்

பயன்பாட்டின்மீதும் காணிக் கைமாற்றத்தின்மீதும் கட்டுப்பாட்டை வைத்திருப்பதற்காக அளிப்புக்களுக்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

நீதிமன்றம் உத்தேச சட்டமூலம், அடிப்படை அமைப்பு, கட்டமைப்பு மற்றும் தேசிய காணி ஆணைக்குழுவினால் வகுத்தமைக்கப்படவிருந்ததான கொள்கை என்பவற்றைப் புறக்கணித்து, அதற்குப் பதிலாக வேறொரு திட்டத்தை அறிமுகப்படுத்தியதென்று தீர்ப்பளித்தது. சட்டமூலம் அரச காணியின் பராதீனப்படுத்தல் மற்றும் கையளிப்புத் தொடர்பில் மாகாண சபையின் ஆலோசனையைப் பெறுவதான ஜனாதிபதியின் பணியின் எண்ணக்கருவை முழுமையாகவே புறக்கணித்துள்ளது. ஆகவே சட்டமூலம், முழுமையாக பின்னிணைப்பு II இன் ஏற்பாடுகளைப் புறத்தே தள்ளியது. பாராளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையையும், மக்கள் தீர்ப்பொன்றில் மக்களின் அங்கீகாரத்தையும் அவசியப்படுத்தும் அரசியலமைப்புக்கான உட்கிடையான திருத்தமாக அமைகிறது எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

3.2.5 உள்ளூராட்சி சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2008[9]

உள்ளூராட்சி சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம், மாநகர சபையின், நகர சபையின் பிரதேச சபையின் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு "வட்டாரக்குழு"வைத் தாபிப்பதற்கும், இடப்பரப்பை அபிவிருத்தி செய்தல், இளைஞர், பெண்கள், வசதிகுறைந்த ஆள் ஆகியோரின் பங்களிப்பையும் கருத்துக்களையும் பெறும்நோக்குடன் அபிவிருத்தித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல், இடப்பரப்பினுள் வசிப்போரின் நலனுக்காக சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், இடப்பரப்பினுள் சூழல் ரீதியாக பாதிப்படையக் கூடிய இடங்களைப் பாதுகாப்பதற்காக நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல், அத்துடன் மக்களின் நலன், வசதி மற்றும் உள்ளூராட்சி சபையின் தன்மைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பிலான கருமங்கள் என்பவற்றுக்காக பல்வேறுபட்ட அதிகாரங்களை அளிப்பதற்கும் ஏற்பாடு செய்தது. சட்டமூலத்தை எதிர்த்தோர், இக்கருமங்கள், பரவலாக்கப்பட்ட விடயமான உள்ளூராட்சியின்கீழ் வருவதாகவும், அதனால் சட்டமூலம் மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்கப்படவேண்டுமென்றும் வாதிட்டனர்.

அரசு, தர்க்கிக்கப்பட்ட ஏற்பாடுகள், உள்ளூராட்சி சபைகளின் மாதிரியையும் கட்டமைப்பையும் மட்டுமே திருத்த முனைந்ததனால், பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படக் கூடுமென்று வாதிட்டது

மாகாண சபை நிரலிலுள்ள அம்சம் 4.1 பின்வருமாறு குறிப்பிடுகிறது:

---

[9] JP 516.

"4.1 உள்ளூராட்சி கிராம நிர்வாகம் என்ற நோக்கங்களுக்காக, மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் போன்ற உள்ளூராட்சி சபைகள்: ஆயின், உள்ளூராட்சி சபைகளின் அமைப்பும், மாதிரியும் கட்டமைப்பும் சட்டத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

உயர்நீதிமன்றம் மாகாண சபை நிரலுக்கு வெளியே உள்ள விடயமான உள்ளூராட்சி சபைகளில் வட்டாரங்களை உருவாக்குதல், உள்ளூராட்சி சபைகளின் கட்டமைப்பை மாற்றுகிறதென்றும், "வட்டாரக் குழுக்களுக்கு" பல்வேறு அதிகாரங்களை வழங்குவது, "வட்டாரக் குழுக்களின் நிர்வாக செலவினங்களை எதிர்கொள்வதற்குப் போதிய நிதியங்களை குறித்தொதுக்கல், மற்றும் "வட்டாரக் குழுக்களை" முறையேயான உள்ளூராட்சி சபைகளுக்குக் கணக்கொப்புவிக்க வைத்தல் என்பன மாகாண சபை நிரலில் வரும் விடயங்களெனவும் தீர்ப்பளித்தது. எனவே, சட்டமூலம் மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3.2.6 உறுப்புரை 154எ(3) அல்லது 154 எ (5) க்கு முரணாக நிறைவேற்றப்பட்ட சட்டங்கள்

1992ஆம்[10] ஆண்டின் பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம், சட்டமூலம் மாகாண சபை நிரலில் உள்ள கருமங்களைக் கையாளவில்லை என்று தீர்ப்பிட்டு, சட்டமூலம் அங்ஙனம் செய்தால், சட்டமூலங்கள் தொடர்பிலான அதன் அரசியலமைப்பு நியாயாதிக்கம், நடைமுறையிலான ஒழுங்குகள் உறுப்புரை 154எ(3) உடன் இணங்கியொழுகியுள்ளனவா என்பதைத் தீர்மானிப்பது வரை நீடிக்கப்படுமா என்றும் அத்துடன் அங்ஙனம் செய்யும்போது, உறுப்புரை 154 எ (3) இல் நடைமுறையிலான தேவைப்பாடுகளுக்கிணங்க நிறைவேற்றப்படாத ஒரு சட்டமூலத்துக்கு (சான்றுகை எழுதப்பட்டதன் மேல் சட்டமாக வருகின்றவிடத்து, எத்தன்மைத்தான எவ் ஏதுவின்மீதும் நீதிமன்றம், அல்லது நியாய சபை எதுவும் அதன் செல்லுபடி பற்றி விசாரித்தலோ, தீர்ப்பளித்தலோ அல்லது எவ்விதத்திலும் கேள்விக்குட்படுத்தலோ ஆகாது) என்று குறிப்பிடும் உறுப்புரை 80(3), ஏற்புடையதா அல்லவா என்பதையும் நீதிமன்றம் கவனத்திற் கொண்டிருக்க வேண்டுமா என்றும், நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய அவசியம் உடையதாயிருந்திருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டது.

ஆயினும் முன் குறிப்பிட்டதுபோல, நீதிமன்றம் பின்னர் வந்த பல வழக்குகளில், மாகாண சபை நிரல் தொடர்பிலான ஏற்பாடுகளையுடைய சட்டமூலங்கள், மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது.

---

[10] [1991-2003] DSCPB VII 37.

உறுப்புரை 154 எ (3)க்கு முரணாக நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டமூலம், "சட்டமாக வந்துள்ளதா" என்பது இன்னும் தீர்மானிக்கப்படாதுள்ளது. மாகாண சபை நிரலில் உள்ள கருமங்களைக் கையாளும் சட்டமூலங்கள் மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்கப்படாமலேயே பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பல சந்தரப்பங்கள் உள்ளன. அத்தகைய சட்டமூலங்கள் 154 *எ (3)ஆம் உறுப்புரையின் கட்டாய ஏற்பாட்டின் பயனாக, "சட்டமாக வந்துள்ளது"* என்று கருதப்பட்டிருக்கக் கூடாது என்று சமர்ப்பிக்கப்பட்டது. 154 எ (5) ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்பட்ட வண்ணம் மாகாண சபைகளைக் கலந்தாலோசிக்காமலேயே நிறைவேற்றப்பட்ட ஒருங்கிய நிரலில் உள்ள கருமங்கள்மீதான சட்டமூலங்களுக்கும் இந்நிலை ஏற்புடையதாகும்.

கமநல சேவைகள் சட்டத்தை மாற்றீடு செய்த 2000ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்ட விடயம் சுவாரசியமானதாகும். சட்டமூலம் மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. சட்டமூலம் கேள்விக்குட்படுத்தப்பட்டது. ஆனால், மாகாண சபை நிரலில் உள்ள ஒரு கருமம் தொடர்பிலானதால், மாகாண சபைகளுக்குக் குறிப்பீடு செய்யப்பட்டடிருக்க வேண்டும் என்னும் ஏதுவின் மீதல்ல. உயர் நீதிமன்றம் (பிரதம நீதியரசர் எச்.என். சில்வா, .பீ.ஆர்.பி. பெரேரா மற்றும் நீதிபதிகள் விஜேசேகர), சட்டமூலம் அரசியலமைப்புடன் ஒவ்வாததல்ல என்று தீர்ப்பளித்தது[11]. கீழ்க்குறிப்பிட்டவாறு, பின்னர் மத்தும பண்டா எதிர் கமநல சேவைகளின் உதவி ஆணையாளர், என்ற வழக்கில் பிரதம நீதியரசர் எச்.என். சில்வா தலைமைதாங்கிய குழாம், கமநல சேவைகள் சட்டத்திலுள்ள சில ஏற்பாடுகள் மாகாண சபை நிரலில் உள்ள கருமங்களா என்னும் வினாவை ஆராய்ந்து, அவை அங்ஙனமே உள்ளன என்று தீர்ப்பளித்தது. எனவே 2000ஆம் ஆண்டில் 46ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம், 154 எ (3) ஆம் உறுப்புரைக்கு முரணாக மாகாண சபை நிரலில் உள்ள கருமங்கள்மீது நிறைவேற்றப்படும் சட்டமூலத்துக்கு நல்ல ஒரு உதாரணமாகும். சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்னும் அடிப்படையில் சட்டமூலம் கேள்விக்குட்படுத்தப்படாவிடினும், நீதிமன்றத்தின் தீர்மானம் உள்ளதால் ஒரு போதுமே அவை "சட்டமாக வரவில்லை" என்று தற்போது அது கேள்விக்குட்படுத்தப்படக் கூடுமா என்ற வினா உள்ளது.

2005 ஆம் ஆண்டின் குற்றப்பணம் அதிகரித்தல் சட்டமூலம் உயர் நீதிமன்றத்தில் அவசர சட்டமூலமாக கவனத்திற்கெடுக்கப்பட்டது. அது மாகாண சபை மற்றும் ஒருங்கயை நிரல்கள் தொடர்பிலான கருமங்கள் உள்ளிட்ட பல சட்டங்களினால் அங்கீகரிக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் குற்றப் பணத்தை அதிகரிக்க முனைந்தது. நீதிமன்றம், சட்டமூலம் அரசியலமைப்புடன் ஒவ்வாததல்லவாக இருந்தது என்று தீர்ப்பளித்தது. ஆனால், சட்டமூலம் மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டுமா என்பது அதன் முன் கொண்டு வரப்படவில்லை. சட்டமூலம் 2005ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க சட்டமாக சான்றுப்படுத்தப்பட்டது.

---

[11] [1991-2003] DSCPB 197.

2005ஆம் ஆண்டின் சங்கங்கள் (திருத்தம்) சட்டமூலம், சங்கங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்த முனைந்தது. அது மாகாண சபையின் 28ஆம் அம்சம் தொடர்பானதாகும். (கூட்டிணைக்கப்படாத வியாபார, இலக்கிய, விஞ்ஞான, சமய அத்துடன் வேறு சங்கங்களையும் கழகங்களையும் ஒழுங்குபடுத்துதல்.) அது மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. சட்டமூலம் உயர்நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவோ அல்லது அதில் கேள்விக்குட்படுத்தப்படவோ இல்லை. சட்டமூலம் 2005ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டமாக சான்றுப்படுத்தப்பட்டது.

3.3 தேசிய கொள்கை[12]

ஒதுக்கிய நிரலில் உள்ள முதலாவது அம்சம் "எல்லா விடயங்களினதும் பணிகளினதும் மீதான தேசியக் கொள்கை" ஆகும். பாராளுமன்றம் மாகாண சபை நிரலில் அல்லது ஒருங்கியை நிரலில் உள்ள ஒரு கருமம் தொடர்பில்கூட, சாதாரண பெரும்பான்மையுடன் தேசிய கொள்கையை வகுக்கலாம் என்றும், மாகாண சபைகள் நியதிச் சட்டங்களை ஆக்கும்போது, அத்தகைய கொள்கையினுள் செயல்பட வேண்டும் என்றும் இது அர்த்தப்படுவதாகவே நியாயமாக எதிர்பார்க்கப்படும். மாகாண சபை நிரலிலுள்ள ஒரு கருமத்தின்மீதான பாராளுமன்றத்தின் ஒரு சட்டம், மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டாலேயன்றி மட்டுமே அதற்கு உடன்பட மறுத்த மாகாணத்துக்கு ஏற்புடையது என்று குறிப்பிடும் 154 எ (3) ஆம் உறுப்புரையின் வெளிப்படையான ஏற்பாட்டின் பயனாக, தேசிய கொள்கை வகுக்கும் போர்வையில், சம்பந்தப்பட்ட மாகாண சபையின் சம்மதம் இல்லாது சாதாரண பெரும்பான்மையுடன் மாகாண சபை நிரலிலுள்ள கருமங்கள்மீது பாராளுமன்றம் சட்டம் இயற்ற முடியாது என்பதில் சந்தேகமில்லை. வேறுவிதத்தில் கூறுவதானால், மாகாண சபை நிரல் மற்றும் ஒருங்கியை நிரலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள கருமங்கள் மீதான தேசிய கொள்கை, மாகாண சபைகள் இணங்கியொழுக வேண்டிய உருவகவமைப்பு சட்டவாக்கத்தின் தன்மையுடையதாக இருத்தல் வேண்டும்.

3.3.1 கமநல சேவைகள்

தேசிய கொள்கை தொடர்பில் உயர் நீதிமன்றத்துக்கு வந்த முதல் வழக்கு 1991ஆம் ஆண்டின்,[13] கமநல சேவைகள் (திருத்த) சட்டமூலமாகும். இது 1979ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க கமநல சேவைகள் சட்டத்தைத்

---

[12] See also, Jayampathy Wickramaratne, 'National Policy and Dual Responsibility- Two Critical Issues on Devolution' Lakshman Marasinghe and Jayampathy Wickramaratne *13th Amendment: Essays on Practice* (eds), Stamford Lake, Pannipitiya, 2010, (pp. 45-70).

[13] DSCPB, Vol. VII, 9.

திருத்துவதற்கானதொரு சட்டமூலமாகும். நிலச் சொந்தக்காரர்கள் மற்றும் வாரப் பயிர்ச்செய்கையாளர்கள் என்னும் கருமங்கள் தொடர்பிலான மூலச்சட்டத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு திருத்தங்களைத் கொணர முனைந்தது. விசாரணை அலுவலர்கள் மற்றும் மீளாய்வுச் சபை போன்ற அத்தகைய கருமங்கள்மீது புதிய பிரிவுகளையும் அறிமுகப்படுத்தியது. சட்டமூலம் முன்னுரையிலோ அல்லது வேறெங்கனுமோ தேசிய கொள்கை உருவாக்குவது பற்றி எந்தக் குறிப்பீடும் செய்யவில்லை.

சட்டமூலம் மாகாண சபைகள் நிரலில் உள்ள கருமங்களைக் கையாண்டதாலும், அதனால் 154 எ (3)ஆம் உறுப்புரையின் நியதிகளில் மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்னும் ஏதுவின்மீது கேள்விக்குட்படுத்தப்பட்டது. சட்டமூலம் ஒருங்கியை நிரலில் உள்ள ஒரு கருமம் தொடர்பானதாயிருந்ததால் 154 எ 5 (அ) ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்பட்டவாறு எல்லா மாகாண சபைகளுடனும் கலந்தாலோசிக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் கூறப்பட்டது.

விண்ணப்பதாரர், சட்டமூலம் மாகாண சபை நிரலின் 9ஆம் அம்சத்தின்கீழும் ஒருங்கியை நிரலின் 8ஆம் அம்சத்தின்கீழும் வரும் கருமங்களைக் கையாண்டது எனக் குறிப்பிட்டார். இரண்டுமே "கமத்தொழிலும் கமநலச் சேவைகளும்" என்ற தலைப்பின்கீழ் வந்தன. பிரதி மன்றாடியார் தலைமையதிபதி, சட்டமூலம் மாகாண சபைகள் நிரலின் (கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள்) 9ஆம் அம்சத்தின்கீழும் (காணி) 18ஆம் அம்சத்தின்கீழும் வருவதாகச் சமர்ப்பித்தார். சொல்லப்பட்ட பதிவுகள் பின்வருமாறு உள்ளன.

மாகாண சபை நிரல்:

9. கமத்தொழிலும் கமநலச் சேவைகளும் -

9.1. (மாகாணங்களுக்கு இடையேயான நீர்ப்பாசன, காணிக் குடியிருப்புத் திட்டங்கள், அரச காணி, பெருந்தோட்டக் கமத்தொழில் என்பவற்றைத் தவிர) மாகாண நோக்கங்களுக்காகவும் கமத்தொழிற் சேவைகளுக்காகவும் கமத்தொழில் விசாலிப்பு, மேம்படுத்துகை, கல்வி என்பன உட்பட கமத்தொழில்:

9.2. சிறு நீர்ப்பாசன வேலைகளை மறுசீரமைத்தலும் பேணுதலும்:

9.3. தேசியக் கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்களாகப் பெயர் குறிக்கப்பட்ட நிறுவனங்களன்றியும் அவை தவிரவும்: கமத்தொழில் ஆராய்ச்சி.

18. காணி பின்னிணைப்பு (11) இல் தரப்பட்டுள்ள அளவுக்கு காணி அதாவது காணியிலான அல்லது காணியின்மீதான உரிமைகள், காணி ஆட்சிக் காணியைக் கைமாற்றும் பராதீனப்படுத்துதலும், காணிப் பயன்பாடு காணிக் குடியிருப்பும் காணிச் சீர்திருத்தமும்.

8. **கமத்தொழிலும் கமநலச் சேவைகளும் -**

8.1. கமத்துடன் இணைந்த கைத்தொழில்களைத் தாபித்தலும் மேம்படுத்துதலும் பண்ணைகளைத் தாபித்தலும் பேணுதலும், தனியார் நாற்றுமேடைகளை மேற்பார்வை செய்தலும்:

8.2. மண் வளம் பேணல்:

8.3. தாவரப் பீடைகள்.

நீதிமன்றம், ஒரு கருமம் நிரல் Iஇல் அல்லது நிரல் IIIஇல் வரும் ஒரு விடயமா என்பதை அவற்றுக்குள்ள தலைப்புக்களை மட்டுமே கொண்டு தீர்மானிப்பது சாத்தியமல்ல என்று சரியாகக் குறிப்பிட்டுள்ளது. உள்ள ஒரு நிரலில் ஒத்த தலைப்பினுள் வரும் ஒரு அம்சத்துக்குள் ஒரு விடயப் பொருள் வருமென்று ஒரு சட்டவாக்கத்தின் தலைப்பு முடிவாகக் குறிப்பிடுமென்றும் ஊகிக்க முடியாது.

சட்டமூலத்தின் ஏற்பாடுகள், நிரல் 1இலுள்ள 9.2 மற்றும் 9.3 என்னும் அம்சங்களில் அல்லது நிரல் III இல் அல்லது 8.1 தொடக்கம் 8.3 வரையிலான அம்சங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமங்களைக் கையாண்டதா என்பது தொடர்பில் நீதிமன்றம் அவை அங்ஙனம் கையாளவில்லை என்று தெளிவாகக் குறிப்பிட்டது. நிரல் ஐ லுள்ள 9.1ஆம் அம்சத்தைப் பொறுத்தவரையில், சட்டமூலம், "கமத்தொழில் நீடிப்பு, மாகாண நோக்கங்களுக்காக பதவி உயர்வு மற்றும் கல்வி என்பன உள்ளிட்ட கமத்தொழில்" அல்லது கமத்தொழில் சேவைகள் என்பனவற்றைக் கையாளவில்லை என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. அது வாரப்பயிர்ச் செய்கையாளர்கள், பிணக்குகளைத் தீர்த்தல், வாடகையாளர்களின் உரிமைகள் வந்தடைதல், நிலச் சொந்தக்காரர்களின் உரிமைகளைக் கைமாற்றுதல், வாடகையாளர்களை வெளியேற்றும் பொறுப்பு, வாடகைக் கொடுப்பனவு, கடன்கள், அளவைகள், தகவலும் குடிமதிப்பும் விவசாய ஒழுங்கமைப்புக்கள் என்பன போன்ற விடயங்களையே கையாண்டது என நீதிமன்றம் குறிப்பிட்டது. நீதிமன்றம், மேற்குறிப்பிட்ட ஏதேனும் கருமம் "கமத்தொழில்" என்பதற்குள் வருவதாகக் கருதவில்லை என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டது.

நிரலின் 18ஆம் அம்சத்தைப் பொறுத்தவரையில் நீதிமன்றம், காணி உரிமைகள் அல்லது காணி ஆட்சி என்பவற்றை மாகாண விடயமாக ஆக்கப்பட்டதாகக் கருதவில்லையெனக் குறிப்பிட்டது.

> பின்னிணைப்பு 11இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளதே பரவலாக்கப்பட்ட காணி அளவாகும். "காணியிலான அல்லது காணியின் மீதான உரிமைகள் காணி ஆட்சி ..... ஆகியன". காணி பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது. ஆகவே காணியின் (கைமாற்றலுக்கான விதிமுறைகள், பதிவு, மரபுரிமை, பிரிவிடல் போன்றவை) எல்லா அம்சங்களும் பரவலாக்கப்பட்டுள்ளனவா என்பதை நிச்சயிப்பதற்குப் பின்னிணைப்பு 11ஐ நுண்ணாய்தல் அவசியமாகும். பின்னிணைப்பு 11,

சில விதிவிலக்குகளுக்கமைவாக, காணி ஒரு மாகாண சபை விடயமாகும் என்று மேலும் குறிப்பிடுகிறது. ஆனால் காணிக் குடியிருப்பும் காணிப் பயன்பாடும் மட்டுமே மேவப்பட்டுள்ளதாக இது காட்டுகிறது.[14]

ஆயினும் முழு உடன்படிக்கையை அறியாமல் இப்பிரச்சினையை இப்போது தீர்ப்பது விரும்பத்தக்கதல்ல என நீதிமன்றம் கருதிக் கொண்டது.

சட்டமூலத்தில் கையாளப்பட்ட விடயங்கள், எல்லாம் சொந்தக்காரர்களதும் வாரப் பயிர்ச்செய்கையாளர்களதும் உரிமைகளும் கடப்பாடுகளும், தொடர்பிலான தேசிய கொள்கைக் கருமங்களாகும் என்பதால் நிரல் II இனுள் வருபவையாகும் என்பது தற்போதைய நோக்கங்களுக்குப் போதுமானதாகும் என்று நீதிமன்றம் அப்போது குறிப்பிட்டது.[15]

மிகப் பரந்த நோக்குள்ள இம்முடிவுக்கு நீதிமன்றம் எந்தக் காரணத்தையும் கூறவில்லை. இம்முக்கிய அம்சம் தொடர்பில் ஏதேனும் கலந்துரையாடல்களும் இடம்பெறவில்லை. சட்டமூலம் தேசிய கொள்கையை வெளிப்படுத்த முயன்றதாகக்கூட மத்திய அரசு உரிமை கோரவில்லையென்பது மேலும் சுவாரசியமாக உள்ளது. அதற்கு முரணாக இவ்விடயத்தில் தோன்றிய பிரதி மன்றாடியார் தலைமையதிபதி முழு கமநல சேவைகளுமே மாகாண சபை நிரலில் வரும் ஒரு விடயமாகும் என்றும் குறிப்பிட்டார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் உத்தேசவாளர்களுக்கும், பரவலாக்கல் துறையில் தொழில்புரியும் வழக்கறிஞர்களுக்கும் ஏமாற்றம் தருமொன்றாக அமைந்துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால், அதன் பின்னரான விளைவுகள் ஏமாற்றத்தையளித்துள்ளன எனக் கூறவும் வேண்டும்.

நீதிமன்றத்தின் தீர்மானம் 19.02.1991 அன்று பாராளுமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டது. சட்டமூலம் 22.02.1991 இல் நிறைவேற்றப்பட்டு, சபாநாயகரின் சான்றுதல் 23.02.1991 இல் புறக்குறிப்பிடப்பட்டது. 22.02.1991 இல் சட்டத்துறை தலைமையதிபதியின் சார்பில் ஒரு மேலதிக மன்றாடியார் தலைமையதிபதி, கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளருக்கு, உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கிணங்க காணிச் சொந்தக்காரர்களதும், வாரப் பயிர்ச்செய்கையாளர்களதும் உரிமைகளும், கடப்பாடுகளும் தொடர்பிலானவையும், சட்டமூலத்தில் கருத்திற்கொள்ளப்பட்ட எல்லா கருமங்களும் தேசிய கொள்கை விடயங்களாகுமென்றும், அதனால் ஒதுக்கு நிரலினுள் வரும் ஒன்றாதலால், "கமநல சேவைகள் பரவலாக்கப்பட்ட ஒரு விடயமல்ல" என்ற அடிப்படையில் அது முன்னெடுத்துச் செல்லப்படலாமென்றும் எழுத்துமூலம் அறிவித்தார்.[16]

---

[14] ibid .19.

[15] ibid

[16] Provincial Councils: Operational Experience of Devolution, Report of the Committee to study the operation of Provincial Councils in Sri Lanka, 1996, p. 52 (unpublished)..

மேலதிக மன்றாடியார் தலைமையதிபதி பிழை செய்துள்ளார் என்பது தெளிவு. சட்டமூலத்தில் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்பட்ட எல்லா கருமங்களும் தேசிய கொள்கை விடயங்களாகுமென உயர் நீதிமன்றம் குறிப்பிட்டது சரியாக இருந்தபோதிலும், அது கமநல சேவைகளை ஒதுக்கு நிரலில் ஒரு விடயமாக ஆக்கவில்லை. மாகாண சபை நிரலிலுள்ள அல்லது ஒருங்கிய நிரலிலுள்ள ஒரு விடயம் தொடர்பில் தேசிய கொள்கை வெளியிடப்படும்போது அது ஒதுக்கு நிரலுக்கு அந்த விடயத்தை மாற்றாது.

நீதிமன்றத்தின் தீர்மானத்தை இங்ஙனம் பிழையாகப் பொருள்கோடல் செய்தது, பரவலாக்கல் தொடர்பில் கடும் சிக்கலான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. 1988 ஆம் ஆண்டு மாகாண சபைகள் தாபிக்கப்பட்டதுடன், கமநல சேவைகள் மாகாண விடயமொன்றாகக் கணிக்கப்பட்டதுடன், சபைகள் தமது சொந்தக் கமநல சேவைகள் திணைக்களங்களையும் வைத்திருந்தன. காணிச் சொந்தக்காரர்கள் மற்றும் வாரப் பயிர்ச்செய்கைக்காரர்கள் தொடர்பிலான கருமங்கள் இத்திணைக்களங்களினால் செயற்படுத்தப்பட்டன. மேலதிக மன்றாடியார் தலைமையதிபதியின் ஆலோசனையின் விளைவாக மத்திய அரசு மாகாணத் திணைக்களங்களைப் பொறுப்பேற்றது.

இவ்விடயம் மாகாண சபைகளினால் மீண்டும் எழுப்பப்பட்டதாகத் தோன்றுகிறது. சட்டத்துறை தலைமையதிபதி அவரே, பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூரலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட தேதியிடப்படாத கடிதத்தின் மூலம் ஏற்பட்ட நஷ்டத்தைக் குறைக்க முனைந்தார்.[17] "1991 ஆம் ஆண்டின் பெப்ரவரி 22 ஆம் திகதிக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயம் என்னவெனில், கமநல சேவைகள் தொடர்பிலான தேசிய கொள்கை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டிய ஒரு விடயமாகுமென்பதுடன், அவ்விடய அம்சம் பரவலாக்கப்படவில்லையென்றும், அது அரசாங்கத்துடனேயே இருந்துள்ளது என்பதாகும் என்றும்" அவர் குறிப்பிட்டார். பதின்மூன்றாவது திருத்தம் வரைக்கும் தீவு முழுவதும் தனது எல்லாப்பணிகளையும் புரிந்துவந்த கமநமல சேவைகள் திணைக்களம், மாகாண சபையின் எல்லைக்குள் வருகின்ற பணிகளையும் மாகாண கமநல சேவைகள் திணைக்களத்தினால் மாகாண மட்டமொன்றில் பொறுப்பேற்கப்படக்கூடிய ஏனைய செயற்பாடுகளையும் அறியக்கூடிய வண்ணம் மீள்கட்டமைக்கபடவேண்டுமென்றும் மேலும் கூறப்பட்டது. எனவே, மாகாண சபைகள் தங்கள் சொந்த கமநலத் திணைக்களங்களை வைத்திருப்பதற்கு சட்டத்துறை தலைமையதிபதி பச்சைக்கொடி காட்டினார். இத்தெளிவின் பின்னரும், கமநல சேவைகள் தொடர்பிலான அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தினாலேயே தொடர்ந்து புரியப்பட்டு வருகின்றன.

---

[17] ibid.53.

மத்தும பண்டா எதிர் கமநலச் சேவைகளின் உதவி ஆணையாளர்[18] என்ற வழக்கில் உயர் நீதிமன்றம் இப்பிரச்சனை தொடர்பில் முழுமையான வாதத்தை அறியக்கூடியதாயிருந்தது.

பின்வருவனவே சுருக்கமான நிகழ்வுகளாகும். கமநல சேவைகளின் உதவி ஆணையாளர் கமநல சேவைகள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் வாரப் பயிர்செய்கையாளர் ஒருவர் கமத்தொழில் வாடகையைச் செலுத்தத் தவறி உள்ளதனால் வெளியேற்றப்படப் பொறுப்பாவார் என ஒரு கட்டளையை ஆக்கினார். வாரப் பயிர்ச்செய்கையாளர், கட்டளையை கேள்விக்குட்படுத்தி, மேல் நீதிமன்றத்தில் உறுதிகேள் எழுத்தாணையொன்றுக்காக விண்ணப்பம் செய்தார். அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்புரை 154(ஞ) (4) இன்கீழ் மாகாண சபை நிரலிலுள்ள ஏதேனும் கருமம் தொடர்பிலான ஒருசட்டத்தின்கீழ் அல்லது நியதிச் சட்டத்தின்கீழ் அதிகாரங்களைப் பிரயோகிக்கின்ற எவரேனும் ஒருவருக்கெதிராக எழுத்தாணையொன்றை வழங்க மேல் நீதிமன்றம் நியாயாதிக்கம் உடையதாக இருக்கின்றது. நிலச்சொந்தக்காரர், கமநல சேவைகள் (திருத்தம்) சட்டமூலத்தின் மீதான உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தின் பயனாக, பிரச்சனைக்குரிய கருமம் மாகாண சபை நிரலின்கீழ் வரவில்லை என ஆட்சேபனை தெரிவித்தார். மேல் நீதிமன்றம் ஆட்சேபனையை ஏற்றுக்கொண்டது. மேல்முறையீட்டு நீதிமன்றம் மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதிசெய்து, உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான அனுமதியையும் வழங்கியது.

வாரப் பயிர்ச்செய்கையாளர் தொடர்பிலான கருமங்கள் மாகாண நிரலின்கீழ் வந்துள்ளனவா என்பதே உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்திற்காக எழுந்த பிரதான வினாவாகும். நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் சார்பில் தீர்ப்பு வழங்க எந்தத் தயக்கமும் காட்டவில்லை. "'கமநல' என்றும் சொல் நில ஆதனம் தொடர்பானது என்பதுடன் அத்தகைய ஆதனம் நெற்காணிகளையும் அத்தகைய காணிகளின் வாரப் பயிர்ச்செய்கையாளர்களையும் கவரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை" எனவும் நீதிமன்றம்[19] தீர்ப்பளித்தது.

கமநல சேவைகள் (திருத்தம்) சட்டமூலத்தின்மீதான முன்னைய தீர்மானம் தொடர்பிலும் கருத்துரைக்கப்பட்டது. சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்ட கருமங்கள் எல்லாம் தேசிய கொள்கை தொடர்பிலானவை என்று கூறுவது சரியல்ல என்று நீதிமன்றம் கருத்துக் கொண்டது. மாகாண சபைகள் நிரல், குறுகிய நோக்கில் பொருள்கோடல் செய்யப்படக்கூடாது என்றுகூறி, பிரதம நீதியரசர் எச்.என்.சில்வா, நீதிபதி யாப்பா ஆகியோருடன் உடன்பட்டு பண்டாரநாயக்க நீதியரசர் நெற்காணிகள் மாகாண சபைகள் நிரலினுள் வரும் என்று தீர்ப்பளித்தார்.

---

[18] [2003] 2 Sri LR 80.

[19] ibid .91

முன்னைய நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு முரணாக பரவலாக்கத்திற்கு நிச்சயமாக சார்பாகவே இத்தீர்ப்பு அமைந்துள்ளது. நீதிபதி பண்டாரநாயக்க பின்வருமாறு குறிப்பிட்டார்.

> "மக்கள் தத்தமது நாளாந்த வாழ்க்கையை மாகாணங்களுக்குள்ளேயே நடாத்துவதை அனுமதிப்பதற்காகவே மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. ஆகவே, நாட்டின் ஏதேனும் இடப்பரப்பிலுள்ள ஒரு வாரப் பயிர்ச்செய்கையாளர், மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தைக் கோரி கொழும்புக்கு வருவதற்குப் பதிலாக, கமத்தொழில் வாடகையைச் செலுத்துதல் தொடர்பிலான கட்டளையை மாகாணத்தின் மேல் நீதிமன்றத்திலேயே கேள்விக்குட்படுத்தக்கூடிய சந்தர்ப்பத்தை உடையவராக இருத்தல் வேண்டும். 1990 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் 13 ஆம் திருத்தத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக, கமநல சேவைகள் சட்டத்தின் 5 ஆம், 9 ஆம் பிரிவுகளின் நியதிகளில் ஆக்கப்பட்ட கட்டளைகள் தொடர்பில் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யப்படலாமென்று ஏற்பாடு செய்தது. மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்ல. கமநல சேவைகளின் சட்டத்தின் 18 ஆம் பிரிவு தொடர்பிலான விண்ணப்பங்களை அகற்றுவதற்கான அத்தகைய எந்த நியாயமுமில்லை.[20]

கமநல சேவைகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவு வாரப் பயிர்ச்செய்கையாளர்களின் உரிமைகள், நெற்காணியிலிருந்து வெளியேற்றப்பட்ட பயிர்ச்செய்கையாளர்கள் மற்றும் வாரப் பயிர்ச்செய்கையாளர்களை வெளியேற்றுதல்மீதான மட்டுப்பாடு என்பனவற்றிற்கு ஏற்பாடு செய்கிறது. 9 ஆம் பிரிவு, வாரப் பயிர்ச்செய்கையாளர் ஒருவர் இறக்குமிடத்து உரிமைகள் எவரைச் சென்றடையும் என்பதைப் பற்றிய பிணக்குகளை ஆணையாளர் தீர்மானிப்பதற்கு ஏற்பாடு செய்கிறது.

கமநல சேவைகள் சட்டத்தில் "கமத்தொழில் என்ற பதத்திற்குக் கொடுக்கப்பட்ட பொருள்கோடல் எந்த சந்தேகத்திற்கும் இடமளிக்கவில்லை என்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

சட்டத்தின் 60 ஆம் பிரிவுக்கிணங்க " கமத்தொழில் என்பது

I. நெல், வயற்பயிர்கள், வாசனைப்பொருட்கள், வாசனைச் சரக்குகள், கைத்தொழிற் பயிர்கள், காய்கறித் தாவரங்கள், பழமரங்கள், பூமரங்கள், புற்றரைகள், தீனிப்புல் என்பவற்றை வளர்த்தல்.

ii. பாற்பண்ணை வைத்தல், விலங்குப் பண்ணை வளர்த்தல், இனப்பெருக்கல்.

---

[20] ibid.90.

iii. தாவரநாற்று மேடைஇடுதலும், பழமர நாற்று மேடையிடுதல், என்பனவற்றை உள்ளடக்கும்.

பிரதம நீதிபதியின் தெளிவாக்குதலின் பின்னரும், மத்தும பண்டாவின் வழக்கில் உயர்நீதிமன்றத்தினால் கொடுக்கப்பட்ட தெளிவான பொருள்கோடலின் பின்னரும்கூட, இன்னமும் மாகாண சபைகள் கமநல சேவைகள் தொடர்பில் அதிகாரங்களைப் பிரயோகிக்கமுடியாமல் உள்ளன. விடயம் தொடர்பில் எந்தவொரு மாகாண சபையும் ஒரு நியதிச் சட்டத்தையாவது நிறைவேற்றவில்லை.

3.3.2 பயணிகள் போக்குவரத்து

மாகாண சபைகளின் நிரலின் 8 ஆம் அம்சத்தின்கீழ் மாகாணத்தினுள் வீதிப் பயணிகள் வண்டிச்சேவைகளையும், மோட்டார் வாகனங்களின் மூலம் பண்டங்களை ஏற்றிச்செல்வதையும் ஒழுங்குப்படுத்துதலும் மாகாணங்களுக்கு இடையேயான வீதிப் போக்குவரத்துச் சேவைகளை ஏற்பாடு செய்தலும் மாகாண விடயமொன்றாகும்.[21]

ஒரு மாகாண சபை அதன் சொந்த போக்குவரத்து சேவையை ஏற்பாடு செய்வதற்கு இது தெளிவாக அனுமதிக்கிறது. இருந்தபோதிலும், மத்திய அரசாங்கம் மாகாண சபைகள் பஸ்வண்டிச் சேவைகளை ஏற்பாடு செய்வதைத் தடைசெய்துள்ளது. 1991ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் முன்னுரையில் இலங்கை அரசாங்கத்தின் கொள்கை பின்வருமாறு உள்ளதாகக் குறிப்பிடுகிறது.

> "பஸ்வண்டிமூலம் பயணப் போக்குவரத்துத் தொடர்பான சேவைகளின் சொத்துடைமையும் செயற்பாடும் முற்றாகத் தனியார்த் துறைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், எந்த அரச நிறுவனத்தில், மாகாண சபையில் அல்லது உள்ளூராட்சி சபையில் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவில் அரசு, ஒரு மாகாண சபை அல்லது உள்ளூராட்சி சபை பங்குகளைக் கொண்டிருக்கின்றதோ அந்த அரச நிறுவனம், மாகாண சபை அல்லது உள்ளூராட்சி சபையில் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு எதுவும் அத்தகைய சேவைகளை வழங்கும் ஏதேனும் அத்தகைய குழுவை இப்பொழுது அரசு சொந்தமாக வைத்திருக்குமிடத்து அல்லது ஏதேனும் அக்கறையைக் கொண்டிருக்குமிடத்து அது அத்தகைய அக்கறையைக் கொண்டிருப்பதிலிருந்து சாத்தியப்படக்கூடியவாறான விரைவில் தன்னை உரித்துநீக்கம் செய்தல் வேண்டும்."

18ஆம் பிரிவு பின்வருமாறு ஏற்பாடு செய்கிறது.

---

[21] See *Re Transport Board Statute of the North-Eastern Provincial Council*, JP 148

"பஸ்வண்டியொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அரசாயின், மாகாண சபையொன்றாயின் உள்ளூராட்சி சபையொன்றாயின், அல்லது எந்த கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றில் அரசு, மாகாண சபையொன்று அல்லது உள்ளூர் அதிகார சபையொன்று பங்குகளைக் கொண்டுள்ளதோ அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின், வெவ்வேறு கட்டணங்களுக்குப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அத்தகைய பஸ்வண்டியைப் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கின்ற பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமெதுவும் இச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் வழங்கப்படுதலாகாது.

ஆயின், இப்பிரிவிலுள்ள எதுவும், எந்த பஸ்வண்டியின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் மக்கள்மயமாக்கப்பட்ட கம்பெனியொன்றாக இருக்கின்றாரோ அந்த ஒரு பஸ்வண்டி தொடர்பில், பயணப் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்படுவதைத் தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது."

வெளிப்படுத்த முனையப்பட்ட கொள்கை இலங்கை அரசாங்கத்தின் கொள்கையாக இருந்ததேயொழிய அது தேசிய கொள்கையல்ல. பரவலாக்கப்பட்ட ஒரு முறைமையின்கீழ் மத்திய அரசாங்கத்தின் கொள்கை தேசிய கொள்கையிலிருந்து வேறுபிரித்தறியப்படுதல் வேண்டும். முன்னுரை இலங்கை அரசாங்கத்தின் கொள்கைக்கு குறிப்பீடு செய்கிறதேயொழிய தேசிய கொள்கைக்கல்ல.

அத்துடன், தேசிய கொள்கை அரசியலமைப்புடன் ஒவ்வாததாக இருக்கவும் முடியாது. மாகாண சபை நிரலின் 8 ஆம் அம்சம் தமது சொந்த பஸ்வண்டிச் சேவைகளை ஏற்பாடு செய்வதற்கு வெளிப்படையாக அனுமதிக்கிறது.

தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு சட்டமூலம் உயர்நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்பட்டது.[22] தற்போதைய 18 ஆம் பிரிவைவிட 18 ஆம் வாசகம் பரந்த நோக்கெல்லையைக் கொண்டிருந்தது. அதற்கிணங்க ஒரு அரசு, மாகாண சபை அல்லது உள்ளூராட்சி சபை ஏதேனும் நிதிசார் அக்கறையுடையதாயிருக்கும் கூட்டிணைக்கப்பட்ட ஓர் குழுவுக்குக்கூட பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் வழங்கப்பட முடியாது. அரசு மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என்பன பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடத் தடைசெய்யப்பட்டமை, அரசியலமைப்பின் உறுப்புரை 12 (1) இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ள சமத்துவத்தை மீறுவதாக உள்ளது என்ற ஒரே ஏதுவின்மீது கேள்விக்குட்படுத்தப்பட்டது. மாகாண சபை நிரலின் 8ஆம் அம்சத்தில் தங்கியிருக்கவில்லை.

---

[22] DSCPB. Vol. VII, 9, 27.

உயர் நீதிமன்றம், சட்டமூலத்தின் குறிக்கோள்களின் அடிப்படையில் தடைசெய்த பஸ்வண்டி மூலமான பயணிகள் போக்குவரத்து தொடர்பான சேவைகளின் சொத்துடைமையையும், தொழிற்பாட்டையும் முழுமையாக தனியார் துறைக்கு உரித்தாகிறது எனத் தீர்ப்பளித்தது. ஆயினும், 'நிதிசார் அக்கறை' என்னும் சொற்பதம் வரைவிலக்கணப்படுத்தப்படவில்லையென நீதிமன்றம் குறிப்பிட்டது. அச்சொற்பதம் பாராளுமன்றத்தின் குழுநிலையில் நீக்கப்பட்டது.

நீதிமன்றம் 8 ஆம் அம்சத்திற்குக் குறிப்பீடு செய்யவில்லை. விண்ணப்பதாரர் அதைக் கேள்விக்குட்படுத்தாது விட்டாலும்கூட, கமநல சேவைகள் (திருத்தம்) சட்டமூலத்தில் மத்திய அரசு அதைக் கோராவிடினும்கூட சட்டமூலம் தேசியக் கொள்கையை வகுக்க முனைந்ததா என்று ஆராயப்பட்டதைப்போன்று இங்கும் நீதிமன்றம் 8 ஆம் அம்சத்தை ஆராய்ந்திருக்கலாம்.

3.3.3 நீர் சேவைகள் சீர்திருத்தச் சட்டமூலம்[23]

மேற்கூறப்பட்ட வழக்கில் தேசிய கொள்கை விடயம்மீதான முக்கிய அவதானிப்பு உயர் நீதிமன்றத்தினால் செய்யப்பட்டது. சட்டமூலம் "நீர் சேவைகள்" என்பதை ஒழுங்குபடுத்தவும், அத்துடன் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை, இலங்கையின் நீர் சேவைகள் கைத்தொழிலுக்கான ஒழுங்குபடுத்துநராக நியமிக்கவும் முனைந்தது. குழாய்மூலமான நீர் விநியோகம் முறையேயான உள்ளூராட்சி சபைக்குரித்தாக்கப்பட்ட பணியெனவும் ஆகவே மாகாண சபை நிரலில் வரும் ஒரு விடயமெனவும் தீர்ப்பளித்த நீதிமன்றம் ஒதுக்கு நிரலில் வரக்கூடிய வண்ணம் தேசியக் கொள்கையை வகுக்கும் ஒன்றாக அதைக் கருதக்கூடாதெனவும் குறிப்பிட்டது. சட்டமூலத்தின் ஏற்பாடுகள், சட்டமூலத்தில் உள்ள விடயங்களுக்கு விசேடமாக ஏற்புடையதாக்கி தொழிற்படுத்தும் தன்மையுடையனவாக இருந்தன. இந்தத் தீர்ப்பு, தேசிய கொள்கை உருவகவமைப்பு சட்டவாக்க வடிவத்தில் மட்டுமே இருக்கலாமென்பதையும் அத்துடன், பாராளுமன்றம் தேசிய கொள்கையை வகுக்கும் போர்வையில் மாகாண சபை நிரலில் அல்லது ஒருங்கியை நிரலில் உள்ள கருமங்கள்மீது சட்டவாக்கத்தை ஆக்க முடியாது என்பதையும் இது வலியுறுத்துகின்றது.

அமைச்சரவை தீர்மானங்களாலும் சுற்றறிக்கைகளாலும் தேசியக் கொள்கை வகுக்கப்படல்

பதின்மூன்றாவது திருத்தத்தை வாசிக்கும்போது, தேசியக் கொள்கை பாராளுமன்றதின் சட்டமூலத்தினால் மட்டுமே ஆக்கப்படலாமென்பது

[23] [1991-2003] VII DSCPB 439, JP 447.

தெளிவாயிருந்தபோதும், தொடர்ச்சியான அரசாங்கங்கள் அமைச்சரவை தீர்மானங்களாலும் சுற்றறிக்கைகளாலும் அத்தகைய கொள்கைகளை வகுக்க முனைந்துள்ளன.

கமலாவதி எதிர் வடமேற்கு மாகாணத்தின் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு[24] என்னும் வழக்கில் தேசியக் கொள்கையொன்றாக அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையைப் பின்பற்றி கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட 95/11ஆம் இலக்க சுற்றறிக்கை வடமேற்கு மாகாணத்தின் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் பின்பற்றப்படவில்லையென சமுர்த்தி விண்ணப்பதாரர்கள் உயர் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தனர். நீதிபதி மார்க் பெர்ணாந்து, நீதியரசர்களான வடுகொடபிட்டிய மற்றும் இஸ்மாயில் என்பவர்களுடன் உடன்பட்டு, சுற்றறிக்கை கல்வியின் ஒரு முக்கிய அம்சம் தொடர்பில் தேசியக் கொள்கையை வகுத்துள்ளது என்று தீர்ப்பளித்தார். "கல்வி சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் மாகாண சபைகளுக்குப் பரவலாக்கப்பட்டிருக்கும்போது, அத்தகைய அதிகாரங்கள் தேசியக் கொள்கைக்கிணங்க பிரயோகிக்கப்படல் வேண்டும். ஏதேனும் விடயம் தொடர்பில் தேசிய கொள்கை உரிய முறையில் வகுக்கப்பட்டுள்ளபோது, அவ்விடயம் தொடர்பில் முரண்படும் ஏதேனும் மாகாணக் கொள்கை இருக்கமுடியாது.[25] (அழுத்தம் சேர்க்கப்பட்டுள்ளது)

அமைச்சரவையின் தீர்மானத்தைப் பின்பற்றி மத்திய அரசின் அமைச்சினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை உரிய முறையில் வகுத்தமைக்கப்பட்ட தேசியக் கொள்கையாகும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது பிழையாகுமென்று சமர்ப்பிக்கப்பட்டது. பதின்மூன்றாவது திருத்தத்தின் நோக்கெல்லைப் பொருள்கோடலை அனுமதிக்கவில்லை. தேசியக் கொள்கை, சட்டத்தினால் மட்டுமே ஆக்கப்படலாமென்று மட்டுமே அது குறிப்பிடுகின்றது. 154(எ)(7)ஆம் உறுப்புரை சட்டவாக்கம் சம்பந்தப்பட்ட ஒரு ஏற்பாடாகும். மாகாண சபைகளின் சட்டவாக்க அதிகாரத்திலிருந்து ஒதுக்கு நிரலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள கருமங்களை விலக்கி, அந்த நிரலில் "எல்லா விடயங்களினதும் பணிகளினதும் மீதான தேசியக் கொள்கை" என்பதை உள்ளடக்குவதன்மூலம் மாகாண நிரலிலுள்ள ஒருங்கியை நிரலிலும் உள்ள விடயங்களினதும் பணிகளினதும்மீதான தேசிய கொள்கையை வகுத்தமைப்பது பாராளுமன்றத்தின் சட்டவாக்கத் அதிகாரத்தினுள் உள்ளது என்பது தெளிவு.

---

[24] [2001] 1 Sri L.R. 1.

[25] ibid.5.

3.3.5 "தேசிய கொள்கை"மூலம் மாகாண சபைகளை மட்டுப்படுத்தல்.

மாகாண சபைகளின் தொழிற்பாடு பற்றிய கற்கைக்காக மாகாண சபைகள் அமைச்சரினால் 1995இல் நியமிக்கப்பட்ட குழு,[26] தேசிய கொள்கை ஏற்பாடு எங்ஙனம் பயன்படுத்தப்பட்டது பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டது:-

> "தேசியக் கொள்கை தொடர்பிலான ஏற்பாடுகளின் தொழிற்பாடு, பரவலாக்கப்பட்ட அதிகாரங்களையும் பணிகளையும் மட்டுப்படுத்துவதாகக் காணப்பட்டது. பின்வருவன இது தொடர்பிலான முக்கிய விடயங்களாகும்.
>
> அ. தேசியக் கொள்கை என்றால் என்ன? அதன் நோக்கெல்லை.
>
> ஆ. அதை வகுத்தமைக்கும் பொருத்தமான அதிகாரசபை.
>
> இ. எக்கருமங்கள் தொடர்பில் தேசிய கொள்கை வகுத்தமைக்கப்படலாம்.

அரசாங்க அமைச்சர்கள், தேசிய கொள்கையைத் தொழிற்படு நியதிகளில் பொருள் விளக்கத்தைச் செய்யும் மனப்பாங்கை உடையவர்களாக இருந்ததனால் மாகாண விடயங்கள் தொடர்பிலும் தங்கள் நிர்வாக எல்லைகளை விரிவாக்கினர்.

அநேக அரசாங்க அமைச்சர்கள் பரவலாக்கத்துக்கு முன்னிருந்த நிலையிலேயே தமது தொழிற்பாடுகளைத் தொடர்ந்து நடாத்துகின்றனர். எனவே அரசாங்க அமைச்சர்கள், மாகாண அமைச்சைக் கடந்து (புறக்கணித்து) முறையேயான திணைக்களத் தலைவர்களுக்கு வழமைபோல நெறியுறுத்தல்களையும் சுற்றறிக்கை அறிவித்தல்களையும் நேரடியாகவே வழங்குகின்றனர். மேலும் அதிகாரப் பரவலாக்கத்தைப் பொறுத்தவரையிலான பங்கு மற்றும் பணிகள் தொடர்பிலான நியதிகளில் எந்த மீள் கட்டமைப்பும் இல்லாதுள்ளது. ஆகவே, அநேகமான அரசாங்க அமைச்சுக்கள் மாகாண சபைகளுடன் பங்காளிகளாகவே சேர்ந்தது.[27] தமது பிரிவுக்கான விடயங்களில் தேசிய கொள்கைகளை வகுத்தமைக்கத் தவறியுள்ளனர் எனத் தோன்றுகிறது.

தேசியக் கொள்கை ஏற்பாடு தொழிற்படுத்தப்பட்ட விதம், மாகாண சபைகள் பெரும்பாலும் கிரமமுறையான மீள்திருத்தப் பங்கையே வகிக்க இடமளித்தது என்பதுடன், இது அதிகாரப் பரவலாக்கல் அடிப்படைக்கு

---

[26] The Committee was chaired by A.S. Gunawardena, former Secretary, Ministry of Provincial Councils and later, Chairman of the Finance Commission. The other members were: Dr. H.A.P. Abeywardena, Senior Consultant, Postgraduate Institute of Management, Y.W. Gunawardena, former Additional Secretary to the President, Prof. Gunapala Nanayakkara, Director, Postgraduate Institute of Management and N. Pathmanathan, Additional Director General, Department of National Planning.

Provincial Councils: Operational Experience of Devolution, Report of the Committee to study the operation of Provincial Councils in Sri Lanka, 1996, pp. 7-8 (unpublished).

மாறுபாடான ஒன்றாகவும் உள்ளது என்று குழு அவதானித்து பின்வருமாறு குறிப்பிட்டது.

> "தேசியக் கொள்கை, ஒதுக்கப்பட்ட பணியொன்றாதலால் அரசாங்கத்துக்கும் மாகாணத்துக்குமிடையிலான பங்களிப்பில் வேறுபாட்டை அது பயனுறுத்துகிறது. எனவே, அரசாங்கம் பணிக்கும் பங்கினைப் புரியும் அதேவேளை, மாகாணங்களை அமுல்படுத்தும் பங்குக்குத் தாழ்த்தப்பட்டுள்ளது. ஆகவே, கொள்கைப் பணிப்புக்களைக் கொடுக்கும் பணியைச் செய்து மாகாணங்களை முடிவெடுக்கும் பணியிலிருந்து விலக்கி வைக்கும் மனப்பாங்கு அரசாங்கத்துக்கு இருந்துவருகின்றது. இது பெரும்பாலும் தொழிற்படுத்தும் மீதமான பங்கினை மட்டுமே வகிக்கிறது. தற்போது நடைமுறையில் உள்ள அரசாங்க - மாகாண உறவுகளின் இயல்பினாலும் மற்றும் நோக்கெல்லையினாலும் தொழிற்படுத்தும் நியதிகளிலேயே மாகாணத்தை நோக்குதல் வலியுறுத்தப்படுகின்றது. இது அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அடிப்படைக்கு மாறுபாடான ஒன்றாகுமென்பதுடன், அரசாங்கம் மற்றும் மாகாணங்களுக்கிடையில் பங்காண்மையைத் தாபிப்பதற்கான ஒரு உறவையும் உருவாக்கவில்லை."[28]

பதின்மூன்றாவது திருத்தத்தின்கீழான அனுபவங்களைப் பார்க்கும்போது, 2000ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்புச் சட்டமூலத்தில் மத்திய அரசினால் தேசிய கொள்கை அல்லது தேசிய நியமங்கள் உருவாக்கப்படுதல் தொடர்பிலான விடயங்கள் கணிசமானளவு குறைக்கப்பட்டே இருந்துள்ளன. பிரபல்யமற்ற விடயம் யாதெனில், "எல்லா விடயங்களினதும் பணிகளினதும்மீதான தேசிய கொள்கை" விட்டுவிடப்பட்டது. பாராளுமன்றம், காப்புறுதி, மருந்துகள், நஞ்சு, போதைப்பொருள் கல்வி, உல்லாசத்துறை, கலைஞர்கள், பெண்கள் மற்றும் விளையாட்டுத்துறை போன்ற அத்தகைய கருமங்கள்மீது மட்டுமே தேசிய கொள்கையை ஆக்கக்கூடியதாயிருந்தது.

சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழு (APRC) வில் பணியாற்ற ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழாமின் வகுதி 'அ' ("பெரும்பான்மை அறிக்கை"[29] என்று பொதுவில் அறியப்படும்) தமது முதனிலை அறிக்கையில், தேசியக் கொள்கை மற்றும் தேசிய நியமங்களை ஆக்குகையில் மாகாணங்களின் பங்களிப்பும் தேவையென வலியுறுத்தியது. இம்முறை, பாராளுமன்றம் உருவகவமைப்பு சட்டவாக்கத்தை நிறைவேற்றப் பெரிதும் துணை செய்யும். பரவலாக்கப்பட்ட விடயம் தொடர்பிலான உருவகவமைப்புச் சட்டவாக்கம் மாகாணத்தினுள் ஏற்புடையதான சட்டமாக அமையாது. ஆனால், மாகாணங்கள் நியதிச் சட்டம் நிறைவேற்றும்போது அதனுடைய

---

[28] ibid.13.

[29] Unpublished, 06.12.2006

உருவகவமைப்புச் சட்டவாக்கத்துடன் இணங்கியொழுகுதல் தேவைப்படுத்தப்படும். தேசிய கொள்கை அல்லது தேசிய நியமங்கள் தொடர்பில் தேவைப்படுத்தப்படும் விடயங்களும் பணிகளும் குறைந்தளவிலேயே இருத்தல் வேண்டும்.

3.3.6 சர்வதேச அனுபவம்

பரவலாக்கப்பட்ட அல்லது சமஸ்டி அமைப்புக்களையுடைய சில நாடுகள் இனங்காணப்பட்ட விடயங்கள் மற்றும் பணிகள் தொடர்பில் சட்டவாக்கத்தை ஆக்குவதற்கு மத்திய அரசை அனுமதிக்கின்றன.

ஜேர்மனியில் சமஸ்டி அரசு குறித்த சில விடயங்களில் உருவகவமைப்பு ஏற்பாடுகளை ஆக்கலாம். லான்டருக்காக (ஜேர்மனியின் ஒரு மாநிலம்) சட்டவாக்கத்தை ஆக்குவதற்கோ அல்லது முழுமையாக அவ்விடங்களை ஒழுங்குபடுத்துவதற்கோ அனுமதிக்கப்படவில்லை. பிராந்தியரீதியிலான வேறுபாடுகளுக்கான நோக்கெல்லையை அனுமதிக்கும் ஒரு உருவகவமைப்பை மட்டுமே சமஸ்டி அரசு செய்யும். உருவகவமைப்பு, லான்டரினால் தமது சொந்த ஏற்பாடுகளுடன் வடிவமைக்கப்படும். சமஸ்டி அரசியலமைப்பு நீதிமன்றம், குறிப்பிடத்தக்களவு சுதந்திரம் லான்டருக்கு விடப்படவேண்டுமென்று வலியுறுத்தியது.

ஜேர்மனி அரசியலமைப்பின் 75ஆம் உறுப்புரையின்கீழ் (உருவகவமைப்புச் சட்டவாக்கப் பட்டியலை ஆக்குவதற்கான சமஸ்டி அரசின் அதிகாரம்) லான்டரின் பகிரங்க சேவையிலுள்ள ஆட்களின் சட்ட அந்தஸ்து, சமூகங்கள் மற்றும் பொதுச்சட்டக் கூட்டிணைப்புக் குழுக்கள், உயர் கல்வியை ஆளும் பொதுவான கோட்பாடுகள், பத்திரிகை மற்றும் நடமாடும் படங்களின் நிலை தொடர்பிலான பொதுவான சட்ட விதிகள், வேட்டையாடல், நகர்ப்புறங்களில் இயற்கையைப் பாதுகாத்து பராமரித்தல், காணிப் பகிர்வு, பிராந்தியத் திட்டமிடல் மற்றும் நீரைப் பேணிப் பாதுகாத்தல், அத்துடன் அடையாள அட்டைகள் மற்றும் பதிவு ஆகியவை சம்பந்தப்பட்ட பொதுவான விதிகள் ஆக்கப்படலாம்.

அவுஸ்ரேலியாவின் உருவகவமைப்பு சட்டவாக்கத்தைப் பின்பற்றி, மாநிலங்களினால் அமுலாக்கல் சட்டவாக்கம் நிறைவேற்றப்படல் வேண்டும். ஒரு மாநில அரசு, அத்தகைய சட்டவாக்கத்தை நிறைவேற்றாது விடின் சமஸ்டி அரசு அதனைச் செய்யலாம். அவுஸ்ரேலிய அரசியலமைப்பின் உறுப்புரை 15(6) பின்வருமாறு கூறுகின்றது.

> "(6) உருவகவமைப்பு சட்டவாக்கம், சமஸ்டி அரசுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் அளவுக்கு சமஸ்டி சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள உருவகவமைப்பினால் விரிவான அமுலாக்கலைச் செய்வது மாநில சட்டவாக்கத்துறைகள்மீது சுமத்தப்பட்ட கடமையாகிறது. சமஸ்டிச் சட்டம் அமுலாக்கல் சட்டவாக்கத்தை

வழங்குவதற்கான கடைசித்திகதியை நிர்ணயிக்கலாம். அது சென்றில் சம்மதமில்லாது செய்யப்படக்கூடாது. அது ஆறு மாதங்களுக்குக் குறையாமலும் ஓர் ஆண்டுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். மாநிலம் இக்கடைசித் திகதியை அவதானிக்காவிடின், அமுலாக்கல் சட்டவாக்கத்தை நிறைவேற்றுவதற்கான தகைமை மாநிலத்திலிருந்து சமஸ்டிக்குக் கைமாறும். மாநில அமுலாக்கல் சட்டவாக்கத்தை உருவாக்கிய உடனேயே, சமஸ்டி அமுலாக்கல் சட்டவாக்கம் வலிதற்றதாகிவிடும். சமஸ்டி அமைப்பு ஏதேனும் உருவகவமைப்புச் சட்டவாக்கத்தை தாபிக்காவிடில், அத்தகைய கருமங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கான சுதந்திரத்தை உடையதாக இருக்கும். சமஸ்டி அமைப்பு, உருவகவமைப்பொன்றைத் தாபித்தவுடன் உடனடியாக மாநில சட்டவாக்கத்தின் ஏற்பாடுகள் சமஸ்டி சட்டத்தினால் நியமிக்கப்படும் கடைசித் தேதியிலுள்ள உருவகவமைப்பு சட்டவாக்கத்துக்கேற்ப சரிசெய்யப்படல் வேண்டும்."

விக்டோரியா பாராளுமன்றத்தின் சமஸ்டி மாநில உறவுகளுக்கு, சமஸ்டி முறையும் மாநிலங்களின் பங்கும்: ஒத்துநோக்கலும் விதந்துரைகளும[30] என்னும் தலைப்பிடப்பட்ட மிகவும் பயனுள்ள அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

மாநில அரசியலமைப்பினாலும் அவுஸ்திரேலிய அரசியலமைப்பினாலும் அளிக்கப்பட்ட அதிகாரங்களை அங்கீகரித்து, அவுஸ்திரேலியா முழுவதற்குமான தனியான ஒரு முக்கிய தேசியக் கொள்கையை மீறாத வகையில் மாநிலங்கள் தமது சொந்தக் கொள்கை முடிபுகளை உருவாக்க முடியும் என்று விதப்புரை செய்துள்ளது.

குழு, மாநிலங்களுக்குள் நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து முடிபுகள் எடுக்கும் நடைமுறையின்போது, பிரதிநிதித்துவப்படுத்தப்படவும் எடுக்கப்படும் தீர்மானங்களுடன் திருப்திப்படக்கூடிய வண்ணமும் தேசிய கொள்கை முடிபுகள் எடுக்கப்படவேண்டுமென விதப்புரை செய்தது. இது மாநில அரசாங்கங்கள் அவர்களது மாநிலங்களுக்கான பிரத்தியேக நலன்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் அவர்களின் பங்கேற்பதையும் தேவைப்படுத்தும்.

தேசியக் கொள்கையை ஆக்குவதற்கான மேலோங்கும் முக்கியத்துவம் இருக்கும்போது குறிப்பிட்ட தேசிய நலன் இல்லாதவிடத்து (வசதிக்காக ஒருமுகப்படுத்தப்பட்ட தகுதிக்காக நலன் தவிர்த்து) முடிபு அரசுகளால் எடுக்கப்படுதல் வேண்டும்.

மாநில நலன்களின் இயைபான வேறுபாடுகளுக்கும், குறிப்பான தேசிய நலனும் இருக்குமிடத்தும், தேசிய கொள்கைத் தீர்மானத்தை எடுப்பதற்கான மேலோங்கும் முக்கியத்துவம் அவசியமாக இருக்குமிடத்தும், அரசுகளும்,

---

[30] <http://www.parliament.vic.gov.au/fsrc/report3/front/reccos.htm> accessed 27 March 2009.

பொதுநலவாயமும் கூட்டுறவுடன் கொள்கை முடிவுகளை ஆக்குதல் வேண்டுமெனக் குழு விதப்புரை செய்கின்றது.

தேசியக் கொள்கையை ஆக்குவதற்கான மேலோங்கும் முக்கியத்துவம் இருக்குமிடத்து, ஆனால், தேசியரீதியில் ஒருமுகப்படுத்தப்பட்ட நிர்வாக முறைமையோ அல்லது அமுலாக்கலோ கொள்கைக்கு அத்தியாவசியமற்றதாயிருந்தால், அரசின் நலன்களுக்கு பொறுப்பான பிரத்தியேக மாநில நிர்வாகங்களுடனேயே தேசிய கொள்கையை அமுலாக்குவதற்கான பொறுப்பு இருக்கும்.

3.3.7 விதப்புரை

மத்திய அரசு, மாகாண நிரலில் அல்லது ஒருங்கிய நிரலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள ஒரு கருமத்தின்மீது தேசிய கொள்கையை ஆக்க விரும்பினால், மாகாண சபைகள் பங்கேற்கக்கூடிய முறை ஒன்றின்மூலமே அத்தகைய கொள்கை வகுத்தமைக்கப்படல் வேண்டும். அங்ஙனம் வகுத்தமைக்கப்பட்ட கொள்கை, உருவகவமைப்பு சட்டவாக்கப்படிவத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அத்துடன், எல்லா மாகாண சபைகளும் அத்தகைய உருவகவமைப்பினுள் செயற்படவும் வேண்டும். அமைச்சரவை முடிவுகள் மற்றும் சுற்றறிக்கைகள்மூலம் தேசிய கொள்கையை உருவாக்கும் வழக்கம் நிறுத்தப்படவேண்டும்.

3.4 ஆட்சித்துறை அதிகாரத்தின் இரட்டைப் பொறுப்புக்கள்

அத்தியாயம் 1 இல் விவரிக்கப்பட்டது போல 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டம், நியதிச் சட்டங்கள் இல்லாதபோதும் 1987 ற்கு முந்திய சட்டங்களை சட்ட அடிப்படையாகப் பயன்படுத்தி மாகாண சபை அதிகார சபைகள், ஆட்சித்துறை அதிகாரத்தைப் பிரயோகிக்கக்கூடிய வண்ணம் நிறைவேற்றப்பட்டது. மாகாண சபை நிரலிலுள்ள கருமங்களுக்கு மட்டுமே சட்டம் ஏற்புடையதானதாகும்.

சட்டம், மாகாண சபைகளுக்கு பெரிதும் உறுதுணையாய் இருந்துள்ளதென்பதில் எந்த சந்தேகமும் கிடையாது. கடும் பிரச்சனைகளும் ஏற்பட்டுள்ளன.

ஒரு நியதிச் சட்டம் ஆக்கப்பட்டால் மட்டுமே, மாகாண சபைகள் நிரலிலுள்ள ஒரு கருமம் தொடர்பில் 1987 இற்கு முந்தைய பாராளுமன்றச் சட்டம் முக்கியமாகிறது. உறுப்புரை 154 (எ) (8) பின்வருமாறு குறிப்பிடுகிறது:

> "மாகாண சபைகள் நிரலிலுள்ள ஏதேனும் கருமம் தொடர்பிலான சட்டமொன்று, இந்த அத்தியாயம் வலுவுக்கு வருகின்ற திகதியன்று வலுவிலிருந்து ஒரு மாகாணத்திற்கென தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்று அதன்பின்னர் அதே கருமம்மீது நியதிச் சட்டமொன்றை

> ஆக்கியிருப்பதாகக் கருதி, அந்நியதிச்சட்டத்தின் விரிவுப்பெயரில் அது சட்டத்துடன் ஒவ்வாததாகவிருக்கின்றதென விவரிக்கப்படுகின்றவிடத்து, அப்போது, சட்டத்தின் ஏற்பாடுகள், அந்நியதிச் சட்டம் சம்மதம் பெற்ற திகதியிலிருந்து அந்நியதிச் சட்டம் வலுவிலிருக்கின்ற வரையில் மட்டுமே, இடைநிறுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அம்மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்தப்படாதொழிதலும் வேண்டும்."

1987ற்கு முந்திய எந்தச் சட்டங்களுக்கு மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டம் ஏற்புடைத்தானதோ, அச்சட்டங்களின்கீழ் மாகாண சபைகள் அதிகாரங்களைப் பிரயோகிக்க இயலுமானவைகளாக இருந்தபோதிலும், அத்தகைய நியதிச் சட்டம் ஆக்கப்பட்டாலன்றியும், அதுவரையிலும் மத்திய அதிகார சபைகளும் (அவை அங்ஙனம் விரும்பினால்) அவ்வதிகாரங்களைப் பிரயோகிக்கலாம் என்பதே இதன் அர்த்தமாகும்.

சப்ரகமுவ மாகாண சபையினால் நிர்வகிக்கப்பட்டு வந்த இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆதார வைத்தியசாலைகள் பொறுப்பேற்கப்பட்டமை, இதற்கு ஒரு உதாரணமாகும். 1994 இல் மத்திய அரசு இரண்டு வைத்தியசாலைகளினதும் நிர்வாகங்களைப் பொறுப்பேற்க முனைந்தது. சட்டமா அதிபர் 4.11.1994 ஆம் தேதிய தனது கடிதத்தின்மூலம் இரண்டு வைத்தியசாலைகளினதும் நிர்வாகத்திற்கு ஏற்பாடு செய்யும் ஒரு நியதிச் சட்டம் இல்லாதவிடத்து, "இவ்விரண்டு வைத்தியசாலைகளினதும் கட்டுப்பாடு சட்டப்படியாக சுகாதார அமைச்சிடமே தொடர்ந்துள்ளது" என்று, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.[31]

கருமத்தின்மீது ஒரு மாகாண நியதிச் சட்டம் இல்லாதவிடத்து மத்தியிலுள்ள அமைச்சர் உள்ளூராட்சி சபைகள்மீது மேற்பார்வை அதிகாரத்தைப் பிரயோகிக்கலாமா என ஆலோசனைக் கேட்டபோது, சட்டமா அதிபர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> "மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டம், பாராளுமன்றத்தின் ஏதேனும் சட்டத்தின்கீழ் மத்திய அரசாங்கத்தின் அமைச்சருக்குள்ள அதிகாரங்களை அவரிடமிருந்து இல்லாமலாக்காது என்பதுடன் அவற்றை அவர் தொடர்ந்தும் பிரயோகிக்கலாம் என்பது கவனிக்கப்படத்தக்கது. வடகிழக்கு மாகாணங்களிலுள்ள உள்நாட்டரசாங்கத்தைப் பாதிக்கும் கருமங்கள், மத்திய அரசினால் உள்நாட்டரசாங்கம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சராலும் (அவர் விரும்பினால்) ஆளுநரினாலும் பிரயோகிக்கப்படலாம் என நான் அபிப்பிராயப்படுகிறேன்".[32]

---

[31] *Provincial Councils: Operational Experience of Devolution*, Report of the Committee to study the operation of Provincial Councils in Sri Lanka, 1996, p. 57 (unpublished).

[32] ibid.55.

மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தில் நடைமுறையிலுள்ள சட்டத்தில் அதிகார சபைகளுக்கான குறிப்பீடுகள், நேரொத்த மாகாண அதிகார சபைகளுக்கான குறிப்பீடுகளை உள்ளடக்குபவைகளாகக் கருதப்படுகின்றன என்பதுடன், அவற்றுக்கான குறிப்பீடுகளாக மட்டுமே இருக்கவில்லையென்று பொருள்படக்கூடிய வகையில், அதன் சொல்லமைப்பு அமைந்துள்ளதாலேயே இப்படி ஒரு நிலை ஏற்பட்டுள்ளதும், மத்திய அரசாங்க அதிகார சபைகளின் அதிகாரங்கள் பாதிக்கப்படாது தொடர்ந்து வந்துள்ளன.

3.4.1 விதப்புரை

மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் நோக்கெல்லை, ஒருங்கிய நிரலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள கருமங்களுக்கு நீடிக்கப்படுதல் வேண்டுமென விதப்புரை செய்யப்படுகின்றது. அத்தகைய திருத்தம் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை மட்டுமே தேவைப்படுத்துமென்பதுடன், நியதிச் சட்டங்களை நிறைவேற்றாமலேயே ஒருங்கிய நிரலிலுள்ள விடயங்கள் மற்றும் பணிகள் தொடர்பில் மாகாண சபை அதிகார சபைகள் ஆட்சி அதிகாரத்தைப் பிரயோகிக்க அனுமதிக்கவும் செய்யும். நடைமுறையிலுள்ள சட்டங்களிலுள்ள அதிகார சபைகளுக்கான குறிப்பீடுகள், நேரொத்த மாகாண அதிகார சபைகளுக்கான குறிப்பீடுகளாக மட்டுமே கருதப்பட வேண்டும் என்று ஏற்பாடு செய்வதற்காகவும் சட்டம் திருத்தப்படலாம். எல்லா மாகாண சபைகளும் நேரொத்த நியதிச் சட்டங்களை ஆக்குவார்கள் என்பது நடைமுறைச் சாத்தியமற்றதொன்றாகையினால், உறுப்புரை 154 இ உண்மையில் உடனடியாகச் சாத்தியமாகக் கூடிய வண்ணம் மத்திய அரசிடமிருந்து மாகாண அதிகார சபைகளுக்கு, பரவலாக்கப்பட்ட கருமங்கள் தொடர்பில், 1987 இற்கு முந்தைய சட்டங்களின்கீழான ஆட்சித்துறை அதிகாரங்கள் முழுமையாகக் கைமாற்றப்படும் விளைவையுடைய பாரிய முன்னேற்றப்படியாக இது அமையலாம். ஏதேனும், பரவலாக்கப்பட்ட விடயம் தொடர்பில் ஆட்சித்துறை அதிகாரத்தைப் பிரயோகிப்பதில்லை என்ற கொள்கை முடிவையாவது எடுப்பதே மத்திய அரசாங்கம் செய்யக்கூடிய ஆகக் குறைந்தவொன்றாகும்.

3.5 மாகாண பகிரங்க சேவை

மாகாண சபைகள் சட்டத்தின் 32 ஆம் பிரிவு மாகாண பகிரங்க சேவையின் அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றுக்கான அதிகாரங்களை ஆளுநருக்கு உரித்தாக்குகின்றது. ஆளுநர் அத்தகைய அதிகாரங்களை காலத்துக்குக் காலம் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்குக் கையளிக்கலாம். மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு, ஆளுநரினால் விரித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக, அத்தகைய அதிகாரங்களைப் பிரதான

செயலாளருக்கு அல்லது எவரேனும் மாகாண பகிரங்க சேவை அலுவலருக்குக் கையளிக்கலாம். இவர்களின் கட்டளைகளுக்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யப்படலாம். மாகாணமொன்றின் ஆளுநர், மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் மேன்முறையீட்டின்போது அல்லது வேறுவகையில் ஆக்கப்பட்ட அல்லது எந்தப் பிரதான செயலாளருக்கு அல்லது மாகாண பகிரங்க சேவையின் அலுவலருக்கு அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளனவோ அவரால் ஆக்கப்பட்ட ஏதேனும் நியமனம், இடமாற்றம் தொடர்பான அல்லது வேறேதேனும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு கருமம் தொடர்பிலான கட்டளைகளை மாற்றுவதற்கு, வேறுபடுத்துவதற்கு அல்லது இல்லாதாக்குவதற்கு அதிகாரமுடையவராவார்.

ஆட்சேர்த்தல் செயற்திட்டங்களையும் அத்தகைய அலுவலர்களுக்கான நடத்தைக் கோவைகளையும் பதவியேற்றங்களையும் இடமாற்றங்களையும் செய்யும்போது பின்பற்றப்படவேண்டிய நெறிகளையும் அத்தகைய அலுவலர்களின் நியமன, இடமாற்ற, பதவிநீக்க, ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கும் கையளிப்பதற்குமான நடவடிக்கை முறைகளை வகுப்பாக்கம் செய்தல் உட்பட மாகாண பகிரங்க சேவையின் அலுவலர்கள் தொடர்பான எல்லாக் கருமங்களுக்கும் ஆளுநர் ஏற்பாடு செய்தல் வேண்டும் என்பதுடன், அவற்றைத் தீர்மானித்தலும் வேண்டும். அத்தகைய ஆட்சேர்த்தல் செயற்திட்டங்களையும், நடத்தைக் கோவைகளையும் வகுப்பாக்கம் செய்கையில் ஆளுநர் சாத்தியமாகக் கூடியவாறு பகிரங்க சேவையிலுள்ள நேரொத்த அலுவலர்களுக்கு விதித்துரைத்த ஆட்சேர்த்தல் செயல்திட்டங்களையும் பகிரங்க சேவையில் நேரொத்த பதவிகளை வகிக்கும் விதித்துரைக்கப்பட்ட நடத்தைக் கோவைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு, ஆளுநரினால் நியமிக்கப்படும் மூன்றுக்குக் குறையாத ஆட்களைக் கொண்டிருக்கிறது. ஆளுநர் அவர்களுள் ஒருவரைத் தவிசாளராகப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

3.5.1 ஆளுநரின் அதிகாரங்களைப் பிரயோகித்தல்

பொடிநிலமே எதிர் மத்தியூ[33], என்ற வழக்கில் ஆளுநர் மாகாணப் பகிரங்க சேவைக்கு உறுப்பினர்களை நியமிக்கும்போது அமைச்சர்களின் சபையின் ஆலோசனைக்கிணங்க செயற்படவேண்டிய கடப்பாடு உடையவரா அல்லவா என்பது, எழுப்பப்பட்ட கேள்விகளுள் ஒன்றாகும்.

ஆளுநர், ஆணைக்குழுவை மீளமைப்பதை இயலச்செய்வதற்காக ஆணைக்குழுவின் உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு கோரினார். உறுப்பினர்கள் பதவி விலகவில்லை. ஆளுநர் பின்வருமாறு குறிப்பிடும் ஒரே வண்ணமான கடிதங்கள்மூலம் அவர்களைப் பதவியிலிருந்து அகற்றினார்.

---

[33] [1996] 2 Sri LR 82, JP 281

"1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 33 (3) இன்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நான் சப்ரகமுவ மாகாணத்தின் மாகாணப் பகிரங்க சேவையை மீளமைப்பதற்காக என்னை இயலச்செய்யும் பொருட்டு 1995 ஜீன் 1 ஆம் தேதியிலிருந்து பயன்படும் வண்ணம் உங்களை சப்ரகமுவ மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றுகிறேன்."

மேன்முறையீட்டு நீதிமன்றம் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிப்பதற்கும் அகற்றுவதற்குமான தனியான அதிகாரம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு உள்ளது எனத் தீர்ப்பளித்தது. பிரிவு 32 (1) இன்கீழ் மாகாணத்தின் பகிரங்க அலுவலர்களின் நியமனம் போன்றவற்றைச் செய்வதற்கான அதிகாரம் ஆளுநருக்கே உரித்தாக்கப்பட்டுள்ளது. அவர் தமது தற்றுணிபில் அவ்வதிகாரங்களை மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்குக் கையளிக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் ஆளுநருக்கு, அல்லது மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு மாகாணப் பகிரங்க சேவையின் அலுவலர்களின் நியமனங்களின் மீது ஆலோசனைக் கூறக்கூடிய எந்த அதிகாரமும் அமைச்சர்கள் சபைக்கு உரித்தாக்கப்படவில்லை என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. சட்டத்தின் 34 ஆம் பிரிவு, மாகாண சபை அமைச்சர் உள்ளிட்ட எவரேனும் ஒருவர் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அத்தகைய நியமனங்களின்போது தலையீடு செய்வதைத் தடைசெய்கிறது. எனவே, உறுப்புரை 154 இ அல்லது 154 ஊ மாகாணப் பகிரங்க சேவையின் தொழிற்பாட்டுக்கு ஏற்புடையதானதல்ல. சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் ஆளுநருக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரம் ஒரு குறிப்பிட்ட அதிகாரமாகும் என்பதுடன், உறுப்புரை 154 இ இன்கீழ் நியதிச் சட்டம் ஆகியனவற்றை ஆக்குவதற்கு மாகாண சபைகளுக்குள்ள அதிகாரத்திற்கோ அல்லது உறுப்புரை 154 ஆ வின்கீழ் ஆளுநரால் நிறைவேற்றப்படவேண்டிய பணிகளுக்கோ நீடிக்கப்படக்கூடிய சாதாரண ஆட்சித்துறை அதிகாரம் அல்ல. எனவே, விடயத்தை உயர்நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் எழவில்லையென நீதிமன்றம் குறிப்பிட்டது.

ஏதேனும் காரணம் காட்டப்படாது உறுப்பினர்கள் பதவியிலிருந்து அகற்றப்படமுடியுமா என்பதே இரண்டாவது வினாவாகும். ஆளுநர் ஆணைக்குழுவை மீளமைப்பதற்குத் தன்னை இயலச்செய்வதற்கென்று கூறியதைத் தவிர்த்து, உறுப்பினர்களை அகற்றுவதற்கான எந்தக் காரணத்தையும் காட்டவில்லை. மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 33 (3) இன்கீழ் குறித்தொதுக்கப்பட்ட காரணத்துக்காக மட்டுமே ஒரு உறுப்பினர் அகற்றப்படலாம். நீதிமன்றம் உறுப்பினர்களை அகற்றுவதற்கான காரணம், பொதுமக்கள் எதிர்பார்க்கும் வண்ணம் தமது கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்து அவர்களைத் தடுக்கும் மிகவும் பாரதூரமானதொன்றாக இருக்கவேண்டுமென்று தீர்ப்பளித்தது.

நீதிமன்றத்துக்குக் கொடுக்கப்பட்ட சத்தியக் கடிதாசியிலே ஆளுநரால் ஏதேனும் காரணம் கொடுக்கப்பட்டது. 5 தொடக்கம் 8 வரையிலான எதிர்மனுதாரர்கள் பலமான அரசியல் தொடர்புகளை வைத்திருந்து தீவிரமாக அரசியலில் ஈடுபட்டார்கள் என்றும் அது மாகாணப் பகிரங்க சேவைக்கு பொறுப்பாக்கப்பட்டிருந்த அமைப்பின் முறையான செயற்படுகையைப் பாதித்தது என்றும், எதிர்பார்க்கப்பட்ட சுதந்திரத்தையும் அது பாதிக்கும் என்றும் அவர் அறியவந்துள்ளார் என்றும் குறிப்பிட்டார். ஆயினும், பகிரங்க சேவையின் எவரேனும் ஒரு உறுப்பினரிடமிருந்தோ அல்லது பொதுமக்கள் எவரிடமிருந்தோ தாம் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டதாகவோ அல்லது 5 தொடக்கம் 8 வரையிலான எதிர்மனுதாரர்கள் அரசியல் தொடர்புகள் காரணமாக பழிவாங்கப்பட்டதாகவோ அவர்களுக்கெதிரான எந்த முறைப்பாட்டையும் சமர்ப்பிக்கத் தவறினார். மேன்முறையீட்டு நீதிமன்றம் பதவி அகற்றுவதற்கான கட்டளைகளையும் ஆணைக்குழுவுக்கான புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கான கட்டளையையும் இரத்து செய்தது.

சட்டத்தின் 34 ஆம் பிரிவு மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவுடன் தலையீடு செய்தல் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றாகுமென வெளிப்படுத்தியபோதும், அங்ஙனம் குறிப்பிட்டதை மட்டுமே கொண்டு மாகாணப் பகிரங்க சேவை தொடர்பிலான கருமங்களில் அமைச்சர்கள் சபை எதையும் கூறக்கூடியதாக இருக்குமென்று கொள்ளமுடியாது என்றும் சமர்ப்பிக்கப்பட்டது. 13 ஆம் திருத்தத்தை நிறைவேற்றிய வேளை, பகிரங்க அலுவலர்களின் நியமனம் ஆகியன அமைச்சரவைக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. அது பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்குத் தன் அதிகாரங்களைக் கையளிக்கக்கூடியதாயிருந்தது. அமைச்சரவை, ஆணைக்குழுவின் ஏதேனும் முடிவை மாற்ற, வேறுபடுத்த அல்லது இல்லாததாக்கக்கூடிய அதிகாரத்தை உடையதாக இருந்தது. இருந்தபோதிலும் 60 ஆம் உறுப்புரை ஆணைக்குழுவுடன் தலையிடுதல் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றாகுமென்று வெளிப்படுத்தியது. அமைச்சரவை இதிலிருந்து விதிவிலக்குப் பெறவில்லை. ஆணைக்குழுவின் ஒரு முடிவை மாற்றக்கூடிய அதிகாரத்தை அமைச்சரவை உடையதாயிருந்தபோதிலும், அமைச்சரவை அல்லது ஒரு அமைச்சர் ஆணைக்குழுவுடன் தலையிட முடியாதிருந்தது.

மாரசிங்கவுக்கிணங்க, மாகாண பகிரங்க சேவை தொடர்பிலான ஆளுநரின் அதிகாரங்கள், ஜனாதிபதியிடமிருந்து பெறப்பட்ட, கையளிக்கப்பட்ட அதிகாரங்களாகுமென்று ஜனாதிபதியின் சார்பிலேயே அவை பிரயோகிக்கவும்படவேண்டும். அதிகாரத்தைப் பரவலாக்கும் நோக்குடன் கொண்டுவரப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தை வரைந்தவர்களின் வகுத்தமைக்கப்பட்ட சமன்பாட்டில் ஒற்றையாட்சிக் கட்டமைப்புத் தொடர்ந்திருத்தல் முக்கிய அம்சமாகவிருக்கும் வண்ணம், மாகாணங்களுக்கு பரவலாக்கப்பட்ட அதிகாரங்களைக் குறிப்பிட்ட அணுகுமுறைகளைப்

பயன்படுத்தி மீண்டும் வைத்துக்கொள்வதிற்கே இத்திட்டம் முக்கியத்துவம் கொடுத்துள்ளது.[34]

இது ஒரு சிக்கலான விடயமாகும். உறுப்புரை 154 ஊ (1) இன்படி ஆளுநர் தமது பணிகளைப் பிரயோகிக்கும்போது, அவற்றை அல்லது அவற்றுள் எதனையும் அவரது தற்றுணிபில் பிரயோகிக்கும்படி அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின்கீழ் அவர் தேவைப்படுத்தப்படுகின்ற அளவுக்குத் தவிர, அத்தகைய ஆலோசனைக்கிணங்க செயலாற்றுதல் வேண்டும். ஆளுநர் "அரசியலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின்கீழ்" என்று மாகாணப் பகிரங்க சேவை தொடர்பில் தமது அதிகாரங்களை அவரது தற்றுணிபில் பிரயோகிக்கத் தேவைப்படுத்தப்படுகின்றாரா என்பதே இங்கு கேள்வியாகும்.

ஆளுநர், ஆலோசனைக்கிணங்க செயலாற்ற வேண்டியிருக்கும்போது, மேலோங்கும் அரசியலமைப்பு ஏற்பாடான உறுப்புரை 154 ஊ (1) இருப்பதனால், அத்தகைய அதிகாரங்கள் ஆளுநரிடம் உரித்தாக்கப்பட்டுள்ளது என்று ஒவ்வொரு தடவையும் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. மறுபுறத்தில், ஆளுநர் அவரது தற்றுணிபில் ஒரு அதிகாரத்தைப் பிரயோகிக்க எண்ணப்பட்டிருக்கும்போது, அங்ஙனம் பயனுறும் தெளிவான சொற்கள் இருத்தல் அவசியம். அவர் ஆட்சித்துறையின் தலைவராகையால் நியமனங்கள் மேன்நிலை தொடர்பிலான அதிகாரங்கள் முறைப்படி அவருக்குரித்தாக்கப்பட்டுள்ளன. ஆனால், அவர் சாதாரணமாக ஆலோசனைக்கிணங்க செயற்பட வேண்டும். 31 ஆம் பிரிவின் நியதிகளில், பிரதான செயலாளரை நியமிப்பதற்கு பிரதான அமைச்சரின் ஒருமைப்பாடு ஜனாதிபதிக்குத் தேவைப்படுகிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில், ஆளுநர் ஆலோசனைக்கிணங்க செயற்படக்கூடாது என்றும் ஆனால், ஏனைய அலுவலர்கள் தொடர்பில் அவரது தற்றுணிபில் செயற்படலாமென்றும் பாராளுமன்றம் எண்ணியிருக்கக்கூடுமா? அத்துடன் 1987 இல், மத்திய அரசின் நேரொத்த அதிகாரங்கள் அமைச்சரவைக்கு உரித்தாக்கப்பட்டிருந்தன. அமைச்சரவை அதிகாரங்களைப் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு கையளிக்கக்கூடியதாக இருந்தது. அத்துடன், அமைச்சரவை ஆணைக்குழுவின் முடிவை வேறுபடுத்தக்கூடியதாகவும் இருந்தது.

மாகாண பகிரங்க சேவை தொடர்பிலான அதிகாரங்கள், அமைச்சர்கள் சபையினால் பிரயோகிக்கப்பட வேண்டுமேயொழிய ஆளுநரால் அல்ல எனப் பெரும்பான்மையான மாகாணப் பணியாளர்கள் விரும்பினர். ஆட்சித்துறை அதிகாரங்கள் அமைச்சர்கள் சபையினாலேயே பயனுறுத்தப்படும் விதத்தில் உள்ளதனாலும் ஆளுநர் ஆலோசனைக்கிணங்க செயற்பட வேண்டியிருப்பதாலும், அத்தகைய அதிகாரங்கள் ஆளுநருக்கு உரித்தாக்கப்படுவதற்கு எந்த நியாயமுமில்லை என்றும் குறிப்பிட்டனர். ஆகக்குறைந்தது ஒரு மாகாணத்தில் கொள்கை விடயங்கள்மீது எதையும்

---

[34] Lakshman Marasinghe, *The Provincial Governor- Rights & Duties under the 13th Amendment*, Institute for Constitutional Studies, Colombo 2009, p. 76.

சொல்ல முடியாத முதல் அமைச்சர் மற்றும் அமைச்சர்கள் சபையுடன் சேர்ந்து முழு மாகாணப் பகிரங்க சேவையின் முழுக்கட்டுப்பாட்டையும் எடுத்துக்கொண்டுள்ளார். ஆயினும், முன்னைய மற்றும் தற்போதைய பல ஆளுநர்கள் முக்கிய விடயங்களில் முதல் அமைச்சரினதும் அமைச்சர் சபைகளினதும் கலந்தாலோசனையை பெற்றுள்ளார்கள்.

3.5.2 தேசிய அல்லது மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு?

பலதரப்பட்ட பதவிகள் தொடர்பில் தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவா அல்லது மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவா அதிகாரங்களையுடையது என்ற வினா எழுந்துள்ளது.

1988 இல் மாகாண சபைகளின்கீழ் வந்த பதவிகளில் சேவையாற்றிய பல பகிரங்க அலுவலர்களுள் சிலர் மாகாணப் பகிரங்க சேவைக்குள் சேர்க்கப்பட்டனர். இன்னும் சிலர் அங்ஙனம் சேர்க்கப்படாமலும், மாற்றுக்குழு சேவைக்கு விடப்படாமலும் இருந்தனர். ஆனால் மாகாண சபைகளின்கீழ் வந்த பதவிகளில் தொடர்ந்தும் வேலை செய்தனர்.

மாகாண சபை நிரலின் III ஆம் பின்னிணைப்பின் 3ஆம் பந்தி (கல்வி) யின்கீழ் மாகாண அதிகார சபைகள் இரண்டு வகுதியான அலுவலர்கள்மீது இடமாற்ற மற்றும் ஒழுக்காற்று கட்டுப்பாட்டு அதிகாரங்களை வகிக்கின்றன. தேசிய சேவையைச் சேர்ந்தவர் ஆனால், மாகாண சபைகளில் மாற்று சேவைகளுக்கு விடுவிக்கப்பட்டவர்கள் மற்றும் மாகாணப் பகிரங்க சேவையைச் சேர்ந்தவர்களுமே அவர்கள்.

தனபால எதிர் மாகாண கல்விப் பணிப்பாளர்,[35] மற்றும் வீரசிங்க எதிர் திசாநாயக்க[36], என்ற வழக்குகளில் மனுதாரர்கள் இரண்டு வகுதிகளையும் சேராத இலங்கைக் கல்வி நிர்வாகச் சேவையின் II ஆம் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்டவர்களோ அல்லது மாகாணப் பகிரங்க சேவையைச் சேர்ந்த உறுப்பினர்களோ அல்ல. ஆனால், உயர் நீதிமன்றம் அவர்கள் தேசிய சேவையைச் சேர்ந்த ஆனால், மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்படும் அடிப்படையிலில்லாது, மாகாண சபைகளுக்கு ஆதரவளித்துத் துணைபுரிவதற்காக அவர்களது சேவைகள் வழங்கப்பட்ட III ஆம் வகுதியைச் சேர்ந்தவர்களென்று தீர்ப்பளித்தது. அத்தகைய அலுவலர்கள் தொடர்ந்தும் தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு அதிகாரங்களுக்கு அமைந்தவர்களென நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மாகாண சபைகள் தாபிக்கப்பட்டு 22 ஆண்டுகளுக்கு மேலாகியபோதும் ஆயிரக்கணக்கான பகிரங்க அலுவலர்கள் மூன்றாம் வகுதியைச் சேர்ந்தவர்களாக இன்னும் உள்ளனர். மாகாண அதிகார சபைகள் அத்தகைய

---

[35] [1997] 1 Sri LR 400, JP 370.

[36] [1997] 1 Sri LR 406, JP 377.

அலுவலர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான உடன்பாட்டைப் பெற்றுக்கொள்வதில் மிகவும் மந்த போக்குள்ளவைகளாக உள்ளன. சம்மதம் கொடுக்கப்பட்டுள்ளபோதும், பலவிடயங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் எடுக்கப்படாமலும் உள்ளன.

மாகாண பகிரங்க சேவையிலுள்ள பல சிரேஸ்ட பதவிகள் தொடர்பிலான நியமனம் ஆகியவற்றிற்கான அதிகாரங்கள் பிணக்குக்குரியனவாயுள்ளன.

இலங்கை ஆயுர்வேத மருத்துவசேவை, சேவை குறிப்பின் நியதிகளில் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைக்கான பதவிகளுக்கான நியமிக்கும் அதிகாரசபை தேசியப் பகிரங்க சேவை ஆணைக்குழுவாகும்.

மாகாண சபை நிரலின் விடயங்கள் 12:1 மற்றும் 12:2 இன்கீழ் மாகாண சபைகள் தமது சொந்த நிதியங்களின் மூலம் ஆயுர்வேத மருந்தகங்கள் மற்றும் வைத்தியசாலைகளைத் தாபித்து பேணி வர அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மத்திய மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க ஆயுர்வேத நியதிச் சட்டம், மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் தலைவராக இருக்கவேண்டிய மாகாண ஆயுர்வேத ஆணையாளருக்கு ஏற்பாடு செய்கிறது. மாகாண ஆயுர்வேத ஆணையாளரை *நியமிப்பதற்கான அதிகாரம்*, தேசியப் பகிரங்க சேவை ஆணைக்குழுவை அத்துடன் / அல்லது ஆளுநரை அல்லது மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவை சேர்ந்ததா என்ற வினா எழுந்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றம், ரஜனி பிரியலதா எதிர் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு[17], என்ற வழக்கில் 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க மாகாண நியதிச் சட்டத்துடன் ஒவ்வாததான, சேவைக்குறிப்பின் ஏற்பாடுகள் மத்திய மாகாணத்தினுள் நியதிச் சட்டம் வலுவுடையதாயிருக்கும் வரைக்கும் நடைமுறையில் இல்லாதிருத்தல் வேண்டும் என்று தீர்ப்பளித்தது. நியமனம் செய்வதற்கான இவ்வதிகாரம், மத்திய மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் பதவி, மாகாணப் பகிரங்க சேவையின்கீழ் வருவதாகவும் அத்துடன் 15.07.1994 தொடக்கம் பயனுரும் வண்ணம் அது ஒய்வூதியம் பெறும் பதவி ஒன்றென மாகாண சபைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் பொது நிர்வாக அமைச்சினால் ஆக்கப்பட்ட வெளிப்படுத்துகைமூலமும் மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது. இவ்வெளிப்படுத்துகை 1993 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைகள் ஒய்வூதிய சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் அமைச்சருக்குரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பயனைக்கொண்டு ஆக்கப்பட்டு 827 ஆம் இலக்க, 8.7.1994 ஆம் தேதிய அரசாங்க வர்த்தமானியில் வெளியிடவும்பட்டது.

ஆகவே நீதிமன்றம் மாகாண ஆயுர்வேத ஆணையாளரை நியமிப்பதற்கான அதிகாரம் ஆளுநரிடமும் அத்துடன் / அல்லது மாகாணப் பகிரங்க சேவையிடம் உரித்தாக்கப்பட்டிருந்தது எனத் தீர்ப்பிட்டது.

---

[17] JP 522.

மத்திய மாகாண சபை ஆரம்பத்தில் தனக்காகத் தோன்றும்படி சட்டமா அதிபரை வேண்டியது என்று குறிப்பிடுவது பொறுத்தமற்றதாயிராது. ஆயினும், மாகாண ஆணையாளரை நியமிப்பதற்கான அதிகாரம், தேசியப்பகிரங்க சேவை ஆணைக்குழுவையே சேர்ந்தது என்றும் சட்டமா அதிபரின் ஆலோசனையைச் சபை ஏற்றுக்கொள்ளாததால், தனிப்பட்ட வழக்குரைஞரை எங்ஙனம் அமர்த்தலாம் என்பது பற்றி கணக்காய்வு தொடர்பிலான வினா எழுப்பப்பட்டது. ஆனால்,முதல் அமைச்சர் அதைப் பொருட்படுத்தவில்லை. சட்டமா அதிபர் மத்திய அரசின் சார்பில் தோன்றி தேசியப் பகிரங்க சேவை ஆணைக்குழுவே அதிகாரமுடையதென வாதிட்டார்.

தேசியப் பகிரங்க சேவை ஆணைக்குழு, வடமேல் மாகாணத்தின் சுகாதார சேவைகளின் உபபணிப்பாளர் தலைமையதிபதி பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பங்களைக் கோரியது. மாகாணத்தின் முதல் அமைச்சர் இச்செயலுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ள பதவி மாகாண பகிரங்க சேவையிலுள்ள ஒன்றென்றும் நியமனம் செய்வது மாகாண அதிகார சபைகளைச் சேர்ந்த் ஒரு விடயம் எனவும் வாதிட்டார். மத்திய அரசு முதல் அமைச்சருடன் இணங்கியதனாலும் மத்திய அரசின் சுகாதார அமைச்சின் ஒரு பிரதிநிதியை நேர்காணல் குழாமில் உள்ளடக்கப் முதல் அமைச்சர் இணங்கியதாலும் விடயம் இறுதியாக சுமுகமாகத் தீர்க்கப்பட்டது.[38]

3.5.3 மாகாண சபைகளினால் சீர்திருத்தத்திற்காக செய்யப்பட்ட உத்தேசங்கள்

2008 ஆம் ஆண்டில் பிரதான அமைச்சர்களின் மகாநாட்டில், கிழக்கு மாகாண சபையின் பிரதான அமைச்சர், எழுந்துள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக, மத்திய அரசு மாகாண சபைகள் சட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டு மத்திய அரசு அங்ஙனம் வேண்டிக் கொள்ளப்பட்டது. மாகாண சபைகள் அமைச்சின் ஒரு ஆலோசகர், பின்னர் குறித்த உத்தேசங்களைச் செய்யும்படி கிழக்கு மாகாண சபையின் முதல் அமைச்சரைக் கேட்டுக்கொண்டார். அவரும் அங்ஙனமே செய்தார். மத்திய அரசு அந்த உத்தேசங்களுக்கு பதில் வழங்க வேண்டியதாகவுள்ளது.

மாகாண பகிரங்க சேவை தொடர்பிலான உத்தேசங்கள் பின்வருவனவாகும்:

1). பின்வரும் ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதன்மூலம் 31ஆம் பிரிவைத் திருத்துதல்:

---

[38] *Wijesinghe v Public Service Commission*, CA Application No. 417/99.

அ). பிரதான செயலாளர், பிரதான அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட மாகாண சபையின் எல்லாத் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பனமீது மேற்பார்வை செய்தல் வேண்டுமென்பதுடன், மாகாண சபையின் ஏனைய எல்லாத் திணைக்களங்கள் நிறுவனங்கள்மீதும் பொதுவான அதிகாரங்களைப் பிரயோகித்தலும் வேண்டும்.

(ஆ) மாகாணமொன்றின் ஆளுநர், மாகாணப் பிரதான அமைச்சரின் ஆலோசனையின்மீது மாகாணத்தின் ஒவ்வொரு அமைச்சுக்கும் ஒரு செயலாளரை நியமித்தல் வேண்டும். இவ்வுட்பிரிவின் நோக்கத்திற்காக, ஆளுநரின் செயலாளரும் பிரதான அமைச்சரின் செயலாளரும் அமைச்சுக்களுக்கான செயலாளர்களாகக் கருதப்படவேண்டும்.

(இ) ஓர் அமைச்சின் செயலாளர், அவரது அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டனவும், அவரது அமைச்சருக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளனவுமான மாகாண சபையின் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்மீது மேற்பார்வை செய்தல் வேண்டும்.

(ஈ) ஒரு மாகாணத்தின் திணைக்களங்களின் தலைவர்கள்மீதான நியமனம், வேலைநீக்கம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன அந்த மாகாணத்தின் அமைச்சர்கள் சபைக்குரித்தாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்த மாகாணத்தின் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னர் அத்தகைய அதிகாரங்களைப் பிரயோகித்தலும் வேண்டும்.

2). பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்வதற்காக 32 ஆம் பிரிவைத் திருத்துதல்:

(அ) மாகாணப் பகிரங்க சேவையின் அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், பதவிநீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பனவற்றுக்கான அதிகாரம் மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) மாகாணமொன்றின் அமைச்சர்கள் சபை, அந்த மாகாணத்தின் மாகாணப் பகிரங்க அலுவலர்கள் தொடர்பிலான எல்லாக் கொள்கை விடயங்களுக்கும் ஏற்பாடு செய்து தீர்மானித்தல் வேண்டும்.

3). **பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்வதற்காக 33 ஆம் பிரிவைத் திருத்துதல்:**

ஏதேனும் நியமன மற்றும் இடமாற்ற அல்லது பதவிநீக்கக் கட்டளையை அல்லது ஒழுக்காற்று கருமம் தொடர்பிலான வேறேதேனும் கட்டளையை மாற்றும், வேறுபடுத்தும் அல்லது இல்லாதாக்கும் அதிகாரம் உள்ளிட்ட இப்பிரிவின்கீழான அவரது அதிகாரங்களைப் பிரயோகிக்கையில், மாகாணமொன்றின் ஆளுநர் அமைச்சர்கள் சபையின் ஆலோசனையின்மீது செயலாற்ற வேண்டும்.

மாகாணப் பகிரங்க சேவையை, ஆளுநரின் கட்டுப்பாட்டிலிருந்து நீக்குதல், செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களின் நியமனத்தில் அமைச்சர்கள் சபை தமது கருத்தைத் தெரிவிக்கும் வண்ணம் வழிசெய்தல் அத்துடன் மாகாணப் பகிரங்க சேவை தொடர்பிலான கருமங்களைத் தீர்மானித்தல் என்பவற்றை மாகாண சபைகள் விரும்புவது உணர்ந்து கொள்ளக் கூடியதொன்றாகும். அத்தகைய மாற்றம் பரவலாக்கத்தைப் பலப்படுத்தும் என்பதுடன், தேசியப் பகிரங்கச் சேவைக்கு ஏற்புடையதான அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் ஒத்துப்போவதாகவும் இருக்கும். ஆயினும், நியமனங்கள் ஆகியன தொடர்பிலான ஏதேனும் கட்டளையை மாற்றுவதற்கு வேறுபடுத்துவதற்கு, அல்லது இல்லாதாக்குவதற்கு ஆளுநருக்கு அதிகாரத்தை வழங்கி அவரை அமைச்சர்கள் சபையின் ஆலோசனையின்மீது செயலாற்றத் தேவைப்படுத்துவது மாகாணப் பகிரங்க சேவையின் சுதந்திரத்தைப் பாதிக்கும். அதற்குப் பதிலாக மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் முடிவுகளிலிருந்து நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு அனுமதிக்கப்படலாம். அத்துடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது தற்போதுள்ளவாறு மாகாண மேல் நீதிமன்றத்திற்கு எழுத்தாணை என்ற வகையில் ஆணைக்குழுவின் முடிவுகளைக் கேள்விக்குட்படுத்தும் விண்ணப்பங்கள் செய்யப்படலாம்.

3.6 பொலிசும் பொது ஒழுங்கும்

பின்னிணைப்பு (1) இல் தரப்பட்டுள்ள அளவுக்கு, மாகாணத்தினுள் பொது ஒழுங்கும் பொலிஸ் அதிகாரங்களின் பிரயோகமும்:

"ஆனால் தேசிய பாதுகாப்பையும், தேசிய பந்தோபஸ்தையும் ஆயுதந்தாங்கிய எவையேனும் படைகளின் அல்லது குடியியல் அதிகாரத்துக்கு உதவியாக இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குக்கீழான வேறெவையேனும் படைகளின் பயன்பாட்டையும் இது உள்ளடக்காது. அத்துடன் கொழும்பு நகரையும், ஸ்ரீ ஜயவர்த்தனபுரவையும் அவற்றின் சுற்றயல்களையும் இது உள்ளடக்காது. இவற்றின் எல்லைகள், வர்த்தமானியில்

வெளியிடப்பட்டும் கட்டளைமூலம் ஜனாதிபதியினால் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்."

பின்னிணைப்பு I இன் ஏற்பாடுகளுக்கிணங்க பொலிஸ் மாஅதிபர் இலங்கை பொலிஸ்படையின் தலைவராக இருத்தல் வேண்டும். இது தேசிய பகுதி மற்றும் ஒவ்வொரு மாகாணத்திற்குமான மாகாண பகுதி என்று பிரிக்கப்பட்டுள்ளது. தேசிய பகுதிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் மாகாண பகுதிகளிலிருந்து தேசிய பகுதிக்கான பொலிசு அலுவலர்களின் பதவியுயர்வு என்பன தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் செய்யப்படுதல் வேண்டும். ஒவ்வொரு மாகாணப் பகுதிக்குமான ஆட்சேர்ப்பு, மாகாணத்தின் பிரதிப் பொலிஸ் மாஅதிபரி, ஜனாதிபதியின் கலந்தாலோசனையுடன் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒருவர் மற்றும் பிரதான அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒருவர் ஆகியோரைக் கொண்ட மாகாண பொலிஸ் ஆணைக்குழுவினால் செய்யப்படுதல் வேண்டும். பொலிஸ் மாஅதிபரி, முதல் அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு பிரதி பொலிஸ் மாஅதிபரை நியமித்தல் வேண்டும். பொலிஸ் மாஅதிபருக்கும் அமைச்சருக்கும் இடையில் உடன்பாடு இல்லாதவிடத்து விடயம் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவர் முதல் அமைச்சருடனான உரிய கலந்தாலோசனையின் பின்னர் நியமனத்தைச் செய்தல் வேண்டும். மாகாண பொலிஸ் ஆணைக்குழு, மாகாண பகுதியின் அலுவலர்களின் இடமாற்றங்கள், பதவியுயர்வுகள் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பனவற்றிற்கும் மாகாணப் பகுதிக்கு மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்டவர்களான தேசிய பகுதியின் அலுவல்களை சிரேஸ்ட பொலிஸ் கண்காணிப்பாளர் பதவித்தரம் வரையில் பதவியுயர்த்துவதற்கும், பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தவிர்ந்தவர்களான மாகாண பகுதிக்கு மாற்றுச் சேவைக்கு விடுவிக்கப்பட்ட அலுவலர்களின் இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

மாகாணத்தினுள் பொது ஒழுங்கமைதியைப் பேணிப் பாதுகாப்பதற்கும், (அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தவிர்ந்த) எல்லாத் தவறுகளையும் தடுத்தல், கண்டுபிடித்தல், புலனாய்வு செய்தல் ஆகியவற்றிற்கும் அத்துடன் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் நியதிகளின்படி சட்டமா அதிபரின் அதிகாரங்களுக்கு அமைய அத்தகைய தவறுகள் தொடர்பில் இயைபான நீதிமன்றங்களின் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் மாகாணப் பகுதி பொறுப்புடையதாகவிருத்தல் வேண்டும். இலங்கைப் பொலிஸ்படையின் தேசிய பகுதியானது, அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எல்லாத் தவறுகளையும் தடுத்தல் கண்டுபிடித்தல், புலனாய்வு செய்தல் ஆகியவற்றிற்கும் அத்துடன் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் நியதிகளின்படி சட்டமா அதிபரின் அதிகாரங்களுக்கு அமைய அத்தகைய தவறுகள் தொடர்பில் இயைபான நீதிமன்றங்களின் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் மாகாண பகுதி பொறுப்புடையதாகவிருத்தல் வேண்டும்.

முதல் அமைச்சர் ஒரு மாகாணத்தினுள் பொது ஒழுங்கமைதியைப் பேணிக்காப்பதற்குத் தேசிய பகுதியின் உதவியை நாடலாம். பொலிஸ் மாஅதிபர், அந்நோக்கத்திற்கு அவசியமாகக் கூடியவாறான தேசிய பகுதியின் அத்தகைய ஆளணியினரை அமர்த்தலாம் என்பதுடன், அவர்களை மாகாணத்தின் பிரதிப் பொலிஸ் மாஅதிபரின் கட்டுப்பாட்டின்கீழ் வைத்தலும் வேண்டும். மாகாணத்தில் அவசரகால நிலைமையொன்று வெளிப்படுத்தப்படுமிடத்து, பொலிஸ் மாஅதிபர் , அத்தகைய மாகாணத்தினுள் பொது ஒழுங்கை நிலைநாட்டிப் பேணுவதற்கென அவசியமானதென அவர் கருதுகின்றவாறான தேசியப் பகுதியின் அத்தகைய கூறுகளை அம்மாகாணத்திற்கு அமர்த்தலாம்.

குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் அல்லது தேசியப் பகுதியின் வேறு ஏதேனும் கூறு மாகாண பிரிவினால் சாதாரணமாகப் புலனாய்வு செய்யப்படும் ஏதேனும் தவறின் புலனாய்வைப் முதல் அமைச்சரின் வேண்டுகையின்மீது பொறுப்பேற்கலாம். பொதுமக்கள் நலன்கருதி அத்தகைய தவறு குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் அல்லது தேசிய பகுதியின் வேறுஏதேனும் கூறினால், புலனாய்வு செய்யப்படவேண்டியது அவசியமானதென பொலிஸ் மாஅதிபர் அபிப்பிராயப்பட்டு, பிரதான அமைச்சரின் கலந்தாலோசனையின் பின்னரும் சட்டமா அதிபரின் அங்கீகாரத்துடனும், அத்தகைய தவறு குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் அல்லது தேசிய பகுதியின் வேறு ஏதேனும் கூறினால் புலனாய்வு செய்யப்படவேண்டுமெனப் பணிக்கலாம்.

இந்தியாவில், மத்திய அரசாங்கம், மாநிலப் பொலிசின் நியாயாதிக்கத்தின்கீழ் வருகின்ற ஒரு தவறுக்கான புலனாய்வைச் சம்மந்தப்பட்ட மாநில அரசாங்கத்தின் சம்மதத்துடன் மட்டுமே மத்திய புலனாய்வுப் பணியகம் பொறுப்பேற்க அதிகாரமளிக்கலாம். ஆயினும், உயர் நீதிமன்றமும் மேல் நீதிமன்றங்களும், மாநிலத்தில் சம்மதமில்லாமல், நாட்டில் எவ்விடத்திலும் ஒரு குற்றத்தைப் புலனாய்வு செய்யும்படி மத்திய புலனாய்வுப் பணியகத்துக்குக் கட்டளையிடலாம்.

1990 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய பொலிஸ் ஆணைக்குழுச் சட்டம் தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் ஒவ்வொரு மாகாணத்திற்கும் மாகாண பொலிஸ் ஆணைக்குழு என்பவற்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்தது. ஆயினும், தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்குக் கொடுக்க பின்வாங்கியதால் சட்டம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

பின்னிணைப்பு I, மாகாண பொலிஸ் ஆணைக்குழுக்களைத் தாபிப்பது பற்றித் தெளிவாகக் குறிப்பிடுவதனால், மாகாண பொலிஸ் ஆணைக்குழு செயல்பட அச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டிய அவசியம் உள்ளதா என்ற கேள்வி எழலாம்.

3.7 நீதிமன்ற மீளாய்வு

மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 12 (1), மாகாண சபையொன்றின் ஏதேனும் நடைமுறையில் செல்லுபடியாகுந்தன்மை, நடைமுறை ஒழுங்கீனம் இருக்கிறது என்ற ஏதுவின்மீது கேள்விக்குட்படுத்தப்பட முடியாதாகும் என்று குறிப்பிடுகிறது. 12 (2) ஆம் பிரிவு, அத்தகைய சபையில் நடைமுறையை ஒழுங்குபடுத்துவதற்காக அல்லது அலுவலர்களை நடாத்துவதற்காக அல்லது ஒழுங்கைப் பேணுவதற்காக சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் மாகாண சபையின் எந்த அலுவலருக்கு அல்லது உறுப்பினருக்கு அதிகாரங்கள் உரித்தாக்கபட்டுள்ளனவோ அந்த அலுவலர் அல்லது உறுப்பினர் அவ்வதிகாரங்களைப் பிரயோகிப்பது தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குட்பட்டவர் அல்ல என ஏற்பாடு செய்கிறது.

கமமே எதிர் பெரேரா[39] என்னும் வழக்கில் மேல் மாகாண சபையின் செயலாளரே மேன்முறையீட்டாளராக இருந்தார். 1 ஆம் எதிர்மனுதாரரும் 3 ஆம் எதிர்மனுதாரரும் சபையின் தவிசாளர் பதவிக்கு போட்டியிட்டனர். மேன்முறையீட்டாளரினால், சபையினால் ஆக்கப்பட்ட விதிகளின்கீழ் தேர்தல் நடாத்தப்பட்டது. வாக்குகள் சமமாக இருந்ததனால் மேன்முறையீட்டாளர் இன்னொரு தேர்தலை நடாத்தினார். 14 உறுப்பினர்கள் வாக்களிக்காதிருந்த வேளையில், 1 ஆம் எதிர்மனுதாரர் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்றார். 1ஆம் எதிர்மனுதாரரினால் பெறப்பட்ட வாக்குகள், மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அரைவாசிக்கும் குறைவாயிருந்தபடியினால் அதை அவர் விதிகளின்கீழான ஒரு தேவைப்பாடாகக் (தேர்தலின் முன்னர் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்டது) கொண்டதனால் அவ்வேதுவின்மீது மேன்முறையீட்டாளர் தேர்தல் முடிவுகளை வெளியிடவில்லை. 1 ஆம் எதிர்மனுதாரர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தபோது, அது முடிவுகளை வெளியிடும் படி மேன்முறையீட்டாளரைப் பணிக்கும் ஆணையீட்டெழுத்தாணையையும், இன்னொரு தேர்தலை நடாத்துவதைத் தடுப்பதற்கான தடையீட்டெழுத்தாணையையும் வழங்கியது. மேன்முறையீட்டாளர் உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்தார்.

உயர் நீதிமன்றத்தில், மாகாண சபை ஒரு சட்டவாக்கக் குழுவெனவும், பிரச்சனையில் உள்ள விடயம் ஒரு உள்விவகாரம் எனவும், அது நிர்வாகச் சட்டத்தின் எல்லைக்கப்பாற்பட்டதெனவும் மேன்முறையீட்டாளர் சார்பில் வாதிக்கப்பட்டது. 12 ஆம் பிரிவில் உள்ள விலக்கிவைக்கும் வாசகத்திலும் தங்கியிருந்தனர்.

உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னர் உள்ள விடயம் மாகாண சபை அதன் சட்டவாக்க நடைமுறையின் போதான ஏதேனும் நடைமுறையின் வலிதுடைமையை மீளாய்வு செய்வது தொடர்பான

---

[39] [2005] B.L.R. 15.

ஒன்றல்ல என்றும் ஆனால் மேன்முறையீட்டாளரின் நடத்தை தொடர்பானதாகும் என்றும் தீர்ப்பளித்தது. நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் எழுத்தாணை நியாயாதிக்கம் விலக்கு வாசகங்களினால் கட்டுப்படுத்தப்படவில்லை என்றும் தீர்ப்பளித்தது. அதற்கிணங்க மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

3.8 தத்துவங்களும் சிறப்புரிமைகளும்

மாகாண சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பக்கக் குறிப்பு, "மாகாண சபைகளின் உறுப்பினர்களின் அதிகாரங்களும், சிறப்புரிமைகளும்" என்று குறிப்பிட்டபோதும், பிரிவு, சபையில் பேச்சுச் சுதந்திரத்தை மட்டும் உத்தரவாதம் செய்து சொல்லப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் அல்லது ஒரு உறுப்பினரால் அளிக்கப்பட்ட வாக்குத் தொடர்பில் வழக்குத் தொடர்ச்சியிலிருந்து மட்டுமே விடுப்பாட்டுரிமைக்கு ஏற்பாடு செய்கிறது. பாராளுமன்ற (அதிகாரங்களும், சிறப்புரிமைகளும்) சட்டத்துடன் ஒத்ததான எந்தச் சட்டமும் கிடையாது. மாகாண சபை நிரலில் அல்லது ஒருங்கியை நிரலில் அங்ஙனம் பயன்படும் ஒரு விடயம் இல்லாதிருப்பதனால் அதிகாரங்களையும், சிறப்புரிமைகளையும் ஏற்பாடு செய்யும் ஒரு நியதிச் சட்டத்தை மாகாண சபை நிறைவேற்றவும் முடியாது. அத்தகைய சட்டவாக்கம் இல்லாமையினால் பல பிரச்சனைகள் உருவாகியுள்ளன.

உதாரணமாக, பாராளுமன்றம் அல்லது அதன் ஏதேனும் குழு, பாராளுமன்றத்துக்கு அல்லது அக்குழுவுக்கு எவரையும் வருகை தரும்படி அல்லது அத்தகைய நபரின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின்கீழ் உள்ள ஏதேனும், தாள், புத்தகம், பதிவேடு அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்கும்படி கட்டளையை ஆக்கக்கூடியதாக இருக்கும்போது, ஒரு மாகாண சபைக்கு அல்லது அதன் குழுவுக்கு அத்தகைய அதிகாரம் இல்லை. மத்திய மாகாண சபையின் முதலாவது பகிரங்கக் கணக்குகள் குழு கூட்டப்பட்டபோது, (இப்போதைய மாவட்டச் செயலாளர்) ஒரு அரசாங்க அதிபர், மற்றும் பிரதான செயலாளர் ஆகியோர், நாம் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு மட்டுமே கணக்குக் காட்டவேண்டிய கடப்பாடுள்ளவர்களென்று கூறி வருகை தர மறுத்தனர். பிரதானமாக முதல் அமைச்சரிடமான அழுத்தம் காரணமாக பின்னர் தமது கடும்போக்கைத் தணித்தனர்.

பின்னர் மத்திய மாகாண சபையின் அதிகாரிகள் பல்வேறு உறுப்பினர்களின் துணையுடன் மாகாண சபைகளின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள்மீது ஒரு உத்தேச சட்டமூலத்தின் வரைவைத் தயாரித்தனர். வரைவு ஏனைய மாகாணங்களின் பிரதான அமைச்சர்களால் புறக்குறிப்பிடப்பட்டு, பாராளுமன்றத்தில் ஒரு சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்காக ஒரு வேண்டுகையுடன் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

3.9 எதிர்கட்சித் தலைவர், சபையின் தலைவர் ஆகிய பதவிகள் அங்கீகரிக்கப்படாமை

முதல் அமைச்சர், அமைச்சர்கள், சபையின் தவிசாளர், சபையின் உப - தவிசாளர் என்னும் பதவிகள் மட்டுமே சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளாக உள்ளன. எதிர்கட்சித் தலைவர், சபையின் தலைவர், ஆளும் கட்சியினதும் எதிர்க் கட்சியினதும் சபையின் பிரதான கொறடாக்கல் ஆகிய பதவிகள் சட்டத்தினால் அங்கிகரிக்கப்படவில்லை. ஆனால், அத்தகைய பதவிகள் நடைமுறையில் அங்கீகரிக்கப்பட்டு, அலுவலர்களும், பணியாற்றொகுதியினரும் உள்ளிட்ட வசதிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நான்காம் மேல் மாகாண சபையில் அத்தகைய வசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது பற்றி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்பட்டபோது, சட்டமா அதிபர் அத்தகைய பதவிகள் சட்டத்தினால் அங்கிகரிக்கப்படவில்லை என்று கருத்துக் கொண்டார்.[42] ஆயினும், சபை கலைக்கப்பட்ட பின்னர் புது விண்ணப்பத்தைச் செய்வதற்கான உரிமையை ஒதுக்கீடு செய்து, அவ்விண்ணப்பம் கைமீட்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்தாம் மாகாண சபையின் அமைச்சர்கள் சபை, அத்தகைய பதவிகளை அங்கீகரித்து வசதிகளை ஏற்பாடு செய்ய முடிவெடுத்தது. ஆளுநர் முடிவுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார். முடிவு நீதிமன்றங்களில் கேள்விக்குட்படுத்தப்படவில்லை. மாகாணங்கள் தகுந்த முறையில் செயல்படுவதற்கு வசதியளிப்பதற்காக அப்பதவிகள் சட்டத்தினால் அங்கிகரிக்கப்படுவது சாலச்சிறந்தது.

அத்தியாயம் - 04

மாகாண சபைகளின் சட்டவாக்கற் செயற்பாடுகள்: சட்டவாக்கம் மற்றும் செயற்திறன் பிரச்சினைகள்

ரஞ்சித் அமரசிங்க

எந்தவொரு அரசாங்க முறையினதும் அரசாங்கத்தின் தொழிற்பாடுகள் அது எம்மட்டத்தில் செயற்படுகிறது அல்லது எத்தகைய தீர்மானங்கள் எடுக்கப்படும் நிறுவனக் கட்டமைப்பினைக் கொண்டுள்ளது என்பதனைக் கருத்திற் கொள்ளாது மூன்று முக்கிய தொழிற்பாடுகளைக் குறித்து நிற்கிறது: சட்டமியற்றல், சட்ட அமுலாக்கம் மற்றும் சட்டத் தீர்ப்பு வழங்கல். அமுலாக்கமும் தீர்ப்பு வழங்கலும் சட்டமியற்றுவதில் தங்கியுள்ளதனால் சட்டமியற்றும் பணி அடிப்படையானதொன்றாகவுள்ளது. இவ்வத்தியாயம் 13ஆம் திருத்தச் சட்டம் மற்றும் 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின்கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட சட்டவாக்கப் பணி தொடர்பான நடைமுறையைப் பரிசீலிப்பதாக அமைகிறது. சரத்து 154G மாகாண சபைகளால் உருவாக்கப்பட்ட விதிகளை "நியதிச் சட்டங்கள்" என இணங்காண்பதனூடாக அவற்றைத் தேசியப் பாராளுமன்றம் இயற்றும் "சட்டங்களிலிருந்து" வேறுபடுத்துகிறது. சட்டமூலத்தினை நடைமுறைப்படுத்தத் துணைச் சட்டங்களை உருவாக்கும் உள்ளூர் அதிகார சபைகளுடன் ஒப்பிடுமிடத்து, மாகாண சபைகள் அதனளவில் சட்டவாக்க நிறுவனங்களாகவுள்ளன. இருப்பினும், 13ஆம் திருத்தச் சட்டம் மற்றும் மாகாண சபைகள் சட்டத்தின் அரசியலமைப்பு நிலை தொடர்பில் சட்டரீதியில் சவால்விடுக்கும் வழிமுறையில் உயர் நீதிமன்றம் மாகாண சபைகள் "எந்தவொரு இறைமை பொருந்திய சட்டவாக்கப் பணிகளை புரிவதில்லை: மாறாக, அவை கீழ்மட்ட சட்டங்களை இயற்றவே அதிகாரம் கொண்டுள்ளன"[1] எனத் தீர்ப்பளித்ததுடன், இத் தீர்மானம் சட்டவாக்கம் செய்யும் அமைப்புக்கள் என்ற வகையில் மாகாண சபைகளின் அந்தஸ்தை மேலும் தெளிவுபடுத்தியது.

4.1 நியதிச் சட்டவாக்க அதிகாரமும் வரையறைகளும்

அரசியலமைப்பின் அட்டவணை 9 மாகாண சபைகள் நியதிச் சட்டவாக்கம் செய்ய அதிகாரம் கொண்டுள்ள இரு தொகுதி விடயதானங்களை எடுத்துரைக்கின்றது: மாகாண சபைகள் நிரல் I மற்றும் ஒருங்கியை நிரல் III. I

In *Re the Thirteenth Amendment to the Constitution and Provincial Councils Bill*, in Lakshman Marasinghe and Jayampathy Wickramaratne (eds.) *Judicial Pronouncements on the 13th Amendment*, Stamford Lake, Pannipitiya, 2010, p.19.

இல் வழங்கப்பட்ட அதிகாரங்கள் தொடர்பில் மாகாண சபைகள் தாம் விரும்பியவாறு சட்டமியற்றும் அதிகாரத்தைக் கொண்டுள்ளன. எனினும், ஒருங்கியை நிரல் III இல், வழங்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்தும் பொருட்டு மாகாண சபைகள் பாராளுமன்றைக் கலந்தாலோசிக்க வேண்டிய தேவையுள்ளது. ஒருங்கியை நிரல் என அழைக்கப்படும் நிரல் II இல் உள்ள விடயங்கள் பிரத்தியேகமாக தேசிய அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்ட விடயங்களை விபரிக்கின்றன. 13ஆம் திருத்தத்தின்கீழ் எஞ்சிய அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசிடம் காணப்படுகின்றன.

இருப்பினும், மாகாண சபைகள் நிரலில் பட்டியலிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மாகாண சபைகளின் சட்டமியற்றும் அதிகாரம் குறிப்பிட்ட வரையறைகளுக்குட்பட்டுள்ளது. மாகாண சபைகள் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்பில் உள்ள மற்றைய ஏற்பாடுகளுக்கு இசைவானதாக இருக்க வேண்டும்; அவை மாகாண சபை நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள பிரதேசத்திற்குள் மாத்திரம் செல்லுபடியாகும் தன்மையைக் கொண்டிருக்கும். இது சம்பந்தமாக அரசியலமைப்பில் இடம்பெறும் ஏற்பாடு "ஒவ்வொரு மாகாண சபையும், அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்குட்பட்ட வகையில், அது உருவாக்கப்பட்டுள்ள மாகாணத்திற்கு செல்லுபடியாகக்கூடிய சட்டங்களை உருவாக்கலாம்."[2] எனக் குறிப்பிடுகிறது. ஆய்வின்போது, ஆய்வாளர்கள் நகல் சட்டங்களுக்கு எல்லை வரையறையை மீறியுள்ளது என்ற அடிப்படையில் ஆளுநர் ஒப்புதல் அளிக்க மறுத்த அல்லது சட்ட மா அதிபர் அலுவலகத்திற்கு அனுப்பும்போது திருப்பி அனுப்புகின்ற பல்வேறு சந்தர்ப்பங்களை கண்ணுற்றனர். ஒருங்கியை நிரலில் பட்டியலிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மாகாண சபைகள் "ஒவ்வொரு விடயத்தினதும் பொருத்தப்பாடு கருதி பாராளுமன்றத்துடன் அத்தகைய கலந்தாலோசனையின் பிற்பாடு"[3] சட்டங்களை ஆக்க அதிகாரம் கொண்டுள்ளன. இது தவிர, அரசியலமைப்பு பாராளுமன்றத்தினால் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சட்டம் நடைமுறையில் இருக்கிறதா இல்லையா என்பதை கருத்திற் கொள்ளாது நிரல் I இல் உள்ள அனைத்து விடயங்கள் தொடர்பில் சட்டமியற்ற மாகாண சபைகளை அனுமதிக்கிறது. அறிவுறுத்தப்பட்ட வழிமுறையைப் பின்பற்றி நிரல் I இல் உள்ள விடயமொன்று பற்றி மாகாண சபை, சட்டம் நிறைவேற்றுமானால் நடைமுறையிலிருக்கும் பாராளுமன்றச் சட்டம் இடைநிறுத்தி வைக்கப்படும். இது அவ்வாறே ஒருங்கியை நிரலிலுள்ள விடயங்கள் தொடர்பில் ஆக்கப்படும் சட்டங்களுக்கும் செல்லுபடியாகும். எனினும், 13ஆம் திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்ததன் பின்னர், பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் பாதிப்படையாமல் இருக்கும். மேலுள்ள கலந்துரையாடல் மாகாண சபைகள் 13ஆம் திருத்தத்தின்மூலம் குறிப்பிடத்தக்க பல்வேறு விடயங்கள் தொடர்பில் சட்டமியற்றும் பொறுப்பைப் பெற்றுள்ளன என்பதைத் தெளிவு படுத்துகிறது. நிச்சயமாக, ஒரு குறிப்பிட்ட

---

[2] Article154G (1) of the Constitution.

[3] Article 154G (5) b of the Constitution.

மாகாண சபை சட்டமியற்றுவதில்லை எனத் தீர்மானம் செய்தாலும் ஏற்கனவே நடைமுறையிலுள்ள சட்டத்தின்கீழ் அது நிர்வாகத்தை முன்னெடுக்க முடியும்.[4]

மாகாண சபைகளின் நியாயாதிக்கப் பரப்பு குறிப்பிடத்தக்கதாயினும் அது எந்த வகையிலும் பிரத்தியேகமான ஒன்று அன்று. பாராளுமன்றம் மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான சட்டங்களை நிறைவேற்றக் கூடிய பல்வேறுபட்ட வழிகளை தன்னிடத்தே தக்கவைத்திருக்கிறது. உதாரணமாக, பாராளுமன்றம் மாகாண சபை நிரலிலுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாகாண சபைகள் தீர்மானமொன்றின் மூலம் பாராளுமன்றை வேண்டும் பட்சத்தில், எளிய பெரும்பான்மையின் ஊடாக அவ்வாறு சட்டமியற்ற முடியும் என்பதுடன், அத்தகைய சட்டம் அவ்வாறு சட்டமியற்ற வேண்டிக் கொண்ட அனைத்து மாகாண சபைகளுக்கும் செல்லுபடியாகும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டு பாராளுமன்றம் அனைத்து மாகாண சபைகளுக்கும் (அவை அங்கீகரித்தாலும் சரி அங்கீகரிக்காவிட்டாலும் சரி) செல்லுபடியாகும் சட்டங்களைப் பிறப்பிக்க முடியும்.

மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட விடயங்கள்[5] பிராந்திய அபிவிருத்தி மற்றும் மாகாண ஆட்சியோடு குறிப்பாக, தொடர்புபட்ட பல்வேறு விடயங்களை உள்ளடக்கி நிற்கிறது. இதில் 13ஆம் திருத்தச் சட்டம் பிராந்திய நலனோடு தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் மாகாண மட்டத்தில் சிறப்பாக ஆற்றக்கூடிய அத்தகைய விடயங்களை மாகாணங்களுக்குப் பரவலாக்கும் நிலையூன்றிய நடைமுறையைப் பின்பற்றியுள்ளது. இருப்பினும், கள ஆய்வின்போது கள மட்டத்தில் அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்துபவர்களால் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தப்பட்ட அக்கறைக்குரிய விடயம், மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயங்களில் வெளிப்படும் தெளிவு குறைவு மற்றும் குழப்ப நிலையுடன் தொடர்புபட்டதாகவிருந்தது. இந்நிலை குறிப்பாக சுற்றாடல், காணி, கல்வி, சுகாதாரம் மற்றும் உள்ளூராட்சி தொடர்பில் ஒன்றில் ஒதுக்கு அன்றேல் ஒத்தியங்கு பட்டியலினூடாக பாராளுமன்றமும் பொறுப்பினைக் கொண்டுள்ள விடயங்கள் தொடர்பில் காணப்படுகின்றது. இவ்விடயங்கள் தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள மிகக் குறைந்தளவான நியதிச் சட்டங்கள் சம்பந்தப்பட்ட துறைகளில் தமது அதிகார வரையறை பற்றி மாகாண சபைகள் கொண்டுள்ள நிச்சயமின்மையின் விளைவு என நோக்கப் படலாம். மத்திய அரசிடம் காணப்படும் 'அனைத்து விடயங்கள் மற்றும் பணிகள் குறித்த தேசிய கொள்கை' பற்றிய அதிகாரம் தொடர்பான ஏற்பாடு, மாகாண சட்டமியற்றுனர்கள் மத்தியில்

---

[4] For a critical examination of the legal issues related to the legislative competency of Provincial Councils see N.Selvakkumaran "Legislative Devolution and the Thirteenth Amendment" in Lakshman Marasinghe and Jayampathy Wickramaratne (eds.) *13th Amendment: Essays on Practice*, Stamford Lake, Pannipitiya, 2010, pp.71-105.

[5] Ninth Schedule to the Constitution of Sri Lanka.

கவலையை ஏற்படுத்தும் பிறிதொரு காரணியாகும். அரசாங்கத்தின் இரு நிலைகளுக்கிடையில் பொறுப்புக்களைப் பிரிப்பதில் காணப்படும் தெளிவின்மை மற்றும் குழப்பத்தை விடுத்து மாகாண சபைகளின் சட்டமியற்றலுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் நடைமுறைச் சிக்கல்களும் உள்ளன.

4.2 சட்டமியற்றல் தொடர்பான பிரச்சினைகள்

மாகாண சபைகள் சட்டமியற்றும் விசேடத்துவ பணிக்கு உரிய முறையில் தயார்படுத்தப்படவில்லை. மாகாண சபைகளுக்கு உத்தியோகத்தர்களை ஒதுக்குவதில் அவற்றுக்கு சட்ட வரைஞர்கள் மற்றும் சட்ட உத்தியோகத்தர்களை வழங்குவதற்கு கவனஞ் செலுத்தப்படுவதில்லை. மாகாண சபைகள் பரவலாக்கப்பட்ட அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள சட்டவாக்கம் செய்வது உண்மையில் ஒரு திறவுகோலாக இருப்பதனால் கண்டுகொண்ட கஷ்டங்கள் மத்திய அதிகார சபைகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன.

மத்தியிலுள்ள அதிகாரிகளினால் நகல் வரைபுகள் மேற்கொள்ளப்படல் போன்ற சமயா சமய ஏற்பாடுகள் அல்லது உருவாக்கப்படவிருக்கும் மாதிரி நகல் திட்டம் பற்றிய ஏற்பாடு மட்டுப்படுத்தப்பட்ட பெறுமதியைக் கொண்டிருந்தன. சட்டங்களை நகல் வரைபாக்கம் செய்வதில் மாகாண அதிகாரிகளை பயிற்றுவிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் உடனடி விளைவைக் கொண்டு வரவில்லை. திருப்தியற்ற வரைபாக்கம், தொழில்நுட்பத் தவறுகள் தொடக்கம் அரசியல் அமைப்போடு இசைவற்று இருத்தல் போன்ற வேறுபட்ட காரணிகளின் அடிப்படையில் பல நகல் சட்டங்கள் நிராகரிப்பில் சென்று முடிவடைந்தன. தமது படைப்புகளின் துல்லியத் தன்மையோடு தொடர்புபட்ட நிச்சயமின்மை காரணமாக ஆரம்ப மாகாண சட்ட வரைஞர்கள் அங்கீகாரம் மற்றும் அரசியல் அமைப்புடன் இசைந்து செல்லும் தன்மையை உறுதிப்படுத்த சட்டமா அதிபர் அலுவலகத்திற்கு அனுப்பும் நடைமுறை பின்பற்றப்பட்டது. இருப்பினும், அதனைத் தொடர்ந்து ஒரு ஐனாதிபதியின் பணிப்புரை மாகாண சபைகள் சட்ட வரைபாக்கச் செயன்முறையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு அத்தியாவசிய நடவடிக்கையாக ஆக்கியது.[6] இந்நடைமுறை தற்போதும் அரசியல் அமைப்பில் இடம்பெறும் அத்தகைய தேவைப்பாடு இல்லாதபோதும் மாகாண சபைகளால் பின்பற்றப்படுகின்றது. அரசியல் அமைப்பு உயர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு மாத்திரமே சட்டங்கள் அனுப்பப்பட வேண்டுமென அவசியப்படுத்துவதிலிருந்து அதுகூடவே ஆளுநரினால் நிராகரிக்கப்பட்ட ஒரு சட்டம் மாகாண சபையினால் இரண்டாவது தடவையாகவும் நிறைவேற்றப்படும்போதே வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய சூழ்நிலையில் "ஆளுநர் அச்சட்டத்திற்கு அனுமதி வழங்கலாம் அல்லது சட்டம் நிறைவேற்றப்பட்ட ஒரு மாதத்தினுள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் முரண்படவில்லை என்பதைத் தீர்மானிக்க உயர்

See Y.R. Amarasinghe (ed.), *Devolution Experience in Sri Lanka, 1988-1998*, National Integration Programme Unit, Colombo, 2001. p.23.

நீதிமன்றத்துக்கு ஜனாதிபதியால் அது அனுப்பி வைக்கப்பட ஒத்திவைக்கலாம்."[7] அத்துடன், ஆளுநர் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்குக் கட்டுப்பட வேண்டும். சட்டமா அதிபருக்கு தமது சட்டங்களை சமர்ப்பிக்க மாகாண சபைகள் நிர்ப்பந்திக்கப்படுகின்றமையின் ஆரம்ப நோக்கம், மாகாண சபைகள் இயற்றும் சட்டங்களுக்கு மத்தியில் சீரான தன்மையினைப் பேணுவதற்கும் அரசியலமைப்புடன் இசைந்து செல்வதைப் பேணுவதற்கான தேவைக்கு ஆதரவான வாதம் சர்ச்சைக்குரியதாக இருக்கின்றது. இருப்பினும், வேறுபட்ட மாகாண நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட சட்டங்களில் சீரான தன்மையை வேண்டுவதென்பது, அதிகாரப் பகிர்வின் அடிப்படைக்கு எதிரான ஒன்றாக உள்ளது. மாகாண சபைகள் தமது வேறுபாடுகள் மற்றும் விசேட அடையாளங்களை வெளிப்படுத்த சுதந்திரமுடையவையாக இருக்க வேண்டும் என்பதுடன், அனைத்து விடயங்களிலும் ஒரே சீரான தன்மையைக் கொண்டிருக்க நிர்ப்பந்திக்கக் கூடாது. ஏனைய பல துறைகளிலும்கூட, மாகாண சபைகளைத் தமது செயற்பாடுகளில் ஒரு பொதுவான பாணியினைப் பின்பற்றச் செய்யும் மத்திய அரசின் விருப்பத்தினை ஒருவர் கண்டுகொள்ள முடியும்.

மத்தியிலுள்ள அரசாங்கத்தின் பிரதான சட்ட அதிகாரியான சட்ட மா அதிபர், மாகாண நலன்கள் நோக்கிலிருந்து அவற்றை உற்று நோக்கி, மாகாண சபைகளின் சட்டங்களை வியாக்கியானம் செய்யும் நிலையில் உள்ளாரா? எனவும் ஒருவர் வாதிட முடியும். அவ்வாறே சட்டமா அதிபருக்கு சட்டங்களைச் சமர்ப்பிப்பதற்கான தேவை சற்று வித்தியாசமான பிரச்சினைகளுக்கு இட்டுச் சென்று இருக்கின்றது. ஆரம்பகால மாகாண சட்டமாக்கலில் அனைத்து மாகாண சபைகளும் சட்டமா அதிபர் (AG) அலுவலகத்திலிருந்து அனுமதியினை பெற்றுக் கொள்வதில் எதிர் நோக்கும் நியாயமற்ற தாமதத்தினைத் தெரிவிக்கின்றன. அவ்வலுவலகத்தில் சட்டங்கள் மூன்று வருடங்களுக்கு தடுத்து வைக்கப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.[8] தற்போதைய ஆய்வில் மத்திய மாகாண சபை சட்டமா அதிபர் அலுவலகத்திலிருந்து பதில்களைப் பெற்றுக் கொள்ள ஆறு மாதம் வரையான தாமதங்கள் ஏற்படுவதாக தெரிவிக்கின்றது. சட்ட மா அதிபர் அலுவலகத்தில் சேவைகளைத் துரிதமாக பெற்றுக்கொள்ள அங்கு கடமையாற்றும் சட்ட உத்தியோகத்தர் கொழும்புக்கு விஜயம் செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்படுவதாக தென்மாகாண சபை அறிவிக்கின்றது. ஒரு சட்டம் உருவாக்கப்படும் செயன்முறைக்கு முன்னர், ஒரு மாகாண சபை கலைக்கப்படும் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் சட்டமா அதிபர் காரியாலயத்தில் இடம்பெறும் நீண்டதாமதம் 1987 ஆம் ஆண்டு மாகாண சபை சட்டத்தின் ஏற்பாடுகளை முழுவதுமாக வீட்டோ செய்வதை நன்கு ஏற்று நிற்கின்றது.[9]

---

7 Article 154H (4).

8 *Devolution Experience*, ibid.p.25.

9 Provincial Councils Act No 42, 11.2.

4.3 சட்டவாக்க வழிமுறை

மாகாண சபைகள் நடைமுறைக்கு வந்த ஆரம்ப கட்டங்களில் சட்டங்களை ஆக்குவதற்கு அவை பின்பற்றிய எந்தவொரு நிலையியல் வழிமுறையும் இருக்கவில்லை. மிகக் குறைந்த வளங்கள் மற்றும் கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற சொற்ப உதவி கொண்டு மாகாண சபைகளின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் தமக்குப் பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டுத் தேவையான சட்டங்களை அபிவிருத்தி செய்ய முடிந்தது. வடமேல் மாகாண சபை முன்னணிப் பாதையில் பயணித்ததைத் தொடர்ந்து மாகாண சபைகளிடையே கிடைமட்டத்தில் அதிகளவு ஒத்துழைப்புக் காணப்பட்டது. எனினும், உண்மையான சட்டவாக்க வழிமுறை, சபைக்கு சபை வேறுபட்டு நிற்கின்றது. அனைத்து மாகாண சபைகளும் சட்டவாக்கம் செய்வதில் ஒரு பொதுவான ஏற்றுக் கொள்ளக்கூடிய வழிமுறையைக் கைக்கொள்வதை நோக்கி நகர வேண்டும் எனும் புரிந்துணர்வு காணப்பட்டது. இருப்பினும், அத்தகையதொரு சட்டவாக்கத்தின் உருவாக்கம் புதிய ஆயிரமாண்டதன் ஆரம்ப வருடங்கள்வரை சாத்தியமாகி இருக்கவில்லை. 2003இல் வடமேல் மாகாண சபையினால் கைக்கொள்ளப்பட்ட, தொகுக்கப்பட்ட வழிமுறை பெரும்பாலும் சிறிய மாற்றங்களுடன் தமது சொந்த "சட்டவாக்கத்தில் பின்பற்ற வேண்டிய பொது வழிகாட்டல்களை" அபிவிருத்தி செய்வதில் ஏனைய மாகாண சபைகளினால் பயன்படுத்தப்பட்டது. வட மேல், தென் மற்றும் ஊவா மாகாண சபைகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிகாட்டல்கள் பற்றியதொரு பரிசீலனை வேறுபட்ட சபைகளிடையே உள்ள அடிப்படை ஒற்றுமைகள் மற்றும் சிறிய வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கும்.

தென் மாகாண சபையின் செய்முறை வழிகாட்டல்கள் அனைத்துச் சட்டங்களும் அவை மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்பட முன்னர், ஆளுநரின் சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்வதை வேண்டி நிற்கின்றது.[10] இவ் அனைத்து மாகாண சபைகளிலும் சட்டவாக்கம் தொடர்பான குழுக்கள் அல்லது உப குழுக்கள் அவற்றை ஆக்கும் ஆரம்ப கட்டத்தில் நகல் சட்டத்தினைப் பரிசீலிக்க ஏற்படுத்தப்பட்டுள்ளன. தென் மாகாண சபையில் உள்ள சட்டவாக்க உபகுழு எடுத்துக்காட்டான ஒன்றாக உள்ளதுடன் அது பிரதம செயலாளர், பயிற்சி மற்றும் நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதிப் பிரதம செயலாளர், அமைச்சுக்களின் அனைத்து செயலாளர்கள் மற்றும் சட்ட உத்தியோகத்தர் ஆகியோரைக் கொண்டமைந்துள்ளது. ஊவா மாகாண சபையின் வழிகாட்டல்கள், நகல் சட்டத்தை சட்டமா அதிபருக்கு சமர்ப்பிப்பதை மட்டுமே சிபாரிசு செய்கின்ற அதே நேரம், தென் மாகாண சபைச் சட்டமா அதிபர் அதேபோன்று சட்டவரைஞருக்கு அவர்களின் அங்கீகாரத்திற்காக நகல் சட்டத்தைச் சமரப்பிக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. மாகாண சபையில் ஒரு சட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர்,

---

[10] Procedure of Making Statutes, Southern Provincial Council (mimeo.), Item 1. iii.

அவை பொது மக்களின் தகவலுக்காக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டப்படுகின்றது. வட மேல் மாகாண சபை ஆரம்ப கட்டத்திலேயே சட்டங்களை வர்த்தமானியில் பிரசுரிக்கும் ஏற்பாட்டினைக் கொண்டிருக்கின்றது. ஆனால், தென் மற்றும் ஊவா ஆகிய இரண்டும் சபையில் அவற்றைச் சமரப்பிக்க தயார்படுத்தியதன் பின்னரே பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் வழிமுறையைக் கைக்கொள்கின்றன. குறைந்தது சட்டத்தை சபையின் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு பத்து நாட்களுக்கு முன்னதாக சட்டத்தைப் பகிரங்கப்படுத்துவதன் பின்னாலுள்ள கருத்து, பொதுமக்களிடமிருந்து வரும் யோசனைகள் அல்லது நிராகரிப்புக்களைப் பரிசீலனைக்கு எடுப்பதாகும். சட்டவாக்கம் செய்யும் வழிமுறை பொதுமக்களிடமிருந்து ஏதேனும் யோசனைகள் அல்லது எதிர்ப்புகள் வருமிடத்து சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் அமைச்சர்கள் சபையின் கவனத்திற்கு அவற்றை கொண்டுவருவதுடன், பொருத்தமான வகையில் அதன் அடிப்படையில் செயற்படுவார் எனக் குறிப்பிடுகின்றது. உண்மையில், மாகாண சபைகளினால் முன்மொழியப்படும் சட்டங்களுக்கு பொது மக்கள் பதிலளிப்பது என்பது மிக மிக அரிதாகவே உள்ளது. இரண்டு சட்டங்கள் தொடர்பில் மேல் மாகாண சபையில் உள்ள பொதுமக்களிடமிருந்து எதிர்மறையான பதிலிறுப்பு வந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காணிச் சட்டம், மற்றும் அடகு பிடிக்கும் கம்பனிகள் தொடர்பான சட்டம், அடகு வைத்தல் சட்டம் தொடர்பான எதிர்ப்புகள் இச்சட்டத்தைத் திருத்துவதற்கு இட்டுச் சென்றது. மத்திய மாகாண சபை பொதுமக்களிடமிருந்து எத்தகைய பதிலளிப்பு இன்மையினால் வழமையாக பொதுமக்கள் அதிகமாகக்கூடும் ஓர் இடமான மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் நகல் சட்டங்களை காட்சிப்படுத்த யோசனை செய்தது.

மாகாண சபைகளுக்கு முன்னர் வரும் சட்டங்கள் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்படும் வழிமுறையில் பல வகைகள் காணப்படுகின்றன. மத்திய மாகாண சபையில் அவை சட்டவாக்கக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அதன் பின்னர், குழுவினால் ஆலோசிக்கப்பட்ட ஏதேனும் திருத்தங்களுடன் முழுச்சபைக் குழுவிற்கு செல்கின்றது. வட மேல் மாகாண சபையிலும்கூட, சட்டம் ஒரு மாதத்தினுள் அதன் அறிக்கையினைச் செய்ய எதிர்பார்க்கப்படும் சட்டவாக்கக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. குழுவின் அனுமதியுடனும் அல்லது அனுமதியின்றியும் ஒரு மாதத்தின் பின்னர் விவாதத்திற்காகவும், அங்கீகாரத்திற்காகவும் சட்டம் சபையில் சமர்ப்பிக்கப்படும். சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சட்டம் ஆளுநரின் சம்மதத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல்மூலம் பொது மக்களுக்கு தெரிவிக்கப்படும்.

அட்டவணை I
சட்டவாக்க வழிமுறை பற்றிய சுருக்க விளக்கம்[11]
தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைகள்

கட்டங்கள்	வடமேல்	ஊவா	தெற்கு	மத்தி
கட்டம் ஒன்று	விடய அமைச்சர் நகல் சட்டத்தின் பொருளடக்கங்களை குறிப்பிட்டு சபை பத்திரிகைகளை சமர்ப்பித்தல்	விடய அமைச்சர் நகல் சட்டத்தின் பொருளடக்கங்களை குறிப்பிட்டு சபை பத்திரிகைகளை சமர்ப்பித்தல்	விடய அமைச்சர் நகல் சட்டத்தின் பொருளடக்கங்களை குறிப்பிட்டு சபை பத்திரிகைகளை சமர்ப்பித்தல்	விடய அமைச்சர் நகல் சட்டத்தின் பொருளடக்கங்களை விளக்கி சபை பத்திரிகைகளை சமர்ப்பித்தல்
கட்டம் இரண்டு	சபை செயலாளர் சபையின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கு வதற்காக நகல் வரைபினை சபைத் தலைவருக்கு சமர்ப்பித்தல்	சட்ட மா அதிபரின் சிபாரிசைப் பெற மாகாண சட்டப் பிரிவுக்கு அனுப்புதல்	சட்டங்கள் தொடர்பான துணைக் கமிட்டிக்கு நகல் சட்டத்தை சமர்ப்பித்தல்	விடய அமைச்சர் சட்டத்தை மீள வரைதல், சட்ட ஆலோசை பெறல், மற்றும் அதனை அமைச்சர்கள் சபைக்குச் சமர்ப்பித்தல்
கட்டம் மூன்று	ஒரு மாதத்தினுள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்ற ஏற்பாட்டுடன் சட்டவாக்க குழுவுக்கு சட்டத்தை சமர்ப்பித்தல்	பொது மக்கள் தகவலுக்காக அரசாங்க வர்த்த மானியில் சட்டத்தை வெளியிடல்	சட்டவாக்க கமிட்டிக்கு சட்டத்தை சமர்ப்பித்தல்	பொது மக்கள் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் சட்டத்தை வெளியிடல்
கட்டம் நான்கு	சபையிடமிருந்து முதலாவது அங்கீகாரத்தைப் பெறல்	அவரது ஆலோசனைக்காக சட்ட மா அதிபருக்கு அனுப்புதல்	அவரது அபிப்பிராயத்துக்கா க சட்டத்தை சட்ட மா அதிபருக்கு அனுப்புதல்	கவுன்சில் செயலாளர் அதன் முதல் வாசிப்புக்காக சட்டத்தைக் கவுன்சிலுக்கு நெறிப்படுத்துதல்
கட்டம் ஐந்து	முதல்த் தடவையாக அங்கீகாரத்தைப் பெறல்	அவரது ஒப்புதலுக்காக ஆளுநருக்கு சமர்ப்பித்தல்	அவரது ஒப்புதலுக்காக ஆளுநருக்கு சமர்ப்பித்தல	சட்ட மற்றும் நியதிச் சட்டங்கள் குழுவின் பரிசீலனைக்காக சமர்ப்பித்தல்
கட்டம் ஆறு	சபைக் கூட்டத்தினால் ஆலோசனைக்கு எடுத்தல்	செயலாளருக்கு/ சபைக்கு மீள சமர்ப்பித்தல்	ஒப்புதலுக்காக சபையில் சமர்ப்பித்தல்	சபையின் செயற் குழுவால் சட்டம் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படல்
கட்டம் ஏழு	இரண்டாவது தடவையாக சபையினால் ஒப்புதல் பெறப்படல்	சட்டங்கள் மற்றும் வழிமுறைகள் குழுவுக்கு சமர்ப்பித்தல்	அமைச்சரகள் சபையால் அங்கீகரிக்கப்படல்	ஆளுநரின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்
கட்டம் எட்டு	சபையில் சட்டம் நிறைவேற்றப்படல்	திருத்தத்துடன் அல்லது திருத்தமின்றி சட்டத்தை சபைக்கு சமர்ப்பித்தலும் நிறைவேற்றலும்	ஆளுநரின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்	வர்த்தமானியின் மூலம் சட்டம் நிறைவேற்றப்பட்டுள் ளதை அறிவித்தல்
கட்டம் ஒன்பது	ஆளுநரின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்	ஆளுநரின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்	வர்த்தமானியின் மூலம் சட்டம் நிறைவேற்றப்பட்டுள் ளதை அறிவித்தல்	
கட்டம் பத்து	வர்த்தமானியின் மூலம் சட்டம் நிறைவேற்றப்பட்டுள் ளதை அறிவித்தல்	வர்த்தமானியின் மூலம் சட்டம் நிறைவேற்றப்பட்டுள் ளதை அறிவித்தல்		

[11] Compiled on the basis of information obtained from the codes of procedures adopted by the Provincial Councils selected for this comparison.

கட்டங்கள்	வடமேல்	ஊவா	தெற்கு	மத்தி
	சபையில் சட்டம் நிறைவேற்றப்படல் திருத்தத்துடன் அல்லது திருத்தமின்றி சட்டத்தை சபைக்கு சமர்ப்பித்தலும் நிறைவேற்றலும் ஆளுநரின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்வர்த்தமானியின் மூலம் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதை அறிவித்தல் கட்டம் ஒன்பது வர்த்தமானியின் மூலம் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதை அறிவித்தல்	ஆளுநரின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல் வர்த்தமானியின் மூலம் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதை அறிவித்தல்	ஆளுநரின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல் வர்த்தமானியின்	மூலம் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதை அறிவித்தல் கட்டம் பத்து

ஒருங்கியை விடயங்களான நிரல் III இன்கீழ் வழங்கப்பட்ட விடயங்கள் தொடர்பான சட்டங்கள் விடயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறை வர்த்தமானி ஊடாக பொது மக்களுக்கு அறிவிக்கும் கட்டம்வரை ஒரே மாதிரியாக இருக்கின்றது. வடமேல் மற்றும் தென் மாகாண சபைகள் ஒருங்கியை விடங்கள் பற்றிய சட்டங்களை கையாள விசேட ஏற்பாடுகளை உருவாக்கியுள்ளன. தென் மாகாண சபையில் ஒருங்கியை விடயம் தொடர்பான நகல் சட்டம் அங்கத்தவர்களின் தகவலுக்காக சபையின் முன்னால் சமர்பிக்கப்படும். இந்நகல் ஏதேனும் சபை திருத்தங்களுடன் மூன்று தேசிய மொழிகளிலும் தலா 410 பிரதிகள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். ஏதேனும் திருத்தங்களுடன் அது பாராளுமன்றத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதன்பிறகு அங்கீகாரத்திற்காக அமைச்சர்கள் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும். அத்தோடு அச்சட்டம் விவாதத்திற்காகவும் அங்கீகாரத்திற்காகவும் சபை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படும். வடமேல் மாகாணத்தில் ஒருங்கியை விடயம் பற்றிய ஒரு சட்டம் அமைச்சர்கள் சபை அதன் ஒப்புதலை வழங்கியதன் பிற்பாடு பாராளுமன்றத்தின் கலந்தாலோசனைக்காக அனுப்பிவைக்கப்படும். இச்சட்டம் பின்னர் சட்டவாக்க குழுவில் அல்லது சபை விரும்பும்பட்சத்தில் சபையின் பூரண சபை குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும். இது ஊவா மாகாண சபையிலும் பின்பற்றப்படும் ஒரு நடைமுறை.

வடமேல் மாகாணத்தில் உள்ள சட்டவாக்கக் கோவை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட முதல் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் திரும்பியிராத

அத்தகைய அனைத்து சட்டங்களும் சபையினால் அங்கீகாரத்திற்காக எடுத்துக் கொள்வதை அனுமதிக்கின்றது. இது சில மாகாண சபைகளின் அனுபவத்தின்மூலம் உறுதியாவது போன்று ஒரு நியாயமான காலப்பகுதியினுள் ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்பட்ட சட்டங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் இருந்து எந்தவித பதிலும் கிடைக்காமையினால் ஏற்படும் நிச்சயமற்ற தன்மைப் பிரச்சினையைக் கையாள ஒரு சிறந்த உபாயமாக இருக்க முடியும். ஊவா மாகாண சபையில் கடைப்பிடிக்கப்படும் வழிமுறைக் கோவை ஒருங்கியை விடயங்கள் தொடர்பான சட்டங்களுக்கு பாராளுமன்றத்தின் கலந்தாலோசனையை மாத்திரமன்றி அதன் சம்மதமும் பெறப்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகிறது. இருப்பினும், ஒருங்கியை விடயங்கள் தொடர்பான ஒட்டு மொத்த சட்டவாக்க பதிவு அனைத்து மாகாண சபைகளிலும் மிகக் குறைவாகவே உள்ளது. பொதுவாக சட்டவாக்கம் செய்யும் புதிய துறைகளை இனங்காண்பதில் மாகாண சபைகள் காட்டும் தொடக்கிவைப்பு முயற்சிகள் இன்மையானது ஒரு காரணமாகவுள்ளது. மற்றையது, அரசாங்கத்தின் இரு மட்டங்களுக்கிடையில் நிலவும் பொறுப்புக்களின் பிரிப்பு தொடர்பான கருத்துக் குழப்பங்களுடன் தொடர்புபட்டுள்ளது. ஆய்வின்போது கண்டுகொள்ளப்பட்ட ஒரு விடயம் யாதெனில், உல்லாசப் பயணம் போன்ற மத்திய அரசாங்கம் ஊக்குவிக்க கூடுதலாக ஆர்வம் கொண்டுள்ள ஒருங்கியை நிரலிலுள்ள அத்தகைய விடயங்கள் தொடர்பில் மாகாண சபை நகல் சட்டங்களை முன்வைக்கும்போது, பாராளுமன்றம் அதன் ஆதரவை உடனடியாக வழங்குகிறது என்பதாகவுள்ளது. இதே ஆர்வம் அது கட்டுப்பாட்டினைத் தக்கவைக்க விரும்பும் துறைகளில் காட்டப்படுவதில்லை.

வடமேல் மாகாண சபையிலுள்ள சட்டவாக்க வழிமுறை தனிப்பட்ட அங்கத்தவர்களும் சட்டங்களைச் சமர்ப்பிக்க அனுமதிக்கிறது. இருப்பினும், அத்தகைய சந்தர்ப்பங்களில் சட்டவாக்கத்துக்காக தெரிவு செய்யப்பட்ட விடயம் எந்த அமைச்சின் பொறுப்பில் வருகின்றதோ அவ்வமைச்சரின் அறிக்கையில் அச்சட்டம் முன்வைக்கப்பட வேண்டும். கிடைக்கக்கூடிய தகவலின் பிரகாரம், எந்தவொரு மாகாண சபையிலும் தனிப்பட்ட அங்கத்தவர் ஒருவர் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளவில்லை.

ஆய்வாளர்கள் சந்தித்துக் கலந்துரையாடிய அனைத்து மாகாண சபை அதிகாரிகள் மத்தியில் சட்டங்களை ஆக்கும் தனியானதும், அர்ப்பணிப்பு மிகுந்ததுமான அலகொன்றிற்கான தேவை குறித்து ஏகோபித்த கருத்துக் காணப்பட்டது. சட்டத்தை ஆக்குவது தொடர்பில் மீண்டும் மீண்டும் எழுப்பப்பட்ட விடயம், சட்டங்களை ஆக்க தகுதிவாய்ந்த பயிற்றுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இன்றியமையாததாக இருந்தது. மாகாண சபைகளின் ஆரம்ப நாட்களின்போது, உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் சட்டம் ஆக்குவதில் பயிற்றுவிக்கப்பட்ட அதிகாரிகள் ஒன்றில் ஓய்வு பெற்றுவிட்டனர் அன்றேல் வேறு பதவிகளுக்குச் சென்றுவிட்டனர் என்பதுடன் பதிலீடு செய்யப்படுவதுமில்லை. அவர்களில் சிலர் புதிய உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதில் தொடர்ந்து ஈடுபட்டாலும், அது அதிகம் வெற்றியளிக்கவில்லை.

மத்திய மாகாண சபையில் சட்டங்களை ஆக்கும் பொறுப்பு தமது சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் நாளாந்தம் பணியிலீடுபடும் அமைச்சுச் செயலாளர்களிடத்து உள்ளது. இது தவிர அவர்கள் அத்தகைய பணியில் எந்தவித பயிற்சியைக்கூடப் பெற்றிருக்கவில்லை. வடமேல் மாகாணத்தில் அமைச்சு செயலாளர் ஒருவரால் தொடக்கிவைக்கப்பட்ட சட்டம் அதனைத் தொடர்ந்து அமைச்சுச் செயலாளர்கள் குழு அதனைத் தொடர்ந்து முன்னெடுக்கும் பொறுப்பை ஏற்கும். இன்று கிழக்கு மாகாண சபை போன்ற புதிய சட்டங்களை கையாள ஒரு சட்ட உத்தியோகத்தர் தலைமையிலான தனியான அலகினை அதிகம் வேண்டி நிற்கும் சபைகளும் உள்ளன. ஆனால், மத்திய மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட ஆரம்ப உத்தியோகத்தர்கள் பதவி நிரம்பல் பட்டியல் சட்ட உத்தியோகத்தர் பதவிகளைக் கொண்டிராமையினால் இன்றுவரை அவற்றுள் மிகப்பெரும்பாலானவை ஒரு தொழில்சார் சட்ட ஆலோசனையின்றியே பணிபுரிகின்றது. சில மாகாண சபைகள் இக்குறைபாட்டினை நிர்வகிக்க அண்மையில் நியமனம் செய்யப்பட்ட சற்று சட்ட அனுபவம் கொண்ட பட்டதாரிப் பயிலுனர்களின் சேவைகளைப் பயன்படுத்துகின்றன. மத்திய மாகாண சபை, கண்டி மாநகர சபையினாலும் பயன்படுத்தும் ஒரு தனிப்பட்ட வழக்கறிஞரின் சேவைகளைப் பயன்படுத்த முயற்சிக்கின்றது. ஆய்வின்போது மாகாண சபைகளால் ஆரம்பிக்கப்பட்ட சில சட்ட திட்டங்கள் சம்பந்தப்பட்ட சட்டங்களை ஆக்குவதில் எதிர்கொண்ட கடினங்கள் காரணமாக கைவிடப்பட வேண்டி ஏற்பட்டமை தெரியவந்தது. வட மத்திய மாகாண சபை சட்டங்களை ஆக்குவதுடன் தொடர்புபட்ட கஸ்டங்கள் காரணமாக, இளைஞர் வேலைவாய்ப்பினை உருவாக்குவதில் அத்துடன் மற்றைய விவசாயப் பொருட்களைச் சந்தைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி நிதியத்தை உருவாக்குவது தொடர்பான இரண்டு அதிகார சபைகளை ஏற்படுத்தும் காரியத்தைக் கைவிட்டது.

4.4 மாகாண சபைகளின் சட்டவாக்கச் செயற்பாடு

மேல் மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட 1988ஆம் ஆண்டிலேயே சட்டவாக்க செயன்முறையை ஆரம்பித்தது. குறுகிய காலம் செயற்பட்ட வட-கிழக்கு மாகாண சபை உள்ளிட்ட அனேகமான மற்றைய மாகாண சபைகள் இதனுடன் சேர்ந்துவரும் அட்டவனை சுட்டிக்காட்டுவது போன்று 1989 இல் களத்தில் இறங்கின. 1990 மற்றும் 2000 இற்கு இடைப்பட்ட காலத்தில் சட்டவாக்கக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கின்றபோது, 1990 மிகச்சிறந்த ஆண்டாக இருக்கின்றது. பொதுவாக, முதல் சில வருடங்களில் சிறந்த சட்டங்கள் வெளிவந்ததை நாம் காணலாம். இருந்தாலும், எமது இவ்வாய்வு 1990 களின் நடுப்பகுதியில் பின்னர் அனைத்து மாகாண சபைகளிலும் சட்டவாக்க செயன்முறையில் ஒரு குறிப்பிட்ட பின்னடைவு ஏற்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் அசோக குணவர்த்தன கூறும் விடயம் பொருத்தமானதாகத் தென்படுகின்றது. "சட்டவாக்கம் செய்வதில் ஆரம்பத்தில் காணப்பட்ட ஆர்வத்தினைத் தொடர்ந்து

மாகாணங்கள் மெதுவாக விழித்தெழுவதாகத் தோன்றிய அத்தகையதொரு ஆழ்ந்த சிக்கலில் மாட்டியுள்ளன".[12] மாகாண சபைகள் வழக்கமான நிதி ஒதுக்கீட்டு சட்டம் அல்லது கணக்கீட்டு வாக்கெடுப்பினை மாத்திரம் செய்த சில குறிப்பிட்ட வருடங்களும் உள்ளன. மொத்தம் 93 சட்டங்களுடன் 1990ஆம் ஆண்டு மாகாண சபைகளைப் பொறுத்தவரை மிகவும் வினைத்திறன் மிக்கதாக இருக்குமானால் அவ்வருடம் ஒதுக்கீட்டுச் சட்டத்தையேனும் கொண்டுவர முடியாமல்போன தென் மாகாணத்துடன் சேர்த்து 19 சட்டங்களை மாத்திரமே செயன்முறைப்படுத்தப்பட்ட மிகக்குறைந்த வினைத்திறன் மிக்கதாக 1993 இருந்தது.



Calculated using data collected in the Evaluation Study of the Working of Provincial Councils in Sri Lanka 2009/2010

Statute Making by Provincial Councils- Chronological Presentation

(In the preparation of this chart the finance statutes were not taken into account)

2009/2010 இலங்கையில் மாகாண சபைகளின் செயற்பாடு பற்றிய மதிப்பீட்டாய்வில் சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்திக் கணிப்பிடப்பட்டுள்ளது

மாகாண சபைகளின் சட்டமியற்றல் - வரிசைக் கிரம விளக்கம்
(இவ்வரைபடத் தயாரிப்பில் நிதிச் சட்டங்கள் கவனத்திற் கொள்ளப்படவில்லை)

---

12. Asoka S. Gunawardena, *Beyond Legal and Administrative Constraints Confronting Provincial Councils*, Sri Lanka Institute of Local Governance, Colombo.p.34.

முதல் சில வருடங்களில் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய சட்டங்களை ஒருவர் உற்று நோக்கும்போது, அது இன்றி சபைகள் முறையாகத் தொழிற்பட்டிருக்க முடியாமல் போயிருக்கும்: அச்சட்டங்களை ஆக்குவதில் அனைத்து மாகாண சபைகளும் கவனம் செலுத்தியிருந்தன எனும் மனப்பதிவைப் பெறுவார். ஆரம்ப சட்டங்களின் விடயங்கள் மிகவும் அத்தியாவசியமான மாகாண நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தின் புதிய மட்டத்தின் ஒழுங்கு விதிகளை ஏற்படுத்துவதுடன் தொடர்புபட்டிருந்தன. அவை நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், வருமான அறவீட்டு ஏற்பாடுகள் முத்திரைக் கட்டண நிதிகளைக் கைமாற்றம் செய்தல், நீதிமன்ற தண்டப்பணம், வரிவதிப்பு, உள்ளூர் அதிகார சபைகளின் பணியை மேற்பார்வை செய்தல், வேறுபட்ட மாகாண நிதியினை உருவாக்குதல், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வியாபாரப் பதிவு போன்றவற்றுடன் சம்பந்தப்பட்டிருந்தன. உதாரணமாக 1991 ஆண்டளவில் வடகிழக்கு தவிர்ந்த அனைத்து மாகாண சபைகளும் உள்ளூர் அதிகார சபைகளை மேற்பார்வை செய்யத் தம்மைப் பலப்படுத்தும் சட்டங்களை ஏற்றுக்கொண்டன. அதேபோன்று 1997 ஆண்டளவில் அவையாவும் வியாபாரத்தைப் பதிவு செய்தல் தொடர்பான சட்டங்களைக் கொண்டிருந்தன. சில ஆரம்பகால சட்டங்கள் உதாரணமாக பயணிகள் போக்குவரத்து, கிராம அபிவிருத்தி, கைத்தொழிற் சேவைகள் ஏற்பாடு போன்ற மாகாண மட்டத்திலான சட்டங்கள் எதுவும் இல்லாதிருந்த துறைகளில் கவனஞ் செலுத்தின. 1992 ஆண்டளவில் செயற்பாட்டிலிருந்த அனைத்து ஏழு மாகாண சபைகள் பயணிகள் போக்குவரத்தை அனுமதிக்கும் சட்டங்களை அனுமதித்ததுடன், புதிய கிழக்கு மாகாண சபை நிறைவேற்றிய முதல் மூன்று சட்டங்கள் இதே விடயம் தொடர்பிலானதாக உள்ளது. சபைகளில் இரண்டு கிராம அபிவிருத்திக்காக அதிகார சபைகளையும், அபிவிருத்திக்காக இரண்டு அதிகார சபைகளையும் 1998 இற்கு முன்னர் ஏற்படுத்தியிருந்தன. விவசாயம், சுகாதாரம், கல்வி, நீர்பாசனம், சுதேச மருத்துவம், விளையாட்டு போன்ற ஏனைய துறைகள் தொடர்பிலான சட்டங்களை மாகாண சபைகளின் ஆரம்ப நாட்களில் கொண்டிருந்தன. ஆயினும், அவற்றின் குவிமையம் அடிப்படையில் நிர்வாக ஏற்பாடுகளை ஏற்படுத்துவதாகவிருந்தது.

அதன் நியாயாதிக்கத்தினுள் சுமூகமாக இயங்க அரசாங்கத்தின் புதிய அலகினை இயலச் செய்யும் நிர்வாக ஏற்பாடுகளை உருவாக்குவதன் தேவை சர்ச்சைக்குட்பட்டதல்ல. பிராந்திய அபிவிருத்தி மற்றும் மாகாண மக்களுக்கு வினைத்திறனான சேவைகளை வழங்குவதற்கு மிகவும் அத்தியாவசியமான பல்வேறு துறைகள் அனேகமான மாகாண சபைகளின் சட்டம் இயற்றுநர்களால் கவனம் செலுத்தப்பட்டுள்ளன. மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்டு 20 வருடங்கள் கழிந்து இன்றுவரை மாகாண பட்டியலிலுள்ள நிர்மாணச் செயற்பாடு, புனர்வாழ்வு, மிருக வளர்ப்பு, கனிப்பொருட்கள், அபிவிருத்தி மற்றும் சுரங்கம், சமூக ஒழுங்குப்படுத்தல், உணவு விநியோகம் மற்றும் பங்கீடு, சந்தைக்காட்சி, சூதாட்டம், உடமை, போக்குவரத்து, மதுபானங்களை வாங்கல் மற்றும் விற்றல் ஆகிய அனைத்து விடயங்கள் தொடர்பில் எந்தவொரு தனிச்சட்டமும் ஆக்கப்படவில்லை. மேலும் மாகாண மட்டத்தில் சிறப்பாக ஒழுங்கமைக்கவும்,

சிறப்பாகக் கையாளவும், தேவையான துறைகளாகவும் இவை உள்ளன. திட்டமிடல், மீன்பிடி, சுற்றாடல், சுதேச மருத்துவம், இந்து கலாசாரம் மற்றும் வலது குறைந்தோர் பற்றிய ஒவ்வொரு மாகாண விடயம் தொடர்பில் இதுவரை ஒரேயொரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு பாராளுமன்றத்துடன் கலந்தாலோசனை செய்து முன்னெடுக்கப்படும் ஒத்தியங்கும் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பரப்புக்கள் தொடர்பில் சட்டங்களை ஆக்க மாகாண சபைகளை அனுமதிக்கின்றது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, ஊவாவில் உள்ள வழிமுறைக் கோவை ஒத்தியங்கு விடயங்கள் தொடர்பான சட்டங்களை ஆக்க பாராளுமன்றின் "அங்கீகாரம் பெறப்பட வேண்டும்" எனக் குறிப்பிடுகின்றது. எவ்வாறெனினும், நடைமுறை விதிகளின்படி இக்கலந்தாலோசனை மாகாண சபை அதன் நோக்கத்தினைப் பாராளுமன்றிற்குத் தெரியப்படுத்தும் ஒன்றாக மாறியுள்ளது. இவ்வாய்வு ஒத்தியங்கு பட்டியலில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் வேறுபட்ட மாகாண சபைகளினால் தயாரிக்கப்பட்ட ஒரு சில சட்டங்களை மாத்திரமே கண்டுகொண்டது. உல்லாசப் பிரயாணம். சுற்றாடல், சமூக சேவைகள், மீன்படி, கூட்டுறவு, விலங்கு வளர்ப்பு, சமூக வனவளம். இளைஞர் வேலைவாய்ப்பு, வர்த்தகம் மற்றும், வியாபாரம், உணவுப் பண்டங்களைப் பதனிடல். மண் பராமரிப்பு, விலைக் கட்டுப்பாடு. விவசாயத்தோடு தொடர்பான கைத்தொழில்கள், போன்ற ஒத்தியங்கு விடயங்கள் குறித்து எந்தவொரு மாகாண சபையும் தனியொரு சட்டத்தை ஆக்கவில்லை. இவ் அனைத்து விடங்களும் மக்களின் நாளாந்த தேவைகள் மற்றும் நலன்களுடன் மிக நெருக்கமானவை என்பதுடன், அவை மாகாண மட்டத்தில் இலகுவாக முகாமை செய்யப்படக்கூடியவை. உண்மையில் மாகாண சபைகள் ஏற்கனவே நடைமுறையிலுள்ள சட்டங்களைக் கொண்டு செயற்படுவதில் மகிழ்ச்சியடைகின்றன.

மாகாண விடயங்கள் தொடர்பான அதிகாரத்தை பெற்றுக் கொள்ளும் திறவுகோலாக சட்டவாக்கம் இருக்கும்போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் சட்டங்களை ஆக்குவதில் அவை தோல்வியுற்றதன் மூலம், மாகாண சபைகள் தமது சொந்தத்தில் அதிகார மையங்களாக எழுச்சியடைவதை விடுத்து அத்தகைய விடயங்களுக்காக மத்திய அரசின் முகவர்களின் வகிபங்கினை ஏற்றுக் கொண்டுள்ளன.

அட்டவணை 2

அனைத்து மாகாண சபைகளினதும் சட்டங்கள் - விடய பரப்பின் அடிப்படையில் 1988 -2009

(வழக்கமான நிதி ஒதுக்கீட்டு/நிதி தொடர்பான சட்டங்கள் தவிர்ந்த)

சமூக - உட்கட்டமைப்பு

மேல் மாகாணம்	வட மேல் மாகாணம்	தென் மாகாணம்	மத்திய மாகாணம்	சப்ரகமுவ மாகாணம்	வட மத்திய மாகாணம்	ஊவா மாகாணம்	கிழக்கு மாகாணம்
வீதி பயணிகள் போக்குவரத்து பயணிகள் போக்குவரத்து சேவை போக்குவரத்து சேவைகள் அதிகார சபைஇ மோட்டார் போக்குவரத்து முச்சக்கர வண்டி சேவைகள்இ சமூக சேவைஇ சுகாதார சேவை கூட்டுறவு அளணி ஆணைக்குழுஇ சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை நூலகம்இ விளையாட்டுஇ கூட்டுறவு சேவை கல்விஇ முன் பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிலையம் வீடமைப்பு அபிவிருத்தி நிதியம்	வீதி பயணிகள் போக்குவரத்துஇ போக்குவரத்து சேவைகள் அதிகார சபை விளையாட்டுஇ கூட்டுறவு ஆளணி ஆணைக்குழுஇ கூட்டுறவு அபிவிருத்தி நிதியம்இ முன் குழந்தைப்பருவ கல்வி அபிவிருத்திஇ மனித வள அபிவிருத்தி அதிகார சபை இ அபிவிருத்தி அதிகார சபை	வறுமை ஒழிப்பு பயணிகள் போக்குவரத் சேவைகள் அதிகார சபைஇ சமூக சேவைஇ கல்விஇ முன் பள்ளிஇ அபிவிருத்தி அதிகார சபை	பயணிகள் போக்குவரத் சேவைகள் வீதிப் பயணிகள் போக்குவரத் சேவைகள் அதிகார சபை ஆயுர் வேதம்இ கூட்டுறவுஇ நூலகம்இ விளையாட்டு கல்வி	வீதிப் பயணிகள் போக்குவரத் சேவைகள்இ வீதிப் பயணிகள் போக்குவரத் சேவைகள் அதிகார சபைஇ சிறுவர் பாதுகாப்பு சேவை நிதியம்இ சுகாதார சேவைஇ கூட்டுறவு அபிவிருத்தி நிதியம்இ விளையாட்டுஇ முன் பள்ளிஇ ஊமியர் மன்றம்	வீதிப் பயணிகள் போக்குவரத் சேவைகள்இ வீதிப் பயணிகள் போக்குவரத் சேவைகள் அதிகார சபைஇ சமூக சேவை நிதியம்இ நூலக சேவை சபைஇ கூட்டுறவு சங்கங்கள் இ கல்வி அபிவிருத்தி அதிகார சபைஇ விவசாய சேவை	சமூக நலன்புரி மற்றும் புனர் வாழ்வு நிதியம்இ வீதிப் பயணிகள் போக்குவரத் சேவைகள்இ வீதிப் பயணிகள் போக்குவரத் சேவைகள் அதிகார சபைஇ ஆயுர் வேதம்இ கல்விஇ உயர் கல்வி புலமைப் பரிசில் நிறுவகம்	முன் பள்ளி கல்வி பணியகம்

வருமானங்கள் மற்றும் கட்டணங்கள் சேகரிப்பு

மேல்	வடமேல்	தென்	மத்தி	வடமத்தி	சப்ரகமுவ	ஊவா
நகை அடகு பிடித்தல், முத்திரைக் கட்டணங்கள் ,வியாபாரங்களைப் பதிவு செய்தல், நீதிமன்றத் தண்டப் பணங்களை மாற்றிக் கொடுத்தல்	முத்திரைக் கட்டணங்கள் வியாபாரங்களைப் பதிவ செய்தல்இ நீதிமன்றத் தண்டப் பணங்களை மாற்றிக் கொடுத்தல்	முத்திரைக் கட்டணங்கள் அறவீடு, வியாபாரங்களைப் பதிவ செய்தல், நீதிமன்றத் தண்டப் பணங்களை மாற்றிக் கொடுத்தல	முத்திரைக் கட்டணங்கள் அறவீடு முத்திரைக் கட்டண மாற்றீடு,	வியாபாரங்களைப் பதிவு செய்தல், நீதி மன்றத் தண்டப் பணங்களை மாற்றிக் கொடுத்தல வரி மற்றும் கட்டணங்கள் அறவீடு, முத்திரைக்		முத்திரைக் கட்டண மாற்றீடு. நீதி மன்றத் தண்டப் பணங்களை மாற்றிக் கொடுத்தல்

அபிவிருத்தி

மேல்	வடமேல்	தென்	மத்தி	வடமத்தி	சப்ரகமுவ	ஊவா
மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைஇ விவசாய அபிவிருத்தி நிதியம்இ கிராமிய அபிவிருத்திஇ காணி அபிவிருத்திஇ கைத்தொழில் அபிவிருத்திஇ உல்லாச பிரயாண சபைஇ கழிவு முகாமைத்துவம்இ ஜனகல மன்றம்	வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்திஇ மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைஇ பிராந்திய வள அபிவிருத்தி அதிகார சபைஇ மாகாண சிறு நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய வீதி பராமரிப்பு நிதியம்இ பால் பண்ணை மற்றும் கால் நடைஇ கைத்தொழில் அபிவிருத்தஇ இயந்திர உபகரணம்இ சுற்றாடல்இ ஜனகல மன்றம்	மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைஇ கிராமிய அபிவிருத்தி அதிகார சபைஇ ஊல்லாச பிரயாணம்இ கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைஇ மாற்று சக்தி	மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைஇ விவசாயஇ பிராந்திய பொருளாதார அபிவிருத்தி அதிகார சபை	மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைஇ விவசாய உற்பத்தி வத்தகம் மற்றும் வர்த்தக அபிவிருத்தி இ காணி அபிவிருத்தி இ காணிஇ நீர்ப்பாசனம்இ இயந்திரம் மற்றும் உபகரணம்இ சுய தொழில் நிதியம்இ மனித வள அபிவிருத்தி அதிகார சபை	வீடமைப்பு அபிவிருத்தி நிதியம் கைத்தொழில் சேவை பணியகம்இ	மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைஇ விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்இ கிராமிய அபிவிருத்தி அதிகார சபைஇ ஊவா நவோதய நிதியம்இ முதலீட்டு நிதியமஇ பௌத்த விவகார அபிவிருத்தி நிதியம்இ சுமய மற்றும் கலாசார நிதியம்இ இந்து கலாசா விவகாரங்கள்

உள்ளூராட்சி உள்ளிட்ட நிறுவனச் சட்டங்கள்

மேல்	வடமேல்	தென்	மத்தி	வடமத்தி	சப்ரகமுவ	ஊவா
சம்பளம் மற்றும் மாதாந்தக் கொடுப்பனவு வழங்கல்இ கவுன்சில் (செயலக ஊழியர்கள்) இ உள்ளூர் அதிகார சபை ஊழியர்கள்இ மனித வள அபிவிருத்திஇ கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு இ உள்ளூர் அதிகார சபைகளுக்கு நிதி உதவிக	உள்ளூர் அதிகார சபை ஊழியர்கள்இ சம்பளம் மற்றும் மாதாந்தக் கொடுப்பனவு (தலைவர் மற்றும் பிரதி தலைவர்)இ உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்)இ மாகாண பொது சேவை ஆணைக்குழு ஊழியர்களுக்கான சமபளம் மற்றும் மாதாந்த கொடுப்பனவுஇ உள்ளூர் அதிகார சபைகளின் அதிகாரம் மற்றும் பணிகளை மேற்பார்வை செய்யும் உள்ளூர் அதிகார சபைகள்இ கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுஇ	உள்ளூர் அதிகார சபைகள் ஆளணியினர் இ உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள) கூட்டுறவு ஊழியர்களின் சம்பளம் இகூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு இ மனித வள அபிவிருத்திஇ சம்பளம் மற்றும் மாதாந்த கொடுப்பனவு (செயலக ஊழியர்கள்)	உள்ளூர் அதிகார சபைகள்(மேற் பார்வை)இ உள்ளூர் அதிகார சபை ஆளணியினர் இ கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு இ சம்பளம் மற்றும் மாதாந்த கொடுப்பனவு (செயலக ஊழியர்கள்) மாகாண பொது சேவை ஆணைக்கு ஊழியரகளுக் கான சமபளம் மற்றும் மாதாந்த கொடுப்பனவு இ சுகாதார சேவைகள் திணைக்கள நிர்வாகம	நிர்வாக சக்தியை வழங்கும் உள்ளூர் அதிகார சபைகள்இ உள்ளூர் அதிகார சபைகளுக்கு விசேட ஆணையாளர் ஆட்சேர்ப்பிஇ உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்)இ உள்ளூர் அதிகார சபைகளின் ஆளணியினர்இ கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுகவு ன்சில்(செயலக ஊழியர்கள்)இ திட்டமிடல் சபை உள்ளூர் அதிகார சபைகளில் நிர்வாக மேற்பார்வைஇ அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்)இ	உள்ளூர் அதிகார சபைகள்(ஆள ணியினர்)இமா காண பொது சேவை ஆணைக்குழு ஊழியரகளுக் கான சம்பளம் மற்றும் மாதாந்த கொடுப்பனவு இ (செயலக ஊழியர்கள்)	உள்ளூர் அதிகார சபைகள்இ உள்ளூர் அதிகார சபை ஆளணியனர்இ கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு இ சம்பளம் மற்றும் மாதாந்த கொடுப்பனவு வழங்கல்இ கவுன்சில்(செய லக ஊழியர்கள்)இ மாகாண பொது சேவை ஆணைக்குழு ஊழியரகளுக் கான சமபளம் மற்றும் மாதாந்த கொடுப்பனவு

மேலுள்ள அட்டவணைகளிலிருந்து தோற்றம் பெறும் பொதுவான காட்சி ஊக்கமளிப்பதாக இல்லாவிடினும், குறிப்பிட்ட சில மாகாண சபைகள் மாகாண அதிகாரத்துக்கான புதிய களத்தினைத் திறந்துவிடும் தொடக்க முயற்சிகளை எடுத்திருக்கின்றன. வட மேல் மாகாண சபையின் 1990ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கச் சுற்றாடல் சட்டம் பல்வேறு தடைகளுக்கு மத்தியில் நிறைவேறியது. இது மாகாண சுற்றாடல் அதிகார சபை, சுற்றாடல் நிதியம் மற்றும் சுற்றாடல் ஆலோசனைச் சபையை ஏற்படுத்த முயற்சித்தது. இயற்கைக் கடல் மற்றும் நீர்வள ஜீவராசிகள் வளங்கள், மண் பராமரிப்பு, மற்றும் சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட சூழல் முகாமைத்துவம், அதிகார சபையின் முக்கிய குவிமையம் ஆகியது. கழிவு அகற்றல், சூழல் மாசடைதல், மற்றும் சூழல் மாசடைதலை கட்டுப்படுத்தி அனுமதிப் பத்திரம் வழங்கல் போன்றவற்றை முகாமை செய்தல் புதிய அதிகார சபையின்கீழ் கொண்டுவரப்பட்டன. இவ் அதிகார சபை மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களுக்கான திட்டமிடலுக்கு வலுவூட்டல்களை

வழங்குகிறது. இது ஒருங்கியை நிரலில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் இயற்றப்பட்டுள்ள ஒரு சில சட்டங்களுள் ஒன்றாகவுள்ளது. இது அரசாங்கத்துடன் முரண்பாட்டுக்கு இட்டுச் சென்றது என்றாலும் இறுதியில் அச் சட்டம் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றதுடன், இன்றுவரை வடமேல் மாகாண சபை அதன் சூழவுள்ள எல்லைகளுக்குள் சூழல் தொடர்பான அதிகாரத்தைக் கொண்ட ஒரேயொரு சபையாக இருக்கின்றது (P18 page 1). 1994ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க மேல்மாகாண உல்லாசப் பயண பணியகச் சட்டம் மத்தியுடன் பகிரப்படும் ஒரு நியாயாதிக்கத் துறையினுள் பாதிப்பினை ஏற்படுத்தவல்ல மாகாண சபையொன்று இயற்றிய மற்றொரு அத்தகைய சட்டமாகவுள்ளது. மாகாணத்துக்குள்ளான வினைத்திறன்மிக்கதும் திருப்திகரமானதுமான உல்லாசப் பயணச் சேவைகளின் ஊக்குவிப்பு மற்றும் அதன் நோக்கமாக உள்ளது. அது "நோக்கங்களை அடைந்துகொள்ள சர்வதேச மற்றும் தேசிய அமைப்புக்களுடன் எந்தவொரு கூட்டு முயற்சி உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தத்தினை மேற்கொள்ள"[13] எதிர்பார்க்கின்றது. அது கூடவே "ஏதேனும் சேவை வழங்களுக்காக கட்டணம் அல்லது வரியினை அறவிட" ஆளுநர் சபை பணிப்பாளர்கள் மற்றும் பணியகத்தினை அனுமதிக்கின்றது. அதனைத் தொடர்ந்து உல்லாசப் பிரயாணம் தொடர்பான மற்றொரு சட்டம் அதேபோன்ற நோக்கங்கள் மற்றும் நிர்வாகப் பொறிமுறை கொண்டு தென் மாகாண சபையினால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.[14] மத்திய மாகாணத்தின் பிராந்திய பொருளாதார அபிவிருத்தி அமைப்புச் (REDA) சட்டங்கூட பிறிதொரு காரணத்தினால் குறிப்பிடத்தக்கதாகவுள்ளது.[15] இக் சட்டத்தில் குறிப்பிடப்படும் பிரதான நோக்கம் இலங்கை - ஜேர்மனிப் பொருளாதார ஒத்துழைப்புக்கான திட்டத்தினால் "2000 ஜுலைக்கும் 2007 ஜுனுக்குமிடையில் அறிமுகம் செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் திட்டங்களை பாரிய உத்வேகத்துடன் முன்கொண்டு செல்வதாக இருக்கின்றது"[16] மிக முக்கியமாக மத்திய மாகாணத்தின் பிராந்திய பொருளாதார அபிவிருத்தி அமைப்பு மற்றும் பொதுத்துறை மற்றும் தனியார் துறையினால் கூட்டாக சமனாகவும் சுபீட்சமிக்கதுமான ஒன்றாக மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஏற்படுத்தப்படுகின்றது எனப் பிரகடனம் செய்கிறது. ஆகவே, இச்சட்டம் பொது தனியார் ஒத்துழைப்பு குறித்து செயற்பட வடிவமைக்கப்பட்டது. மத்திய மாகாணத்தின் பிராந்திய பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் முகாமைத்துவ சபை பொதுத்துறை அதிகாரிகள் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும். இம் முகவர் நிறுவனத்தின் ஆளனியினர் "தனியார் துறை அதிகாரிகள் மற்றும் ஏனைய ஊழியர்களை உள்ளடக்குவதுடன், இரண்டு வருடங்கள் வரை அவர்களின் சம்பளத்தில் 25% ஆனது மாகாண சபையினால் உள்வாங்கப்படும். மத்திய மாகாண சபை

---

[13] Tourist Bureau Statute of the Western Province, No.3, 1994, 4 (c).

[14] *Ruhunu* Tourist Bureau Statute of the Southern Province, No. 01, 2000.

[15] Regional Economic Development Agency Statute of the Central Province, No.01, 2008.

[16] ibid. Section 3.

இச்சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள கொழும்புடன் ஒரு போராட்டத்தை நடாத்த வேண்டி ஏற்பட்டதுடன், இன்று மத்திய மாகாண பிராந்திய பொருநாதார அபிவிரத்தி அமைப்பு, வர்த்தக அளவில் திட்டங்களை முன்னெடுக்கும் ஒரு துடிப்புள்ள அமைப்பாக இருப்பதுடன் ஏனைய பல மாகாணங்களிலும்கூட செயற்பட்டு வருகின்றது. இவ்வமைப்பினை இறுதியில் ஏற்றுக்கொண்டமை மற்றும் அதன் வெற்றி மாகாண அரசாங்கங்கள் சட்டம் இயற்றுவதிலும் முற்போக்காக இருந்து தமது கவனத்தைப் புதிய துறைகளில் நெறிப்படுத்தலாம் என்பதைச் சுட்டி நிற்கின்றது. ஊவா மாகாண சபையின் இந்து கலாசார விவகார சட்டம் மாகாண சபைகளின் சட்டவாக்கத் திறனில் மற்றொரு பரிமாணத்தைக் கொண்டு வருவதாக உள்ளது[17]. மாகாண சபைகளை உருவாக்குவதற்கு இட்டுச் சென்ற அரசியல் அமைப்புக்கான 13ஆம் திருத்தம் இலங்கையில் இன முரண்பாட்டிற்குத் தீர்வாகக் கொண்டுவரப்பட்ட சட்ட வழிமுறைகளில் ஒரு பகுதியாக அறிமுகஞ் செய்யப்பட்டது. சட்டப் பிரகாரம் பயன்படுத்தப்பட்டால், மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள பரந்தளவிலான பொறுப்புக்கள் கலாசார சிறுபான்மை இனங்களின் மனத்தாங்கல்களை அகற்றி, அதன்மூலம் இன உறவு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டினை ஊக்குவிக்க வாய்ப்புக்களை வழங்குகின்றன. ஊவா மாகாண சபையின் இந்து கலாசார விவகாரங்கள் சட்டம், இந்து கலாசாரத்தை ஊக்குவிக்க முயற்சிக்கின்றது. இந்து சமயம் மற்றும் தத்துவம் இந்து இலக்கியம் கலைகள் ஊக்குவிப்பு உதவி அத்துடன் இந்து சமய நிறுவனங்கள் மற்றும் நாடகத்துக்கான ஆதரவு வழங்கல் இச் சட்டத்தின் நோக்கங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. செலவினங்களைக் கவனிக்க நிதியம் ஒன்றும் சட்டத்தின் அமுலாக்கத்தை கண்காணிக்க ஆலோசனைச் சபை ஒன்றையும் உருவாக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாரிய இந்து சமூகத்தைக் கொண்ட ஒரு மாகாணத்தில் இச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை இன்னும் பரவலாக வெளிக்காட்டப்படாத 13ஆம் திருத்தச் சட்டத்தின்கீழ் மாகாண சபைகள் கொண்டுள்ள ஆற்றலை மேலும் சுட்டிக்காட்டுகிறது.

4.5 இறுதி அவதானங்கள்

இதுவரை இயற்றப்பட்ட ஏறத்தாழ ஓராயிரம் சட்டங்களில் பெரும்பாலானவை நிதி ஒதுக்கீடு அல்லது மேலதிக நிதிசார் சட்டங்கள் வகைப்பாட்டினுள் அடங்குகின்றன. உள்ளூர் அதிகார சபைகளுடனான உறவினை வறையறை செய்வதுடன், தொடர்புபட்டவற்றுடன் சேர்த்து, மாகாண அதிகாரப் பகிர்வு முறைமையினைப் பேணிப் பராமரிக்கும் பல்வேறு நிறுவனங்களைத் தாபிக்கும் சட்டங்கள் எண்ணிக்கையில் அடுத்ததாக உள்ளதுடன் அதனைத் தொடர்ந்து சூழல், சமூக உட்கட்டமைப்புத் தொடர்பான சட்டங்கள் இடம்பெறுகின்றன. அபிவிருத்தியினை ஊக்குவிக்கும் அத்தகைய சட்டங்கள் மிகக் குறைவானதும் வறையறுக்கப்பட்ட உள்ளடக்கத்தினைக்

[17]Hindu Cultural Affairs Statute of the Uva Province, No. 02 of 1991.

கொண்டவையாகவும் உள்ளன என்பதுடன், அவற்றுள் சில நிதியின்மையினால் அமுல்படுத்தப்படவில்லை. இருப்பினும் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, புதிய அதிகாரப் பகிர்வு முறையின் இயலளவு மற்றும் எதிர்கால வாய்ப்பினை அடையாளப்படுத்தும் பல்வேறு துறைகளில் மாகாண அபிவித்திக்கான புதிய களத்தினை ஆரம்பிப்பதற்கு வழிசமைக்கும் ஆக்கபூர்வமான ஓரீரெண்டு சட்டங்களை ஒவ்வொரு மாகாண சபையும் கொண்டுள்ளது.

மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்ட அனேகமான விடயங்கள் மற்றும் ஒத்தியங்கு பட்டியலில் உள்ள ஏறத்தாழ அனைத்து விடயங்களும் மாகாண சட்டமியற்றுநர்களால் கை வைக்கப்படாமலுள்ளன. அரசாங்க செயன்முறைக் கண்ணோட்டத்தில் மாகாண சபை சட்டம் இயற்றுனர்களால் கருத்தில் கொள்ளப்படாத இவ்விடயங்கள் மாகாண மக்களின் நாளாந்த தேவைகளுடன் நெருக்கமாக தொடர்புபட்ட விடயங்களாகவும் உள்ளன. கீழ்மட்டத்தில் சிறப்பாகக் கையாளக்கூடிய விடயப்பரப்புகளாகவும் உள்ளன. சட்டங்களைக் கொண்டிராமையின் காரணமாக, மாகாண சபைகள் மத்திய அரசாங்கத்தினால் இயற்றப்பட்டு ஏற்கனவே நடைமுறையிலுள்ள சட்டங்களின் பிரகாரம் சம்பந்தப்பட்ட தேவைகளை முன்னெடுக்க வேண்டப்படுகின்றன. இது அதிகாரப் பகிர்வின் நோக்கங்களுள் ஒன்றைத் தோல்வியுறச் செய்கின்றது. அதாவது, உள்ளூர் மக்களுக்கு நேரடியாகப் பொறுப்புக்கூறும் தீர்மானம் எடுப்போரால் உள்ளூர் மக்களைப் பாதிக்கும் தீர்மானங்களை எடுத்தல். தமது சொந்த சட்டமின்மையால் மாகாண சபைகள் தூரத்து மையத்தின் சார்பாக மத்திய அரசாங்கத்தின் சட்டங்களை முன்னெடுக்கும் வெறும் முகவர்களாக உள்ளனர்.

ஒவ்வொரு மாகாண சபையும் இதுவரை தங்களால் நிறைவேற்றப்பட்ட குறைந்த மட்டத்திலான சட்டவாக்கத்திற்கு ஒரு காரணமாக சட்டவாக்கம் செய்வதில் தாம் எதிர் நோக்கும் கடினங்களை சுட்டிக்காட்டியுள்ளன. இக் கடினத்தன்மைகள் தகுதிவாய்ந்த ஆளணியில் இருந்து ஆளுநர்களின் ஒத்துழைப்பின்மை மற்றும் தேசிய தலைமையிடம் இருந்தான எதிர்ப்பு என்பனவற்றை உள்ளடக்கிய வகையில் தொழில்நுட்ப போதாத் தன்மைகளில் இருந்து வேறுபட்டு நிற்கின்றது. சட்ட உத்தியோகத்தர்கள் தலைமையிலான ஒரு சட்ட அலகினை கொண்டுள்ள கிழக்கு மாகாண சபை அது எவ்வித தொழில்நுட்பக் கடினங்களையும் கொண்டிருக்கவில்லை என்ற திருப்தியில் உள்ளது. ஆனால் ஆளுநரிடம் இருந்து கிடைக்கும் ஒத்துழைப்பு இன்மை பற்றி முறையிடுகின்றது. அங்குள்ள சட்டவாக்க வழிமுறை அனைத்து சட்டங்களும் சபையில் சமர்ப்பிக்கப்படும் முன்னர்கூட ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என வேண்டுகிறது. இவ் ஆரம்ப கட்டங்களின்போது, ஆளுநர் அது மேற்கொண்டு முன்செல்வதைத் தடுக்க முடியும் அல்லது தாமதங்கள் அல்லது நிராகரிப்புக்கு இட்டுச் செல்லும் சட்ட மா அதிபரின் அவதானங்களுக்கு அனுப்பி வைக்க முடியும். அதன் விளைவாக, ஆளுநருக்கு சமர்பிப்பதற்காக நிலுவையில் உள்ள சுற்றுலாத்துறை, சட்டம், ஒழுங்கு, திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான நகல் சட்டங்கள் நிறைவேறும் வாய்ப்புக்கள்

தொடர்பில் கவலை நிலவுகிறது. வடமத்திய மாகாண சபை நஞ்சு அல்லாத மதுபானத்தின் உடமை, போக்குவரத்து, கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பான ஒரு சட்டத்தை (மாகாண பட்டியலில் உள்ள விடயம் 23) அறிமுகம் செய்வதை அது அரசாங்கத்தின் வருவாயைப் பாதிக்கும் என்ற அடிப்படையில் தேசிய அரசியல் தலமைத்துவத்தினால் உற்சாகமிழக்கச் செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. மாகாண வருவாயின் முக்கிய ஆதாரங்களில் ஒன்றான வர்த்தகப் புரழ்வு வரி வீதத்தை 05% ஆக அதிகரிக்க முதலமைச்சர்களின் மாநாட்டினால் ஏகமனதாக அங்கீகரிக்கபட்ட முன்மொழிவு தேசிய அரசியல்த் தலைமையிடம் இருந்துவந்த அழுத்தத்தின் காரணமாக கைவிடப்பட வேண்டி ஏற்பட்டது. உண்மையில், இது விரைவில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் மத்தியில் உள்ள ஆளும் கட்சியின் வெற்றி வாய்ப்புகளை அத்தகைய அதிகரிப்பு பாதிக்கும் என்ற காரணத்தினால் இடம்பெற்றது.

மாகாண மட்டத்தில் அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் மாகாண சபைகளின் சட்டவாக்கத்தைப் பலப்படுத்த வேண்டியதன் தேவையை அறிந்திருக்கின்றமையால், சட்டவாக்கம் செய்யத் தேவையான தொழில்நுட்ப மற்றும் ஏனைய வசதிகளில் ஆர்வங் கொண்டுள்ளனர். அடுத்தடுத்து முதலமைச்சர்களின் மாநாட்டின் அறிக்கைகள் தமது அதிகாரத்தை எடுத்துரைக்கும் பொருட்டு சட்டங்களை ஆக்க வேண்டிய அடிப்படைகள் கொண்ட குறிப்புக்களைக் கொண்டுள்ளது. முதலாவது முதலமைச்சர்கள் மாநாடு ஒத்தியங்கு பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர்பில் சட்டங்களை ஆக்கும் தீர்மானம் ஒன்றை அங்கீகரித்தது.[18] நான்காவது முதலமைச்சர்கள் மாநாட்டில், அது கால் வரை சட்டங்கள் இயற்றப்பட்டிராத அனைத்து விடயங்கள் குறித்து சட்டங்களை ஆக்கும் ஏகோபித்த தீர்மானம் ஒன்று எட்டப்பட்டிருந்நது.[19] 2003 நவம்பர் 23ஆம் திகதி இடம்பெற்ற 11ஆவது முதலமைச்சர்கள் மாநாடு சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பில் சட்டங்களை வரையவும் உடன்பட்டனர். நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இவ் அனைத்துத் தீர்மானங்களும் இருப்பினும், 1990களின் பிற்பகுதியில் இருந்து சட்டவாக்க செயற்பாடு மனதைத் தொடும் வகையில் இடம்பெறவில்லை.

சட்டவாக்கம் செய்வதில் எதிர்கொள்ளப்படும் நடைமுறைச் சிக்கல்கள் மாகாண சட்டமியற்றுனர்களைச் சோர்வடையச் செய்வதில் பங்களிப்புச் செய்தது என்பது சர்சைக்குட்படாத ஒன்றாக உள்ளது. ஆனால், அவை நடைமுறைக்கு வந்ததுமுதல் சில வருடங்கள் சட்டங்கள் ஆக்குவதிலும் அதேபோன்று தமக்கு வழங்கப்பட்ட, வரையறுக்கப்பட்ட அதிகாரத்தை அமுல்படுத்தவதிலும் மிகுந்த வளம் மிக்கவை என்பதையும் மாகாண சபைகள் வெளிப்படுத்திநின்றன. மாகாண மட்டத்தில் வருவாயைத் திரட்டுதல் மற்றும் அடிப்படைச் சேவை வழங்களை ஏற்பாடு செய்தல் போன்ற அதிகாரப் பகிர்வு முறையினை நடைமுறைப்படுத்த அத்தியாவசியமான சட்டங்கள் மிக விரைவாக ஏற்படுத்தப்பட்டன. அதனுடன்

---

[18] Minutes of the First Chief Ministers' Conference held on 5th February 2000. (mimeo.).

[19] Minutes of the Fourth Chief Ministers' Conference held on 2nd December 2000. (mimeo.).

இணைந்து ஏற்கனவே குறிப்பிட்ட சில துறைகளில் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட ஆக்கபூர்வமான தொடக்க முயற்சிகளும் உள்ளன. அப்போது மாகாண சபைகளுக்குக் கிடைக்கக்கூடியதாக இருந்த வசதிகள் மிகக் குறைவு என்பதுடன், சவால்கள் மிகப் பெரியவை. அதிகாரப் பகிர்வினை நடைமுறைப்படுத்துவதற்கான அடித்தளத்தை இட்ட ஆரம்ப மாகாண சபைகள் காட்டிய ஆர்வம் 1990களில் நடுப்பகுதியில் இல்லாமல் போனதாகத் தோன்றுகிறது. இவ்வாய்வில் ஏனைய அத்தியாயங்களில் கலந்துரையாடப்படுவது போன்று பெரும்பாலும் மாகாண அதிகாரத்தை முழுமையாக யதார்த்தமாக்குவதில் தடையாக இருக்கும். சட்ட நீதி, நிர்வாக மற்றும் ஏனைய நடைமுறைக் கட்டுப்பாடுகள் முன்னோடி மாகாண சபைத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் கொண்டிருந்த ஆர்வத்திற்கு முட்டுக் கட்டை போடுகின்றது. புதிய மாகாண சட்டங்கள் இன்மையால் ஏற்பட்ட வெற்றிடம் மாகாண சபைகள் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி நிரப்பப்பட்டது[20] (பெறுபேற்று ஏற்பாடுகள்) . இச் சட்டம் சட்டவாக்கம் இன்னமும் உரிய வடிவத்தை பெற்றிராதபோது, அவை செயற்பாட்டுக்கு வந்த ஆரம்ப கட்டத்தில் நடைமுறையில் இருக்கும் மத்திய அரசாங்க சட்டங்களைப் பயன்படுத்தி பணிகளை மேற்கொண்டு நடாத்த மாகாண சபைகளுக்கு வழிசமைக்கும் ஒரு நடைமுறை ஏற்பாடாக அறிமுகஞ் செய்யப்பட்டது. உண்மையில், ஒரு இடைக்கால ஏற்பாடாக இருக்கும் எனக் கருதப்பட்ட வழிமுறை, இப்போது நிரந்தரமானதாக மாறியுள்ளது என்பதுடன் மாகாண சபைகளுக்கு தமது சொந்த சட்டங்களை ஆக்கும் பொறுப்பிலிருந்து தவிர்ந்திருக்கவும் வழி ஏற்படுத்தியுள்ளது. மேலும், புதிய சட்டங்களை ஆக்குவதில் மாகாண சபைகள் எதிர்கொள்ளும் சிக்கல் மிகு போக்கு நாட்டின் கட்சி அரசியல் இயக்கங்களின் யதார்த்தத்துடன் இணைந்ததாகக் காணப்படுகின்றது. மத்தியிலும் அதேபோன்று மாகாணங்களிலும் ஒரே கட்சி அதிகாரத்தில் இருக்கும்போது, மாகாணத் தலைமை பின்வாங்க முயற்சிப்பதுடன் வெறுமனே ஏற்கனவே உள்ள சட்டங்களை முன்னெடுக்கின்ற வகையாகவும் உள்ளன. இது மாகாண சபைகளின் சட்டத்தினால் மிகவும் சட்டபூர்வமிக்கதொன்றாக்கப்பட்டுள்ளது. (பெறுபேற்று அடிப்படையிலான ஏற்பாடுகள்) 1990களின் நடுப்பகுதி தொடக்கம் இலங்கையில் மத்தியிலும் அதேபோன்று அனைத்து மாகாணங்களிலும் ஒரே கட்சி கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதன் உண்மை நிலை, குறைந்தது பகுதியளவேனும், மாகாண சபைகளின் சட்டமியற்றும் செயற்பாட்டின் போதாத் தன்மையை விளக்கி நிற்கிறது.

[20]Provincial Councils (Consequential Provisions) Act, No.12, 1989. Under the terms of this Act, the Provincial Governor or the Minister became entitled to "make declarations, orders or rules' on all laws made before 14th November 1987 on subjects given in List I of the Ninth Schedule within a province.

அத்தியாயம் - 05

நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கல்: நடைமுறைப்படுத்தல்ப் பிரச்சினைகள்

அசோக குணவர்த்தன

5.1 அறிமுகவுரை - ஆட்சிச் சூழல்

1988ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசு ஷஷபொதுச்சேவைகள்'' வழங்குவதற்கான நிறைவேற்றுப் பொறுப்பை அதிகாரப் பரவலாக்கல்மூலம் மாகாண சபைகளுக்கு ஒப்படைத்தது. இவ்வாறு ஒரு உபதேசிய ஏற்பாடு நிலைநிறுத்தப்பட்டதுடன், அது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய தர நிர்ணயத்துக்கு அமைவானதாகவும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட உள்ளூர்த் தேவைகளை, இலக்குகளை இனங்காண்பதாகவும், அத்தேவைகளுக்குப் பொருத்தமாக முகங்கொடுக்கத்தக்கவாறு அதற்கென வரையறுக்கப்பட்ட உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான சேவைகளை வழங்குவதற்கானதாகவும் அமைந்தது. பொதுச் சேவைகள் வழங்கப்படும் முறைமையிலிருந்து முற்றிவும் வேறுபட்டதாக இம் முறைமை விளங்கியதோடு, இதுவரை காலமும் தேசிய ரீதியில் வரைவிலக்கணப்பட்டதும் துறைசார் ரீதியில் அமைந்ததும் மத்திய அரசுக்குப் பொறுப்புக்கூறல் கொண்டதும் (accountability) உள்ளூர் மட்ட முகவர்களால் செயற்படுத்தப்படுவதுமான தன்மையிலிருந்தும் குறிப்பிடத்தக்க வகையில் முற்றாக வேறுபட்டது.

இவ்வதிகாரப் பரவலாக்கலின் நிதித்துறைசார் அம்சங்கள் மாகாணங்களுக்கு மாற்றப்பட்டுள்ள விடயங்களோடும் தொழிற்பாடுகளோடும் தொடர்புடைய செலவீனப் பொறுப்புகளை மேற்கொள்வதற்கான வருமான ஒதுக்கீடு சம்பந்தமானதாகும். நிதித்துறைசார் அம்சங்கள் இறைவரி அதிகாரங்கள்மூலம் பெறப்படத்தக்க வளங்களில் காணப்படும் சமமற்ற தளம்பல் தன்மையையும், செலவுகளுக்கான பொறுப்புகளையும் எதிர்கொள்ளத்தக்க வகையில் ஏற்படுத்தப்பட்ட வழமையான முறைமையான நாடுகளுக்கிடையிலான மாற்றல்களாகும். மாகாண சபைகள் செலவுகளை மேற்கொள்ளும் அதிகாரமுடையனவாகவும், வருமானம் சேகரித்தல், நிதிமாற்றல்களை வழங்கல் தொடர்ந்து வரும் செலவினங்களை மேற்கொள்ளல் போன்ற நிர்வாகப் (செலவினப்) பொறுப்புகளை மேற்கொள்ளும் வகையில் நிறுவப்பட்டுள்ளன. இந்த சீர்திருத்தங்கள், பொதுநிதிச் செயற்பாடுகளில் ஒரு மாகாணப் படிமுறை நிலையை ஏற்படுத்தியுள்ளன. நிதித்துறைசார் அதிகாரப்பரவலாக்கல் மூலம் நிதிசார் ஒழுங்குமுறைமையின் பிரதான அம்சங்கள்

(அ). 13வது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் செலவீடு செய்வதற்கான பொறுப்புகளையும் வருமானமீட்டும் வளங்களையும் மாகாணங்களுக்கு ஒப்படைத்தல்.

(ஆ). வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து மாகாணங்களின் தேவைகளுக்கான நிதியை ஒதுக்கீடு செய்தல். அரசாங்கமானது மாகாணங்கள் தமது தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு உபயோகப்படுத்தவதற்கான போதியளவு நிதியை வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதை அரசியல் யாப்பு உறுதிப்படுத்துகிறது.

(இ). பாராளுமன்றத்தில் விதிக்கப்பட்ட எல்லைக்கேற்ப கடன்பெறுதல்.

நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கலின் சிறந்த அது எவ்வாறு பல்வேறுபட்ட பிராந்தியங்களில், பல்வேறுபட்ட சமூகங்களிடையே ஏற்படும் பல்வேறு வகையான தேவைகளைத் திறமையாக எதிர்கோள்ளும் ஆற்றலைப் பெற்றுள்ளது என்பதில் தங்கியுள்ளது. பொருத்தமான மட்டங்களில் தீர்மானம் எடுக்கும் வலுவோடும் பொதுச் சேவைகளை வழங்குவதில் பொறுப்பேற்கும் தன்மையோடும் பொருந்தக்கூடியவாறான பொதுத் தொழிற்பாடுகள் கொண்ட நிதித்துறைசார் அம்சங்களை உள்ளடக்கியதாக அதிகாரப் பரவலாக்க உட்கட்டமைப்பு விளங்குகிறது. எனவே, அதிகாரப் பரவலாக்கல் என்பது மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட பொதுச் சேவை விநியோக முறையை ஆட்சிப் பொறிமுறைமூலம் வழங்குகிறது.

அதிகாரப்பரவலாக்கலுக்கான உட்கட்டமைப்பின் விளக்கம் மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட மாகாணங்கள் சம்பந்தப்பட்ட மட்டிலும் இறுக்கமானதாகவும் சிரமமானதாகவுமே உள்ளது. ஏற்கனவே, மத்தியப்படுத்தப்பட்ட அரசின் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் நிறுவன ரீதியான ஒழுங்குமுறையின் கீழும் பிரயோகப்படுத்தப்படாத சேவை விநியோகம் மீதும் திணிக்கப்பட்டதுமான ஒரு உட்கட்டமைப்பாகவே அதிகாரப் பரவலாக்கலைக் கருதலாம். எனவே, இலங்கையில் ஒரு அடிப்படையான மீள் ஒழுங்கு முறையைப் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் முறைமை எதிர்பார்த்த விளைவுகளை அளிக்கத் தவறியது மாத்திரமின்றி மக்களுக்கான சேவைகளை விநியோகம் செய்வதிலும் உண்டான தொடர்புகளில் மீள் ஒழுங்குமுறை ஏற்படவும் வழிவகுத்தது.

இவ்வாறு ஒரு உபதேசிய ஆட்சி முறைமை தோற்றுவிக்கப்பட்டது, உண்மையிலேயே மாவட்ட நிர்வாக ஆட்சி முறைமையின்மீது புதிதாகத் திணிக்கப்பட்டது மாகாண ஆட்சி உட்கட்டமைப்பாகும். இதன் விளைவாக, அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்டதும் உறுதிப்பாடற்ற தன்மையுடையதுமான ஆட்சி முறைமையில் இரட்டைத் தன்மையை உண்டுபடுத்தியதுடன் அபிவிருத்தி முகாமைத்துவம் சார்ந்த வகையில் ஒன்றிலொன்று தங்கியிருக்க வேண்டிய நிலையையும் உருவாக்கியது. அதேசமயம் தம்முடைய ஆட்சி வகிபாகத்திலும்

(roles) தொடர்புகளிலும் சுதந்திரமாகத் தொழிற்படவும் செய்தது. இவ்வாறு மாகாணங்களுக்கான சேவைகள் விநியோகங்களுக்கான நிதி வழங்கல் பொறுப்பு, பொதுச்சேவைகள் வழங்கலில் ஏற்படும் இரட்டைத் தன்மை கொண்ட ஒழுங்குகளையுடைய உட்கட்டமைப்பின்கீழ் அமைகிறது. இத்தகைய இரட்டைத்தன்மை அரசாங்கங்களுக்கிடையிலான சேவை விநியோகப் பொறுப்பு ஒப்படைப்புகளைப் பல்மட்ட முறைமையின்கீழ் அர்த்தமற்றதாக்குகிறது. எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது, இந்த அடிப்படையிலேயேதான் அரசாங்கங்களிடையே நிதித்துறைசார் அதிகாரப்பரவலாக்கல் உருவாக்கம் பெற்றுத் தொழிற்படவும் செய்கின்றது.

அதிகாரப் பரவலாக்கலைச் சீராக்குவதில் ஏற்படும் குறைபாடுகள் ஒரு திறமை குறைந்த பொதுத்துறையில் இரட்டைத்தன்மையைத் தோற்றுவித்துள்ளதுடன் முழுமையான தன்மைகளுக்கு விரோதமான வகையில் செயற்படுகின்றது. அதாவது, அதிகாரப்பரவலாக்கல்மூலம் எய்தப்படக்கூடிய சிறந்த வளங்களின் முகாமைத்துவத்தையும் சேவைகளின் இலக்குகளை அடையமுடியாத நிலையையும் உருவாக்கியுள்ளது. பிராந்தியங்களிடையே காணப்படும் மானிட அபிவிருத்திச் சமமற்ற நிலைமை, அதிகாரப் பரவலாக்கல் சேவை வழங்கலின் அபிவிருத்திசார் முக்கியத்துவத்தை குறை மதிப்பிடுகின்றது. அதிகாரப் பரவலாக்கலுக்குட்பட்ட வழங்கலுக்கான நிதியிடலின் உட்கட்டமைப்பில் நிறுவனங்களின் கொள்திறனில் அல்லது ஆற்றலில் காணப்படும் இடைவெளிகள் பிராந்திய அபிவிருத்தி விளைவுகளைப் பெறுவதிலான எதிர்பார்ப்பின் அளவை மட்டுப்படுத்தியுள்ளதோடு அதிகாரப் பரவலாக்கல் ஆட்சிமுறைத் தொழிற்பாட்டையும் மட்டுப்படுத்தி உள்ளது.

அதிகாரப் பரவலாக்கல் சேவைகள் தனித்து இடம்பெறுவதில்லை. மத்திய அரசு, மாகாணங்கள், உள்ளூராட்சி சேவை வழங்கல் சம்பந்தமாக சட்டம் வரையறை செய்தாலும் நடைமுறைப் பிரயோகத்தில் இந்த வழங்குனர்கள் துறைசார்ரீதியாகவும் இடஅமைவு ரீதியாகவும் ஒன்றித்துச் செயற்படுகின்றனர். இந்நிலமை, பல் மட்ட வாயிலான விநியோக முறைகளை விளைவித்ததோடு நிதியிடலையும் பாதித்தது. இந்நிலைமையை மேலும் குழப்புவதாக, தானம் வழங்குவோர் நிதியிடல் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களும் அமைந்தன. எனவே யார் எத்தகைய வெளியீட்டுக்கும் விளைவுகளுக்கும் பொறுப்பானவர் என்ற தெளிவற்ற தன்மை கொண்ட வரைவிலக்கணத்தின் பெறுபேறுகள் சேவை வழங்கலால் பொறுப்புக்கூறல பலங்குறைந்துள்ளது. இதன் விளைவாக, அரசாங்கத்தின் பல்மட்டங்களில் அமைந்த சேவை வழங்கல் உட்கட்டமைப்பு மாகாணங்களின் பொறுப்புக் கூறும் அளவை (மாகாணங்களின் தேவைகள்) வேண்டுமென்றேயல்லாமல் தவறாகக் வரையறுத்துள்ளது.

விதப்புரைகள்

1. மத்திய அரசு, மாகாணங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் மட்டங்கள் சார்ந்த பல்வேறு மட்டமுறைகளில் சேவை விநியோகப் பொறுப்புக்களைத் தெளிவுபடுத்தல் வேண்டும்.

2. தேசிய சேவை, விநியோகத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு மத்திய அரசின் நிதி வழங்கள் அவசியமெனக் கருதப்படுமிடத்து அத்தகைய நிதியை மாகாணங்கள் அல்லது உள்ளூராட்சி மட்டங்களினூடாக எது பொருத்தமானதோ அதன் வழியாக வழங்கல் வேண்டும்.

3. உபமட்ட சேவை ஒப்படைப்புக் கோட்பாட்டுக்கமைவாக விநியோகத் தொழிற்பாடுகளை உபதேசிய மட்டத்தில் மாகாணசபைகளும் உள்ளூராட்சி அதிகாரசபைகளும் மிகத்திறமையாக ஒழுங்குபடுத்தமுடியும்.

5.2 13வது திருத்தத்தின்கீழ் அரசாங்கங்களுக்கிடையேயான நிதித்துறைசார் உட்கட்டமைப்பு: வடிவமைப்புப் பிரச்சினைகள்

பொதுச்சேவைகள் வழங்குவதற்கான அதிகாரப் பரவலாக்கல் உட்கட்டமைப்பு அதனோடு தொடர்புடைய சட்ட முறைமைகளான வரைபுமூலம் மாகாணங்களின் செலவுப் பொறுப்புகளையும் வருமானமீட்டும் அதிகாரங்களையும் வரையறை செய்கிறது. மாகாணங்களுக்கிடையே ஒரு சமத்துவமான பொதுச் சேவை வழங்கலை உறுதிப்படுத்த முன்னெடுக்கப்படும் நிதிவழங்கல் உபாயங்கள் மாகாணங்களின் - காத்திரமான அதிகாரப் பிரயோகத்தின்மூலமும் சேவைகள் வழங்கல்மூலமும் ஏற்படுத்தப்படுகின்ற திறமையான செயலாற்றலையும் தீர்மானிக்கிறது. நிதித்துறைசார் உட்கட்டமைப்பு அதிகாரப் பரவலாக்கலில் ஒட்டு மொத்தமான நிலைமையின்கீழ் இயங்குவதுடன் அது எவ்வாறு மாகாணங்கள் தொடர்பிலான செயலாற்றத்தை அர்த்தமுள்ள வகிபாகத்தினூடாக உள்ளூர்த் தேவைகளுக்கு முகம்கொடுக்கிறது என்பதினாலும் தீர்மானிக்கப்படுகிறது.

5.2.1 செலவுகளுக்கான ஒப்படைப்பு

13வது திருத்தின் கீழும் பொதுப் பட்டியலடிப்படையிலும் மாகாணங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்களும் தொழிற்பாடுகளும் அவற்றின் சேவை வழங்கல் ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளன. அதன் பலனாக பின்வரும் மாகாண சபைகளுக்கான செலவுப் பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மாகாணங்களுக்கான சேவை வழங்கல் பொறுப்புகள்

1. பொது ஒழுங்கு	பொலிஸ் மற்றும் பொது ஒழுங்கு
2. மாகாண நிர்வாகம்	மாகாணப் பொதுச்சேவை, உள்ளூராட்சி மன்றங்கள்
3. மாகாணத் திட்டமிடல்	மாகாண ரீதியான பொருளாதாரத் திட்டங்களை வகுத்தலும் ∴ திட்டமிடலும் அமுலாக்கலும், முன்னேற்றம் குறித்த முகாமைத்துவம் ∴ கட்டுப்பாடு கண்காணிப்பும் மேற்பார்வையும், மீளாய்வு செய்தலும் ∴ மதிப்பிடலும், தகவல்களும் தரவுகளும்.
4. மாகாணங்களின் நிதி	வகுக்கப்பட்ட வரிகள், ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் மீதான கட்டணங்கள், பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட அளவிலான கடன் பெறுகை மாகாணக் கடன் படுகை.
5. பொருளாதார சேவைகள்	விவசாயமும், கமநல சேவைகளும், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி (எல்லை வகுக்கப்பட்ட நீர்ப்பரப்பு) காணி தொழில் அபிவிருத்தி, மாகாணங்களுக்கான வீதிகள், தேசிய மின் உற்பத்தித் தேவைகளுக்கு வழங்குவதற்கான நீர் தவிர்ந்த மின்சாரம், கைத்தொழில்கள், அனுமதியளிக்கப்பட்ட அளவு சுரங்கமும் கனியவள அபிவிருத்தியும், மாகாணத் தொழில் முயற்சிகள், மாகாணச் சுற்றுலா, வர்த்தகமும் வாணிபமும் மாகாணத்துள் உணவு விநியோகம் நுகர்வோர் பாதுகாப்பும் விலைக் கட்டுப்பாடும், கூட்டுறவுச் சந்தைகளும் விற்பனை நிலையங்களும் கிராமிய அபிவிருத்தி.
6. மனிதவள அபிவிருத்தி	குறிப்பிடப்பட்ட எல்லையுள் கல்வியும் கல்விச் சேவைகளும், சுகாதார அபிவருத்திசார் திட்டம், மாகாணத்தின் வருடாந்த சுகாதாரத் திட்டம் என்பவற்றை உள்ளடக்கிய சுகாதாரம், பொது வைத்தியசாலைகள், கிராமிய வைத்தியசாலைகள் மகப்பேற்று மருத்துவமனைகளும் மருந்தகங்களும், பொது சுகாதார சேவைகள், சுகாதாரக் கல்வி, போ!ாக்கு, மகப்பேற்று மருத்துவமும் குழந்தைகள் நலமும் பாதுகாப்பும், உணவும், சூழல் சுத்தமும், சூழல் சுகாதாரமும், சுதேச வைத்தியம், தொழில் வாய்ப்பு, தொழில் வாய்ப்புத் திட்டமிடல் மனிதவலுத் திட்டமிடல்.
7. சமூகப் பாதுகாப்பு	சமூக சேவையும் மீள் குடியேற்றமும், புகலிடமற்றோர்க்கான மீள்குடியேற்றம், உடல் ரீதியாக, உளரீதியாக, சமூக ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஊனமுற்றோருக்கான மீள் குடியேற்றமும் சமூகநலனும், சிறுவர் பராமரிப்பும் பாதுகாப்பும், வலது குறைந்தோர்க்கான, வேலைவாய்ப்பில்லாததோர்க்கான நிவாரணம்.
8. சிறைச்சாலைகள்	சீர்திருத்தப் பள்ளிகளும் சிறைச்சாலைகளும்.
9. நகர அபிவிருத்தி, வீடமைப்பு	சமூக நலன் பேணல், மாகாண வீடமைப்பு, வாடி வீடுகளும் பங்களாக்களும், புதைத்தலும், புதைகுழி இடங்களும் சவச்சாலைகள், தகனமும் தகனச்சாலைகளும் சவச்சாலைகள்

10. சூழல்	நகரங்கட்கும் கிராமங்கட்கும் மீள்பெயரிடுதல். அனுமதிக்கப்பட்ட எல்லை அளவில் சுற்றாடல் பாதுகாப்பு, சமூகக் காடமைப்பு ∴ வன அபிவிருத்தி.
11. பொழுதுபோக்கு, கலாசாரம், சமயம் விளையாட்டு,	படமாளிகைகளும் நாடக செயற்பாடுகளும் ∴ பண்டைய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததெனப் பிரகடனப்படுத்தப்படாத புதைபொருளாராய்ச்சி மையங்கள் நூலகங்களும் நூதனசாலைகளும்.
12. மாகாணங்களின் செயற்பாடுகள்	பற்றிய ஒழுங்கு விதிகள் கூட்டுத்தாபன ஒழுங்கு விதிகள், கூட்டிணைக்கப்படாத தொழிற்பாடுகள்.

இவ்வாறு மாகாணங்களுக்குரிய வரிசையான சேவை வழங்கல் பொறுப்புகள் விரிவாகவும் தெளிவாக விளங்கும் வகையிலும் எழுத்தில் மாகாணங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால், நடைமுறையில் இவ்வாறு இல்லை. விரிவான அளவில் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்ட செலவுப் பொறுப்புக்கள் தோற்றத்தில் அதிகமாகக் காணப்பட்டபோதும், யாப்பின்மூலம் அளிக்கப்பட்ட மத்திய அரசின் அதிகாரங்கள், மாகாணசபைகளின் திறமையைப் பொறுத்து சில பரப்புக்களில் தலையிடுவதற்கு அனுமதி வழங்குவதால் நடைமுறையில் மாகாணச் செலவுப் பொறுப்புக்கள் கடுமையாக மடடுப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு தேசிய கொள்கை தனியான ஓர் விடயமாகக் கருதப்படுவதும், எவ்வாறு சமகாலத்திலான அதிகாரங்களைப் பிரயோகப்படுத்த வேண்டுமென்ற அணுகுமுறையில் தீர்மானமெடுப்பதும், மாகாணங்களுக்கான அதிகாரங்களை வகிப்பதில் ஆரம்பகால நீதித்துறைசார் விளக்கங்களின் மூன்று பட்டியல்கள் அடிப்படையில் கருதப்படுவதும் ஆகிய எல்லா விடயங்களும் மாகாணங்களின் சேவை வழங்கல் திறமைசார்ந்த பரப்புகளில் ஆக்ககூடிய மத்திய பிரசன்னத்தை ஏற்படுத்தி உள்ளதை அவதானிக்கலாம்.

மேலும், மாகாண சேவைகள் தனியாகச் செயற்படுத்தப்படுவதில்லை. அரசியல் யாப்பானது மத்திய அரசினதும் மாகாணங்களினதும் உள்ளூராட்சி மன்றங்களினதும் சேவை வழங்கல் பரப்பளவை வரைவிலக்கணப்படுத்தியபோதும், இந்த வழங்குனர்கள் நடைமுறையில் சமகாலத்தில் துறைசார் ரீதியாகவும் இட அமைவு ரீதியாகவும் செயற்படுகின்றனர். அவர்களுக்கான நிதியீட்டம் தனித்தனியாக மத்திய அரசாங்கத்தினதும் மாகாண சபைகளினதும் வரவு செலவுத் திட்டம்மூலமே வழங்கப்படுகிறது. எனவே, சேவைகள் விநியோகம் துண்டு துண்டாகப் பிரிக்கப்படுவதுடன் நிதியிடலும் அவ்வாறே இடம் பெறுகிறது. தானம் வழங்குவோரால் நிதி அளிக்கப்பெறும் நிகழ்ச்சித் திட்டங்கள் மேலும் குழப்ப நிலையை அதிகரிக்கின்றன. ஆகவே, யார் எதற்குப் பொறுப்பாயுள்ளார்கள், எந்த வகையில் வெளியீடுகளுக்கும், விளைவுகளுக்கும் எப்படிப் பொறுப்பாயுள்ளார்கள் என்ற தெளிவற்ற குறைபாடுடைய தன்மை இவ்

வரைவிலக்கணத்தில் காணப்படுகிறது. ஆயினும், நிதித்துறைசார் அதிகாரப்பரவலாக்க முறைமையின்கீழ் பொறுப்புகளின் எல்லைகள் மிகத்தெளிவாக வகுக்கப்பட்டுள்ளது.

5.2.2 வருமானங்களின் ஒப்படைப்பு

மத்திய அரசின் மேலாதிக்கத்தைக் குறைக்கும் அதிகாரப் பரவலாக்கல் முறைமை பொதுச் செலவீட்டு அதிகாரங்கள், மாகாணங்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துவதோடு அச்செலவுகள் தேவைகளை நிறைவேற்றும் வகையில், போதியளவு பொருத்தமான நிதி கிடைக்கவேண்டுமென்பதையும் விளக்குகிறது.

மாகாணங்களுக்கான வரிவருமானம்

வரிகள்	
1. வரிகள்	36.1 மொத்த சில்லறை வர்த்தக புரள்வு வரி 36.2 பந்தய வரிகள் 36.5 போதைப் பொருட்கள், ஏனைய இரசாயனப் பொருட்கள் மீதான விற்பனை முகவர் அனுமதி வரிகள். 36.17. சட்டரீதியாக மட்டுப்படுத்தப்பட்ட அரச சொத்தினை உள்ளடக்கிய நிலங்கள் கட்டிடங்கள் மீதான விரிகள். 36.18 சட்டப்பிரகாரம் விலக்களிக்கப்பட்டதும் மட்டுப்படுத்தப்பட்ட எல்லைக்குட்பட்டதுமான கனியவள உரிமைகள் மீதான வரிகள். 36.20 சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட அளவு எல்லையுள் மாகாணத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மாகாணத்துக்குள்ளே கையாளப்படும் ஏனைய வரிவிதிப்பு.
2. கட்டணம்	36.6 முத்திரை வரி.
3. கட்டணங்களும் அறவீடுகளும் விதிப்பனவுகளும்	36.3 கள்ளிறக்கல் அனுமதிக் கட்டணம் மற்றும் மதுசார வகை அனுமதிக் கட்டணம். 36.4 சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறு விலக்களிக்கப்பட்டதும் குறிப்பிடப்பட்ட எல்லைக்குட்பட்டதுமான மோட்டார் வாகன அனுமதிக் கட்டணம். 36.8 நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் தண்டப்பணம் 36.9 வைத்திய கட்டளைச் சட்டத்தின் அறவிடப்படும் கட்டணங்கள். 36.10 மோட்டார் வாகனப் போக்குவரத்தின்கீழ் அறவிடப்படும் கட்டணம். 36.11 முதலாவது பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமான திணைக்களக் கட்டணங்கள்.

	36.12 பறவைகள் பூக்கள் பாதுகாப்புக் கட்டளைக்கீழ் அமையும் கட்டணங்கள். 36.13 காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்கீழும் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் விலக்கப்பட்ட காணிகள் மீதான கட்டணங்கள். 36.14 நீதிமன்றக் கட்டணங்களும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படும் ஆவணங்கள் மீதான முத்திரைக் கட்டணங்களும். 36.15 நிறைகளும் அளவுகளும், கட்டளைச் சட்டத்தின்கீழ் அறவிடப்படும் ஒழுங்கு விதிசார்ந்த விதிப்பனவுகள். 36.16 வரிவருமான நோக்கத்துக்காகப் பராமரிக்கப்படும் நில அளவையும் காணிப்பதிவேடுகளும், வருமானவரி சேகரித்தலையும் மதிப்பீடு செய்தலையும் உள்ளடக்கிய காணி வருமானங்கள். 36.19 போதையூட்டும் குடிபானவகைகளின் இருப்பு, ஏற்றியிறக்கல், கொள்வனவு, விற்பனவு மீதான அனுமதிக் கட்டணம்.
4. வரியல்லாதவை வாடகை	36.3 சராயம், கள்மீதான வாடகை.

மாகாணங்களின் வரி அடிப்படையிலேயே தவறானது. இதில் குறிப்பிடத்தக்க விடயமென்ன வென்றால், போதியளவு வலு நிறைந்த மொத்தச் சில்லறை வர்த்தகம் மீதெழும் புரள்வு வரி, மோட்டார் வாகன அனுமதிகள், கனியவளம் போன்றவை மீதான வரிகள் போன்றவை மட்டுப்படுத்தப்படுவதும், விலக்களிக்கப்படுவதுமான வரையறை பாராளுமன்றத்தில் இயற்றப்படும் சட்டத்தின் வாயிலாகவே திகழ்கின்றன. மேலும், அரச சொத்துக்கள் உள்ளிட்ட காணி, கட்டிடங்கள், வேறு ஏதாவது வரிகள்கூட மாகாணத்தின் தேவைகளுக்கான வருமானத்தைக் கூட்டும் நோக்குடன் மாகாணத்துள்ளே விதிக்கப்பட வேண்டி இருந்தபோதுங்கூட, அவை பாராளுமன்றத்தின் அனுமதிக்கப்பட்ட அளவுள்ளேயே செயற்பட முடியும். எனவே, பாராளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் யாப்பின்மூலம் ஒப்படைக்கப்பட்ட இறைவரி அதிகாரங்களை மாகாணங்கள் பிரயோகிக்க முடியாது. அதேசமயம், புதிய வருமானமீட்டும் வழிவகைகளையும் அவை அறிமுகப்படுத்த முடியாது.

5.2.3 வளங்களின் மாற்றல்கள்: மாகாண நிதி அமைப்பில் காணப்படும் சமமின்மையை எதிர்கொள்ளுதல்.

அதிகாரப் பரவலாக்கலுக்கான நிதித்துறைசார் உட்கட்டமைப்பின் வடிவமானது இறைவரிக்கும், செலவீனத்துக்குமிடையே ஒரு பாரிய இடைவெளியை வருமானப் பெறுகை ஆற்றல் சம்பந்தமான வகையில் ஏற்படுத்துகிறது. ஏற்கனவே குறிப்பிட்டவாறு அரசியல் யாப்பானது வருடாந்த வரவு - செலவுத் திட்டத்திலிருந்து மாகாணங்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கென நிதி ஒதுக்கீடுகளை உறுதிப்படுத்துகிறது. துண்டு விடும் இடைவெளிக்கான நிதி வளங்களின் மாற்றல்கள் வருடந்தோறும் மத்திய அரசின்

வரவு - செலவுத் திட்டத்தினூடாக மத்தியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது. நிதித்துறைசார் மாற்றல்கள் வருமானத்தைப் பகிர்ந்து கொள்வதற்கோ அல்லது கொடைகளைச் சமப்படுத்துவதற்கோ இடமளிக்காதது மாத்திரல்ல, மாகாணங்கள் மத்திய அரசாங்கத்தின்மீது தங்கியிருக்க வேண்டிய சூழலையும் அதன் வாயிலாக மத்திய அரசின் நிதிசார் கட்டுப்பாட்டையும் உருவாக்கி உள்ளது.

மாகாணங்களுக்கான நிதி மாற்றல்கள்

1. மொத்தக் கொடை	மாகாணங்களின் தேவைகளுக்கேற்ப மதிப்பீடு செய்யப்பட்ட மீண்டுவரும் செலவீனங்களை ஈடுசெய்ய வழங்கப்படும் மொத்தமான அல்லது கட்டம் கட்டமான நிபந்தனையற்ற மாற்றல்களாகும். குறிப்பிடப்பட்ட நிதி ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட மீண்டுவரும் செலவினங்களுக்கும் எய்தப்படக்கூடிய இலக்குக்குமிடையேயுள்ள இடைவெளிகளை அடிப்படையாகக் கொண்டு தேவை கணிப்பிடப்படுகிறது.
2. குறிப்பிட்ட செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கொடைகள்	மாகாணங்களின் அபிவிருத்திசார்ந்த செலவீனங்களுக்கான ஒரு விதிமுறை அடிப்படையின் கீழ் வழங்கப்படும் கட்டம் கட்டமான கொடை ஒவ்வொரு மாகாணத்தினதும் சனத்தொகையையும் ஆள்வீத தலாவருமானத்தையும் சமூக பொருளாதார நிலைமைகளில் சமமின்மையையும் பிரதிபலிக்கும் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு மாகாணச் சுட்டெண் கணிப்பிடப்படுகிறது.
3. பொருத்தமான கொடைகள்	மாகாணங்களின் வரிசேகரிப்பு முயற்சிகளுக்குப் பரிசாக வழங்கப்படும் ஒழுங்குவிதி சார்ந்த, கட்டம் சார்ந்த கொடை அடிப்படையில் ஆண்டில் கிடைக்கப்பெற்ற அடையாள வருமானச் சேகரிப்பை விட, நடப்பு ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானங்கள் அதிகரித்துக் காணப்படும்போது இம்மொத்தக் கொடை அன்பளிப்புச் செய்யப்படும். (இக் கொடை தற்போது காலாவதி ஆகிவிட்டது)
4. மாகாணத்தில் விசேடமாக	குறிப்பிடப்பட்ட அபிவிருத்திக்கான கொடை, மாகாண சேவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்கான நிபந்தனைக்குட்பட்ட கொடை.

மாகாணங்களுக்கான நிதிசார் மாற்றல்கள் ஒருவருடத்துக்கான சுழற்சிக்கேற்ப உருவாக்கப்பட்டுள்ளன. இவை உள்ளடக்கியுள்ள விடயங்களாவன.

m. "மாகாணங்களின் தேவைகள்" பற்றிய கணிப்பீடு

மாகாணங்களின் நிதிசார் தேவைகள், மாகாண விடயங்கள் தொடர்பிலான சேவைகள், பராமரிப்புக்கான நடைமுறைச் செலவுகள் எனவும் சேவைகளின் தரத்திலும் தொகையிலும்

திருத்தத்தை ஏற்படுத்துவதற்குமான முதல் செலவினங்கள் எனவும் வரையறை செய்யப்படுகின்றது. மாகாணங்களின் தேவைகளைக் கணிப்பீடு செய்வது நிதிசார் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். பிரயோகரீதியில் அது ஒரு வழமையான செயற்பாடாகவும் முழுமையாகக் கணக்கீடு சம்பந்தமான விடயமாக மாறியதுடன் தொடர்ந்துவரும் வருடத்தினது செலவு நிகழ்ச்சித் திட்ட செயற்பாடுகள் கடந்தகால நிகழ்கால எண்ணிக்கைகளின் அடிப்படையில் நடைபெறுகிறது.

ஆ. வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தல்.

வருடாந்த வரவு செலவுத்திட்டத்திலிருந்து மாகாணங்களுக்கு மாற்றல் செய்யப்படும் நிதி ஒதுக்கீடுகள் மத்திய அரசாங்கத்தினது வருடாந்த வரவு - செலவுத்த்திட்டத் தயாரிப்புக் கட்டமைப்பின்கீழ் இடம்பெறுகின்றது. அரசியல் யாப்பின் பிரகாரம், அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யும்போது, நிதி ஆணைக்குழுவைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்பதும் அதன் சிபாரிசின் அடிப்படையிலேதான் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இக்கலந்தாலோசனையின் முக்கிய நோக்கம் யாதெனில், வருடாந்த வரவு - செலவுத் திட்டத்திலிருந்து மீண்டுவரும் செலவினத்துக்கும் முதலீட்டுச் செலவினங்களுக்குமான ஒதுக்கீட்டுத் தொகையை நிர்ணயிப்பதில் சாத்தியப்படும் இணக்கமாகும். ஆயினும், தேசிய வருடாந்த வரவு - செலவுத் திட்டத் தயாரிப்பின்போது, மத்திய அரசாங்க முகவர்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் பிரதான மூலகங்களிலிருந்து வேறாகக் தனித்த வகையிலேயே மாகாணங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அரசியல்யாப்பானது நிதி ஆணைக்குழுவின் கலந்தாலோசனையை தேவையெனக் கருதியபோதும், அதன் சிபரிசுகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லாத தன்மையையும் கொண்டுள்ளது. நடைமுறையில், மாகாணங்களுக்கான மாற்றல்களுக்கு ஒதுக்கப்படும் நிதியானது மீந்திருக்கும் அல்லது மேலதிக அளவிலும் உள்ளடக்கத்திலும் தங்கியிருப்பதை உணர்த்துகிறது.

இ. மாகாணங்களுக்கிடையே நிதியினைப் பங்கிடுதல்

மாகாணங்களின் பயன்பாட்டுக்காக மத்திய அரசினால் வழங்கப்படும் நிதிப் 'பங்கீடு' குறித்த ஒரு மாகாணத்திற்கிடையேயான நிதிப் பங்கீடு ஒரு கொள்கையை உருவாக்குவதனை நிதி ஆணைக்குழு மேற்கொள்ள வேண்டுமென்பதனை அரசியல் யாப்பு விதந்துரைக்கிறது. அத்தகைய கொள்கைகள் பங்கிடுதல் சம்பந்தமான அத்திவாரமாக அமையப் பெறுவதும் சமப்படுத்தப்பட்ட பிராந்திய அபிவிருத்தியை ஏற்படுத்தும் இலக்கினைக் கொண்டதாகவும் அமையும். அவ்வாறு

வகுக்கப்படுகின்ற கொள்கைகள் பின்வரும் விடயங்களைக் கவனத்திலெடுக்கும்:

i. ஒவ்வொரு மாகாணத்தினதும் சனத்தொகை.

ii. ஒவ்வொரு மாகாணத்தினதும் ஆள்வீத வருமானம்.

iii. சமூக, பொருளாதாரச் சமமின்மையைக் குறைப்பதற்குரிய முயற்சிகளை முன்னெடுப்பதற்கான தேவை.

iv. ஒவ்வொரு மாகாணத்திலும் ஆள்வீத வருமானத்தில் காணப்படும் வேறுபாடுகளைப் படிப்படியான வகையில் குறைத்தல். அவ்வாறே மாகாணங்களுக்கிடையே உள்ள உயர்ந்த ஆள்வீத வருமான வேறுபாடுகளையும் குறைத்தல்.

அரசியல் யாப்பில் மேற்கூறப்பட்டுள்ளவாறு அமையப் பெற்றுள்ள அளவீடுகள் வகைப் பகுப்புரீதியாக மீண்டுவரும், கொடைகளுக்கும் முதல் கொடைகளுக்கும் பிரயோகப்படுத்தப்படலாம். நிதி ஆணைக்குழுவானது பின்வரும் கொள்கைகளை வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தின்மூலம் மாகாணங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியைப் பங்கிடும் முறையை வழிநடத்துவதற்கென வகுத்துள்ளது.

ஆ. வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தின்மூலம் மாகாணங்களின் நடைமுறைச் செலவினங்களை ஈடுசெய்ய ஒதுக்கப்படும் நிதி, தேவை சார்ந்தவையான பங்கீடு ஆகக் கட்டம் சார்ந்த கொடையாக மாற்றல் செய்யப்படுகிறது.

ஆ. அபிவிருத்திச் செலவீனங்களுக்காக ஒதுக்கப்படும் நிதி வகைப்பகுப்பு பங்கீட்டு முறைமையின்கீழ் முதல் செலவீனங்களுக்காக விருப்பத்திற்குரிய கட்டம் கட்டமான கொடையாக மாற்றல் செய்யப்படுகிறது.

இ. மாகாணங்களின் உட்கட்டமைப்புச் சீராக்கத்துக்காகவும் சேவைகளுக்காகவும் ஒதுக்கப்படும் நிதி நிகழ்ச்சித் திட்டங்களை மையமாகக் கொண்ட பங்கீடாக விசேடமாகக் குறிப்பிடப்படும் அபிவிருத்திக் கொடையாக முதல் செலவினங்களுக்காக மாற்றல் செய்யப்படுகிறது.

கொடைகளின் கட்டமைப்பானது, மாகாணங்களுக்கிடையே நிலவும் நிதித்துறைசார் இயலுமையைச் சமப்படுத்தும் வழிவகைகளைக் கொண்டிருக்கவில்லை. மாகாணங்களுக்கிடையே காணப்படும் தொடர்புகளில் உள்ள விதிகளையோ செலவுகளையோ கவனத்திலெடுக்கும் வகையிலும் அவை வடிவமைக்கப்படவில்லை. வகைப்பகுப்பு அடிப்படையிலமைந்த கொடை ஒன்றே சமூக பொருளாதாரக் குறிகாட்டிகளை உள்ளடக்கியதாய் மாகாணங்களுக்கிடையேயான அபிவிருத்திச் சமமின்மையைக் கவனத்தில் கொள்கிறது.

அரசியல் யாப்பானது, மாகாணங்களின் தேவைகளை எதிர்க்கொள்வதற்கான நிதி ஒதுக்கீட்டினை உறுதிப்படுத்தியபோதும், யாப்பில் விதந்துரைக்கப்பட்ட நிதி ஆணைக்குழுவின் சிபாரிசும் கலந்தாலோசனையும் தேவை எனக் கருதப்பட்டபோதும், அது அவசியம் பெறப்பட வேண்டியதொன்றல்ல எனப்படுவதால் இறுதித் தீர்மானத்தை அரசாங்கமே எடுக்கிறது. அதாவது நிதியமைச்சின் செயற்பாடுகளும், வருடாந்த வரவு - செலவுதிட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யும் முடிவுகளும் சேவைவழங்கள் பொறுப்புக்களைப் பங்கேற்கும் அடிப்படையில் அமையவில்லை. ஆனால், மத்திய அரசின் தேவைகளே முக்கியத்துவம் பெற்று அதிகாரப் பரவலாக்கல் செய்யப்பட்ட விடயங்களும் தொழிற்பாடுகளும் தேசிய சேவை விநியோக நிகழ்ச்சித்திட்டங்களின்கீழ் உள்வாங்கப்படுகின்றன.

5.2.4 மாகாணங்களின் வரவு செலவுத்திட்டமிடல் திறன்

1987ஆம் ஆண்டின் 42வது இலக்க மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அரசியல் யாப்புக்கமைவாக நடைமுறைச் செயற்பாடுடையனவாக ஆக்கப்பட்டன. ஆகவே, ஒவ்வொரு மாகாணத்துக்குமான மாகாண நிதியம் (பிரிவு 19.1) அமைக்கப்பட்டு அத்தியாயத்தில் கீழ்க்காட்டப்படும் பணங்கள் வைப்பிலிடக்கூடியதாக அமைந்தது.

அ). மாகாணசபைகளினால் விதிக்கப்படும் சகல வரி வருமானங்களும்.

ஆ). இலங்கை அரசாங்கத்தினால் மாகாணங்களுக்காக மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட சகல கொடைசார் நிதிகள்.

இ). இலங்கையின் ஒன்றிணைக்கப்பட்ட நிதியத்திலிருந்து மாகாணசபைகளுக்கு முற்பணமாக வழங்கப்பட்ட சகல கடன்களும்

ஈ). மாகாண சபைகளின் ஏனைய நிதிப்பெறுகை

மாகாண நிதியத்திற்க்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட சகல பணங்களின் பயன்பாடு மாகாண சபையின் ஒதுக்கீட்டு அடிப்படையிலும் சட்டத்தின்மூலம் குறிப்பிட்ட நிதிக் கட்டணங்கள் அடிப்படையிலும் செயற்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு வருடமும் வருடாந்த நிதிக்கூற்று ஆளுநரால் மாகாண சபையில் சமர்ப்பிக்கப்படவேண்டியதும் மாகாணத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுகைகளும் செலவுகளும் வகுக்கப்படவேண்டியதும் அவசியமாகும்.

நிதிதுறைசார் அதிகாரப்பரவாக்கலின் உண்மையானது, அதிகாரப்பரவலாக்கல் சட்டம்மூலமாக மக்களுக்கு வழங்கப்படும் சேவை வழங்கல் பொறுப்புகளுக்கு பொதுமக்களுக்கான கணக்களித்தகைமைத் தொடர்பினை உருவாக்குவதாகும். உள்ளக் கணக்களித் தகைமை தொடர்ச்சியான சட்ட விதிகளினால் ஆக்கப்பட்டுள்ளது. இவை கீழ்க்காணும் விதிகளை உள்ளடக்கியுள்ளன:

அ). மாகாண வரிவிதிப்புக்கும் செலவிடலுக்குமான மாகாணசபையின் அங்கீகாரமும் அவற்றின் மீதான மாகான சபையின் மீளாய்வும்.

ஆ). கணக்காளர் நாயகத்தினால் மாகாண நிதியத்தின் மீது மேற்கொள்ளப்படும் கணக்காய்வு.

இ). கணக்காளர் நாயகத்தினால் அறிக்கைமீதான மாகாண சபையின் அவதானிப்பு.

ஈ). மாகாண நிதியத்தைப் பாதுகாக்கும் வகையில் ஆளுநரால் நெறிப்படுத்தப்பட்ட மாகாண நிதிசார் விதிகள்.

ஆயினும், மக்களுக்கான வெளிவாரி கணக்களித்தகைமைக்கான விடயங்கள் ஏதுமில்லை. மாகாண நிதிசம்பந்தமட்டில் வெளிப்படுத்தலுக்கும் இடமளிக்கப்படவில்லை.

விதப்புரைகள்

1. மாகாணங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல் சம்பந்தமாக நிதி அமைச்சு, நிதி ஆணைக்குழு மாகாணங்கள் ஆகிய முப்பரிமான அல்லது மும்மட்ட கலந்தாலோசனை முறைமையை ஏற்படுத்துதல் வேண்டும்.

2. துறைசார் அடிப்படையிலமைந்த வரவு - செலவுத் திட்ட மீளாய்வுக்கான நடைமுறைகளை ஏற்படுத்துவதன்மூலம் மத்திய - மாகாணச் செலவினங்களை ஒழுங்கு படுத்துதல் வேண்டும்.

3. தற்போது நடைமுறையிலுள்ள மாகாணங்களுக்கான நிதிமாற்றல் முறைமையை மீளாய்வு அல்லது பரிசீலனை செய்வதன்மூலம் இடைவெளி அல்லது குறைநிரப்பு நோக்கை விட்டு விலகித் தேவைகளை அடிப்படையாகக் கொண்டதும் செயற்றிறன் தொடர்புடையதுமான முறைமையை ஏற்படுத்துதல் வேண்டும்.

4. மாகாண சபைகள் தமது நிதிச் செயற்பாடுகளை வெளிப்படுத்துவதற்கும் அறிக்கை சமர்ப்பிப்பதற்குமான முறைமையை அறிமுகப்படுத்தல் வேண்டும்.

5.3 மாகாணங்களின் நிதிக்கான ஒழுங்கமைப்பு: நடைமுறைப்படுத்தல் பிரச்சினைகள்

இவ்வாறு அரசியல் யாப்பில் மாகாண பொதுச்சேவை வழங்கலுக்கான ஏற்பாடுகள் மாகாண நிதித்துறை சார்ந்ததும் அத்தகைய சேவைகளுக்கு நிதியிடலுக்குமான கட்டமைப்பை வகுத்துள்ளன. தேசிய ரீதியிலான, மாகாண ரீதியிலான உள்ளூர் ரீதியிலான வகிபாகம், பொறுப்புகள் தொடர்புகள் என்பன அதிகார பரவலாக்கல் மூலமான வழங்கல் மட்டத்தைக் கட்டுப்படுத்துவதோடு,

வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கான அடிப்படைகளைத் தீர்மானிப்பதிலும் பிராந்திய அபிவிருத்தி விளைவுகளைச் சாதிப்பதிலும் தொழிற்படுகின்றன.

மத்திய அரசினதும் மாகாணங்களினதும் நிலைமை: சேவைகள் வழங்குவதற்காக அதிகாரப் பரவலாக்கல் நிலைமை: மொத்த அரச செலவினத்தில் மாகாணங்களினதும் உள்ளூர் மன்றங்களினதும் பங்களிப்பு நிலைமையைக் காட்டுகிறது.

அட்டவணை 5.1 - 2008
மத்திய, மாகாண மற்றும் உள்ளூர் செலவுகள் ரூபா மில்லியனில்

மத்திய	மாகாண	உள்ளூராட்சி	மொத்தம்
945,247	101,173	23,894	1070,314
88.31	9.44	2.15	100

மூலம்: அரசாங்க மதிப்பீடுகள் மற்றும் நிதி ஆணைக்குழு

இவ்வாறு மத்திய அரசாங்கம் பொதுச் செலவின அரங்கில் பூரண ஆதிக்கம் செலுத்துவதோடு 88 சதவீதமான அரசாங்கச் செலவீட்டுக்கும் பொறுப்பு வகிக்கிறது.

மொத்த அரச வருமானத்தில் மாகாணங்களினதும் உள்ளூராட்சி மன்றங்களினதும் பங்குகளின் நிலைமையை இது பிரதிபலிக்கிறது.

அட்டவணை 5.2
மத்திய மாகாண உள்ளூர் இறைவரி வருமானம் - 2008

மத்திய	மாகாண	உள்ளூராட்சி	மொத்தம்
699,388	23,915	25,804	749,107
93.34%	3.21%	3.45%	100%

மூலம்: அரசாங்க மதிப்பீடுகள் மற்றும் நிதி ஆணைக்குழு

2003ஆம் ஆண்டில் (மாகாணங்களினதும், உள்ளூராட்சி மன்றங்கள் மொத்தப் பரவலாக்கல் வருமானம் மொத்த வருமானத்தின் 5.18%ஐயே காட்டுகிறது. அரசாங்க வருமானத்தில் மாகாணத்தின் மொத்தப் பங்களிப்பு 2.64 % மாத்திரமே. இது மாகாணத்திற்கு ஒப்படைக்கப்பட்ட வருமான அளவையும் எல்லையையும் குறிப்பிடுகிறது. இதில் கவனிக்கப்படவேண்டிய பிரதான அம்சம் யாதெனில், உள்ளூர் அதிகார சபைகளின் வருமான சேகரிப்புத் தொகை மாகாண சபைகளின் வருமானத்தை ஒத்திருத்தலாகும்.

செலவுக்கும் இறைவரி வருமானத்திற்கும் இடையேயான இந்த எல்லைக்குள் மாகாண மட்டத் துண்டுவிழும் இடைவெளி மிகப்பாரிய அளவினதாக மத்திய அரசினதோடும் உள்ளூர் ஆட்சி அமைப்புக்களோடு ஒப்பீட்டு ரீதியில் மிகக் கூடுதலாகக் காணப்படுகிறது.

அட்டவணை 5.3

இறைவரி வருமானம் - செலவின இடைவெளி: 2008

	வருமானம்	செலவினம்	இடைவெளி	%
மத்திய	699,388	945,247	245,859	26.1%
மாகாண	23,915	101,173	77,258	77.3%
உள்ளூராட்சி	25,804	23,894	(1910)	(7.9%)
மொத்தம்	749,107	1070,314	321,207	30.0%

2003இல் மாகாண மட்டத்தில் வருமானம் - செலவுகளுக்கிடையேயான இடைவெளி 82.52%. மாகாண நிதித்தேவைக்காக மத்திய அரசில் தங்கியிருக்கும் எல்லையளவை இது சுட்டிக்காண்பிக்கிறது. இது உண்மையாக அதிகாரப் பரவலாக்கலின் யதார்த்தமான நிலையைப் பிரதிபலிப்பதோடு, மாகாணங்களானவை பொதுச் சேவை வழங்குனராகச் செயற்படுவதற்கான நிதித்துறைசார் மையமாகவும் விளங்குகிறது. இதில் சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய அம்சமென்னவென்றால், மத்திய அரசாங்கத்தினதும் மாகாணங்களின் நிலைமையானது வருமானம் செலவுசார் விடயங்களில் காணப்படும் பங்கின் அளவு கடந்த பல வருடங்களாக மாறாத நிலையிலிருப்பதாகும்.

5.3.2 மாகாணச் செலவினங்கள்

மாகாணச் செலவினங்கள் விடயம், இலக்கு என்ற வகைப்படுத்தலின்கீழ் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. விடயம் சார்ந்தவகைச் செலவினங்கள் உண்மையான பயன்தரு சேவை விநியோகப் பரப்புகளை வெளிப்படுத்தும் அதேவேளை, இலக்குச்சார்ந்த வகைச் செலவினங்கள் தரப்படுத்தப்பட்ட வேறுபடுதலின் ரீதியாக அமையும் செலவினத் தேவைகளைத் தெளிவுப்படுத்துகின்றன.

மாகாணச் செலவினத்தின் விடய வகைகள்

மாகாண நிறுவகப்படுத்தல்	மாகாண சபை, ஆளுநர் அலுவலகம், பொதுச் சேவை ஆணைக்குழு, கூட்டுறவு ஊழியர், ஆணைக்குழு, முதல் அமைச்சர் அலுவலகம், (04) பிரதம செயலாளர் அலுவலகம்.
மாகாண நிர்வாகம்	பிரதிப் பிரதான செயலாளர் நிதி, பிரதிப் பிரதான செயலாளர் திட்டமிடல், பிரதிப் பிரதான செயலாளர் நிர்வாகமும் ஆளணியும், பயிற்சியும் அபிவிருத்தியும், உள்ளகக் கணக்காய்வு, வாகனப் போக்குவரத்து, வியாபாரப் பெயர்கள் பதிவுசெய்தல்.
பொருளாதார உட்கட்டமைப்பு	மத்திய பொறியியல் சேவைகள், கட்டடங்கள், நீர்ப்பாசனம், வீதி அபிவிருத்தி, பிரயாணிகள் போக்குவரத்து, வீடமைப்பு, சுற்றுலா.
சமூக உட்கட்டமைப்பு	கல்வி, சுகாதாரம், ஆயுர்வேதம் சமூக சேவைகள், பாதுகாப்பும் சிறுவர் பராமரிப்பும்.
சனசமூக சேவைகள்	உள்ளூராட்சி மன்றங்கள், கூட்டுறவு, கிராமிய அபிவிருத்தி, கலாசார விவகாரம், விளையாட்டு, இளைஞர் விவகாரம், பெண்கள் விவகாரம்.
விவசாயம்	விவசாயம், காணி, மிருக வளர்ப்பு, சுகாதாரம், மீன்பிடி.
கைத்தொழில்	சிறு கைத்தொழில், ஆடைக் கைத்தொழில் தொழில்சார் பயிற்சி, தொழில்சார் முயற்சிகள், அபிவிருத்தி.

அட்டவணை 5.3

இறைவரி வருமானம் - செலவின இடைவெளி: 2008

விடயம்	2004	%	2009	%
மாகாண நிறுவகப்படுத்துதல் / அமைப்பு	1,234	2.78		
மாகாண நிர்வாகம்	491	1.11	6890	6.18
பொருளாதார உட்கட்டமைப்பு	915	2.06	1,827	1.64
சமூக உட்கட்டமைப்பு	36,910	83.05	87,116	78.25
சனசமூக சேவைகள்	3,782	8.51	12,826	11.53
விவசாயம்	747	1.68	2,004	1.80
கைத்தொழில்	363	0.82	672	0.60

ஏறத்தாழ 96% வீதம் 2004ஆம் ஆண்டிலும் 93.72 வீதம் 2009ஆம் ஆண்டிலும் மாகாண செலவினங்களில் சேவைகளுக்குரியதாக் காணப்படுகிறது.

மாகாணங்களுக்கான அரசாங்கங்கக் கணக்குகளின் பங்கு (மாகாண நிர்வாக அமைப்பு, மாகாண நிர்வாகம்) 2004ஆம் ஆண்டின் 3.89% சதவீதத்திலிருந்து 2009இல் 6.18ஆக அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பு வடமாகாணத்தில் அமையப்பெற்ற புதிய நிர்வாகத்தையும் உள்ளடக்கியதோடு ஒரு புதிய மாகாண சபையின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்குமான மாகாண அமைச்சுக்களின் செயற்பாட்டுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. அதாவது, தொடர்ச்சியான விரயச் செலவுக்காக மாகாணங்கள் பற்றிய பொதுசன அபிப்பிராயமான "வெள்ளை யானைகள்" என்ற வர்ணனையை மீறியும் இடம் பெற்றுள்ளது. சேவை விநியோக நடவடிக்கைகளைப் பொருத்தவரை சமூக உட்கட்டமைப்புக்கான (கல்வியும் சுகாதாரமும்) வசதிகள் ஏறத்தாழ 83% சதவீதமாக 2004இல் காணப்பட்டு 2009இல் 78.25 வீதமாக ஏனைய செலவினங்களை விஞ்சிநிற்கிறது. பொருளாதார சேவைகளின் பங்கு, பொருளாதார உட்கட்டமைப்பு விவசாயம் என்பவற்றை உள்ளடக்கியதாக 2004இல் 5% வீதமாகவும் 2009இல் 4% வீதமாகவும் குறைந்துள்ளது. சமூக சேவை செலவினங்களில் பங்களிப்பு உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களின் சம்பளங்களையும் கூலிவழங்களையும் கொண்ட மீண்டுவரும் செலவினங்களை உள்ளடக்கிய கொடைகளைக் கொண்டுள்ளது. இந்நிலைமை மாகாணங்களின் வகிபாக நடவடிக்கைகளை எல்லைப்படுத்துவதோடு உண்மையில் பொருளாதார வளர்ச்சி, வறுமைக் குறைப்பு என்பவற்றில் மாகாணங்கள் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதை குறைப்பதாக அமைகிறது.

மாகாணங்களின் மொத்த செலவினம் பெருமளவு நிலையான பங்கேற்பைக் காண்பிப்பதோடு செலவு அமைப்பில் எத்தகைய நிதி சார்பான மாற்றங்களுக்கும் இடமளிக்க முடியாதவாறான நிலையையும் காட்டுகிறது.

அட்டவனை 5.5

இலக்கு சார்ந்த வகைகளின் மாகாண மீண்டு வரும் செலவினங்கள்: 2004 – 2009 வரை

மில்லியன் ரூபாக்களில்

இலக்கு வகைகள்	2004	வீதம்	2009	வீதம்
ஆளணிவருமானம் / கொடுப்பனவுகள்				
சம்பளங்களும் கூலிகளும்	27,202	61.20	64,552	58.9
மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு, விடுமுறைக்கான கொடுப்பனவு	869	1.96	3,756	3.40
ஏனைய கொடுப்பனவுகள்	7,936	17.86	18,208	16.38
மொத்த ஆளணிக் கொடுப்பனவு	36,007	81.02	86,546	77.87

ஏனைய மீண்டுவரும் செலவினங்கள்

பிரயாணம்	557	1.26	922	.82
வழங்கல்	1,509	3.40	2,722	2.42
பராமரிப்பு	1,041	2.34	3,021	2.69
ஒப்பந்த வேலைகள்	1,147	2.58	2,259	2.01
மாற்றல்கள்	2,307	5.19	15,104	13.54
கொடைகள்	1,344	3.03		
மாணியம்	91	.21	244	13..54
வட்டி	22	.05		
ஏனையவை	414	.93	516	.44
மொத்த ஏனைய மீண்டுவரும் செலவு	8,432	18.98	24,568	22.13
மொத்தம்	44,439		111,114	

இலக்கு சார்ந்த வகைச் செலவினங்களைப் பொறுத்த வரையில் செலவு அமைப்பில் காணப்படும் முக்கிய மாறுதலானது ஏனைய மீண்டுவரும் செலவினப்பகுதி அதிகரிப்பில் காணப்படுகிறது. அதாவது 2004 ஆம் ஆண்டு 18.98 சதவீதமாக இருந்த இச்செலவு 2009 இல் 22.13 ஆக உயர்ந்துள்ளது. ஏனைய மீண்டுவரும் செலவினங்களில் காணப்படும் இவ்வதிகரிப்பானது மாற்றல்கள் கொடைகளின் பங்களிப்பில் 7.77% வீதத்திலிருந்து 13.54% வீதமாக அதிகரித்துள்ளதோடு உள்ளூராட்சி மன்றங்களுக்கு குறைநிரப்பு நிதிவழங்களையும் உள்ளடக்குகிறது. 2004இற்கும் 2009 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சம்பளங்கள் குறிப்பிடத்தக்களவு உயர்ந்துள்ளதோடு உள்ளூர் ஆட்சி மன்றங்களின் தனியாள் கொடுப்பனவும் மாற்றல்களில் பிரதிபலிக்கப்படுகின்றது.

அட்டவனை 5.6

விடய வகையில் அமைந்த மாகாண விசேட அல்லது குறிப்பிடப்பட்ட அபிவிருத்தி கொடைச்செலவினம் -2009

மில்லியன் ரூபாக்களில்

விடயம்	2009	%
மாகாண நிறுவக அமைப்பு	-	
மாகாண நிர்வாகம்	-	
பொருளாதார உட்கட்டமைப்பு	3,198	27.00
சமூக உட்கட்டமைப்பு	5,267	44.47
சனசமூக சேவைகள்	1,180	9.95
விவசாயம்	835	7.09
கைத்தொழில்	213	1.79
ஏனையவை	600	5.05
பிராந்திய அபிவிருத்தி முன்கொடுப்பனவுகள், ஊக்குவிப்புக்கள்	551	4.65
மொத்தம்	11,844	100

விடயவகையிலமைந்த மாகாண குறிப்பிடப்பட்ட அபிவிருத்திக் கொடையின் செலவு அமைப்பு வடிவம் மிகவும் குறிப்பிடத்தக்கது. ஆனால், கைத்தொழிலின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இல்லை. தெருக்கள், சுகாதாரம், கல்வி ஆகியவையே பிரதான செலவுத்தானங்களாக இக் கொடையின் கீழ் அமைகின்றன.

பின்வரும் பொதுவான அம்சங்கள் குறிப்பிடத்தக்கவை

அ). 75% அளவிலான மாகாணச் செலவீடுகள் உத்தியோகத்தர்களுக்கான தனிப்பட்ட சம்பளங்களுக்காகப் பயன்படுகிறது. குடியிருப்பாளர்களுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் மாற்றல்களும் கொடைகளும் ஏறத்தாழப் 14% வீதத்தைப் பொறுப்பேற்கின்றன. இதில் அரைவாசித் தொகை உத்தியோத்தர் சம்பளமாக உள்ளது.

ஆ). தொழிற்படும் செலவினங்களான (போக்குவரத்து, வழங்கல்கள், பராமரிப்பும் ஒப்பந்த சேவைகளும்) என்பன ஏறத்தாழ 10% வீதமான மாற்றமில்லாத இடத்தைப் பிடித்திருப்பதுடன் அவை தேக்க நிலையுள்ள சேவை விநியோகமுடைய வலையமைப்பை ஏற்படுத்தியுள்ளது. தனிப்பட்ட செலவினங்களையும் மாற்றல்கள் கொடுப்பனவையும் பிரதிபலிக்கத்தக்கவாறு நடைமுறைப்படுத்தப்படும் செலவினங்களை மாகாணங்கள் கொண்டுள்ளன. இந்நிலமையானது, மாகாண சேவைகள் வழங்கல் தொழிற்பாடுகளின் பரப்பை கட்டம் தொகைக் கொடையின் பருமனைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

இ). அரசாங்க மொத்தச் செலவினங்களில் மாகாண செலவினத்திறன் தேங்கியிருக்கும் பங்களிப்பை உற்று நோக்கும்போது, கட்டம் கட்டமாக மாகாணங்களுக்குப் பாய்ச்சப்படும் கொடைகள் தொழிற்படு செலவினங்களை மட்டுப்படுத்தவதோடு, இதன் விளைவாக குறைவான செலவீடு கொண்ட பொருளாதாரச் சேவை விநியோகச் செயற்பாடுகளின் விரிவாக்கத்தையும் சிறந்த மனிதவள உட்பாய்ச்சல் மூலம் சேவை வழங்கல் விரிவையும் ஏற்படுத்துகிறது.

ஈ). முதலீட்டு விடயங்களான கல்வி, சுகாதாரம், வீதிகள்மீதான செலவினங்கள் எல்லா மாகாணங்களிலும் பெரிய செலவினங்களாக உள்ளன. இது நாலில் மூன்று பங்கிளை முதலீட்டுச் செலவினத்தில் கணிக்கிறது. (மிருக வளர்ப்பு) உள்ளிட்ட விவசாயமும் கைத்தொழிலும் ஏறத்தாழ 9.00% வீதமான இடத்தை மொத்தச் செலவினத்தில் வகிக்கிறது. விடயங்கள்மீதான பங்குகள் அனேகமாக நிலையான தன்மையைக் கொண்டுள்ளதுடன், மீண்டுவரும் செலவினத்தின் வடிவத்தைப் பொறுத்தவரை தேக்கநிலை கொண்ட சேவை விநியோகமே காணப்படுகிறது.

உ). வீதிகள் தவிர மாகாண மட்ட முதலீட்டுச் செலவுகள் உண்மையில் சமூக உட்கட்டமைப்பு, சேவைகள் சார்ந்ததாக உள்ளது. ஒரு சிறிய எல்லைக்குள்ளேதான் அதிகாரப் பரவலாக்கல்மூலம் ஏனைய துறைகளில் போதுமானளவு அதிகாரப்பரவலாக்கல்கள் இடம் பெற்றுள்ளது. உள்ளூராட்சித் தேவைகளுக்காக மாகாணங்களால் முன்னுரிமைப்படுத்தப்படும் நிதி வகிபாகம் சர்ச்சசைக்குரிய விடயமாகும்.

மாகாணங்களின் முதலீட்டுச் செலவின் வடிவமானது நிதித்துறைசார் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான ஒரு அடிப்படைக் கேள்வியை எழுப்பியுள்ளது. அதாவது, பரவலாக்கல் சேவைகள் பொதி சமமான கொள்திறன் சார்ந்த வழங்கலை மாகாணங்களிடையே சமமாக வழங்குவது பற்றிய வினாவாகும்.

5.3.3 மாகாணங்களின் இறைவரி வருமானம்

மாகாணங்களுக்கு இருபது வருமான விடயங்கள் ஒப்படைக்கப்பட்டபோதும், மொத்த வருமானத்தின் தொண்ணூறு வீதத்தை மூன்று வளங்களே கணக்கிலெடுக்கின்றன. அதாவது, மொத்த சில்லறை விற்பனவின் மீதான புரள்வு வரிகள், மோட்டார் போக்குவரத்துக் கட்டணங்களும் நீதிமன்ற தண்டப்பணங்களும் சேகரிக்கப்பட்டு உள்ளூர் அதிகார சபைகளுக்கு வழங்கப்படுகின்றன.

அட்டவணை 5.7

மாகாண இறைவரி வளங்கள் 2004 - 2008

வளங்கள்	2004	%	2008	%
வியாபாரப் புரள்வு வரி	5,912	44.38	16,641	53.04
வாகனப் போக்குவரத்துக் கட்டணம்	1,668	12.53	2,812	8.96
கலால் வரி	259	1.95	467	1.53
முத்திரை வரி	3,761	28.23	6,023	19.19
நீதிமன்றக் கட்டணம்	579	4.35	1,054	3.35
ஏனையவை	1,140	8.56	4,373	13.94
மொத்தம்	13,319	100	31,370	100

மூலம்: நிதிக் குழுவின் ஆண்டறிக்கை: மாகாண சகைகளின் அமைச்சு

ஒட்டுமொத்தமாக மாகாண இறைவரி வருமானம் ஏறத்தாழ மொத்த செலவினத்தின் 20.00%மாக விளங்குகிறது. வருமானம் செலவுகளுக்கிடையேயான இடைவெளி மேல்மாகாணத்தில் ஏறத்தாழ 40%மாகவும் வடமத்திய மாகாணத்தில் 95%மாகவும் வேறுபடுகிறது. எனவே, மாகாணங்கள் தமது செலவுத் தேவைகளுக்காக பாரிய அளவில் மத்திய அரசாங்கத்தில் தங்கியிருக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. வருமானத்தைப் பங்கிட முடியாத நிலையில் கட்டம் கட்டமான கொடைச் சேவை விநியோகத்தில் மாகாணங்களின் திறமையான தற்துணிபின் எல்லையினைத் தீர்மானிக்கிறது.

கடந்த ஐந்து வருட காலங்களில் வருமானச் சேகரிப்பில் 30% வீதமான அதிகரிப்பு ஏற்பட்டபோதும் மாகாணங்களினது பங்களிப்பு ஒப்பீட்டளவில் மாற்றமின்றியே காணப்படுகிறது. மொத்தமாகச் சேகரிக்கப்படும் வருமானத்தின் அரைப்பங்கினை வழங்கும் பிரதானமூலமாக வியாபாரப் புரள்வு வரி விளங்குவது கணிப்பீட்டில் முக்கியத்துவம் பெறுகிறது. ஆகவே, அதிக எண்ணிக்கையிலான வளங்கள் ஒதுக்கப்பட்டபோதும் 13ஆவது திருத்தச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட வரிகள் மிகவும் பலவீனம் வாய்ந்தவையாகவும் பெறப்படும் வருமானங்கள் எல்லா வகைகளிலும் குறைவானவையாகவும் உள்ளன.

நிதித்துறைசார் பரவலாக்கலின் பின்னர், ஒன்றரை தசாப்த காலமாக மாகாண வருமானமீட்டும் கட்டமைப்பு மாற்றமின்றியே இருப்பதுடன் தொடர்ச்சியாக ஐந்து பங்குக்கும் குறைவான செலவினத் தேவைகளை சேவை விநியோகத்தின் நடைமுறை மட்டங்கள் தொடர்ந்தும் பேணுகின்றன. மொத்த

உள்நாட்டு உற்பத்தியில் 50% இற்கு குறைவான வீதத்தை மாகாணங்கள் சேகரிப்பதுடன், ஒட்டு மொத்தமான வரிவிதிப்பு முயற்சிகள் போதுமானவையல்ல என்பதையும் உணர்த்துகிறது. வரிகள் ஒப்படைப்பின் மட்டுப்படுத்தல் தன்மைகளால் மாகாணங்கள் தமது தொழிற்பாடுகளில் கட்டுப்பட்டுச் செல்லும் நிலை காணப்படுகிறது. ஆனால், அந்த எல்லைக்குள் கொள்கை மாற்றங்கள் செய்யமுடியாத நிலைக்கு மத்திய அரசு மாகாணங்களோடு வரி இணக்கம் செய்வதில, தோல்வியடைந்ததும் காரணமாகும்.

5.3.4 தேவைகளின் கணிப்பீடு, அரசாங்கங்களிடையேயான மாற்றலும் சமமட்டமாக்கலும் சமப்படுத்தலும்

இவ்வாறு அதிகளவிலான ஏற்றத் தாழ்வுகள் மாகாணங்களில் ஏற்படும் செலவீடுகளுக்கும் வருமானத்திற்குமிடையே காணப்படுகின்றன. அதே சமயம் பரந்த அளவிலான வித்தியாசம் வருமானக் கொள்ளளவில் மேல் மாகாணத்துக்கும் ஏனைய மாகாணங்களுக்குமிடையே நிலவுகிறது. செங்குத்தான சமமற்ற நிலை தவிர்க்க முடியாததாக உள்ள தன்மை மாகாணங்களின் பலவீனமான வரி அடிப்படைகள்மீது ஒப்படைக்கப்பட்ட வரி அமைப்பில் காணப்படுகின்றது. மேல் மாகாணம் இதற்கு விதிவிலக்கு. அநேகமாக கிடையான சமமற்ற தன்மை தோற்றம் பெறுவதற்கான காரணம் வரிகளின் ஒப்படைப்பில் மேல் மாகாணம் பயன்னடைவதும் அதன் பிரதான வளங்களின் உறுதியான அடிப்படைத் தளமுமாகும்.

அரசாங்கங்களுக்கிடையிலான வருடாந்த மாற்றல் சுழற்சி ஒரு கணிப்பீட்டுச் செயற்பாட்டினைப் பின்பற்றும்போது, மாகாணங்களின் தேவைகளைக் கணிப்பீடு செய்வதில் ஏற்படும் கட்டுப்பாடுகளும் அவற்றை ஈடுசெய்ய வருடாந்த வரவு - செலவுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வதன் திறமையற்ற தன்மையும் செலவினத்தையும் வருமானத்தையும் பொறுத்தவரையில் அத்தேவைகளை எதிர்கொண்டு பயனளிக்கக்கூடியதாய் அமையவில்லை.

மாகாணங்களின் தேவைகளுக்கான கணிப்பீடு ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகவே அமைந்துள்ளது. ஏனெனில், இலக்கு நோக்கிய மதிப்பீடுகள் இல்லாத நிலையில், சராசரியான அல்லது சாதாரணமான சேவைகள் மட்டம் எல்லா மாகாணங்களிலும் அவற்றின் கொள்வனவு ஆற்றலைப் பொறுத்தும் செலவு வேறுபாடுகளைப் பொறுத்தும் அமைவது மதிப்பீடு செய்வதற்குத் தேவையான தீர்மானிக்கப்பட்ட சேவைகள் மட்டத்தைக் குறிக்கும்.

மொத்த மாற்றல்களில் 80வீத பங்கு வகிக்கும் கட்டம் கட்டமான கொடைகள் இடைவெளி நிரப்பும் மாற்றல்களாக மீண்டு வரும் செலவினங்களுக்கும் வருமான இலக்குகளுக்குமிடையே உள்ள வித்தியாசத்தை

எதிர்கொள்வதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளன. மாகாணத்துக்கான சம்பளப் பட்டியலையும் ஆரம்பநிலையில் பூர்த்தி செய்கின்றன. இடைவெளி நிரப்பும் வடிவமைப்புடைய தொகைக் கொடைக்கிடையான பங்கிடுதல் ஆள்வீத வருமானத்திலும் சொந்தவளச் சேகரிப்பிலும் எதிர்மறைத் தொடர்பை ஏற்படுத்தி திறமையான செயலாற்றத்தில் எதிர்மறை ஊக்கிகளைக் கொடை வழங்கல் பயன்பாட்டிலும் வருமானச் சேகரிப்பிலும் ஏற்படுத்துகிறது.

மாகாணங்களுக்கான குறிப்பிடப்பட்ட அபிவிருத்திக் கொடைகள் முதல் செலவினத்தில் 80% உள்ளடக்கியுள்ளன. எல்லா மாகாணங்கடளுக்குமான மொத்தச் செலவினங்களும் அரசாங்க வரவு - செலவுத்திட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது. ஆயினும், நிதி ஆணைக்குழு இந்த வகையில் சிபாரிசு செய்யும்.

நிதி ஆணைக்குழு வழங்கும் வழிகாட்டல் அடிப்படையில், மாகாணங்களின் நிகழ்ச்சித்திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் கிடையான விநியோகம் செய்யப்படுகிறது. இந்த நடைமுறை திட்டமிடப்படாமலேயோ தனிப்பட்ட உணர்வுகளால் பாதிக்கப்பட்டோ தெளிவான விளக்கமில்லாமலும் காணப்படுகிறது. இதற்கெதிராக தீர்மானிக்கப்பட்ட தர அடிப்படையிலமைந்த கொடையானது, ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளால் துண்டப்பட்டு அதன் கிடையான விநியோகம் இலக்குக் கருதிய கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டது. ஆயினும், ஒப்பீட்டு ரீதியில் இவ்வகை ஒதுக்கீடு செய்யப்பட்ட சிறுதொகை அளவு செலவே இடம் பெறுவதால் (மொத்த செலவில் 6 பங்குக்குக் குறைந்த அளவு) சமீப காலங்களில் அரசாங்கம் அதனை வெளியிடுலதில் கவனக் குறைவான இருப்பதால் இது முக்கியத்துவம் பெறுவதில்லை.

எனவே அரசாங்கங்களிடையேயான மாற்றல்கள் முக்கியமாகத் துண்டுவிழும் தொகை நிரப்பும் விடயமாயிருப்பதோடு சில அளவுகளில் வருமானத்துக்கும் செலவினத்துகக்குமிடையே காணப்படும் செங்குத்தான சமமற்ற தன்மையை எதிர் கொள்கிறது. இது தேவைகளோடு தொடர்புபட்டதல்ல. மாகாணங்கட்கிடையே சேவை விநியோகத்தில் தரத்தை நிர்ணயிக்கும் சேவை விநியோகக் கட்டமைப்பு காணப்படவில்லை. மாகாணங்கள் மத்திய அரசின்மீது தங்கியிருப்பதனால், அவற்றின் முடிவெடுக்கும் பொறுப்பு மாகாணங்களிடமிருந்து நீக்கப்பட்டு விட்டன. எனவே மாகாணங்கள் தமது பிரஜைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தொகை ரீதியாகவோ, தர ரீதியாகவோ சேவைகளை வழங்கும் பொறுப்பை இழந்து விட்டன. எனவே, உப தேசிய மட்டத்தில் முறையாக விநியோகிக்கப்பட வேண்டிய தரம் வாய்ந்த சேவை வகைகளுக்காக தேவைப்படும் வளங்களின் மட்டத்தை மதிப்பிடுதல் சாத்தியமற்றதாகிறது. எனவே அரசாங்கக்களுக்கிடையியிலான மாற்றல்கள் முறைமை போதுமான அளவு தொகையை உறுதிப்படுத்தாதது மாத்திரமின்றி தங்கியிருத்தல் நிலையையும் ஏற்படுத்தி மாகாணங்களின் பொறுப்புக்களையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் குறைபாடுடையதாகச் செய்கிறது.

5.3.5 கடன் தொகை

ஏலவே கூறியவாறு 13ஆம் திருத்தச் சட்டத்தின்கீழ் கூறப்பட்டுள்ளவாறு மத்திய அரசு மாகாணங்களின் கடன் பெறுகை அதிகாரங்களை வழங்குவதற்கு விரும்பவில்லை. ஆயினும், மாகாணங்கள் வங்கிகளில் மேலதிகப் பற்று வசதிகளையும் சொத்துக்கள்மீதான பொறுப்புக்களை முன்னெடுத்தும் மீண்டுவரும் கொடுப்பனவுகளைச் சமாளிக்க முனைகிறது. ஆட்சேர்ப்பு முறையில் கடுமையாக கட்டுப்பாடுகள் விதிப்பதன்மூலம் நடைமுறைச் செலவுகளில் ஒரு கடினமான வரவு - செலவுத் திட்ட அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது.

5.3.6 மாகாணங்களுக்கான மாற்றல்கள்

மத்திய அரசு மாகாண அரசுக்காக வழங்கும் வருமான உட்பாய்ச்சலில் மத்திய அரசுத் திறைசேரியில் எற்படும் மாற்றங்கள் எதிர்பாராத, கட்டுப்படுத்த முடியாத சூழலுக்குட்பட்டு அதன் பண முகாமைத்துவ நடவடிக்கைகள்மீதெழும் செயற்பாடுகளின் ஒரு பகுதியாக கவனிக்கப்படுகிறது. இந்த அனுபவமானது, தொடர்ச்சியாக வெளியிடப்படும் எல்லாக் கொடை விடயங்களிலும் வீழ்ச்சியைக் காட்டுகிறது. மீண்டு வரும் செலவினங்களுக்கான மொத்தக் கொடை எல்லா மாகாணங்களுக்குமிடையே சராசரியாக 4.0 வீதமான அளவு குறைவீழ்ச்சியைக் காண்பிக்கிறது. மாகாணங்கள் வழக்கமாக இக்குறை வீழ்ச்சியை பலவழிகளில் கையாளுகின்றன. நடைமுறைச் செலவினங்களைக் குறைத்தல், சொத்துக்களை ஈடுசெய்தல் அல்லது தற்காலிக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு முத்திரைக் கட்டண மாற்றல்களை தடுத்து வைத்தல் போன்றவையாகும். சமீப காலங்களில் முதல் செலவினங்களுக்கான நிதி வெளியீடும் பாய்ச்சலும் குறைந்து செல்லும் போக்கையே காண்பிக்கிறது.

5.3.7 செயற்பாட்டு மற்றும் நடைமுறைப் பிரச்சினைகள்

அதிகாரப் பரவலாக்கல் முறைமையானது, விசேடமாக மாகாண மட்டத்தில் குறிப்பிடத்தக்க பொதுச்சேவை வழங்குவதற்கான ஒரு உப ஒழுங்குமுறை ஏற்பாட்டை தாபித்தது. தேசிய ரீதியாக வகுக்கப்பட்ட தரநிர்ணயத்துக்கு உட்பட்டு உள்ளூர் முன்னுரிமைப் பட்டியலை இனங்காண்பதற்கும், பிரஜைகளின் தேவைகளை சிறப்பாக எதிர்கொள்வதற்குகான வழிமுறைகளை வரையறை செய்கிறது. இதுவரை காலமும் தேசிய ரீதியில் வரையறுக்கப்பட்டு, துறைசார் ரீதியாக வகுக்கப்பட்டு மத்திய அரசுக்குக் கணக்களிதமைமை கொண்ட உள்ளூர் முகவர்களால் பொதுச்சேவை வழங்கும் நடைமுறை கொண்டதிலிருந்தும் இது முற்றாக விலகியதாக அமைந்தது. நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கலோடு

செயல்திறனிலும் நடைமுறையில் ஒன்றித்துப் போகத்தக்கதான பல பிரச்சினைகள் உள்ளன.

அ). மத்திய அரசினதும் மாகாணங்களினதும் செலவு செய்யும் தொடர்புகள்

மொத்த அரச செலவினங்களில் மாகாணங்களின் செலவிடும் பங்கு ஆரம்ப காலங்களிலிருந்து குறைந்து செல்லும் போக்கையே கொண்டிருக்கிறது. 1990ஆம் ஆண்டு செய்யப்பட்ட மாகாணச் செலவீனம் மொத்த அரசாங்க மீண்டு வரும் செலவினத்தின் 25வீதமாகும். இது பொதுக்கடன் மீதான வட்டி கழித்த தேறிய தொகையாலும். (சல்காடோ, 1989) மேலும் 1991இல் மீண்டுவரும் செலவினம் மொத்த மாகாண செலவினத்தின் 72 வீதமாயிருந்ததோடு முதல் செலவினங்களுக்கான பங்கு 28வீதம் மாத்திரமே. அதிகாரப் பரவலாக்கலின் இரண்டு வருடகால இடைவெளிக்குள், செலவிடும் தீர்மானங்களின் கணிசமான பரப்பளவு மீளப்பெறப்பட்டு மத்திய அரசினதும் மாகாணங்களினதும் செலவிடும் தொடர்புகளின் பாங்கு தொடர்ந்து செல்கிறது. இத்தகைய பின்னடைவுகள் மாகாணங்களில் மீண்டுவரும் முதல் செலவினங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஒன்றரை தசாப்த காலமாக நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கலின் பின்னரும் ஒட்டுமொத்தமான நிதித்துறைசார் செயலாற்றலில் மாகாணங்கள் குறைந்தளவு பங்கினையே வகிக்கின்றன. அரசாங்கச் செலவினத்தில் மாகாணங்களின் பங்கு 10 - 11 வீதமான நிலையான தன்மையை உடையதாக இருந்தபோதும், பரவலாக்கலின் பரப்பளவும் எல்லையும் மத்திய அரசின் விதிமுறைகளினால் மேலும் கட்டுப்படுத்தப்பட்டு மாகாணச் செலவினங்களின் நிதியிடல் போக்கையும் ஒழுங்கையும் மேலும் மட்டுப்படுத்தி உள்ளன. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எல்லைக்குள் சொந்த வளங்களைக் கொண்டுள்ளமையால் மாகாணங்கள் எப்போதும் தமது செலவினத் தேவைகளுக்காக மத்திய அரசின் மாற்றல்களிலேயே தங்கியுள்ளன. தமது சொந்த வளங்கள்மீது அவற்றின் செலவினப்பங்கு 18வீதமான நிலையாயுள்ளது. எனவே, ஒட்டுமொத்தமான இந்த நிலைமை மாகாண நிதி சம்பந்தமான செயல்திறன் குறித்த வினாவை எழுப்புகிறது.

ஆ). மாகாண நிதிகளிற்கான கட்டமைப்பு வரையறைகள்

மேற்காட்டப்பட்ட விடயங்களிலிருந்து பல்வேறு வகையான முக்கிய போக்குகள் மாகாணங்களின் நிதித்துறைசார் அமைப்பில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மொத்த அரச செலவினங்களில் 10வீதமான மாகாண செலவீட்டுப் பங்கானது, அத்தகைய நிதிஅளிப்பு போதுமானதா என்ற சந்தேகத்தை எழுப்புகிறது. மாகாணங்களின் வருமானத்துக்கும் செலவினத்துக்குமிடையே தென்படும் பாரிய இடைவெளி பெருமளவில் செங்குத்தான சமமின்மையை ஏற்படுத்துவதையும் தனது வளங்களுக்காக மாகாணங்கள் மத்திய அரசில் தங்கியிருக்க வேண்டிய சூழலையும்

உருவாக்குவதுடன், மாகாணங்களின் நிதிச் சுயாதீனம் உண்மையிலேயே உள்ளதா என்ற கேள்வியையும் எழுப்புகிறது. ஒரு சமபங்கீடற்ற பெரிய பங்கினை சமூக அபிவிருத்திக்கான வழங்கல் சேவைகளுக்காகவும் மனிதவள அபிவிருத்தி வழங்கல் சேவைகளுக்காகவும் (கல்வி, சுகாதாரம்) ஏறத்தாழ 85வீதம் செலவுகளுக்கான பொறுப்புக்சூறல வரவு - செலவுத் திட்டத்தில் காணப்படுகிறது. அதேவேளை, பொருளாதார அபிவிருத்திக்காக மாகாணங்களுக்கென ஒதுக்கப்பட்ட செலவினம் முக்கியத்துவமற்றதாக உள்ளது. உதாரணம்: விவசாயம் 1.75%, கைத்தொழில் 1.0%, உட்கட்டமைப்பு 2.50% என்பவை குறிப்பிடத்தக்கன. தனியான சம்பளங்களில் அதிகளவு கூடிய பங்கு மாகாண மீண்டுவரும் செலவினங்களில் ஏறத்தாழ 80% வீத அளவு மாகாணச் செலவீடாகும். இதனோடு தொடர்ந்து ஆகக் குறைந்தளவு செலவு மொத்த மாகாண செலவினத்தில் முதலீட்டுச் செலவாக உள்ளது. ஏறத்தாழ இது 10% மொத்த மாகாணச் செலவீடாகும் (1991ல் இது 28%மாக இருந்தது, மேற்காட்டிய அமைப்பும் போக்கும் மாகாணங்கள் வழங்கும் நிதிசார் செயல்திறனின் தரத்திலும் தொகையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

இ). வளப் பகிர்வின் செயற்பாட்டு வரையறைகள்

நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கான தெளிவான இலக்கு மாகாணங்களின் தேவைகளை எதிர்கொள்ள மாகாணங்களின் சேவைகள் வழங்கலுக்கான நிதியை மாகாணங்கள் உறுதிப்படுத்துவதுமாகும். இதன்விளைவாக, ஆள்வீத வருமானத்தில் காணப்படும் வித்தியாசத்தைப் படிப்படியாகக் ஒவ்வொரு மாகாணத்துக்குள்ளும் குறைத்தலும் ஆகக்கூடிய ஆள்வீத வருமான வேறுபாடு மாகாணங்களுக்கிடையே காணப்பட்டால் அதனைக் குறைத்தலுமாகும். நிதித்துறைசார் அதிகாரப் பரவாக்கலில் இது உண்மையிலேயே யதார்த்தமான இலக்கை உடையதுதானா என்ற பிரச்சினையை எழுப்பினாலும் நிதித்துறைசார் கொள்திறனை மாகாணங்களில் உருவாக்கி அடிப்படைச் சேவைகளை ஆகக்குறைந்த தரத்திலாவது வழங்க வேண்டுமென்று மிகவும் அவசியமாகிறது. இது அதிகாரப் பரவலாக்கலை அர்த்தமுள்ளதாக்கும். மாகாண நிதி முடிவெடுக்கும் திறனுடையதாய சேவை விநியோகப் பொறுப்புக்களில் திறமையான செயற்பாட்டுடன் செயலாற்ற இடமளிக்கப்பட்டல் வேண்டும். சமப்படுத்தப்பட்ட கொள்திறன்மூலம் சமமின்மை உருவாக்கக்கூடாது என்ற உறுதிப்பாட்டை முன்னெடுத்தாலும், இப்போது காணப்படும் தெளிவான நிலைமை என்னவென்றால் மாகாண நிதி மூலம் தரம் வாய்ந்த அடிப்படைச் சேவைகளை வழங்குவதற்கு சில மாகாணங்கள் முடியாமலிருப்பதாகும்.

ஈ) .மாகாண நிதிப்பிரயோகம்

மாகாண நிதித்துறைசார் ஆட்சி சம்பந்தமாக கவனத்திலெடுக்க வேண்டிய பல பரப்புக்கள் உள்ளன. அரசியல் நிர்ப்பந்தங்கள் அதிகமாகவும் நல்ல பொது நிதி முகாமைத்துவம் அடுத்தபடியாகவும் மாகாண

நிதிப்பிரயோகத்துக்கு வழி அமைக்கின்றது. வளங்களை ஒதுக்குவதில் வெளிப்படையற்றதன்மை குறிப்பாக, இரண்டு மாகாண அமைச்சுகளுக்கிடையேயான முதல் செலவினங்களில் காணப்படுகிறது. உண்மையில், வளங்களை ஒதுக்கும் தீர்மானங்களில் பங்கேற்பு குறைவாகவே உள்ளது. குறிப்பாக, மாகாண நிதி முகாமையில் மாகாண சபை அங்கத்தவர்கள் தங்கள் வகிபாகம் பெயரளவில்தான் என உணரும்போது பங்கேற்பு குறைகிறது. மாகாண அரசியல்வாதிகள் மாகாணச் செலவீட்டு முகாமைத்துவத்தில் பலமான அதிகாரக் கட்டுப்பாட்டினைக் காண்கிறார்கள். அரசியல்சார்ந்த அதிகார வகிபாகத்தையும் பொறுப்புகளையும் உடைய மாகாணப் பொது நிதி பற்றிய சரியான விளக்கம் யாருக்கும் தெரியாது. சந்தர்ப்பம் நோக்கிய இத்தகைய கவனிப்புக்கள் குறிப்பிடத்தக்க சமமின்மையை விடயங்களுக்கிடையிலான நிதி ஒதுக்கீடுகளில் பிரதிபலிக்கின்றன. பொருளாதார சேவைகளுக்கான வழங்களில் குறைந்தளவு பகிர்வு வழங்கப்பட்டுள்ளது.

மாகாணங்களின் திட்டமிடும் ஆற்றல், திட்டமிடுதலிலும் செலவு செய்வதிலும் • கண்காணிப்பதிலும் மீளாய்வு செய்தலிலும் குறைந்தே காணப்படுகிறது. பொதுக் கணக்களிப்புத் தகைமையும் மாகாணச் செலவு அடிப்படையில் காணப்படவில்லை.

ஆளுநரும் முதலமைச்சரும் மாகாண நிதியைப் பொறுத்தவரை முக்கிய அதிகாரங்களைப் பிரயோகப்படுத்துகின்றனர். ஆளுநர் மாகாண நிதிச் சட்டங்களை உருவாக்கி நிதி அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பதும், நிதி மந்திரிய ஆகிய முதலமைச்சர் வருடாந்த நிதி அறிக்கையை அறிமுகப்படுத்தி சபையை வழிநடத்துவதோடு மாகாண நிதியத்திலிருந்து காசை மீளெடுப்பதற்குமான ஆணைப்பத்திரத்தையும் கையெழுத்திடுவார். கணக்காய்வு ஆணையாளர் நாயகம், மாகாண சபையின் நடவடிக்கைகள் சம்பந்தமான ஆளுநரிடம் சமர்ப்பிப்பார். அது சபை முன்னால் வைக்கப்படும். மாகாண முதலமைச்சர் மீண்டும் அறிக்கைமீதான கலந்துரையாடலை மாகாணப் பொதுக் கணக்குக் குழுவில் வழிநடத்துவார். மாகாண நிதி சம்பந்தமாக ஆளுநருக்கு முதலமைச்சருக்குமிடையே குறைந்தளவு பேச்சுவார்த்தையே பல மாகாணங்களில் இடம் பெறும்.

உ). தற்போதைய மாகாண நிதிப் பிரயோகத்திலிருந்து தோன்றும் அதிகாரப் பரவலாக்கற் கரிசனைகள்

இந்த வகையில் ஒன்றரை தசாப்பதகால அதிகாரப்பரவலாக்கம் வளங்கள் பகிர்வைப் பொறுத்தவரை ஒரு அர்த்தமுள்ள தன்மையை ஏற்படுத்தவில்லை. அரசியல் யாப்பின்மூலமான அதிகாரப் பரவலாக்கல் இலங்கையில் யதார்த்த முறைமை அதிகாரப் பரவலாக்கலைவிட ஒருமிப்பற்ற தன்மையையே காட்டுகிறது. ஒரு சிறிய அளவிலான பரவலாக்கப்பட்ட

செலவுகள் மத்திய மாகாண இரட்டிப்புடைய ஒன்றின் மேலொன்றான தன்மையை மாகாண விடயங்களில் ஏற்படுத்துகின்றன. இது இலங்கையின் அதிகாரப் பரவலாகக்கலில் உள்ள துரதிர்ஸ்ட நிலையையே உணர்த்துகிறது.

பல மாகாண சேவைத் தொழிற்பாடுகளில் ஒருமைப்பாடற்ற தன்மை அதிகாரப்பரவலாக்கலின் விளைவாகக் காணப்படுகிறது. மேலும், மத்திய அரசு மாகாண அரசில் ஆதிக்கம் செலுத்துவதால் அதன் விளைவாக, பொறுப்புக் குறைந்த நிலைமையை ஏற்படுத்தி அதன்மூலம் குழப்ப நிலையையும் மாகாண மட்ட சேவை விநியோகத்திலும் பொறுப்பிலும் ஏற்படுத்தி உள்ளது.

விதப்புரைகள்

1. மத்திய அரசுக்கும் மாகாணங்களுக்குமிடையேயான நிதிமாற்றல்கள் சமமான தன்மை, நம்பகத்தன்மை, வெளிப்படைத்தன்மை, செயற்திறன்மிக்க தன்மை பொருந்தியதான ஓர் அளவீட்டு அலகு தயாரிக்கப்படுதலும் அறிமுகப்படுத்தப்படுதலும் அவசியமாகும்.

2. மாகாணங்களின் நிதி ஆற்றலைச் சமப்படுத்தும் வகையில் இறைவரிவருமானப் பங்கேற்புக்கான ஒரு வழிமுறையை அறிமுகப்படுத்துக.

3. சேவை விநியோகத்தைப் பலப்படுத்துவதை இலக்காகக் கொண்டு மாகாண சபைகளின் தரத்தையும் செயற்றிறனையும் சுட்டிக்காட்டும் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துக.

4. கொடைகளுக்குப் பதிலாக பாதிப்பங்கு கடன் நிதி வழங்கலை அறிமுகப்படுத்தி மாகாண அபிவிருத்திச் செலவினங்களை ஊக்குவிக்குப்பதை நோக்காகக் கொண்டு மூலதன நிதியை மீளாய்வு செய்க.

5.4 நிதி ஆணைக்குழுவின் வகிபாகப் பங்கும் பொறுப்புகளும்: மத்திய – மாகாண நிதித்துறைசார் தொடர்புகளை ஒருங்கிணைத்தல்

13ஆவது திருத்தச் சட்டம்மூலம் ஸ்தாபிக்கப்பட்ட நிதி ஆணைக்குழு பரவலாக்கப்பட்ட நிதி நடவடிக்கைகளில் மத்தியஸ்தம் வகிக்கிறது. அரசியல் யாப்பு சார்ந்த மத்தியஸ்தராக உள்ள நிதி ஆணைக்குழு மாற்றல்களின் தன்மையையும் சமத்துவத்தையும் ஒதுக்கீடுகளில் வெளிப்படைத் தன்மையையும் மாகாணங்களுக்கான மாற்றல்கலில் சமமான பகிர்வையும் உறுதிப்படுத்த வேண்டும்.

நிதி ஆணைக்குழு ஐந்து (05) அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளது:

அ). மத்தியவங்கி ஆளுநர்

ஆ). திறைசேரிச் செயலாளர்

இ). ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மூன்று அங்கத்தவர்கள். இவர்கள் மூன்று பிரதான சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் சிறந்த செயலாற்றலிலே தம்மை முதன்மைப்படுத்தியவர்களாவார். நிதி, சட்டம் நிர்வாகம், வர்த்தகம் கல்வி ஆகிய துறைகளில் முதன்மை உடையவர்களாவார்.

நிதி ஆணைக்குழுவின் யாப்பு ஏற்பாடுகள் மூன்று பொறுப்புக்களை உள்ளடக்கியுள்ளது:

அ). அரசாங்கத்துடன் கலந்தாலோசித்தலும் சிபாரிசு செய்தலும். மாகாணங்களின் தேவைக்கேற்ப வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்வதற்காக தேவைகளை நிறைவேற்றும் போதியளவு நிதியை ஒதுக்கீடு செய்தல். இந்த வகையில் நிதி ஆணைக்குழு ஜனாதிபதிக்கு சிபாரிசுகளை மேற்கொள்ளும்.

ஆ). கொள்கைகளை வகுத்து அதனடிப்படையில் மாகாணப் பாவனைக்கான அரசாங்கத்தினால் வருடாந்தம் நிதி வழங்குதலை ஏற்படுத்தலும் மாகாணங்களுக்கிடையே சமமாகப் பங்கிடுதலும்.

இ). மாகாண நிதி சம்பந்தமாக ஜனாதிபதியினால் ஆணைக்குழுவுக்கு விதந்துரை செய்யப்பட்ட ஏனைய விடயங்கள்.

மேற்கூறிய பொறுப்புகளின் செயல்திறன் சம்பந்தமாக ஆணைக்குழு தனது செயற்பாடுகளைத் தீர்மானம் செய்யும். பாராளுமன்றம், சட்டம்மூலம் ஒப்படைத்த கடமைகளையும் அதிகாரங்களையும் செயற்படுத்தும்.

அரசியல் யாப்பின்மூலம் நிதி ஆணைக்குழு சமர்ப்பித்த ஒவ்வொரு சிபாரிசையும் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதுடன், அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும். அத்தகைய நிதியின் போதுமான தன்மை அளவு குறித்து எந்த நீதிமன்றமும் விசாரணை செய்யாது. விளக்கம் அளிக்காது எந்த சட்ட விதிகளையும் தீர்மானிக்கவோ ஏற்றுக் கொள்ளவோ முடியாது. நிதி ஆணைக்குழு வகுத்த கொள்கைகளில் எந்த சிபாரிசும் இடம் பெறலாகாது.

பல யாப்பு ஏற்பாடுகள் நிதி ஆணைக்குழுவின் மாகாண நிதிமீதான வகிபாகத்தின் பிரச்சனைக்குரியதும் முக்கியத்துவத்துவமுடையதுமான குறைத்து மதிப்பிடுகின்றன.

1). மாகாணங்களின் தேவைகளைத் தீர்மானிப்பதிலான பொறுப்பு ஒப்படைப்புக்கள்.

2). நிதி, ஆணைக்குழுவின் சிபாரிசுகள் ஜனாதிபதிமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதுடன் அதன்மூலம் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் அவர் அறிவிப்பார்.

3). நிதியின் போதுமான அளவை பற்றிய எந்த வினாவும் எழும்போதோ எந்த சிபாரிசும் கூறப்படுமிடத்தோ அல்லது நிதி ஆணைக்குழுவினால் வகுக்கப்பட்ட கொள்கைமீது நேர் விசாரணைகள் நடைபெறலாகாது. நீதிமன்றம் அல்லது விசாரணைக்குழுவினால் முன்மொழியப்படுவதோ வேறெந்த முறையிலும் ஏற்றுகொள்ளப்படுவதோ தீர்மானிக்கப்படுவதோ அல்லது விலக்கப்படுவதோ முடியாத விடயமாகும்.

நிதி ஆணைக்குழு கையாளும் முக்கியமான செயற்பாட்டுப் பரப்புக்கள் கீழ்வரும் அரசியல் யாப்பின் ஏற்பாடுகளை அடியொற்றியதாக அமைகிறது:

அ). மாகாணங்களின் தேவைகள் மதிப்பீடு

மாகாணங்களின் தேவைகள் பற்றிய கணிப்பீடானது நிதி ஒதுக்கீடுகள், பங்கிடுதல் என்பவற்றை ஒழுங்குபடுத்தலில் மத்திய இடத்தை வகிக்கிறது. மாகாணங்களின் தேவைகளைக் கணிப்பிடும் நடைமுறையானது மாகாணங்கள் எதிர்வரும் நடப்பு நிதியாண்டில் மாகாணங்கள் நிதிக்கோரிக்கையை சமர்ப்பிப்பதன் அடிப்படையிலே எழுகிறது. இந்த நோக்கத்துக்கான சில வழிகாட்டல் முறைகளை நிதி ஆணைக்குழு வருடாந்தம் வகுத்துக் கொடுக்கிறது.

ஆ). மாகாணங்களின் நிதிசார் தேவைகள் சம்பந்தமாக அரசாங்கத்துடன் கலந்தாலோசனை செய்தலும் சிபாரிசுகளை முன்மொழிவு செய்தலும். ஒட்டுமொத்தமான நிதித்துறைசார் தேவைகள் தொடர்பாக நிதித்தேவையின் அளவை நிர்ணயிப்பதனை மாகாணங்களின் தேவைகளின் கணிப்பீடு உள்ளடக்குகிறது. மாகாணங்களின் கணிப்பிடப்பட்ட செலவுத் தேவைகளை ஒன்றிணைப்பதும் எல்லா மாகாணங்களுக்குமான மொத்தத் தேவைகளாகக் கருத்திலெடுப்பதும் நடைமுறையாகும். இந்த அடிப்படையில் தேசிய வரவு - செலவுத் திட்டத் திணைக்களத்துடன் பேரம் பேசலாம். நிதி அமைச்சைச் சேர்ந்த தேசிய வரவு - செலவுத் திணைக்களத்துடன் மாகாணங்கள் தமது தேவைகள் சம்பந்தமான ஆலோசனைகளை சிபாரிசுகளை செய்வது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இ). மாகாணங்களுக்கிடையேயான நிதிப்பங்கீடு குறித்து ஜனாதிபதிப்புபதிக்கு சிபாரிசு வழங்கல்

தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் நிதி ஆணைக்குழுவுக்கு ஒவ்வொரு தொகைக்கொடை விடய தொடர்பில் ஒதுக்கப்படும் மொத்த நிதியின்

அளவை அறிவிக்கிறது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் பகிர்வும் ஒவ்வொரு தொகைக்கொடை விடயமாக வகுக்கப்பட்ட கொள்கை வடிவைப் பின்பற்றுகிறது. நிதி ஆணைக்குழுவானது இந்த நிதிப்பகுப்பினை மாகாணங்களுக்கிடையே பகிர்வது குறித்த சிபாரிசினை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கிறது. மாகாண நிதி தொடர்பாக எழும் பிரச்சினைகள் தொடர்பாக கையாளப்படக்கூடிய நடவடிக்கை வழிவகைகள் உள்ளடங்கிய வருடாந்த அறிக்கையை சமர்பிப்பதுமூலம் செய்கிறது.

ஈ). நிதிப்பயன்பாடு தொடர்பாக தொடர் நடவடிக்கைகள்

இவ்வாறு மாற்றல் செய்யப்பட்ட நிதிப்பயன்பாடு குறித்த நுண்ணாய்வு மாகாணநிதிச் செயல்திறனில் முக்கிய கவனயீர்ப்பை உள்ளடக்கும். அத்தகைய நுண்ணாய்வு தொகைக்கொடையின் செலவிடுதல் குறித்த சாதாரண அறிக்கையிடல் தொடர்பாக ஏற்பாடு செய்யப்படுகிறது. வகையீடு அடிப்படையில் அமைந்த தொடர்பில் வழிகாட்டல்களின் நோக்கத்துக்கான ஒத்தாசைகளையும் விசேடித்த அபிவிருத்திக் கொடையில் மாகாணங்களின் வருமானச் சேகரிப்பில் காணப்படும் செயல்திறனையும் நுண்ணாய்வின் முக்கிய அம்சமாக உள்ளடக்கி உள்ளது.

இவ்வாறு நிதி ஆணைக்குழுவின் ஜனாதிபதிக்கான சிபாரிசுகள் போதுமான உள்ளடக்க எல்லை கொண்டவையாக உள்ளன. அதாவது, மாகாணங்களின் பயன்பாட்டுக்காக அரசாங்கத்தினால் வருடாந்தம் வழங்கப்படும் நிதி சார்பாக "அந்நிதி எவ்வாறு பல மாகாணங்களுக்கிடையே எவ்வாறு பகிரப்படவேண்டிய அளவுகளின் கொள்கையடிப்படையில் நிகழ்கிறது". ஆயினும் பல வருட காலமாக சிபாரிசுகள் மாகாண நிதி சம்பந்தமாக அநேகமாக மாகாண நிதியின் பிரச்சினைகளை எதிர்நோக்குமுகமாகவே அமைந்துள்ளன. மாகாணநிதி சம்பந்தமாக எழும் பின்வரும் பிரச்சினைகளை முகம்கொடுக்க நிதி ஆணைக்குழு செய்த சிபாரிசுகள்:

1) வருடாந்த வரவு - செலவுத் திட்டத்திலிருந்து மாகாணங்களுக்கு கைமாற்றல் செய்வதற்காக நிர்ணயிக்கப்படும் நிதி தொடர்பாக அரசாங்கத்துடன் கலந்தாலோசனை செய்யும் நடைமுறை.

2) மாகாண நிதிசார் விடயங்களில் நிதி அமைச்சுக்கும் மாகாண முதலமைச்சருக்குமிடையேயான மத்தியஸ்தக் கலந்துரையாடல்.

3) ஆணைக்குழவினால் பகிர்வு செய்யப்பட்ட நிதியின் துண்டு விழுதலுக்கானதொகையை வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்தல்.

மாகாணங்களுக்காக வெளியீடு செய்யப்பட நிதி ஒதுக்கு முறையில் காணப்படும் குறை வீழ்ச்சியும் ஒழுங்கின்மை மாகாண சபைகளின் நடைமுறைப்படுத்தல் செலவினத்தினை, நிதியிடலை மோசமாகப் பாதிக்கிறது.

5) மாகாணங்களின் பொது உத்தியோத்தர்களுக்கான சம்பள முற்பணங்களுக்கும் கடன்களுக்கும் கிடைக்கப்பெறும் நிதியானது அவர்களை மிகவும் பயன்குறைந்த நிலைக்குத் தள்ளுகின்றது. உதாரணமாக அவர்களுக்கு சமமான தேசிய உத்தியோகத்தர்களோடு ஒப்பிட்டு அவர்களது மனநிலையையும் வெகுவாகப் பாதிக்கின்றது.

6) மாகாணங்களுக்கான உத்தியோகத்தர் தேவைகளை மீள் பரிசீலனை செய்வதற்கான நடைமுறைகள் தனியார் சம்பளப் பகிர்வு என்பன மாகாணங்களின் மொத்த செலவீனத்தினடிப்படையில் செய்யப்பட வேண்டும்.

7) உள்ளூராட்சி மன்றங்களுக்கு முத்திரைக் கட்டணங்களையும் நீதிமன்றத் தண்டப் பணங்களையும் மாற்றல்கள் செய்தல். மாகாணங்கள் சேகரிக்கும் மேற்படி வருமானங்களின் மாற்றல்களில் தொடர்ச்சியான தவறிழைப்புகள் காணப்படுகின்றன.

இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் "மாகாண நிதி வழங்குதல் கூடுதலாக நடைமுறை சார்ந்ததாகவும், பொருளடக்கம் குறைந்ததாகவுமுள்ளது".

மாகாணங்களைப் பொறுத்தவரை இச்சிக்கலான நிலை உடனடியான செயற்பாடுகளிலுள்ள பிரச்சினைகளை விளக்குகின்றது. நிதியாணைக்குழுவானது தனது யாப்பின்மூலமான ஏற்பாடுகளை பலவிதமான கட்டுப்பாடுகளின் பின்னணியில் செயற்படுத்துகின்றது.

1) கொள்கை ரீதியான அந்தஸ்த்தினை எய்துதலில் தோல்வியடைந்துள்ளது. அதாவது ஜனாதிபதிக்கென சமர்ப்பிக்கப்படும் சிபாரிசுகள் சமகாலத்தில் நிதியமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் அனுமதிக்காக மந்திரி சபைக்கு ஒப்படைக்கப்படுகின்றது.

2) தனது தொழிற்பாடுகளை செயற்றிறனாக்கும் சட்டரீதியான அதிகாரங்களை இழந்துள்ளது.

3) அதனது யாப்பிலமைந்த வகிபாகச் செயல்திறன் மிகுந்த சுதந்திர அந்தஸ்தை நிலைநிறுத்தத் தவறிவிட்டது. அதாவது, அரசாங்கத்துடன் கலந்தாலோசித்தலில் மாகாணத்தின் தேவைகளுக்கான சிபாரிசுகளை செய்ததிலும் தகுதி இழந்துவிட்டது. திறைசேரிச் செயலாளரினதும், நிதியமைச்சின் செயலாளரினதும் உத்தியோகச்சார்பற்ற அங்கத்துவம் ஆணைக்குழுவின் சுதந்திரத்தை மேலும் குறைத்துள்ளன.

4) மாகாணங்களைப் போதியளவு பிரதிநிதித்துவப்படுத்தாமல் "மத்திய நிறுவனமாகவே இருந்துள்ளது". மேலும் மாகாண உத்தியோத்தர்களுடன் அதிகளவிலான கலந்தாலோசனையில் ஈடுபடுவதும் நிதிப்பகிர்வு முறையில் மாகாணங்களுக்கிடையே காணப்படும் வெளிப்படையற்ற தன்மையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

5) நிதியாணைக்குழு கட்டுப்பாட்டாளர் என்ற தவறான அபிப்பிராயத்துக்கு உட்பட்டிருத்தல். மாகாணச் செலவினங்களை நிதி ஆணைக்குழு கண்டும் காணாமல் விடவேண்டும் என்ற பொது அபிப்பிராய்ம நிலவுகின்றது.

6) மத்தியஸ்தர் என்ற வகிபாகத்தை பயனற்றதாகச் செய்கிறது. மாகாணங்களுக்கான போதியளவு நிதிப்பாய்ச்சலை உறுதிப்படுத்தும் மாகாணங்களுக்கான முகவர் என ஆணைக்குழு அவதானிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட வகிபாகத்திற்கென எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளைச் செய்வதில் ஆணைக்குழு தொடர்ச்சியான தன்மையை கொண்டிருக்கவில்லை.

அரசாங்களுக்கிடையேயான நிதித்தறைசார் தொடர்புகளைப் பொறுத்தவரையில் மேற்கூறிய கட்டுப்பாடுள்ள தன்மை. நிதியாணைக்குழுவின் மத்தியஸ்த வகிபாகப் பொறுப்பின் நம்பகத் தன்மையை குறைப்பதாக விளங்குகின்றது. எனவே, வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தின்மூலம் அரசாங்க நிதி ஒதுக்கீடுகள் சம்பந்தமாக நிதியாணைக்குழுவும் அரசாங்கமும் கலந்தாலோசனை செய்ய வேண்டியுள்ளது. இந்த வகைப் பேரம்பேசல் அரசாங்கங்களுக்கிடையேயான நிதித்துறைசார் தொடர்புகளில் மேற்கூறிய கலந்தாலோசனை முறைமை தேவைப்படுகின்றது.

கலந்தாலோசனை முறையில் சம்பந்தப்படுவர்களுக்கு குறிப்பிடப்பட்ட நடைமுறையோ உள்ளடக்கமோ பரப்பளவு நிறைந்த முறைசார் ஒப்பந்தம் எதுவுமில்லை. இக்கலந்தாலோசனைக்காக தேசிய வரவு - செலவுத் திட்டத் திணைக்களத்தோடு ஏற்படுத்தப்பட்ட நடைமுறை, மாகாணங்களின் தேவைகளுக்காக வழங்கப்படும் மீண்டு வரும் செலவீனங்களுக்கும் பரந்துள்ளது. மீண்டு வரும் செலவீனங்களுக்கும் முதல் செலவீனங்களுக்கும் அளிக்கப்படும் பரிகாரமானது, ஒதுக்கீடுகளைப் பொறுத்தவரை மீதி ஒழுங்காகவே அமைகின்றது. கலந்தாலோசனை செயலாற்றலானது, விடயங்கள் தொடர்பாகவும் துறைசார் ரீதியாகவும் துறைசார் அமைச்சுக்கள், திணைக்களங்கள் ரீதியாகவும் தொடர்புபடுத்தப்படாததால் ஒரு முழுமையற்றதாகவும் சேவை விநியோகப் பொறுப்புகளில் அரசாங்க மாகாண பேரம் பேசுதலுக்கு இடமளிக்காததாகவுமுள்ளது. இது பெரும்பாலும் திறைசேரியும் நிதியாணைக்குழுவும் தேவைகளின் கணிப்பீடுகளுக்காகவும் வரவு - செலவுத்திட்ட ஆக்கத்திற்காகவும் மேற்கொள்ளும் நடைமுறைகள் காரணமாக அமைகிறது. மத்திய மாகாண தேவைகளின் அடிப்படையிலமைந்த துறைகளில் இவற்றினது பங்களிப்பு ஒரு தெளிவற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது. அதே

போன்று மாகாணங்களின் தேவைகளைச் சந்திப்பதற்காக வரவு - செலவுத்திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும் நிறுவன ரீதியான ஒழுங்குகள் சேவை விநியோக வகிபாகம் தொடர்பிலும் மத்திய அரசிற்கும் மாகாணங்களுக்குமிடையே பொறுப்பேற்கும் தன்மையிலும் தீர்மானம் எடுக்கும் தன்மையிலும் தெளிவற்ற போக்கை ஏற்படுத்துகின்றது.

அரசாங்கங்களின் மாற்றல்கள் தொடர்பாக வகுக்கப்பட்ட யாப்புக் கோட்பாடுகள் பிராந்தியங்கட்கிடையேயான சமநிலை கொண்ட அபிவிருத்தியை ஏற்படுத்துவதாகவும் வசதி கூடிய மாகாணத்துக்கும் ஏனைய மாகாணங்களுக்குமிடையே ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதாகவும் முக்கியமாக மேல் மாகாணத்துக்கும் ஏனையவற்றுக்குமிடையேயுள்ள இடைவெளியைக் குறைப்பதாகவும் அமையும். ஏற்கனவே கூறப்பட்டவாறு, மாகாணங்களுக்கிடையே மாற்றப்படுவதும் பகிரப்படுவதுமானவற்றை நிர்ணயிப்பதற்கான இலக்குக் கொண்ட வகையீடு பின்பற்றப்பட வேண்டும். இவ்வாறு நிதியாணைக்குழு வருடாந்த வரவு - செலவுத்திட்டத்திலிருந்து மாகாணத் தேவைகளுக்கான ஒதுக்கீடுகளைச் சிபாரிசு செய்கிறது. பிராந்திய அபிவிருத்தியில் ஒரு சமநிலையை ஏற்படுத்துவதற்காக மாகாணங்களுக்கிடையிலான நிதிப்பகிர்வில் கோட்பாடுகளை உருவாக்குகின்றது. ஆனால், நடைமுறையிலுள்ள மாற்றல்கள் முறைமை போதியளவு நிதி வழங்கும் என்பதையோ சமத்துவத்தையும் செயற்றிறனையும் ஏற்படுத்தும் என்பதையோ உறுதிப்படுத்தவுமில்லை கடப்பாடுகள் கொண்டிருக்கவுமில்லை.

வரவு - செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்ட பின்னருங்கூட, நிதியை வெளியீடு செய்வதுடன் தொடர்பான நடைமுறைகள் நிதியாணைக்குழுவின் நம்பகத்தன்மையை குறைக்கின்றது. அத்தோடு மாகாணங்களில் மோசமான செலவீட்டு முகாமைத்துவப் பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றது. இந்நிலைமை, மத்திய அரசு புகுத்தும் செலவு வெட்டுக்களை வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகைகளையும் வெளியீடு செய்யாத தன்மையை ஏற்படுத்துகின்றது. இத்தகைய நிலைமை மத்திக்கும் மாகாணங்களுக்குமிடையே நிதிசார் தொடர்புகளை முகாமைத்தவம் செய்வதில் பிரச்சினையை ஏற்படுத்துகிறது. இது நிதிப் பாய்ச்சல் பிரச்சினைகளை விட மோசமானது. மத்தியில் ஏற்படுத்தப்படும் சீராக்கல்கள் மாகாணங்களின்மீது கட்டாயமாகத் திணிக்கப்படுகின்றன. மாகாணங்களுக்கு இது சம்பந்தமாக எந்தத் தெரிவும் கிடையாது. நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கல் பிரதிபலிக்கும் பிரச்சனைகளும் சிக்கல்களும் பரவலாக்கல் செயற்பாடுகளில் இடைவெளிகளை ஏற்படுத்தி நிதியாணைக் குழுவின் வகிபாகத்தையும் செயற்திறனையும் மோசமாகக் குறைத்துள்ளது.

விதப்புரைகள்

1. நிதி ஆணைக்குழுச் சட்டத்தின்மூலமாக அவசியமான செயற்பாடு அதிகாரங்களையும் நடைமுறை ஒழுங்குகளையும் நிதி ஆணைக்குழுவுக்க வழங்கல்.

2. ஆலோசனைக் குழுவொன்றை நிறுவுவதன்மூலம் அவ்வப்போது மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் நிதி நடவடிக்கைகளையும் நிதித்துறைசார் அதிகாரப் பிரதிநிதித் பரவலாக்களையும் மீளாய்வு செய்வதன்மூலமும் இவ்வாலோசனைக் குழுவின் ஊடாக நிதி ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளுக்கு உதவும் வகையில் மாகாணம் தொடர்பான அக்கறையைப் பிரதிநிதித்துவம் செய்தல்.

3. மாகாண நிதிசார் சம்பந்தமான ஆலோசனைகளில் மத்திய நிதி அமைச்சரும் மாகாணங்களின் முதலமைச்சர்களும் பங்கேற்கும் வகையில் நிதி ஆணைக்குழு செயலகமாகச் செயற்படுவதற்கான நிறுவன ரீதியான மன்றமொன்றை நிறுவுதல்.

5.5 நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கலின் திறமையான செயற்பாடும் பொறுப்புக்கூறலயும்: அபிவிருத்தி அடைவின் பெறுபேறுகள்

மாகாணங்களுக்கு அர்த்தமுள்ள வகையில் வளங்களை ஒதுக்கீடு செய்யும் தன்மையை நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கல் ஏற்படுத்தவில்லை. அதாவது, தொடரும் பொதுச் சேவைகளை வழங்கக்கூடிய வகையில் நிதிசார் கொள்திறன் கொண்டதாய் ஒப்படைக்கப்பட்ட பொதுத்தொழிற்பாடுடன் பொருந்தக்கூடிய தன்மையை இது கொண்டுவரவில்லை. பல்வேறுபட்ட பிராந்தியங்களினதும் பல்வேறுபட்ட தேவைகளுக்கும், அதன்மூலம் சமூகங்களுக்கு முகம் கொடுப்பதாயும் பொருளாதார நன்மைகளையே தனது சிறப்பாகவும் கொண்டுள்ள அதிகாரப் பரவலாக்கலில் மாகாண நிதியிடலில் காணப்படும் சமமற்ற தன்மை, அதன் சேவை வழங்கும் கொள்திறனில் கடுமையான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி உள்ளது. பல்வேறு காரணிகள்மூலம் நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கலின் செயற்திறனைக் கட்டுப்படுத்தியுள்ளன:

1. நிதி முகாமைத்துவமானது பங்கேற்பு வகிபாகம் அல்லது பொறுப்பேற்பு சார்ந்த நிலைகளில் மத்தியப்படுத்தப்பட்ட நிலையிலேயே காணப்படுகிறது.

2. அதிகாரப் பரவலாக்கலுக்கு உட்பட்ட விடயங்களில் மத்தியினதும் மாகாணங்களினதும் சமகாலச் செலவீட்டுப் பரப்புகளில் சேவை விநியோக வகிபாகத்திலும் பொறுப்பேற்பிலும் தெளிவில்லாத நிலையே காணப்படுகிறது.

3. மத்திய அரசின் நிதிசார் முகாமைத்துவம் தொடர்பான சட்டங்களும், நடைமுறைகளும் மாகாண நிதியின் அளவை எல்லைப்படுத்தி உள்ளன.

4. மாகாண நிதி ஆட்சி முறைமையில் வளங்களின் பயன்பாட்டில் பங்கேற்பு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல அற்ற நிலையே காணப்படுகிறது.

5. சமப்படுத்தப்பட்ட அபிவிருத்திக்கும் பிராந்திய அபிவிருத்தி வெளியீட்டுக்கும் மாகாணத்தின் நிதிசார்பில் குறைந்தளவு தொடர்பே காணப்படுகிறது.

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கலில்மூலம் எழும் அடிப்படைப் பிரச்சினை என்னவெனில், மாகாணங்களானவை அது வெறும் யாப்பிலமைந்த அந்தஸ்தை உடையதாக அல்லாமல் எவ்வாறு மாகாணங்கள் திறன் வாய்ந்தவையாகவும் கணக்களி தகைமை உடையனவாகவும் அமைக்கலாம் என்பததாகும்.

நடைமுறைப் பிரயோகத்தில் நடைமுறை ஒழுங்குகளிலும் செயற்பாடுகளிலும் மத்திய - மாகாண உறவு குறித்த ஒரு தெளிவான மீள்பார்வை அவசியமாயுள்ளது. அத்தகைய கோட்பாட்டு உட்கட்டமைப்பு தன்னாதிக்க வகைப்படுத்தல் அளவின் அமைக்கப்பட்டதும் போதியளவு இயல்பு, செயல்திறன், சமத்துவம், நடைமுறைச் சாத்திய நிலை உட்கட்டமைப்பு உடையதுமாக இருத்தலுமாகும். இக்கொள்கை உட்கட்டமைப்பானது, மாகாணங்கள் செலவு செய்யும் அதிகாரங்கள் குறிப்பிடப்பட்ட சட்டரீதியான எல்லைக்குள் மக்களின் தேவைகளுக்குப் பதில் கூறுவதாக அமைய வேண்டும் என்பதையும், அத்துடனன்றி பொருளாதாரத்தை ஊக்குவிப்பதாகவும், செலவுச்சுருக்க வழிவகைகளை சேவை வழங்களில் கையாள்வதாகவும் வருமான ஒன்றிணைப்பினை குறிப்பிட்ட சட்ட எல்லைக்குள் ஏற்படுத்துவதாகவும் அமைய வேண்டும்.

மிகப் பொருத்தமான வடிவமைப்பு மாத்திரம் நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கலுக்கான வெற்றியை உறுதிப்படுத்தப் போதுமானதல்ல. அதிகாரப் பரவலாக்கல் மீதான அர்ப்பணிப்பு, நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கல்மூலம் கொண்டு வரப்படும் இயலளவு, நன்மைகளின் லாபங்களை ஏற்படுத்தும் அர்ப்பணிப்பு குறைபாடு, நிறுவனங்களின் அதிகாரம் பரவலாக்கலை எல்லைப்படுத்துவதோடு அவற்றின் அதிகாரங்களை ஏற்றுக்கொள்ளும் தன்மையையும் குறைநிலைப்படுத்தி, சேவைகள் வழங்கும் கொள்திறனையும் மட்டுப்படுத்துகின்றது. சேவை விநியோகப் பொறுப்புகளில் அதிகாரப் பரவலாக்கலானது கருத்துக்கெடுத்தலில் குறைபாடு கொண்ட உட்கட்டமைப்புடைய சேவை வழங்கல் உள்ளே தொழிற்படுகின்றது. அதிகாரப் பரவலாக்கல் முறைமை தொழிற்பட வேண்டுமானால், மாகாணங்களை ஆட்சி சம்பந்தப்பட்ட விடயங்களில் திறமை கொண்டவையாக உருவாக்க வேண்டும்

நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கலில் ஒட்டுமொத்தமான இலக்கு யாதெனில், சமப்படுத்தப்பட்ட பிராந்திய அபிவிருத்தியை ஏற்படுத்துவதாகும். நிதித்துறைசார் உட்கட்டமைப்புமூலம் மாகாண நிதிக்கான எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு, அது பொது சேவை வழங்கலின் இயல்பு, எல்லை, வழங்கல் முறைமை என்பவற்றைப் பாதிக்கிறது. பராம்பரிய மீள்விநியோகமானது மத்திய அரசின் பொறுப்பாகக் கருதப்படுகிறது. ஆயினும், வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை வகுப்பதில், அமுலாக்குவதில் உபதேசிய வழங்குனர்களின் சேவை வழங்கல் பொறுப்பும் வடிவமைப்பும் முக்கிய வகிபங்கை உடையதாகும். ஆயினும், நிதிசார்துறை கொள்திறன் சமப்படுத்தலையும் வளங்களின் பிராந்திய ஒதுக்கீடுகளை சமமான பிராந்திய அபிவிருத்தியை எய்துவதற்கும் பிராந்தியங்களுக்கிடையேயான சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கும் தொடர்பை முகம்கொடுப்பதாக அமைவது முக்கியமானதாகும்.

மனிதவள அபிவிருத்தியில் எய்தப்பட்ட குறிப்பிடத்தக்களவு சாதனைகளைவிட பிராந்தியங்களுக்கிடையே உள்ள சொத்து விநியோகம், அதிகளவு பொருளாதார நடவடிக்கைகள், முக்கியமாக மேல் மாகாணத்துக்குள்ளே காணப்படுதல் என்பவை பிராந்தியங்கிடையேயுள்ள வேறுபாட்டைக் குறைக்க வேண்டிய அவசியத்தினை வெளிப்படுத்துகிறது. வளங்கள் பெறுகையில் காணப்படும் கிடையான சமமற்ற தன்மை தொகை ரீதியாகவும், அடிப்படைச் சேவைகள் வழங்கப்படுவதிலும், சந்தர்ப்பங்களை வாய்ப்புக்கள் உருவாக்குவதிலும் தொடர்ச்சியாக இடைவெளியை ஏற்படுத்துகிறது. பிராந்திய ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படைப் பிரச்சினையாக அமைவது அதன் கிராமியமான இயல்பாகும்.

இலங்கையில் நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கலின் நடைமுறைப்படுத்தல் அனுபவமானது, அரசாங்கத்திக்கிடையேயான மாற்றல் முறைமையின் திறமைச் செயற்பாட்டின் இயலளவு குறித்த வினாவை எழுப்புவதோடு மாகாணங்களின் நிதிசார் ஆற்றலைச் சமப்படுத்தலில் ஊக்குவிப்பளிக்கிறதா என்ற வினாவும் உள்ளது. உற்பத்தியும் உற்பத்திக் காரணி சந்தைகளும் தாராளமயமாக்கப்பட்டும் மத்தியப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் தொடர்ந்தும் பல்மட்ட நிதிசார் ஒழுங்குகளை, பரவலாக்கம் செய்யப்பட்ட தொழிற்பாடுகளில் புகுத்துகின்றன. இலங்கையில் மத்தியப்படுத்தப்பட்ட நிதிசார் நிறுவனங்களின் பிரதான செயற்பாடுகள் / பல்மட்ட முறைமையில் துறைகளிடையே வேறுபட்ட மட்டங்களிலமைந்த கூறுபடுத்தல் நிலைமையை ஏற்படுத்தி உள்ளது. அதேபோல, முதல் சார்ந்த மீண்டுவரும் நிதியிடல் முறையிலுமான வழங்கலில் திறமைக் குறைவை ஏற்படுத்தி மாகாண மட்ட ஏற்றத் தாழ்வினை எதிர்கொள்ளுதலின் வீழ்ச்சியையும் காட்டுகிறது.

மத்தியப்படுத்தப்பட்ட திட்டமிடல், வரவு - செலவுத் திட்ட முறைமை யாப்பு ஆகிய உட்கட்டமைப்புக்குள்ளேயே வளங்களின் மாற்றல் இடம் பெறுகின்றது. அபிவிருத்தித் திட்டமிடல் அணுகுமுறைகள் தொடர்ந்தும் வரவு -

செலவுத் திட்ட நிதியிடலை நிர்ணயிப்பதோடு, தாராளமயமாக்கலின் பின்னரும் சந்தைமயப்பட்ட வளர்ச்சி உபாயங்களைப் பொதுத்துறை வழங்கல் சம்பந்தப்பட்ட பொதுச் சேவைக்கு ஒப்படைத்துள்ளன. குறிப்பாகச் சமீபகாலங்களில் ஊக்குவிப்புக் கருதிய இவ்வொப்படைப்பு வழங்கப்பட்டுள்ளது. சமீபகாலப் போக்கு என்னவெனில், தேசிய வரவு – செலவுத் திட்டத்தின்கீழ் பிராந்திய செலவு நிகழ்ச்சித் திட்டங்கள் அமைந்துள்ளதே ஆகும். மத்திய அரசாங்க முதலீடுகளின் பாதிப்பு பொருளாதாரச் செயற்பாடுகள் மட்டத்திலும், பிராந்தியங்களுக்கான தனியார் முதலீட்டுப் பாய்ச்சலிலும் ஏற்படுத்தப்படுகிறது.

ஆயினும், சமம்படுத்தப்பட்ட பிராந்திய அபிவிருத்தி இலக்குகள் மத்திய அரசாங்க முதலீடுகளால் வளப்படுத்தப்படுவதுடன் அவை பிராந்தியங்களின் வளச் செல்வாக்கையோ, மாகாண வழங்கல் சேவைகளையோ விநியோகத்தையோ பிரதிபலிப்பதில்லை. முதலீடு சம்பந்தமான முடிவெடுத்தல் அரசியல் காரணங்களுக்காகவும் பேரம் பேசும் ஆற்றல், பிராந்தியங்களில் அரசியல் செல்வாக்கு என்பவற்றால் ஊக்குவிக்கப்படுகின்றன.

13ஆவது திருத்தச் சட்டத்தின்கீழ் நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கல்மூலம் அரசாங்கம் பெற்றுள்ள அனுபவமானது வடிவமைப்பிலும் நடைமுறையிலும் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டதேயாகும். நிதியின் மத்தியப்படுத்தப்பட்ட தன்மையிலிருந்து பரவலாக்கப்பட்ட ஆட்சிக்கு மாறும்போது தெளிவற்ற தன்மையும் அர்ப்பணிப்புக் குறைபாடும் கொண்டதாக அமைந்தது. 13ஆம் திருத்தச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட மத்தியப்படுத்தப்பட்ட தன்மையிலிருந்து விலகும் தன்மையானது, தோற்றப்பாட்டில் குறைவானதாகவே உள்ளது. (போட், 1996). அதிகாரப் பரவலாக்கலுக்கு ஏற்புடையதாக நடைபெறும் சீராக்கத்திலுள்ள குறைபாடுகள் ஒரு திறன் குறைந்த பொதுத் துறையை இரட்டைத்தன்மை கொண்டதாக ஆக்கியதோடு சிறந்தவள முகாமைக்கும் சேவைகள் இலக்குக்காகவும் ஏற்படுத்தப்பட்ட பரவலாக்கல் முறைமையின் சிறப்புக்கு எதிர்மறைத் தன்மையை அளிக்கிறது. பரவலாக்கலுக்காக அர்ப்பணிப்பு வழங்கப்படுதலின் வடிவமைப்பு ஒன்றே நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்களை முன்னெடுப்பதாகவும் பொதுச் சேவைகள் வழங்கலுக்கான ஆதரவை அளிப்பதாகவும் விளங்கும். இந்த இரண்டு பாதைத் தடங்களிலும் ஒரே நேரத்தின் இயங்குவது முக்கியமானதாகவும் உள்ளதோடு பாரிய விழிப்புணர்வையும் விளங்கிக் கொள்ளுதலையும் நிதித்துறைசார் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமட்டில் உருவாக்குவதற்கான தேவையும் எழுத்துள்ளது.

அத்தியாயம் - 06

மாகாண சபைகளின் செயற்பாடுகள்: மத்திய - மாகாண உறவுகள்

ரஞ்சித் அமரசிங்க

அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டின் வெற்றி என்பது பெருமளவில் மாகாணங்களின் சுயாட்சிக்கும் மத்திய அதிகாரத்திற்குமிடையில் சமநிலையைப் பேணுவதிலேயே தங்கியிருக்கிறது. இரண்டு மட்டங்களிலும் அரசாங்கங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதால், இறுதிப் பகுப்பாய்வில் அவை மக்களுக்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டுள்ளன. அவை இரண்டும் அதிகாரத்தை மக்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றன. ஆதலால் சமூகத்திற்கு வழங்குகின்ற சேவைகளுக்காக மக்களுக்கு பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளன. மத்திய அரசாங்கம் மொத்தமாக மக்களுக்கு பொறுப்புக்கூற கடமைப்பட்டிருக்க, மாகாணங்கள் அவர்களுக்குப் பொறுப்பாக்கப்பட்டிருக்கும் தொகுதிகளுக்குட்பட்ட மக்களின் விசேட அல்லது குறித்த நலன்களுக்கு சேவையாற்ற கடமைப்பட்டுள்ளன. அந்த வகையில் அவை தேசத்தின் பெருமளவு நலன்கள் குறித்து அதிகளவில் பாரத்தைச் சுமக்க வேண்டியில்லை.

அதிகாரம் பகிரப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கம் என்பது கட்டாயம் இரண்டு மட்டங்களில் இருந்து அதாவது, மத்திய மற்றும் மாகாண அல்லது பிராந்திய (ஏற்பாட்டின் தன்மையைப் பொறுத்து) மட்டங்களில் தீர்மானம் எடுத்தல் மற்றும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் அல்லது நிர்வகித்தல் வேலையைச் செய்யவேண்டியிருக்கிறது. அதிகாரங்கள் தெளிவாக எந்தவித குழப்ப நிலையுமின்றி, ஒன்றிலொன்று கலக்காத வகையில் இறுதியாக வழங்கப்பட்டிருக்கின்றபோதும்கூட, இரண்டு மட்டங்களுக்குமிடையில் சுதந்திரம் என்பது தவிர்க்க முடியாததாகவுள்ளது. சமஷ்டி முறைகளில் பொதுவாக இந்தச் சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் வகையில் பொதுவாக ஒவ்வொருவரையும் பங்குதாரர்களாக நடாத்தும்வகையில், இரு வகை அசாங்கங்களுக்குமிடையில் ஆழமாக ஆலோசனைகளையும், கூட்டுறவினையும் இணைப்பினையும் அவசியப்படுத்தும் நடைமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ள குறித்த அதிகாரப் பகிர்வு மாதிரியில் மத்திய - மாகாண உறவுகளின் தன்மையின் தனித்துவமான பண்பாக மத்தியிலுள்ள அரசாங்கத்தின் ஆதிக்கம் என்பது சிறப்புப் பெற்று நிற்கிறது. விபரமாகக் கூறினால், இரண்டு அரசாங்க மட்டங்களுக்குமிடையேயான உறவு என்பது இரண்டு பரிமாணங்களைக் கொண்டது: அதாவது ஒன்று

கட்டமைப்புச் சார்பானது மற்றையது அரசியல் சார்பானது. இரண்டு மட்ட அரசாங்கத்தினதும் அரசிலமைப்புசார் மற்றும் சட்ட அந்தஸ்து, நிர்வாகத்தைக் கொண்டுநடாத்துவதற்குத் தேவையாக உருவாக்கப்பட்ட நிறுவனம்சார் ஏற்பாடுகள், மற்றும் வழங்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்களின் சிறப்புத் தன்மை என்பன கட்டமைப்புப் பரிமாணத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. தேசிய அரசியற் கட்சிகளின் பங்கு, அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது தொடர்பில் நிலவும் அல்லது இருக்கும் மனோநிலைகள், மத்திய மற்றும் மாகாண அரசியல், நிர்வாக மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கிடையில் உள்ள உறவுகள் என்பன அரசியல் பரிமாண நிலையை வெளிப்படுத்தி நிற்கின்றன. இந்த இரு நோக்குகளிலும் மத்தியின் ஆதிக்கம் என்பது தெளிவாகத் தெரியக்கூடிய ஒன்றாக உள்ளது. இந்த ஆய்வானது, இந்த இரு விடயங்களையும் மத்திய மற்றும் மாகாண நிர்வாகத்தில் நிறுவனம்சார் மற்றும் நிறுவனம் சாரா செயற்பாட்டாளர்களின் உள்ளூர் மட்டச் செயற்பாட்டில் குறிப்பாக, மத்தியில் மிகவும் மத்தியமயமான அதிகார முறைமையின்கீழ், மக்களுக்குச் சேவைகளை வழங்குதல் எனும் சூழ்நிலையில் முக்கிய கவனத்தைச் செலுத்திப் பரீட்சிக்கும்.

6.1 மத்திய-மாகாண உறவுகளின் கட்டமைப்புச் சூழ்நிலை

இலங்கையில் மத்திய - மாகாண உறவுகளின் தன்மையைத் தீர்மானிக்கின்ற நிறுவனம்சார் மற்றும் நிறுவனம்சாரா காரணிகள் குறித்து ஏற்கனவே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நிறுவனம்சார் காரணிகளின் வகை என்பது முக்கியமாக 13 ஆம் திருத்தச் சட்டம் மற்றும் நாட்டின் பரந்த அரசியலமைப்பு ஏற்பாடு, 1987 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தினூடாக நிறுவப்பட்ட நடைமுறையிலிருக்கும் நிர்வாக இயந்திரம் மற்றும் நிறுவனங்கள், சட்டவிதிகள் என்பவற்றை உள்ளடக்குகிறது. மிகவும் பரந்த ஒரு மட்டத்தில் மாகாண சபைகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு மத்திய நிறுவனங்கள் என்பவை, எந்தப் பகிரப்பட்ட அதிகாரங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற பரந்த சட்டகத்தை வழங்குகின்றன. இந்த நிறுவனங்களில் மத்திய மற்றும் மாகாணக் கணக்குகளைக் கண்காணிக்கும் கணக்காளர் நாயகம், மத்திய மற்றும் மாகாண மட்டத்தில் உறுப்பினர்களுக்கான தேர்தல்களை நடாத்தும் தேர்தல் ஆணையாளர், எங்கும் நிதி மற்றும் வங்கியியல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் மத்திய வங்கி என்பன உள்ளடங்குகின்றன. 13 ஆம் திருத்தச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட தேசிய நிதி ஆணைக்குழு வருமானங்களைப் பங்கீடு செய்வதற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளதுடன், நிதி வளங்களைப் பங்கீடு செய்வதற்காக சமநிலைப்படுத்தும் சூத்திரமாகப் பணியாற்றுகின்றது. தொழில்சார் பயிற்சிகளுக்கான தரங்களைக் கண்காணிப்பது என்பது, பல்வேறு மத்திய அமைப்புக்களால் மேற்கொள்ளப்படுகின்றது. மறுபக்கத்தில், மாகாண சபைகள் நாட்டின் சட்டத்திற்கு உற்பட்டு வேலைசெய்ய வேண்டப்படுகின்றன. மேலேகூறிய எல்லா நிறுவனங்களாலும் உட்வாக்கப்படுகின்ற வழியலகுகளுக்குள் இருந்தே

அவைகள் அரசியலமைப்பு மற்றும் மாகாண சபைகள் சட்டத்தினூடாக ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்துதல் விடயத்தில் பணியாற்ற வேண்டியுள்ளது. விடயங்களைப் பங்கீடு செய்தல் எனும் விடயத்தில் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்க நிலை என்பது 13 ஆம் திருத்தச் சட்டத்தின்கீழ் நன்கு பதியப்பட்டுள்ளது. விடயங்களைப் பங்கீடு செய்தலில் அதற்கான எல்லை என்பது பரந்தது. அத்துடன் ஒதுக்கப்பட்ட விடயங்களிலும் தொழிற்பாடுகளிலும் தேசிய கொள்கைகளை உருவாக்கும் ஒரே ஒரு அதிகார சபையாக இருப்பதனூடாகவும் ஒதுக்கப்பட்ட எல்லா அதிகாரங்களையும் அனுபவிப்பதனூடாகவும் மத்திய அரசு மேலும் பலமடைகின்றது[1]. இந்த நிலையானது, எல்லா மாகாண சபைகளுக்கும் பொதுவாக வழங்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில், அது மட்டும் கட்டுப்படுப்படுத்தும் ஆற்றல் ஊடாகவும் மேலும் மாகாணங்களுக்கிடையிலானவைகள் என்கின்ற தன்மையைப் பொறுத்தும் மேலும் பலப்படுத்தப்படுகிறது. அதேவேளை, எல்லா மாகாணங்களுக்கும் பொதுவான விடயங்களைக் கையாளுதல் விடயத்தில் உதாரணமாக மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து, நீர்ப்பாசனம், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இன்னும் பல விடயங்கள் தொடர்பில் தீர்மானம் எடுத்தலில் மாகாண சபைகள் பங்குதாரர்களை ஏற்படுத்த முடியாது. மாகாணப் பிரதிநிதித்துவத்திற்கு இடம் வழங்குகின்ற மாகாணங்களுக்கிடையிலான சட்டபூர்வ சபை (statutory body) எனும் ஒரே ஒரு அதிகாரபூர்வ நிறுவனமாகிய தேசிய நில ஆணைக்குழு (National Land Commission)[2] மாகாணசபைகள் உருவாக்கப்பட்டு 20 ஆண்டுகள் கடந்துள்ளபோதிலுங்கூட, இன்னும் உருவாக்கப்படவில்லை.

மாகாண சபைகளுக்கான நிதிகள் தொடர்பிலான மிகவும் விமர்சனத்திற்குரிய ஒரு அமைப்பான தேசிய நிதி ஆணைக்குழு (National Financial Commission) முழுவதும் மத்தியரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஒரு அமைப்பாகத் தொடர்ந்துமுள்ளது. மத்திய வங்கியின் ஆளுநரும் நிதியமைச்சின் அல்லது திறைசேரியின் செயலாளரும் அதன் நிரந்தர உறுப்பினர்களாக இருக்க ஜனாதிபதியால் தெரிவுசெய்யப்படும் மேலும் மூன்று உறுப்பினர்களையும் இது உள்ளடக்கிக் காணப்படுகின்றது. மாகாண சபைகளின் தேவைகளைப் புரிந்துகொள்ளக்கூடிய நிதி ஆணைக்குழுவை ஆக்குவதற்கான ஒரு முயற்சி அதாவது, மாகாண சபைகளுக்கு நிதிகளை ஒதுக்கீடு செய்கையில் எந்த அணுகுமுறை பின்பற்றப்பட்டது என்பதை மீளாய்வு செய்வதற்கு மாகாண சபைகளின் பிரதிநிதிகளின் பங்களிப்பைப் பெறுவது அல்லது அக்குழுவுக்கு

[1]Constitution of Sri Lanka, Ninth Schedule, Appendix 2, Section 3.1-4.
[2]The practice adopted by the Commonwealth Grants Commission of Australia under similar circumstances is instructive, see John Kincaid and Allan Tarr (eds.) *Constitutional Origins, Structures, and Change in Federal Countries*, Forum of Federations, McGill-Queens University Press, Ithaca,2005.p.50.

உறுப்பினர்களை நியமிக்கும்போது, மாகாண சபைகளின் விருப்பத்தினைப் பெறுவது எனும் ஏற்பாடானது, மாகாண சபைகள் எதிர்கொண்ட நிதிப்பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்கான ஒரு நீண்டகால வழிமுறையாக இருந்துவந்துள்ளது[3]. மேலும், இந்தியாவின் நிதி ஆணைக்குழுவைப் போலல்லாது, இலங்கையிலுள்ளது ஒரு சுதந்திரமான அமைப்பு. அது மாகாண சபைகளின் நிதி ஒழுங்குகளைக் கண்காணிப்பதுடன் மாகாண நிதி நிர்வாகத்தில் தலையீடு செய்யும் ஒரு மத்திய ஆயுதமாக தோற்றமளிக்கும்படியும் அதனை ஆக்கியுள்ளது.

இரண்டுமட்ட அரசாங்கங்களிலுமுள்ள தலைவர்கள் ஒன்றாகக் கூடியிருப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்ற எந்தவொரு தனியான அதிகாரபூர்வ அமைப்பும் இங்கே இல்லை என்பது உண்மையில் மத்திய - மாகாண உறவுகள் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. தற்போதுள்ள முறைமையின்கீழ் இரு நிர்வாகத்திற்கும் ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் முறையாகச் சந்திப்பதற்குக்கூட எந்தவொரு ஏற்பாடும் இல்லை. மாகாண சபை உருவாக்கப்பட்ட ஆரம்ப காலத்தில்கூட ஜனாதிபதியினால் தலைமை தாங்கப்பட்ட முதலமைச்சர்கள் கூட்டங்கள் நடந்தேறின. இவை ஒரு தற்காலிக கூட்டங்களாகவே காணப்பட்டபோதிலும், மாகாணத் தலைவர்களுக்கு ஒரு குழுவாக நாட்டின் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு இவை சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தன. இந்தக்கூட்டங்கள் பின்னர், கீழ்த்தரத்திற்கு கொண்டவரப்பட்டு ஜனாதிபதியின் செயலாளருக்கும் முதலமைச்சர்களுக்குமிடையிலான கூட்டங்களாகக் கூட்டப்பட்டன. தற்போது ஜனாதிபதியானவர் மாதத்திற்கு ஒருதடவை அமைச்சரவைக் கூட்டங்களுக்குப் பின்னர் முதலமைச்சர்களைச் சந்திக்கும் நடைமுறை உள்ளது. ஆனால், அது மீண்டும் தொடர்ச்சியாக நடைபெறாத ஒன்றாக மாறியிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் தலைவர்களின் தேவைக்கு அல்லது விருப்பத்திற்கேற்ப இவ்வாறான நிரந்தரமற்ற கூட்டங்களுக்கு அப்பால் ஒரு முறையான அடிப்படையில் மாகாணத் தலைவர்களுடன் மத்திய தலைவர்கள் தொடர்பாடல் புரிவதற்கான எந்தவொரு சந்தர்ப்பமும் இல்லை எனலாம். அவ்வாறே இரு அரசாங்கமட்டத்தையும் பாதிக்கும் விடயங்கள் தொடர்பில் இணைந்த தீர்மானம் எடுப்பதற்குக்கூட இங்கு எந்த சந்தர்ப்பமும் இல்லை. முதலமைச்சர்கள் மாநாடு ஒரு நிலைக்குத்தான ஏற்பாடாக இருக்கின்றபோதிலும், எல்லா மாகாண முதலமைச்சர்களையும் மத்தியிலும் மாகாணங்களிலுமுள்ள எல்லா சிரேஷ்ட நிர்வாகிகளையும் மாகாணங்களின் நலன்கள் குறித்த விடயங்களில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கான சில சந்தர்ப்பங்களையும் நுட்பங்களையும் அது வழங்குகின்றது. இது விடயத்தில் முதலமைச்சர்களானவர்கள் மிகக்கூடிய ஆர்வம் செலுத்துவதுடன், இந்த மாநாட்டை முறையாக நிறுவனப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி மத்தியரசாங்கத்தைத் தொடர்ந்தும் வேண்டிக்கொண்டே உள்ளனர். ஆனாலும், மத்தியரசாங்கம் இது விடயத்தில் இதுவரை எந்த விருப்பத்தையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

6.2 மத்தியிலும் மாகாண சபைகளிலும் அமைச்சுக்கள்

மாகாணங்களின் அமைச்சானது மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட காலங்களில் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்குமிடையிலான இணைப்பு உறவை ஏற்படுத்தும் ஒரு மன்றமாக இருக்கும் என்ற சிறப்பு நோக்கோடு உருவாக்கப்பட்டு இன்றுவரை செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இது, மத்தியரசாங்கத்தின் கையிலுள்ள ஒரு தெளிவான ஆயுதம். அதாவது, இது மாகாண சபைகளுக்கான நிதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஒரு கால்வாயாக சேவை செய்ய வேண்டப்படுவதுடன் மாகாண சபைகளுக்கும் மத்தியிலுள்ள பல்வேறு அதிகார சபைகளுக்குமிடையில் ஒரு பாலமாகச் செயற்படுவதற்கும் வேண்டப்படும் ஒரு நிறுவனமாகும். இதன் உருவாக்க காலகட்டங்களில் இந்த அமைச்சுக்கள் மாகாண சபைகளுக்கு மாகாணத் துணைச் சட்டங்களை உருவாக்குவதில்கூட உதவி செய்தன. மாகாண சபைகளின் உருவாக்க காலத்தில் கண்டுகொள்ளப்பட்ட அவ்வகையான ஆதரவு தற்போது அனாவசியமானதாக ஆக்கப்பட்டிருக்கலாம். அதேவேளை, அமைச்சரவைக் கூட்டங்களின் பின்பு, ஜனாதிபதியானவர் அவராக மட்டுமே மாகாண சபை முதலமைச்சர்களைச் சந்திக்கின்றார் என்ற தற்போதுள்ள ஏற்பாட்டு நிலையிலிருந்து பார்க்கும்போது, மத்திய அமைச்சரவையில் மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த ஓர் அமைச்சரை வைத்திருக்க வேண்டிய தேவை இருக்கிறதா என்ற சந்தேகமும் உள்ளது. எங்களது இந்த ஆய்வின்போது, ஒரு விடயம் வெளிக்கொண்டுவர முடிந்தது. அதாவது, சந்தர்ப்பத்திற்கு அல்லது தேவைக்கேற்ப மாகாண சபைகளானவை மற்றைய மத்திய அதிகார நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி எல்லாவற்றையும் மத்தியிலுள்ள மாகாண சபை அமைச்சினூடாகவே செயற்படுத்த வேண்டும் என மாகாண சபை அமைச்சு அழுத்திக் கூறியிருந்தமையாகும். மாகாண சபை அமைச்சினூடாக முறையாகக் கொண்டு செல்லப்படாத மாகாண சபைகளின் தொடர்பாடல்களை மத்தியரசின் அதிகார சபைகள் திருப்பியனுப்பிய பல சந்தர்ப்பங்கள் உள்ளன. அந்தவகையில், மத்தியரசாங்கத்தினால் மற்றொரு தொகுதி உப அரசாங்கப் பிரிவுகள் என்றே மாகாண சபைகள் தப்பாகக் கருதப்பட்டும் கவனிக்கப்பட்டும் வருகின்றன என்று கூறவேண்டிய அவசியமில்லை.

மாகாண சபைகள் அமைச்சுக்கு அப்பால் மாகாண சபைகளுடன் எந்தவித நேரடிப் பங்கினையும் கொண்டிராத ஏனைய அமைச்சுக்கள்கூட மாகாண சபைகளை அவர்களது நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துபவர்கள், அவ்வாறே அவ்வமைச்சுக்களின் விரிவாக்கல் சேவைகளை மாகாண மட்டத்தில் கொண்டு செல்பவர்கள் என்றே நோக்கும் போக்குள்ளது. மாகாணக் கல்வியமைச்சின் பல விசேட கல்வித் திட்டங்களையும்

Minutes of the 26th Chief Ministers' Conference held on 19th September 2009 (mimeo).

தேசிய பாடசாலைகளையும் மாகாண சபைகள் முகாமைசெய்வதனூடாகவும் விவசாய அமைச்சின் "உணவை மேலும் வளர்ப்போம்" திட்டத்திற்கான பிரசாரங்களை மாகாண மட்டங்களில் முன்னெடுப்பதனூடாகவும் அவ்வாறே மத்திய சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரசாரத்தை மாகாண மட்டத்தில் முன்னெப்பதனூடாகவும் இதனை நாம் பொதுவாகக் கண்டுகொள்ளலாம். மாகாண சபைகளுக்கு மத்திய இணை அமைச்சுக்களால் ஆட்களை உள்வாங்கும்போது, மாகாண சபைகளின் கவனத்தை அல்லது விருப்பத்தைப் பெறவேண்டும் என்பது தொடர்பான ஒரு முறைப்பாடு பல கட்டங்களில் மாகாண சபை உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டது. அதன்படி மாகாண சேவைகளில் வெற்றிடங்களை நிரப்புகையில் குறித்த மாகாண சபையின் விருப்பமின்றி அல்லது அம்மாகாண சபை அறியாத வகையில் மத்திய அமைச்சுக்கள் பணிச்சேர்ப்பில் ஈடுபடுகின்றன. அவ்வாறே, மாகாண சபைகளும் அவர்களை இணைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. மாகாண சபை புதிய நியமனங்களை மறுப்பதில்லை. குறைந்தபட்சம், மாகாண சேவையில் எந்தச் சிறப்பு இடத்தில் புதிய நியமனங்களைச் செய்வது என்பதைத் தீர்மானிக்கின்ற அதிகாரத்தையாவது மாகாண சபைகள் வேண்டுகின்றன. இந்த மத்திய அமைச்சுக்கள் நேரடியாகவே மாகாண சபைகளிலுள்ள வெற்றிடங்களுக்கு புதிய ஆட்களை நியமிப்பதற்கு எதிராக முதலமைச்சர்கள் மாநாடுகள் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தன. தங்களது விசேட தேவைகளுக்கு ஏற்ப பணியாட்களை நியமிப்பதற்குக் கொழும்பு தங்களை அனுமதிக்க வேண்டும் என மாகாண சபைகள் தொடர்ந்தும் எதிர் முன்மொழிவுகளை முன்வைத்து வந்துள்ளன. அவ்வாறான கொள்கை மாகாண சபைகளுக்கு மிகவும் தேவையாகவுள்ள ஆளனியினரை மட்டுமே நியமிப்பதற்கு வழிவிடக்கூடும் என வாதிடப்பட்டது. மாகாண சபைத் தகவல்களை நோக்கின், மாகாண சபையில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்றவற்றிக்கு உண்மையான ஆசிரியர்கள் வெற்றிடமிருக்க, மாகாண சபைகளுக்கு கல்வி அமைச்சினால் கொழும்பில் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் எப்போதும் சமயம், சித்திரம், சமையல் போன்ற விடயங்களுக்கான ஆசிரியர்களையே வழங்குகின்றன. இது மேலதிகமான ஆசிரியர்களைக் கையாள்வது குறித்த மேலதிக பிரச்சினைகளை மாகாண சபைகளுக்கு உண்டுபண்ணுகின்றது. மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டின்கீழ், பல்வேறு மாகாண சேவையில் ஆட்சேர்ப்பு செய்வது என்பதுகூட, வழக்கமாக மத்திய முகவர்கள் ஊடாகவே நடந்தேறுகின்றன. 26 ஆவது முதலமைச்சர்கள் மாநாட்டின் நிகழ்ச்சிக் குறிப்புக்களானவை, மத்திய அரசாங்கத்தால் நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் குறித்த மாகாண சபை அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தாமல் அதாவது, அவர்கள் அறியாத வகையில் சமூக ஆயுர்வேத அதிகாரிகளை நியமனஞ் செய்தமை குறித்துச் சுட்டிக்காட்டியது. இந்த வைத்திய அதிகாரிகள் குறித்த மாகாணங்களின் நிரந்தர ஆளனி இடங்களுக்கு நியமிக்கப்படவில்லை. ஆனால், மத்தியரசாங்கம் இவர்களின் பணிகள் குறித்து மாகாண சபைகளால் கண்காணிக்கப்பட வேண்டும் என வேண்டியிருந்தது. ஒரு பக்கத்தில் இது மத்தியரசாங்கமானது, மாகாண சபைகளின் விடயங்கள் அல்லது

ஆள்புலம்மீது ஆக்கிரமிப்புச் செய்வதை வெளிச்சத்திற்கு எடுத்துக் காட்டியது. ஏனெனில், சுதேசிய மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் என்பன மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களாகும். மறுபக்கத்தில், இது பொறுப்புக்கூறல் தொடர்பான பிரச்சினையை உயர்த்திக் காட்டுகிறது. ஏனெனில், மாகாண சபைகள் அவைகளுக்குட்பட்ட விடயங்களில் வேலைசெய்யும் வேலையாட்களைக் கண்காணிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், வேறு ஒரு அதிகாரசபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டியிருக்கிறது[4]. இவ்வாறே, பொதுச் சேவையாளர்களுக்கு மாகாண சபை பதவிகளுக்குப் பொருந்தும் வகையிலான சம்பள அதிகரிப்பு அல்லது மேலதிக கொடுப்பனவு என்பனவற்றை வழங்குவதற்கு மத்தியரசு ஒருதலைப்பட்சமாக முடிவெடுப்பது மாகாண அதிகார சபைகளுக்கு மிகவும் சிக்கல்மிக்க பிரச்சினைகளுக்கு வழிவிட்டது. ஏனெனில் அவற்றின் (மாகாண சபைகளின்) வரவு - செலவுத் திட்ட மதிப்பீடு அவ்வாறான மேலதிகச் செலவுகளுக்கு வழிவிடுவதில்லை. மத்திய அரசாங்கத்தால் மாகாண சபைகளின் கவனத்திற்கு குறிப்பிடாது மேலும், பல வகையான மாகாண சபைகளுடன் தொடர்புபடும் விடயங்களில் நிர்வாக தீர்மானங்களை எடுக்கும் விடயம் குறித்தும் மாகாண சபைகள் முறையிடுகின்றன. மத்திய அமைச்சுக்களின் விடயப் பரப்புக்குள் வரும் ஆனால், மாகாண அதிகார சபைகளால் கொண்டுநடாத்தப்படும் மாகாண நிகழ்ச்சித் திட்டங்கள் சில சந்தர்ப்பங்களில் இரண்டு தொகுதி அதிகார சபைகளின் வழிகாட்டுதல்களால் கஸ்டங்களை எதிர்நோக்க வேண்டி வருவதுமுண்டு.

அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு மாகாண பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக மாற்றும் முறையானது, மாகாண சபைகளுக்குக் கீழிருந்த அதிகளவான சிறந்த பாடசாலைகளை இல்லாமல் செய்துள்ளதுடன், அது கல்வி ரீதியாக தாழ்ந்த நிலையையும் உருவாக்கியுள்ளது. ஆரம்பத்தில், ஒரு பாடசாலை தேசிய பாடசாலையாக மாற்றப்படுவதற்கு அவசியமான சிறப்பு நிபந்தனைகள் என்று ஒரு முறையான வழிமுறை இருந்தது. ஆனால், இந்தத் தீர்மானங்கள் தற்போது பலம்மிக்க தேசிய அல்லது மாகாண அரசியல் தலைவர்களால் ஒருதலைப்பட்சமாகவே எடுக்கப்படுகின்றன. மாகாண சபை இந்தச் செயன்முறைக்கு பிரதானமாக ஆதரவு வழங்குகின்றனவாகவே தோற்றமளிக்கின்றன. ஏனெனில், அவைகள் குறித்த மாகாணத்தில் ஒரு குறைந்தளவேனும் வேறுசில வசதியுள்ள பாடசாலைகள் அல்லது வைத்தியசாலைகள் உள்ளன என்ற திருப்தியைப் பெறுவதற்காகவே ஆகும். உன்மையில் இந்த மாகாண சபைகள் இப்பாடசாலைகளிலுள்ள வசதி தொடர்பிலான கட்டுப்பாட்டைக்கூட இழந்திருக்கின்ற சந்தர்ப்பத்திலும் அவ்வாறே அப்பாடசாலைகளுக்கான சிறியளவான நிதிவழங்களில் மாகாண சபைகளுக்கு

[4]"Land- Land, that is to say, rights in or over land, land tenure, transfer and alienation of land, land use, land settlement and land improvement, to the extent set out in Appendix II", Constitution of Sri Lanka, Ninth Schedule .

Constitution of Sri Lanka, Appendix II, Section 1.3.

ibid.

எந்தவித பங்குக்குமான உத்தரவாதமும் வழங்காமலிருந்தபோதிலும் மாகாண சபைகள் மேற்படித் தீர்மானங்களில் விருப்பத்திற்குரியதொன்றாகவே உள்ளன. மாகாண சபைகளிலுள்ள பெரும்பான்மையானவர்கள் ஆதரவு தெரிவிக்கும்போது, அவர்களது கட்சி சொந்த அரசியற் கட்சியின் மூத்த உறுப்பினர்களின் செயற்பாடுகள்மீது தடையை ஏற்படுத்த முடியுமா இல்லையா என்பது இன்னும் தெளிவில்லாத ஒன்றாகவே உள்ளது. மத்திய அரசாங்கத்தின் புதிய சுகாதார அமைச்சர் பொலநறுவையில் இருந்து தெரிவு செய்யப்பட்டபோது, அவர் அங்கேயிருந்த பொது வைத்தியசாலையைத் தேசிய வைத்தியசாலையாக மாற்றுவதற்கான அவரது விருப்பத்தைப் பிரகடனம் செய்தபோது வடமத்திய மாகாண சபையானது, மத்திய அரசாங்கத்திற்கு இந்த வைத்தியசாலையை மாற்றீடு செய்யவதை உறுதி செய்யும் முறையான தீர்மானம் ஒன்றை மாகாண சபையில் நிறைவேற்றிக் கொண்டது. இவ்வாறே பதுளை மற்றும் மொனராகலை ஆகிய பகுதிகளிலிருந்த இரு பிரதான வைத்தியசாலைகள் அம்மாவட்டங்கள் உள்ள மாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சரின் காலகட்டத்தில் தேசிய வைத்தியசாலைகளாக மாற்றப்பட்டன.

அரசியலமைப்புரீதியாக மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயங்களுடன் உதாரணமாக, கூட்டுறவு, கிராமிய அபிவிருத்தி, இளைஞர் விவகாரம், விளையாட்டு என்பவற்றுடன் உள்ளூராட்சி அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மத்திய அரசின் நிறுவனங்கள் என்பனவற்றையும் பராமரிப்பது என்பது வேலையாட்கள் மற்றும் பணிகள் என்பவற்றில் ஒரே வேலையை இரு நிறுவனங்கள் ஒரே நேரத்தில் செய்யும் நிலைக்கு வழிவிட்டது. பொறுப்புக்களைப் பிரித்து வழங்குவதில் தெளிவின்மை மற்றும் இரண்டு மட்டங்களிலுள்ள நிறுவனங்களுக்கிடையில் இணைப்புக் குறைவு என்பன விளையாட்டு, பெண்கள் அபிவிருத்தி, சிறுவர் நலன், கிராமிய நலன் என அமைச்சுக்களாலும் மாகாண சபைகளாலும் அடையாளம் காணப்பட்டு பொறுப்பாக்கப்பட்ட ஒரேவகையான வேலையாட்கள் இருபகுதிகளிலும் உருவாக வழிவிட்டது. இந்நிலைமையானது, ஒரேவகையான வேலையை வழங்குவதில் வினைத்திறன் இன்மை மற்றும் வீண்விரயம் என்பவற்றுக்குக் காரணமாக அமைகிறது. மாகாண சபைகள் அரசியலமைப்புரீதியாக அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் அதிகாரங்களைப் பிரயோகிக்கும்போது, மத்திய அரசின் அதிகார சபைகளினால் கட்டுப்படுத்தப்படல் மற்றும் தலையீடு செய்யப்படல் என்பனவற்றை எதிர்நோக்குகிறது என இந்த ஆய்வில் அவதானிக்க முடிந்தது. விடயங்களின் ஒதுக்கீட்டில் தெளிவின்மையும் வரையறையற்றிருந்ததும் இதற்கான பகுதியளவான காரணமாகவும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் முக்கியத்துவமிக்க ஏற்பாடுகளை (consequential provisions) மாற்றுவழியாகப் பயன்படுத்தி மத்திய அமைச்சுக்களும் அலுவலர்களும் மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிகமான விடயங்களில் தொடர்ந்தும் தமது அதிகாரத்தைச் செலுத்த முற்படுவதுங்கூட இதற்கான பகுதியளவுக் காரணமாகவுள்ளது. மத்தியரசு மாகாண சபை விடயங்கள்மீது இவ்வாறான தலையீடுகளுக்கு ஆதரவு தெரிவிக்கின்ற

இன்னொரு வழியாக அரசியற் கட்சித் தொடர்பு காணப்படுகிறது. ஒரே கட்சி மத்தியிலும் அதேநேரம், மாகாண சபையிலும் அதிகாரத்தைச் செலுத்துமாகவிருப்பின் மாகாண மட்டத்திலுள்ள தலைவர்கள் வழமையாகவே கட்சியிலிருந்தும் அதன் தேசிய தலைவர்களிடமிருந்தும் வரும் அழுத்தங்களை ஏற்றுக்கொள்கின்றனர்.

முன்னர் குறிப்பிட்டதுபோன்று, மத்தியரசினால் மாகாண சபைகள்மீது மேற்கொள்ளப்படும் தலையீடுகளின் விளைவாக ஆய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் மாகாண சபைகளின் செயல்முறை என்பது, அதிகாரப் பகிர்வுப் பட்டியலினூடாக விசேடமாக அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட விடயங்களில் அதிகாரத்தைப் பயன்படுத்துகையில், தீர்மானம் எடுத்தலில் குறிப்பிடத்தக்களவு இடைவெளி இருந்தது என்பதை எவ்வித சந்தேகமுமின்றித் தெளிவாக சுட்டிக்காட்டுகிறது. அறிமுகஞ் செய்யப்பட்ட பல்வேறு சட்டப் பிரிவுகள் சில பகுதிகளில் குறிப்பாக, சமூக வேவைகள், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மாகாண போக்குவரத்து, ஒரு நிறுவனக் கட்மைப்பைக் கட்டுதல், மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் அவற்றுக்கிடையேயான உறவுகளை வரையறை செய்தல் என்பனவற்றில் செய்யப்பட்ட ஆய்வுகள் குறைந்தது சில மாகாண சபைகளாவது இந்த இடைவெளியைப் பயன்படுத்தியுள்ளன எனச் சுட்டிக்காட்டுகிறது. எவ்வாறிருப்பினும், மத்தியரசுடன் இணைந்து பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பான விடயங்களிலும் மற்றும் ஒருங்கியை பட்டியலில் வழங்கப்பட்டுள்ளவைகளிலும் மாகாண சபைகள் மிகவும் அரிதாகவே தமது உரிமைகளை வலியுறுத்துகின்றன.

மாகாண சபைகள் அரச நிலம் தொடர்பாக கொண்டிருக்கும் அதிகாரத்தின் பயன்பாடு என்பது, மாகாண அதிகாரங்கள் குறித்த விடயங்களின்மேல் மிகவும் வரையறுக்கப்பட்டுள்ளதுடன், சட்டப்படி மத்திய அதிகார சபைகள் குறிப்பிடத்தக்களவு பொறுப்புக்களைக் கொண்டிருப்பதைத் தெளிவுபடுத்துவதாக இருக்கும். எவ்வித சந்தேகமுமின்றி மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வுப் பட்டியலில் அரச நிலம் குறித்த விடயம் தெளிவாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், அரசியலமைப்பின் இரண்டாம் பிற்சோக்கையின் 9 ஆவது விடயத்தின்படி (Appendix II of Schedule 9)[5] கூறப்பட்டுள்ள சில நிபந்தனைகளின்கீழ் மத்திய அரசாங்கமே நிலம் தொடர்பான உரிமையை வைத்திருப்பதுடன், அவற்றின் பாவனை தொடர்பில் வேறுசில பொறுப்புக்களை மாகாண சபைகளுடன் பகிர்ந்து கொள்கின்றன. இந்தப் பிற்சேர்க்கையானது, அரச நிலம் குடியரசினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவதாக இருக்கும்: ஆதலால் அவை குடியரசின் ஜனாதிபதியின் சின்னத்தின்கீழேயே பகிரப்பட்டிருக்கும் அல்லது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் என வேண்டுகிறது. மாகாண சபைகள் "அரச நிலங்களை நிர்வகிக்கலாம், அவ்வாறே பயன்படுத்தலாம்". எவ்வாறிருப்பினும், மாகாணத்திற்குள் எந்தவொரு பிரஜைக்குமாக அல்லது எந்தவொரு நிறுவனத்துக்குமாக "அவற்றைப் பிரிப்பது அல்லது அவை குறித்த ஏற்பாடு என்பது குறித்த மாகாண சபையின்

ஆலோசனையின் பெயரில் ஜனாதிபதியால் மட்டுமே செய்ய முடியும்."[6] மாகாண சபைகளானவை மாகாணத்திலுள்ள அரச நிலங்களைத் தேவைப்படுமிடத்து ஒதுக்கிய பட்டியலில் அல்லது ஒத்தியங்கும் பட்டியலில் உள்ள விடயங்களுக்காக அரசாங்க தேவைகளுக்காக ஒதுக்கிக் கொடுக்க வேண்டும்.[7] மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசனம் மற்றும் நில அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ள திட்டத்தை எடுத்துக்கொண்டால், மாகாண சபைகள் அவற்றின் கீழுள்ள நிலங்களைப் பயன்படுத்தத் தகுதியுள்ளவையாயினும், அவை மத்தியரசின் கட்டுப்பாட்டின்கீழேயே இருக்கும். மாகாண சபைகள் நிலத்தை அவர்களது அதிகார எல்லைக்குட்பட்ட ஒரு விடயமாகக் கொண்டுள்ளன. ஆனால், அரச நிலங்களை அவைகள் உரிமை கொன்டாட முடியாது. அவ்வாறே, எல்லா நடைமுறை நோக்கங்களுக்காகவும் அரச நிலம் தொடர்பான அதிகாரம் என்பது மத்தியரசின் கைகளிலேயே உள்ளது. நிலப் பயன்பாடு தொடர்பான மாகாண சபைகளின் அதிகாரம் என்பது உன்மையான நடைமுறையில், அவற்றின் பயன்பாடு தொடர்பில் பரிந்துரைகளைச் செய்தல் என்ற நிலைக்கு வரையறை செய்யப்பட்டுள்ளது. மாகாணநிலஆணைக்குழுவினக் ழுளள நில நிர்வாகம் தொடர்பான இந்த நுட்பமான ஏற்பாட்டின் இருப்புக்கு அப்பால், அரச நிலம் தொடர்பான தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது உள்ளூர் நிலங்களைப் பொறுத்தவரை பிரதேச செயலகங்களினால் தொடர்ந்தும் கையாளப்பட வேண்டியிருக்கிறது. அவ்வாறே, தேசிய மட்டத்தில் மத்திய அரசின் சார்பாக ஆணையாளர் நாயகத்தினால் கையாளப்பட வேண்டியிருக்கிறது. இந்த இரு அலுவலர்களும் மாகாண சபையின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் வராதவர்கள். அவ்வாறே, அதன் சிபாசுரிகளுக்கு கட்டுப்படாதவர்களுங்கூட. ஆதலால் இரண்டு மாகாண சபைகள் மட்டுமே அரச நிலம் தொடர்பிலான துணைச் சட்டங்களை இயற்றியுள்ளன என்பது ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல.

அரச நிலம் தொடர்பில் அம்மாகாண சபைகள் நிறைவேற்றிக்கொண்ட துணைச்சட்டங்கள் அர்த்தமுள்ள அதிகாரத்தைப் பெறத் தவறிவிட்டன என அம்மாகாண சபைகள் அறிந்து கொண்டுள்ளன. அரச நிலம் தொடர்பில், உன்மையான கட்டுப்பாடு தொடர்ந்தும் மத்தியரசிடமே இருப்பதால் மாகாண அதிகார சபைகள் மத்தியரசின் துணைமுகவராண்மைகள் எனும் நிலைக்கு அப்பால் செல்லாதுள்ள நிலையில், மற்றைய மாகாண சபைகள் நிலம் தொடர்பாக அதிக துணைச் சட்டங்களை உருவாக்கிக் கொள்வதில் எப்போதும் ஆர்வமற்றனவாகவே உள்ளன. பொதுப் பட்டியலில் உள்ள விடயங்களில்கூட, மாகாண சபைகள் மிகவும் அரிதான வகையிலேயே தங்களது அதிகாரங்களைப்

[5] "Land- Land, that is to say, rights in or over land, land tenure, transfer and alienation of land, land use, land settlement and land improvement, to the extent set out in Appendix II", Constitution of Sri Lanka, Ninth Schedule.

[6] Constitution of Sri Lanka, Appendix II, Section 1.3.

[7] ibid.

பயன்படுத்துகின்றன. பொதுப் பட்டியலிலுள்ள பல்வேறு விடயங்கள் உதாரணமாக கால்நடை வளாப்பு, வர்த்தகம் மற்றும் வாணிபம், இளைஞர் வேலைவாய்ப்பு, நிலப் பாதுகாப்பு, விவசாயம் தொடர்பான கைத் தொழில்கள் அதாவது வள அபிவிருத்தி என்ற நோக்கில் பார்த்தால் மிகமுக்கயமான பகுதிகளாகவுள்ள விடயங்களில் எந்தவொரு மாகாணத் துணைச் சட்டங்களும் இயற்றப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான துணைச் சட்டங்கள் இல்லாத நிலையில் மாகாண சபைகள் அவைகளின் பிரதேச அபிவிருத்திக்குப் பொருத்தமான வழியில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட விடயங்களில் அதிகாரத்தைப்ப பயன்படுத்தத் தவறிவிட்டன எனலாம்.

பொதுப் பட்டியலிலுள்ள விடயங்களைப் பயன்படுத்தும்போது, பாராளுமன்றத்தின் ஆலோசனையினைப் பெறவேண்டும் என்ற ஏற்பாடுகூட குறித்த விடயப்பகுதிகளில் மாகாணங்களின் செயற்பாடுகளைத் தடுக்கின்றது. பாராளுமன்றத்தின் ஆலோசனையைப் பெறவேண்டும் என்ற இந்த ஏற்பாட்டை சில மாகாண சபைகள் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறவேண்டும் என்ற தேவையாக விளக்கம் கொடுத்திருக்கின்றன. இன்னொரு தொகுதி ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் என்ற வகையிலேயே பட்டியலை அதிகளவுக்கு மத்தியரசு பயன்படுத்த வழிவிட்டுள்ளது. ஒருங்கியை பட்டியலிலுள்ள விடயங்கள் தொடர்பில் அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது, அரசியலமைப்பின்கீழான ஒரு தேவையாக இருந்தபோதிலும் மத்திய அரசாங்கங்கள் அரிதாகவே அல்லது மிகக்குறைவாகவே மாகாண சபைகளுடன் ஆலோசனைகளைச் செய்கின்றன.

6.3 பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாகமும் மாகாண சபைகளும்

புதிதாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கும் பல ஆண்டுகால பழமையான நாட்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாக்த்திற்குமிடையேயான உறவுகள் மத்திய - மாகாண உறவுகளின் மற்றொரு பரிமாணத்தை வெளிக்கொண்டு வருகிறது. மரபுரீதியாக இலங்கையில் பிராந்திய நிர்வாகத்தின் ஆள்புல அலகாக பல துணை அலகுப்பிரிவுகளுடன் மாவட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அத்துடன், பிராந்திய நிர்வாகம் அந்த அடிப்படையிலேயே ஒருங்குபடுத்தப்பட்டிருந்தது. மாகாண சபைகளின் அறிமுகமானது, பிராந்திய நிர்வாகத்தின் பிரதான அலகாக மாகாணத்தை ஏற்படுத்திய போதிலும் நடைமுறையிலிருக்கும் பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாக முறைமை, மாவட்டத்தை மையப்பட்டிருப்பதுடன் அதன் துணை அலகுகளினூடான செயற்பாட்டை அவசியமற்ற ஒன்றாகவும் ஆக்கவில்லை. மாறாக, அவை மத்திய நிர்வாகத்தின் ஒரு கீழ் மட்ட நிர்வாக அலகாகவே தொடர்ந்துமிருந்து வருகின்றன. 1989/1991 காலப்பகுதியில் துணை மாவட்ட நிர்வாக இயந்திரமாக பிரதேச செயலகங்கள் கிராம மட்டத்தில் அதன் அமுலாக்க அலுவலர்கள் என்ற நிலையில் கிராம சேவகர்களுடன் ஒரு சிறிய காலப்பகுதிக்கு என மாகாண சபைகளின்கீழ் கொண்டுவரப்பட்டன. மாவட்ட செயலகங்களைக் கூட மாகாணசபைக் குடையின்கீழ் கொண்டுவரும்

சாத்தியப்பாடுகள் குறித்த ஊகமும் அப்போது முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த மிகக்குறுகிய காலகட்டத்தில் பிரதேச செயலகங்கள் மாகாண சபையின் நிர்வாகப் பிரிவாக செயற்பட்டது. ஆனாலும், இந்தப் புதிய ஏற்பாடு நீண்டகாலம் நிலைக்கவில்லை. பிரதேச நிர்வாகம் மீண்டும் மத்திய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அல்லது பொதுநிர்வாக அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டது. இதன் விளைவாக மாகாண சபைகளின் அமைப்பு ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது. அதாவது, அதே வகையான இரு நிர்வாக முறைகளில் ஒன்று மாகாண சபையின்கீழும் மற்றையது நேரடியாக மத்திய அரசின்கீழும் உள்ளது. இது மாவட்ட நிர்வாகி அதாவது அரசாங்க அதிபர் அல்லது மாவட்ட செயலாளரின் ஊடாக செயற்படுகிறது. அவ்வாறே பிரதேச மட்டத்தில் பிரதேச செயலாளரின்கீழ் செயற்படுகிறது. சேவைகளை வழங்குவதற்கான பொறுப்புக்களை இந்த இரு அதிகாரக் கட்மைப்புக்களும் பகிர்ந்துகொள்வதில் ஈடுபடுவதால் இணைப்பு தொடர்பில் அதிகளவான பிரச்சினைகள் தோன்றின. இது மீண்டும் ஆளணியினர் மற்றும் வேலை என்பவற்றில் இருபகுதியினர் ஒரேநேரத்தில் வேலைசெய்யும் நிலையை உருவாக்க வழிவிட்டது.

இது பகுதியளவில் இரண்டு மட்டங்களிலுமுள்ள அரசாங்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட விடயங்கள் தெளிவாக பிரிக்கப்பட்டிருக்காமையாலும், மறுபகுதியளவில் அரசியலமைப்புரீதியாக மாகாண சபைக்கு என ஒதுக்கப்பட்ட விடயங்களைக் கொண்டு நடாத்தும் நிர்வாக அலகுகளையும் அமைச்சுக்களையும் மத்தியரசு தொடர்ந்தும் பேணிவந்ததன் விளைவாகவும் இடம்பெற்றது எனலாம். உதாரணமாக, மத்திய அமைச்சுக்களால் பிரதேச செயலகங்கள் ஊடாக சமூக நலன் மற்றும் நிவாரணம் தொடர்பான வேலைகளை முன்னெடுக்கும்போது, அதேவேலைகளை அதனுடன் தொடர்புடைய மாகாண சபையால் செய்யப்படுகின்றபோது அது பொதுவளம் விரயமாக்கப்படுவதிலும் அவ்வாறே மாகாண சபைகளின் அதிகாரம் மற்றும் நம்பிக்கைத் தன்மை என்பவற்றை பலவீனப்படுத்துவதாகவும் காணப்பட்டது. பெண்கள் அபிவிருத்தி, கிராமிய சுகாதாரம் மற்றும் அபிவிருத்தி என்பவை மாகாண சபைகளுக்குப் பொறுப்பாக்கப்பட்டிருக்கின்ற விடயங்களாக இருந்தபோதிலும், இவ்விடயங்களை முன்னனேற்றுவதற்காக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மத்திய அமைச்சுக்களின் அலுவலர்களால் முன்னெடுக்கப்படுகின்றன. பிரதேச செயலகங்கள் மாகாண செயலகங்களுக்கு வேலை செய்ய வேண்டப்படுகின்றன. ஆனால், அங்குள்ளவர்கள் மாகாண சபை அலுவலர்கள் அல்ல. அவர்கள் மாகாண நிர்வாகத்தின் ஒழுக்கக் கட்டுப்பாட்டின்கீழ் வருபவர்களும் அல்ல. பிராந்திய நிர்வாகம் தொடர்பில் தற்போது நமுறையில் உள்ளமுறையின்கீழ், மாகாண நிர்வாகத்திற்குப் பொறுப்பாக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள், மாகாண, மாவட்ட, பிரதேச அலுவலர்கள் ஆகியோர் ஒன்றாகச் சந்திப்பதற்குச் சந்தர்ப்பத்தை வழங்குகின்ற ஒரேயொரு நிறுவனமாக மாவட்ட இணைப்புக் குழுவே உள்ளது. சாதாரணமாக 100 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய மிக நீளமான நிகழ்ச்சிநிரல்களுடன் சிக்கல்களை எதிர்நோக்கும் இந்தக் குழு மாகாண

நிர்வாகம் தொடர்பில் எந்தவித அர்த்தமுள்ள நடவடிக்கைகளையாவது செய்யுமா என்பது சந்தேகமானதே. உண்மையான நடைமுறையில், இந்த இணைப்புக் குழுக்கள் மாவட்டத்திலுள்ள சிரேஷ்ட அரசியல்வாதிகளுக்கு அவர்களது அரசியல் நிகழ்ச்சி நிரல்களை முன்நோக்கி நகர்த்துவதற்கான ஒரு தளமாகவே இருந்து வருகிறது.

6.4 மாகாண சபைகளும் மத்தியின் அபிவிருத்தி முகவர்களும்

மத்தியிலுள்ள அமைச்சுக்களுக்கு அப்பால் திணைக்கள வேலைகளை கொண்டு நடாத்துவதற்கு அல்லது மத்திய அரசாங்கத்திற்குப் பதிலாக சேவைகளை வழங்குவதற்கு தொடர்ந்துவந்த அரசாங்களால் உருவாக்கப்பட்ட பல்வேறு முகவர் நிறுவனங்கள் மாகாண நிறுவனங்களுக்கு அருகருகே அமைந்து காணப்படுகின்றன. அவைகள் 13 ஆம் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வரமுன்பு, உருவாக்கப்பட்டு சுதந்திரமான நிறுவனங்களாக பணியகவர்க்கத்தின் தடைகளில் இருந்து சுதந்திரமளிக்கப்பட்டு வழமையான திணைக்கள சட்டகத்திற்கு ஊடாக செயற்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால், மாகாண சபைகள் தாபிக்கப்பட்டதன் பின்புகூட, அவைகள் தங்களது வேலைகளைச் செய்வதிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வேலைகளில் அதிகமானவை அடிப்படையில் அரசியலமைப்புரீதியாக மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதன் விளைவாக, உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் அதாவது நகர அபிவிருத்தி, வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, வீடமைப்பு அவ்வாறே அடிப்படை சமூக சேவைகளுக்காக ஏற்பாடுகள் அதாவது சக்தி (மின்சாரம்) மற்றும் தண்ணீர் போன்ற விடயங்கள் இந்த முகவராண்மையின்கீழேயே தொடர்ந்துமுள்ளன. இம்முகவராண்மைகள் எல்லாம் மத்தியரசாங்கத்தால் நியமிக்கப்பட்டு நிதிவழங்கப்படுகின்றவைகளாகும். சாத்தியமான சந்தர்ப்பங்களில் மட்டும் முரண்பாடுகளையும் ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்வதைத் தடுக்கும் வகையிலும் பொறுப்புக்களும் செயற்பாட்டு எல்லைகளும் மத்திக்கும் மாகாண சபைகளுக்கும் என பிரிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, வீதிகள் தொடர்பான விடயத்தில் அதற்காக தனியான அதிகாரசபை அதாவது, வீதி அபிவிருத்தி அதிகார சபை உருவாக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களும் 'யு' மற்றும் 'டீ' தர வீதிகளைத் தவிர மற்ற எல்லா வீதிகளுக்கும் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. எவ்வாறிருப்பினும், தேசிய அரசியல் தலைவர்களின் அல்லது மாகாண சிரேஷ்ட தலைவர்களின் தலையீடு அல்லது அதிகளவான அழுத்தம் காரணமாக உயர்தர அல்லது நெடுஞ்சாலைகளுக்குப் பொறுப்பாக்கப்பட்டிருக்கின்ற வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சில மாகாண வீதிகளை அபிவிருத்தி செய்து பராமரிக்கின்ற அதிகாரம் வழங்கப்படும் என்பது வழமைக்கு மாற்றமான ஒரு விடயமல்ல. இவ்வாறான தலையீடுகள் தொடர்பான அறிக்கைகள் எல்லா மாகாணங்களிலிருந்தும் பெறப்பட்டிருக்கின்றன. அவற்றில், சில சாதாரணமாக மாகாண சபையின் அனுமதியுடன் நடந்தேறியிருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் அவை மாகாண சபைகளிகளின்

எந்தவிதத் தொடர்புமின்றி நடந்திருக்கின்றன. இந்த ஆய்வாளரால் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளதுபோன்று, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் பொறுப்பான விதிகளில் குவிக்கப்பட்ட குப்பைகளை அகற்றுவது தொடர்பில் கருத்து வேறுபாடுகளும் உடன்பாடின்மைகளும் மாகாண சபைகளுக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபைகளுக்குமிடையில் எழுந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மாகாண சபைகளுக்குக் கீழுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களே குப்பைகளை வெளியேற்றின. ஆனால், அந்த சேவைக்காக அவை எந்தவித நிவாரணத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. எவ்வாறிருப்பினும், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீதிகளில் விளம்பரப் பலகைகளை காட்சிப்படுத்தும்போது குறிப்பாக, உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளுக்குட்படுகின்ற பகுதிகளில்கூட அதற்கான பணத்தை அறவீடு செய்வதில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தனியுரிமை பெற்றதாக (மேலான அதிகாரமுள்ளதாக) உள்ளது.[8]

நகரப்பகுதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையால் பயன்படுத்தப்படுகின்ற அதிகமான சொத்துக்கள் விடயத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் அத்காரத்தையோ அல்லது வளங்களையோ கொண்டிருக்கவில்லை. இன்று நகரப் பகுதிகளில் இருக்கின்ற அரச நிலப்பகுதிகள் நகர அதிகார சபைக்குக்கீழேயே உள்ளன. இதுகூட, மாகாண சபையுடன் முரண்பாடுகளுக்கு வழிவிட்டுள்ளன. மாகாண சபை அதிகாரத்திற்குட்ட நிலத்தை பயன்படுத்துவதற்காக மேல் மாகாண சபை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் நஸ்டஈடு கோரியது தொடர்பான பிரச்சினையை ஒரு உதாரணமாகச் சுட்டிக் காட்ட முடியும். உள்ளூராட்சி மன்றங்களுக்குட்பட்ட அல்லது சொந்தமான நிலங்கள் தொடர்பில் பௌதீக திட்டங்களை வரைவதற்கு, இந்நகர அபிவிருத்தி அதிகார சபையே பொறுப்பாக்கப்பட்டுள்ளது. இது நகரப்பகுதிகளில் அபிவிருத்திக்கான பொறுப்புக்களைப் பகிர்வதில் ஒன்று தேசிய மட்டத்திலும் மற்றயது மாகாண மட்டத்திலும் என இருமையை உருவாக்கியது. இது, இரு பகுதிகளுக்குமிடையே முறையான இணைப்பு இல்லாதவிடத்து மேலும் முரண்பாடுகளையும் தாமதங்களையும் தோற்றுவிக்க வழிவிட்டது. மற்றுமொரு மத்திய அதிகார சபையான மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துக்குப் பொறுப்பான தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாகாண சபைகளால் பின்பற்றப்பட்ட போக்குவரத்து தந்துரோபாயங்கள் தொடர்பில் சில மாகாண சபைகளுடன் முரண்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த எல்லா நிறுவனங்கள் தொடர்பிலும் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதன்பின்பு மத்திய முகவராண்மைகள் இந்த வேலைகளைக் கொண்டு நடாத்துவதில் கட்டாயம் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆனால், நடைமுறையில் இணைப்பு என்பது மொத்தத்தில் மிகவும் குறைவாகவே

---

[8] Y.R.Amarasinghe, in Lakshman Marasinghe and Jayampathy Wickramaratne, (eds.) *13th Amendment: Essays on Practice,* Stamford Lake, Pannipitiya, 2010, p.122.

இருந்ததுடன் மத்திய முகவராண்மைகள் மாகாண சபைகளிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக பணியாற்றும் போக்கையே காட்டிநிற்கின்றன. வளப்போதாமை மற்றும் கொள்ளளவு போதாமை போன்ற பிரச்சினைகளுடன் இருப்பதன் காரணமாக, மத்திய முகவராண்மைகளால் எடுக்கப்படும் பங்கினை மாகாண சபைகள் சாதகமாகவும் நன்மை பயப்பதாகவும் அங்கீகரிக்கின்றன. எவ்வாறாயினும், மாகாண சபைகளுடான சிறந்த இணைப்பு விசேடமாகக் கொள்கை உருவாக்க மட்டத்தில் அவர்களின் பங்குபற்றுதலை வழங்கும் வழியிலான ஒரு வழிமுறை இருக்குமாயின், அது இந்த முகவராண்மைகளை மிகவும் உற்பத்தித் திறன் மிக்கதொன்றாகக் கொண்டுசெல்வதுடன், மாகாணத்தில் இரண்டாம் மட்ட அரசாங்கத்திற்கு ஆதரவுமிக்கதாகவுமிருக்கும்.

மத்திய - மாகாகணங்களுக்கிடையிலான உறவுகளில் ஒரு காரணியாக அண்மைக் காலத்தில் தோற்றம் பெற்றுள்ள மற்றொரு விடயமாக மாகாண சபைக்கு பொறுப்பாக்கப்பட்ட விடயங்களில் மத்தியரசாங்கத்தால் மேற்கொண்டு செல்லப்படும் பல எண்ணிக்கையிலான அபிவிருத்தித் திட்டங்களுடன் தொடர்புபட்டதாகும். இத்திட்டங்கள் (உதாரணமாக, 'கிராமிய அதிகாரம்' [கெமி திரிய rural power], - 'கிராமிய அபிவிருத்தி' [கம நெகும village development], 'வீதி அபிவிருத்தி' [மகநெகும- road development] போன்றன) மத்திய அரசாங்கத்தின் குறித்த அதிகார சபைகளால் நிதிவழங்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றன. குறித்த விடயப் பரப்புக்கள் மாகாண சபைக்கு பகிர்ந்தளிக்கப்பட்டவைகள். ஆனால், அவைகள் மாகாண சபைகளுக்குத் தெரியப்படுத்தாமல் பிரதானமாக மத்திய முகவராண்மைகளால் முன்னெடுக்கப்படுகின்றன. முதலமைச்சர்கள் மாநாடுகளில் இந்த விடயம் தொடர்பில் மாகாண சபைகள் இந்த நிகழ்ச்சித் திட்டங்களை மிகவும் செயற்திறனாகவும் குறைந்த செலவிலும் நடாத்த முடியும் எனக்கூறி, தங்களுக்கு இந்த நிகழ்ச்சித் திட்டங்களை அதற்குரிய நிதிகளுடன் வழங்குமாறு தொடர்ச்சியாக மத்தியரசிடம் கோரியிருந்த போதிலும் அதில் வெற்றி கிடைக்கவில்லை. இந்த நிகழ்சித் திட்டங்களைக் கொண்டு நடாத்துவதற்கு உருவாக்கப்பட்ட பிரதேச நிறுவனம் (territorial organization) மாகாண சபைகளுக்கு இது விடயத்தில் தமது கவலையை வெளிப்படுத்தியிருந்தது. ஏனெனில், அரசாங்கம் அவைகளின் முக்கியமான இருப்பை, மாகாண மட்டத்திலுள்ள அரசாட்சி புரிவதற்கான மிகவும் முக்கியமான ஒரு பிரிவு என்று கவனத்திற் கொண்டிருக்கவில்லை என்பதாக தோன்றுவதாகவே இருந்தது. 2010 ஆம் ஆண்டுவரை தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சினால் கொண்டுநடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பிரதேச ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதுடன், ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒவ்வொரு அமைச்சர் பொறுப்பாக்கப்பட்டிருந்தார். இந்தப் பிராந்தியங்கள் மாகாணங்களின் எல்லைகளுக்குக் குறுக்காக வடிவமைக்கப்பட்டிருந்ததுடன், மாகாண நீதியதிகார பிரதேசங்களுடன் தொடர்புபடாத வகையிலும் அமைந்திருந்தன. இது தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சினால் கொண்டுநடாத்தப்படும் வேலைகளுடன் அவர்களாகவே தொடர்படுத்துவதை மாகாண சபைகளுக்கு

மிகவும் சிக்கல்மிக்கதாக்கியது. குறித்த இந்த அமைச்சு, நீண்டகாலம் நிலைத்திருக்காதபோதிலும், அதற்குக்கீழ் உள்ள நிலையங்களில் மத்திய அதிகார சபைகளால் விசேடமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு எனும் புதிய அமைச்சினால் தொடர்ந்தும் கொண்டுநடாத்தப்படுகின்றன. இவ்வமைச்சுக்கூட, பெரிய எல்லையைக் கொண்ட அதேவகையான வேலைத்திட்டங்களை மிகப்பெரும் நிகழ்ச்சித் திட்டங்களாக அதாவது 'கிழக்கின் எழுச்சி' (Awakening of the East) மற்றும் 'வடக்கின் வசந்தம்' (Spring in the North) என்பவற்றின் ஊடாக முறையே கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் முன்னெடுத்துச் செல்கின்றது.

6.5 மாகாண ஆளுநர்: அரசியலமைப்புசார் தலைவர் அல்லது மத்திய நிர்வாகத்தின் முகவர்

13 ஆம் திருத்தச் சட்டத்தின்கீழ் உருவாக்கபட்ட மத்திய - மாகாணங்களுக்கிடையிலான மிகவும் முக்கியமான நிறுவனமயப்படுத்தப்பட்டது தொடர்பாகவும் இருமட்ட நிர்வாகங்களுக்குமிடையிலான தொடர்புகளின் முக்கியமான பங்கை எடுக்கும் ஓர் அலுவலகமாகவும் மாகாண ஆளுநர் காணப்படுகிறார்.[9] சரத்து 154 B இன்படி ஒவ்வொரு மாகாண சபைக்குமென ஜனாதிபதியினால் ஐந்து (05) ஆண்டுகளுக்கு என நியமிக்கப்படும் ஆளுநர் ஒருவர் இருப்பார். "அவர் ஜனாதிபதி விரும்பும் காலம் வரைக்கும் பதவியிலிருப்பார்".[10] ஆளுநர் முதலமைச்சரின் ஆலோசனைக்கு ஏற்பவும் மாகாண சபையின் பெரும்பான்மை ஆதரவு பெற்றுள்ள அமைச்சர்கள் சபையின் கட்டளைக்குமேற்ப மாகாண சபைகளைக் கூட்டல், கலைத்தல், ஒத்திவைத்தல், என்பவற்றுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளார். ஆளுநர் மாகாண சபையில் உரையாற்றுவதுடன், மாகாணங்களில் தேங்கிக் கிடக்கும் விடயங்கள் தொடர்பில் செய்திகளையும் அனுப்ப முடியும். முதலமைச்சரானவர் அமைச்சரவைத் தீர்மானங்கள் தொடர்பில் ஆளுநருடன் கட்டாயம் தொடர்புகொள்ள வேண்டும் மேலும் மாகாண நிர்வாகம் தொடர்பில் தகவல்களை ஆளுநருக்கு வழங்க வேண்டும் என அரசியலமைப்பு வேண்டுகிறது. துணைச் சட்டங்களை உருவாக்கிக் கொள்கையில் ஆளுநர் முக்கியமான ஒரு பங்கை வகிக்கிறார். சரத்து 154H(2) ஆனது மாகாண சபையால் உருவாக்கப்பட்ட "எல்லாத் துணைச் சட்டங்களையும் மாகாண சபையானது ஆளுநரின் சம்மதத்திற்காக அவருக்கு அனுப்புதல் வேண்டும் என்கிறது".[11] மாகாண சபை நிறைவேற்றுகின்ற துணைச் சட்டங்கள் தொடர்பிலான நிர்வாக அதிகாரம் நேரடியாகவோ அல்லது அமைச்சர்கள் அல்லது அலுவலர்கள் ஊடாகவோ ஆளுநராலேயே பயன்படுத்தப்படுகிறது. ஆளுநரே மாகாண சபையின் அமைச்சர்களையும் நியமனம் செய்கிறார். ஒரு மாகாணத்தின் நிர்வாக இயந்திரம்

[9] In this section of the present chapter the author has drawn on his own contribution made to Y.R.Amarasinghe (ed.) *Devolution Experience in Sri Lanka: (1988-1998): The Administrative and Fiscal Implications,* National Integration Programme Unit, Colombo, 2001.

[10] Article154B (2).

[11] Article 154H (2).

தோல்வியடையவருமிடத்து, அது ஜனாதிபதியினால் குறித்த மாகாண சபையைக் கலைக்க ஆணையிடுவது தொடர்பிலான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என ஆளுநரின் அறிக்கை ஒன்று மாகாண சபை தொடர்பான இறுதி விளைவு அல்லது அடைவு என்றவகையில் சுட்டிக் காட்டுகின்றது.

மாகாண ஆளுநர் மேலும் பல விருப்பத்திற்குரிய அதாவது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட அதிகாரங்களைக் கொண்டிருக்கிறார். இந்த அதிகாரங்களைப் பயன்படுத்துகையில் ஜனாதிபதியினால் அவர் வழி நடாத்தப்படலாம். இந்த அதிகாரங்களைப் பயன்படுத்துகையில் ஆளுநர், மாகாண முதலமைச்சரின் ஆலோசனையைப் பெறவேண்டிய அவசியமில்லை. அத்துடன், இந்த அதிகாரமானது மாகாண நிர்வாகம்மீது மத்தியின் கட்டுப்பாட்டை மேற்கொள்ளவுள்ள மிகவும் முக்கியமான ஒரு வழிமுறையாகவும் தொடர்ந்துமிருந்து வருகிறது. இந்தக் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை ஆளுநர் பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவார்.

1. துணைச்சட்டங்களுக்கு இறுதி அங்கீகாரம் வழங்குகையில்.
2. அவசரகால நிலமைகளின்போது.
3. மாகாணத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்திருக்கும்போது.
4. மாகாணசபையில் பெரும்பான்மையை ஒரு முதலமைச்சர் அனுபவிக்காத சந்தர்ப்பத்தில்.
5. ஒரு மாகாண சபை கலைக்கப்பட்டுள்ள அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், முதலமைச்சர் அலுவலகத்தில் இல்லாத சந்தர்ப்பத்தில்.

மாகாண ஆளுநரால் அனுபவிக்கப்படும் அதிகாரங்களின் ஏற்பாடுகளைப் பார்க்குமிடத்து அது அரசியலமைப்புக்குட்பட்ட தலைவர் உதாரணமாக, சுதந்திர இலங்கைக்கு முன்னரான ஆளுநர் நாயகம் பதவி போன்று அவ்வாறே இந்திய அரசியல் அமைப்பின்கீழ் மாநில ஆளுநருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களுக்கு மிகச்சமமானதாக இருந்தன. இந்தியாவின் மாநில ஆளுநரின் இந்த எதிர்க்காத அல்லது சாத்வீகமான பங்கு குறித்து முன்னாள் மாநில ஆளுநர் ஒருவரும் கவிஞருமான சரோஜினி நாயுடு விபரிக்கும்போது, "ஒரு தங்கக் கூட்டிலுள்ள பறவையின் வடிவம் அல்லது உருவம்" என ஒரு தடவை பயன்படுத்தியமை நோக்கத்தக்கது. எப்படியிருப்பினும், இந்தப் பதவியை வகிக்க வருபவரின் உண்மையான அதிகார அனுபவிப்பை நோக்குகையில் இந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி அவர்கள் குறைந்தளவில் தங்கக்கூட்டுக்குள் பறவையாகவும் அதிகளவில் மத்திய நிர்வாகத்துறையின் அதாவது ஜனாதிபதியின் ஒரு முகவராகவுமே சேவையாற்றியுள்ளனர் என்பதைக் காண முடிகிறது.

கடந்த இரண்டு தசாப்த காலத்தில் மாகாண ஆளுநரினால் எடுக்கப்பட்ட உண்மையான பங்கினைப் பரீட்சித்தல் அல்லது இரண்டு மாதிரி

ஆளுநர்களின் இருப்புக் குறித்துப் பரந்தளவில் சுட்டிக் காட்டுகையில் ஆளுநரானவர் சார்ந்த அதே கட்சி மாகாண சபையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்போது, அவர் சாதகமான அதாவது எதிர்க்காத பங்கை வகிக்கிறார். அதேநேரம், தான் ஜனாதிபதியை மாகாணத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகிறேன் எனக்கருதும் இன்னொரு ஆளுநர் ஜனாதிபதிக்குப் பொறுப்புக் கூறக்கூடியவராக உள்ளார். ஆதலால், அவர் அங்கே மேலான அதிகாரமிக்கவர் என்ற ஒரு பங்கை ஆற்றுகிறார். சாதாரண சந்தர்ப்பங்களில் சாத்வீக மாதிரியிலான ஆளுநர் என்பவர் ஓர் அரசியலமைப்புசார் தலைவராக செயற்படுகிறார். எனினும் விசேட சூழ்நிலைகளில் அதிகாரம் என்பது இரண்டு மட்டங்களிலும் இரண்டு கட்சிகளிடையே உடைந்திருக்கும்போது, அந்த ஆளுநர் மத்திய நிர்வாகத்தின் ஓர் ஆயுதமாக செயற்பட வேண்டியிருக்கிறார். ஜனாதிபதியின் இயக்கத்தின் பெயரில் ஆளுநரால் 1996 ஆம் ஆண்டு வடமத்திய மாகாண சபை கலைக்கப்பட்டமையை அரசியலமைப்புசார் தலைவர் என்ற மாதிரியிலிருந்து வேறுபட்டது என்பதற்கு ஓர் உதாரணமாகச் சுட்டிக்காட்ட முடியும். பொருத்தமான சந்தர்ப்பத்தின்போது, மாகாண சபையில் பெரும்பான்மை நம்பிக்கையை அனுபவிக்கும் முதலமைச்சரின் ஆலோசனையின்றி, ஆளுநர் மாகாண சபையைக் கலைக்க முடியாது என்று உயர் நீதிமன்றம் கூறியிருக்கிறது.[12] கீழே 1990 களின் மத்தியில் இது தொடர்பான பல சந்தர்ப்பங்கள் குறித்த ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதாவது, இரண்டு மட்டங்களிலும் அதிகார ஏற்பாடு அல்லது உறவு என்பது ஒத்துவராது உள்ள சந்தர்ப்பத்தில் மாகாண சபைகளைக் கலைப்பதில் அல்லது மாகாண சபை உறுப்பினர்களின் பெரும்பான்மை நம்பிக்கையைக் கொண்டிராதவர்களை முதலமைச்சர்களாக நியமனம் செய்வதில் ஆளுநரானவர் அதிமேதகு ஜனாதிபதியினால் எவ்வாறு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டார் என்பது குறித்த ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. தற்போதைய உண்மைத் தன்மையில் ஒரே கட்சி இரண்டு மட்டத்திலும் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டிருக்கையில் ஆளுநர்கள் பொதுவாக அவருக்கு அரசியலமைப்பினூடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தும்போது அமைச்சர்கள் சபையின் ஆலோசனையில் செயற்பட வேண்டப்படுகிறார்.

எவ்வாறிருப்பினும், மேற்கூறிய சூழ்நிலையில் தற்போது ஒரு செயற்திறன்மிக்க ஆளுநர் ஒருவரின் தோற்றத்தை நாம் காணலாம். அத்துடன், அவர் மேலே சுட்டிக்காட்டியவாறான ஆளுநரின் இரண்டாவது மாதிரியைப் பிரிதிநிதித்துவம் செய்கிறார். இந்த மாதிரியில், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநருக்கும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அமைச்சர்கள் சபைக்குமிடையே அரசியல்ச் சார்புநிலை தொடர்பில் வேறுபாடு இல்லை. அவர்கள் எல்லோரும்

---

[12] *Mahindasoma v Maithripala Senanayake*, in Marasinghe and Wickramaratne, op.cit.,p.290-312.

மத்தியிலும் மாகாணத்திலும் கட்டுப்பாட்டைச் செலுத்துகின்ற ஒரே கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். ஆனாலும், ஆளுநர் ஒரு அரசியல் சர்புசார் தலைவர் என்பதைவிட, மாகாண மட்டத்தில் ஜனாதிபதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிர்வாக அதிகாரமிக்க அலுவலராகவே செயற்பட வேண்டியிருக்கிறது. கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் இந்தமாதிரிக்கு மிகப்பெரிய உதாரணமாக உள்ளார். இங்கு இவர் நிர்வாகத்தை மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு ஊடாகவும் அமைச்சர்களின் செயலாளர்களின் ஊடாகவும் இயக்குவதுடன் ஆளுநருக்கும் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைத் தலைவர்களுகக்குமிடையே குறைவான கூட்டுறவு மற்றும் நம்பிக்கையின்மை என்பனவற்றுக்கு வழிவிடுகின்ற அமைச்சர்கள் சபை மற்றும் மாகாண சபை ஆகியவற்றின் பணிகளையும் கண்காணிக்கிறார். ஆளுநர் மாகாண நிர்வாகத்தைக் கொண்டு நடாத்துவதில் ஜனாதிபதிக்குப் பொறுப்புள்ளவராக உள்ளார் என உணருகிறார். அத்துடன், தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள், தொழிலுக்கு அவசியமான பயிற்சிகள், அனுபவம் மற்றும் பக்குவநிலை என்பவற்றை குறைவாகவே கொண்டுள்ளதால் ஆளுநரால் முறையாக வழிநடாத்தப்பட வேண்டியிருக்கிறது.[13] ஆளுநர் அலுவலகத்தைப் பார்வையிடுவதற்கான ஒரு பயணமானது, ஒருவருக்கு அது கட்டாயம் மாகாண நிர்வாகத்தின் முக்கிய மையம் அல்லது குவியம் என்ற உணர்வைத் தருகின்றது. அங்கே தற்போது ஆளுநர் என்ற பதவியைக் கொண்டிருப்பவரின் துறைசார் பின்னணியில் இருந்து பார்க்கும் நிலையில் அது ஒரு தனித்துவமான சூழ்நிலையாக உள்ளதா அல்லது எதிர்காலத்துக்கான ஒரு போக்காக அது உள்ளதா என முடிவெடுப்பது அல்லது எதிர்வுகூறுவது கடினமாகவே உள்ளது. ஆனால், ஜனாதிபதிக்கு ஆளுநர் பொறுப்புக்கூற வேண்டும் எனும் எண்ணக்கரு மேலும் பல ஆளுநர்களால்கூட பகிரப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.[14] இதன் பரவலாக்கமானது, எதிர்காலத்தில் ஓர் அரசியலமைப்புசார் தலைவர் என்ற ஆளுநரின் மாதிரியை மேலும் பலவீனப்படுத்த வழிவிடலாம். ஆளுநர் அவரது அரசியலமைப்புசார் பொறுப்புக்கள் என்ற வகையில் அவரது அலுவலகத்திலுள்ள நடைமுறையைப் பரீட்சிப்பதற்குகீழே ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாகாண முதலமைச்சர்களை நியமிப்பது அல்லது மாகாண சபையைக் கலைப்பது என்பது தொடர்பில் ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அப்பால் சென்று ஆளுநர்கள் செயற்பட்ட இரண்டு சம்பவங்கள் தொடர்பான ஆதாரம் முன்னரே வழங்கப்பட்டுள்ளது. அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஆளுநர்கள் மத்தியிலுள்ள ஆட்சியாளர்களின் பகுதியளவு அரசியல் நலனை நடைமுறைப்படுத்தவே முயற்சித்துள்ளனர். அண்மைக் காலங்களில் ஆளுநர்களின் முக்கிமான தலையீடுகள் இல்லாதபோதிலும், மேலே சுட்டிக்காட்டியுள்ளவாறு ஆளுநர்கள் மிகக்குறைந்தளவு அரசியலமைப்புசார்

---

[12] Mahindasoma v Maithripala Senanayake, in Marasinghe and Wickramaratne, op.cit.,p.290-312.
[13] Interview with the Governor of the Eastern Province.
[14] Interview with the Governor of the Southern Province.

தலைவர் என்ற நிலைக்கும் அதிகளவு மத்திய நிர்வாகத்தின் முகவர் என்ற நிலைக்கும் மாறிக்கொண்டுவரும் ஒரு போக்கு வளர்ந்துவருவதை அவதானிக்க முடியும். எங்களது முன்னரான ஆய்வுகளில் சுட்டிக் காட்டியுள்ளதுபோல், கடந்தகாலங்களில்கூட அவ்வாறான சுயநம்பிக்கைமிக்க அல்லது சக்திமிக்க பல ஆளுநர்கள் 1990 களின் நடுப்பகுதியில் சப்ரகமுவ மாகாண சபையில் ஒருவர் இருந்தது போன்று இருந்துள்ளார்கள். அவர் பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களை அவர்கள் தெரிவுசெய்யப்பட்ட உடனேயே சந்திப்பதையும் அவர்கள் இணைந்திருக்கின்ற அலுவலகங்களில் ஆரம்பிப்புக்களைச் செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

உள்ளூராட்சி தொடர்பான மாகாண அமைச்சிலிருந்து உதவியளிக்கப்பட்ட ஒரு தொகுதி அலுவலர்களால் உதவி செய்யப்பட்டு அவர் அறிமுகப்படுத்தல் வேலைகளை அல்லது செயற்பாடுகளைத் தலைமை தாங்கினார். அத்துடன், புதிதாக தெரிவுசெய்யப்பட்ட அலுவலர்களுக்கு சரியான நடைமுறைச் செயற்பாடுகளைக் கற்பித்துக் கொடுப்பதிலும்கூட ஆழமாக ஈடுபட்டார். வெவ்வேறு இடங்களில் ஒன்று திரண்டிருந்த தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் அவர்களது பொறுப்புக்கள் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டனர். ஆளுநரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட எந்தவொரு முக்கிமான பிரச்சினைகளும் முறையாகத் தீர்க்கப்பட்டன. இந்த எல்லா விடயங்களும் அதனுடன் தொடர்புடைய அரசியல் அதிகார சபைக்கு (உள்ளூராட்சி மன்றத்திற்கு) எந்தவிதத்திலும் தெரியாத வகையில் அல்லது அனுமதி பெறாத வகையிலேயே நடந்தேறின. ஆளுநர் அவர் செய்ததை அவரது சட்பூர்வப் கடமைகளின் ஒருபகுதியாகவே கருதினார். இந்தவகையில் நோக்கின், ஆளுநரானவர் மாகாணசபை அமைச்சர்களின் அதிகாரத்தை ஒரு குறித்த மட்டத்திற்கு குறைத்து மதித்து உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளுடன் மாற்று அதிகார வரிசைமுறை ஒன்றை உருவாக்கியிருந்தார். அதே ஆளுநர் 1998 இல் அம்மாகாண சபை கலைக்கப்பட்டபோது மாகாண சபையின் நிர்வாகத்தைக் கொண்டுநடாத்துவதுமீது உன்மையான கட்டுப்பாட்டை எடுக்க வந்தார். அவர் சிரேஷ்ட அலுவலர்களுடன் வாராந்தக் கூட்டங்களைக் கூட்டி தீர்மானங்களை எடுத்தார். பொதுவாக, அடுத்த மாகாண சபை தாபிக்கப்படும்வரை மாகாண நிர்வாகத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். மேலே சுட்டிக்காட்டியதுபோல, தற்போதைய கிழக்கு மாகாண ஆளுநர் குறிப்பாக பொதுச் சேவை தொடர்பில் அதேமாதிரியானதொரு பங்கையே வகிக்கிறார்.

துணைச் சட்டங்களுக்கான அங்கீகாரம் தொடர்பிலான மாகாண ஆளுநரின் ஒப்புதல் மிகவும் முக்கியமானது. ஏனெனில், அதுதான் மாகாண சபைக்கு அதிகாரமளிக்கின்ற சட்டங்களாகும். ஒரு துணைச் சட்டம் ஆளுனரின் ஒப்புதலுக்கு கையளிக்கப்படும்போது, ஆளுனர் ஒன்றில் அதற்கு ஒப்புதலை வழங்க முடியும் அல்லது ஏதாவது திருத்தத்தை அவர் விரும்பினால் திருத்தங்களுடன் மீள்பரிசீலனை செய்யும்படி மாகாண சபைக்கு அதனை திருப்பி

அனுப்பலாம். ஒரு மாகாண சட்டமூலம், மாகாண சபைக்கு திருத்தத்துடன் அல்லது திருத்தமில்லாது திருப்பி அனுப்பப்பட்டுவிட்டால் அது மீண்டும் மாகாண சபையில் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டு மீண்டும் ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டால் ஆளுநர் அதனை அங்கீகரிக்கலாம் அல்லது அதனுடைய அரசியலமைப்புக்குட்பட்ட தன்மை குறித்து உயர் நீதிமன்றத்திடம் தீர்மானத்தைப் பெறுவதற்காக ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக இரண்டாவது தடவையாக நிறைவேற்றப்பட்டதிலிருந்து ஒருமாத காலத்திற்கு ஆளுநர் அதனை வைத்திருக்கலாம். உயர் நீதிமன்றமானது, இத்துணைச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணற்றதாக உள்ளது என தீர்மானிக்குமாயின் ஆளுநர் அதற்கு இறுதி அங்கீகாரமளிப்பார். வேறுவார்த்தையிற்கூறின், ஆளுநர் மாகாண துணைச் சட்டங்களுக்கு இறுதி அங்கீகாரமளிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார். ஆனால், அவற்றை மறுக்கும் மறுப்பாணை அதிகாரத்தை அவர் பெற்றிருக்கவில்லை. துணைச் சட்டமுலங்களுக்கு இறுதி அங்கீகாரமளிக்கும் ஆளுநரின் இந்த அதிகாரமானது, அண்மையில் கிழக்கு மாகாணத்தில் நடந்தது போன்று சட்டமூலங்களின் வழியை அல்லது உருவாக்க வழியைத் தாமதப்படுத்த முடியும். அதாவது, கிழக்கு மாகாண சபையில் மாகாணத்திற்குரியவற்றை உபயோகித்தல் அல்லது ஒதுக்குதல் துணைச் சட்டமூலங்களை (Appropriation Statutes) ஆளுநரானவர் 2 மாதங்களுக்கு மீண்டும் திருப்பியனுப்பவோ அல்லது ஜனாதிபதியின் கவனத்திற்கு அனுப்பவோ செய்யாது தாமதப்படுத்தியமை மாகாண நிதி நிர்வாகம் மிகவும் மோசமான தாக்கத்திற்கு கொண்டுசெல்வதற்கு இறுதியில் வழிவிட்டது. மாகாண சபைகள் சட்டமானது,[15] குறித்தவகை துணைச் சட்டங்கள் குறிப்பாக, இறைவரி மற்றும் செலவு தொடர்பானவை அது மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட முன்பு கட்டாயம் மாகாண ஆளுநரின் சிபாரிசுக்கு அனுப்பப்படவேண்டும் எனக்கூறியபோதிலும்கூட, எங்களது ஆய்வினூடாக சில உதாரணங்களைக் கண்டுகொள்ள முடிந்தது. அதாவது, கிழக்கு மாகாண சபை எல்லாத் துணைச் சட்டங்களையும் அவை மாகாண சபைக்கு கொண்டுசெல்லப்பட முன்பு ஆளுநரின் ஒப்புதலுக்குக் கட்டாயம் அனுப்பும் தேவையிருப்பதை எமது ஆய்வினூடாகக் கண்டுகொள்ள முடிந்தது. சில மாகாண சபைகள் உதாரணமாக, தென் மாகாண சபையில் உள்ளதுபோல் துணைச் சட்டமூலங்களை ஆளுநரின் சிபாரிசுக்கு அனுப்புதல் என்பதை முறையான சட்டவாக்க வழிமுறையில் கட்டாயமானது என முன்கூட்டிய ஒரு படிமுறை என சட்டத்தினூடாக ஏற்றுக்கொண்டிருக்கின்றன. தென் மாகாண சபையின் ஆளுநரானவர் எல்லாத் துணைச் சட்டமூலங்களையும் அவை மாகாண சபையில் கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ள முன்பு கட்டாயம் தனது (ஆளுநரின்) கவனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என எல்லா அமைச்சுச் செயலாளர்களுக்கும் அறிவித்தல் கூறும்வகையில் சுற்றுநிரூபம் அனுப்பி இன்னும் ஒருபடி மேலே சென்றுள்ளார். இந்த அபிவிருத்திகள் ஆளுநர்களுக்கு துணைச் சட்ட

[15] Provincial Councils Act, No.42 of 1987

உருவாக்கச் செயன்முறையில் அவை ஆளுநரின் ஒப்புதல் பெற அனுப்புவதற்கு முன்னமே செல்வாக்குச் செலுத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றன.

வரையறையற்ற இன்னும் சில அதிகாரங்களைப் பயன்படுத்தும்போதுகூட, ஆளுநர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்ற எல்லைகளுக்கு அப்பால் அவர்கள் சென்றிருப்பதை எங்களால் அவதானிக்க முடிந்தது. முதலமைச்சர் நியமனம் விடயத்தில் ஆளுநரானவர் "மாகாண சபை உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள மிகத்தகுதியானவர் என அவர் கருதும்"[16] மாகாண சபை உறுப்பினரை முதலமைச்சராக நியமிக்க வேண்டியிருக்கிறது. ஒரு மாகாண சபையின் மொத்த உறுப்பினர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் தனியான ஒரு கட்சியிலிருந்து தெரிவு செய்யப்படவருமிடத்து, ஆளுநருக்கு வேறு தெரிவில்லாது அந்தக் கட்சியினது அல்லது குழுவினது தலைவரை முதலமைச்சராக நியமிக்க வேண்டியிருக்கிறது. எந்தவொரு கட்சியோ அல்லது குழுவோ மாகாண சபையில் பெரும்பான்மை பலத்தை தெளிவாகக் கொண்டிராத சந்தர்ப்பத்திலேயே ஆளுநரின் வரையறையற்ற அல்லது மேலான அதிகாரம் என்பது செயல்வடிவமிக்கதாக மாறுகிறது. அண்மைக் காலத்தில் இரண்டு சந்தர்ப்பங்களில் இரண்டு ஆளுநர்கள் தங்களுக்குள்ள வரையறையற்ற அதிகாரத்தை இதுவிடயத்தில் பயன்படுத்தியுள்ளனர். கடைசியில் அது சட்ட ரீதியானதா அல்லது நியாயத்திற்கு மாற்றமானதா என்பதைத் தீர்மானிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் செல்லவும் வழிவிட்டது. வடமத்திய மாகாணம் மற்றும் தென் மாகாணம் ஆகியவற்றில் போட்டியிட்ட குழுக்கள் (எதிர்க்குழுக்கள்) தெளிவான பெரும்பான்மையை இரு கட்சிகளும் முன்வைத்திருந்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களை முதலமைச்சர்களாக நியமித்த இரண்டு சந்தர்ப்பங்கள் தொடர்பான ஆதாரங்கள் இங்கே முன்வைக்கப்பட்டுள்ளன.[17]

குறித்த அதே காலப்பகுதியில் மாகாண சபைகளைக் கலைப்பது தொடர்பில் முதலமைச்சர்களுக்குள்ள மேலான அதிகாரம் கேள்விக்குள்ளாக்கப்படும் வகையிலான பயன்பாடு குறித்த இரண்டு சந்தர்ப்பங்கள் வெளிச்சத்துக்கு வந்தன. மாகாண சபையைக் கலைப்பது தொடர்பில் ஆளுனருக்கு அதிகாரமளித்துள்ளது தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகளின்படி, மாகாண சபையைக் கலைப்பது தொடர்பான அதிகாரத்தைப் பயன்படுத்துகையில் ஆளுநர் முதலமைச்சரின் ஆலோசனைக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என வேண்டுகிறது. அதாவது, "மாகாண சபையில் பெரும்பான்மையினர் ஆதரவு, ஆளுநரின் அபிப்பிராயத்தில் அமைச்சர்கள் சபை கட்டளையிடுதல் வழங்கப்பட்டிருக்கும்போது"[18] எனச் சுட்டிக்காட்டுகிறது. இந்த ஏற்பாடானது, முதலமைச்சர் மாகாண சபையில் பெரும்பான்மையை நிரூபிக்கும்

---

[16] Article 154F (4).

[17] See also Lakshman Marasinghe, 'The Thirteenth Amendment' in Lakshman Marasinghe and Jayampathy Wickramaratne (eds). *13th Amendment: Essays on Practice*, Stamford Lake, Pannipitya, 2010, pp.17-19.

பட்சத்தில் ஆளுநர் சுய விருப்பப்படி செயலாற்றும் அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை எனக்கூறியபோதிலும் கடந்த கால இரு சந்தர்ப்பங்களிலும் மாகாண சபைகளைக் கலைப்பதற்கு ஆளுநர்கள் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கின்றனர். அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஆளுநர்களின் தீர்மானமானது, மாகாண சபையில் பெரும்பான்மையைக் கொண்டிருந்த முதலமைச்சர்களால் வெற்றிகரமாக சவாலுக்கு உட்படுத்தப்பட்டது.[19] எங்களது ஆய்வில் அல்லது விசாரணையில் வெளிச்சத்திற்கு வந்தது போன்று ஆளுநர்கள் இந்த சிக்கல்மிக்க தீர்மானத்தை ஜனாதிபதியின் ஆலோசனையின் பின்பே எடுத்திருந்தனர். இது ஜனாதிபதியின் பகுதியளவு விருப்பங்களைச் சட்டத்திற்குப் புறம்பாக திருப்திப்படுத்த ஆளுநர் எனும் பதவி பயன்படுத்தப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறது.

மாகாண சபையின் வருமானம், மத்தியரசின் மானியங்கள், மாகாணங்களுக்கு நன்மையளிக்கும் எல்லாக் கடன்களிலுமிருந்தும் மாகாணங்களுக்கு வைப்பிலிடப்படும் வட்டிகள் அல்லது இலாபங்கள் போன்ற மாகாண நிதிமீதான கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்கு ஆளுநருக்குள்ள அதிகாரங்கள் மாகாண நிர்வாக விடயத்தில் அவர் பெற்றுள்ள உயர்ந்த நிலையையே எடுத்துக் காட்டுகிறது. மாகாண சபைகள் சட்டமானது, மாகாண நிதியின் அல்லது நிதியத்தின் பாதுகாவலனாக ஆளுநரை ஆக்குகிறது.[20] இந்த மாகாண நிதியத்துக்கான எல்லாக் கொடுப்பனவுகளும் அதனுடன் தொடர்புடைய எல்லா மற்றைய விடயங்களும் ஆளுநரால் உருவாக்கப்பட்ட சடட்டங்களால் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன. எல்லா மாகாண நிதி வருமானம் மற்றும் செலவுகள் அல்லது சட்டமூலம் தொடர்பிலான மும்மொழிவுகளும் மாகாண சபைகளின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படமுன்பு ஆளுநரின் அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது. மாகாண சபைச் சட்டம் மேலதிக நிதி உதவிகளுக்கான கோரிக்கைகள் அல்லது கணக்குத் தொடர்பான வாக்கெடுப்பு என்பன ஆளுநரால் மட்டுமே தொடக்கிவைக்க முடியும் எனச் சுட்டிக்காட்டுகிறது. அரசியலமைப்பு மற்றும் மாகாண சபைகள் சட்டம் என்பவற்றின் ஊடாக ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் எல்லை குறித்துப்பேசும்போது, தற்போதுள்ள ஆளுநர் ஒருவர் விபரிக்கையில் நிதி விடயம் குறித்து மாகாண ஆளுநரின் பங்கு அல்லது நிலை என்பது பாராளுமன்ற ஆட்சிமுறையில் நிதியமைச்சரின் நிலைக்குச் சமமானது என விபரித்தார்.[21] எல்லா மாகாணங்களும் உருவாக்கிக் கையாள வேண்டிய அவசரகால நிதி தொடர்பிலும் ஆளுநர் இவ்வாறான சமமான அதிகாரத்தையே கொண்டுள்ளனர். மாகாண சபைத் திருத்தச் சட்டமானது மாகாண நிதிகள் தொடர்பில் இன்னும் அதிகளவு அதிகாரங்களை ஆளுநருக்கு

---

[18] Article 154B (8) (c) and (d).

[19] For details of the two cases, see, Lakshman Marasinghe and Jayampathy Wickramaratne (eds). *Judicial Pronouncements on the 13th Amendment*, Stamford Lake, Pannipitiya, 2010, pp.290-365.

[20] Provincial Councils Act, No.42, 1987, Section 19.

[21] Interview with the Governor of the Southern Province.

வழங்குகின்றது. குறிப்பாக, ஒரு மாகாண சபையானது அதன் வருடாந்த நிதி அறிக்கையை நிறைவேற்றிக் கொள்ள முன்பு மாகாண சபை கலைக்கப்பட்டுள்ள சூழ்நிலையுடன் தொடர்புபடுத்தி இந்தத் திருத்தச் சட்டமானது[22] "புதிய மாகாண சபை உருவாக்கப்பட்டு கூட்டங்களை நடாத்தியதிலுந்து 3 மாதங்கள் முடியும்வரை அல்லது புதிய மாகாண சபை கடமைகளை தொடங்கியதிலிருந்து வரும் பிரச்சினைகளுக்கு ஆளுநர் அதிகாரமளிக்கலாம்"[23] எனத் திருத்தச் சட்டம் வசதியளிக்கிறது. இந்த ஏற்பாடுகளின் விளைவாக, ஆளுநர் ஒருவர் குறைந்தது ஒரு சிறிய காலத்திற்காவது அதாவது, மாகாண சபை கலைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அவரது சொந்த சூழ்நிலைக்கேற்ப மாகாண நிர்வாகத்தை நடாத்துவதற்கு வழிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

மாகாண நிர்வாகத்தில் ஒரு பிரதான நிர்வாகி என்ற வகையில்கூட, ஆளுநருக்கு முக்கியமான பங்கு வழங்கப்பட்டிருக்கிறது. சரத்து 154 C ஆனது மாகாண சபைத் துணைச் சட்டங்கள் இயற்றுவதற்குள்ள விடயங்கள்மீதான அதிகாரம் என்பது ஆளுநரால் "நேரடியாகவே அல்லது அமைச்சர்கள் சபையின் அமைச்சர்கள் ஊடாகவோ அல்லது அவருக்குக் கீழுள்ள அலுவலர்கள் ஊடாகவோ"[24] அனுபவிக்கப்படும் என சுட்டிக்காட்டுகிறது. "ஆளுநருக்கு அவரது பணிகளைச் செய்யும்போது பகுத்தறிவுக்கு எட்டியபடி அமைச்சர்கள் சபை ஆலோசனை வழங்கவேண்டியுள்ளது. அத்துடன், ஆளுநர் அவரது பணிகளைச் சொந்த விருப்பத்தின்படி செய்யும் சந்தர்ப்பங்கள் தவிர, மற்ற சந்தர்ப்பங்களில் அமைச்சரவையின் ஆலோசனைகளுக்கு ஏற்ப செயற்படுவார்".[25] மாகாண சபைகள் சட்டமானது, மாகாண நிர்வாகத்தை ஆளுநரின்கீழ் வைத்துள்ளது. அச்சட்டமானது "பொதுச்சேவையாளர்களை நியமனம் செய்தல், இடமாற்றம் செய்தல், நிறுத்தி வைத்தல் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் அதிகாரத்தை"[26] ஒவ்வொரு மாகாணத்தின் ஆளுநருக்கு வழங்கியுள்ளது. காலத்திற்குக் காலம் ஆளுநர் இந்த அதிகாரத்தை மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு வழங்குவார். அதுகூட ஆளுநரால் நியமிக்கப்பட்ட ஒன்றே. இந்த முக்கிய அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது ஆளுநர் மாகாண அமைச்சர்கள் சபையின் ஆலோசனையைப் பெற்றுச் செயற்பட வேண்டியிருக்கிறதா என்பது சந்தேகத்திற்கிடமான ஒன்றாகவே இருந்து வருகிறது. பொதுச்சேவை மீதான ஆளுநரின் இந்த அதிகாரம் என்பது அரசியலமைப்புரீதியாக பகிரப்பட்ட நிர்வாகத்துறைசார் அதிகாரமாக கருதப்படாமல், மாகாண ஆளுநரின் நிர்வாக அதிகாரங்கள் என வரையறை செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு நோக்கின்படி, இந்த அதிகாரங்களைப் பயன்படுத்துகையில் அவர் அமைச்சர்கள் சபையின் ஆலோசனையின்படி செயற்பட வேண்டும் என்ற நிபந்தனையால் கட்டுப்படவில்லை எனக்கூறப்படுகிறது.[27] எவ்வாறிருப்பினும், பல மாகாண சபைகளில் ஆளுநர்கள்

---

22 Provincial Councils (Amendment) Act, No.28, 1990.
23 Provincial Councils (Amendment) Act, No. 28, 1990. Section 3.
24 The Constitution, Article 154C.
25 Article 154F (1).
26 Provincial Councils Act No. 42, 1987, Section 32(1).

இந்த அதிகாரங்களை ஒன்றில் அமைச்சர்கள் சபைக்கு வழங்கியிருக்கிறார்கள் அல்லது அமைச்சர்களின் அல்லது முதலமைச்சரின் ஆலோசனையுடன் இந்த அதிகாரத்தை ஆளுநர்கள் பயன்படுத்துகிறார்கள்.[28] கிழக்கு மாகாண சபையில் கல்விக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ள அமைச்சர், ஆளுநரானவர் கல்வித் திணைக்களத்திலுள்ள சிரேஷ்ட நிர்வாகிகளின் நியமனம் மற்றும் இடமாற்றம் போன்ற விடயங்கள் தொடர்பில் தன்னுடன் கலந்தாலோசிக்கவில்லை என்று ஆளுநரை வெளிப்படையாகவே விமர்சித்திருந்தார். தென்மாகாண ஆளுநர்கூட பொதுச் சேவை தொடர்பில் அவருக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்துகையில் அமைச்சரவை சபையிடம் ஆலோசனை அல்லது அனுமதி பெறுவது அவசியமான ஒன்றல்ல என்ற நோக்கிலேயே உள்ளார்.[29]

மாகாண சபை கலைக்கப்பட்டிருக்கின்ற அல்லது இடைநிறுத்தப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் யார் அல்லது எந்த நிறுவனம் அதிகாரத்தைக் கொண்டிருப்பது என்ற இடைவெளி நிலவுகின்ற சந்தர்ப்பமானது, மாகாண ஆளுநருக்கு மிகவும் செயற்பாடுமிக்க பங்கை வகிக்கச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. மாகாண நிதிகள்மீதான கட்டுப்பாடு, தனிச்சிறப்புமிக்க அதிகாரங்களின் அளவு, நீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்ட மாகாணப் பொதுநிர்வாகம்மீதான அதிகாரங்கள் என்பன எல்லாம் ஒன்றுசேர்ந்து கோட்பாட்டு அளவிலாவது அரசியலமைப்பு மற்றும் மாகாண சபைகள் சட்டங்களின்கீழ் மாகாண ஆளுநரை அதிமேதகு ஜனாதிபதியின் ஒரு மாகாணப் பிரதியாக (நகல்) ஆக்குகிறது. உண்மையான நடைமுறையில் ஒரே அரசியற்கட்சி இருமட்ட அரசாங்கத்தையும் மேலாண்மை செலுத்தும்போது, சாதாரண நேரங்களில் தெரிவுசெய்யப்பட்ட மாகாணத் தலைமைத்துவத்தினை ஜனநாயக சட்டபூர்வத் தன்மைமிக்கதாக அங்கீகரிப்பவராக ஆளுநர் காணப்படுகிறார். ஆனால், அதேநேரம் சில தனிப்பட்ட ஆளுநர்கள் அவர்கள் அதிமேதகு ஜனாதிபதியால் நியமிக்கப்படுவதால் அது அவரின் சார்பாக மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களை வழிநடாத்துவதற்கான அதிகாரத்தை அவர்களுக்கு கொடுக்கிறது என அவர்கள் கருதும் போக்கொன்றின் அறிகுறிகளை நாங்களும் இந்த ஆய்வினூடாகக் காணமுடிந்தது.

6.6 மாகாணங்களுக்கிடையிலான உறவுகள்

மத்தியிலுள்ள தலைவர்கள் மாகாணங்களுக்கிடையிலுள்ளவர்களுடன் சந்தித்துக் கொள்வதற்காக முறையான ஒழுங்குகள் இல்லை என்பது முன்னரே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன், மாகாணத் தலைவர்களுக்கிடையில் கூட்டங்களைக் கூட்டுவது தொடர்பான சூழ்நிலையும் அவ்வளவு சிக்கல்மிக்கதொன்றல்ல. தனிப்பட்ட வகையில் மாகாணங்களுக்கிடையே

---

27 See Lakshman Marasinghe, in Lakshman Marasinghe and Jayampathy Wickramaratne (eds.)*13th Amendment: Essays on Practice* , Stamford Lake, Pannipitiya, 2010,pp.12-16.

28 For instance, it is reported from the Uva Province that the Chief Minister there is consulted by the Governor in all such matters.

29 Interview with the Governor, Southern Province.

அரசியற் தலைவர்களுக்கும் அலுவலர்களுக்குமிடையே அதிகளவான தொடர்புகள் உள்ளது. மாகாண சபைகளின் அரசியற் தலைவர்களுக்காக அவர்களின் குறிப்பிட்ட தேசிய அரசியற் கட்சிகள் ஒரு மறைமுகமான வழியில் தொடர்புகளைப் புரிவதற்கான வழிகளை வழங்குகின்றன. பல்வேறு நாடுதழுவிய சேவைகளில் உறுப்பினர்களாக இருப்பதால் சிரேஷ்ட மாகாண அலுவலர்கள் அவர்களது தொழில்சார் அந்தஸ்திலிருந்துகொண்டு மற்றவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கின்றனர். மறுபக்கத்தில், ஆண்டுக்கணக்காக மாகாண சபையிலுள்ள அரசியல் மற்றும் அலுவலக நடிகர்கள் அவர்களைப் போன்ற மற்றவர்களைச் சந்திப்பதற்கு பல்வேறுபட்ட வழிமுறைகளில் ஈடுபட்டுள்ளனர். அவ்வாறான சந்திப்புக்களில் மிகவும் பரந்துபட்ட ஓர் ஆயுதமாக அல்லது வழிமுறையாக 'மாநாட்டு வழிமுறை' என்பது காணப்படுகின்றது. அத்துடன், முதலமைச்சர்களது வேறுபட்ட அமைச்சுக்களின் செயலாளர்களது, ஆளுநர்களது, மிகமுக்கியமான திணைக்கள தலைவர்களது (உதாரணமாக வருமானம், நிலம், சட்டம் போன்றன) மாநாடுகள் என்பவை மாகாண சபை உப - கலாசாரங்களில் மிகவும் பொதுவானவைகளாக இருந்து வருகின்றன. அவை ஒரே வகையான பிரிவில் உள்ள மாகாண செயற்பாட்டாளர்களுக்கு பொதுவான நலன் குறித்த பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கும் தீர்வுகளைக் கண்டுகொள்வதற்குமான ஒருபாதி முறையான தளத்தை வழங்குகின்றன. இவ்வாறான முயற்சிகள் எப்போதும் மத்தியரசால் அணுசரனை வழங்கப்பட்டு இடம்பெறுவதுடன் அதற்குச் சமமாக மத்திய அதிகாரிகளின் ஆதரவைத் தொடர்ந்தும் பெற்றுவருகிறது. எல்லா மாகாணங்களிலும் அவர்களது அலுவல்களைச் செய்கையில் ஒரே வகையான வழிமுறைகளையும் நடைமுறைகளையும் பின்பற்ற வேண்டும் எனும் அம்சமானது மத்தியில் அடையப் பெற்ற உத்தரவாதத்தை மாகாணங்கள் ஏற்றுக்கொண்டதன் விளைவாக இடம் பெற்றது என்பது குதிப்பிடத்தக்கது. இந்தப் போக்கானது, மாகாணத் துணைச் சட்டங்களை இயற்றுதல், மாகாண சபைக் கூட்டங்களை நடாத்துதல், வருமானத்தை சேகரித்தல் மேலும் சுயாதீனமான அதிகார சபைகள் அல்லது சபைகளைத் தாபித்தல் போன்றவற்றை மேற்கொள்வதற்கான வழிமுறைகளை உருவாக்குகையில்கூட இந்த ஒரே வடிவத்தன்மை பின்பற்றப்படுவதை அவதானிக்கலாம். மாகாண நிர்வாகத்தை நாளாந்தம் நடாத்துகையில் இவ்வாறான தொடர்புகளிலிருந்து கிடைக்கப்பெறும் நடைமுறை இலாபங்களுக்கு மேலதிகமாக அதிகாரப் பகிர்வு பரீட்சித்தலைக் கொண்டு நடாத்துகின்ற இவ்வாறான முக்கிய பங்குதாரர்களிடையே ஒற்றுமை உணர்வொன்றை வளர்ப்பதற்கும் அவை பங்களிப்புச் செய்கின்றன. எவ்வாறிருப்பினும், எந்தவொரு இவ்வாறான மாநாடுகளும் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டு வழமையாக நடாத்தப்படவில்லை. அவ்வாறே, அக்கூட்டங்களில் அறிக்கைகள்கூட முறையாகப் பேணப்படவில்லை. அவ்வாறான பல மாநாடுகளுள் ஒன்று மட்டும் தொடரானவகையில் ஒரு முறையான ஒழுங்கமைப்பு என்ற தோற்றத்தைக் கொண்டு சில செயற்பாட்டு மரபுகளை அவதானித்து மாநாட்டு பதிவுகளை உள்ளடக்கிய வழிமுறைகளுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுவே,

முதலமைச்சர்கள் மாநாடு ஆகும். கீழே முதலமைச்சர்கள் மாநாட்டின் பண்புகள் மற்றும் அதன் செயற்பாடு என்பவற்றை பரீட்சிப்பதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலமைச்சர்கள் மாநாட்டின் தொடக்க மாநாடு 2000 பெப்ரவரியில் நடந்தேறியது. கடந்த பத்து ஆண்டுகளில் இதுவரை 27 கூட்டங்கள் நடந்துள்ளன. அதன் முதலாவது மாநாட்டில் கூறப்பட்டதுபோல், அப்போது மாகாண சபைகளுக்கிடையே நிலவிய குறைந்தமட்ட இணைப்பே இவ்வாறானதொரு மாநாட்டைக் கூட்டவழிவிட்டது. அப்போதிருந்த அரசாங்கம் அதிகாரப் பகிர்வை மேலும் பலப்படுத்துவதற்கு எடுத்த ஒரு பலமான முயற்சியின் பின்னணியிலேயே மாகாண முதலமைச்சர்கள், அவர்களது செயற்பாடுகள் மற்றும் பணிகள் என்பவற்றை இணைப்புச் செய்வதற்கு இந்த மாநாடு முக்கியமானது எனக்கருத வந்தனர். எல்லா மாகாண சபைகளும் அப்போது மத்தியில் ஆட்சியிலிருந்த அரசியற் கட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தன என்ற உண்மை எல்லா முதலமைச்சர்களையும் ஒரே தளத்தின்கீழ் வேலைசெய்வதற்கு ஒன்றுதிரட்டும் காரணியாக அமைந்தது எனலாம். ஒவ்வொரு மாநாடும் எல்லா மாகாணங்களுக்கும் பொருத்தமான ஒரு சிறப்புக் கருத்துடன் அல்லது விடயத்துடன் நடந்தேறின. உதாரணமாக 26 ஆவது மாநாட்டுக்கு தெரிவுசெய்யப்பட்ட கருப்பொருள் "மாகாணங்களின் வருமானத்தை உயர்த்துதல்" என்பதாக இருந்தது. மாகாண சபைகளுக்கென்று சொந்தமான எந்தத் தனியான வரவு - செலவுத்திட்ட ஒதுக்கீடோ அல்லது அரசியலைப்பு அதிகாரமோ இன்றி ஒவ்வொரு மாகாண சபைகளும் இந்த மாநாட்டை நடாத்துவதற்கான சந்தர்ப்பத்தை எடுக்கின்றன. மாகாண முதலாமைச்சர்களுக்கு மேலதிகமாக எல்லா பிரதான செயலாளர்களும் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒரு அலுவலர் குழுவும் (வழமையாக முக்கியமான அமைச்சுக்களின் செயலாலர்கள் அதாவது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு, தேசிய நிதி ஆணைக்குழு மற்றும் திறைசேரியின் முகாமைத்துவ சேவைத் திணைக்களங்கள் ஆணையாளர் நாயகம் ஆகியோர்) இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள்.

கடந்தகால மாநாடுகளின் அறிக்கைகளை பரீட்சித்தபோது, கடந்த பல ஆண்டுகளாக மாகாண சபையின் பிரதான கவனத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள் என்பவற்றை அது எமக்கு தெரியப்படுத்தியது. 25 ஆம் மற்றும் 26 ஆம் முதலமைச்சர்கள் மாநாடுகளில் கவனம் செலுத்தப்பட்ட விடயங்கள் முதலாவது மாநாட்டில் எடுத்தக்கூறப்பட்ட விடயங்களிலிருந்து பெரியளவில் வேறுபட்டு நிற்கவில்லை எனும் உண்மையானது, முதலமைச்சர்கள் மாநாடுகளானது அவற்றின் நோக்கங்களை அடைந்து கொள்வதில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளன என்ற முடிவினை வழங்குகிறது. சட்ட விடயங்களிலும் மாகாணத் துணைச் சட்டங்களை வரைதல் விடயத்திலும் மாகாண சபைகளுக்கு உதவுவதற்காக கணக்காளர் நாயகத்தின் (Auditor General) திணைக்களத்தில் ஒரு தனியான பிரிவைத் தாபிப்பதன் தேவை,

மத்தியரசாங்கத்தின் மாகாண சபைகளுக்கான நிதிகளை மாவட்ட, பிரதேச அலுவலர்கள் ஊடாக அனுப்புவதற்குப் பதிலாக நேரடியாக மாகாண சபைகளுக்கு மாற்றீடு செய்தல், BTT I உயர்த்துவதற்கு மாகாண சபைகளுக்கு சுதந்திரம் வழங்கல், மாகாணசபைகளின் விசேட அல்லது குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப ஆளணியினரை நியமித்தல், மற்றும் உரிய காலத்தில் வெற்றிடங்களை நிரப்புதல், வருமானத்தை அதிகரிப்பதற்கான பரந்த சந்தர்ப்பம், மாகாணங்களுக்கு நேரடியாக நிதிகளை அனுப்புதல், கீழ்மட்ட நிர்வாகத்தை மாகாண சபையின் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதற்கான ஒரு தனியான வழிமுறை, 1987 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளல், மாகாணமட்ட அலுவலர்களுக்கு சிறந்த வேலைச்சூழ்நிலையும் அதிகாரமும் வழங்கல், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிகராக மாகாண சபை உறுப்பினர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் மற்றும் சேமநலன்கள் வழங்கல் என்பவை போன்ற தேவைகளே அல்லது விடயங்களே முதலமைச்சர்கள் மாநாட்டுக் கூட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் முதலமைச்சர்களால் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் விடயங்களாக இருந்துவந்துள்ளன. முதலமைச்சர்களுக்கு மாகாண சபைகளிலிருந்து முன்மொழிவுகளைப் பெற்று அவை ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்பு, அவற்றுடன் தொடர்புடைய மத்தியரசின் முகவராண்மைகளுக்கு தீர்மானம் எடுத்தலுக்காக அனுப்பும் வழக்கம் வழமையாகத் தொடர்ந்து வந்த ஒவ்வொரு முதலமைச்சர் மாநாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுப் பின்பற்றப்பட்டு வந்தது. முதலமைச்சர்கள் மாநாட்டில் முன்வைக்கப்படும் முன்மொழிவுகள் மிகக்குறைந்தளவிலேயே சாதகமான பதிலைப் பெற்றன. அத்துடன், மாநாட்டு அறிக்கைகள் மீண்டும் மீண்டும் முதலமைச்சர்களினால் முன்வைக்கப்பட்டுவந்த ஒரேவகையான முன்மொழிவுகளாலேயே நிரம்பியிருந்தன. எவ்வாறிருப்பினும், மாகாண தலைவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்புகளைப் புரிவதற்கும் அவர்களுக்கிடையே ஒற்றுமையை விருத்தி செய்வதற்குமான ஒரு தளத்தை உருவாக்குகின்ற பணியை இந்த முதலமைச்சர்கள் மாநாடுகள் நிறைவேற்றி வந்தன. பொதுவில் மத்தியரசாங்கம் மாகாண அதிகார எல்லையில் அத்துமீறி செயற்பட்டபோதிலும்கூட, மாகாண முதலமைச்சர்கள் மத்தியரசுக்கு சவால் விடுவதில்லை. எவ்வாறிருப்பினும், முதலமைச்சர்கள் தங்களது விடயப் பரப்புக்களை பாதுகாக்கும் நோக்கில் மத்தியரசிலிருந்து உன்மையான அல்லது மறைமுகமான அச்சுறுத்தல்கள் வரும் சந்தர்ப்பத்தில் அதற்கு எதிராக மிக உறுதியாக இருந்த சந்தர்ப்பங்களையும் அப்போது அவர்கள் தங்களது பாதுகாப்புக்காக மாநாடுகள் ஊடாக வெளிப்பட்ட ஒற்றுமையை பயன்படுத்தினர் என்பதையும் எங்களால் அதவானிக்கக்கூடியதாக இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் கட்டுப்பாட்டிலிருந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டுக் குறிப்புக்கள் சுட்டிக்காட்டுவதுபோல் அப்போதிருந்த முதலமைச்சர்கள் (அவர்கள் எல்லோரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களாகவிருந்தனர்) முதலமைச்சர்கள் மாநாட்டை மாகாண அதிகாரத்திற்கு எதிராகவிருந்த எல்லாத் தடைகளையும்

சவாலுக்குட்படுத்துவதற்காக பயன்படுத்தியுள்ளார்கள் என்பதைக் கண்டுகொள்ள முடிந்தனர். பத்தாவது (10 ஆவது) முதலமைச்சர்கள் மாநாட்டில் அபிவிருத்தி வேலைகளை மாகாணங்களில் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னெடுப்பதற்காக, புதிதாக உருவாக்கப்பட்ட பிராந்திய அபிவிருத்தி அமைச்சினைப் பயன்படுத்தும் நடைமுறை குறித்த விடயத்துடன் தொடர்புபட்டு முதலமைச்சர்கள் ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர். "மாகாண சபைகள் சட்டப்படி அவைகளின் கீழ்வரும் எல்லா செயற்பாடுகள் மீதும் போதுமான நிதிகளுடன் கட்டுப்பாட்டைச் செலுத்தும் அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்காவிட்டால்"[30] மத்தியரசை நீதிமன்றத்திற்குக் கொன்டு செல்ல அத்தீர்மானம் வழிவிட்டது.

மாகாண சபைகளுக்கிடையிலான இணைப்புப் பிரிவு (The Inter-Provincial Coordination Unit)[31] மாகாண சபைகளால் அவைகளாகவே மாகாண சபைகளுக்கான ஒருவகையான இணைப்புச் செயலகமாக பணியாற்றுவதற்காக உருவாக்கப்பட்ட இன்னொரு ஏற்பாட்டை இது பிரதிநிதித்தவப்படுத்துகிறது. இது 2001 ஜூலைக்கு முன்னால் முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால், அதன் பணிகளை மிகவும் தாமதமாகவே ஆரம்பித்தது. முதன்முதலாக மேல் மாகாண சபை அலுவலக வளாகத்தில் உருவாக்கப்பட்டு பின்பு படிப்படியாக கொழும்பில் தனியான இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இங்கு கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விடயங்களை நோக்கின், 2006 செப்டம்பரில் நடந்த 18 ஆவது முதலமைச்சர்கள் மாநாட்டில் இந்த அலகு தொடர்பான விதிகள் தொடர்பில் முதலமைச்சர்கள் உடன்பட்டுக் கொண்டனர். மாகாண சபைகளுக்குப் பொதுவாகவுள்ள பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள் குறித்த தகவல்களைத் திரட்டுதல், மத்திய முகவராண்மைகளுடன் இணைப்புச் செய்தல், மாகாண சபைகளுக்குத் தேவையான துணைச் சட்டமூலங்களை அடையாளம் காணல், அவற்றை வரைந்து நிறைவேற்றிக் கொள்வதற்காக மாகாண சபைகளுக்கு அனுப்புதல், முதலமைச்சர்களின் பிரதான செயலாளர்களுடைய மாநாடுகளின்போது செயலகமாக செயற்படல் என்பவற்றுடன் மாகாணத் துணைச் சட்டங்கள், நீதி மன்றத் தீர்ப்புக்கள், மாகாண சபைகளுடன் தொடர்புபடும் ஏனைய ஆவணங்கள் என்பவற்றைப் பாதுகாத்து வைத்திருக்கும் ஆவணக் காப்பகமாகவும் இருக்க இது வேண்டப்பட்டது. மேல்மாகாண சபையின் மேற்பார்வையின்கீழ், இந்த அலகின் வேலைகளைக் கண்காணிப்பதற்காக ஒவ்வொரு மாகாண சபையும் ஒரு அலுவலரை வழங்குவதன்மூலம் இந்த அலகு நிரந்தர உறுப்பினர்களையும் படிப்படியாகப் பெற்றுவந்தது. ஒரு பாராளுமன்றச் சட்டத்தின்ஊடாக இந்த மாகாணங்களுக்கிடையிலான இணைப்பு அலகை முறையாக நிறுவனமயப்படுத்திக் கொள்வதற்கு மாகாண சபைகள் பெரும் ஆர்வத்துடன் இருந்தன. ஏனெனில், அப்போது அது முகாமைத்துவ சேவைகள் பிரிவினால்

---

30. Minutes of the 10th Chief Ministers' Conference held on 30th August 2003, p.16. (mimeo.).
31. *anthar palath sambandhikarana ekakaya.*

அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொகுதி வேலையாட்களால் நிரப்பப்பட்டிருக்கும். அவ்வாறே சுதந்திரமான ஒரு வரவு - செலவுத் திட்டத்துடன் செயற்டக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த எதிர்பார்ப்புக்கள் சட்டமா அதிபரினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட ஒரு சட்டமூலமானது இந்த ஏற்பாடு 13 ஆம் திருத்தச் சட்டத்துடனும் 1987 ஆம் ஆண்டின் மாகாண சபைகள் சட்டத்துடனும் முரண்படுகிறது[32] எனக்கண்டுகொள்ளப்பட்டபோது, இதன் விளைவாக இவ்வெதிர்பார்ப்பு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இல்லாமற் செய்யப்பட்டது. இன்றுவரை இந்த அலகானது மிகவும் குறைந்தளவு பணியாட்களுடன் மிகவும் வரையறுக்கப்பட்ட நிதிவசதிகளுடன் மாகாண சபைகளால் ஆமோதிக்கப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே இந்த அலகானது, இலங்கையின் அதிகாரம் பகிரப்பட்ட ஆட்சிமுறையுடன் தொடர்புபட்ட தகவல்களைப் பாதுகாக்கும் பணியில் சிறப்பாக செயற்பட்டுக் கொண்டிருக்க மாகாண சபைகளுக்கிடையான இணைப்பைப் பலப்படுத்தும் இன்னொரு முக்கிய படியினை இது சுட்டிக்காட்டுகிறது.

6.7 முடிவான அவதானங்களும் பரிந்துரைகளும்

மேலே விளக்கியுள்ளதுபோல் இலங்கையில் பின்பற்றப்பட்ட அதிகாரப்பதிர்வு முறையில் மத்திய - மாகாணங்களுக்கிடையிலான உறவில் ஒரு முக்கிய அம்சமாக மத்தியின் ஆதிக்கம் என்பது எழுச்சி பெற்றுள்ளது. நாட்டின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு ஒரு புதிய வகை இரண்டாம் நிலை நிர்வாக முறைமை அறிமுகம் செய்யப்பட்டது என்ற சூழ்நிலையில் நோக்கினால் இது ஒரு அதிசயமாக தோன்றவில்லை. மாகாண சபை முறையானது, மிகவும் மத்தியமயப்படுத்தப்பட்ட அதிமேதகு ஜனாதிபதித்துவ ஆட்சியின் மத்திய காலப்பகுதியில் இருக்கும் அதிகார ஏற்பாடுகளை தொந்தரவு செய்யாமல் கவனம் செலுத்தப்பட்டு தோற்றுவிக்கப்பட்டது. இந்த முறைமைக்குள் மாகாண சபைகளுக்கு என ஒரு அதிகாரப் பகுதி உருவாக்கப்பட்டிருந்தது என்பது உண்மையே. ஆனாலும், அந்தப் பகுதிகளிலாவது இந்தப் புதிய மாகாண சபைகளால் துணைச் சட்டங்களை உருவாக்கிக் கொள்வதற்கோ அவற்றை அமுல்ப்படுத்துவதற்கோ அங்கே அந்நிறுவனங்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டிருக்கவில்லை.

மிகவும் குறைவான வருமானமீட்டும் சக்தியுடன் அவைகள் அதிகளவில் மத்தியரசிடமிருந்து கிடைக்கும் மாணியங்களுக்காகத் தங்கியிருக்கும் வகையில் அவை வடிவமைக்கப்பட்டன. அதற்கும் அப்பால், மத்திய அமைச்சர்களும் ஏனைய மத்திய முகவராண்மைகளும் நிதி அதிகாரம் தொடர்பான கயிறுகளைக் குறித்த மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பனவற்றை மாகாணங்களை மேற்பார்வை செய்வதற்கும் இயக்குவதற்கும்

[32] Letter of the Secretary, Ministry of Local Government and Provincial Councils addressed to the Chief Secretary, Western Provincial Council, 20/02/2008.

கட்டுப்படுத்துவதற்கும் எனப் பயன்படுத்தும் நிலையிருந்தன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, சேவைகளை வழங்குவதற்காக மாகாண சபைகள் பயன்படுத்த வேண்டியிருந்த நிர்வாகப் பிரிவு முழுவதும் அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கவில்லை. மாகாண அதிகார நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட விடயங்களில் தெளிவின்மை மற்றும் நிச்சயமற்ற தன்மை என்பன அவைகளின் வேலைகளை இன்னும் மேலும் சிக்கலுக்குள்ளாக்கி நிற்கின்றன. இரண்டு மட்ட நிர்வாகத்திலும் இரு பெரும் தேசிய கட்சிகளின் தொடர்ச்சியான ஆதிக்கம் என்பது மத்தியரசின் பொறுப்புக்களைக் கொண்டுசெல்வதற்கான வழிகாட்டிகளுக்காக மாகாணங்களை மத்தியரசினை நோக்கி நிற்கவேண்டி ஆக்கியிருக்கின்றது. இவ்வாறான எல்லாப் பிரச்சினைகளுக்கிடையிலும் மாகாண சபைகள் இலங்கை அரசியல் தளத்தில் ஒரு இடத்தினைப் பெற முகாமை செய்திருக்கின்றன. மாகாண சபைகள் வேலை செய்யக்கூடிய அல்லது சாத்தியமான அரசாட்சி செய்யும் நிறுவனமாக சமூகத்திற்கு பல்வேறுபட்ட சேவைகளுக்கான விடயங்களில் கவனம் செலுத்தி தங்களைத் தாங்களே வளர்த்தெடுப்பதில் வெற்றி பெற்றுள்ளன. எவ்வாறிருப்பினும், அவை உருவாக்கப்பட்டு 22 ஆண்டுகளின் பின்பு மாகாண சபைகளானவை அரசாட்சி புரிதலில் இரண்டாம் மட்டக் கட்டமைப்புத் தொகுதி என்றவகையில் இன்னும் முறையாக நிறுவனமயப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது. அதற்காக, மத்திய அரசாங்கத்தின் முறையான வழிகாட்டலின்கீழ் அரசியலமைப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தொடர்பில் அவைகளுக்குக் குறிப்பிடத்தக்களவு சுயாட்சி உத்தரவாதப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

விதப்புரைகள்

1. மாகாண ஆளுநருக்கு பொருத்தமான மாதிரியாக அரசியலமைப்புக்குட்பட்ட தலைவர் எனும் மாதிரியை முன்னேற்றுதல். இதற்காக சாத்தியமான அளவீடுகள் அல்லது கணிப்பீடுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதில் ஆளுநர்களை அரசியல் இலாப நோக்கில் தெரிவு செய்யாது சிறப்பு அடிப்படையில் தெரிவு செய்தல், மற்றும் நியமனங்களைச் செய்யும்போது முதலமைச்சரைக் கலந்தாலோசித்தல் என்பனவற்றையும் உள்ளடக்கல்.

2. பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் தேசிய நில ஆணைக்குழுவை தாபித்தல். அத்துடன் மாகாண சபைகளுக்குத் தாக்கத்தை உண்டுபண்ணுகின்ற கொள்கைத் தீர்மானங்களை எடுக்கின்ற மத்தியரசின் சபைகளில் பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கான அல்லது அச்சபைகளுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை மாகாணங்களுக்கு வழங்குதல்.

3. மாகாண சபைகளின் தலைவர்கள் மத்தியிலுள்ள அரசியல் தலைவர்களுடன் முறையாகவும் வழமையாகவும் சந்திக்க வழிவிடுகின்ற ஒரு சபையைத் தாபித்தல்.

4. மத்தியிலுள்ள அமைச்சுக்களின் நிகழ்சித் திட்டங்களையும் விரிவாக்கல் வேலைகளையும் மாகாணங்களில் மாகாண சபைகளின் முகவர்களினூடாக மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

5. பிரதேச மட்டத்திலுள்ள கள நிர்வாகத்தை *(field administration)* மாகாண சபைகளின்கீழ் கொண்டுவரல்.

அத்தியாயம் - 07

மாகாண பொதுத்துறை நிர்வாகமும் பொதுச் சேவையும்

ஏ. எம். நவரட்ண பண்டார

7.1 அறிமுகம்

அரசின் நிர்வாக ஒழுங்கமைப்பானது ஆட்சிச் செயன்முறையின் பொதுச் சட்டத்தையும் பொதுக் கொள்கையையும் செயலுருப்படுத்துவதில் முக்கிய வகிபங்கினை வகிக்கின்றது. "பொதுத்துறை நிர்வாகம் என்பது பொதுக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதனையும், பூரணப்படுத்துவதனையும் நோக்காகக் கொண்ட சகல நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாகும்."[1] என்ற மரபு சார் கருத்து இன்னும் செல்லுபடியானதாகக் காணப்படுகின்றது. அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும் சட்டங்களையும், கொள்கைகளையும் அரசின் நிறைவேற்றுக் கிளை அல்லது நிர்வாக ஒழுங்கமைப்பு"[2] "அதிகூடிய செயற்றிறனும் இயன்றளவு குறைந்த செலவுடனும்"[3] செயற்பாடுகளாக மாற்றாதவரை அவற்றினால் அனுகூலமில்லை. நிர்வாக ஆட்சியில் தொடர்புபடும் செயன்முறையானது, நிர்வாக ஒழுங்கமைப்புக்கு வழங்கப்படும் சட்டமுறை மற்றும் நீதி, முகாமைத்துவ செயல் வல்லமைகளினால் பொருந்தச் செய்யப்படுகிறது. சட்டமுறைச் செயல்வல்லமை என்பது, நிர்வாகிகள் பொதுச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குரிய நியதிச் சட்ட புறவமைப்பினூடாக நிர்வாகிகளுக்கு வழங்கப்படும் சுயாட்சியினைக் குறிக்கின்றது. நிதிச் செயல் வல்லமை என்பது, நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பொது நிதியைப் பயன்படுத்துவதில் நிர்வாகிகளுக்கு வழங்கப்படும் சுயாட்சியைக் குறிக்கின்றது. முகாமைத்துவச் செயல் வல்லமை என்பது, கிடைக்கப்பெறும் மனித மற்றும் பௌதீக வளங்களை செயற்றிறனுடன் கையாள்வதில் நிர்வாகிகளுக்குள்ள திறமையைக் குறிக்கின்றது. இது தேசியக் கொள்கையை உள்ளூர் நிலமைகளுக்குப் பொருந்தச் செய்வதற்கு அவர்களிடம் உள்ள பொறுப்புடைமை என்ற வகையில்

---

1 Sadana, B.L & Sharma, M.P., *Public Administration in Theory and Practice*, Kitab Mahal, Alahbad, p.05.

2 Woodrow Wilson, 'Study of Administration', *Political Science Quarterly*, Vol.2, Nu.1 (1887), reprinted in Dwight Waldo (ed.), *Ideas and Issues in Public Administration*, McGraw Hill, New York, 1953 (pp.64-65), p.66.

ibid .p.66.

இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட அரசாங்கங்களின் நிர்வாக ஒழுங்கமைப்புக்கு ஒத்த வகையில் பிரயோகிக்கக் கூடியதாகும். அரசாங்கத்தின் அதிகாரங்களை இந்த உள்ளூர் மட்டங்களுக்கு இவ்வாறு பரவலாக்கும்போது, மத்திய அதிகாரமானது இச்செயல் வல்லமைகளை அவற்றின் நிர்வாக ஒழுங்கமைப்புகளுக்கு வழங்க வேண்டும். இத்துணை தேசிய அரசாங்கங்களுக்குத் தாக்ககரமான நிர்வாக ஆதரவினை வழங்குவதில் தோல்வி ஏற்படுமாயின், பொதுப் பண்டங்களை விநியோகிப்பதில் இருமை நிலை ஏற்படுவதோடு, அதன் விளைவாக அதிகம் தேவைப்படும் மனித மற்றும் பௌதீக வளங்கள் வீண் விரயமாகும். இந்த அச்சம் 1986 இல் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களால் நியமிக்கப்பட்ட நிர்வாக சீர்திருத்தக் குழுவின் (Administrative Reform Committee) உறுப்பினர்களான மூத்த நிர்வாகிகளினால் எழுப்பப்பட்டது. இந்த நிர்வாகச் சீர்திருத்தக்குழு "பரவலாக்கத்தின் ஆதரவு என்ற வகையில் நிர்வாக மாற்றங்கள்" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்தது. அதில்,

> "அனேகமான நாடுகள் கடினமான முறையில் கண்டுபிடிப்பது போன்று புதிய ஆரம்பிப்புகளுக்கும் புதிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் தேவைப்படும் நிர்வாக ஆதரவினை ஒரே முறையில் திட்டமிடாது, அவ்வாறான புதிய ஆரம்பிப்புகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியதன் விளைவாக சிக்கல் நிலைகளும் எதிர்பார்க்கை முறிவும் சமூக உறுதியும் ஏற்பட்டுள்ளன. உயர் மனிதப் பெறுமதிகளுடன் கூடிய அவ்வாறான அனுபவத்திலிருந்து வெற்றியளிக்காத பரிசோதனைகளிலிருந்தும் இலங்கையை மீட்டெடுக்க வேண்டும் என்பது குழுவின் எதிர்பார்க்கையாகும். அதனால், நிர்வாக ஆதரவினைத் திட்டமிடல் மற்றும் அத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் என்பன புதிய அதிகாரப் பரவலாக்கல் கட்டமைவினை அறிமுகத்தோடு கைகோர்த்துச் செல்ல வேண்டும்"[4]
>
> எனக் குறிப்பிடப்பட்டது.

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் சிபாரிசுகளோடு மூலக் கொள்கைகள் இணைக்கப்படாவிட்டாலும்[5] நிதி ஆணைக்குழு, மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு, பிரதம செயலாளரின் தலையின் கீழுள்ள மாகாண செயலகம் மற்றும் அமைச்சுக்களின் பணிகளை வேறுபடுத்தல் என்பன உள்ளிட்ட ஒழுங்கமைப்புகள் தாபிக்கப்படும்போது, பின்பற்றப்பட்ட அமைச்சுகளுக்கான புறவமைப்பு 1987 இல் மாகாண சபைகளைத் தாபிக்கும்போது பின்பற்றப்பட்டது.

---

[4] Report No.6 of the Administrative Reforms Committee, *Administrative Changes in Support of Devolution*, Department of Government Printing; 01 October 2001, p.42.

[5] The ARC's views on the revamping of country's system of public administration are discussed in section 7.4.

மாகாண பொதுத்துறை நிர்வாகத்தைத் தாபித்தல் நாட்டின் நிர்வாக நிலைத்தோற்றத்தில் ஓரளவு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. அது நாட்டின் பொதுத்துறை நிர்வாகத்தினை இரண்டு பிரிவுகளாகப் பிரித்தது. அவையாவன: தேசிய பகிரங்க சேவை, மாகாண பகிரங்க சேவை, என்பனவாகும். நாட்டின் பொதுத்துறை நிர்வாக ஒழுங்கமைப்பில் தென்படும் ஓர் அம்சம் என்ற வகையில் செயல்வகை மற்றும் மாகாணப் பிரிவுகளை ஏற்படுத்துவதன்மூலம் மாகாணங்கள் புதிய நிர்வாக நிறுவனங்களை அது தாபித்தது. மாகாண சபை முறைமையும் நிறைவேற்றுச் சேவையில் பதவி வகிப்போர் என்ற வகையில், நாடளாவிய சேவையும் உறுப்பினர்களாக இனங்கண்டதன்மூலம் அவர்களுக்கு மேலதிக சுமை சுமத்தப்பட்டது. அது இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியியல் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை கணக்காளர் சேவை போன்ற நாடளாவிய சேவைகளிலுள்ள நிரந்தரப் பதவிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தது. அது பொது நிதியைக் கட்டுப்படுத்தும் பாராளுமன்றத்தின் பொறுப்பினை பரவலாக்கியமையால் திறைசேரித் திணைக்களமும் கணக்காய்வாளர் நாயகமும் தமது நிர்வாக விடயங்களை மாகாண சபைகளுக்கு விரிவாக்க வேண்டி ஏற்பட்டது.

இந்த அத்தியாயம் மாகாணப் பொது நிர்வாகத்தின் நடவடிக்கை அனுபவங்களைப் பரிசீலிக்கின்றது. மாகாணப் பொதுத்துறை நிர்வாகத்தைத் தாபிப்பதற்கு பயன்படுத்திய சட்ட மற்றும் நிர்வாக ஏற்பாடுகளையும், மாகாண சபை முறைமையில் தாபிக்கப்பட்ட நிர்வாக அலகுகளினால் மேற்கொள்ளப்படும் பணிகளையும், மாகாண பொதுத்துறை நிர்வாகம் எதிர்கொள்ளும் தடைகளையும் உள்ளூர் மட்ட மாகாணப் பகிரங்க சேவைகள், பிராந்திய அபிவிருத்தி ஆற்றல் ஆகியவற்றைப் பரவலாக்குவதில் மாகாண பொதுத்துறை நிர்வாகத்தின் பங்களிப்பையும் பரிசீலிக்கின்றது.

7.2 நிர்வாக சீர்திருத்தக் குழு

மேற்குறிப்பிட்டவாறு 1986 இல் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நிர்வாக சீர்திருத்தக் குழு அதிகாரப் பரவலாக்கத்துக்கு ஆதரவான வகையில், நிர்வாக முறைமைக்கு அறிமுகம் செய்யவேண்டிய மாற்றங்கள் தொடர்பான ஓர் அறிக்கையை 1987 இல் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தது. அதன் ஆலோசனைகள் பற்றிய ஒரு முழுமையான கருத்தினை பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டல் முன்வைக்கப்பட்டது. நிர்வாக சீர்திருத்தக் குழு புதிய அதிகாரப் பரவலாக்கலுக்குப் பொருந்தும் வகையில் மத்திய, மாகாண மற்றும் பிரதேச சபைகள் மட்டங்களில் பிரிந்து செல்லும் நிர்வாகப் பணிகள் பற்றி அறிமுகம் செய்தது. மத்திய அரசாங்க மட்டத்தில் எடுக்கப்படும் தேசியக் கொள்கைகளை நிர்வகிக்கும் நடவடிக்கை நிலையங்கள் என்ற வகையில் கிராம மற்றும் மாகாண மட்டங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தாபனங்களான மாகாண சபைகளையும் பிரதேச சபைகளையும் ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற கருத்தை அது கொண்டிருந்தது. பாராளுமன்றமும் அமைச்சரவையும் தீர்மானிக்கும் தேசிய கொள்கைகளினதும் தரங்களினதும் புறவமைப்பின்கீழ் ஒப்படைக்கப்படும் பணிகளை நடைமுறைப்படுத்தும் சுயாதீன

நிலையங்கள் என்ற வகையில் இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட அரசாங்க நிறுவனங்களை ஒழுங்குபடுத்த வேண்டும் என்றும் குழு சிபாரிசு செய்தது.[6]

"நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் நடவடிக்கைக் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பாதீடுகள், பிரதேச சபைகளுக்கான தொழில்நுட்ப வழிகாட்டல் ஏற்பாடுகள் என்பனவற்றின் உருவாக்கம் மற்றும் நிகழ்ச்சித் திட்ட நடைமுறை பற்றிய மேற்பார்வை மற்றும் மதிப்பீடு ஆகியன தொடர்பான வலியுறுத்தல் இடம்பெற வேண்டும்"[7] அரசாங்கமானது பிரதம செயலாளரின் நிர்வாகத் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கும் முதலமைச்சரின் மாகாண செயலகத்தையும் ஒரு செயலாளரின் நிர்வாகத் தலைமைத்துவத்தின்கீழ் ஏனைய மாகாண அமைச்சுகளையும் தாபிக்க வேண்டும் என்று நிர்வாகச் சீர்திருத்தக் குழு சுட்டிக் காட்டியது. குறிப்பிட்ட துணைத்துறையைக் கையாளுவதற்கு ஒவ்வொரு அமைச்சிலும் சிறிய அளவிலான பணிப் பிரிவுகளைத் தாபிக்க வேண்டும் என்றும் அது கூறியது.[8] இதன் பொருள் என்னவெனில், அதிக எண்ணிக்கையான நிரந்தரப் பதவிகளைக் கொண்ட மத்திய அரசாங்கத்தின் திணைக்களங்களை மாகாணத்தில் மீண்டும் உருவாக்குவதனைத் தவிர்ப்பதாகும்.

மேலும், அது நாடளாவிய சேவையில் இருந்து நியமிக்கப்படும் இந்த உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மாகாண முகாமத்துவச் சேவை தாபிக்கப்பட வேண்டும் என்றும் அது மத்திய பகிரங்க சேவையிலுள்ள நிர்வாக, கணக்கீடு, பொறியியல் விஞ்ஞானம் மற்றும் கல்விச் சேவைகளை மேற்கொள்ளும் என்றும் மத்தியில் உள்ள அந்த இணைந்த முகாமைத்துவ மட்டச் சேவைகள் படிப்படியாக மறைந்து செல்லும் என்றும் கூறியது.[9] மேலும் நிர்வாகச் சீர்திருத்தக் குழு மாகாண நிர்வாகத்திலுள்ள ஏனைய ஆளணியினர் அதாவது, மாகாண நிரந்தரப் பதவிகள் இரண்டு துணைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்தது. முதலாவது பிரிவினர் மாகாண் அமைச்சுக்களினதும், திணைக்களங்களினதும் நேரடி மேற்பார்வையின் கீழ் இடம்பெறுவோராவர். இரண்டாவது பிரிவில் வேறுபட்ட பிரதேச சபைகளின் கீழ் சேவையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளோர் இடம்பெறுவர்.[10] நிர்வாகச் சீர்திருத்தக் குழு மத்தியின் பணிகள் குறைவதற்கேற்ப மத்திய அரசாங்கத்தின் அமைச்சுக்களினதும் திணைக்கணங்களினதும் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்று பலமாக சிபாரிசு செய்தது.[11] அரசியல் யாப்பின் ஒற்றையாட்சிப் பண்பின்மீதான தனது பொறுப்பினை வெளிப்படையாகப் பிரகடனம் செய்ததன்மூலம் நிர்வாகச் சீர்திருத்தக் குழு நாடளாவிய சேவையை ஒற்றையாட்சி அரசியல் முறைமையில் அதிகாரம் பரவலாக்கப்பட்ட முறைமையைக் கொண்டுசெல்வதற்குரிய பிரதான பொறிமுறையாக இனங்கண்டது. நிர்வாகச் சீர்திருத்தக் குழு நாடளாவிய சேவையை "...மத்திக்கும், மாகாணத்துக்கும் உயர் மட்ட அனுபவங்களை

---

[6] Report No.6 of the Administrative Reform Committee, pp.08-13.
[7] ibid. p.01.
[8] ibid. p.03.
[9] ibid. p.37.
[10] ibid. pp.03-04.

வழங்குகின்ற... நாட்டின் அரசியல் முறையின் ஒற்றையாட்சிப் பண்பினை வெளிப்படுத்தி நாட்டின் முழுப் பகிரங்க சேவை கட்டமைவின் ஒருமைப்பாட்டின் மூலக்கூறு'' என்று இனங்கண்டது.[12]

7.3 அரசியல் யாப்பு மற்றும் சட்ட ஏற்பாடுகள்

13 ஆம் திருத்தச் சட்டம் 36 விடயங்களை மாகாணசபைக்குரியவை என்று இனங்கண்டாலும், அது மாகாண சபைகளுக்கு நிர்வாக வளங்களைப் பகிர்ந்தளிப்பதில் மிகத் தெளிவான வகையில் நிசப்தமாக இருக்கின்றது.[13] 13 ஆம் திருத்தச் சட்டமன்றி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டமே மாகாண பகிரங்க சேவையைத் தாபிப்பதோடு நேரடியாகத் தொடர்புபடுகிறது. அச்சட்டம் மாகாணப் பகிரங்க சேவையோடு தொடர்புபடும் பணிகளை மூன்று நிறுவனங்களுக்கு ஒப்படைத்தது. முதலாவது, அது மாகாண நிர்வாக நிறுவனங்களைத் தாபித்துச் சீர்படுத்தல் மற்றும் மாகாணப் பகிரங்க சேவையோடு தொடர்பான ஆளணி விடயங்கள் சார்ந்த கொள்கைகளை வடிவமைத்தல் என்பன பற்றிய நிறைவேற்று அதிகாரத்தை ஆளுனருக்கு ஒப்படைத்தது. அதனால், மாகாண பகிரங்க சேவையின் மனித வளச் சக்தியைத் திட்டமிடல், ஆட்சேர்ப்பு, பதவிப்படுத்தல், இடமாற்றம், மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு என்பனவற்றுக்கு ஆளுனர் பொறுப்புக்கூற வேண்டும். இரண்டாவது, அது மாகாண பகிரங்க சேவையின் மனித வளத்தை விருத்தி செய்யும் பொறுப்பினை ஒப்படைத்து மாகாணப் பகிரங்க சேவையின் தலைவர் என்ற வகையில் பிரதம செயலாளரை ஜனாதிபதி நியமிக்கும் முறையினை அறிமுகப்படுத்தியது. மூன்றாவது, அது மாகாணப் பகிரங்க சேவையில் உறுப்பினர்களின் ஆட்சேர்ப்பு, பதவி நியமனங்கள், இடமாற்றங்கள், ஒழுக்கக் கட்டுப்பாடு ஆகிய பொறுப்புகளை ஆளுனரால் ஒப்படைக்கப்பட வேண்டிய ஒரு நிறுவனம் என்ற வகையில் மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கரிய வசதிகளை வழங்கியது.[14]

இவ்வாறு மாகாணப் பரிபாலன சேவையின் நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி நீக்கங்கள், ஒழுக்கக் கட்டுப்பாடு போன்றவை தொடர்பான நிறைவேற்று அதிகாரம் ஆளுனருக்கு வழங்கப்பட்டுள்ளது. 1987 மாகாண சபைகள் சட்டம், மாகாணப் பகிரங்க சேவை அதிகாரிகள் தொடர்பான சகல விடயங்களையும் நிர்ணயிக்கும் அதிகாரத்தை ஆளுனருக்கு வழங்கியுள்ளது. ஆட்சேர்ப்பு ஏற்பாடுகள், நடத்தை ஒழுங்குகள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் தொடர்பான மூலக்கொள்கைகளை வகுத்தல் போன்றவை இவற்றில் அடங்கும். மேலும், அது மத்திய பகிரங்க சேவையில் உள்ள ஒத்த பதவிகளில் அமர்ந்திருக்கும் அதிகாரிகள் தொடர்பாக விதிக்கப்பட்டிருக்கும் அட்சேர்ப்பு ஏற்பாடுகளையும், நடத்தை ஒழுங்குகளையும் பின்பற்றுதல் நடைமுறைச் சாத்தியமாகினால், அவற்றை ஆளுனர் பின்பற்ற வேண்டும் என்று

---

[12] ibid. p.37.
[13] This made the continuation of constitutional provisions applied to the central public service intact.
[14] Provincial Council Act No. 42 of 1987, Sections 32 and 33.

சிபாரிசு செய்துள்ளது. இச்சட்டம் மேலும் ஏற்பாடு செய்துள்ளதன்படி, தாம் விரும்பியவாறு அவற்றை மாற்றுவதற்கும் நிராகரிப்பதற்கும் உரிய அதிகாரத்துக்குட்படுத்தி இப்பணிகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரத்தை ஆளுநர் மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும்.[15]

தற்போது மாகாணப் பரிபாலன சேவை ஆணைக்குழுக்கள், மாகாண பகிரங்க சேவையின் ஆட்சேர்ப்புகள், பதவியுயர்வுகள், ஒழுக்கக் கட்டுப்பாடுகள் பற்றிய கொள்கைகள் தொடர்பான விடயங்களை மட்டுமன்றி, அவை பற்றிய நாளாந்தச் செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றன. எவ்வாறாயினும், மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு நாடளாவிய சேவையைச் சேர்ந்த ஆளணியிரின் ஒழுக்கக் கட்டுப்பாட்டு விடயங்களை தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும். மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவினை நியமித்தல், அதற்கு அதிகாரங்களையும் பணிகளையும் ஒப்படைத்தல் தொடர்பான தற்றுணிபு அதிகாரம் ஆளுநருக்குரியதாகையால், இன்று ஆளுநரின் அலுவலகமே மாகாண பகிரங்க சேவை உறுப்பினர்களின் ஈர்ப்புக்கு உட்பட்டுள்ளது. 1990 இல் இந்நிலையினை அங்கீகரித்து மாகாண சபைகள் அமைச்சு மாகாண சேவைகளுக்குப் பொறுப்பான தாபனப் பணிப்பாளர் என்ற வகையில் ஆளுநரால் பெயர் குறித்து ஒரு சுற்று நிருபத்தை வெளியிட்டது.[16]

மாகாண சபையின் நிறைவேற்றுப் பகுதியின் உடன்பாட்டுடன் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் மாகாண பிரதம செயலாளர் மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களுக்கிடையிலான விடயங்களை ஒருங்கிணைத்தல் குறிப்பாக, அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெறும் நிதிக் கொடுப்பனவுகள் மற்றும் மாகாணத்தின் தேவைகளை தேசிய திட்டமிடலுக்கு உட்படுத்துதல் போன்ற விடயங்களில் மத்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவார். மாகாண சபை மட்டத்தில் பிரதம செயலாளரின் பிரதான் பொறுப்பு என்னவெனில், மாகாண அமைச்சரவையினால் எடுக்கப்படும் தீர்மானங்களையும் அங்கீகரிக்கப்படும் மாகாணப் பொதுக் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்துவதில் மாகாண அமைச்சர்களையும் இலாகாக்களையும் அதிகார சபைகளையும் உள்ளடக்கிய மாகாண நிர்வாகத்துக்குச் தலைமைத்துவத்தினை வழங்குவதாகும். எனவே, மாகாணத்தின் பிரதம செயலாளர் மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்கள் இரண்டினதும் நலன்களுக்காக சேவையாற்றும் இரட்டைப் பங்களிப்பினை நிறைவேற்ற வேண்டியவராக உள்ளார். மேலும், அவர் மாகாணப் பகிரங்க சேவையின் மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பையும் பெற்றுள்ளார். அதனால், மாகாண நிர்வாகத்தில் தாபிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி அலகும், நிர்வாக அலகும் பிரதம செயலாளர் அலுவலகத்துக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளன.

---

[15] ibid.

[16] The circular of the Secretary to the Ministry of Provincial Councils, PC/DP/09 dated 06.06.1990.

7.4 நிர்வாக ஏற்பாடுகள்

மாகாண சபைகளைத் தாபிக்கும்போது, ஏற்படலாம் என்று நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழு அச்சம் தெரிவித்த "... தான் முன்வைக்கும் சீர்திருத்தத் திட்டத்திலிருந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக தெரிவு செய்துகொண்ட பகுதிகளை நடைமுறைப்படுத்துதல்"[17] என்பது இன்று நிகழ்ந்துள்ளது.

மாகாண சபைகள் நிர்வாகத்தின் தலைமைத்துவத்திற்கு நாடளாவிய சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல், பிரதம செயலாளர் பதவி, நிதி ஆணைக்குழு, மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு மற்றும் மாகாண பகிரங்க சேவை ஆகிய நிர்வாக சீர்திருத்தக் குழு சிபாரிசு செய்த அங்கொன்றும் இங்கொன்றுமிருந்து தெரிவு செய்து உட்படுத்தும் செயற்பாடு மாகாண சபைகள் சட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அக்குழு சிபாரிசு செய்த மூலக் கொள்கைகளைப் பயன்படுத்தி "...ஏற்பட்டுள்ள இந்த பிரத்தியேகமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்டின் ஜனநாயகச் செயன்முறையினை பலப்படுத்துவதற்கு ஏதுவான வகையில் பகிரங்க சேவையின் கட்டமைவினைச் சீர்திருத்துவதனை..."[18] அது பின்பற்றவில்லை. நிர்வாகச் சீர்திருத்தக் குழு வலியுறுத்திய மூலக்கொள்கைகளில் இடம்பெற்ற விடயங்களாவன: மாகாண சபைகளும், பிரதேச சபைகளும் தமது பிரதிநிதிகளாக இருக்கும் வகையில் மாகாண மற்றும் பிரதேச மட்டங்கள் வரை அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் செயன்முறையினை நீடித்தல், மத்திய அரசாங்கத்தின் அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் எண்ணிக்கைகளைக் குறைத்தல், மாகாணத் திணைக்களங்களை உருவாக்குவதற்குப் பதிலாக மாகாண அமைச்சுக்களில் சிறிய அளவிலான பணிகளுக்குப் பொறுப்பான அலகுகளை உருவாக்குதல், மாகாண முகாமைத்துவச் சேவைகளை உருவாக்குதல், முழுப் பகிரங்க சேவைப் பதவிகளின் எண்ணிக்கையைக் குறைத்தல் போன்றவையும் சிபாரிசு செய்யப்பட்டன.[19]

மாகாண சபை முறைமை ஆரம்பிக்கப்பட்டபோது, இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு அரசாங்கத்துக்குள்ளேயும், வெளியேயும் இருந்த எதிர்ப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் தடைகளின்காரணமாக, மாகாண நிர்வாகக் கட்டமைவு மற்றும் அதற்கு ஆளணியினரை உள்வாங்குதல் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு பணியாக மாறியது. "நிர்வாகக் கட்டமைவினைத் திட்டமிடல், நிபுணத்துவ ஆளணியினரை அதனுள் தாபித்தல்" என்ற நிர்வாகச் செயற்பாட்டுக்கு அவசியமான முதலாவது முக்கிய கட்டத்துக்கு உரிய முறையில் உறுதுணை வழங்கவில்லை. புதிய அதிகாரப் பரவலாக்கல் முறையினை நிறுவுவதில் அரசாங்கத்திற்கு உதவி வழங்கும் சவாலோடு தொடர்புபடுவதில் பெரும்பாலானோர் தயக்கம் காட்டினர். மாகாண சபைகள் முறைமையின் ஊடாகப் பதவியுயர்வுகளைப் பெற்றுக் கொள்வதில் தெளிவு காணப்படவில்லை. மாகாண சபைகள் முறைமைக்கு அடித்தளமிட்ட இந்திய -

---

[17] Report No.1 of the Administrative Reform Committee, Paragraph No.25.

[18] Report No.6 of the ARC, op. cit. p.05.

[19] See,ibid.pp.01-04, Also see Wanasinghe, Shelton, *Activating the Administrative Reform Process*, Institution of Policy Studies, Colombo, 1994, pp. 03-07.

இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறை அவர்களை மேலும் அதைரியப்படுத்தியது.

மேல்மாகாண சபையில் தற்போதைய பிதம செயலாளர் புதிய நிர்வாகத்தின் தலைவிதியைப் பின்வருமாறு விளக்கினார்:

> "ஆனால், நாடுபூராவும் ஏற்பட்டிருந்த சிவில் குழப்ப நிலையினால் அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் சேவைாற்றிய சிரேஷ்ட அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் மாகாணங்களுக்குச் செல்வதற்குத் தயக்கம் காட்டினார். அதனால், மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தகுதிவாய்ந்த அதிகாரிகளைப் பெற்றுக் கொள்வதில் கஷ்டங்கள் ஏற்பட்டன. மத்திய அரசாங்கம் மாகாண சபைகளின் சிரேஷ்ட பதவிகளுக்கு அதிகாரிகளை நியமிப்பதற்கு உரிய அளவுகோல்களை வகுத்தாலும் மத்திய அரசாங்கத்தின் நிறுவனங்கள் தகுதிவாய்நத ஆட்களை இனங்கண்டு அவர்களை அப்பதவிகளுக்கு அனுப்பும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவில்லை. ... இந் நிலையின்கீழ், புதிய முறைமையை வினைதிறன்மிக்கதான முகாமைத்துவத்திற்குத் தேவையான அனுபவங்களையும் சிரேஷ்டத்துவத்தையும் பெற்றுக்கொள்ளாத பகிரங்க சேவையாளர்களைக் கொண்ட மாகாண சபை அலுவலகங்களை ஆரம்பிக்கவேண்டிய நிலை அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டது"[20]

இவ்வாறான சூழ்நிலையில் மாகாண சபை நிர்வாகச் செயன்முறையில் மாவட்ட மட்டத்தில் தரித்திருந்த அதிகாரிகள் புதிய பதவிகளின்மூலம் உடனடியாகப் பதவியுயர்வுகளைப் பெற்ற கனிஷ்ட பகிரங்க அதிகாரிகள் மற்றும் மாகாண சபை முறைமை நிர்வாகத்தினை மக்களுக்கு அண்மித்ததாக ஆக்குகின்றது என்ற கருத்தை ஏற்றுக்கொண்ட அதிகாரிகள் என்போரே ஆரம்ப உறுப்பினர்களாகக் காணப்பட்டனர்.[21] அதிகாரம் பரவலாக்கப்பட்டதன்பின்னர், மத்திய அரசாங்கத்தின் அமைச்சுகளுக்கு எஞ்சியிருந்த பணிகளை கவனத்தில் எடுத்து மத்திய அரசாங்கத்தின் அமைச்சுக்களின் தேவைகளை மீண்டும் நிச்சயித்தல் மற்றும் மாகாண சபைகளுக்கு அனுப்பும் அதிகாரிகளை இனங் காணல் என்ற வேலைத் திட்டங்கள் அக்காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், அவ்வேலைத்திட்டங்கள் "தமது கீழ்மட்ட ஆளணியினருக்கு பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் உயர் பதவிகளை உருவாக்குவதற்கும், தமது ஆளணியினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும்

---

[20] Samaraweera, R., *Provincial Councils After Twenty Years: Successes, Failures and Constraints, Institute of Professional Public Administrators*, Colombo, 2007, p.96.

[21] The present writer identified these aspects as elements of the administrative culture prevalent in the provincial public service, see Bandara, A.M. Navaratna, "Devolution Friendly Administrative Culture in Sri Lanka; Some Street Level Issues", Paper presented at the National Symposium on Provincial Council System, Organized by the National Integration Programme Unit (NIPU) of the Ministry of National Integration, Hotel Pegas Reef, Colombo, 1998.

மத்திய நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்தன" என்று குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது[22] குறிப்பாக உயர் மட்ட பதவிகளுக்கும், நிதிப் பயன்பாட்டு பணியகத்தவர்களுக்கும் போதியளவு நன்மையைப் பெற்றுக் கொடுக்காவிட்டால், அவர்கள் புதிய நிர்வாகத்தை அறிமுகம் செய்வதில் ஆதரவினை வழங்காததோடு அதில் பங்குபற்றவும் மாட்டார்கள்" என்ற "பொதுமக்கள் தெரிவுக்" கோட்பாட்டாளர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்தை இந்தச் செயன்முறையும் நிரூபித்துள்ளது.[23]

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிடம் காணப்பட்ட எதிர்பார்க்கை அதாவது, "நாடளாவிய சேவைகளின்மூலம் அரசின் ஒற்றையாட்சித் தன்மையினைப் பாதுகாக்க முடியும் என்ற கருத்து" அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டுக்குத் தீங்கை ஏற்படுத்துவதில் இது காரணமாக அமைந்தது. அதாவது, மாகாண சபை முறைமையோடு தொடர்பான ஆளுநர்களும் நாடளாவிய சேவைகளின் ஆளணியினரும் நிர்வாகக் கட்டமைவினைத் திட்டமிடுவதில் மிகவும் எளிதான முறையினைப் பயன்படுத்தினர். அவர்கள் மத்திய அரசாங்க நிறுவனங்களின் ஒழுங்கமைப்புக் கட்டமைவு, நியமனங்கள், திட்டங்கள் மற்றும் வேலை செய்யும் முறைமைகள் என்பவற்றினைப் பிரதிபண்ணினார்கள். மாகாண சபை நிர்வாகச் செயன்முறைக்குத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களங்களை அழைத்ததன் பின்னர், அது அத்தியாவசியமான பரிபாலன கிரமமாக மாறியது. மாகாண நிர்வாகத்திடம் மத்திய பணியக முறைமையின் கட்டுப்பாட்டினைச் சுமத்துவது தொடர்பாக இழிபெயர் வாங்கிய இந்த நிறுவனங்கள் நிதிமூலங்களை வழங்குதல், மனித சக்தி வளத்தைத் திட்டமிடுதல் பற்றியும் மத்திய அரசாங்க நிறுவனங்கள் பயன்படுத்தும் நியமங்களையும் ஒழுங்கு விதிகளையும் பின்பற்ற வேண்டும் என மாகாண சபைகள் நிர்ப்பந்திக்கப்பட்டன. அதனால், உண்மையாகவே குறிப்பிடுவோமாயின் மாகாண பகிரங்க நிர்வாகம் தொடர்பாக ஏற்புடையதாக அமைவது அதிகாரப் பரவலாக்கம் பற்றிய மூலக்கொள்கையன்றி நிர்வாகத்தினுள் இடம்பெறும் அதிகாரத்தை ஒருமுகப்படுத்தும் (De-Concentration) மூலக்கொள்கையாகும். இதன் விளைவாக மாகாணசபைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் செயல்வகை அமைச்சுக்களினால் மீளப் பெறப்படுதல் என்ற பொருளில் பயன்படுத்தப்படும் மீள் ஒருமுகவாக்கம் (Re-Centralization) என்பது பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது.

இந்த மீள் ஒருமுகப்படுத்தல் ஆரம்பமாகிய ஒரு தெளிவான ஸ்தானம் என்னவெனில், இலங்கையின் பிரதேச நிர்வாகத்தின் கீழ்மட்டமான கிராம அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக அலுவலகத்தில் இடம்பெறும் நிறுவன ஒழுங்குமுறையாகும். 1988 இல் அரசாங்கமானது பிரதம செயலாளரை பிரதேச நிர்வாகத்தின் பிரதானியாகக் கருதியதுடன், நடைமுறையிலுள்ள பிரதேச நிர்வாகத்தை மாகாண சபைகளுக்குக் கட்டம் கட்டமாக ஒப்படைக்க வேண்டும் என்று தீர்மானித்தது. முதலாவதாக அரசாங்கமானது கிராம அதிகாரிகளை (கிராமிய மட்டத்தில் தமக்கு அலுவலகம் வழங்கப்படாத, மத்திய திணைக்களங்களின் பணிகளை நெறிப்படுத்தும் கள அதிகாரி) மாகாண சபைகளுக்கு ஒப்படைத்தது. 1992 இல் பிரதேச செயலாளர்கள் நியமிக்கப்பட்டபோது, 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பிரதேச

செயலாளர்களுக்கு அதிகாரம் வழங்கும் சட்டத்தின்மூலம் அவர்கள் மாகாண சபைகளின் நடவடிக்கைக் கரங்கள் என்று அறிமுகம் செய்யப்பட்டனர்.[24] இந்த 58 ஆம் இலக்கச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தின்மூலம், பிரதேச செயலாளருக்கு அந்தந்த அமைச்சுக்களினால் ஒப்படைக்கப்பட்ட பணிகள் பற்றி குறிப்பிடப்பட்டன.[25] மரபுரீதியாக கச்சேரி என்று அழைக்கப்பட்ட மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட செயலாளர் பதவி என்பவற்றை இல்லாதொழிப்பது பற்றி இந்த சுற்று நிருபத்தின்மூலமும் சட்த்தின்மூலமும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், 1994 ஆகும் போது பிரதேச நிர்வாகத்தை மாகாண சபைகளுக்கு ஒப்படைக்க வேண்டும் என்ற கருத்துக் கைவிடப்பட்டது. கிராம அதிகாரி மற்றும் பிரதேச செயலாளர் ஆகிய பதவிகள் மீண்டும் பொறுப்பேற்கப்பட்டு அவை நேரடியாக மாவட்டச் செயலாளரின்கீழ் செயற்படும் அதிகாரிகளாக அவர்கள் மாற்றப்பட்டனர். 1988 இல் மாகாண சபை முறையினைப் பகிஷ்கரிக்கும் வகையில் செயற்பட்ட அன்றைய பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதன் பின்னர் அதாவது, 1995 இல் இந்த செயன்முறையைப் பூரணப்படுத்தியது. அன்றிருந்த கிராமிய, பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் மத்திய அரசாங்கமானது மாகாண சபைகளுக்குச் சமாந்தரமான நிர்வாகத்தினைக் கொண்டு நடத்துகின்றது. 2006 இல் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் முறையே 1105 மற்றும் 21,998 அரச உத்தியோகத்தர்கள் பணியாற்றினர்.[26]

7.5 மாகாண சபை நிர்வாக ஒழுங்கமைப்பு

மாகாண சபைகள் தாபிக்கப்பட்டமை, மாகாண சபைகள் முறைமை என்று அறிமுகம் செய்யப்படும் சில புதிய நிறுவனங்கள் தாபிக்கப்பட்டமையைக் குறித்து நிற்கின்றது. அவையாவன:

மத்திய அரசுக்கு அறிக்கைப்படுத்தும் பொறுப்பினைப் பெற்ற

1. ஆளுநர் அலுவலகம்
2. பிரதான செயலாளர் அலுவலகம்-மாகாணசபைக்கு அறிக்கைப்படுத்தும் பொறுப்பினைப் பெற்றவை
3. மாகாண அமைச்சுக்களும் திணைக்களங்களும்
4. மாகாணசபைச் செயலகம்
5. மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு
6. மாகாண அதிகார சபைகளும் சபைகளும்

---

[24] See Delegation of Powers (Divisional Secretaries) Act No.58 of 1992 and the Public Administration Circular 21/92.

[25] Public Administration Circular 21/92 issued on 21 May 1992, op. cit.

[26] Department of Census and Statistics, *Census of Public and Semi-Government Sector Employment*, 2006.

7.5.1 ஆளுநர் அலுவலகம்

13 ஆம் திருத்தச் சட்டம் ஆளுநரை மாகாண சபையில் உள்ள அரசாங்கத்தின் 'காவல் நாய்' என்ற நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. ஆளுநருக்குரிய பிரதான பொறுப்பு, அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒற்றையாட்சி எண்ணக்கருவின் பொறுப்பாளராகப் பங்காற்றுவதாகும். தேசியக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல், நாட்டின் அரசியல், பொருளாதார உறுதிப்பாடு மற்றும் பாராளுமன்றின் இறைமை என்பவற்றைப் பாதுகாத்தல் ஆகியன ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள இறுதிப் பொறுப்புகளாகும். இச்சகல விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு அறிக்கைப்படுத்துதல் குறிப்பாக, மாகாணத்தில் அவசரகால நிலை உருவாகும் நிலை தோன்றியுள்ளது என்று ஜனாதிபதிக்கு அறிவித்தல் ஆளுநருக்குரிய பொறுப்புகளாகும். இதன் தவிர்க்க முடியாத விளைவு என்னவெனின், இந்தச் சகல விடயங்கள் தொடர்பான மாகாண சபைகளின் செயற்பாடுகள் பற்றி பரிசீலனை செய்தல், மாகாண மட்டத்தில் மேற்பார்வை செய்தல் என்பவை ஆளுநரின் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டமையாகும். மாகாண மட்டத்தில் ஆளுனரின் அலுவலகத்தினால் நிறைவேற்றப்படும் முக்கிய பணிகளுள் ஆளுனரின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும் நியதிச் சட்டங்களைப் புனராய்வு செய்தல் மாகாண நிதியைச் செலவிடும் முறையினைப் பரிசீலனை செய்தல் மற்றும் மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்களைப் பரிசீலனை செய்தல், அரசாங்கக் கணக்காய்வின் பின்னரான நடவடிக்கையைக் கண்டறிதல், மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கும் மாகாண சபைக்குமிடையில் ஒருங்கிணைவினை ஏற்படுத்தல், ஆளணி நிர்வாகம் என்பன இடம்பெறுகின்றன.[27]

ஆளுநர் அலுவலகம் இலங்கை நிர்வாக சேவை உறுப்பினரான ஆளுனரின் செயலாளரின்கீழ் செற்படுகின்றது. அவருக்கு ஒரு துணைச் செயலாளர், நிர்வாக அதிகாரி ஆகியோர் உள்ளிட்ட 25 ஆளணியினர் உதவி புரிகின்றனர்.[28] இதற்கு மேலதிகமாக ஆளுநரின் பொதுமக்கள் தொடர்பு மற்றும் ஊடகம் மற்றும் உத்தியோகரீதியான வதிவிட விவகாரங்கள் என்பவற்றில் பங்குபற்றும் தனிப்பட்ட ஆளணியினரையும் ஆளுநர் கொண்டுள்ளார். (2009 இல் தென் மாகாண சபையில் இவ்விடயங்களுக்காக 28 பேரைக் கொண்ட ஓர் ஆளணியினர் நியமிக்கப்பட்டிருந்தனர்)[29]

7.5.2 பிரதம செயலாளர் அலுவலகம்

பிரதம செயலாளர் அலுவலகத்தின் பிரதான பணி மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் இடையில் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துவதும் ஆளுநர், அமைச்சரவை, மாகாண சபை ஆகியவை எடுக்கும் துணை - தேசியக் கொள்கைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு

---

[27] Lalith Kanangara and Deepthi Wijethunga (eds.), *Twenty Years Experience of the Western Provincial Council, Western Provincial Council*, Colombo, 2010, p.62.

[28] Based on the cadre provisions of the Southern Provincial Council for 2009.

மாகாணப் பொதுத்துறை நிர்வாகத்துக்குத் தலைமைத்துவத்தை அளிப்பதுமாகும். மாகாணப் பகிரங்க சேவையின் தலைவர் என்ற வகையில் பகிரங்க ஆளணியினரின் முகாமைத்துவத் திறன்களை விருத்தி செய்தல், அவர்களின் மனித வளங்களை அபிவிருத்தி செய்தல் ஆகிய பணிகளுக்குப் பொறுப்பாக இருப்பதுமாகும்.

நாட்டின் அதிக வளங்களைப் பெற்ற ஒரு மாகாண சபையான மேல்மாகாண சபையின் பிரதம செயலாளரின் அலுவலகத்தின் ஒழுங்கமைப்பானது, மேற்குறிப்பிட்ட பிரதம செயலாளரின் பொறுப்புகளுக்கு ஏதுவான வகையில் கடந்த காலத்தில் கட்டியெழுப்பப்பட்டுள்ள ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு பற்றிய ஒரு கருத்தினை எமக்குத் தருகின்றது. மேல்மாகாண சபையின் பிரதம செயலாளர் அலுவலகம் எட்டுத் துணை அலுவலகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன: முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி அலகு, நிர்வாகப் பகுதி, நிதிப்பகுதி, திட்டமிடல் பகுதி, பொறியியல் சேவைப் பகுதி, வருமானத் திணைக்களம், மாகாணக் கம்பனிகளைப் பதிவு செய்யும் அலுவலகம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பகுதி என்பனவாம்.[30] இந்த ஒழுங்கமைப்புக் கட்டமைவினைப் பெரும்பாலும் ஒத்த கட்டமைவுத் திட்டங்கள் ஏனைய மாகாண சபைகளிலும் காணப்படுகின்றன. பிரதம செயலாளர் அலுவலகத்தின் ஒழுங்கமைப்பானது மாகாணப் பகிரங்க சேவையின், முகாமைத்துவச் செயற்பாடுகளை விருத்தி செய்தல், திட்டமிடப்பட்ட பிராந்திய அபிவிருத்தி, அரச வளங்களைச் செயற்றிடனுடன் சேகரித்தல் மற்றும் பயன்படுத்தல், மாகாணப் பகிரங்க நிர்வாகத்தின் தொழிநுட்பத் திறன்களை விருத்தி செய்தல் என்பவற்றைப் பிரதம செயலாளர் தனிப்பட்ட வகையில் மேற்கொள்ளும் பணிகளாகும் என்று இனங்கண்டிருப்பதைக் குறித்து நிற்கின்றது.

7.5.3 மாகாண அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள் மற்றும் அதிகார சபைகள்

தற்போது மாகாண மட்டத்தில் 40 அமைச்சுக்களும், 147 திணைக்களங்களும், 35 அதிகார சபைகளும், ஆணைக்குழுக்கள், சபைகள், நிறுவனங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள், நிலையங்கள், அலகுகள் என்று அடையாளப்படுத்தப்படும் ஏனைய 40 நிறுவனங்களும் நடைமுறையிலுள்ளன. (அட்டவணை 7.1 இனைப் பார்க்க) இந்த நிறுவனங்களின்மூலம் மத்திய அரசாங்கத்தின் ஒழுங்கமைப்பினை மாகாண சபைகள் மீள் நிர்மாணம் செய்துள்ளன என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. இதற்கான பிரதான காரணம், மாகாண மட்டத்திலுள்ள நிர்வாகத் தலைமைத்துவத்திடம் புத்தாக்கத் திறன் காணப்படாமையாகும். அவ்வாறாயினும் ஆளுநரும், பிரதம செயலாளரும் மத்திய அரசின் நிர்வாக நியமங்களைப் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் ஒரு பின்னணிச் சூழலில் மாகாண சபைகளுக்கு நியமிக்கப்பட்ட அனுபவம் குறைந்த கனிஷ்ட நாடாளாவிய சேவையாளர்கள் மத்திய அரசாங்கத்தின்

[30] Lalith Kanangara and Deepthi Wijethunga (eds.), op. cit., pp. 65-69.

கட்டமைவுகளையும் செயன்முறைகளையும் பின்பற்றுதல் இயல்பானதாகும் என்று நாம் இனங்காண வேண்டும்.

மாகாண அமைச்சுகளுக்கிடையில் விடயங்களை ஒப்படைப்பதில் ஒரு பொதுவான ஒழுங்கு காணப்படுவதில்லை. முதலமைச்சருக்குரிய விடயங்களும் மாகாணத்துக்கு மாகாணம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, 2010 இல் மேல் மாகாண முதலமைச்சரின்கீழ் இடம்பெறும் விடயங்களாவன: கல்வி, உள்ளூராட்சி, காணி, மனித சக்தி மற்றும் வேலைவாய்ப்பு, மின்சாரம், சக்தி வளம் என்பனவாகும்.[31] அதேவேளை தென்மாகாண சபையின் முதலமைச்சர் சட்டமும் ஒழுங்கும், கல்வி, உள்ளூராட்சி, கலாசார விவகாரங்கள், போக்குவரத்து, உல்லாசப் பிரயாணம் ஆகிய விடயங்களைத் தன் அமைச்சின்கீழ் கொண்டுள்ளார்.[32]

மாகாண சபை முறைமையின் ஆரம்பக் கட்டத்தில், முதலமைச்சர் மாகாண அமைச்சர்களுக்குப் பொறுப்புக்களை ஒப்படைப்பதில் தற்துணிபு அதிகாரத்தைப் பெற்றிருந்தார். பின்னர் மாகாண அமைச்சர்களைத் தெரிவு செய்வதிலும் அவர்களுக்குப் பொறுப்புகளை ஒப்படைப்பதிலும் கட்சித் தலைவர்களும் பங்கேற்கலாயினர். 2010 இல் அதனோடு ஒரு புதிய அம்சம் சேர்ந்துள்ளது. மாகாண சபைத் தேர்தலின் பின்னர் மாகாண அமைச்சர்களுக்குப் பொறுப்புகளைப் பங்கிட்டளிப்பதனை நிர்ணயம் செய்வதனை ஜனாதிபதி செயலகம் மேற்கொண்டது. இச்சந்தர்ப்பத்தில் முதலமைச்சர்களும் ஏனைய அமைச்சர்களும் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தனர்.

மாகாணத் திணைக்களம் என்பது தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான அறிவினையுடைய ஆளணியினரை வேண்டும் விடயங்களுக்குப் பொறுப்பான நிர்வாகப் பிரிவாகும். அதனால், திணைக்களத்தின் உயர் மட்டப் பதவிகள் திணைக்களத்தின் மையப் பணிகளோடு தொடர்புபடும் நிபுணத்துவ அறிவினைக் கொண்ட நிபுணத்துவ சேவையைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். மேல் மாகாண சபையில் பொறியியற் சேவைகளை ஒன்றிணைத்து ஓர் அலகாக 'பொறியியல் சேவை அலகு' என்று மாகாணப் பிரதம செயலாளர் அலுவலகத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து மாகாணத் திணைக்களங்கள் இலங்கை நிர்வாக சேவையில் மட்டுமன்றி பொறியியல் சேவை, திட்மிடல் சேவை, கல்விச் சேவை போன்ற ஏனைய நாடளாவிய சேவைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது எனத் தெரிகின்றது. மாகாண சபை முறைமைக்குப் பொதுவான திணைக்களங்களாவன மாகாண வருமானம், பாடசாலை, தபால், கல்வி, உள்ளூராட்சி, சுகாதாரம், சமூக சேவை, மேம்பாடு மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, காணி மற்றும் கிராமிய அபிவிருத்தி போன்ற விடயங்களுக்குப் பொறுப்பான திணைக்களாகும்.

---

[31] Lalith Kanangara and Deepthi Wijethunga (eds.), op. cit., p.77.

[32] Source: Unpublished document prepared by the Southern Provincial Council *Summary of information on Provincial Public Service Personnel.*

மாகாண சபைகளுக்கு "விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் வாணிப முயற்சிகள், ஏனைய வருமான உற்பத்தி முயற்சிகள் என்பவற்றை அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டு நடத்துவதற்கு அரசாங்கத்திற்கும் அரசாங்கக் கூட்டுத் தாபனங்களுக்குமுள்ள அதிகாரங்களுக்கு இடஞ்சலின்றி நிறுவ முடியும்" என்று அரசியல் யாப்பில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி அதிகார சபைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், நிலையங்கள், சபைகள் என்ற பெயர்களில் அரைகுறை சுயாதீன நிறுவனங்களை மாகாண சபைகள் தாபித்துள்ளன. தற்பொது மேற்குறிப்பிட்டவாறான 32 மாகாண அதிகார சபைகள் மாகாண சபை முறைமையில் தாபிக்கப்பட்டுள்ளன. ஆணைக்குழுக்கள், சபைகள், முகவராண்மைகள், நிறுவனங்கள், பணியகங்கள் ஆகிய தாபனங்களையும் சேர்த்தால் இந்த அரைகுறைச் சுயாதீன முகவராண்மைகளின் இவ்வெண்ணிக்கை 62 ஆக அதிகரிக்கும். (அட்டவணை 7.1 ஐப் பார்க்க)

அட்டவணை 7.1
மாகாண சபைகளில் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை

மாகாண சபைகள்	அமைச்சுக்கள்	திணைக்களங்கள்	அதிகார சபைகள்	நிறுவனங்கள்	ஆணைக் குழுக்கள்	பணியகங்கள்	முகவரான்மை	நிலையங்கள்	சபைகள்	ஆணைகள்
மே.மா.ச	05	15	06	01	02	01	00	01	01	01
ம.மா.ச	05	19	02	00	02	00	01	00	01	02
வ.மே.மா.ச	05	17	08	00	02	01	00	01	00	00
தெ.மா.ச	05	14	05	00	02	00	00	00	01	01
வ.ம.மா.ச	05	13	05	00	02	00	01	00	01	01
ஊ.மா.ச	05	18	02	02	02	00	00	00	02	04
ச.மா.ச	05	14	03	00	02	00	00	00	01	00
கி.மா.ச	05	24	01	00	02	00	00	01	00	01
மொத்தம்	–	13	00	01	02	00	00	00	00	00
Total	40	147	32	04	12	02	02	03	07	10

2009/2010 மாகாண சபைகள் தரவுகள் அட்டவணையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

7.5.4 சபைச் செயலகம்

மாகாண சபைகளின் கூட்டங்களுக்குத் தேவையான ஆதார சேவைகளை வழங்கு பொறுப்பு சபைச் செயலகத்துக்கே வழங்கப்பட்டுள்ளது. சபையின் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல், சபையின் விவாதங்களையும் கூட்டங்களையும் வெற்றிகரமானதாக நடத்துவதற்குரிய வசதிகளைச் செய்தல், நிகழ்ச்சி நிரலில் இடம்பெறும் நியதிச் சட்டங்களோடு தொடர்புபடும் அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் இணைத்து வைத்தல், அரசாங்கக் கணக்காய்வுப் பகுதியால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளைப் பற்றிய சாராம்சத்தினை சபைக்கு வழங்குதல், சபையில் நிறைவேற்றப்படும் நியதிச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆளுநர் செயலகத்தையும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளையும் ஒருங்கிணைத்தல் போன்றவை இவ்வலுவலகத்தின் பொதுவான பணிகளாகும்.[34]

7.5.5 மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு

தேசி பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் விருத்தி செய்யப்பட்ட கொள்கைப் புறவமைப்பினைப் பிரதிபண்ணினாலும், பின்பற்றினாலும் மாகாணப் பகிரங்க சேவையைக் கட்டியெழுப்புவதிலும் கட்டுப்படுத்துவதிலும்

[34] Lalith Kannangara and Deepthi Wijethunga, op. cit., pp.71-72.

குறிப்பிடத்தக்க அனுபவங்களை மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுக்கள் தற்போது பெற்றுள்ளன. பகிரங்க சேவையின் ஆளணி தொடர்பான பொதுத் தரங்களைப் பேணுவதில் மாகாணப் பகிரங்க சேவை ஆணக்குழுவின் கவனத்தை ஈர்க்கும் சட்ட ஏற்பாடுகளை பின்பற்றுவதில் மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதி என்ற வகையில் ஆளுநர் காட்டும் ஈடுபாட்டினால் தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழு செல்வாக்குச் செலுத்துவதைத் தவிர்க்க முடியாததாகும். தேசியப் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் வகுக்கப்படும் தரங்களைப் பின்பற்றுவதில் மாகாண சபைகள் மீது பாதிப்பினை ஏற்படுத்துவதில் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களங்களும் பங்காற்றியுள்ளன.

மாகாண ஆளுநர் ஒப்படைக்கும் பணிகளை நிறைவேற்றும் திறனை மாகாண சபைகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் மனித வளத் தளத்தினைப் பலப்படுத்துவதற்கு மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு பரந்த பொறுப்புகளை நிறைவேற்றுகின்றது. மத்திய நிறுவனங்களினால் மாற்றப்பட்ட அல்லது சேவைக்குப் பின்மொழியப்பட்ட ஆளணியினை உள்வாங்குதல், நாடளாவிய சேவைப் பதவிகளைச்சாராத மாகாணப் பகிரங்க சேவை ஆளணியினரை ஆட்சேர்ப்புச் செய்தல், பதவி உயர்வுக்கான பரீட்சைகளை நடத்துதல், மாகாணத் திணைக்களங்களினால் விருத்தி செய்யப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள் பற்றிய வழிகாட்டல்களை மேற்கொள்ளுதல், பகிரங்க அலுவலகர்களின் சேவை நீடிப்பு, சேவை ஓய்வு, தமது திணைக்களத் தலைவர்களினால் விதிக்கப்பட்ட ஒழுக்க நடவடிக்கைகள் பற்றி அலுவலர்கள் முன்வைக்கும் மேன்முறையீடுகளை விசாரணை செய்தல் போன்றவை மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு நிறைவேற்றும் பணிகளில் இடம்பெறுகின்றன. 2006 முதல் 2009 வரையுள்ள காலப்பகுதியில் மேல் மாகாண சபை நிறைவேற்றிய பொறுப்புக்கள் பற்றி குறிப்பிடும் 7.2 ஆம் இலக்க அட்டவணை பொதுவாக மாகாணப் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுக்கள் நிறைவேற்றும் பொறுப்புகள் பற்றிய ஓர் கருத்தினைத் தருகின்றது.

அட்டவணை- 7.2

2006 - 2009 காலப்பகுதியில் மேல்மாகாண சபை நிறைவேற்றிய பணிகள்

பணிகள்	2006	2007	2008	Up to 30.06.2009
ஆட்சேர்ப்புக்கள்	932	856	910	898
பதவி உயர்வுகள்	394	471	208	116
இடமாற்றங்கள்	213	762	759	288
ஓய்வுகள்	231	175	182	161
சேவை நீடிப்புகள்	429	262	359	377
ஒழுக்க மேன்முறையீடுகள்	123	060	058	048
நட்டயீடுகள்	042	032	053	013
உள்வாங்கல்கள்	328	185	250	085
சேவை நிரந்தரங்கள்	317	254	150	067

(Source: Lalith Kanangara and Deepthi Wijethunga (eds.), op. cit., p.76)

7.6 மாகாண பகிரங்க சேவை

மாகாணப் பகிரங்க சேவை நிறைவேற்றுச் சேவை, நிறைவேற்றமல்லாத சேவை என்று இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது.[35] நிறைவேற்றுச் சேவைப் பதவிகளைத் தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கீழுள்ள நாடளாவிய சேவைகளைச் சேர்ந்த ஆளணியினரே வகிக்கின்றனர். நிறைவேற்றமல்லாத சேவைப் பதவிகளை மாகாண ஆளுநரின் உத்தரவின் பேரில் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் நேரடியாகக் கட்டுப்படுத்தப்படும் ஆளணியினர் வகிக்கின்றனர்.

2006 இல் நாட்டின் பகிரங்க அலுவலர்களுள் 35% ஆனோர் மாகாண பகிரங்க சேவையோடு இணைந்திருந்தனர். எஞ்சியோர் மத்திய அரசாங்க நிறுவனங்களில் 40% ஆனோரும் அரைகுறை அரசாங்கத் துறையில் 25% ஆனோரும் பணியாற்றினர்.[36] 2004 இல் மாகாண சபைகளின் நிறைவேற்றுச் சேவைகளில் இருந்தோரின் எண்ணிக்கை, மொத்த மாகாணப் பகிரங்க சேவையின் 18.8% இனர் அதாவது 40,005 எண்ணிக்கையினராவர். எஞ்சிய 216,719 (84.32%) எண்ணிக்கையினர் நிறைவேற்றமல்லாத சேவைகளைச் சேர்ந்தோராவர். நிறைவேற்றமல்லாத சேவைகளைச் சேர்ந்த பதவிகள் நிதி ஆணைக்குழுவினால் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அவையாவன இரண்டாம் மட்டப் பதவிகளை வகிக்கும் வகுதியினர், எண்ணிக்கை ரீதியாக 187,55, (நிறைவேற்றமல்லாத சேவையின் 86.5%), சிற்றூழியர் வகுதியினர், எண்ணிக்கை ரீதியாக 33,704, (நிறைவேற்றமல்லாத சேவையின் 15.5%) அமைய மற்றும் தற்காலிக ஊழியர் பதவிகள், எண்ணிக்கை ரீதியாக 7,614

[35] Finance Commission, *Annual Report, 2004*, p.43 .

[36] Department of Census and Statistics, *Statistical Pocket Book, 2010* (Census of Public & Semi-Government Sectors Employment, 2006).

[37] The Finance Commission, *Annual Report 2004*, Colombo, P.43, Table 16.

(நிறைவேற்றமல்லாத சேவையின் 3.5%) பேர் சேவையாற்றுகின்றனர்.[37] மாகாண சபைகளின் தாபனப் பகுதியைச் சேர்ந்த நிறுவனங்களான ஆளுநரினதும், பிரதம செயலாளரினதும், சபையினதும் செயலகங்களில் பணிபுரிவோரின் எண்ணிக்கை மாகாணப் பகிரங்க சேவையில் 2.4% (6658) ஆவர். எஞ்சிய 97.6% இனரும் பொதுச் சேவைகளை வழங்குதல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பவற்றை மேற்கொள்ளும் பகுதிகளைச் சேர்ந்தோராவர். மாகாணப் பகிரங்க சேவையின் பாரிய அளவினர், எண்ணிக்கை ரீதியாக 226,772 (90.59%) பேர் கல்வி, சுகாதாரம் போன்ற சமூகக் கீழ்க்கட்டமைப்புத் துறைகளில் பணியாற்றுகின்றனர்.[38] இந்தப் பகுதியைச் சேர்ந்த அலுவலர்களுள் அதிபெரும்பான்மையினர் இடம்பெறும் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகள் அவற்றின் தேசிய முக்கியத்துவம் காரணமாக மத்திய அமைச்சுகளின் தீர்மானங்களின் நேரடித் தாக்கத்துக்குட்படும் ஒருங்கியை நிரலில் (Concurrent list) இடம்பெறும் இரண்டு விடயங்களாகும். (7.3 அட்டவணையைப் பார்க்க).

நிர்வாகச் சீர்திருத்தக்குழு குறிப்பிட்டதன்படி, அரசாங்கம் தனது அமைச்சுகளினதும் திணைக்களங்களினதும் எண்ணிக்கையைக் குறைப்பதில் கவனம் செலுத்தியமையாலும் அக்குழுவின் ஓர் சிபாரிசின்படி நாடளாவிய சேவைகள் மாகாணப் பகிரங்க சேவைக்கு அனுப்பப்பட்டமையாலும் அச்சேவைகள், துறைகள்மீது மேலதிக சுமைகள் சுமத்தப்பட்டது. எதிர்பார்த்தது போன்று திணைக்களங்களும், அவற்றின் அலுவலர் எண்ணிக்கையும் குறைக்கப்படாது மாகாணப் பகிரங்க சேவை தாபிக்கப்பட்டமையால் நாடளாவிய சேவைகளின் அலுவலர் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு அது காரணமாக அமைந்தது. மாகாண நிறுவனங்கள் குறைந்தபட்சம் சுமார் 200 பதவிகளுக்கான கோரிக்கையை இலங்கை நிர்வாக சேவைக்கு முன்வைத்தது. 1984 இல் 1794 ஆக இருந்த இலங்கை நிர்வாக சேவைப் பதவிகள்[39] 2005 இல் 2407 வரை அதிகரித்தது.[40] 2004 இல் எமது அயல்நாடான இந்தியாவில் இதனை ஒத்த நிர்வாக வகுப்பான அனைத்திந்திய சேவையில் இடம்பெற்ற பதவிகளின் எண்ணிக்கை 5159 ஆகும் என்று இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.[41]

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் தலைவரான செல்டன் வனசிங்ஹ பின்னர், மத்திய அரசாங்கத்தின் சமாந்திரமான நிறுவனக் கட்டமைவினைக் குறைப்பதன்மூலம் பகிங்க சேவைத் துறையின் அளவினைக் குறைக்க வேண்டும் என்று 1987 இல் முன்வைக்கப்பட்ட ஆலோசனையை நடைமுறைப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டினை முன்வைத்தார். அதனால், நிர்வாகச் சீர்திருத்தக் குழு குறிப்பிட்டதன்படி 1989 நடுப்பகுதியாகும்போது 72,000 பதவிகளை அதாவது 20% இனைக் குறைக்க வேண்டும் என்ற சிபாரிசு நடைமுறைப்படுத்தப்படவில்லை.[42] செல்டன் வனசிங்ஹவின் கருத்துப்படி 1989 - 1992 காலப்பகுதியில் நாட்டின் மொத்த பகிரங்க சேவை அலுவலர்களின் எண்ணிக்கை சுமார் 42% ஆல் அதிகரித்தது.[43]

---

[39] The Minute of the SLAS, The Government Gazette, 1988.
[40] The Minute of the SLAS 2005, The Government Gazette, 2005.
[41] http://en.wikipedia.org/wiki/Indian_Administrative_Service Accessed16 November 2010.
[42] Shelton Wanasinghe, *Activating the Administrative Reform Process in Sri Lanka*, Institute of Policy Studies, Colombo, 1994. pp.11
[43] ibid.

அட்டவணை - 7.3
நிகழ்ச்சித்திட்டப் பரப்புகளின் படி மாகாணப் பதவிப்படுத்தல்கள்

அலுவலக வகை / நிகழ்ச்சித் திட்டம்	ஆலோசனை வகை அலுவலகங்கள்	%	ஆலோசனை வகை சாரா அலுவலகங்கள்	%	மொத்தம்	%
மாகாணத் தாபனப் பகுதி	880	17.45	4,163	82.55	5,043	2.00
மாகாண நிர்வாகம்	314	19.44	1,301	80.56	1,615	0.64
பொருளாதாரக் கீழ்க்கட்டமைப்பு	598	15.79	3,190	84.21	3,788	1.50
சமூகக் கீழ்க் கட்டமைப்பு	28,678	12.54	200,094	87.46	226,772	90.59
ஜனசமூக சேவைகள்	608	14.66	3,540	85.34	4,148	1.64
விவசாயம்	770	13.14	5,092	86.86	5,862	2.32
கைத்தொழில்	130	3.92	3,185	96.08	3,315	1.31
மொத்தம்	31,978	12.67	220,565	87.33	252,543	100

(Source: Annual Report – 2004, Finance Commission, Colombo, p.43)

7.7 மாகாண பகிரங்க சேவை எதிர்கொள்ளும் தடைகள்

மாகாண சபை முறைமைக்காக உருவாக்கப்பட்ட சட்ட, நிதி மற்றும் முகாமைத்துவ முறைகளினூடாக ஏற்பட்ட பல குறைபாடுகளின் காரணமாக அதிகாரப் பரவலாக்கல் ஆட்சிக்குத் தடையாக அமைந்தன. இந்நிலையின் காரணமாக, மாகாண சபைகளின் சிரே\;l முகாமைத்துவமானது மிகவும் கடினமான நிர்வாக நிலைத்தோற்றத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. தமது ஆரம்பத் திட்டத்தின்மூலம் ஏற்படுத்தப்படும் கட்டங்களைத் தமது எந்தவொரு நிர்வாக ஆரம்பிப்புகளின்மூலம் கட்டியெழுப்பப்படும் பலமான மரபுகளினால் வெற்றி கொள்ளப்படும் என்ற எதிர்பார்க்கை இங்கு யதார்த்த பூர்வமாகவில்லை.[44] இதற்குக் காரணம் ஒருவகையிலோ அல்லது வேறு வகையிலோ மத்திய மற்றும் மாகாண மட்டங்களில் உள்ள நிர்வாகிகள் அதிகாரப் பரவலாக்கல் ஆட்சிக்கு அவ்வளவு சாதகமற்ற நிர்வாகக் கலாசாரத்தோடு தொடர்புபட்டிருத்தலாகும்.[45]

---

[44] Lahiri, Ashok K., *Capacity Building for Fiscal Devolution in Sri Lanka*, The Draft Final Report, UNDP assignment (SRL/97/203), National Institute of Public Finance and Policy, New Delhi, 1997, p.12.

[45] The administrative culture prevalent in the polity is discussed below.

மாகாண நிர்வாக முறைமையில் காணப்படும் முக்கியமான நிர்வாகப் பலவீனம், நிர்வாகத் தலைமைத்துவத்தினால் எதிர்பார்க்கப்படும் இரட்டைப் பக்கச்சார்பாகும். மாகாணசபை, பொதுத்துறை நிர்வாகத்துக்குத் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு நாடளாவிய சேவைளைப் பயன்படுத்தியமையினால் தனது சொந்த நிர்வாகத் தலைமைத்துவத்தினைக் கொண்டிருக்கும் உரிமை மாகாண சபைகளுக்குக் கிடைக்கவில்லை. மத்திய அரசாங்கத்துக்கும் நாடளாவிய சேவைக்கும் உள்ள தொடர்பு தெளிவானதும் நேரடியானதுமாகும். அவர்கள் மாகாண சபைகளுக்கு மத்திய அரசாங்கத்தினால் பிரேரிக்கப்பட்டவர்களாவர். அதனால், எந்த நேரத்திலும் அவர்கள் திருப்பி அழைக்கப்படவோ இடமாற்றம் செய்யப்படவோ முடியும். அவர்களின் பதவியுயர்வுகள், ஒழுக்கக் கட்டுப்பாடு, பயிற்சி அளிப்பு, அதனால் உருவாக்கப்பட்ட பதவிகளை நிரப்புதல் ஆகியவை தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டன. நாடளாவிய சேவைகளைச் சேர்ந்த உறுப்பினர்களின் செயற்பாட்டினை மாகாண சபைகள் மேற்பார்வை செய்ய முடியுமாயினும், அவர்களுக்கு எதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையையும் எடுக்க முடியாது. தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கும் நாடளாவிய சேவைகளுக்கும் இடையிலான தொடர்பினை நாடளாவிய சேவை ஆளணியினர்மீது தனது கட்டுப்பாட்டினைத் தொடர்வதற்காக மத்திய அரசாங்கம் பயன்படுத்தியது. அதனால் மாகாண சபைகள் தனக்குச் சார்பான ஒரு நிர்வாகத் தலைமைத்துவத்தினை வைத்திருப்பது மறுக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசாங்கத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் ஒற்றையாட்சி அரசு பற்றிய கருத்துக்குப் பக்கச்சார்பானவர்களாக இருக்க வேண்டும் என்று நாட்டின் பகிரங்க அலுவலர்களை வேண்டுகின்ற அரசியல் யாப்பு ஏற்பாடும் மத்திக்கு ஆதரவாகவே அமைந்திருந்தது. அரசியல்- யாப்புக்கான ஆறாவது திருத்தம் "இலங்கையின் ஆள்புலத்துக்குள் தனியரசொன்றைத் தாபிப்பதற்கு இலங்கைக்குள்ளேயோ, வெளியேயோ, நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவளிக்க, ஆக்கமளிக்க, ஊக்குவிக்க, நிதியுதவ, பரிந்துரைக்க மாட்டேன்" என்று உறுதிபூண்டு சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும் என்ற பகிரங்க அலுவலர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது. 13 ஆம் திருத்தச் சட்டமோ அல்லது மாகாண சபைகள் சட்டமோ இந்த யாப்புசார் கட்டுப்பாட்டிலிருந்து மாகாணப் பகிரங்க அலுவலர்களை விடுபடுத்தவில்லை. அதனால், தாம் நாடளாவிய சேவைக்கா அல்லது மாகாணப் பகிரங்க சேவைக்கா உரித்தாகின்றோம் என்ற வேறுபாட்டின்றி மாகாணப் பொதுத்துறை நிர்வாகத்திலுள்ள சகல பகிரங்க அலுவலர்களும் தமது முதல் பக்கச்சார்பினை மத்திய அரசாங்கத்துக்கே வழங்க வேண்டும். பகிரங்க சேவை பூராவும் பொதுத் தரங்களைப் பேணும் நோக்கில் தேசியப் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஆளணிக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களங்கள் செல்வாக்குச் செலுத்துவதில் பங்காற்றுகின்றன.

இச்சூழலின்படி, மாகாணப் பகிரங்க சேவையில் உள்ள நிறைவேற்றுப் பதவிகளையோ அல்லது நிறைவேற்றம் அல்லாத பதவிகளையோ வகிக்கின்ற பகிரங்க அலுவலர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநர் மற்றும் மக்களால் தெரிவு செய்யப்படும் மாகாண அரசியல் தலைமைத்துவம் ஆகிய இரு அதிகாரத் தலைவர்களுக்குச் சேவையாற்ற வேண்டியவர்களாக உள்ளனர். "ஓர் அதிகாரத் தலைவர்" அல்லது "ஆணை ஒருமிப்பு" என்ற அடிப்படை முகாமைத்துவ மூலக்கொள்கை இலங்கையின் மாகாண நிர்வாக முறைமையில் மீறப்பட்டுள்ளது. இவ்விரு தலைவர்களுக்குமிடையில் நிர்வாகப் பிரச்சினைகள் தொடர்பாக இழுபறி நிலை தோன்றும்போது, மாகாணப் பகிரங்க சேவை உறுப்பினர்களின் அலுவலக வாழ்க்கையில் அசௌகரிய நிலையும், சங்கடமும் உருவாகும். கடந்த காலத்தில் இரண்டு அரசியல் கட்சிகள் மத்திய அரசாங்கத்தையும், மாகாண சபையையும் கட்டுப்படுத்தியபோது இந்த மோதல் நிலை இடம்பெற்றது. எவ்வாறாயினும், தற்போதைய சூழலில் நாம் அவதானித்ததன்படி இரண்டு ஆட்சித் தாபனங்களிலும் ஒரே கட்சி அதிகாரத்தில் அமர்ந்திருக்கும்போதுகூட மாகாண சபைகளில் இந்நிலை காணப்படுகின்றது. இவ்வாறான மோதல் உருவாகுவதற்கான பல காரணிகளை நாம் குறிப்பிட முடியும். ஆளுநர்ப் பதவியை வகிப்பவர் தமது மாகாணத்தின் அரசியலில் நுழைவதற்கான ஆவலை உடையவராக இருத்தல், ஆளுநர் பலமான ஆளுமை பொருந்தியவராக இருத்தல், மத்தியின் அரசியல் தலைமைத்துவம் ஆளுநரின் ஊடாக மாகாண அரசியல் தலைமத்துவத்தைக் கட்டுப்படுத்தும் விருப்பினை உடையதாக இருத்தல் போன்றவை இதில் இடம்பெறும் காரணிகளாகும். சில வேளை இந்த இழுபறி நிலையானது, ஆளுனர் தனது ஆணையதிகாரத்தைச் சட்டவாக்கச் செயன்முறையினை குழப்புமளவுக்கு மட்டுமன்றி அமைச்சர்களினால் மேற்கொள்ளப்படும் மாகாண நிதிப் பகிர்வினைக் கட்டுப்படுத்தி மாகாண பகிரங்க சேவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை மாகாண அமைச்சர்களின் தலையீட்டிலிருந்து பாதுகாக்கும் அளவுக்கு ஆளுநர்கள் பயன்படுத்துவர்.

ஆளநர் தலையீட்டின் பாதகமான விளைவுகள் கடந்த இருபது வருடங்களாக மாகாணப் பரப்பில் தொடர்ச்சியாகத் தென்பட்டுக் கொண்டிருக்கின்றது. மாகாண நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பிரதம செயலாளரே இந்தச் சங்கட நிலையை எதிர்கொள்ளும் முக்கிய மாகாணப் பகிரங்க அதிகாரியாவார். இவ்விரு தலைவர்களும் இழுபறி நிலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது பிரதம செயலாளர் ஆளுனருக்கும், முதலமைச்சருக்குமிடையிலான மத்தியஸ்தராகச் செயற்பட வேண்டும். எவ்வாறாயினும், பிரதம செயலாளர் நிதமும் மத்தியஸ்தப் பங்கினையே வகித்தார் என்று எம்மால் கூற முடியாது. இது தொடர்பாக மாகாண சபை முறைமையில் பிரதம செயலாளர்களினால் பல நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவையாவன: தமது தற்றுணிபு அதிகாரத்தினை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று ஆளுநருக்கு ஆலோசனை கூறுதல் [46]

---

[46] The Chief Secretary of a Provincial Council told the writer that he had played the role of mediator between the Governor and the Chief Secretary, advising the Governor how to use his discretion in support of devolution.

அல்லது இரு தலைவர்களுள் எப்பாகத்தையாவது சார்ந்து அடுத்த தலைவர் செயற்படுவதில் சங்கடத்தை ஏற்படுத்துதல்[47] அல்லது புத்தாக்கத் திட்டங்களில் ஈடுபடாது நிர்வாகத்தின் சாதாரண வேலைகளை மேற்பார்வை செய்து கொண்டு வாளாவிருத்தல்[48] என்பனவாம்.

பிரதேச செயலகங்களை மாகாண சபைகளிடமிருந்து மீளப் பெறவேண்டும் என்ற மத்திய அரசாங்கத்தின் தீர்மானமானது, இரண்டாம்மட்ட அரசாங்கத்திற்குச் சட்ட முறையாக உரித்தாகும் உள்ளூர் நிர்வாகம் தொடர்பான மாகாண சபைகளின் பொறுப்பினை அபகரிப்பதாக அமைந்துள்ளது.[49] இது மத்திய அரசாங்கம் ஒரு சமாந்தரமான நிர்வாக ஒழுங்கமைப்பினைக் கொண்டு நடத்துவதனை ஏதுவாக்குவதோடு பொது மக்களால் வேண்டப்படும் மனிதாபிமானப் பொதுச் சேவைகளை வழங்குவதிலிருந்து மாகாண சபைகளைத் தடுக்கக் கூடியதாக அமைகிறது. இதன் விளைவாக செயல்வகை (Line) அமைச்சுக்கள் மாகாணப் பகிரங்க ஆட்சிப் பரப்பில் ஒரு முக்கிய வகிபங்கினைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றன. பிரதேச செயலக முறையினைத் தாபித்தல்பற்றி 1992 இல் வெளியிடப்பட்ட சுற்று நிருபம் பிரதேச செயலாளர்களை சகல அரசாங்க அமைச்சர்களினதும் பிரதிநிதி என்ற வகையில் அடையாளப்படுத்தியது. அது பிரதேச செயலாளரை கமநல சேவைப் பிரதிப்பணிப்பாளராகவும், கலாசார விவகாரங்கள் மற்றும் தகவல்கள் பிரதிப் பணிப்பாளராகவும், காணிப் பயன்பாடு பற்றிய திட்டமிடல் குழுவின் தலைவராகவும், பிறப்பு, விவாக, இறப்புப் பதிவாளராகவும், நுகர்வோர் பாதுகாப்புப் பிரதி ஆணையாளராகவும், மோட்டார் வாகனப் பதிவுப் பிரதி ஆணையாளராகவும் நியமித்துள்ளது. பிரதேச செயலகங்கள் (2001 இல் 319 செயலகங்கள் காணப்பட்டன)[50] என்பன இன்று உள்ளூர் மக்கள் பெரும்பாலும் தமது சகல பொதுப் பயன்பாட்டுச் சேவைகளையும் பெற்றுக் கொள்ளும் சேவை நிலையங்களாக மாறியுள்ளன. மாவட்டச் செயலகங்களும், பிரதேசச் செயலகங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட ஒரு விடயமான பிராந்தியத் திட்டமிடலின் ஊடாக மாகாணங்களில் மத்திய அரசாங்கத்தின் பிரசன்னத்தைச் சாத்தியமாக்குவதற்கு உதவி புரிந்து வருகின்றன.

---

[47] The Researchers noticed two situations: One, of the Chief Secretary working very closely with the Governor - when the Council is in the hands of the rival political party and the party which controlled the central government tried to disturb the working of the provincial government; Secondly the Chief Secretary working very closely with the Chief Minister this situation takes place when the Chief Minister is a powerful regional politician of the Government and the Governor is not a strong political personality.

[48] The writer noticed this situation in the present provincial administration in the Eastern Provincial Council where the Governor exercises his authority to restrict the statute making activity of the PC and interferes in the matters relating to the personnel of the PPS.

[49] Even when the Donoughmore Commission first proposed the establishment of Provincial Councils, the members of the then Legislative Council identified the Kachcheri administration as a subject belonged to the second-tier government. See *Hansard* (1940) Cols.1356-1362.

[50] Department of Census and Statistics, Government of Sri Lanka, No. of Divisional Secretary / Assistant Government Agent Division, 2001.

மாகாணத்துக்குரிய விடயங்களை அபகரிக்கும் பிரபல்யமான ஆக்கிரமிப்பாளர்களுக்குச் சிறந்த உதாரணம், ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் நேரடியாக நிதியை ஒதுக்கும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டம், கிராமியப் பாதைகளின் அபிவிருத்திக்கான நிதியை நேரடியாகப் பிரதேச சபைகளுக்கு ஒதுக்கும் மக நெகும (*Maga Neguma)* த் திட்டம், அரசியல் அதிகாரிகளால் ஒழுங்குபடுத்தப்படும் கிராமிய எழுச்சித் திட்டமான கம நெகும (Gama Neugma) திட்டம் ஆகிய அரசாங்கத் திட்டங்களாகும். இவ்வாறு பிரதேச நிர்வாகத்தின்மூலம் மக்களை நெருங்குவதற்கு மாகாணப் பகிரங்க வைக்குள்ள வாய்ப்பு தடுக்கப்படுகின்றது. இது பிரதேச சேவைகளை வழங்கும் சுறுசுறுப்பான ஒரு செயற்பாட்டாளராகத் தனது வகிபங்கினை மாகாண சபைகள் நிறைவேற்றுவதனைத் தடுத்திருப்பதோடு அரசியல் முறைமையில் அதன் இருப்பினை நியாயப்படுத்தும் வாய்ப்பினையும் அதற்கு வழங்கவில்லை. இதன் விளைவாக மாகாணப் பொதுத் துறை நிர்வாகத்தின் ஆளணியினர் குறைந்த மக்கள் தொடர்பினையுடைய அலுவலகங்களோடு வரையறுக்கப்பட்டுள்ளனர்.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட சட்ட மற்றும் நிதிச் சூழல்களாலும் நிர்வாகிகளைச் சிறைக் கைதிகளின் இரண்டும் கெட்டான் நிலைக்குத் தள்ளிவிட்டிருப்பதோடு, அதன் காரணமாக பல முகாமைத்துவச் சங்கடங்கள் மாகாண பகிரங்க அலுவலர்களுக்கு ஏற்பட்டுள்ளது என்பதனை இங்கு குறிப்பிட வேண்டும்.

அரசியல் யாப்பிலுள்ள அதிகாரப் பரவாக்கல் ஏற்பாடுகளின்படி, அதன்மூலம் மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கபட்டுள்ள விடயங்கள் தொடர்பான தேசியச் சட்டங்களை மாகாணங்களின் நிலைகளுக்குப் பொருந்தச் செய்வதற்கு அவ்விடயங்கள் தொடர்பான மாகாண நியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். இதன்மூலம், மாகாண நிறைவேற்றுத் துறையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதனை நிர்வாகிகளுக்கு எளிதாக்குகின்றது. எவ்வாறாயினும், கடந்த 20 வருட காலப்பகுதியில் மாகாண சபைகள் தமக்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான பூரண கட்டுப்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான மாகாண நியதிச் சட்டங்களை உருவாக்க முடியவில்லை. ஒவ்வொரு மாகாண சபையும் தனக்குரிய நிர்வாக அதிகாரப் பரப்பினை ஒதுக்கிக் கொள்வதற்கு குறைந்த பட்சம் 300 நியதிச் சட்டங்கள் அவசியமாயினும், மாகாண சபைகள் அவற்றுள் அரைவாசியையாவது நிறைவேற்றிக் கொள்ளத் தவறியுள்ளன.

நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கான சட்டவாக்கச் செயன்முறையினை ஆரம்பிப்பதற்குத் தேவையான நிர்வாகத் திறன் காணப்படாமை இதற்கான ஒரு காரணமாகும். ஆரம்பத்தில் நியதிச் சட்டங்களை வரைவதற்குத் தேவையான நிறுவன ரீதியான ஆதரவுகள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை. ஆரம்பத்தில் ஒரு சட்ட வரைஞர் பதவி அவற்றுக்கு வழங்கப்படவில்லை என்று குறிப்பிட வேண்டும். மாகாண சபைகளுக்குத் திறைசேரியின் முகாமைத்துவச் சேவைத் திணைக்களம் முன்வைத்த நிரந்தர பதவிகள் இடம்பெறும் இரண்டு அட்டவணைகளுள் ஏதேனும் ஒன்றினைத் தெரிவு செய்யுமாறு மாகாண சபைகள்

தாபிக்கப்பட்டு நான்கு வருடங்களின் பின்னரே கோரியது. 1992 இல் சமர்ப்பிக்கப்பட்ட இவ்விரு நிரந்தரப் பதவிகள் அட்டவணை எதிலும் சட்டவரைஞர் பதவியோ, மாகாண சட்டமா அதிபர் பதவியோ இடம்பெறவில்லை. தமது நிர்வாக அதிகாரிகளாலோ அல்லது எழுது வினைஞர்களாலோ நியதிச் சட்டங்களை வரைந்து மாகாண சபைகள் சிறப்பான பாடத்தினைக் கற்றுள்ளன. மாகாண சபைகளால் அனுப்பப்பட்ட நியதிச் சட்டமூலங்களில் காணப்படும் சட்டக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி சட்டமா அதிபர் திணைக்களம் அவற்றுள் பெரும்பாலானவற்றைத் திருப்பி அனுப்பியுள்ளது.[51]

பல்மட்ட ஆட்சிக் கட்டமைப்புகளுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கும், மாகாண அபிவிருத்தித் திட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் மாகாண சபைகளுக்கு யாப்பின்மூலம் வழங்கப்பட்டுள்ள வரித் தளம் போதுமானதன்று. இதன் காரணமாக வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதியில் மாகாண சபைகள் அதிகளவு தங்கியிருக்க வேண்டியுள்ளது. நிதி ஆணைக்குழுவின் நிதி ஒதுக்கீட்டு அளவுகோலின் விளைவாக மத்திய அரசாங்கத்தின் திறைசேரித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நிதிக் கட்டுப்பாட்டு ஏற்பாடுகளின் கைதியாக மாகாண சபைகள் மாறியுள்ளன. நிதி ஆணைக்குழுவின் நிதி ஒதுக்கீட்டு அளவுகோல்களினால் மாகாண சபைகள் தமது மாகாணத்திலிருந்து சேகரிக்கும் வருமானங்களை தமது மீண்டெழும் செலவுகளுக்காக மட்டும் பயன்படுத்த வேண்டிய நிலையினை ஏற்படுத்தியுள்ளன. மாகாண சபைகளுக்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் பாரிய நிதியான மாகாண சபைகளின் மீண்டெழும் செலவுகளுக்காக (சம்பளம் மற்றும் பராமரிப்புச் செலவுகள்) மட்டுமே பயன்படுத்த வேண்டிய தொகைக்கொடை (Block Grant) ஒரு வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட மீண்டெழும் செலவுகள் மற்றும் வருமான சேகரிப்புச் சம்பந்தமாக ஒருவருடத்தின் இலக்கு என்பவற்றுக்கிடையிலான இடைவெளியை அடிப்படையாகக் கொண்டே கணிப்பிடப்படுகின்றது.[52] அதனால், தாம் சேகரிக்கும் நிதியை தனது அபிவிருத்திக்காக மாகாண சபைகளினால் பயன்படுத்த முடிவதில்லை. எனவே, மாகாண அபிவிருத்தித் திட்டங்களுக்காக மாகாண நிர்வாகத்திற்கு மத்திய அரசாங்கம் வழங்கும் நிதியில் தங்கியிருக்க வேண்டியநிலை எற்பட்டுள்ளது. தற்போது மத்திய அரசு நான்கு வகையான நிதி ஒதுக்கீடுகளை மாகாண சபைகளுக்கு வழங்கி வருகின்றது. அவையாவன: தொகைக் கொடை (Block Grants), அளவுகோல் அடிப்படையிலான நன்கொடை (Criteria Based Grants), இணைப்பு நன்கொடை (Matching Grants), மாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட நன்கொடை (Province Specific Development Grants) என்பனவாகும்.[53] எவ்வாறாயினும், உண்மைநிலை கடந்த இருபது வருட காலமாக வரவு - செலவுத் திட்டத்தினால் ஒதுக்கப்பட்ட

---

[51] See Amarasinghe, Y.R, 'Provincial Council Experience: Centre-Province Relations', in Y. R. Amarasinghe (ed.), *Devolution Experience in Sri Lanka - 1988-1998*, (pp.16-43), p.23.

[52] See Gunawardena, Asoka, *The Operational Experience of Fiscal Devolution and Provincial Finances in Sri Lanka*, Institute of Professional Public Administration, 2007.

[53] Finance Commission, *Annual Report 2004*, op. cit. p.24 & 73.

நிதியினைப் பெற்றுக் ெ .டுப்பதில் தொடர்ச்சியாக இடைவெளி காணப்பட்டது என்பதனைக் காட்டுகின்றது.[54]

தொகைக்கொடையைக் கணிப்பிடும் முறைமையின் கட்டாய விளைவு என்னவெனில், நாட்டின் மொத்த பகிரங்க அலுவலர்களுள் 35% மானோரின் சம்பளத்தினை வழங்கும் சுமையினை மத்திய அரசாங்கம் மாகாண சபைகளுக்கு சுமத்தியிருப்பதாகும். மறுபுறம் வருடாவருடம் சேகரிக்க வேண்டும் என்று மாகாண சபைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வருமான இலக்கு திறைசேரியினால் ஒரு தலைப்பட்சமாக தீர்மானிக்கப்படுவதனால், மாகாணப் பொருளாதாரம் மாகாண சபைகளுக்கு உயர் வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் அளவுக்குப் பலம் வாய்ந்ததாக இல்லாதபொழுது, மாகாண நிதியும் வருமானமும் குறிப்பிடத்தக்களவு சங்கடங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. உதாரணமாக, கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கான சம்பளங்களை வழங்கவதற்கு மாத இறுதியில் அதற்கான காசோலையினை தமக்கு அனுப்பியிருக்கும்பொழுது, ஊவா மாகாணத்தின் வருமானத் திணைக்களம் 3 - 4 மில்லியன் வரையிலான பாக்கிப் பணத்தினைத் தேட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மத்திய அரசாங்கத்தின் நிதியில் அதிகளவு தங்கியிருப்பதனால் மாகாணத்தின் நிர்வாகப் பொறிமுறையினை விருத்தி செய்வதற்கு மாகாணப் பொதுத்துறை நிர்வாகத்தின் தலைமைத்துவம் மேற்கொள்ளும் முயற்சிக்குத் தடையாக அமைந்துள்ளது.

இந்த நிதித் தங்கு நிலையினால் தமது மாகாண ஆளணியில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிலை மாகாண சபைகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்கான ஒரு காரணம் திறைசேரி நிதியை ஒதுக்காமையினால் அல்லது வாக்களித்த நிதியை விடுவிக்காமையினால் மாகாண நிர்வாகத்திலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. உதாரணமாக, 2010.03.31 ஆம் திகதிக்குரிய வடமேல் மாகாண சபையின் நிர்வாக அறிக்கை குறிப்பிடுவதன்படி, அம்மாகாண நிர்வாகத்தில் 4019 பதவிகள் (உள்ளூராட்சி மன்றுகளிலிருந்த 558 வெற்றிடங்கள் தவிர) வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்தன.[55] நிதியை வழங்குவதில் திறைசேரி மேற்கொள்ளும் கட்டுப்பாட்டின் காரணமாக நிதி ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் மாகாண சபைகளின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தடைகள் ஏற்பட்டு வருகின்றன. நிதி ஆணைக்குழு தனது அங்கீகாரத்திற்காக அனுப்பப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு சுமார் 4 மாத காலத்தினை எடுக்கின்றது என்று மாகாணத் திணைக்களங்கள் குற்றம் சாட்டுகின்றன. அந்தத் திட்டங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும்

---

[54] Summary of the Approved and Existing Cadre 31.03.2010, Office of Chief Secretary, North-Western Provincial Council.

[55] Source: Bandara, M.D.C., 'The Problems and the Successes of Provincial Councils in the Agricultural Sector' in M.K. Nadeeka Damayanthi and M.D. Susila Urdu (Eds.), *Report of a workshop conducted from 15-16 January 2008 on the Provincial Council System and the Agricultural Development*, Hector Kobbekaduwa Agrarian and Training Institute, Colombo, (pp.42-63), p.55.

ஒப்பந்தக்காரர்களுக்கு ரெண்டர்களை (Tender) வழங்குதல் போன்றவை உள்ளடக்கப்பட்டிருப்பின் தமது திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு செப்டெம்பர் மாதம் வரை காத்திருக்க வேண்டி ஏற்படுகின்றது என்பது அவர்களது கருத்தாகும். இந்நிலையின் காரணமாக நீர்ப்பாசன மற்றும் பெருந்தெருக்கள் அபிவிருத்தித் திட்டங்களை பருவப் பெயர்ச்சி மழை வீழ்ச்சி ஆரம்பமாகும் ஒக்டோபர் மாதத்திலேயே நடைமுறைப்படுத்த வேண்டி ஏற்படுகின்றது. 7.4 அட்டவணை மாகாணத் திட்டமிடல் மட்டத்தில் பொதுவாக இடம்பெறும் செயன்முறை பற்றிய அறிவினைத் தருகின்றது.

அட்டவணை 7.4

ஊவா மாகாண சபையின் விவசாயத் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் - 2006[56]

வருடமும் மாதமும்	செயற்பாடு
2005 டிசம்பர்	2006 அபிவிருத்தி உத்தேச நிதியை ஆணைக்குழுவுக்கு அனுப்பியமை
2006 பெப்ரவரி	அபிவிருத்தித் திட்டம் பற்றி நிதி ஆணைக்குழுவோடு கலந்துரையாடலை ஆரம்பித்தமை
2006 ஏப்ரல்	நிதி ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றமை
2006 ஏப்ரல் 19 - ஆகஸ்ட்	நிதி ஆணைக்குழு முன்வைத்த அவதானிப்பின் படி மதிப்பீட்டினைத் தயாரித்தமை
2006 ஆகஸ்ட் - செப்டம்பர்	ரெண்டர் அழைத்தமையும், அவற்றை மதிப்பீடு செய்தமையும்
2006 ஒக்டோபர் - டிசம்பர்	நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

7.8 நிர்வாகக் கலாசாரம்

மாகாண சபைகள் நிர்வாகத்திற்குச் சிக்கலை ஏற்படுத்தும் பிறிதொரு பகுதி மத்தியக மற்றும் மாகாண சபை அரசாங்க மட்டங்களில் நிலவும் மத்தியமயமாக்கப்பட்ட பணிக ஆட்சிக் கலாசாரமாகும். பொருத்தமற்ற இந்தப் பணியக ஆட்சிக் கலாசாரம் இதற்கு பத்து வருடங்களுக்கு முன்னர் இந்த எழுத்தாளரினால் குறிப்பிடப்பட்டதாகும்.[57] அதிகாரம், பரவலாக்கப்பட்ட நிர்வாகத்திற்கு நேர்கணிய முறையில் செயற்படுவதனைத் தடுக்கும் வகையில் எதிர்கணிய மனப்பாங்குகளை உருவாக்குவதில் பின்வரும் காரணிகள் பாதிப்புச் செலுத்துகின்றன:

---

[56] Bandara, A.M. Navaratna 'The Devolution Friendly Administrative Culture: Some observations on the Street Level Issues', Paper presented to the National Conference on the Devolution Experience of Sri Lanka, Organized by the National Integration Programme Unit, Held from 28th to 29th November, 1999 at Pegasus Reef Hotel, Wattala, Colombo.

[57] Wijeweera, B.S., 'Policy development and administrative changes in Sri Lanka: 1948-1977', *Public Administration and Development*, Vol.19, No. 3, (pp.287-300), p.292.

1. முறைமையில் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளால் மாகாண சபைகள் முறைமைகள்மீது ஏற்படுத்தப்பட்டுள்ள எதிர்கணிய மனப்பாங்கு.
2. மாகாணசபை முறைமை மத்தியமயப்படுத்தப்பட்ட நிர்வாக கலாசாரத்திற்கு உட்பட்டிருத்தல்.
3. மாகாண சபை மட்டத்தில்கூட பணியகமானது அரசியல் மயமாக்கத்திற்கு உட்படுதல் தொடர்ச்சியாக இடம்பெறல்.
4. மாகாணசபை நிர்வாகம் தனது முதல் பக்கச்சார்பினை மத்திய அரசாங்கத்துடன் மேற்கொள்ளுதல்.
5. மாகாண நிர்வாகத் தலைமைத்துவத்திற்கு மத்திய அரசாங்கத்தின் எஜமானத் தன்மைக்குச் சவால் விடுவிக்கும் திறன் காணப்படாமையும், அதற்கான ஆயத்தம் இல்லாமையும்.
6. அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்ட மாகாணப் பணியகத்தினர் காணப்படல்.
7. அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கு எதிராக மேற்கொள்ளப்படும் எதிர் மனப்பாங்குகளின் தாக்குதல்களுக்குப் பணியக முறையின் ஒரு பகுதியினர் உட்படல்.
8. தமது ஒழுங்கமைப்பினுள் தற்போது அனுபவிக்கும் அமைதி நிலைகள்மீது தடைகளை ஏற்படுத்துவதற்கு அல்லது புதிய சவால்களை எதிர்கொள்வதற்குப் பணியகத்தினரிடம் காணப்படும் தயக்கநிலை.

இந்தப் பாதகமான கலாசார ஒழுங்குகள் தொடர்ந்தும் நிலவுவதோடு அவை சில சந்தர்ப்பங்களில் மாகாண சபைகளின் முறைமையுடன் கனிஷ்ட, சிரேஷ்ட பகிரங்க அலுவலர்கள் முன்வைக்கும் மனக்குறைகளில் வெளிப்படுகின்றன. இந்த ஆய்வின் போது மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களில் பெரும்பாலான நிர்வாகத் தலைவர்கள் மத்தியில் அரசியல் மற்றும் நிர்வாகத் தலைமைத்துவத் தரப்பினர்களிடம் அதிகாரப் பரவலாக்க மூலக்கொள்கையின்மீது ஈடுபாடும், அர்ப்பணமும் காணப்படாமை மாகாண சபை முறைமை எதிர்கொள்ளும் பலமான தடையாகும் என்று குறிப்பிட்டனர். அவர்கள் அவதானித்ததன்படி, அதிகாரப் பரவலாக்கத்துக்கான அர்ப்பணமின்மையை மத்தியிலுள்ள அரசியல்வாதிகளிடமும், நிர்வாகிகளிடமும் காணலாம். இந்நிலை ஆளுனருக்கும் மாகாண அமைச்சர்களுக்குமிடையிலான மோதல்களின்போது நிதமும் வெளிப்பட்டது.

மத்திய அரசாங்க நிறுவனங்களிலுள்ள நிர்வாக அதிகாரிகளிடம் மாகாண சபை முறைமைகளின்மீது, சாதகமான கலாசாரம் காணப்படாமையால் அவர்கள் அதிகாரப் பரவலாக்கத்துக்குப் பொருத்தமற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று மாகாண நிர்வாகிகள் குற்றம் சுமத்துகின்றனர். அவர்கள் மேற்கொள்ளும் இவ்வாறான செயற்பாடுகளுள் மாகாண நிறுவனங்களின் அதிகாரங்களை அகற்றும் சுற்றுநிருபங்களை வெளியிடுதல், அதிகாரப் பரவலாக்கத்துக்கு எதிரான கட்டளைகளை நாடளாவிய சேவை அதிகாரிகளுக்குப் பிறப்பித்தல், தேசிய வரவு - செலவுத் திட்டத்தினால் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை மாகாண சபை நிறுவனங்களுடன் கலந்துரையாடாது மூலதனச் செலவுகளை மேற்கொள்ளுமாறு பணித்தல்போன்றவை இடம்பெறுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் மத்திய நிறுவனங்களிலுள்ள நிர்வாகிகள்மீது மோசமான மனப்பாங்கினை மாகாண நிர்வாகிகளிடம் ஏற்படுத்தியுள்ளன. சில பிரதம செயலாளர்கள் முன்வைத்த ஒரு முறைப்பாடு என்னவெனில், தமது சேவைகளைச் சேர்ந்த கனிஷ்ட அதிகாரிகள் செயல் வகைத் திணைக்களங்கள் (Line Departments and Ministeres) மற்றும் அமைச்சுக்களின் தலைவர் என்றவகையில், தமது தீர்மானங்களைக் கேள்விக்கிடமாக்கிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன என்று குறிப்பிடுகின்றனர். தமக்கு ஜனாதிபதி செயலகத்தின் அல்லது வேறும் மத்திய நிறுவனங்களில் நடைபெறும் மாநாடுகளுக்கு அழைப்புகள் விடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் மத்திய பணியகத்தினர் தம்மைக் கீழ்ப்படுத்திக் கவனிப்பதனால், தாம் வெளிவாரியான சாதியைச் சேர்ந்தோர் என்ற உணர்வு தம்மிடம் உருவாகியது என்று சில தலைவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தக் கலாசார ஒழுங்கு ஏதேனும் புத்தாக்கச் செயற்பாடுகளோடு தொடர்புபடுவதில் சிரேஷ்ட நிர்வாகிகளை அதைரியப்படுத்துவதாகத் தென்படுகிறது. அவ்வதிகாரிகளின் கருத்துப்படி, முறைமையில் தமது வகிபங்கு விரும்பத்தகாததாக மாறுவதில் இந்தச் சூழ்நிலை பாதிப்புச் செலுத்தியது. மத்திய தமைத்துவத்தோடு நெருங்கிய மாகாணத் தலைவருடன் தொடர்புபடாவிட்டால் அரசியல்த் தாக்குதலுக்கு உட்படவேண்டிய நிலை ஏற்படும் என்று அச்சம் தெரிவித்தனர். அரசியல்வாதிகள் நிர்வாகிகளின் தனிப்பட்ட பக்கச்சார்பினை எதிர்பார்த்தனர். இது 1970கள் தசாப்தத்திலிருந்து படிப்படியாகப் பணியகம் அரசியல்மயமானதால் ஏற்பட்ட விளைவாகும். முந்நாள் சிரேஷ்ட சிவில் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டதன்படி, 1970கள் தசாப்தத்திலிருந்து ஏற்பட்ட ஒரு போக்கு என்னவெனில், அரசியல் நிறைவேற்றுத்துறை பகிரங்க அலுவலர்களிடமிருந்த அதிகாரத்திலுள்ள அரசாங்கத்திற்கும், அமைச்சர்களுக்கும் தனிப்பட்ட வகையில் பக்கச்சார்பினைக் கோரி நின்றமையாகும்.[58] 1978இல் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவி தாபிக்கப்பட்டமையானது, பணியகம் அரசியல்மயமாக்கப்பட்டமையை உச்ச

---

[58] See Table 7.3 above.

கட்டத்துக்குக் கொண்டு சென்றது. 1978 இலிருந்த அமைச்சுக்களிலும், திணைக்களங்களிலும் இடம்பெற்ற உயர் பதவிகள் பிரதானமாக அதிகாரத்திலுள்ள அரசியல் கட்சிமீதான ஆதரவினை அடிப்பயைாகக் கொண்டே வழங்கப்பட்டது. மத்திய தலைவர்கள்மீதான பக்கச்சார்பு மாகாண சபைகள் உயர்மட்ட அதிகாரிகளைத் தெரிவு செய்யும் ஒரு காரணியாக இடம்பெற்றமையால் அந்நிலை ஆரம்பத்திலிருந்தே மாகாண சபை முறைமையில் நுழைந்திருந்தது.

மாகாணசபை மட்டத்தில் இடம்பெறும் அரசியல் மயமாக்கத்தின் பாதிப்பினைத் தற்போது தெளிவாகக் காண முடிகின்றது. மாகாணப் பகிரங்க சேவை உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம் ஆகியனவற்றை நிச்சயிக்கும் காரணி, இந்த அரசியல்மயமாக்கமும் சாதாரண தொழிலாளிகள், வாகன சாரதிகள், பாடசாலை ஆசிரியர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் போன்றோரை ஆட்சேர்ப்புச் செய்யும்போது அரசியல் சகாய முறையே பரவலாகப் பின்பற்றப்படுகின்றது. மாகாண் சபைகளில் இடம்பெறும் அரசியல் சகாய முறைகளால் இடம்பெறும் ஒரு விளைவு என்னவெனில், பாரிய அளவிலான அமைய அடிப்படையிலான நியமனங்கள் காணப்படுவதாகும். 2004 இல் 7641 அமைய நியமனங்கள் (முழு நிறைவேற்றம் சாரா சேவையின் 3.5%) மாகாண சபை முறைமையில் மேற்கொள்ளப்பட்டன.[59] சம்பந்தப்பட்ட பொதுத்துறை நிர்வாகச் சுற்று நிருபங்களைப் பயன்படுத்தி இந்த அமையப் பதவிகள் படிப்படியாக நிரந்தர சேவைக்கு உள்வாங்கப்பட்டன அல்லது நிரந்தர அலுவலர் எண்ணிக்கைகளில் வெற்றிடங்கள் ஏற்பட்டதுடன் அமையப் பதவிகளை வகித்தோருக்கு முன்னுரை வழங்கப்பட்டது. ஆளுநருக்கும், முதலமைச்சருக்குமிடையில் இவ்விடயம் தொடர்பாக மோதல்கள் ஏற்பட்டன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு நிலைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அம்மோதல் இடம்பெறுகின்றது. மாகாண அரசியல்வாதிகள் தமது வாக்குத் தளத்தினை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் செயற்படுவதோடு ஆளுநர் பகிரங்க சேவையின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு முயல்கின்றார்.[60]

சேமநலப் பயனுறுதிகள், காணிப் பகிர்வு, அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டும் அரசியல் சகாயம் இடம்பெறுகின்றது. 2006 இல் ஹெக்டர் கொப்பேகடவ விவசாய பயிற்சி நிறுவனம் (HARTI) கிராமியப் பண்பினைக் கொண்ட மூன்று மாகாண சபைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட கற்கையில் நேர்காணல் மேற்கொள்ளப்பட்ட 68 ஆட்களுள் 80% னோர் அரசியல் வாதிகளின் பார்வையின்கீழ் அரசியல் சகாயமானது, அபிவிருத்தித் திட்டங்களைத் தெரிவு செய்வதில் பாதிப்பு செலுத்தின என்று குறிப்பிட்டனர். அந்த ஆய்வு, மாகாண சபை அரசியல்வாதிகளின் உறவினர்களுக்குச் சகாயம் வழங்குதல், பிரதேசத்தினை மாகாண சபை அரசியல்வாதிகளின் பாதிப்பு மற்றும் மாகாண

---

[59] Finance Commission, *Annual Report, 2004*, Note, p.43.

[60] For example the present Governor of the Eastern Province claimed that the Eastern Province Public Service worked smoothly without the influence of political patronage before the election of PC.

சபை அரசியல்வாதிகளின் சாதி போன்றவை அபிவிருத்தித் திட்டங்களைத் தெரிவு செய்வதன் மீது பாதிப்புச் செலுத்திய காரணிகளாகும்.[61]

கீழ்மட்டப் பதவிகளை வகிப்போர் மத்திய அரசின் ஆளணிக்குரிய தொழில் வாய்ப்புகள் (அவசர பதவி உயர்வுகளையும், நகர்புற நிலையங்களுயக்கு இடமாற்றங்களையும் பெற்றுக்கொள்ளுதல்) நிதி உதவிகள் (வீடமைப்புக் கடன், அனர்த்தக் கடன் போன்றவற்றினைப் பெற்றுக் கொள்ளுதல்) என்பவற்றின் அருமை காரணமாக அதிகாரப் பரவலாக்கத்தின்மீது ஆதரவுடையோராக இருக்கவில்லை. அவர்களின் கருத்துப்படி, மத்திய அரசாங்கத்தின் நிறுவனங்களில் உள்ள பதவிகளோடு ஒப்பிடும்போது, மாகாண சபையின் பதவிகளின் கௌரவமும், கவர்ச்சியும் குறைந்தவையாகக் காணப்படுகின்றன. பரவலாக்கத்திற்கு இசைவற்ற கோரிக்கைகளை சில தொழிற்சங்கங்கள் முன்வைப்பதன்மீது இது பாதிப்புச் செலுத்துகின்றது. முன்னர் மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த பிரதான வைத்தியசாலைகளை மீண்டும் மத்திய அரசாங்கம் பொறுப்பேற்குமாறு பலவந்தப்படுத்தும் வகையில் வைத்தியர்களினதும், தாதிமார்களினதும் தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட இயக்கங்கள் இதற்கு உதாரணங்களாகும்.

7.9 மாகாண பகிரங்க நிர்வாகம் மேற்கொண்டுள்ள நேர்மறையான பங்களிப்புகள்

மாகாணப் பொதுத்துறை நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க பங்களிப்பு என்னவெனில், அதிகாரப் பரவலாக்கல் முறைக்குரிய ஆட்சிப் பொறுப்பினை ஒழுங்குபடுத்தும் திறனைப் பெற்ற ஒரு மாகாண நிர்வாகப் பொறிமுறையை உருவாக்கியமையாகும். கடந்த இருபது வருடங்களாக மாகாண சபைகள் இந்த நிர்வாகப் பொறிமுறையுடன் அதிகாரப் பரவலாக்கம் பற்றிய மூலக்கொள்கைகளை மேற்கொண்டு வந்துள்ளன. நிர்வாகப் பொறிமுறை தொடர்பாக மாகாண சபைகள் மேற்கொண்டுள்ள பங்களிப்பில் மாகாண நிறுவனங்களைக் கட்டுப்படுத்துகின்ற முறைசார் நியமங்களை உருவாக்குதல், மாகாண சபைகள் நிர்வாகத்தில் மனிதவள அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்தல், மத்திய மற்றும் மாகாணத் தொடர்புகளை உறுதிப்படுத்துவதற்கான மூலோபாயரீதியான நிறுவனப் புறமைப்பினை உறுதிப்படுத்துதல், மாகாண மட்டத்தில் அரைகுறை அரசாங்க அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்ட அதிகார சபைகளைத் தாபித்தல் மற்றும் குறிப்பிட்ட பிரதேச ரீதியான பயிற்சித் திட்டங்களை ஆரம்பித்தல் என்பன இடம்பெறுகின்றன.

மாகாணசபைகளின் நிர்வாக ஒழுங்கமைப்பினைப் பற்றி ஏலவே 7.4 என்ற பகுதியில் இடம்பெற்ற விளக்கத்தில் இலங்கையின் இரண்டாம்மட்ட அரங்கம் தற்பொழுது நன்கு வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பணிகள் மற்றும்

---

[61] Damayanthi, Nadeeka and Nanayakkara, V.K., *Impact of the Provincial Council System on the Small Holder Agriculture in Sri Lanka,* Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute, Colombo, Table 6.20, p.109.

அலுவலர்களைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டது. இந்த நிர்வாக ஒழுங்கமைப்பினைப் பயன்படுத்தி மாகாண சபை முறைமை நாட்டின் பகிரங்க அலுவலர்களில் 35% மானோரின் மனிதவள அபிவிருத்தி முகாமையாளராக மாறியுள்ளது. அதுமட்டுமன்றி அரச வளங்கள், பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் வெளிநாட்டு முதல் பெறும் திட்டங்கள் போன்றவற்றினைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நிர்வாகச் செயன்முறையினையும் அது மேற்கொண்டுள்ளது. இந்தச் செயன்முறையில் மாகாண ஆட்சி, முகாமைத்துவம் பற்றிய நிபுணத்துவத்தினையும் அறிவையும் பெற்றுக் கொண்டுள்ளது. அவர்கள் மத்திய கட்டுப்பாட்டு நிறுவனங்களான மாகாண சபை அமைச்சு, நிதி ஆணைக்குழு, திறைசேரி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்துடன் மாகாண சபை நிர்வாகிகள் கட்டியெழுப்பியுள்ள கட்டமைப்புரீதியான தொடர்புகள் என்பன கொழும்பிலுள்ள அதிகாரச் செயற்பாட்டாளர்களுடன் பரிமாற்றங்களை மேற்கொள்ளும் சுமையைக் குறைப்பதற்குக் காரணங்களாக அமைந்துள்ளன. இவ்வாறான பல்வகை விருத்திகள் ஆரம்பகாலத்தில் தமக்குப் பொருத்தமான நிர்வாகப் பொறிமுறையினைப் பெற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், தற்போது மாகாண சபைகள் அரசியல் யாப்புகள்மூலம் தமக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிர்வாகப் பொறிமுறையினை எற்படுத்தி உறுதி அடைந்துள்ளமையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

பல்வேறு கட்டமைப்பு மற்றும் கொள்கை வகுப்புகளின்மூலம் நிர்வாகப் பொறிமுறை விருத்தியடைந்து இருப்பதனை அறிந்து கொள்ள முடிகிறது. மாகாணப் பொதுத்துறை நிர்வாகத்திற்குத் தேவையான நிர்வாக அதிகாரத்தினை வழங்கும் வகையில் நிதிசார் நியதிச் சட்டங்கள், நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குகள் என்பன மாகாண சபைகளால் தாபிக்கப்பட்டுள்ளன. நிலையியற் கட்டளைகள், மாகாண பொதுத்துறை நிர்வாகத்தின் ஆளணி தொடர்பான பொது ஏற்பாடுகள், நியதிச் சட்டங்களை உருவாக்கும் செயல்முறையால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் மூலக்கொள்கைகள் என்பன ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பாலனக் கிரமங்கள் மற்றும் கொள்கைகள் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகம் மற்றும் நிதி ஒழுங்கு விதிகளைப் பின்பற்றி வகுக்கப்பட்டிருந்தாலும், அவை மாகாண நிர்வாகம் மத்திய அரசாங்கத்தோடு நட்பு ரீதியாகச் செயற்படுவதற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளன. நாடளாவிய சேவையின் ஆளணியினரை மாகாண முறைமைக்குள் உள்வாங்குவதிலும் இவை காரணங்களாக அமைந்திருப்பதோடு மாவட்ட, பிரதேச மற்றும் உள்ளூராட்சி ஆகிய மட்டங்களில் உள்ள மத்திய அரசாங்கத்தின் தமக்கு சமமானவர்களோடு நிர்வாக அதிகாரத்தினைப் பங்கிட்டுக் கொள்வதற்கும் இது ஊன்றுகோலாய் அமைந்துள்ளன. மாகாண சபைகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மத்திய அரசின் நிர்வாக அதிகாரிகளுடன் அதிகாரத்தினை மேற்கொள்ளும்போது மோதல்களை ஏற்படுத்திக் கொள்வதனைவிட நட்புரீதியாகச் செயற்படுவதனைக் காணலாம். இந்நிலை தமது அதிகாரிகளுக்கும், பிரதேச நிர்வாகத்திற்கும் இடையில் நெருங்கிய ஒத்துழைப்பினை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களை மாகாண சபைகளுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளது. மாகாண சபைகள் 2000 இற்கும் மேற்பட்ட கள உத்தியோகத்தர்களைப் பிரதேச அலுவலகங்களோடு

இணைப்பதன்மூலம் இந்நிலையினை எடுத்துக் காட்டப்படுகின்றது.[62]

மறுபுறம், மத்திய அரசின் கட்டுப்பாட்டு நிறவனங்கள் மாகாண சபைகளுக்கு பாலனக் கிரமத் தேவைகளை முன்வைப்பதனால் மாகாண சபைகளுக்குத் தமது திட்டங்களை வகுக்கும் திறனை விருத்தி செய்வதற்குக் காரணமாக அமைந்துள்ளன. நிதி ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்படும் திட்டங்கள் திறைசேரியின் வழிகாட்டல்களின் அடிப்படையில் வகுக்கப்படுவதோடு அவை அடைவுகளுக்கும், செலவுகளுக்குமிடையிலான பொருத்தப்பாட்டில் கவனம் செலுத்தப்படுவதனால் அவை மிகச்சிறப்பாகத் திட்டமிடப்படுகின்றன. இவ்விடயங்கள் மாகாண சபைகள் மத்திய அரசாங்கத்தோடு பயன்மிக்க வகைகளில் பரிமாற்றங்களை மேற்கொள்ளக்கூடிய ஒரு நிர்வாகப் பொறிமுறையினைக் கட்டியெழுப்பியுள்ளன என்பதனை எடுத்துக்காட்டுகின்றன.

சகல மாகாண சபைகளும் முகாமைத்துவ மற்றும் பயிற்சி அலகு மற்றும் தமது அலுவலர்களுக்கு வதிவிடப் பயிற்சி நெறிகளை நடத்தக்கூடிய பயிற்சி நிலையங்கள் என்பவற்றைத் தாபித்துள்ளன. 1990களில் அறிமுகம் செய்யப்பட்ட வினைத்திறன் விருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், இன்று சகல மாகாண சபைகளும் தமது அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக சிறந்த முறையில் வகுக்கப்பட்ட பல பயிற்சித் திட்டங்களை உருவாக்கியுள்ளன. இன்று மாகாண சபைகள் நிதி முகாமைத்துவம், கிராமியப் பங்கேற்பினை மதிப்பீடு செய்தல், அலுவலக முகாமைத்துவத்தைக் கொள்வனவு செய்தல், டென்டர் ஒழுங்குகள், நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவம், கணனிப் பிரயோகம் போன்ற பல கற்கை நெறிகளை நடாத்துகின்றன.[63] சில மாகாண சபைகளின் பிராந்திய பயிற்சி அலகுகள் கீழ்மட்டப் பகிரங்க அலுவலர்களின் அடைவுகளை மதிப்பிடுவதற்கான திட்டங்களையும் வகுத்துள்ளன.[64] மாகாண சபைகளால் அறிவிக்கப்பட்டுள்ள பயிற்சி நெறிகளைப் பார்க்கும்போது, மத்தியமயப்படுத்தப்பட்ட மத்திய அரசாங்க மட்டத்தில் போதிய பயிற்சி வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளாத கீழ்மட்ட பகிரங்க அலுவலர்களின் மேலதிக பயிற்சிக்காகச் சேர்த்துக் கொண்டுள்ளதைக் காணலாம். 1993 - 1997 காலப்பகுதியில் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி நிறுவனம் பெற்றுக்கொடுத்த நிதி உதவியினைப் பயன்படுத்திப் பயிற்சிக் கட்டடத் தொகுதி ஒன்றினை முதலாவதாகக் தாபிக்கும் வகையில் செயல்பட்ட வடமேல் மாகாணசபை இத்துறையில் மேலும் முன்னேற்றம் கண்டுள்ளது. தற்போது சகல மாகாண சபைகளும் பயிற்சி நிலையங்களைத் தாபித்து தமது ஆளணியினருக்கு வதிவிடக் கற்கை நெறிகளை நடத்தி வருகின்றன.

---

[62] According to the Department of Census and Statistics there were 2010 personnel belonged to the PCs stationed in the Divisional Secretariats in 2006, see Department of Census and Statistics, Statistical Pocket Book, 2010.

[63] *Compendium of Training Progarmmes Available*, North-Central Provincial Council, 2007, Wayamba Provincial Council, 2009, Southern Provincial Council, 2009, Lalith Kanangara & Deepthi Wijethunga, op. cit.

[64] The MDTU of the Uva PC has prepared performance evaluation schemes for junior level cadres.

மாகாண சபை அரசியல்வாதிகள் அரசியல் முறைமையில் தமக்கு உரிய இடத்தினைப் பெற்றுக் கொள்வதற்காகப் போராடுவதில் அச்சமின்றி இருப்பார்களாயின், இறுக்கமான முறையில் மத்தியமய அரசியல் மயமாக்கத்திற்குட்பட்ட பணியக முறைமையினில் மிக அருமையாகச் சந்திக்கும் பிராணியான நம்பிக்கை மிகுந்த ஆலோசகர்களாக மாகாண சபை நிர்வாகிகள் மாறியுள்ளனர். மாகாண சபை முறைமைக்கு ஆதரவாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக நீதிமன்றினை நாடுவதில் அரசியல் யாப்பில் இடம்பெறும் அதிகாரப் பரவலாக்கல் முறைமை பற்றி அதிக அறிவினைப் பெற்ற நிர்வாகிகளே ஈடுபட்டுள்ளனர். எமது ஆய்வின்போது, மாகாண நிர்வாகிகள் மத்திய அரசாங்கத்தின் தீர்மானங்களுக்குச் சவால் விடுப்பதற்கு முதலமைச்சருக்கான தைரியம் ஊட்டுவோராகவும், ஆலோசகராகவும் செயற்பட்டமை பற்றிய பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. ஆனால், நாட்டின் பிரதான நிறைவேற்றுப் பகுதியான ஜனாதிபதியுடன் மோதல்களுக்கு உட்படும் நிலை காணப்பட்டபோது, அவர்கள் இது தொடர்பாக முன்னெடுப்புக்களை மேற்கொள்வதில் தயக்கம் காட்டி வருவதனைக் காண முடிகிறது. உதாரணமாக, அண்மைக்காலத்தில் ஒரு மாகாண சபையின் பிரதம செயலாளர் நீதி ஆலோசனை நிறுவனம் ஒன்றின் உதவியினைப் பெற்று மாகாண சபைகளின் அரசக் காணிகள்மீதான அதிகாரத்தினைக் குறைக்கும் வகையில் காணி ஆணையாளர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்தினார். ஆனால் ஜனாதிபதியின் செயலாளர் காணி அதிகாரம் தொடர்பான அந்த வர்த்தமானி அறிவித்தலை உறுதிப்படுத்தி ஒரு சுற்று நிரூபத்தை வெளியிட்டமையினால் அம் முயற்சி கைவிடப்பட்டது.

மாகாண சபை நிர்வாக ஒழுங்கமைப்போடு தொடர்பான பிறிதொரு பங்களிப்பு, மத்திய அரசாங்கத்தின் நிறுவனங்களால் ஏற்படுத்தப்பட்ட தடைகளைத் தீர்த்துக்கொள்வதற்கான மூலோபாய செயற்றிறன்களை உருவாக்கியமையாகும். இதன் பொருள் ஆளுநர் மாநாடு, முதலமைச்சர் மாநாடு மாகாணங்களுக்கு இடையிலான இணைப்பு அலுவலகம் தாபிக்கப்படுதல் போன்ற செயற்பாடுகளாகும் ஆளுநர் மாநாடு இன்று வைபவரீதியான ஒரு சந்தர்ப்பமாகக் காணப்பட்டாலும், அது ஆளுநர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் தமது மாகாண சபைகளோடு மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல் பற்றிய பொது நியமங்களை உருவாக்கிக் கொள்வதற்குமான சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. ஆனால் முதலமைச்சர் மாநாடு பிரதம செயலாளர்கள், முதலமைச்சர்கள், திறைசேரி மற்றும் நிதி ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் ஆகியோர் வருடாந்தம் சந்திக்கின்ற மற்றும் மத்திய அரசாங்கத்துக்கும், மாகாணங்களுக்கும் இடையிலான தொடர்புப் பிர்ச்சினைகளைக் கலந்துரையாடுகின்ற மேடையாகச் செயற்படுகின்றது. முதலமைச்சர் மாநாட்டின்மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கிய தீர்மானம் என்னவெனில், மேல் மாகாண சபையினால் வகுக்கப்பட்ட ஒரு நியதிச் சட்டத்துக்கு அங்கீகாரம் கிடைக்காவிட்டாலும் மாகாணங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு அலுவலகம் ஒரு முக்கிய முன்னெடுப்பாகும். இந்த நிறுவனத்துக்குரிய பொறுப்புகள் என்னவெனில், மாகாண சபைகளோடு தொடர்பான விடயங்கள் பற்றி மத்திய அரசின் நிறுவனங்களுடன் தொடர்புகளை

மேற்கொள்ளல், மாகாண சபைகளினால் நிறைவேற்ற வேண்டிய நியதிச் சட்டங்களை நிறைவேற்றல், மாகாண சபைகளின் பணிகள் தொடர்பான அறிக்கைகளை வைத்தல், தமது அனுபவங்களைப் பரிமாற்றிக் கொள்வதற்காக மாகாண சபைகளுக்குப் பெற்றுக் கொடுத்தல் என்பனவாகும்.[65] முதலமைச்சர் மாநாட்டில் முதலமைச்சர்களும், பிரதம செயலாளர்களும் வரி வருமானம், மத்திய அரசாங்கத்தின் நிதியை மாகாண சபைகளுக்குப் பெற்றுக் கொடுத்தல், மாகாணப் பொதுத்துறை நிர்வாகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், நியதிச் சட்ட உருவாக்கத் தேவைகள், ஜனாதிபதியோடும், அமைச்சரவையோடும் கலந்துரையாடுவதற்குத் தீர்மானிக்கும் பிரச்சினைகளைக் கவனத்தில் எடுத்தல் போன்றவை தொடர்பாக மாகாண சபை நிர்வாகம் எதிர்கொள்கின்ற பிரச்சினை என்பன இங்கு கலந்துரையாடப்படும். இந்த மாநாடு ஒரு சந்தர்ப்பத்தில் 1987 மாகாண சபைச் சட்டத்தைப் பரிசீலனை செய்வதற்காக ஒரு குழுவினை நியமித்தது. அக்குழு மாகாணசபைகள் சட்டத்தின் 19.1, 25.2, 32.1 ஆகிய சரத்துகளைத் திருத்த வேண்டும் என்று சிபாரிசு செய்தது. மேற்கொள்ளப்பட்ட பிறிதொரு தீர்மானம் என்னவெனில், அரசத் துறையில் உள்ள நிதிப் பாலனக் கிரமங்களுக்குப் பொறுப்புக்கூறும் வகையில் மாகாண அதிகார நிலையங்கள் சம்பந்தமான பொது நியதிச் சட்டங்களை வகுக்க வேண்டும் என்பதாகும்.[66]

மாகாண சபைகளினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பிறிதொரு விடயம் அதிகார சபைகள், நிலையங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகிய அரைகுறை அரசாங்க நிறுவனங்களைத் தாபித்து, அவற்றின்மூலம் நிச்சயமான அபிவிருத்தித் தேவைகளையும், ஒழுங்குபாட்டுத் தேவைகளையும் கொண்டு நடத்துவதாகும். அதிகாரத்தைப் பரவலாக்குவதனால் அபிவிருத்திக்கான பிரதேசத் திறனை விருத்தி செய்தல், அரசாங்கம், தனியார் துறை, இலாப நோக்கற்ற துறைகள் ஆகியவற்றுக்கிடையில் பங்குடைமை, பௌதீக வளங்களைச் செயற்றிறன் மிக்கதாகப் பயன்படுத்துதல், சந்தைச் சக்திகளை ஒழுங்குபடுத்தல் என்பவற்றை அதிகாரப் பரவலாக்கத்தின்மூலம் மிகவும் பலமான முறையில் மேற்கொள்ள முடியும் என்பதனை அந்நிறுவனம் நிரூபித்துள்ளது.

மாகாண சபைகள் நிறுவியுள்ள சுயாதீன முகவராண்மைகளின் பணிகள் போக்குவரத்து நெறிப்படுத்தல், சூழல் பாதுகாப்பு, பிரதேசக் கீழ்க் கட்டமைப்பு அபிவிருத்தி, வியாபார நிறுவனங்களைக் கொண்டு நடாத்துதல், வெளிநாட்டு உதவிகளைப் பெறுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களை நெறிப்படுத்தல், தனியார் முதலீடுகளை ஊக்குவித்தல், அரச - தனியார் பங்குடைமையை உருவாக்குதல் போன்ற பரந்த செற்பாடுகளை நிறைவேற்றுகின்றது. முதல் பத்து வருட காலப்பகுதியில் சகல மாகாண சபைகளும் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினை நிறுவி வேகமாக வளர்ச்சியுறும் தனியார் பஸ் சேவையினை ஒழுங்குபடுத்துவதற்கு உதவியுள்ளது. மாகாண நியதிச் சட்டங்களின்மூலம் பயணிகள் போக்குவரத்துச் சபைகள் தாபிக்கப்பட்டமையினால், வேகமாக வளர்ச்சியுறுவதற்கு ஆரம்பித்த தனியார் பஸ் சேவையினை

---

[65] Minutes of the 17th Chief Ministers' Conference held on 08 September 2009.
[66] ibid.

ஒழுங்குபடுத்துவதன்மூலம் மத்திய அரசுக்கு உதவி புரிந்துள்ளது. இந்தப் பங்கேற்பு தனியார் பஸ் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துவதற்கு மட்டுமன்றி பாரிய வருமானத்தினை அரச வருமானத்தோடு சேர்ப்பதற்கும் பங்காற்றியுள்ளது. உதாரணமாக, 2008 ஆம் ஆண்டில் பயணிகள் போக்குவரத்து உரிமையாளர்களிடமிருந்து அனுமதிப் பத்திர கட்டணங்களுக்காக தென் மாகாண சபை 22.9 மில்லியன் ரூபாவினைச் சம்பாதித்தது.[67]

1996 இலிருந்து வடமேல் மாகாண சபை அதிகார சபைகளை நிறுவும் செயன்முறையில் முன்னணி வகித்துள்ளது. தற்போது இந்த மாகாண சபையின்கீழ் ஒன்பது அதிகார சபைகள் செயற்படுகின்றன. வடமேல் மாகாணத் தொழில்நுட்பச் சேவைப் பணியகம், வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகார சபை, வடமேல் மாகாண மனிதவள அபிவிருத்தி அதகார சபை, வடமேல் மாகாண ஜனகலா நிலையம், வடமேல் மாகாண இயந்திர சாதன அதிகார சபை, வடமேல் மாகாண சுற்றுலா சபை மற்றும் வடமேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை என்பன குறிப்பிடத்தக்க நிறுவனங்களாகும். தொழில்நுட்பச் சேவைப் பணியகத்தினைத் தாபித்ததன் நோக்கம், மாகாணங்களில் முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறிந்து உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குத் தகவல்களை வழங்குவதாகும். முதலீட்டாளர்களுக்குச் சேவைகளை வழங்குவதன்மூலம் தொழில்நுட்பச் சேவைப் பணியகம் 1997 - 2006 காலப்பகுதியில் 151 மில்லியன் ரூபாவினை வருமானமாகப் பெற்றுள்ளது.[68] ஜனகலா நிலையம் பிரதேசத்தின் குடிசைக் கைத்தொழிலாளர்கள், சிறிய வியாபாரிகள் என்போருக்கு தமது உற்பத்திகளை வெளிநாட்டவர்களுக்கும், உள்நாட்டவர்களுக்கும் விற்பனை செய்யும் சந்தர்ப்பத்தினைப் பெற்றுக் கொடுத்துள்ளது. 2009 இல் இந்நிலையம் 15.1 மில்லியன் ரூபாவினை வருமானமாக உழைத்துள்ளது.[69] வடமேல் மாகாண சுற்றுலா சபை, பிரதேச அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு விசேட சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. தென் மாகாண சபையின் பாதைகள் அபிவிருத்தி அதிகார சபை, மாகாணத்தின் பாதைகள் அபிவிருத்தி போன்ற உட்கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்து வருகின்றது. மத்திய மாகாண சபையின் பிராந்திய பொருளாதார அபிவிருத்தித் திட்டம், அரச மற்றும் தனியார் துறைகளின் பங்குடைமையை விருத்தி செய்வதனை இலக்காகக் கொண்டு செயற்படுகின்றது. இந்நிறுவனம் மத்திய மாகாண சபையின் ஒரு நிறுவனமாகச் செயற்பட்டாலும் அது அயல் மாகாணங்களான வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் தனது கிளைகளைத் தாபித்துச் செயற்படுகின்றது.

மாகாண சபை நிர்வாகம் தனது நிர்வாகத் திறனைக் கட்டியெழுப்பியுள்ள பிறிதொரு துறை, வெளிநாட்டு உதவிகளைப் பெறுகின்ற பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களாகும். முதல் பத்து வருட காலப்பகுதியில் பிரதான அபிவருத்தி ஆரம்பிப்புகளினால் பிரதான அபிவிருத்தித்

---

66. ibid.
67. Revenue Department of Southern Provincial Council, *Annual Revenue Report*, 2008 .
68. Annual Report of the Industrial Service Bureau, 2009 .
69. Progress Report of the Wayamba Janakala Foundation- 2009.

திட்டங்களுக்கு உட்படுத்தப்படாத மாகாணங்களுக்கு நேரடி வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொண்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் நிதி கிடைக்கப் பெற்றுள்ளது. தெற்கு, ஊவா, வடகிழக்கு போன்ற மாகாண சபைகளின் ஆட்சிக்கும் பிரதேச பொருளாதார அபிவிருத்திக்கும் உதவி வழங்கும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பெற்றுக் கொண்ட ART, GOLD திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இரண்டு மாகாணங்களும் பிரிக்கப்படும்வரை வடகிழக்கு மாகாண சபை வெளிநாட்டு உதவிகளைப் பெற்று பத்து திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. தற்போது கிழக்கு மாகாணசபை 16,164.2 மில்லியன்கள் ரூபாய்களைப் பெறுகின்ற வெளிநாட்டு உதவித் திட்டங்கள் பதினொன்றினை நடைமுறைப்படுத்தி வருகின்றது.[70]

7.10 முடிவுரை

மேற்குறிப்பிட்ட கலந்துரையாடல் அரசியல் யாப்பில் இடம்பெறும் அதிகாரப் பரவலாக்கத்தைப் பயன்படுத்தி இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் முறைமையின் பிரதேச அரசியல் பணி தொடர்பான பொறுப்பினை ஏற்றுக் கொள்வதற்குத் தேவையான முதிர்ச்சியினை மாகாண சபைகள் முறைமை பெற்றுள்ளது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. தமக்கு அதிகாரத்திற்கான வாய்ப்பு வளங்கள் போதியளவு பெற்றுத் தரப்படுமாயின், மக்கள் சேவைகளை வழங்குதல், பிரதேச ஆட்சிமுறையினை விருத்தி செய்தல் போன்றவற்றின்மூலம் பிரதேச அபிவிருத்தியினைத் தன்னால் மேற்கொள்ள முடியும் என மாகாண சபைகள் நிரூபித்துள்ளன. இது தொடர்பாக நாம் பின்வரும் சிபாரிசுகளை முன்வைக்க முடியும்.

1. ஒருங்கிய நிரலில் இனங்காணப்பட்ட விடயங்களுக்குரிய பணிகள், அதிகாரங்கள், வளங்கள் என்பவற்றில் மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கமும் பங்குடைமையின் அடிப்படையில் செயற்படக்கூடியவாறு அரசியல் யாப்பின்மூலம் திருத்தம் கொண்டு வரப்படுதல்.

2. கட்சியின் மூன்று மட்டங்களுக்குரிய நிறுவனங்களுக்குத் தேசியரீதியாக உடன்படக்கூடிய ஒரு வீதத்தின் அடிப்படையில் அரச வருமானத்தை ஒப்படைத்தல், குறைந்தபட்சம் அரச வருமானத்தின் 25% பகுதியை மாகாண சபைகளுக்கும், மாகாண அரசாங்க நிறுவனங்களுக்கும் பெற்றுக்கொடுத்தல்.

3. ஆளுநனர் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவினை நியமிக்கும்போது அதற்கு முதலமைச்சரின் கருத்துக்களையும் பெற்றுக் கொண்டு நியமிக்க வேண்டும் என்று விதிக்கும் ஒரு திருத்தம் அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

---

[70] Total donor funding has been accounted from the data presented in the Website of the Eastern Provincial Council. Last visited 20 November 2010 .

4. நாடளாவிய சேவைகளில் ஆளணியினர் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரத்தை மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு வழங்காதிருப்பின், குறைந்தபட்சம் அவற்றிற்கு அது தொடர்பான சிபாரிசுகளைத் தேசிய பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு முன்வைப்பதற்கான அதிகாரத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

5. அரசியல் யாப்பின்மூலம் இனம் காணப்பட்ட மாகாண சபைகளுக்குரிய ஒரு விடயம் என்று அதனைக் குறிப்பிட்டு பிரதேச நிர்வாகத்தை மாகாண சபைகளுக்கு வழங்குதல்.

6. மாகாணங்களுக்கிடையில் இடமாற்றங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் ஒரு குறிப்பிட்ட வருடகால சேவையின் பின்னர் மத்திய அரசாங்கத்தின் முகாமைத்துவக் குழுவில் சேர்வதற்குமான வாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்து 1987 இல் நிர்வாகச் சீர்திருத்தக் குழு முன்வைத்த ஆலோசனையின்படி, மாகாண முகாமைத்துவக் குழுவைத் தாபித்தல்.

7. நிறைவேற்றம் சாராத ஆளணி உறுப்பினர்களுக்குப் போதிய அனுபவமும் கல்வித் தகுதியும் இருக்குமாயின், மாகாண முகாமைத்துவக் குழுவினருக்கு திறமையை அடிப்படையாகக் கொண்ட பதவி உயர்வுகள்மூலம் நுழைவதற்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தல்.

அத்தியாயம் - 08

அதிகாரப் பகிர்வின்கீழ் உள்ளூராட்சி

அசோக குணவர்த்தன

8.1 அறிமுகம்: உள்ளூர் ஆட்சியின் வகிபாகம் மற்றும் பணிகளின் வளர்ச்சி

கிராமங்களை நிர்வகிப்பதற்கான சுதேச உள்ளூராட்சி முறையொன்று கிராம சபைகள் (கம்சபா) எனும் பெயரில் இலங்கையில் இயங்கி வந்தது. இதன் நிர்வாகத்தின்போது, ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அவை மாவட்ட சபைகள் (றட்டசபா) என்பவற்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன. எனினும், தற்கால உள்ளூராட்சி அமைப்பு முறைகளின் ஆரம்ப அமைப்பானது 19ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் பிரித்தானியரினால் அறிமுகஞ் செய்யப்பட்டது. பிரித்தானியர் அவ்வாறு அறிமுகப்படுத்திய வீதிக்குழுக்கள், பொதுச் சுகாதார சபைகள் போன்ற உள்ளூராட்சி நிறுவனங்கள், வளர்ந்து வரும் நகரப்புறங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலுள்ள சேவை இடைவெளிகளை நிரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்டனவேயன்றி, குடியேற்ற ஆட்சி முறையின்கீழ் உள்ளூராட்சி மட்டத்தில் அதிகாரப் பகிர்வை ஜனநாயகப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டவையல்ல.

1815ஆம் ஆண்டைய 17ஆம் இலக்க நகர சபைச் சட்டத்தின் முன்னுரையில், "சில பிரதேசங்களிலுள்ள நிர்வாகத்தின் ஒரு பகுதியினை மக்களுக்கு வழங்குவதற்கான ஓர் சட்டம்" எனக் கூறப்பட்டாலும், நடைமுறையில், (உத்தியோக அடிப்படையில்) தேர்ந்தெடுக்கப்பட்ட சில அங்கத்தினரையும் நியமனஞ் செய்யப்பட்ட சில அங்கத்தினரையும் கொண்ட இச்சபை, அரசாங்க அதிபரை மேயராகக் கொண்டு, பிராந்திய ஆட்சி அமைப்பின் ஓர் அங்கமாக இயங்கியது. இதே போன்று, பொதுச் சுகாதார சபைகள் (1892) மற்றும் உள்ளூர் சபைகள் (1898) என்பனவற்றின் தவிசாளராக அரசாங்க அதிபரே விளங்கினார். டொனமூர் யாப்பின் கீழான ஆட்சிமுறைச் சீர்திருத்தங்கள்மூலம் மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி முறையொன்று, 1932இல் அறிமுகஞ் செய்யப்பட்டபோது, உள்ளூராட்சி முறையிலும் முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன. புதிய அரச சபையின் குழுக்களுள் ஒன்றாக உள்ளூராட்சிக் குழுவும் தாபிக்கப்பட்டது. அதற்குப் பொறுப்பான அமைச்சரும் நியமிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து, உள்ளூராட்சி முறையை அபிவிருத்தி செய்வதை நோக்காகக்கொண்டு பணியாற்றுவதற்காக மத்திய உள்ளூராட்சித் திணைக்களம் நிறுவப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. உள்ளூராட்சி சபைகள் நான்கு வகைகளாக மறுசீரமைக்கப்பட்டன. கிராமக் குழுக்கள் (பின்னர் கிராமச் சபைகள்), பட்டின சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள் என்பனவே அவையாகும். உள்ளூராட்சி சபைகளிலுள்ள அரச நிர்வாகிகள் அகற்றப்பட்டு, அவர்களுக்குப் பதிலாகத் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தினர் அவ்விடங்களை ஒப்பெடுத்தனர். அவர்களது சட்டமியற்றும் (உப சட்டங்கள்) அதிகாரங்கள் விஸ்தரிக்கப்பட்டு, வரியறவிடும் அதிகாரங்கள் குறிப்பிடப்பட்டு, பொதுப் பணிகளுக்காகப் பணம் கடன் வாங்கும் அனுமதியும் வழங்கப்பட்டன. அவர்கள் பணியாற்ற வேண்டிய துறைகளும் அவற்றிற்குரிய சட்டங்களினால் குறித்துரைக்கப்பட்டன. பொதுச் சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு, வீதிகள், பொதுத் தேவைகள், பொதுமக்கள் நலன் பேணும் சேவைகள் மற்றும் பொது வசதிகள் என்பன அத்துறைகளாகும். காலக்கிரமத்தில் அவை ஏழு திட்டங்களாக வரையறுக்கப்பட்டன. அவையாவன: பொது நிர்வாகம்: சுகாதார சேவைகள்: பௌதீக வளத்திட்டமிடல்: வீதிகள், நிலம் மற்றும் கட்டிடங்கள்: நீர் விநியோகம்: அத்தியாவசிய பொதுச் சேவைகள்: பொதுச் சேவைகள் மற்றும் வசதிகள்: மின்சாரம் என்பனவே அவையாகும். நீர் விநியோகத்துக்காக (தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை), மின்சாரத்துக்காக (இலங்கை மின்சார சபை) எனும் மத்திய அமைப்புக்கள் நிறுவப்பட்டதோடு, இவை தொடர்பான உள்ளூராட்சி சபைகளின் பணிகள், அவற்றிற்குரிய மத்திய நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

குறிப்பிட்ட சில சேவைகளை வழங்கும் நிறுவனங்களாக உள்ளூராட்சி சபைகள் விளங்கின. ஆயினும், சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டு அல்லது வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டு தமது அதிகாரத்தின்கீழுள்ள பிரதேசங்களில் இயங்கும் பல்வேறு மத்திய அரசாங்கத் திணைக்களங்களையோ அல்லது அதிகார சபைகளையோ மேற்பார்வை செய்யும் அதிகாரம் உள்ளூராட்சி சபைகளுக்குக் கிடையாது. இதனால், மத்திய அரசாங்கத் திணைக்களங்களும், அதிகாரசபைகளும் ஒரு குறிப்பிட்ட துறையில் சேவையாற்றுவது போன்றே உள்ளூராட்சிச் சபைகளின் சேவைகளும் ஒரு குறிப்பிட்ட பரப்பைக் கொண்டிருந்தன. காலக்கிரமத்தில் இத்திணைக்களங்களினதும் அதிகார சபைகளினதும் அதிகாரங்களுக்கும், உள்ளூராட்சிச் சபைகளின் அதிகாரங்களுக்கும் இடையேயான இணைப்பினை ஏற்படுத்துவதென்பது, அபிவிருத்திச் சேவைகளின் நிர்வாகத்தினை ஒழுங்குபடுத்துவதில் ஒரு முக்கிய விடயமாகத் தலையெடுத்தது. குடியேற்ற ஆட்சி அமைப்பின் இரண்டாம் நிலை இடமான மாவட்ட அமைப்பானது, சுதந்திரத்தின் பின்னரான ஆட்சி அமைப்பிலும், பொதுச் சேவைகளை இணைக்கும் ஓர் அமைப்பாக 'மாவட்ட நிர்வாகம்' எனும் பெயரில் தொடர்ந்திருந்தது. இன்றும் கூடத் தொடர்ந்திருக்கும் இந்நடைமுறையானது, ஜனநாயக ஆட்சிமுறைத் தத்துவங்களுக்கு முரணானதாகும். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரநிதிகளைக் கொண்ட அமைப்புக்கள், பல்வேறு நிர்வாக ஏற்பாடுகளின் மூலம் அரச நிர்வாக இணைப்புக்குக் கட்டுப்பட்டவையாயுள்ளன.

இவ்விடயத்தை ஆராய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று (1982) நியமிக்கப்பட்டது. "ஒரு மாவட்டத்தில் செய்யப்பட வேண்டிய

பொருளர்தார அபிவிருத்திப் பணிகளை, மாவட்ட அடிப்படையிலேயே திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி அமைப்பு முறை எவ்வாற உதவலாம்" என்பதை அறிவதே இதன் நோக்கமாகும். 1920 தசாப்தத்திலிருந்தே இவ்விடயத்திற் கவனஞ் செலுத்தப்பட்டு வந்துள்ளது. அரச பேரவையிலிருந்த உள்ளூராட்சி அமைச்சர், 'பிராந்திய சபைகள்' என்பனவற்றை அமைப்பதன்மூலமான அதிகாரப்பகிர்வு முறையினை முன்வைத்தார். அடிமட்டத்திலிருந்து உள்ளூராட்சி அமைப்பு முறையைக் கட்டியெழுப்புவதே இதன் நோக்கமாகும். மாவட்ட நிர்வாக முறையின் அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கு முன்னோடியாகக் 'கச்சேரி முறையை' முற்றாக இல்லாமலாக்குவதும் இதனுள் அடங்கும்.

அதிகாரப் பரவலாக்கல் பற்றிய இச் சிந்தனைகளானவை நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழர்கள் பிராந்திய சுயாட்சி கோரி வேண்டுகோள்களை விடுக்கத் தொடங்கிய காலகட்டத்திலேற்பட்ட அதிகாரங்களை மத்தியிலிருந்து பிராந்தியங் களுக்குப் பிரிக்கும் சிந்தனைகளையும் பிரதிபலித்தது. தொடர்ந்து வந்த அரசாங்கங்களும், உள்ளூராட்சி முறையில் திருத்தங்களைக் கொண்டு வருவதன்மூலம் பிராந்திய சுயாட்சிக் கோரிக்கையின்மேல் கவனஞ் செலுத்தின. 1957ஆம் ஆண்டில் பிராந்திய சபைகள் ஆலோசனையையும், 1968இல் மாவட்ட சபைகள் பற்றிய ஆலோசனையையும் முன்வைத்ததன்மூலம் இதனைச் செய்ய முற்பட்டன. அதிகாரப் பகிர்வு செய்வதற்கான ஏற்பாட்டு முறைகளைத் தேடியதற்கான காரணம், இனப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான முயற்சியேயாகும். அபிவிருத்திக்கான அதிகாரப் பரவலாக்கத்திலிருந்து இது வேறுபட்டதாயிருந்தது. எனினும் 1982ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவானது, "தனி நாட்டுக் கோரிக்கை விடுக்கப்படுகின்ற அளவிற்குச் சென்றுள்ள இனப்பிரச்சினைகள் நியாமானவையா அல்லவா என்பதை ஆராய்ந்து அவற்றிற்கான நேரடித் தீர்வொன்றைக் காண்பதே" தமது நோக்கம் எனும் நம்பிக்கையை இல்லாமலாக்கியது.

கிராம சபைகள் மற்றும் பட்டின சபைகளுக்குப் பதிலாக 1983இல் நிறுவப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபைகளானது, மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களைப் பரவலாக்குவதில் ஒரு முக்கிய சம்பவம் என அவ்வேளையிற் கருதப்பட்டது. இவ்வாறு பரவலாக்கப்பட்ட மாவட்ட நிர்வாக அமைப்புகளுக்கு, அங்கத்தினரை மக்கள் தேர்ந்தெடுக்கும் அம்சத்தினை இது புகுத்தியது. பரவலாக்கப்பட்ட அபிவிருத்திக்கான சிறந்த முறையென இது கருதப்பட்ட அதே வேளையில், வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வதியும் தமிழ் மக்கள் வலியுறுத்திக் கொண்டிருந்த பிராந்திய சுயாட்சிக்கான ஒரேயொரு தீர்வாகவும் இது அமையுமெனக் கருதப்பட்டது. 'வருடாந்த அபிவிருத்தித் திட்டம்' ஒன்றினை அங்கீகரிப்பதும், அதனை நடைமுறைப்படுத்துவதும் இச்சபையின் பணிகளுள் ஒன்றாயிருந்தது. இம்மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமாக மாவட்ட அமைச்சர் தலைமையிலான நிறைவேற்றுக் குழுவொன்று அமைக்கப்பட்டது. 15 விடயங்கள் தொடர்பான அதிகாரம் இக்குழுவுக்கு வழங்கப்பட்டது. இதன்மூலம் ஆட்சிமுறையின் ஒரு

படித்தரமாக மாவட்ட சபைகள் ஏற்படுத்தப்பட்டன. குறிப்பிட்ட பொதுச் சேவைகள் வழங்குவதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டதன்மூலம் செங்குத்தான அதிகாரப் பகிர்வு ஏற்பட்டது.

எனினும், கூடிய அதிகாரப் பரவலாக்கல் ஆட்சிமுறையை அறிமுகஞ் செய்வதற்குப் பதிலாக, மாவட்ட சபைகளானது உள்ளூர் மட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிகார நிலையொன்றினை ஏற்படுத்திக் கொடுத்ததன்மூலம், அரசியல் அதிகாரப் பகிர்வினை நிறுவனமயமாக்கின. மத்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட மாவட்ட அமைச்சரை இந் நிறைவேற்றுக் குழுவின் தலைவராகவும், மாவட்ட சபையின் செயலாளராக அரசாங்க அதிபரை நியமித்ததன்மூலமும், பரவலாக்கப்பட்ட அரசியல் மற்றும் நிர்வாக அமைப்பு முறையில், மாவட்டம் இம்முறையில் மிகமுக்கியமானவொரு நிறுவனமாக மாறியது. எனவே, மாவட்ட அபிவிருத்தி சபைகள், உள்ளூராட்சி முறையின் அடிப்படையில் அமைக்கப்பட்டாலும், ஆணைக்குழுவினருக்கு ஜனாதிபதி கையளித்த கடிதத்தில் எதிர்பார்த்தவாறு "மாவட்ட நிர்வாகக் கைமாற்றலையும், அதிகாரப் பகிர்வையும்" கொண்டுவரத் தவறிவிட்டது.

இதன் அமுலாக்க அனுபவத்தில், அவிருத்தியைத் துரிதப்படுத்தும் ஒரு சாதனமாகவோ அல்லது அரசாங்கத்தின் ஒரு முக்கிய படியாக உள்ளூராட்சி முறையைக் கொண்டு வருவதற்கோ மாவட்ட சபைகள் தவறிவிட்டன. வடக்கிலும் கிழக்கிலும் ஏற்பட்ட மாவட்ட சுயாட்சிக் கோரிக்கையை நிறைவேற்றக்கூடியதாக இது அமையவில்லை. மத்திய ஆட்சியின் செல்வாக்குட்பட்ட அபிவிருத்தி நிர்வாக முறையொன்றினால், மக்களின் வாழ்வாதாரத் தேவைகளைப் பற்றிக் கவனிப்பதில் மாவட்டச் சபைகள் செயலிழந்தவையாயின. மக்கள் கலந்து கொள்ளும் ஜனநாயகம், ஜனநாயக அதிகாரப் பரவலாக்கல் அல்லது அதிகாரப் பகிர்வு என்பன பற்றிய பரிசோதனையில் மாவட்ட சபைகள் தோல்வியடைந்தன. 1987 ஆம் ஆண்டில் மாவட்ட சபைகள் நீக்கப்பட்டு அவற்றினிடத்துக்கு பிரதேச சபை எனும் புதிய முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. தொடர்ந்து நடைமுறையிலிருந்த மாநகர சபைகள், நகர சபைகள் என்பனவற்றோடு இதுவும் சேர்ந்து உள்ளூராட்சி முறையாக நடைமுறைக்கு வந்தது.

விதப்புரை

1. அதிகாரப் பரவலாக்கலின் அடுக்கு நிலையின் அடிமட்ட ஆட்சி முறையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, உள்ளூராட்சிச் சபைகள் எவ்வாறு ஜனநாயக ஆட்சியிலும் பிணக்குகளைத் தீர்ப்பதிலும் பங்காற்ற முடியும் என்பதனை ஆராய்தல்

8.2 அதிகாரப் பரவலாக்கலின் கீழான உள்ளூராட்சி முறை: பல்மட்ட நிலைமை

ஆட்சிமுறை ஏற்பாடாக மாவட்ட சபைகள் அமைப்புத் தோல்வியடைந்ததன் காரணமாக, தமிழ் மக்களிடையே வளர்ந்து வந்த பிராந்திய *நலன்களை உள்ளடக்குவதற்குத் தேவையான அதிகாரப் பரவலாக்கம் அவசியம்* எனும் நிலை உருவாகியது. அதிகாரப் பரவலாக்கமென்பது அரசியல், நிர்வாக மற்றும் வாரிய அதிகாரங்களைக் கொண்ட ஆட்சி எல்லைகளை உடையதாய்

அமைய வேண்டியிருந்தது. யாப்பின் 13ஆம் திருத்தத்தின்கீழ் (1987) ஏற்படுத்தப்பட்ட மாகாண சபைகள், தமது சட்டவாக்க, சட்ட நிறைவேற்று மற்றும் வாரிய அதிகாரங்களையுடையதாயமைந்து, உள்ளூராட்சி அமைப்பு முறையினை, நடைமுறையில் இல்லாது விட்டாலும், சட்டரீதியாகவேனும், பாரிய முறையில் மாற்றியது. இதன்மூலம் அரசாங்கத்தின் மூன்றாம்படித்தரமாக உள்ளூராட்சி அமைப்புக்கள் வந்தன. இவற்றிற்கு மேலதிக அதிகாரங்கள் எதுவும் வழங்கப்படாதபோதிலும், மாகாண சபையானது நியதிச் சட்டமொன்றை நிறைவேற்றுவதன்மூலம் அவற்றின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கான யாப்பு ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டிருந்தன.

மாகாண அட்டவணையின் 4ஆம் பிரிவான உள்ளூராட்சி என்பது மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கத்தைப் பின்வருமாறு வரையறுக்கின்றது:

4.1. அமைப்புமுறை, வடிவம் மற்றும் கட்டமைப்பு என்பன சட்டத்தினால் நிர்ணயிக்கப்படுவதைத் தவிர, உள்ளூர் ஆட்சிக்காகவும், கிராம நிர்வாகத்துக்காகவும், மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை என்பனவற்றின் அதிகாரம்.

4.2. சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட உள்ளூராட்சி அமைப்புக்களின் நிர்வாகத்தை மேற்பார்வை செய்தலும், அவற்றைக் கலைப்பதற்கான அதிகாரமும். (எனினும் கலைப்பதற்கான காரணங்கள் பற்றிய நீதித்துறை மருவிய விசாரணைகள், சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அதற்கான நிவாரண வழிமுறைகள், மற்றும் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள கணக்குப் பரிசோதனை முறைகளுக்கு உட்பட்டதாய் இது அமைதல் வேண்டும்).

4.3. நடைமுறையிலுள்ள சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை உள்ளூராட்சி அமைப்புக்கள் கொண்டிருக்கும். இவற்றிற்கு மேலதிக அதிகாரங்களை மாகாண சபை வழங்கலாம். ஆனால், அவற்றின் அதிகாரங்கள் எதனையும் பறிக்க முடியாது.

இவ்வாறு, உள்ளூராட்சி நிறுவனங்களின் (மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை) அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அதிகாரப் பரவலாக்கத்தின் ஒரு முக்கிய அம்சமாக இருப்பதோடு, அதிகாரப் பரவலாக்கத்தின் மூலமேற்படும் முப்படிமுறை ஆட்சியமைப்பின் முக்கிய பங்காளிகளாகவுமுள்ளன. இதன் மூலம், 13ஆவது திருத்தமானது நடைமுறையில் அதிகாரப் பரவலாக்க ஆட்சிமுறையில் இரு அரங்குகளை ஏற்படுத்தியது. மாகாண மற்றும் உள்ளூர் என்பனவே அவையாகும். உண்மையில் மாகாண சபைக்கு அப்பாலும், நினைத்தோ நினையாமலோ, உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அதிகாரம் பரவலாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கவொரு அம்சமாகும். ஏனெனில், உள்ளூர் மட்ட ஜனநாயகத்துக்கும் ஆட்சி முறைக்கும் தேவையான நிறுவன அமைப்பொன்றினை இது வழங்குகின்றது.

எனினும், 13ஆவது திருத்தமானது, தான் நிறுவிய பல்மட்ட ஆட்சிமுறையின் அமைப்பில் உள்ளூராட்சி சபைகளைப் புறக்கணித்ததுபோல் தென்படலாம். அதனால், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்குமிடையேயான உறவினை மாகாண நியதிச் சட்டங்களினால் ஒழுங்குபடுத்த வேண்டியதாயிருந்தது. பதின்மூன்றாவது திருத்தச்சட்டமானது மாகாண சபைகள் நிறைவேற்றும் நியதிச் சட்டங்களின்மூலம் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களை விரிவாக்குவதற்கு இடமளித்துள்ளது. ஆயினும், எந்தவொரு மாகாண சபையும் அவ்வாறு உள்ளூராட்சிகளின் அதிகாரங்களை விரிவாக்குவதற்கான நியதிச் சட்டம் எதனையும் இதுவரை நிறைவேற்றவில்லை. உண்மையில் அதிகாரப் பரவலாக்கத் திட்டத்தில் உள்ளூராட்சிகள் ஆதரவில்லாமல் விடப்பட்டதுபோல் தோன்றியது. நிர்வாக விடயங்களில் மாகாணத்துடனும், தேசியக் கொள்கை விடயங்களில் மத்தியுடனும் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது. ஆகையால் கொள்கைக்கும் நிர்வாகத்துக்குமிடையேயான எல்லைக் கோட்டினை மத்தியும், மாகாணமுமே தீர்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. உள்ளூராட்சி சபைகளின் சம்பந்தம் ஒரு சிறு பகுதியேயாகும்.

உள்ளூராட்சி அதிகாரங்களின் மேற்பார்வையினை 'மாகாண மயமாக்கியமை' அவற்றின் சேவை வழங்கல் உறவினை மாகாண சபையுடன் வளர்க்கவில்லை. மாகாணங்கள், பிரதேச செயலாக்கங்களினைத் தமது முகவராக்கிக் கொண்டனர். பரவலாக்கப்பட்ட அதிகார மாதிரியின் நிர்வாக அமைப்பானது சேவைகள் வழங்குதலில் பிராந்திய இணைப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதனால், மாவட்டச் செயலாளரின் (முன்னர் அரசாங்க அதிபர்) கீழான 'மாவட்டம்' ஆனது, இணைப்புக்களையேற்படுத்தும் அலகாக விளங்கியது. 1992ஆம் ஆண்டைய 52ஆம் இலக்க அதிகார இடமாற்றச் சட்டம் மூலமாக இவ்விணைப்புச் செயலானது பிரதேச செயலாளருக்கு மாற்றப்பட்டது. முன்னர் மாவட்டச் செயலாளரிடமிருந்த மத்திய அரசாங்கத்தின் பொறுப்புக்கள், தற்போது பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டன. அதே சமயத்தில், மாகாண சபையின் சில செயற்பாடுகளை அமுலாக்கும் பொறுப்பு, மாகாண ஆளுநரினால் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டது. இவ்விடத்திற் கவனிக்கப்பட வேண்டியது யாதெனில், உள்ளூராட்சிச் சபைகளின்மூலம் தமது பணிகளைச் செய்வதைவிட, பிரதேச செயலாளர்கள்மூலம் தமது பணிகளைச் செய்யவே மாகாண சபைகள் விரும்பின.

பல்-மட்ட அரசாங்க முறையின் கீழான மூன்றாம் மட்ட அமைப்பான உள்ளூர் ஆட்சியே ஜனநாயக ஆட்சிமுறையிலமைந்த அதிகாரப் பரவலாக்கலின் அங்கமாகும். மாகாண மட்ட அரசாங்க முறையொன்றினை ஏற்படுத்தியதன் நோக்கம், இதுகாலவரை தேசிய மட்டத்தில் பிரயோகிக்கப்பட்ட அதிகாரங்களைப் புதிதாக நிறுவப்பட்டுள்ள மாகாண ஆட்சி முறையுடன் அதிகாரப் பகிர்வு செய்து கொள்ளலாகும், ஆயினும், உள்ளூர் ஆட்சிமுறைகளைக் கொண்ட அடிமட்ட அரசாங்கத்தின் பங்கையும், செயற்பாடுகளையும் இது எடுத்துக் கூறத் தவறிவிட்டது. ஏற்கனவே நடைமுறையிலுள்ள சட்டங்களின் பிரகாரம் அவை தொடர்ந்திருந்தன. அத்துடன் அத்தகைய அதிகாரங்களை அதிகரிப்பதற்கான மறுபரிசீலனைகள் மாகாண

ஆட்சிகளிடம் விடப்பட்டன. அத்தகைய அதிகரிப்புக்கள் இன்னும் இடம்பெறவில்லை: இனிமேல்தான் நடைபெறவேண்டும்.

இதனாலேற்பட்ட விளைவு யாதெனில், அபிவிருத்திப் பணிகளிலும், ஜனநாயக ஆட்சியைப் பேணுவதிலுமான உள்ளூராட்சி அதிகாரங்களின் பங்கும் பணியும் பாதிக்கப்பட்டு, அரசாங்க அமைப்பு முறைகளின் உறவுகளிடையே பூஜ்ய நிலையொன்றினை ஏற்படுத்தியது. உண்மையில் பல்-மட்ட ஆட்சிமுறையை ஏற்படுத்தியதானது, ஏற்கனவே பன்முகப்படுத்தப்பட்டிருந்த பரவலான ஆட்சிமுறையின் மேல் அதிகாரக் கைமாற்ற ஏற்பாடொன்றை மேல் அதிகாரப் பரலாக்க ஏற்பாடொன்றைத் திணித்திருந்தது. இதன் காரணமாக ஒரே நேரத்தில் சுதந்திரமாக இயங்கும் மத்திய, மாகாண மற்றும் உள்ளூர் மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்படுவதற்கான நிறுவன வழியைத் தோற்றுவித்தது. இதனால் கீழ்மட்டத்தில் சிக்கலானதும், சிதறியதுமான ஆட்சிமுறையொன்றினை இது ஏற்படுத்தியது. உள்ளூர் மட்டத்திலான பொதுசன ஆட்சியானது அதன் நியாயாதிக்கம், செயற்பாடு மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றில் தெளிவில்லாமலிருந்தது. தனது சேவை முறைகளில் ஏற்படும் இரட்டைத் தன்மையைத் தீர்த்துக் கொள்ளல், இணைந்து செயற்படல், பொறுப்புக் கூறும் தன்மை என்பனவற்றிலான வழிமுறைகளிற் பலவீனமடைந்தது.

பொதுச் சேவைகள் வழங்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்த பலம் பொருந்திய நிறுவனங்களுக்கும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பலவீனமான நிறுவனங்களுக்கு மிடையேயான இரு கூறுகள் குடியேற்ற நாட்டாட்சிக் காலத்திலிருந்து வருகிறது. அதிகாரம் பொருந்திய பிரதான நிர்வாக அமைப்பின் கீழானவொரு அமைப்பாகவே பிந்தியது இயங்கி வந்துள்ளது. 13ஆவது திருத்தத்தின்மூலமும் மாகாண சபைகள்மூலமும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட சமமான பிரதான ஆட்சி முறையொன்று அமைக்கப்பட்டதனால், நிர்வாக முறையினதும் இருகூறுகள் வெளிச்சத்துக்கு வந்தது. அபிவிருத்திப் பணிகளுக்கான பொறுப்பினை அதிகாரமுடைய மத்திய அரசாங்க நிறுவனங்களுக்கு, பிரதானமாக மாவட்டச் செயலயகங்களுக்கும், பின்னர் பிரதேச செயலகங்களுக்கும் வழங்குவதே முக்கிய போக்காயிருந்தது. இதனால் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று வழக்கமாக உள்ளூர் மட்டங்களில் (துணைச் சேவைகள் தத்துவத்தின் பிரகாரம்) அமைந்துள்ள சேவைகளான நீர் விநியோகம், பொதுச் சுகாதாரம், மின்சாரம், பாதைகள் என்பன மத்திய ஆட்சியின் பொறுப்புக்களாயமைந்து, மாவட்ட அல்லது பிரதேச மட்டத்திலுள்ள அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதேச சபைகள் (1987) நிறுவப்பட்டதும், பிரதேச செயலாளரின் முன்னோடியான உதவி அரசாங்க அதிபர் (ஏ.ஜி.ஏ.), அப்பிரதேச சபையின் செயலாளராக நியமிக்கப்பட்டார். உண்மையில் பிரதேச சபையின் நிர்வாக அலுவல்களைக் கவனித்துக் கொள்பவராக உதவி அரசாங்க அதிபரை ஆக்குவதே இதன் நோக்கமாகும். பிரதேச செயலாளர்கள் (செல்வாக்குடைய இலங்கை நிர்வாக சேவையின் அங்கத்தினர்கள் இவர்களாவர்), சட்டத்தின் பிரகாரம் தாம் பிரதேச சபையின் பிரதம நிர்வாக அலுவலரான அதன் தவிசாளரின்கீழ் கடமைபுரிவதைப் பற்றிய

தமது சங்கடங்களை எடுத்துக் கூறியதன் காரணமாக இவ்வேற்பாடு கைவிடப்பட்டது. 1992ஆம் ஆண்டைய 52ஆம் இலக்க அதிகாரப் பரவலாக்கல் சட்டத்தின் பிரகாரம், மாவட்டச் செயலாளரிடம் பொறுப்பாக்கப்பட்டிருந்த அதிகார செயற்பாடுகள் பிரதேச செயலாளர்களுக்குக் கையளிக்கப்பட்டன. இதன் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேச சபையல்லாது, பிரதேச செயலாளரே, உள்ளூர் மட்ட நிர்வாகத்தினதும் மத்திய, மற்றும் மாகாணத் திட்டங்களை அமுல் செய்வதற்குமான பொறுப்புதாரியானார். அதிகாரப் பரவலாக்கல் சட்டம் அவரது அதிகாரத்தை இவ்வாறு வலுப்படுத்தியது முக்கியவொரு அம்சமாகும். 13ஆவது திருத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட வாய்ப்பினை அது வலுவிழக்கச் செய்தது.

யாப்பின் 13ஆவது திருத்தமானது பல் மட்டப் புதிய ஆட்சி முறையொன்றினை (மாகாண சபைகள் மற்றும் பிரதேச சபைகள்) அறிமுகப்படுத்தி ஏற்கனவேயிருந்த பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாக முறையின் மேலாகப் புதியதொரு அதிகாரப் பரவலாக்கல் முறையை ஏற்படுத்தியது. இவ்வமைப்புக்களிடையேயான பொறுப்புப் பகிர்வுகளிலேற்பட்ட தெளிவின்மையும், மாகாண சபைகள் சட்டத்தின் (1987) சில பகுதிகள் அமுல் செய்யப்படாமையினாலும், மாகாணங்களுக்குக் கையளிக்கப்பட்டதாகக் கருதப்படும் பல துறைகளில் மத்திய அரசு ஊடுருவுவதற்கான வாய்ப்பினை வழங்கின. இந் நிலைமையானது, சுதந்திரமாக இயங்கும் அதிகாரப் பகிர்வினையும் மறுபுறத்தில் பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாகத்தையும் கொண்ட இரட்டைத் தன்மையை ஏற்படுத்தி, அதன்மூலம் சிக்கலானதும், சிதைவடைந்ததுமான ஆட்சி முறையொன்றினைத் தோற்றுவித்தது.

13ஆவது திருத்தமானது (எட்டாம் அட்டவணையிற் குறிப்பிட்டது போன்று) ஒவ்வொரு மாகாணத்துக்கும் மாகாண சபைகளை நிறுவிய அதே நேரத்தில், உள்ளூராட்சிச் சபைகளின் மாகாண மற்றும் மத்தியுடனான இரு வழி உறவுகளையும் உறுதிப்படுத்தியது. உள்ளூராட்சிச் சபைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பு மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டாலும், உள்ளூராட்சிகளின் வகி பாகத்தையும், கடமைகளையும் அத்துடன் தேசத்தினதும் மற்றும் மாகாணங்களினதும் ஆட்சி முறையிலுள்ள 'உள்ளூர்' அக்கறைகளையும் திசை திருப்ப முடியாது. எனினும், உள்ளூர் மட்டத்தில் பிரதேச செயலாளர் மூலம் பரவலாக்கப்பட்ட நிர்வாக அமைப்பினைத் தொடர்ந்து வைத்திருத்தல் காரணமாக, உள்ளூர் ஜனநாயகம் செயலற்று அதனாற் பல முரண்பாடுகளும், சச்சரவுகளும் ஏற்படுகின்றன.

விதப்புரைகள்

1. பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி சபை என்பன அவை வழங்கும் சேவைகளைப் பொறுத்தவரை அவற்றின் வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் தெளிவாக்குதல்.
2. மாகாண சபைகள் தமது உள்ளூர் உட்கட்டமைப்பு, கிராம அபிவிருத்தி, சமூக சேவைகள், பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான சேவைகள், சூழல் போன்றனவற்றை வழங்குவதற்கு பிரதேச சபைகளைத் தமது முகவர்களாக உபயோகிக்கும் வண்ணம் ஏற்பாடுகளைச் செய்தல்.

3. மத்தியினால் நிதி வழங்கப்படும் உள்ளூர் உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களைப் பிரதேச சபைகள்மூலம் நிறைவேற்றுவதோடு குறிப்பிட்ட உள்ளூராட்சி சபையின் வருமானத்தின் ஒரு பகுதியாக அதற்குரிய நிதிகளையும் வழங்குதல்.

8.3 உள்ளூர் ஆட்சிச் சபைகளின் வகிபாகமும், கடமைகளும்: உள்ளூர் சேவைகளை வழங்குவதிலுள்ள நிலைமைகளும் தாற்பரியங்களும்

உள்ளூர் ஆட்சிகள் மூன்று சட்டங்களின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ளன. 1937 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், 1939 ஆம் ஆண்டைய 61ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டம், 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் என்பனவே அவையாகும். "பிரமாணங்கள், கட்டுப்பாடு மற்றும் நிர்வாகம்" என்பன தொடர்பான நடைமுறை வகிபாகத்தையும், பொறுப்புக்களையும் இச்சட்டங்கள் விளக்குகின்றன. இச்சட்டங்களினால் உள்ளூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையானது அவற்றின் கடமைகளையும், அனுமதிக்கப்பட்ட அதிகாரங்களையும் தெளிவுபடுத்துகின்றன. உள்ளூராட்சிகளின் குறித்துரைக்கப்பட்ட கடமைகளானது, அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட செயல்கள் வரை நீண்டு செல்வதோடு, அச்சட்டங்களின்கீழ் அவற்றை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு எதிர்பார்க்கப்படும் சேவைகள் பொதுச் சுகாதாரம், பொதுப் பாதைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் எனும் மூன்று முக்கிய துறைகளைச் சேர்ந்தவையாகும். உள்ளூராட்சிகள் தமது கடமைகளைச் செய்வதற்குத் தேவையான துணைவிதிகளை இயற்றுவதற்கான அனுமதியுண்டு.

நகர சபைகளின் கடமைகள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன:

அ) சபைக்கு உரித்தான அல்லது அதன் பராமரிப்புக்கான பொறுப்புக் கொடுக்கப்பட்டுள்ள பொதுப் போக்குவரத்துப் பாதைகளையும், திறந்த வெளிகளையும் பராமரித்தலும், சுத்தமாக வைத்திருத்தலும்.

ஆ) எல்லாத் தனிப்பட்ட பாதைகளையும் பராமரித்தல், சுத்தமாக வைத்திருத்தல், பழுது பார்த்தல் என்பவற்றைச் செய்விப்பதை உறுதிப்படுத்தல்.

இ) வீதிகளைத் திட்டமிடுதலும் அகலமாக்குதலும், திறந்த வெளிகளைப் பிரத்தியேகமாக ஒதுக்கி வைத்திருத்தல் மற்றும் பொது வசதிகளை மேம்படுத்தல் என்பனவற்றின் மூலம் நகரத்தின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஆவன செய்தலும், மேற்பார்வை செய்தலும்.

ஈ) பொதுமக்களுக்கான அசௌகரியங்களை இல்லாமலாக்குதல்.

உ) கட்டளைச் சட்டத்தின் கீழ் சபை நிர்வகிக்குமாறு அனுமதிக்கப்பட்டுள்ள பொது வசதிகள் எதனையும் ஏற்படுத்துதலும் அதனை நிர்வகித்தலும்.

(நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 35ம் பகுதி)

பிரதேச சபைகளுக்குரிய கடமைகள் மேலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. பொதுப் பூங்காக்கள், வெளிகள், பொதுப்பாதைகள், வீதிகள், கால்வாய்கள், பாலங்கள், வீதிவிளக்குகள், பொதுச் சந்தைகள், பொதுக் கட்டிடங்கள் என்பன உள்ளிட்ட உள்ளூராட்சிச் சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்துச் சொத்துக்களையும் பராமரித்தல் இதனுள் அடங்கும். பொதுச் சுகாதாரம், வீட்டுத் திட்டங்கள், அனர்த்த நிவாரணம், உள்ளூராட்சி உட் கட்டுமானங்கள், விவசாய பரிசோதனைகள், சமய மற்றும் கலாசார மேம்பாடு, தொழில் வழங்கும் திட்டங்கள், கிராமப் பெண்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்தல், தேர்ந்தெடுத்த கிராமங்களின் ஒருங்கிணைந்த அபிவிருத்தி, சமூக அபிவிருத்தித் திட்டங்கள், ஏழைகளுக்கு நிவாரணம் வழங்கல் என்பனவற்றுக்காகப் பணம் செலவழிக்கும் அதிகாரம் என்பன பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. (பிரதேச சபைகள் சட்டத்தின் 18, மற்றும் 19ம் பிரிவுகள்)

இவ்வித ஆணையைப் பிரதேச சபைகள் சட்டம் அதன் முன்னுரையிற் பின்வருமாறு கூறுகிறது: "உள்ளூர் மட்டத்திலான நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் தீர்மானங்களைச் செய்யும் விடயத்தில் மக்களும் செயற்றிறன் மிக்க முறையில் பங்குபற்றுதவற்கான அதிக வாய்ப்புக்களை வழங்குவதை நோக்காகக் கொண்டு பிரதேச சபைகளை ஏற்படுத்துவதற்கான ஒரு சட்டம்." பிரதேச சபைச் சட்டத்தின் இம் முன்னுரையினை நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் முன்னுரையான "உள்ளூர் ஆட்சியை நோக்காகக் கொண்டு நகர சபைகளை நிறுவுவதற்கான வழிவகுக்கும் ஒரு கட்டளைச் சட்டம்" என்பதுடன் ஒப்பிடலாம். எனவே, மக்களின் பூரண பங்குபற்றுதலை நோக்காகவும் அத்துடன் சுற்றுச் சூழல், பொது உட்கட்டுமானங்கள் மற்றும் பொதுச் சேவைகள் எனும் நோக்கிலிருந்து விலகி தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் வறுமையைக் குறைத்தல் என்பனவற்றை ஏற்படுத்தக் கூடிய அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு உள்ளூராட்சி முறையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனும் பிரதேச சபைகள் சட்டத்தின் நோக்கம் உள்ளூராட்சி சபைகளினால் கவனத்திற்கு எடுக்கப்படவில்லை. அதனால் உள்ளூராட்சி சபைகளின் பிரதான பணிகள் சூழலைப் பற்றியும் சமூக சேவைகள் பற்றியுமாகவே உள்ளன.

உள்ளூராட்சி அதிகாரங்கள் தமக்கு ஆணையிடப்பட்டுள்ள உள்ளூர் சேவைகளை வழங்குவதற்கான திட்டமிடல் பணிகளில் செயற்பட வேண்டும். உண்மையில் தமக்குள்ள மூலவள வசதிகளைக் கொண்டு தமது வரவுசெலவுத் திட்டத்தின்மூலம் தமது திட்டங்களைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் "நடைமுறைப்படுத்தும் திட்டங்களை" அவர்கள் தயாரித்தல் வேண்டும் எனும் நிபந்தனை இருந்தாலும், அவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை உள்ளூராட்சிகள் தயாரிப்பதில்லை. எனினும், நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் என்பன, குறிப்பிட்டு ஒதுக்கப்பட்ட முதலீட்டு செலவீனக் கூற்றுக்களாகும்: எதிர்கால செலவுத் திட்டங்களிலுள்ள முன்னுரிமை பற்றிய ஒரு திட்டமல்ல. வரவு - செலவுத் திட்டத்தில் காட்டப்படாத சில மூலதனச் செலவுகள் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களில் பதிவாகக் காட்டப்படும் எனும் காரணத்திலான, இத்தகைய நடைமுறைப்படுத்தும் திட்டங்களைத் தயாரித்தல் அரசியல் ரீதியாக உற்சாகப்படுத்தப்படுவதில்லை.

உள்ளூராட்சிகளின் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டலும் பொறுப்பும் மத்திய சட்டங்களான 1978ஆம் ஆண்டைய 41ஆம் இலக்க நகர அபிவிருத்திச் சட்டத்திலும் மற்றும் வீடுகள், நகரங்கள் அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்திலும் கூறப்பட்டுள்ளன. இதனால், உள்ளூராட்சி பற்றிய ஜனாதிபதி ஆணைக் குழுவானது (1999) நகர அபிவிருத்திக் கொள்கையொன்றினை நடைமுறைப்படுத்தும்போது உள்ளூராட்சிகளின் வளங்களையும் சக்தியையும் உபயோகப்படுத்தி தேசிய நகர அபிவிருத்தித் திட்டம், நகர அபிவிருத்தி அதிகார சபையினாலும் மற்றும் நகர, தேச திட்டமிடல் திணைக்களத்தினாலும் நடைமுறைப்படுத்தப்படும் எனக் கூறுகின்றது: எனவே நகர அபிவிருத்திக் கொள்கையானது உள்ளூராட்சிகளின் திட்டங்களையும் வெளிப்படுத்துதல் வேண்டும்.

நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் முன்னுரை அச்சட்டத்தின் நோக்கங்களைப் பின்வருமாறு கூறுகின்றது. "அமைச்சர்களினால் நகர அபிவிருத்திப் பிரதேசங்கள் எனப் பிரகடனப்படுத்தப்படும் சில பிரதேசங்களின் ஒருங்கிணைந்த திட்டங்களை ஊக்குவித்தலும் அவற்றின் பொருளாதார, சமூக வசதிகள் அபிவிருத்திகளை அமுல் செய்வதுமாகும்." மாநகர மற்றும் நகர சபைப் பிரதேசங்கள் அனைத்தும் நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்திற்கு உட்பட்டவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோடு தேர்ந்தெடுக்கப்பட்ட சில பிரதேச சபைப் பகுதிகளும் அமைச்சரின் அங்கீகாரத்தோடு அதற்குட்பட்டதாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய பிரதேசங்களில் உட்கட்டுமானப் பணிகளைத் திட்டமிடும்போது, வீடுகள் மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை உபயோகித்தல் அவசியமாகும். உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களை எவ்வாறு நோக்கினும் அதற்கான தகுதியும் வல்லமையும் உள்ளூராட்சிகளை விட மத்திய அரசிடமே தங்கியுள்ளது. எனினும், அத்தகைய திட்டங்களைச்- சில பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளில் தயாரிக்கும்போது, உள்ளூராட்சியின் ஒத்துழைப்பினையும் பெற்றுக் கொள்ள வேண்டும் எனச் சட்டம் கூறுகின்றது. எனவே, உள்ளூராட்சிப் பௌதீகத் திட்டமிடுதல் என்பது மத்திய ஆட்சிக்கும் உள்ளூராட்சிக்கும் இடையேயான ஓர் கூட்டுப் பணியென்றே கொள்ளப்பட வேண்டும்.

தற்போது உள்ளூராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த சில கடமைகள் அரசாங்கத்திற்குச் சொந்தமான நியதிச் சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதனால், தமது குடிமக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குவதற்கு உள்ளூராட்சிகள் இந் நியதிச் சபைகளின் மேல்தங்கியிருக்க வேண்டியுள்ளது. இவ்வாறு தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சார சபை, பொது வசதிகள் சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை என்பன யாவும் உள்ளூராட்சிச் சபைகளின்மூலம் மக்களுக்குச் சேவைகளை வழங்கும் மத்திய அரச நிறுவனங்களாகும். இவைகள் மத்திய அரசாங்கத்தின் நிறுவனங்கள் என்ற காரணத்தினால் அவற்றின் கொள்கைகளும், செயற்திட்டங்களும், முகாமைத்துவமும் மத்திய அரசின் நலனைக் கருத்திற் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன. அதனால், பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் செல்வாக்கு

உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களினதும், அங்கத்தினர்களினதும் செல்வாக்கினை விட மிக அதிகமாகும்.

அதே வேளையில் வீடமைப்பு, சமூக சேவைகள், அனர்த்த நிவாரணம், இளைஞர் பெண்கள் மற்றும் சிறுவர்கள் நலன், சமய மற்றும் கலாசார அலுவல்கள் போன்ற சில துறைகளில் உள்ளூராட்சிகள் ஈடுபட்டுள்ளன. ஆயினும், இவ் விடயங்களில் மத்திய அரசாங்க நிறுவனங்களும் ஈடுபாடு கொண்டுள்ளன. எனவே உள்ளூராட்சிகளுக்கு வழங்கப்பட்ட ஆணைகளுள் சிலவற்றை மத்திய அரச நிறுவனங்கள் சுவீகரித்துக் கொள்ளும் அதே வேளையில், வேறு சில விடயங்களில் மத்திய மற்றும் மாகாண நிறுவனங்கள் அவற்றினை ஒன்றுக்கு மேற்பட்டோர் கையாளும் சூழ்நிலையை ஏற்படுத்துகின்றன. மத்திய அரசாங்க நிறுவனங்கள் உள்ளூர் உட்கட்டுமானங்களில் நேரடியாகவோ அல்லது பிரதேச செயலகம் மூலமாகவோ பணத்தைச் செலவிடும் போக்கு அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இத்தகைய செலவினங்கள் உள்ளூராட்சிச் சபைகளின்மூலம் ஆற்றுப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில்கூட, இந் நிதி என்ன நோக்கங்களுக்காக செலவழிக்கப்படுகிறதோ அது சம்பந்தமான தீர்மானங்களைச் செய்யும் உரிமையும் உள்ளூராட்சிச் சபைகளுக்குக் கிடையாது. விசேடமாக, பாராளுமன்ற அங்கத்தினர்களால் அவர்களது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கிட்டின்கீழ் செய்யப்படும் செலவுகள் தொடர்பான தீர்மானங்கள் அனைத்தும் உள்ளூராட்சி சபைகளின் வரவு - செலவுத் திட்ட நடைமுறைகளுக்கு வெளியிலேயே செய்யப்படுகின்றன. இவ்வாறு பெருந் தொகையான உள்ளூராட்சிச் செலவு சம்பந்தமான தீர்மானங்கள் அச்சபைகளின் வரவு - செலவுத் திட்ட நடைமுறைக்கு வெளியிலேயே செய்யப்படுகின்றன.

விதப்புரைகள்

1. நடுத்தரமான சேவை வழங்கல் திட்டங்களைத் தயாரிக்குமாறு உள்ளூராட்சி சபைகளை வேண்டுதல்
2. உள்ளூராட்சி சபைகளின் சேவை வழங்கல் பொறுப்புக்களை, அவை துணையானவை எனும் அடிப்படையில் மறுபரிசீலனை செய்து அவற்றினை நிலை நாட்டுதல்.

8. 4 நிர்வாக உறவுகள்: பல்மட்ட ஆட்சி முறையின் கீழ் புறக்கணிக்கப்படல்

உள்ளூராட்சிச் சபைகள் அதிகரித்து வரும் போட்டி நிரம்பிய, மத்தியப்படுத்தப்பட்ட அரசியல் சூழ்நிலையில் இயங்கி வருகின்றன. அத்துடன் சேவை வழங்கல் நடவடிக்கைகளில் ஒதுக்கப்பட்ட கணிசமான பொறுப்புக்களுக்கு வேறாக தேசியக் கொள்கை நடவடிக்கையொன்றினை 13ஆவது திருத்தம் உருவாக்கியது. அதனால் மத்தியப்படுத்தப்பட்ட நிர்வாக ஆட்சியின்கீழ் உள்ளூராட்சிகள் இயங்க வேண்டியுள்ளன.

"உள்ளூராட்சியின் யாப்பு, வடிவம் மற்றும் அமைப்பு என்பன சட்டத்தினால் நிர்ணயிக்கப்படல் வேண்டும்" என யாப்பின் பிரமாணம் விசேடமாக ஒதுக்கி வைத்துள்ள காரணத்தினால், உள்ளூராட்சி அமைச்சினால் பிரயோகிக்கப்படும் வகையில் இக் கடமைகள் மத்திய அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் உள்ளூராட்சி அமைப்பில் திருத்தங்களைச் செய்வது மத்திய அரசாங்கத்தின் பொறுப்பாகும். மத்தியில் இதற்கான அமைச்சு ஒன்றை ஏற்படுத்தியதன்மூலம் உள்ளூராட்சி நிர்வாகத்தினை மாகாண மட்டத்தில் மேற்பார்வை செய்வதற்கு முற்றிலும் வேறுபட்ட வகையில் மத்திய அரசாங்கமும் இதில் பங்குகொள்ளும் வகிபாகத்தினை இது ஏற்படுத்தியுள்ளது. 13ஆவது திருத்தம் அதன் ஒதுக்கி வைக்கப்பட்ட அட்டவணையின்கீழ் "எல்லா விடயங்கள் மற்றும் பணிகள் தொடர்பான தேசியக் கொள்கை" என்பதனை பிரத்தியேகமாக ஒதுக்கி வைத்தல் காரணமாக உள்ளூராட்சியின் மேலான மத்தியிலுள்ள உள்ளூராட்சி அமைச்சின் வகிபாகமும் செயற்பாடுகளும் மேலும் வலுப்பெறுகின்றன. இதன் விளைவாக, உள்ளூராட்சி முறையில் திருத்தங்கள் செய்வதுமூலமாக மட்டுமல்லாது தனிப்பட்ட உள்ளூராட்சி சேவை வழங்கல்மூலமாகவும் கூட்டாகவும் தனித்தனியாகவும் மத்திய அரசு தலையிடும் நடைமுறை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

மத்திய அரசுக்கும் மாகாணங்களுக்கும் இடையேயான அதிகாரப் பங்கீட்டு வரையறைகள் பின்பற்றப்படவில்லை. இது தொடர்பான ஒரு சம்பவ உண்மையில் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். உள்ளூராட்சி சபை அங்கத்தினர்களின் பதவிக் காலத்தை ஒரு வருடத்தால் குறைப்பதற்கு அல்லது நீடிப்பதற்கான அதிகாரத்தினை உள்ளூராட்சி சபைகள் தொடர்பான சட்டங்கள் "அமைச்சருக்கு" வழங்கியுள்ளன. மாகாண சபைகளினால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூராட்சி நியதிச் சட்டங்களின் பிரகாரம் "அமைச்சர்" என்பவர் உள்ளூராட்சிக்கான மாகாண அமைச்சர் ஆயினும், மத்திய அரசாங்கத்தின் உள்ளூராட்சி அமைச்சரினால் இவ்வதிகாரங்கள் பிரயோகிக்கப்பட்டு உள்ளன. மாகாண நியதிச் சட்டங்களில் கூறப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளைக் கலைத்தலுக்கான அதிகாரம் மாகாண அமைச்சரினால் பிரயோகிக்கப்படுகின்றது. மத்திய அமைச்சர் பல சந்தர்ப்பங்களில் உள்ளூராட்சி சபை அங்கத்தினர்களின் பதவிக் காலத்தை மட்டுப்படுத்த அல்லது நீடிப்பதற்கான அதிகாரத்தினை எவ்வித ஆட்சேபனையுமின்றிப் பிரயோகித்துள்ளார்.

யாப்பிற்கான 13ஆவது திருத்தம் பல நிறைவேற்று அதிகாரங்களை மாகாண சபைகளுக்குப் பொறுப்பு மாற்றிக் கொடுத்திருக்கிறது. இவை தொடர்பாக மாகாண சபைகள் நியதிச் சட்டங்களை இயற்றலாம். உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் விடயமானது மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவை தொடர்பான சட்டங்களின்கீழ் இவ்வதிகாரங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான ஓர் அமைச்சரையும் ஓர் ஆணையாளரையும் கொண்ட உள்ளூராட்சித் திணைக்களங்கள் ஒவ்வொரு மாகாண சபையிலும் ஸ்தாபிக்கப்பட்டன.

மாகாண ஆட்சி முறையினை அறிமுகஞ் செய்த காரணத்தினால் மத்தி, மாகாணம் மற்றும் உள்ளூர் மட்ட நிர்வாக உறவுகள் தொடர்பாக மேலெழும்பிய ஒரு விடயம் யாதெனில், உள் உள்ளூராட்சிக்குரிய அலுவலர்களை நியமிப்பது தொடர்பானதாகும். மாகாண சபைகளை ஸ்தாபிப்பதற்கு முற்பட்ட காலத்தில் அமைச்சர் ஒருவரையும் ஆணையாளர் ஒருவரையும் கொண்ட மத்திய அரசாங்கத்தின்கீழான உள்ளூராட்சித் திணைக்களத்தின் சட்ட மேற்பார்வையின்கீழ் உள்ளூராட்சி சபைகள் இயங்கின. உள்ளூராட்சி சபைகள் அலுவலர்களின் நியமனம் சட்டத்தினால் வரையறுக்கப்பட்டிருந்ததோடு உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவினாலும் 1945ஆம் ஆண்டைய 43ஆம் இலக்க உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுக் கட்டளைச் சட்டத்தினால் நிறுவப்பட்ட உள்ளூராட்சி சேவை திணைக்களத்தினாலும் ஒழுங்குபடுத்தப்பட்டன. இச்சட்ட ஏற்பாடுகள் உள்ளூராட்சி சேவையை "மூடிய" சேவையாக மாற்றியது. இதன் அலுவலர்களை இச்சேவையின் உள்ளே மட்டும் இடமாற்றம் செய்யலாம். அவர்கள் எவரையும் வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்ய முடியாது. அங்கிருந்து எவரையும் இதனுள் கொண்டு வரவும் முடியாது. இச்சேவை இரு வகைகளைக் கொண்டிருந்தது. பிரதான பதவிகள் "நிரல்படுத்தப்பட்டவை" என சட்டத்தின்கீழ் அமைந்திருந்தன. ஓரளவு தொழில்நுட்பத் தன்மையுடைய ஏனைய பதவிகள் நிரல்படுத்தப்படாமல் அவை "நிரல்படுத்தப்படாதவை" என அழைக்கப்பட்டன.

கடந்த காலங்களில் இலங்கை சிவில் சேவை இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒன்று, பொதுச் சேவை: அடுத்தது உள்ளூராட்சி சேவை: இவற்றுக்கு உத்தியோகத்தர்கள் வெவ்வேறாகத் தெரிவு செய்யப்பட்டுப் பயிற்றப்பட்டனர். பொதுச் சேவை ஆணைக்குழுவும் உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவும் இவ்விரண்டையும் வெவ்வேறாக மேற்பார்வை செய்தன. உத்தியோகபூர்வமாக இரு சேவைகளும் சமமானவை எனக் கொள்ளப்பட்டாலும் உள்ளூராட்சி சேவையை விட பொதுச் சேவை உயர்ந்ததாகக் கருதப்பட்டது. இந்நிலைமையானது 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தினால் மாற்றப்பட்டது. இச் சட்டம் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு மாகாண பொதுச் சேவையை அறிமுகம் செய்தது.

மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டதும் உள்ளூராட்சிகளின் அனைத்து அலுவலர்களும் அந்தந்த மாகாண அரச சேவைகளுக்கு உள்வாங்கப்பட்டனர். மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் உள்ளூராட்சி அலுவலர் தொடர்பான அதிகாரங்களை ஒப்பெடுப்பதற்குத் தேவையான நியதிச் சட்டங்களை மாகாண சபைகள் இயற்றியதோடு உள்ளூராட்சி சேவைகள் ஆணைக்குழுச் சட்டம் செயற்பட முடியாமல் போய்விட்டது.[1] இதன்மூலம் உள்ளூராட்சி அலுவலர்கள் மாகாண பொதுச் சேவையினுள் உள்வாங்கப்பட்டு அவர்களது நியமனம், இடமாற்றம், பதவியேற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு என்பன அதன் மேற்பார்வையின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. இதனால் உள்ளூராட்சி அதிகாரிகள் தனிப்பட்ட வகையினர் எனும் முறையானது நீக்கப்பட்டு உள்ளூராட்சி முறைக்கு வெளியாலும், ஆனால் மாகாண பொதுச்சேவைக்குள் மட்டும் இவர்கள் இடமாற்றம் செய்யப்பட முடியும்

என்பது நடைமுறைக்கு வந்தது. இதன் விளைவாக நிபுணத்துவம் பெற்ற உள்ளூராட்சி உத்தியோகத்தர்கள் அவற்றினை விட்டுப் பெருந்தொகையாக வெளியேறினர்.

இதனால் ஏற்பட்ட மாற்றம் பாரதூரமான ஒன்றாகும். தேசிய மட்டத்தில் உள்ளூராட்சி சேவையில் இருந்த நிர்வாகத் தரத்து உத்தியோகத்தர்கள் இலங்கை நிர்வாக சேவையினுள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மாகாண மட்டத்தில் ஏனைய எல்லா உள்ளூராட்சி உத்தியோகத்தர்களும் மாகாண பொதுச் சேவையினுள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதன் மூலம் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு இவர்கள் உட்பட்டதோடு உள்ளூராட்சி சபைகளுக்கிடையே இடமாற்றப்படக் கூடியவர்களாகவும் மாறினர். இதனால் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கான சட்டதிட்டங்கள், உள்ளூராட்சி சபைகளின் முன்னைய உத்தியோகத்தர்களுக்கும் பிரயோகிக்கத்தக்கதாகும்.

நாட்டின் பொதுச் சேவையானது, இதன்மூலம் தேசிய மற்றும் மாகாண அமைப்பு என இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டது. தேசிய ஊழியர் அமைப்பு என்பது "அகில இலங்கை" சேவை எனவும் திணைக்களச் சேவைகள் எனவும் வகுக்கப்பட்டது. மத்திய அரசின் கொள்கைப் பிரகடனத்தின்படி, மாகாண பொதுச் சேவைகளின் நடுத்தரத்திலிருந்து சிரேஷ்ட தரம் வரையிலான அலுவலர்களை அகில இலங்கை சேவைகளே வழங்கின. தேசிய அதிகாரத்தின்கீழ் அகில இலங்கை சேவைகள் இயங்கி வருகின்ற காரணத்தினால் உள்ளூராட்சிகள் மாகாண சபைகளின்மூலம் நடுத்தரத்திலிருந்து சிரேஷ்ட தரம் வரையிலான ஆளணிகளைப் பெறுவதற்கு மத்திய ஆட்சியிற் தங்கியிருக்கத் தொடங்கின. மத்திய, மாகாண, உள்ளூராட்சி அலுவலர்கள் தொடர்பான பிறிதொரு அம்சம் மத்தியினதும், மாகாணத்தினதும், உள்ளூராட்சி ஆளணிகளின் மேலுள்ள கட்டுப்பாடாகும். மாகாண மட்டத்திலும் உள்ளூராட்சி மட்டத்திலும் வருவாய்க்கும் செலவுக்கும் இடையேயான இடைவெளியை நிரப்புவதற்காக மத்திய அரசு மேற்கொள்ளும் நிதி வழங்குதல் திட்டம் தொடர்பாக மாகாண மற்றும் உள்ளூராட்சிகள் ஆளணிகளை நியமிப்பதில் மத்திய அரசு பூரண கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இதன்மூலம், மாகாண சபைகள் தாம் செய்யும் மாகாண பொதுச் சேவைக்கான நியமனங்கள் அனைத்திற்கும் மத்தியிலுள்ள நிதியமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். இதற்காக உள்ளூராட்சி சபைகள் ஆளணிகளுக்கான தமது "வேண்டுகோள்களை" உள்ளூராட்சி

---

[1] All provinces passed "Local Authorities (Staff) Statutes" in 1991 "To make provision for the absorption of the Local Government Service employees to the Provincial Public Service ....., to enable members of the Provincial Public Service ....., to be made available to Local Authorities... ." Thus, the appointment, transfer, release, retirement, abolition of post, retirement and disciplinary control of any member appointed to a Local Authority was vested in the Provincial Public Service Commission. Further it was made a term and condition of every officer appointed to the Provincial Public Service that his services may be made available to any Local authority within the Province at the request of such authority for such periods as may be deemed by the Provincial Public Service Commission of the Province.

ஆணையாளர்மூலம் மாகாணத்திலுள்ள ஆளணி மற்றும் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிப் பிரதம செயலாளருக்குச் சமர்ப்பித்து, அவர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட சேவைகளில் ஆட்குறைப்புச் செய்வதற்கும் இத்தகைய அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும்.

நியமனங்கள் தொடர்பான இத்தகைய மத்திய - மாகாண உறவுகளின்மூலம் மாகாண மனிதவள முகாமைத்துவப் பணியினுள் புதிய ஒருவரையும் கொண்டு வருகின்றது. உள்ளூராட்சி அலுவல்களின் தேவைகளைப் பெறுவதற்காக மத்தியின் அங்கீகாரத்திற்காகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் பொறுப்பானவர்கள் நிர்வாக மற்றும் ஆளணிக்குப் பொறுப்பான பிரதிப் பிரதம செயலாளரே அவராவர். இதன்விளைவாக, மாகாணத்திற்கான அலுவலர்களை நியமிக்கும் பொறுப்பானது, மத்திய அங்கீகாரத்தைப் பெறுவதிலும், அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரை ஆட்சேர்ப்பதிலும் உள்ள கடமைகள், நிர்வாகத்திற்கும், ஆளணிக்கும் பொறுப்பான பிரதிப் பிரதம செயலாளரிடையேயும் மாகாணப் பொதுச் சேவை ஆணைக் குழுவினரிடையேயும் பிரிக்கப்படுகின்றது. இதன் பிரகாரம், தமது உத்தியோகத்தர் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இவ்விரு மாகாண அதிகாரிகளுடனும் உள்ளூராட்சி சபைகள் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறு ஆளணிகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறையில் பல்வேறு நிறுவன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள காரணத்தினால், உள்ளூராட்சி சேவைகளைத் திறம்பட நடத்தத் தேவையான தொகையும் தரமும் கொண்ட மனித வளங்களைப் பெற்றுக் கொள்வதில் பல இடையூறுகள் உள்ளன. மனித வளங்களைப் பெறுதல் தொடர்பாக அதிகாரப் பரவலாக்கல் முறை செயற்படும் விதத்தினால், மாகாணங்கள் அம்மனித வளங்களைப் பெறுவதற்கு மத்திய அரசில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. ஆளணியினை மத்திய அரசு தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதானது, உள்ளூராட்சி மட்டத்தில் அலுவலர்களுக்கான செலவினைத் திறமையாக முகாமைத்துவம் செய்வதில் பிரச்சினை ஒன்றைத் தோற்றுவிக்கின்றது. இரு விடயங்கள் இங்கு கரிசனைக்குட்படுகின்றன. அவற்றுள் அடிப்படையானது, சேவைகளை வழங்குவதற்கான வளங்களைத் திறமையாக முகாமைத்துவம் செய்வதற்குப் போதிய ஆளணிகளை உறுதிப்படுத்துவது பற்றியதாகும். உள்ளூர் மட்டத்தில் இந்நியமனங்கள் அரசியல் அழுத்தங்களுக்கு உட்பட்டு இந்நியமன அதிகாரங்கள் திறமையான சேவை வழங்கல்களை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அரசியல் செல்வாக்கினை அதிகரிப்பதற்கு உபயோகிக்கப்படலாம் எனும் எண்ணப்பாங்கு உண்டு. எனவே பதவி நிலைகளையும் அவற்றின் எண்ணிக்கைகளையும் தீர்மானிக்கும் வரவு - செலவுத் திட்டக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாதவிடத்து உள்ளூராட்சி அலுவலர்களை நியமிப்பது வழிதவறிப்போய் விடும்.

உண்மையில் உள்ளூராட்சி சபைகளில் நியமனங்கள் செய்வதில் நினையாப் பிரகாரமாக ஏற்பட்ட ஒரு சம்பவம் இதுவாகும். சம்பளங்களை வழங்குவதற்காகப் பொது வருமான மானியம் ஒன்றுக்கு அவ்விடயத்திற்கென்றே பணம் கொடுப்பதற்கு வேறாக உள்ளூராட்சி சபைகளுக்கான நிதிமாற்றத் திட்டம்

மாற்றி அமைக்கப்பட்டதோடு, தமது பணியாளர்களை நியமிப்பதற்கான தற்றுணிபு அதிகார சலுகை எவ்வாறு வழங்கப்பட்டுள்ளது என்றால், அவ் உள்ளூராட்சி சபை அதனது பணியாளர்களுக்கான சம்பளங்களை அது ஏற்றுக் கொள்ளுமானால் நியமனங்களைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆளணி மீதான மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாடு தம்மை மிகவும் கட்டுப்படுத்துவதாகவும் தமது சேவை வழங்கலைப் பாதிப்பதாகவும் உள்ளூராட்சியாளர் வாதிடுகின்றனர். அவ்வாறான கட்டுப்பாடுகள் அளவுக்கு அதிகமாக இருப்பதினால் சில வேளைகளில் இறப்பு, ஓய்வு பெறுதல், இடமாற்றம் போன்றவற்றினால் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி பெறப்படல் வேண்டும் என்பன போன்றவை சில உள்ளூராட்சி சபைகள் தமது பதவி அணிகளை நிரப்புவதில் சில கட்டுப்பாடுகளைத் தோற்றுவிக்கலாம். ஆயினும், தமது சேவைகளை விரிவுபடுத்தும்போது ஏற்படுகின்ற உண்மையான ஆளணித் தேவைகளை நிரப்புவதில் இது பாதிப்பினை ஏற்படுத்துகிறது. இதைவிட முக்கியமாக, எதிர்பார்க்கப்பட்டவாறு ஆட்சேர்ப்பு முறைகளை முறையாக மறுபரிசீலனை செய்யும் நடவடிக்கை நடைபெறவில்லை. இதன் விளைவாக சில உள்ளூராட்சிகள் தன்னிச்சையாக வழங்கிய சில பதவிகள், சேவைகளை வழங்கும் நோக்கத்திற்குப் பதிலாக உத்தியோகம் வழங்குதலையே நோக்கமாகக் கொண்டிருந்தன. அதனால், ஆளணிகளை முறைப்படுத்துவதற்கு இத்திட்டம் தவறி விட்டது.

இவ்வாறு மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டங்களில் ஆட்சேர்த்தல் தொடர்பான கொள்கை மற்றும் தீர்மானங்களை வழிநடத்தக் கூடிய நியாயமான தத்துவம் எதுவும் கிடையாது. அதிக வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்துவதையே இவ்வாட்சேர்ப்பு முறைகள் கைக்கொள்கின்றன. சேவைகளை வழங்குவதற்கும் அச்சேவைகளினை வழங்குவதற்கு எத்தனை பேர் தேவை என்பதை மதிப்பீடு செய்வதற்கும் வழிமுறைகள் இல்லாத காரணத்தினால் மென்மேலும் ஆளணிகளை உருவாக்குவதையே இது கொண்டுள்ளது.

மத்தியில் செய்யப்படும் பொதுச் சேவைகளுக்கான ஆட்சேர்ப்புத் தீர்மானங்கள் அரசியல் நோக்குடையவையாகையினால் உள்ளூர் மட்டத்திலான கொள்கை நிலைமைகளை மேலும் மோசமடையச் செய்கின்றன. பொதுச் சேவைகளில் தொழில் பெற முடியாமற் போகும் பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு எங்காவது இடம் வழங்குதல் என்பது தொடர்ந்து வரும் எல்லா அரசாங்கங்களினதும் கொள்கையாக இருந்து வருகின்றது. அரச துறையில் அவர்களுக்குப் பொருத்தமான பதவி நிலைகளை இனங்காணாது வேலையற்ற பல்கலைக்கழகப் பட்டதாரிகளை வேலைக்குச் சேர்ப்பதானது, தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பதிலாக அனாவசியமான சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. இவ்வாறு மத்திய அரசினால் திணிக்கப்படும் கொள்கைகளும் நடைமுறைகளும் மாகாண மற்றும் உள்ளூர் ஆட்திரட்டலைப் பாதித்துள்ளது. இதுவரை இத்தகைய நடைமுறையானது ஆட்சேர்ப்புத் தேவையைக் குறைந்தளவே தீர்த்துள்ளதோடு கொள்கையளவிலும் நடைமுறையிலும் மனிதவள முகாமைத்துவத்தைச் சிறப்பாக செய்வதிலுள்ள பிரச்சினைகளை மேலும் அதிகரித்துள்ளது.

மாகாண மற்றும் உள்ளூர் ஆளணிக்கு ஆட்சேர்ப்பதில் உள்ள மத்திய கட்டுப்பாடானது மாகாண சபைகளும் உள்ளூராட்சி சபைகளும் தமது சேவைகளைத் திறமையாக வழங்குவதற்கான பொறுப்புத் தன்மையில் பாரதூர விளைவுகளை ஏற்படுத்துகின்றது. இவ்விடத்திலுள்ள பிரச்சினை யாதெனில், தேவையான சேவைகளைத் திறமையாக வழங்குவதற்கு அவசியமான பணியாளரையும் திறமைசாலிகளையும் சேவையிலீடுபடுத்துவதற்கான வல்லமை பற்றியதாகும். சேவை வழங்கலில் மாகாண மற்றும் உள்ளூர்ப் பொறுப்புத் தன்மையைப் பாதிக்கக் கூடிய வகையில் அரசாங்களுக்கிடையேயான ஆளணி வழங்கலின் முகாமைத்துவத்திலுள்ள இடைவெளியை இது பிரதிபலிக்கின்றது.

உள்ளூராட்சி நிர்வாகங்களை மேற்செய்யும் பொறுப்பு அவற்றைக் "கட்டுப்படுத்தும்" அதிகாரங்களைப் பிரயோகப்படுத்துவதன்மூலம் மாகாண, உள்ளூராட்சி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. திறமையின்மை, நிர்வாகச்சீர்கேடு, பணிகளை நிறைவேற்றாது விடுதல், சட்ட ஏற்பாடுகளை ஏற்று நடக்க மறுத்தல் அல்லது புறக்கணித்தல் அத்துடன் சில நடைமுறை விடயங்களிலும் உள்ளூர் நிர்வாகத்திற்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கலாம். ஆயினும், இவ் அதிகாரங்களை உபயோகிப்பதில் உரிய நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். உள்ளூராட்சி சபையொன்றினைக் கலைப்பதாக இருந்தால் விசாரணை ஆணைக்குழுவொன்றின் அதிகாரங்கள் பொருந்திய சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை ஒன்றின்மூலம் செய்யப்படுதல் வேண்டும். அமைச்சர், மாநகரசபை முதல்வர் ஒருவரை அல்லது ஏனைய சபையின் தலைவர் ஒருவரை இடை நிறுத்தம் செய்து, அச்சபை தொடர்ந்து நடைபெறுவதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்வதற்கான அதிகாரம் உடையவர் ஆவார். மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சட்டபூர்வமான முறையில் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். வழமையாக மாகாண சபை உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரமே அது செய்யப்படும் அமைச்சர் தனது அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கான ஆலோசனை வழங்குவதில் இவரே பிரதான உத்தியோகத்தர் ஆவார்.

விதப்புரைகள்

1. மாகாண பொதுச் சேவையின் கீழுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கிடையே இடமாற்றம் செய்யக்கூடிய உள்ளூராட்சி மத்திய ஆளணி ஒன்றினை ஏற்படுத்துதல்.
2. ஆட்சேர்ப்பு முறைகளுக்கும் அதன் செலவு விகிதாசாரத் திட்டத்திற்கும் ஏற்ப ஆட்சேர்ப்பைப் பொறுப்புணர்ச்சியுடன் மேற்கொள்ளக் கூடிய வகையில் உள்ளூராட்சியாளரை அனுமதித்தல்.
3. மாகாண சபைத் திட்டத்தின்கீழ் மாகாண சபை உள்ளூராட்சி ஆணையாளரின் வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் மீளவமைத்தல்.
4. மாகாண பொதுச்சபை ஆணைக்குழுவுடன் உள்ளூராட்சிச் சேவை உபகுழுவொன்றை நிறுவுதல்.

8.5 நிதி தொடர்பான உறவுகள்: மத்தியப்படுத்தப்பட்ட சேவை வழங்கலின்கீழ் புறக்கணிக்கப்படுதல்

பல்மட்ட அமைப்பில் உள்ளூர் ஆட்சிகளினது இடம் அரசாங்கங்களுக்கிடையேயான தொடர்பில் சிக்கலான நிலைமையொன்றைத் தோற்றுவிக்கிறது. மத்தியப்படுத்தப்பட்ட பொதுச்சேவை வழங்கல் சூழ்நிலையில் உள்ளூராட்சிகள் தமது கடமையைச் செய்ய வேண்டிய நிலையிலுள்ளன. ஆட்சிகளுக்கிடையேயான வாரியத் தொடர்புகள் மத்தியப்படுத்தப்பட்ட பாரிய முகாமைத்துவத்தின்கீழ் நிலைநிறுத்தப்பட்டு வருகின்றன.

(மாகாண) அமைச்சரின் முழுமையான மேற்பார்வைக்கு உட்பட்டு, உள்ளூராட்சி நிறுவனங்கள் தமக்குரிய நிதி மற்றும் வாரிய அதிகாரங்களைக் கொண்டு செலவுகள் செய்யும் தகுதி உடையவை ஆகும். தமது வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தின்மூலம் செலவுகளைச் செய்வதற்கும் வருவாய்களைப் பெறுவதை அனுமதிப்பதற்குமான அதிகாரம் உடையனவாகும். பொதுவான நிதி விடயங்களை முகாமைத்துவம் செய்வதற்கான 'நிதி' ஒன்றினை அதற்குரிய சட்டத்தின்கீழ் நிறுவுவதன்மூலம் உள்ளூராட்சிகள் தமக்குரிய நிதி அதிகாரங்களைப் பெறுகின்றன. இவ்வாறு நகர சபைகள் கட்டளைச் சட்டம் 'உள்ளூர் நிதி' ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. (பகுதி 158) இதே போன்று பிரதேச சபைகள் சட்டம் "பிரதேச சபைகள் நிதி" ஒன்றினை நிறுவியுள்ளது. (பகுதி 129)

இந் நிதிகளுள் பின்வரும் பணம் செலுத்தப்படுகின்றது.

அ) குறிப்பிட்ட சட்டங்களின்கீழ் விதிக்கப்படும் அபராதங்களும் தண்டப் பணங்களும்

ஆ) முத்திரை வரிகள்

இ) அமைச்சினால் சபைக்கு ஒதுக்கப்படும் நிதிகள்

ஈ) கட்டளைச் சட்டம், சட்டம் என்பவற்றினால் அறவிடப்படும் வரிகள், தீர்வை, சுங்கவரி மற்றும் கட்டணங்கள்

உ) விற்பனை, குத்தகை மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள்மூலம் பெறப்படும் தொகை

ஊ) சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதாவது சொத்திலிருந்து வரும் வருமானம்

எ) பாராளுமன்றத்தினால் சபைக்கு வழங்கப்படும் பணத்தொகை மற்றும் வருமான வழிகள்

அத்துடன் பணத்தைக் கடன் பெறுவதற்கான அதிகாரமும் உள்ளூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந் நிதியினுட் செலுத்தப்பட்டுள்ள பணத்தினை உள்ளூராட்சிகள் எத்தகைய நோக்கங்களுக்கும் செலவழிக்கலாம் (அதவாது உள்ளூராட்சிச் செலவினங்கள்) என்பது வரையறுக்கப்பட்டுள்ளது. (நகரசபைகள் கட்டளைகள்

சட்டம் பிரிவு 159.1 மற்றும் பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 132). "அதன் அதிகாரங்களைப் பிரயோகிப்பதில் ஏற்படும் செலவுகள்" என்பதற்குச் செலவிடுவதற்கும் சட்டம் இடமளித்துள்ளது. வரவு மற்றும் செலவு தொடர்பான இந்நிதியின் செயற்பாடுகளே உள்ளூராட்சியின் வரவு - செலவுத் திட்டத்தின் அடிப்படையாக அமையும். "அடுத்து வரும் வருடத்துக்காக"த் தயாரிக்கப்பட்டு சபைக்குச் சமர்ப்பிக்கப்படும் இவ்வரவு - செலவுத் திட்டமானது, உபயோகப்படுத்தக் கூடிய செலவினங்களினதும் முன்மொழியப்படும் செலவினங்களினதும் மதிப்பீட்டினைக் கொண்டிருக்கும். உள்ளூராட்சிகள் 'சமநிலை' வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் வழக்கமே நடைமுறையில் வந்துள்ளது.

உள்ளூராட்சிகள் தமக்குரிய செலவீனங்களை தமது வரி வருமானங்கள், ஆட்சிகளுக்கிடையேயான நிதிப் பரிமாற்றங்கள், கட்டணங்கள் மற்றும் கடன் பெறுதல்மூலம் செய்கின்றன. அவர்களது குறிப்பிட்ட வருவாயானது வரிகள், கட்டணங்கள், முத்திரை வரிகள், நீதிமன்ற அபராதங்கள், தண்டப்பணங்கள் மற்றும் வாடகைகள் என்பனவாகும். முத்திரை வரிகளும் மற்றும் நீதிமன்ற அபராதங்களும் 13ஆம் திருத்தத்தின்கீழ் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே, அவ்வருமானங்கள் மாகாண சபைகளால் சேகரிக்கப்பட்டு உரிய உள்ளூராட்சிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. உள்ளூராட்சி அலுவலர்களுக்கான சம்பளமும், கூலிகளுக்குமான மானியங்களும் மத்திய அரசினால் வழங்கப்பட்டு, மாகாண சபைகள் மூலமாக, உள்ளூராட்சிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன.

உள்ளூராட்சிகளுடனான நிதித் தொடர்புகளின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதற்கு அவற்றின் செலவினங்களுக்கான பணம் எவ்வாறு பெறப்படுகின்றது என்பதைப் பார்த்தல் அவசியமாகும். உள்ளூராட்சிகளுக்குப் பணம் வழங்குதல் தொடர்பான விபரம் அட்டவணை 8.1இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 8.1
உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு நிதி வழங்குதல் - 2008

ரூபா மில்லியனில்

வழிகள்/ உள்ளூராட்சி நிறுவனங்கள்	வரி வசூல்	முத்திரை வரி	கடன் பெறல்	அரச கைமாற்று	ஏனைய வருவாய்	மொத்தம்
மாநகர சபைகள்	6,115,406 (55.66%)	1,498,002 (13.64%)	58,378 (0.52%)	2,603,185 (23.70%)	712,663 (6.48%)	10,987,634
நகர சபைகள்	1,332,290 (39.91%)	302,543 (9.05%)	149,891 (4.48%)	832,383 (24.93%)	722,444 (21.65%)	3,339,551
பிரதேச சபைகள்	2,730,874 (22.99%)	2,041,482 (17.19%)	154,111 (1.30%)	2,805,637 (23.63%)	4,143,186 (34.89%)	11,875,290
மொத்தம்	10,178,570 (38.85%)	3,842,027 (14.66%)	362,380 (1.38%)	6,241,205 (23.83%)	5,578,293 (21.29%)	26,202,475

உள்ளூராட்சிகளுடனான நிதித் தொடர்புகளை நன்கு விளங்கிக் கொள்வதற்கு, அவற்றின் செலவினங்களுக்கான நிதி எவ்வாறு பெறப்படுகின்றதென்பதை அறிந்து கொள்ளல் அவசியமாகின்றது. மேலேயுள்ள வரிவருவாய் வழிகள் உள்ளூராட்சியின் நகரப் புறத்தன்மைக்கேற்ப வேறுபடும் அதேவேளையில், பெரும்பாலான உள்ளூராட்சிகளுக்கு, அவர்களது சம்பளங்களையும் கூலிகளையும் ஈடுசெய்வதற்காக மத்திய அரசாங்கம் வழங்கும் மானியமானது (வருவாய், மானியம் என அழைக்கப்படும்) அவர்களது மொத்த வருமானத்தில் 25% சதவீதமாகும். குறைந்தளவு வருமானமுள்ள உள்ளூராட்சிகளைப் பொறுத்தவரை, மத்திய அரசு வழங்கும் மானியம் அதன் அரைவாசி வருமானமாக உயரலாம். மாகாண சபைகளால் சேர்க்கப்படும் முத்திரைகளும், நீதிமன்ற அபராதப் பணங்களும், உள்ளூராட்சிகளின் வருமானத்தில் 17% சதவீதமாகும். பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டம் என்பன போன்ற ஏனையவற்றிலிருந்து கிடைக்கப் பெறும் ஒதுக்கீடுகளும் குறிப்பாக பிரதேச சபைகளுக்கு முக்கியமானவையாகும். எல்லா உள்ளூராட்சிகளினதும் வருமானத்தில் இது சுமார் 10 சதவீதமாகும். இவ்வாறு உள்ளூராட்சிகள் தமது நிதியைப் பெற்றுக் கொள்வதில் வெளியிலிருந்து கிடைக்கப்பெறும் வருவாய்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மாநகர சபைகள் தமது வருவாயில் சுமார் 45%த்தினையும் நகர சபைகள் தமது வருவாயில் சுமார் 60%த்தையும் பிரதேச சபைகள் 71% வரையும் பெறுகின்றன. உள்ளூராட்சிகளின் நிதிவிடயங்களில் கடன் வாங்குதல் என்பது முக்கிய இடம் பெறுவதில்லை. நிதிநிலைமை பலவீனமாகவுள்ள உள்ளூராட்சிகள், தமது அலுவலர்களுக்கான வேதனங்களையும் கூலிகளையும் வழங்குவதற்காக மத்திய அரசு வழங்கும் நிதியிலேயே அதிகமதிகம் தங்கியுள்ளன.

உப - தேசிய அரசாங்க அமைப்பொன்றின் நோக்கங்களில் ஒன்று யாதெனில், சிலவகையான பொதுச்சேவைகளின் பயன் உள்ளூர் மட்டத்துக்கு

மட்டுப்பட்டிருப்பதால், அவ்வூர்த் தேவைக்கும் முன்னுரிமைக்குமேற்ப அவற்றை வடிவமைத்து வழங்க முடியும் எனும் கருதுகோளாகும். உள்ளூர்த் தேவைக்கும் முன்னுரிமைக்குமேற்ற வகையில் காரியமாற்றும் திறமை இரு விடயங்களினால் தீர்மானிக்கப்படுகின்றது. முதலாவதாக, பல்மட்ட அரசாங்க முறையின்கீழ் உள்ளூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களின் தெளிவான தன்மையாகும். அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களான மத்திய, மாகாணம் மற்றும் உள்ளூர் - என்பனவற்றின் தொழிற்பாடுகள் பற்றிய தெளிவான நிலமை அவசியமாகும். ஆயினும் 13ஆம் திருத்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பல்மட்ட ஆட்சி மாற்றமானது, ஏற்கனவேயிருந்த மத்தியப்படுத்தப்பட்ட ஆட்சிமுறையின்கீழேயே ஏற்பட்ட காரணத்தினால், உள்ளூர் மட்ட அபிவிருத்திப் பணிகளில் இருவகையான அமைப்புக்கள் உருவாகின.

இரண்டாவதாக, உள்ளூராட்சிகளின் நிதிப்பலமாகும். உள்ளூராட்சிகள் தமது நிதித் தேவைகளுக்காக வெளிமூலங்களிற் தங்கியிருக்கும் வரை, எவ்வளவு தொகை கிடைக்குமென்பது, அவர்களது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விடயமாகும். உள்ளூராட்சிகளுக்கு மாகாண சபைகளின்மூலம் நிதிகளை வழங்குவதில் தாமதங்கள் ஏற்படுகின்ற காரணத்தினால் நிச்சயமற்ற தன்மையொன்றை ஏற்படுத்துகின்றது. அத்துடன், மாகாண சபைகளினால் சேகரிக்கப்படும் முத்திரை வரியும் நீதிமன்ற அபராதங்களும் உள்ளூராட்சிகளுக்கு வழங்கப்படுவதில் நீண்டகால தாமதம் ஏற்படுகின்றது. முத்திரை வரி அறவீடுகளை அதிகரிப்பதில் மாகாண சபைகள் அக்கறை காட்டுவதற்கான உற்சாகமான விடயங்கள் எதுவும் இல்லை. அதேவேளை குறிப்பாக நகரப்புறங்களில் காணிகளின் பெறுமதி மிகவும் அதிகரித்துக் கொண்டு சென்றாலும், அவற்றின் பெறுமதியைக் குறைத்து மதிப்பீடு செய்வதன் காரணமாக உண்மையில் அறவிடக் கூடிய அதிகமான தொகை கிடைப்பதில்லை. மத்திய அரசாங்கம் மாகாண சபைகளுக்கு நிதியை வழங்குவதற்குத் தவறும் காரணத்தினாலேயே உள்ளூராட்சிகளுக்கு மாகாண சபைகள் நிதி வழங்குவதில் தாமதம் ஏற்படுகின்றது. இதனாலேயே நிதிப்பற்றாக்குறையுடைய ஆரம்ப தர மட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகள் இந் நிதிக் குறைவின் கீழ் மிகவும் பாதிக்கப்படுகின்றன. குடிமக்களுக்குத் தேவையான சேவைகளை எதிர்பார்த்தவகையிலும் திருப்தியான முறையிலும் வழங்கும் வல்லமையினை அதன் நிதி நிலைமையே தீர்மானிக்கிறது.

அட்டவணை 8.2
உள்ளூராட்சி நிறுவனங்களின் செலவினம் - 2008

ரூபா மில்லியனில்

செலவு/ உள்ளூராட்சிகள்	மீள்வரும் செலவு			மூலதனச் செலவு			மொத்தம்
	ஆளணி	பிற	மொத்தம்	மூலதனம்	எல்.எல்.டி.எல்	மொத்தம்	
மாநகர சபைகள்	4,909,095 (52.90%)	3,106,239 (33.47%)	8,015,334 (86.37%)	1,211,314	53,164	1,264,478 (13.63%)	9,279,812
நகர சபைகள்	1,165,078 (43.51%)	733,373 (27.39%)	1,898,451 (70.90%)	740,679	38,774	779,453 (29.10%)	2,677,904
பிரதேச சபைகள்	3,407,751 (30.95%)	2,669,419 (24.57%)	6,077,170 (55.22%)	4,833,659	95,128	4,928,787 (44.78%)	11,005,957
மொத்தம்	9,481,924 (41.28%)	6,509,031 (28.35%)	15,990,995 (69.63%)	6,785,562	187,066	6,972,718 (30.37%)	22,963,673

உள்ளூராட்சிகளின் செலவீட்டு முறையானது, மாநகர சபைகளுக்கும் நகர சபைகளுக்கும், பிரதேச சபைகளுக்கும் இடையே வேறுபடுகின்றன. இதனால் பிரதேச சபையின் மீள் வரும் செலவு மிகவும் குறைவாகவுள்ளது. அத்துடன், அதன் மொத்த நிதி நிலைமையில் வெளி மூலகங்களிலிருந்து கிடைக்கப்பெறும் நிதி முக்கிய இடத்தைப் பெறுகின்றது. எனினும், மாநகர சபைகளைப் பொறுத்தவரை வெளியிலிருந்து கிடைக்கப்பெறும் நிதி அதன் வருமானக் கணக்கில் சிறுபகுதியாக உள்ளதோடு அதன் மொத்தச் செலவினத்தில் மீள்வரும் செலவு பெரியதொரு இடத்தைப் பிடிக்கின்றது. அதனால், அவற்றின் செலவு முறையானது அவற்றுக்குக் கிடைக்கும் நிதியினாலேயே தீர்மானிக்கப்படுவதோடு தொகையளவிலோ அல்லது தரத்தின் அளவிலோ முன்னேற்றகரமான சேவைகளை வழங்கக் கூடிய புதிய வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன.

உள்ளூராட்சிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளுக்கான நிதியைத் தேடுவதென்பது வெறுமனே வரிகளை அறவிட்டு அதனைச் செலவிடும் சாதாரண விடயம் என்பது மிகவும் சிக்கலானதாகும். "மக்களுக்கான சௌகரியம் வசதி மற்றும் நலன்" என்பனவற்றைப் பேணுவதில் புதியனவும் மற்றும் விரிவான சேவைகளையும் வழங்குவதற்கான தேவைகளை உள்ளூராட்சிகள் எதிர்நோக்குகின்றன. இவ்வாறு "மக்களுக்கான சௌகரியம், வசதி மற்றும் நலன்" என்பவற்றுக்கான சேவைகளை வழங்குதல் சிக்கலான பொதுச் சேவைகள் வழங்கும் சூழ்நிலையிலேயே இடம்பெறுதல் வேண்டும். மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் இடம்பெற்ற போதிலும்கூட ஆட்சிகளுக்கிடையேயான பாரிய உறவுகள் மத்தியப்படுத்தப்பட்ட வாரிய முகாமைத்துவத் திட்டத்திற்குள்ளேயே ஏற்படுத்தப்படுகின்றன. அத்துடன், பாரிய நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானங்களைச் செய்வதை மிகவும் பாதிக்கும் போட்டி அரசியல் சூழ்நிலையிலேயே உள்ளூராட்சிகள் இயங்கி வருகின்றன. உள்ளூராட்சிச் சேவைகளை அவர்கள் வழங்குவதற்கான நிதியைப் பெறுவதிலுள்ள இத்தகைய நிலைமை இது தொடர்பான பல விடயங்களைத்

தோற்றுவிக்கின்றது. உள்ளூராட்சிகளின் நிதிச் செயற்பாடுகள் மத்திய கட்டுப்பாட்டு அமைப்பின்கீழேயே இடம் பெறுகின்றன. விசேடமாக ஆளணிகளைத் தீர்மானிப்பதிலும் அங்கீகரிப்பதிலும் மத்திய அரசு முக்கிய பங்கு வகிக்கிறது. உள்ளூராட்சியின் சம்பளம் மற்றும் கூலி என்பவற்றுக்கான செலவினங்களை மத்திய அரசிடமிருந்து பெறுவதில் தங்கியுள்ள காரணத்தினால், சேவைகள் வழங்குவதில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதன்காரணமாக திறமையான சேவைகளை வழங்குதல் பாதிக்கப்படுகின்றது. ஒருபுறத்தில் உள்ளூராட்சிகள் தமது சம்பள மீளளிப்பு நிதியில் தங்கியிருக்கும் அதே வேளையில், தமது வருவாய்களை அதிகரிக்க வேண்டும் என்ற கட்டாய காரணங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. காணிகளின் பெறுமதி அதிகரித்திருந்தாலும் அவற்றுக்கான வரிகளை காலத்திற்குக் காலம் மறுபரிசீலனை செய்து அதன் மூலமான வருவாயினை அதிகரித்துக் கொள்வது அரசியல்ரீதியாக மிகவும் கஷ்டமான காரியம் ஆகும். சேவைகள் வழங்குவதற்கான தேவை அதிகரிக்கின்ற காரணத்தினால், நிதி வசதிகளை ஏற்படுத்துவதற்கான புதியதும் வழக்கத்திற்கு மாற்றமுமான வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. உள்ளூர் சேவைகளை வழங்குவதற்கு அவ்வாறான நிதி வழிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு உள்ளூராட்சிகள் தயக்கம் காட்டுவதாகத் தோன்றுகிறது. உள்ளூராட்சிகள் கடன் பெறக்கூடிய வழியினை எவ்வளவு தூரம் உபயோகிக்கின்றன என்பதனை கடன் வாங்கும் தொகை காட்டுகின்றது.

ஆகக் குறைந்தபட்ச சேவைத் தரங்களைப் பராமரிப்பதற்கு ஏற்படும் பாரிய சமமின்மையை சரிப்படுத்துவதற்காக மத்திய வாரிய உதவிகள் தேவைப்படுகின்றன. சேவைகளின் தரத்தினையும் அளவினையும் விருத்தி செய்வதற்கான வாரிய வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் ஏற்கெனவே உள்ள சொத்துக்களையும் சேவைகளையும் நிர்வகிப்பதே அவர்களின் முக்கிய பணியாக இருக்கின்றது.

விதப்புரைகள்

1. உள்ளூராட்சிகளுக்கான நிதி வழங்கலை வேறானதொரு நிதி வழங்கல் முறையாக நிறுவுவதன்மூலம் அவர்கள் நிதியைப் பெறுவதில் நிச்சயமாக நம்பிக்கையுடன் இருக்க முடியும்.
2. சம்பள மீளளிப்பில் ஏற்படும் குறைகளை நிரப்புவதை விடுத்து மாகாண மட்டத்தில் அவர்களின் செயற்பாட்டுக்கு ஏற்ப நிதி வழங்கும் வகையில் உள்ளூராட்சிகளுக்கான மத்திய நிதி வழங்கலை மறுசீரமைத்தல்.
3. சில குறிப்பிட்ட விசேட விடயங்களுக்கான நிதியைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகளைக் கண்டு பிடிப்பதற்கு நகரப்புற உள்ளூராட்சிகளுக்கு உற்சாகம் வழங்குதல்.

8.6 அதிகாரப் பகிர்வின் கீழ் உள்ளூராட்சி: ஆட்சியின் வகிபாகத்தையும் பொறுப்புக்களையும் மீள்வரையறை செய்தல்

உள்ளூராட்சிகள் விசாலமான அதிகாரப் பரவலாக்கத்தைப் பெற்றிருக்க வேண்டியதற்குப் பதிலாக, மத்தியப்படுத்தப்பட்ட வாரிய மற்றும் நிர்வாக ஏற்பாடுகளுள் அதிகமதிகம் சிக்குண்டுள்ளன. இதன்மூலம் ஜனநாயக ஆட்சிமுறை தொடர்பான அவர்களின் வகிபாகமும் பொறுப்புக்களும் பாதிக்கப்பட்டுள்ளன. அதிகாரப் பரவலாக்கமானது, உள்ளூராட்சி அமைப்புக்களின் வகிபாகத்தையும் பொறுப்புக்களையும் வரையறுக்கத் தவறி விட்டது. ஏற்கெனவே நடைமுறையில் இருந்த சட்டங்களின் பிரகாரம் இவை தொடர்ந்து வைத்துக் கொள்ளப்பட்டன. இவ்வாறு அதிகாரங்களை அதிகரித்ததன்மூலமாக மாகாண ஆட்சிகளே மீள்வரையறை செய்வதற்கு விடப்பட்டன. இதன் விளைவு அரசாங்கங்களுக்கு இடையேயான பூஜ்ஜிய நிலையாகும். இதன்மூலம் ஆட்சி அமைப்பில் உள்ளூராட்சிகளின் அபிவிருத்திப் பணிகளிலான வகிபாகமும் தொழிற்பாடுகளும் பாதிக்கப்பட்டதோடு ஜனநாயக ஆட்சி முறையும் பாதிக்கப்பட்டது.

பல்மட்ட ஆட்சிமுறை அறிமுகம் செய்யப்பட்டதானது, உண்மையில் ஏற்கெனவே இருந்த பகிர்வு அமைப்பின்மேல் அதிகாரப் பரவலாக்கல் முறையொன்றினைப் புகுத்தியது. இதன்மூலம் சுதந்திரமாகவும் சமாந்தரமாகவும் இயங்கும் மத்திய, மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்கள் உருவாகின. இதன் விளைவாக அடிமட்டத்தில் சிக்கலானதும் சிதைந்ததுமான ஆட்சி முறை ஏற்பட்டது. இதனால், பிரதேச சபை மட்டத்திலான ஆட்சி அதன் நியாயாதிக்க வகிபாகத்திலும் பொறுப்புக்களிலும் தெளிவில்லாமலும்: ஒரே சமயத்தில் ஒரே சேவையைப் பல நிறுவனங்கள் கையாள்வதைத் தீர்த்துக் கொள்வதிலும் ஒன்றுக்கு ஒன்று துணையாக இருக்கும் வகையில் அவற்றை மாற்றிக் கொள்வதிலும்: சேவை வழங்குவதில் பொறுப்புத் தன்மையை ஏற்படுத்துவதிலும் பலவீனமான நிர்வாக அமைப்புக்களைக் கொண்டுள்ளன. உப - தேசிய மட்ட ஆட்சி முறையை உருவாக்கியதன் காரணம், சில குறிப்பிட்ட பொதுச் சேவைகளின் பயன்பாடு தேசிய மட்டத்திலானது என்பதனாலும் அத்தேசிய மட்டத் தேவைகளுக்கும் முன்னுரிமைகளுக்கும் ஏற்ப உள்ளூர் சேவைகளை வடிவமைத்து வழங்குவதற்கு இலகுவாக இருக்கும் என்பதனாலுமே ஆகும். வளங்களைத் திறமையாகப் பங்கீடு செய்வதற்கு அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களினதும் - மத்திய, மாகாண, உள்ளூர் - பணிகளைப் பற்றிய தெளிவான பங்கீடும் அவை எவ்வாறு ஒன்றுக்கொன்று துணையாக இருக்கும் என்பதற்கான தெளிவும் அவசியமாகும்.

13ஆவது திருத்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பல்மட்ட ஆட்சி முறையானது ஏற்கெனவே நடைமுறையிலிருந்த மத்தியப்படுத்தப்பட்ட ஆட்சி முறை அமைப்பின்கீழேயே ஏற்படுத்தப்பட்டது. இதன் விளைவாக உள்ளூர் மட்ட அபிவிருத்திக்குப் பொறுப்பான அதிகாரப் பகிர்வு செய்யப்பட்ட இரண்டு அமைப்புக்கள் ஏற்பட்டன. இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஒன்றையொன்று மேவும் அல்லது முரண்படும் விடயங்களைத் தீர்த்துக் கொள்வதற்கும்: பொருத்தமான சேவைகளை வழங்கும் வகையில் கூட்டு முயற்சிகளையும் ஒன்றுக்கொன்று துணையான விடயங்களையும் ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய வகிபாகங்களையும்

செயல்களையும் மேற்கொள்ளக்கூடிய நிர்வாக ஏற்பாடுகள் அவசியமாகும். அத்துடன் உள்ளூர் மட்டத்திலான சேவைகளை வழங்குவதற்கும் அபிவிருத்திகளை செய்வதற்கும் தேவையான பொறுப்பு முறைகளை ஏற்பாடு செய்து கொள்ளலும் அவசியமாகும்.

கீழிருந்து மேலான இவ்வணுகுமுறைக்கு அடிப்படையான காரணம் யாதெனில், இறைமை என்பது மக்களிடமே தங்கியுள்ளதால் ஒவ்வொரு மட்டத்திலும் மக்கள் பங்குபற்றுவதற்கேதுவான வலுவூட்டப்படுதல் வேண்டும் எனும் எண்ணக்கருவே ஆகும். இத்தகைய பங்குபற்றுதல் விசேடமாக உள்ளூர் மட்டம் வரை வியாபித்தல் வேண்டும். ஒவ்வொரு மட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள கடமைகளுக்கேற்ப அம்மட்டங்களிலேயே அவற்றைப் பற்றிய தீர்மானங்களைச் செய்யக் கூடிய தன்னாண்மையை வழங்குவதன்மூலமே இத்தகைய முகாமையை உருவாக்க முடியும். இதனைப் பொறுத்தவரை வளங்களைத் திறமையாகப் பயன்படுத்தியும் மக்கள் நலனை நோக்காகக் கொண்ட ஆட்சியில் அவர்களைப் பங்குபற்ற வைத்தும் அம்மக்களின் நலன்களில் நேரடிப் பலன்களை ஏற்படுத்தக்கூடிய ஒன்று உள்ளூராட்சி மட்டமே என்ற காரணத்தினால் இவ்வாரம்ப நிலைமட்டம் மிக முக்கியமானதாகும். எனினும், இவ்விடயத்தில் உள்ளூராட்சி முறையில் பாரிய இடைவெளி ஒன்றுண்டு.

ஆகையால், ஆரம்ப மட்டத்திற்கான அதிகாரப் பரவலாக்கம் திறமையற்றதும் போதாததும் ஆகும். ஆரம்ப மட்டத்திலுள்ள அரச நிறுவனங்கள் அச்சமூகங்களின் ஒட்டுமொத்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஆற்றல் சக்தியுடையவை அல்ல. ஒருங்கிணைக்கப்பட்ட ஆட்சியமைப்பு முறையொன்று இல்லாவிடத்து, இணைப்புக்களைச் செய்வதற்கான அமைப்புக்களும் வழிமுறைகளும் சிக்கலானவை ஆகும். மக்கள் தமது இறைமையைப் பிரயோகிப்பதற்கும் ஆட்சி முறைகளில் ஈடுபடுவதற்குமான நிறுவன முறைகளை இது சிறிதளவே வழங்குகிறது. அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட பிரதேச சபையும் அதிகாரமுடைய பிரதேச செயலாளர் அலுவலகமும் ஒரே சமயத்தில் சமமாக இயங்குவது இத்தெளிவின்மைக்கான ஓர் உதாரணமாகும். ஆயினும், இவ் ஆட்சி மட்டத்திலேதான் சமூகங்களின் நல்வாழ்விற்கான கூட்டுத் தீர்மானங்களை செய்யக்கூடிய பரஸ்பரத் தொடர்புகளை அரசுக்கும் மக்களுக்கும் இடையே ஏற்படுத்த முடியும்.

உள்ளூர் சமூகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தெளிவு குறைவான ஒரு விடயம் யாதெனில், அகன்ற திட்டமிடுதலுக்கும் குறிப்பிட்ட பகுதித் திட்டமிடலுக்கும் இடையேயுள்ள பிரிவினை ஆகும். உள்ளூராட்சிகளின் செயற்பாடுகளில் முக்கியமான ஒன்று வளங்களுக்கான திட்டமிடுதலாகும். உள்ளூர் மட்ட சேவை வழங்கலில் பல தரத்தினர் இருப்பதனால் ஏற்படும் துரதிருஷ்டவசமான விளைவு யாதெனில், வளங்களைத் திட்டமிடுவதையும், சேவைகளைத் திட்டமிடுதலையும் பிரித்து வைத்திருப்பதாகும். இதனால் உப - தேசிய மட்ட அலுவல்களுக்குள் இவையிரண்டும் இருந்தாலும்கூட அம்மட்டத்தில் வழங்களைத் திட்டமிடுதலுக்கும், சேவைகளைத் திட்டமிடுதலுக்கும் இடையேயான உறவுகள் மிகக் குறைவாகவே உள்ளன.

தத்துவப்படி, வளங்களைத் திட்டமிடுதல் மற்றும் சேவை வழங்கலைத் திட்டமிடுதலுக்கும் இடையே ஈடுபட்டுள்ள அரசாங்க நிறுவனங்களுக்கிடையேயான உறவுகளை ஏற்படுத்துவது உள்ளூராட்சி அமைப்பே ஆகும். உள்ளூராட்சிகள் தமது வளங்களைத் திட்டமிடுவதற்கும் தமக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதற்குமான அதிகாரங்களைப் பெற்றுள்ளனர். உள் கட்டமைப்புக்களையும் மற்றும் சேவைகளையும் வழங்கும் மத்திய மற்றும் மாகாண அமைப்புக்கள் உள்ளூராட்சிகளுடன் மிகப் பலவீனமான இணைப்பைக் கொண்டுள்ளன. அத்துடன், வளங்களைத் திட்டமிடுதலுக்கும் சேவைகளை வழங்குவதற்கும் இடையேயான இணைப்பை வழங்குவதற்குத் தேவையான நிறுவன அமைப்புக்களை வழங்குவதற்குத் தேவையான திறமையை உள்ளூராட்சிகள் குறைவாகவே கொண்டுள்ளன. அத்துடன், உப - தேசிய மட்ட சேவைகளை வழங்குவதற்கான நிதி தமது சொந்த வரி வருவாய் மற்றும் மத்திய அரசாங்கம் வழங்கும் நிதி (அதாவது நிதி மாற்றங்கள், ஒதுக்கீடுகள், செயற்திட்ட நிதி வழங்கல்கள்) என்பனவாகவே தொடர்ந்தும் உள்ளன. இதன்விளைவாக, உப - தேசிய மட்டத்தில் சேவைகளுக்கான நிதியினைப் பெறுவதில் ஏதாவது இணைப்போ அல்லது சேர்ந்து திட்டமிடுதலோ இல்லை.

உள்ளூராட்சிகளின் வகிபாகம் மற்றும் செயற்பாடுகள் சம்பந்தமான புதியதொரு பரிமாணத்தைத் தேடுவதில் "உள்ளூராட்சி தொடர்பான தேசியக் கொள்கை" தனது கவனத்தைச் செலுத்தி உள்ளது. உள்ளூர் மட்ட அபிவிருத்திக்கு அவசியமான ஒன்றிணைந்த ஆட்சி முறையொன்றினைக் கொண்டு வருவதற்கான திருத்தங்களின் தேவையை அது உணர்ந்துள்ளது. அதனால்தான் இக்கொள்கை தனது எதிர்பார்ப்புகளை அதன் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: "சிவில் சமூக அங்கத்தினர் அனைவரதும் மற்றும் சமூக அமைப்புக்களினதும் உற்காக பங்குபற்றுதலுடன் சுபீட்சமான கிராமிய ஆட்சி முறைக்கு 'ஜனசபா" எனும் அடிமட்ட ஆட்சி முறையொன்றினை ஏற்படுத்தி அதன்மூலம் திறமையானது பயன்தரக் கூடியதும் மக்களோடு நெருக்கமானதுமான உள்ளூர் ஆட்சி முறையினை ஏற்படுத்துவதாகும்".

உண்மையில் பல்தட்டு முறையின் ஆரம்பத் தட்டின் வகிபாகத்தையும் பொறுப்புக்களையும் பற்றி உள்ளூராட்சி தொடர்பான தேசிய கொள்கைத் திட்டம் மிகத் தெளிவாக இருக்கிறது. அவற்றினை பல்மட்ட முறையின்கீழ் "பிறரில் தங்கி நிற்கும் நிறுவனங்கள்" என்பதனை "தன்னைத்தானே ஆளும் பங்காளர்களாக" தன்னைத்தானே ஆளும் உள்ளூராட்சிகளை மாற்ற வேண்டும் என்பதே அதன் நோக்கமாகும். அதனால், உள்ளூர் மட்டத்தில் ஜனநாயக ஆட்சியின் தன்மையையும் விசாலத்தையும் மாற்ற வேண்டும் என்பதில் இக்கொள்கைத் திட்டம் பாரிய சிந்தனைகளைக் கொண்டுள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆட்சி வகிபாகத்தையும், பொறுப்புக்களையும் மீள்வரையறை செய்யும்பொழுது, அவற்றின் இரு வகிபாகங்களான சேவை வழங்கலும், ஜனநாயக ஆட்சியின் முகவர் எனும் நிலையும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். உள்ளூர் மட்டத்தில் மத்திய அரசின் தாக்கம் அதிகமாயுள்ள சூழ்நிலையில், இவ்விரண்டு பணிகளையும் ஒரு சிக்கலான நிலைமையில் உள்ளூராட்சிகள் ஆற்ற வேண்டியுள்ளன. அரசாங்கங்களுக்கிடையேயான நிதியுறவுகள் மத்திய நிர்வாகப்படுத்தப்பட்ட முறைமையொன்றின்கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அத்துடன், அதிகரித்துவரும் அரசியல் போட்டிச் சூழலில் உள்ளூராட்சி நிறுவனங்கள் இயங்கவேண்டியுள்ள காரணத்தினால், அவற்றின் நிதிமுகாமைத்துவம் மட்டுப்படுத்தப்படுகின்றது. அதனால், உள்ளூராட்சி நிறுவனங்கள் மத்திய மற்றும் மாகாணக் கட்டுப்பாட்டுக்குள் இயங்க வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும், மக்களால் தெரிவுசெய்யப்படும் ஆட்சி முறையின் ஆரம்பத் தரத்தில் இவை இருக்கின்ற காரணத்தினால், அவை தமது கடமைகளை, ஆட்சி வகிபாகம் மற்றும் பொறுப்புக்களுக்கேற்ப நடத்திக் கொண்டு செல்வதில், அதிகளவு பொறுப்புடையனவாகவும் பொறுப்புக் கூறவேண்டியனவாகவும் உள்ளன.

அதனால் மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்கவும், சமூகத்துக்குப் பொறுப்புக் கூறக்கூடிய வகையில் ஆட்சி நடத்தக் கூடியவாறுமான அதிகளவு தன்னாட்சியைக் கொண்டதாக அவற்றின் வகிபாகத்தை மீளமைக்க வேண்டும். எனவே, "மூன்றடுக்குப் பிரநிதித்துவ ஆட்சி" எனும் சூழ்நிலையில் அரசாங்கங்களுக்கிடையேயான உறவு முறைகள் வெளியிலிருந்து மீளமைக்கப்படல் வேண்டுமென்பதோடு, சமூகத்துக்குப் பொறுப்புக் கூறக்கூடிய வகையில் சேவை வழங்கல்களை செய்யக்கூடிய வகையில் உள்ளூர் மட்ட அரசாங்கங்கள் மீளமைக்கப்படல் வேண்டும். உண்மையில், குடிமக்களை மையமாகக் கொண்ட ஓர் ஆட்சி முறையாக அகன்றவொரு பரிமாணத்தில் உள்ளூர் ஆட்சியினைக் கருதுதல் வேண்டும். இதன்மூலம் உள்ளூராட்சியானது மக்களுக்குச் செவிசாய்க்கும், பொறுப்பு வாய்ந்த மற்றும் பொறுப்புக் கூறக்கூடிய, மக்கள் மைய உள்ளூராட்சி எனும் அடிப்படைத் தத்துவத்தின்மூலம் உத்வேகம் பெற முடியும்.

அதிகாரப் பகிர்வின் இருபத்திரெண்டு ஆண்டுகள்

இலங்கை மாகாண சபைகளின் செயற்பாடுகள் பற்றிய ஒரு மதிப்பாய்வு

அரசியலமைப்புடன் தொடர்பான விடயங்கள் பற்றி சிறந்த பொதுமக்கள் விழிப்புணர்வையும் பொதுக் கலந்துரையாடலையும் ஆய்வுகளையும் மேற்கொள்வதை அரசியலமைப்புக் கற்கைகளுக்கான நிறுவனம் (ICS) தனது செயற் பணியாகக் கொண்டுள்ளது.

"இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியலமைப்புத் தீர்வு" என்ற கருப்பொருளில் சிரேஷ்ட மற்றும் மத்திய மட்ட அரசியற் கட்சிப் பிரதிநிதிகளுக்கான தொடர் செயலமர்வுகளை அரசியலமைப்புக் கற்கைகளுக்கான நிறுவனம் (ICS) 2007-2008 ஆண்டுகளில் நடத்தியது. அரசியலமைப்பிற்கான திருத்தத்தின் அமுலாக்கம் பற்றிய பிரச்சினைகளையொட்டி வடமேல், சபிரகமுவை, சிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாம் திருத்தத்தை முழுமையாக அமுலாக்க வேண்டிய தேவை பற்றியும் அதனை எவ்வாறு செயற்படுத்துவது என்பது பற்றியும் 2009-2010 ஆண்டுகளில் ஒன்பது மாகாணங்களிலும் அரசியலமைப்புக் கற்கைகளுக்கான நிறுவனம் (ICS) பகிரங்க ஆலோசனைக் கூட்டங்களை நடத்தியது.

அரசியலமைப்புக் கற்கைகளுக்கான நிறுவனத்தின் வெளியீடுகள்:

- 13வது திருத்தம் : நடைமுறை பற்றிய கட்டுரைகள்
  "13th Amendment: Essays on Practice"
- 13வது திருத்தத்தின் கீழ் நீதிமன்றத் தீர்ப்புகள்
  "Judicial Pronouncements under the 13th Amendment"
- "13வது திருத்தம் பற்றிய புதுக் கலந்துரையாடல்"
  "13 වැනි අලුත් කතෙක්"
  "13th Amendment from a Different Perspective"
  இச்சிறு நூல் சிங்களம்-தமிழ்-ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கிடைக்கும்
- ஆதிகாரப் பகிர்வின் சர்வதேச அனுபவங்கள் (விரைவில் வெளிவரும்)
  "International Experiences on power sharing"

ISBN:978-955-0516-04-9